ISSUED 19—4—1972]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

## MONDAY, 24th JANUARY 1972

**Volume XCIII—No. 1**

© GOVERNMENT OF TAMIL NADU
1972

Legislative Council Department
Madras-9

PRICE 35 *Paise*]

3897

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

24TH, 25TH, 28TH, 29TH AND 31ST JANUARY 1972 AND 1ST FEBRUARY 1972.

*VOLUME XCIII (Nos. 1 to 6).*

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–ii |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | iii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | iv–vi |
| *Monday, 24th January 1972.* | |
| I. Questions and Answers ... ... ... | 1–15 |
| II. Announcements— | |
| (1) Amendments to Motion of Thanks to the Governor's Address ... ... ... | 15 |
| (2) Decision of the Business Advisory Committee ... ... ... ... ... | 15 |
| (3) Panel of Vice-Chairmen ... ... ... | 16 |
| III. Statement by the Hon. Minister for Food and Revenue correcting the answer to a supplementary question on Standard Question No. 160 ... ... ... ... ... ... | 16–17 |
| IV. Discussion on the Governor's Address ... | 17–54 |
| V. Papers laid on the table of the House ... ... | 54–58 |

N21.3? N22
1972-73
63041



PAGES.

*Tuesday, 25th January 1972.*

I. Felicitation to the Hon. the Minister for Education and Local Administration on the conferment of the Doctorate Degree on him by the Madurai University ... ... ... 79

II. Questions and Answers ... ... ... 79–100

III. Discussion on the Governor's Address—*cont.* 100–145

IV. Papers laid on the table of the House ... ... 145–147

*Friday, 28th January 1972.*

I. Questions and Answers ... ... ... 155–168

II. Adjournment motion *re* failure to offer protection to the meeting conducted by the Ruling Congress at Tiruchirappalli on Republic Day ... ... ... ... ... ... 168–172

III. Discussion on the Governor's Address—*cont.* 172–206

IV. Papers laid on the table of the House ... ... 206–207

*Saturday, 29th January 1972.*

I. Questions and Answers ... ... ... 209–231

II. Adjournment motion *re* strike in the B. & C. Mills at Madras ... ... ... ... 232–234

III. Calling attention to the contemplated move for an early legislation on ceiling on urban property which is a State subject ... ... 234–238

IV. Discussion on the Governor's Address—*cont.* ... 238–271

*Monday, 31st January 1972.*

I. Questions and Answers ... ... ... 279–298

II. Discussion on the Governor's Address—*cont.* ... 298–341

III. Government Resolution ... ... ... 341–342

IV. Papers laid on the table of the House ... 343

*Tuesday, 1st February 1972.*

I. Obituary reference *re* demise of King Mahendra of Nepal ... ... ... ... ... ... 347

II. Questions and Answers ... ... ... ... 347–353

III. Announcement *re* Message from the Assembly. 353

IV. Government Motion *re* suspension of Rule 42 (3) of the Council Rules ... ... ... 353



PAGES.

*Tuesday, 1st February 1972—cont.*

V. Calling attention to maters of urgent public importance—

(1) Non-payment of salary to teachers in Singanallur Municipal Schools and consequent hardship caused to them ... 354

(2) Exorbitant price charged for sugar in the open market and the consequent distress caused to Drug Industry in State ... 355–356

VI. Government Resolution—

Ratification of the Constitution (Twenty-fifth Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) ... ... ... 357–385

VII. Government Bill—

The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) ... ... ... ... 385–390

VIII. Papers laid on the table of the House ... 390

Index ... ... ... ... ... ... ... 393–427

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

**Thiru Kodardas Kalidas Shah.**

---

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in charge of Public, Finance, Planning, General Administration, matters relating to I.C.S. and I.A.S. Officers and District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Public, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in charge of Food and Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Scheme, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in charge of Agriculture and Food Production.

11. The Hon. Thiru K. RAJARAM, Minister in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. The Hon. Thiru O. P. RAMAN, Minister in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness Legislation on Chits and Forests and Cinchona.

13. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. The Hon. Thiru M. KANNAPPAN, Minister in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.



# THE TAMIL NADU LEGLISLATIVE COUNCIL.

## PRINCIPAL OFFICERS.

*Chairman.*

The Hon. Thiru C. P. CHITRARASU.

*Deputy Chairman.*

Thiru G. KRISHNAMOORTHY.

*Panel of Vice-Chairmen.*

1. Thiru R. DHARMALINGAM.
2. Thirumathi S. MANJUBHASHINI.
3. Thiru S. JAYARAMA REDDIAR.
4. Thiru T. K. SHANMUGAM.

*Secretary to Government.*

Thiru G. M. ALAGARSWAMY, B.A., B.L.

# LIST OF MEMBERS OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL WITH THEIR CONSTITUENCIES.

| Serial number and name of member. (1) | Name and class of Constituency. (2) |
|---|---|
| 1 Abdul Wahab, K. S. .. | State Legislative Assembly |
| 2 Adityan, S. T., B.A.,B.L. .. | Tirunelveli Local Authorities |
| 3 Aiyaswamy, M. .. | Nominated. |
| 4 Arivazhagan, K., M.A. .. | Madras Chingleput Teachers. |
| 5 Arivudai Nambi, Pulavar .. | North Arcot-South Arcot Teachers. |
| 6 Arumugaswami, M. .. .. | State Legislative Assembly. |
| 7 Arunachalam, T. S. .. | State Legislative Assembly. |
| 8 Ayyanan Ambalam .. | Madurai Local Authorities. |
| 9 Chitrarasu, C. P. (Hon. Chairman) .. | State Legislative Assembly. |
| 10 Clubwala Jadhav, Mary C. .. | Nominated. |
| 11 Damodaran, A. R., B.SC. (Hons.) .. | Madras North Graduates. |
| 12 Deivasigamani Arunachala Desikar, (Kundrakkudi Adigalar) .. | Nominated. |
| 13 Devaraja Mudaliar, T. V. .. | North Arcot Local Authorities. |
| 14 Dharmalingam, Thiru R. .. | Do. |
| 15 Ganesan, Saw. .. | State Legislative Assembly. |
| 16 Hanifa Nagore, E. M. .. | Do. |
| 17 Isvarmurti, V., M. A., (Visva Bharathi) M. A. (Oxon.) .. | Madras West Central Graduates. |
| 18 Janardhanam, A.P., M.A. .. | Nominated. |
| 19 Jayarama Reddiar, S., B.A. | Ramanathapuram Local Authorities. |
| 20 Kaliyannan, T. M., M.A., B.COM. .. | Salem - Dharmapuri Local Authorities. |
| 21 Kattoor Gopal .. .. | State Legislative Assembly. |
| 22 Kolappa, C. R. .. .. | Do. |
| 23 Krishnamoorthy, G. (Deputy Chairman). | Thanjavur-Tiruchirappalli Teachers. |
| 24 Krishnaswamy Naidu, R. .. | State Legislative Assembly. |
| 25 Lakshmanan, S.V., B.A. .. | Do. |
| 26 Mani, K.S. .. | Thanjavur Local Authorities. |
| 27 Manjubhashini, S. .. | Nominated. |
| 28 Muthu, S. .. | State Legislative Assembly. |
| 29 Muthu, P. T. .. | Salem-Dharmapuri Local Authorities. |

| Serial number and name of member. (1) | Name and class of Constituency. (2) |
| --- | --- |
| 30 Muthuswamy, S. .. .. | Salem-Dharmapuri-Coimbatore Nilgiris Teachers. |
| 31 Natarajan, N. V. (Minister for Labour.) .. | State Legislative Assembly |
| 32 Narayanaswamy, D.V. .. | Nominated. |
| 33 Narayanaswamy, P. .. | State Legislative Assembly. |
| 34 Narayanaswamy, S. .. | Madras District Graduates. |
| 35 Neela Narayanan .. .. | Nominated. |
| 36 Parangusam, G. .. | State Legislative Assembly. |
| 37 Ponnappa Naidu, A. .. | Do. |
| 38 Ponnuvelu, T.K., B.A. .. | Do. |
| 39 Rajagopal, C.V. .. | Do. |
| 40 Rajah Iyer, M., M.A., L.T. .. | Madurai-Ramanathapuram Teachers. |
| 41 Rajaram, K. (Leader of the Opposition). | Madurai Local Authorities |
| 42 Rajamanickam, S. A. .. | State Legislative Assembly. |
| 43 Ramakrishna Achari, K. .. | Do. |
| 44 Raman Nair, R. .. | Do. |
| 45 Ramanathan, M. .. .. | Coimbatore-Nilgiris Local Authorities. |
| 46 Ramasamy Padayatchi, S. S. | South Arcot Local Authorities. |
| 47 Rani Annadurai .. | Madras Local Authorities. |
| 48 Sambasivam, R. .. | South Arcot Local Authorities. |
| 49 Sankaralingam Pillai, M. M.A.. | Tirunelveli-Kanyakumari Teachers. |
| 50 Santosham, D., M.A., B.L. .. | Madras South Graduates |
| 51 Sengottuvelappa Gounder, S. | Coimbatore - Nilgiris Local Authorities. |
| 52 Shanmugham, T. K. .. | Nominated. |
| 53 Srinivasam Pillai, T.S. .. | Tiruchirappalli Local Authorities. |
| 54 Subbiah, T. K. .. .. | Do. |
| 55 Sundaresa Thevar, N. .. | Thanjavur Local Authorities. |
| 56 Swaminathan, G., B. PHARM. | Madras East Gentral Graduates. |
| 57 Thangapandian, V., B.A., B.T. | State Legislative Assembly. |
| 8 Thennarasu, S. S. .. ... | Nominated. |



| Serial number and name of member. (1) | Name and class of Constituency. (2) |
| --- | --- |
| 59 Thirugnanasambandam, P. .. | Ramanathapuram Local Authorities. |
| 60 Vasantha Pai, G. .. | Madras District Graduates. |
| 61 Vellapandian, S. .. .. | Tiruchirappalli Local Authorities. |
| 62 Venga, V. ... .. .. | Chingleput Local Authorities. |
| 63 Wilson Apollos, N. .. | Kanyakumari Local Authorities. |

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

## FORTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*Monday, the 24th January 1972.*

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I. OBITUARY REFERENCE *re.* THE DEMISE OF THIRU R. RAGHAVAVA MENON, FORMER MINISTER OF COMPOSITE MADRAS STATE.

MR. CHAIRMAN: I have to inform the House, with deep regret, of the demise of Thiru R. Raghava Menon, former Minister of the composite Madras State on 20th January 1972 at Palghat.

Thiru Raghava Menon was a Member of the Legislative Assembly during 1946–52 and Minister for House Control, Motor Transport and Food in Prakasam's Ministry during 1946–47.

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved family.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, all the hon. Members stood in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

## II. QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Cases against the Editor, Printer and Publisher of certain Newspapers*

*1 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of editors and owners of newspapers against whom cases have been registered for publishing objectionable news items during 1967–70;

(b) the number of cases in which judgment has been given; and

(c) the details thereof?

[24th January 1972

பத்திரிகை ஆசிரியர், உரிமையாளர்கள் மீது வழக்குகள்

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967-70-ஆம் ஆண்டுவரை எத்தனை பத்திரிகை ஆசிரியர், உரிமையாளர்கள் மீது ஆட்சேபகரமான செய்திகள் வெளியிட்டதாக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன ?

(இ) எத்தனை வழக்குகள் மீது இதுவரை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது ?

(உ) விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,

(அ) 1967 முதல் 1970 வரையில் ஆட்சேபகரமான செய்திகளை வெளியிட்டோ அச்சிட்டோ செய்திருந்தவர்கள் (?) சிலவற்றின் ஆசிரியர்கள், அச்சிடுவோர், வெளியிடுவோர் மீது 12 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

(இ) ஒன்பது வழக்குகளில் தீர்ப்புகள் அளிக்கப்பட்டன. மூன்று வழக்குகள் அரசினால் திரும்பப் பெறப்பட்டன.

(உ) இந்த வழக்குகளைப் பற்றிய விவர அறிக்கை மேலவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவர் அவர்களே, சில பத்திரிகைகள் ஆதாரமற்ற செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதால் அப்படிப்பட்ட பத்திரிகைகளைத் தடை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகைகளைத் தடை செய்யும் உத்தேசம் எதுவும் இல்லை. மக்களே பார்த்து அவற்றை வாங்குவதை நிறுத்தி அவர்களாகவே தடை செய்து விடுவார்கள்.

*Posters on the Name Board at Karunanidhi Nagar, Madras*

* 2 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that on 10th August 1971 wall posters threatening to murder the Chief Minister have been displayed on the name board at Karunanidhi Nagar, Madras?

சென்னை கருணாநிதி நகரில் சுவரொட்டி

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

சென்னை கருணாநிதி நகரில் உள்ள பெயர் பலகையின் மீது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை கொலை செய்யப் போவதாக 10—8—1971-ஆம் நாள் ஏதேனும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

10—8—1971-ம் நாளன்று கலைஞர் கருணாநிதி நகரில் சிமிட்டிப் பலகையில் "கலைஞர் கருணாநிதி நகர்" என்று தமிழில் எழுதப்பட்ட மா

@ Printed as Appendix I on pages 59-62.



24th January 1972]

எழுத்துக்கள் அகற்றப்பட்டு, அந்த இடத்தில் முதலமைச்சரை அச்சுறுத்தல் வகையிலான நக்சல்பாரி முழக்கங்கள் கொண்ட 4 கையெழுத்துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

THIRU D. SANTOSHAM : Sir, was investigation undertaken as to who was responsible for that and if so, was it possible to trace who were behind these posters?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 2—11—1971-ல் தீவிர வாதிகளில் பலரைப் போலீசார் கைது செய்தார்கள். அதில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர். கே. சாமிநாதன் என்பவர் ஒருவர். அவரிடம் போலீஸ் விசாரணை நடத்தியபோது ஆர். கே. சாமிநாதன், லஸ் ராகவன், கோடீஸ்வரராவ், சத்தியபாலன், குட்டப்பன், அன்பு இவர்களோடு கருணாநிதி நகருக்கு 10—8—1971-ல் சென்று அங்குள்ள கருணாநிதி நகர் என்ற எழுத்துக்களை அகற்றி தரையில் போட்டார்கள் என்பது வெளியாயிற்று. அத்துடன் அவர்களே மேற்படி போஸ்டர்களைத் தாங்களே ஒட்டியதாக ஒப்புக் கொண்டார்கள். 6 பேர்களில் சத்தியபாலன் தவிர 5 பேர்கள் கைது செய்யப் பட்டார்கள். தற்போது அவர்கள் போலீஸ் ரிமாண்டில் உள்ளார்கள். விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுமென்று தகவல்.

*Cabaret Dances*

* 3 Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether any raid was conducted by the Madras City Police on restaurants for performing cabaret dances during the year 1970; and

(b) if so, the details thereof?

கபேரா நடனங்கள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டில் கபேரா நடனங்கள் நடத்தியதற்காகச் சிற்றுண்டிச் சாலைகளில் சென்னை மாநகரக் காவலர் திடீர்ச் சோதனை நடத்தியது உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகர், அண்ணா சாலையில் உள்ள பால்ஸ் ஓட்டலில் ஆபாச நடனங்கள் நடத்தப்படுவதாகத் தலிப்பட்டவர் ஒருவரிடமிருந்து கிடைத்த புகாரின் பேரில் 31—5—1970-ல் காவலர் திடீர்ச் சோதனை செய்தனர். திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் இ.பி.கோ. 294-வது பிரிவின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. மூன்று பேர் கைது செய்யப் பட்டனர். மூவர் மீதும் IX வது மாநகர் மாஜிஸ்ட்ரேட் முன்பு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதற்கிடையில், ஓட்டல் உரிமையாளர் உயர் நீதி மன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்து இடைக்காலத்தடை ஆணை பெற்றார். இவ்வழக்கு விசாரணை சென்னை உயர்நீதி மன்றத்தில் முடிவுறு நிலையிலுள்ளது.

(2) எழும்பூரில் உள்ள இம்பீரியல் ஓட்டலில் ஆபாச நடனங்கள் நடத்தப்பட்டு வருவதாக இன்னொருவரிடமிருந்து கிடைத்த புகாரின் பேரில், 24—10—1970-ல் காவலர் திடீர்ச்சோதனை நடத்தினர். அதில் பங்கு கொண்ட இருவர் கைது செய்யப்பட்டார்கள். நிர்வாகியும் கைது செய்யப்பட்டார். சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் இ.பி.கோ. 294-வது பிரிவின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இந்த ஓட்டல் நடனத்தில் பங்குகொண்ட இரு கலைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஓட்டல் நிர்வாகியும் கைது செய்யப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்ட மூவர் மீதும் 26—10—1970-ல் VII-வது மாநகர மாஜிஸ்ட்ரேட் முன்பு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையிலுள்ளது.

சென்னை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் உள்ள அருண் ஓட்டலில் 28—11—1970-ல் திடீர்ச் சோதனை செய்யப்பட்டது. இருவர் கைது செய்யப்பட்டனர். அமைந்தகரை காவல் நிலையத்தில் இ.பி.கோ. 294-வது பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. II-வது மாநகர மாஜிஸ்ட்ரேட் முன்பு வழக்கு தாக்கலாகியது. குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டது. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மற்றொருவர் விடுதலை செய்யப்பட்டார்.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, ஆபாச நடனங்களைப் பொருட்காட்சிகளில் நடத்துவது அரசிற்குத் தெரியுமா? அதை முன்கூட்டியே தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசுக்குத் தெரியவந்ததுதான் அதில் கடுமையாக இருக்க வேண்டுமென்று காவல் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். முன்கூட்டியே தடுக்க முடியாததற்குக் காரணம், நடனம் என்றுதான் விளம்பரப் படுத்துகிறார்கள். இடையிலே ஆபாசம் குறுக்கிடுகிறது. அப்போது போலீசார் குறுக்கிடுகிறார்கள்.

திரு. எம். ஆறுமுகசாமி: ஆபாசம் என்றால் என்ன என்று அரசாங்கம் விளக்கம் தருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆபாசங்கள் என்ன என்பதைப் பற்றி, இந்த நடனங்களைப்பற்றி ஏற்கனவே பலமுறை இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு காவல் துறையின் சார்பாக நிபந்தனைகள் விதிக்கப்பட்டு அவற்றிற்கு உரிமம் வழங்கும்போது சுட்டிக்காட்டப்படுகின்றன. அதையும் மீறி இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுமானால், காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பொருட் காட்சியில் ஆபாச நடனங்கள் நடக்கும்போது நடனமாடுகிறவர்களைக் கைது செய்கிறார்கள். ஆனால் பொருட்காட்சி நடத்துகிறவர்களை எந்த முறையிலும் கைது செய்யாததால் அடுத்தடுத்து பொருட்காட்சிகளில் இதுபோன்ற நடனங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு அப்படி பொருட்காட்சிகளை நடத்துகிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைத் தொடர்ந்து பொருட்காட்சியை நடத்துகிறவர்களுக்கு எச்சரிக்கை அனுப்பப்படுகிறது. இன்றுள்ள ஐ.பி.சி. 294 பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அறவே தடுக்க வேண்டுமென்றால், அதற்கான குற்றப் பிரிவைத் திருத்த வேண்டியிருக்கிறது. அதைப் பற்றி அரசு ஆலோசித்துக்கொண்டு வருகிறது.

திரு. கே. ராஜாராம்: அம்மாதிரி ஆபாச நடனங்கள் ஆடுவதாக சில பெண்களை 7½ மணிக்குக் கைது செய்து கொண்டு போய் என்ன காரணத்தாலோ மீண்டும் அவர்கள் விடுவிக்கப்பட்டு 1½ மணி நேரம் கழித்து 9 மணிக்கு அதே இடத்தில் நடனம் ஆடியதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. போலீசார் கைது செய்தவர்களை பழையபடி நடனம் ஆட அனுமதித்ததுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டினைக் குறிப்பிட்ட நிலைமையில் சொல்வார்களானால் அதைப்பற்றி விசாரிக்க முடியும்.

திரு. டி. சந்தோஷம்: மேல்நாடுகளிலிருந்து வரும் நாட்டியக் குழுக்கள் இதுபோன்ற காபரே நடனங்களை முக்கால் நிர்வாணத்தில் ஆடுகிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அதைக் கலைத் தூது என்று அதிகாரபூர்வமாக வரவேற்றிருக்கிறோம். அதைவிட நல்ல முறையில் ஆட்டம் ஆடும் நம்முடைய பெண்கள் கைது செய்யப்படுகிறார்கள். இப்படிச் சொல்வதால் நம்முடைய பெண்கள் அதே போல நடனம் ஆட வேண்டுமென்று சொல்வதாக அர்த்தமல்ல. இதுபோன்ற வழக்குகள் வழக்கு மன்றத்திற்கு வரும்போது அதில் குழப்பங்கள் வருகின்றன. இதில் ஒரேவிதமான யூனிஃபார்ம் ஸ்டாண்டர்டு அரசாங்கத்தால் குறிப்பிடப்படாததால், அங்கத்தினர் சொன்னது போல இதற்கு குறிப்பிட்ட சட்டத்தைக் கொண்டு வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சில பேர் இந்த முக்காலை போதவில்லை என்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியதைப் போல, நான் ஏற்கனவே இங்கு குறிப்பிட்டதைப் போல, சட்டத்தைத் திருத்துவதற்கு சட்ட இலாகாவோடு அதைப்பற்றிக் கலந்தாலோசிக்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: இந்த ஆபாச நடனம் என்பதை நானே கண்ணால் பார்த்து மயக்கம் அடைந்து விழுந்திருக்கிறேன். ஆபாசம் என்றால் பொருள் அதுதான் அதைத் தடுக்க சட்டம் இல்லாத காரணத்தால் எனக்கு முன் பேசிய உறுப்பினர் சொல்லியதைப் போல, குழப்பான சட்டமாக இருப்பதால், இந்த நடனங்கள் அருவருப்பாக இருப்பதால், அதை நாட்டில் வளரவிடக் கூடாது என்பதற்காக சட்டம் திருத்தியமைக்கப்படுமா? உள்ளபடியே அரசு செய்யாமல் இல்லை. செய்கிறார்கள். கைது செய்துவிட்டு அரை மணியில் விடுவதில்லை. 25 ரூபாய் அபராதம் என்றால், ஆபாச நடனம் நடத்துகிறவர்கள் அதைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் சட்டத்தைக் கடுமையானதாக ஆக்க அரசு முன்வருமா?

[24th January 1972

THIRU G. SWAMINATHAN : Sir, I want to know whether the hon. Member is putting a question or making a speech.

THIRU C. V. RAJAGOPAL : I want to clarify my doubt.

MR. CHAIRMAN : The hon. Member's doubt must be very short.

திரு. சி. வி. ராஜகோபால்: இந்தச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மாத்திரமல்ல. அதைப் பார்த்து மயங்கி விழுகிறவர்கள் மீதும் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்றும் யோசிக்கலாம். (சிரிப்பு)

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: அதற்கு முன்வருகிறவர்களுக்கு விதிக்கப் படும் தண்டனை குறைந்த தொகை அபராதமாக இருப்பதால், அவர்கள் அதை லட்சியம் செய்யாமல் அதையும் மீறி அந்தத் தொழிலுக்குச் செல்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதிகபட்ச தண்டனை கொடுக்க அரசு மேற் கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முன்பே சொன்னேன், இப்போ திருக்கிற சட்ட விதிகளின்படி இந்தக் குற்றங்கள் விசாரிக்கப்படுகின்றன. அதிகக் கடுமையான தண்டனை கொடுக்கப்பட வேண்டுமானால், நாம் சட்டத்தைத் திருத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. சா. கணேசன்: இந்த மாதிரி நடனங்கள் சென்னை நகரத்தில் மட்டு மல்லாமல், தமிழகத்திலுள்ள பெரிய நகரங்கள் என்று சொல்கிற அனைத்திலும் இரண்டு, மூன்று, நான்கு என்று பரவி வருகிற நிலைமையினால், ஏராளமான வருங்காலப் பொறுப்புள்ள பெருமக்கள், குறிப்பாக மாணக்கர்கள் இவற்றில் ஈடுபட்டு பெரும் கேட்டுக்கு ஆளாகிறார்கள் ! இதன் காரணமாக காரைக்குடியில் மறியல் கூட தொடங்கப்பட்டிருக்கிறது. சட்டத்தைப் பற்றியோ வேறு எதையோ நான் குறை சொல்லவில்லை. இந்த நிலைமையை உணர்ந்து அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு, குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, பார்க்க வருகிற வர்கள் மீதும் தக்க தண்டனை விதிக்கக் கூடிய அளவுக்கு சட்டத்தைக் கடுமை யாக்கி செயல்படுத்த முன்வருவார்களானால், பலன் கிடைக்கும் என்று உணர்ந்து செயல்படுவார்களா? அதற்கான காரியங்களை அரசு மேற் கொள்ளுமா

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த ஆபாச நடனங்கள் என்பது அரை ஆடையுடனும் ஆடை நெகிழ்கிற அளவிலும் ஆடுகிற ஆட்டம் என்று சொல்கிறார்கள். அதைத் தடுக்க முனைகிறோம். ஆடுகிறவர்கள் சொல்கிற வாதமெல்லாம் இதுபோன்ற ஆடை நெகிழ்தல் கம்ப ராமாயணத்தில் கூட இருக்கிறதே என்பது. அவர்களுடைய அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு நம்முடைய பண்பாட்டைக் கெடுக்கிற வகையில் அந்த ஆட்டத்தை அனுமதிக்கக் கூடாது என்றுதான் இப்போதிருக்கிற சட்டத்தை மேலும் கடுமையாக்க வேண்டுமென்று அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.



24th January 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: நடனம் என்று விளம்பரம் செய்கிறார்கள். அதைப் பார்க்க மக்கள் போகிறபோது அங்கு ஆபாசமாக ஆடுகிறார்கள். அதற்காக பார்ப்பவர்களை எப்படிக் கைது செய்வது? நடனம் பார்க்க மக்கள் போகிற போது, ஆடுகிறவர்கள் ஆபாசமாக ஆடுகிறார்கள். இன்னின்னார் ஆபாச நடனம் ஆடி கைதுசெய்யப்பட்டார்கள் என்று பத்திரிகையில் பெயரைப் போடுகி றார்கள். யார் பெயர் பத்திரிகையில் வருகிறதோ அவர்களுக்கு அதிகமான அழைப்புகள் வருகின்றன என்பதால், பத்திரிகையில் ஆபாச நடனம் ஆடுபவர் பெயரைப் போடாமல் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகை உரிமை பாதிக்கப்படுவதாக அவர்கள் போராடக் கூடும். நடனம் பார்க்கப் போகிறவர்களைக் கைது செய்து விட்டால், என்ன செய்வது என்று திரு. சுவாமிநாதன் வருத்தப்பட்டார். அப்படி அவர்கள் பயப்படத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன். (சிரிப்பு).

### *Fashion Dress Competition*

*4 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether permissions were granted for conducting fashion dress competition for adults in Madras City by the Commissioner of Police; and

(*b*) if so, the details thereof?

### ஆடை அலங்காரப் போட்டி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் வயது வந்தோருக்கான ஆடை அலங்காரப் போட்டி நடத்துவதற்கு காவல் துறை கமிஷனரால் அனுமதிகள் வழங்கப் பட்டனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) உடை அழகுப் போட்டி நடத்த 1970-ம் ஆண்டில் 5 நிறுவனங் களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவையாவன :

1. ஈவ்ஸ் வீக்லி இதழ், சென்னை.
2. கிறுஸ்துவ மங்கையர் கழகம், சென்னை.
3. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுக்கழகச் (செயலாளர்), சென்னை.
4. டைம்ஸ் ஆப் இந்தியாவின் கிளை மேலாளர், சென்னை.
5. இந்திய நலக் கழகம், சென்னை.

1971-ஆம் ஆண்டில் அழகுப் போட்டி நடத்த இரண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவையாவன :

1. டைம்ஸ் ஆப் இந்தியாவின் கிளை மேலாளர், சென்னை.
2. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுக் கழகத்தின் சிறப்பு அதிகாரி, சென்னை.

[24th January 1972

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, மாணவியர்கள் கூட இதிலே பங்கேற்பதாகத் தெரிவதால், அவர்கள் கல்லூரியின் அல்லது பெற்றோர்கள் அனுமதி பெற்றுக்கொண்டுதான் சொல்லவேண்டும் என்ற விதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கல்லூரிகளின் அனுமதியோடுதான் அவர்கள் அதிலே கலந்துகொள்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அப்படி விதி இருக்கிறதா என்பதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: கலந்துகொள்கிற மாணவியர்கள் 18 வயதுக்குட்பட்டவர்களா அல்லது அதற்கு மேலானவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எனக்கு வந்துள்ள விவரப்படி, வயது வந்தவர்கள் தான் இதிலே கலந்து கொள்கிறார்கள் என்றிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, "ஃபாஷன்" என்பதற்கு என்ன விளக்கம் என்று தெரியவில்லை. கிருதாவைப் பெரியதாக வைத்திருப்பது நன்றாக இருக்கிறது என்று கிருதா வைத்துக்கொண்டிருந்தவர்கள், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியவுடன், அதை எடுத்துவிட்டிருக்கிறார்கள். "ஃபாஷன்" என்றால் என்ன என்று நிர்ணயிக்கும் விதி ஏதாவது இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எப்படி உடைகளை அணிவது என்று நடக்கும் போட்டியில் உடைகளை விளம்பரப்படுத்தும் அளவுக்குத்தான் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுக் கழகம் அழகுப் போட்டி நடத்தியிருக்கிறது. மற்ற நிறுவனங்கள் நடத்தும் அழகுப் போட்டிகளும் அந்தந்த நிறுவனங்களின் விளம்பரத்துக்காகவே நடத்தப்படுகின்றன.

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட போட்டிகளை மிக்க பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்கள், ரோட்டரி கிளப், ஒய்.டபுள்யு.சி.ஏ. போன்ற பொறுப்பான ஸ்தாபனங்கள் நடத்துகின்றன. இதுவரை நடந்த போட்டிகளில் ஏதாவது ஆட்சேபகரமான காரியங்கள் நடந்ததாகச் செய்திகள் ஏதாவது வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவரை அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை.

MR. CHAIRMAN: Questions 5 to 9 are postponed.

### *Veterinary College, Madurai*

*10 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether any request has been received in 1970, from the Ramanathapuram District Development Council for starting a Veterinary College at Madurai; and

(*b*) if so, the action taken thereon by the Government?



24th January 1972]

### மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டுமென்று 1970-ல் இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக் குழுவிடமிருந்து அரசாங்கத்திற்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) மேலவையில் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவரவர்களே, மதுரை தனிப் பல்கலைக் கழகம் ஆகிவிட்டபடியால், தென் பகுதி மாவட்டங்களுக்கு கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற நீண்டநாளைய வேண்டுகோளைப் பரிசீலனை செய்து அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கோவையில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது; அந்த விவசாயப் பல்கலைக் கழகத்தோடு கால்நடை மருத்துவத் துறை வளர்க்கப்பட வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தின் தேவைக்கேற்ப கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்படக்கூடும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இந்த விவசாயப் பல்கலைக் கழகத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைய வேண்டுமென்ற காரணத்தால், சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியைக் கோவைக்கோ அல்லது அதற்கு அருகாமையிலுள்ள ஒரு இடத்துக்கோ மாற்றும் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எதுவும் சிறிய அளவில் உள்ளபோது மாற்றுவது எளிது. செடியாக இருக்கும்போதுதான் மாற்றிப் பெயர்த்து நட முடியும். மரத்தைப் பிடுங்கி நடுவது அவ்வளவு பொருத்தமான செயலாகாது, மரமும் பட்டுப்போய்விடலாம்.

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, மதுரையிலும் விவசாயப் பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. பல்கலைக் கழகத்தோடு இணைந்த ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படும்போது இரண்டு பிரிவுகளாக, கோவையில் ஒரு பிரிவும், மதுரையில் ஒரு பிரிவுமாக அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இடத்துக்கு இடம் இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்லூரி வேண்டுமென்று கேட்ட காரணத்தால், இந்தப் பிரச்சினையை பல்வேறு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு ஆராய்ந்து 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கல்லூரியைச் சென்னையிலிருந்து வேறு இடத்தில் ஏற்படுத்தலாம் என்ற கருத்து இருந்தது. இந்தக் கால்நடை மருத்துவத் துறையில் ஏறத்தாழ 100 மாணவர்கள் ஆண்டுதோறும் பயின்று பி.வி.எஸ்சி.

@ Printed as Appendix II on pages 63–64.

பட்டம் பெற்று வெளிவருகிற நிலை இருக்கிறது. அவர்களில் 100-க்கு 90 பேருக்காவது வேலை தரும் நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இன்னொரு இடத்தில் புதிதாகத் துவக்க வேண்டுமென்றால், சாதாரணமாக ரூ. 25 லட்சம் அல்லது ரூ. 30 லட்சம் தேவை. வருகிற மாணவர்களைப் பிரித்து இரண்டு இடங்களில் படிக்கச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். பொருட்செலவுக்கு ஏற்ற பயன் இருக்குமா என்ற ஐயுறவு இருக்கிற காரணத்தால், புதிய கல்லூரி தொடங்கலாம் என்ற நம்பிக்கை இல்லை.

*Mahatma Gandhi Tuberculosis Sanatorium, Thanjavur*

*11 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) the facilities available at the Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur;

(b) whether there is any proposal for its improvements; and

(c) if so, the details thereof?

*மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனை, தஞ்சை*

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூரில் உள்ள மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனையில் கிடைக்கும் வசதிகள் யாவை?

(இ) அந்த வசதிகளை மேம்படுத்த செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) செங்கிப்பட்டி மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனை நவீன மருந்துகளைக் கொண்டு காச நோய் மற்றும் அதைச் சார்ந்த நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பெரிய அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன.

(இ) & (உ) ஆம். அரசு நிதி உதவியுடன் கார்டியோ, தொராசிக் அறுவை சிகிச்சைப் பகுதி ஆரம்பிப்பதற்கான ஒரு கோரிக்கை அரசின் ஆய்விலுள்ளது. நிதி தேவைப்படுகிற காரணத்தால், நிதி வசதிக்காகக் காத்திருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, மகாத்மா காந்தி காச நோய் மருத்துவ மனையில் உள்துறை நோயாளிகளாக இருக்க வேண்டியவர்களைப் பதிவு செய்துகொள்ளச் சொல்லுகிறார்கள். பதிவுசெய்து கொண்டு ஒரு ஆண்டு காலத்திற்குப் பிறகும்கூட 'இன்-பேஷன்ட்' ஆக இருக்கிற வசதிகள் கிடைக்காமல், பலர் இறந்துபோன பிறகுதான் அவர்களை மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்வதாகக் கடிதங்கள் வருகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? பதிவு செய்துகொண்டவர்களை இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகவாவது இன்-பேஷன்ட்—ஆகச் சேர்த்துக்கொள்ளும் வசதியை அரசு செய்து கொடுக்குமா?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மற்ற மருத்துவ மனைகளில் இன்-பேஷன்ட் என்று சொல்லுவதற்கும், காச நோய் மருத்துவ மனையில் இன்-பேஷன்ட் என்று சொல்லுவதற்கும் ஒரு வேறுபாடு உண்டு. மற்ற மருத்துவ மனைகளில் 3 அல்லது 7 நாட்கள் தங்கிக்கூட சிகிச்சை பெற்றுத் திரும்புகிறவர்கள் பலர் உண்டு. ஆனால் காச நோய் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறுகிறவர்கள் ஏறத்தாழ 3 முதல் 6 மாதம் வரையில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. புதிய நோயாளிகளைக் காப்பாற்ற, பழைய நோயாளிகளைக் கைவிட முடியாத நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அழைத்துக்கொள்ள முடியாத அளவில் இட நெருக்கடியான நிலைமை இருக்கிறது. சேர்த்துக்கொள்ளப்பட்ட நோயாளிகளைக் காப்பாற்றுவதில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறது.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, இந்த மருத்துவ மனை தோன்றிய காலத்திலிருந்து இன்று வரையில் சூப்பரின்டென்டாக இருந்து வருபவர் அந்த மனையில் பணியாற்றும் ஊழியர்களை மதமாற்றம் செய்வதில் அக்கறை காட்டுகிறார் என்ற புகார் ஏதும் அரசுக்கு வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தமிழகத்தில் உள்ள எந்த ஒரு மருத்துவ மனையிலும் இப்படிக் கட்டாய மதமாற்றம் செய்வதாகப் புகார் வரவில்லை. நோய் உடையவர்கள், துன்பப்படுகிறவர்களிடத்தில் மதச் சார்புடையவர்கள் ஆறுதல் அளிக்கும் பேச்சுக்களைப் பேசலாம். ஆனால் மதமாற்றம் செய்கிறார்கள் என்று சொல்லுவதற்கு எவ்விதமான சான்றும் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, காச நோயாளிகளைப் பதிவு செய்கிறபோது, சிலர் முற்றிய நிலைமையில் நோயுற்றவர்களாக இருக்கிறார்கள், நோயின் தரத்தைப் பிரிக்காமல், எல்லோரையும் ஒரே மாதிரியாகக் கருதி கடிதங்கள் அனுப்புகிறார்கள். எனவே நோய் முற்றியிருந்தால், அவர்களுக்கு உடனடியாகக் கடிதம் எழுதவும், நோய் சாதாரணமாக இருந்தால், அவர்களுக்குச் சிறிது காலம் கடந்து கடிதம் எழுதுவதும் போன்ற முறையை அரசு அமுலுக்குக் கொண்டுவருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லிய கருத்து அந்த மருத்துவ மனைக்குத் தெரிவிக்கப்படும். கூடியவரையில் அந்த ஆலோசனையை நிறைவேற்ற முயற்சிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Apprenticeship Training Scheme*

* 12 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(a) the number of Appprentices who have passed out in this State under the Apprenticeship Training Scheme during 1970–71; and

(b) (i) Trades and (ii) Industries in which they have been trained?

வேலை பயில்வோர் திட்டம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வேலை பயில்வோர் திட்டத்தின்கீழ் 1970-71-ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் தேறிய தொழில் பயில்வோரின் எண்ணிக்கை என்ன?

(இ) அவர்கள் பயிற்சி பெற்ற (1) பணிகள் (2) தொழில்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: வேலைக்குப் பயிற்சி பெற்றவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்களா என்ற விவரம் அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பயிற்சி மட்டும்தான் கொடுக்கிறோம். பின்னால் அதை வைத்துத் தொழிற்சாலைகளில் சேர வேண்டும்.

*Gudalur Industrial Co-operative Tea Factory Limited*

* 13 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether (i) Machinery and (ii) Electrical equipment were purchased for the Gudalur Industrial Co-operative Tea Factory Limited in the Nilgiris district during 1970-71 and 1971-72; and

(*b*) if so, the details thereof?

கூடலூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1970-71-72-ல் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைக்கு (1) இயந்திரங்களும் (2) மின்சாரக் கருவிகளும் விலைக்கு வாங்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இதற்கான பங்குகள் மக்களிடமிருந்து பெற்றும் இன்னும் செயல்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா? ஏன் அது செயல்படாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீலகிரி மாவட்டத்தில் எட்டு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன, லாபத்தில் நடைபெறுகின்றன. இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் சில இயந்திரங்கள் அதற்கு வாங்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு டெண்டர்கள் 'கால் ஃபார்' செய்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் முடிவெடுப்பார்கள்.

@ Printed as Appendix III on pages 64-70.





திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இப்படி ஒரு தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டது எந்த ஆண்டில் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தேதி விவரம் என்னிடத்தில் இல்லை.

*Long Distance Double Decker Buses*

* 14. *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state:—

(*a*) whether Double Decker buses run on long distance routes have been withdrawn with immediate effect;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the number of buses so withdrawn?

நீள் தொலைவு மாடிப் பேருந்துகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நீள் தொலைவு வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மாடிப் பேருந்துகள் உடனடியாக எடுக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அவ்வாறு எடுக்கப்பட்ட பேருந்துகள் எத்தனை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) இரட்டை அடுக்குப் பேருந்துகளைப் பொது மக்கள் விரும்பவில்லை.

(உ) பதினொன்கு.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: அப்பேருந்துகள் இப்போது என்ன பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தப் பேருந்துகள் சாதாரணப் பேருந்துகளாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: இதனால் எவ்வளவு நஷ்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதுபற்றிய விவரமில்லை.

திரு. டி. சந்தோஷம்: இப்படிப்பட்ட பேருந்துகளைப் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கு முன்னால் இவை நாட்டின் இதர பகுதிகளில் பயன்படுத்தப் பட்டனவா என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவற்றை நாம் உபயோகித்தோமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கிட்டத்தட்ட 200-க்கு மேற்பட்ட பேருந்துகளில் 14 பேருந்துகள்தான் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை தருகிற பலனைப்பற்றி ஆராய்ந்து அதற்குப் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்ற அடிப்படையில் அவை விடப்பட்டன. மாடி பஸ்களில்

[24th January 1972

பயணம் செய்யும்போது, மேலே அமருகிறவர்களுக்குப் போதிய இட வசதி இல்லை என்று பயணிகள் கருதுவதால், மேலும் அதை விஸ்தரிப்பது அவசியமில்லை என்று கருதி அவற்றை நிறுத்தியிருக்கிறோம்.

*Advocates for the Transport Department*

* 15. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(*a*) whether a panel of advocates has been constituted for the Transport Department;

(*b*) if so, on what basis the selection was made; and

(*c*) the expenditure incurred in constituting such panel?

*போக்குவரத்துத் துறைக்கு வழக்குரைஞர்கள்.*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:*

*(அ) போக்குவரத்துத் துறைக்காக வழக்குரைஞர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா?*

*(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் தேர்வு நடத்தப்பட்டது?*

*(உ) இக்குழுவை அமைப்பதில் ஏற்பட்ட செலவு என்ன?*

THE HON. THIRU S. RAMACHANDRAN : (*a*) Yes.

(*b*) The selection has been made at the discretion of the Government.

(*c*) It is proposed to pay a retainer's fee of Rs. 250 per mensem besides the regulation fee for the cases attended to by the Legal Advisers. No expenditure was incurred in constituting such a panel.

*திரு. சா. கணேசன்: இப்போது மாநில ஆட்சி நடத்திய போக்குவரத்துகள் வெவ்வேறு குழுக்களாக மாற்றப்பட்டுவிட்டதால் இந்த வழக்குரைஞர்கள் அந்தக் குழுக்களுக்கு முறைப்படி உத்தரவிட்டு மாற்றப்பட்டிருக்கிறார்களா? அல்லது இனி புதிதாக வேறு அமைப்பு ஏதாவது அமைக்க அரசு கருதியிருக்கிறதா?*

*மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: இப்போது நியமிக்கப்பட்டிருக்கிற வழக்குரைஞர்கள் அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பல்வேறு போக்குவரத்துக் குழுக்கள் இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அவைகளுக்கு இவர்களையே பயன்படுத்தலாமா அல்லது வேறு வழக்குரைஞர்களை நியமிக்கலாமா என்பதைப் பற்றி அங்குள்ள போக்குவரத்துக் கழகத்திலுள்ள நிர்வாகிகள் முடிவு செய்ய வேண்டும்.*



24th January 1972]

*திரு. டி. சந்தோஷம்: தலைவர் அவர்களே, கிரிமினல் வழக்குகளை அவர்கள் நடத்த வேண்டியதாக இருந்தால், அங்கு அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்கள் இருக்கிறார்களே அவர்கள் நடத்தக் கூடாதா? அதே போல சிவில் வழக்குகளாக இருந்தால், கவர்ன்மெண்ட் ப்ளீடர் நடத்தக் கூடாதா? அப்படிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டதா?*

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வழக்குகள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாலும், அதில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதாலும், ஏற்கனவே இருக்கிற வசதிகள் போதாது என்று மேலும் வசதிகளை இந்தத் துறைக்கு அளிப்பதற்காக இவர்களெல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.*

MR. CHAIRMAN : Questions are over.

[An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III. ANNOUNCEMENTS.

(1) AMENDMENTS TO MOTION MF THANKS FOR THE GOVERNOR'S ADDRESS.

MR. CHAIRMAN : I have to inform the House that notices of amendments to the Motion of Thanks in reply to the Governor's Address should reach the Secretary before 5 p.m. on Tuesday, the **25th January 1972.**

(2) Decision of the Business Avisory Committee.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. today, the following programme of business has been decided :—

24th and 25th January 1972—Discussion on the Governor's Address.

26th January 1972—Republic Day—Holiday.

27th January 1972—Bakrid—Holiday.

28th January 1972—Discussion on the Governor's Address.

29th January 1972—Discussion on the Governor's Address.

30th January 1972—Sunday—Holiday.

31st January 1972—

1. Discussion on the Governor's Address and Reply to the debate by the Hon. the Chief Minister.

2. Resolution on Cotton Transport Rules.

1st February 1972—Ratification of Constitution (Twenty-fifth) Amendment) Bill, 1971 and other Official Business, if any.

The Council will meet daily from 4 p.m. to 7 p.m. The Council will adjourn on the 1st February 1972.

[24th January 1972

(3) PANEL OF VICE-CHAIRMAN.

MR. CHAIRMAN : I have to announce to the House that under rule 14 of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members of the Legislative Council to be the Panel of Vice-Chairmen for the Forty-first Session of the Legislative Council under the Constitution :

1. Thiru R. Dharmalingam.
2. Thirumathi S. Manjubhashini.
3. Thiru S. Jayarama Reddiar.
4. Thiru T. K. Shanmugam.

## IV. Statement by the Hon. Minister for Food and Revenue correcting the answer to a Supplementary question on Starred Question No. 160.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அவசரம் காரணமாக மதிப்புக் குறைவாக எழுதிக் கொடுக்கப்பட்ட, ஆவணங்களை முதலில் பதிவு செய்து கொண்டு, வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை செய்யும் போது, பற்றுக்குறையாகவுள்ள முத்திரைத்தாள் தீர்வை வசூலிக்கப்படுமா என்று 21—7—1971 நாளிட்ட 160-ஆம் எண் வினாவிற்குத் துணை வினா ஒன்றை திரு. டி. சுப்பையா, எம்.எல்.சி. அவர்கள் விடுத்தார். சட்டத்தில் அதற்கு விதித்துறை ஏதுமில்லையென்று மேலவைக்கு நான் தெரிவித்தேன்.

ஒப்படைப் பத்திரம், பரிமாற்ற பத்திரம் அல்லது நன்கொடைப் பத்திரம் ஒன்றைப் பதிவு செய்யும்போது, ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொத்தின் மதிப்பு அங்காடி மதிப்பிற்கு உண்மையானதல்ல என்று பதிவு அதிகாரி நம்புவதற்குக் காரணமிருந்தால், அவர் அத்தகைய ஆவணத்தை அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்கும் சரியான முத்திரைத் தாள் தீர்வை வசூலிப்பதற்கும் "மாவட்ட ஆட்சித் தலைவருக்கு" (வருவாய் கோட்ட அதிகாரி) அனுப்ப 1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டத்தின் 47-ஏ பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது என்பதுதான் இது குறித்து சரியான நிலையாகும். எனவே, ஓர் ஆவணத்தைப் பதிவு செய்வதற்கும், துண்டு விழும் முத்திரைத்தாள் தீர்வையை வசூலிப்பதற்கும் விதித்துறை உள்ளது. எனவே 47-ஏ பிரிவின்கீழ் ஓர் ஆவணம் பதிவு செய்யப் பெறுவதற்கு குறிப்பிட்ட ஒரு நபர் அவசரப்பட்டாலும், அவசரப்படாவிட்டாலும், அந்தச் சொத்து குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதென்று துணைப் பதிவாளர் கருதினால் அந்த ஆவணம் "மாவட்ட ஆட்சித் தலைவருடைய" (வருவாய் கோட்ட அதிகாரி) கருத்தை அறிவதற்காக அனுப்பபடவேண்டும். சரியான முத்திரைத் தாள் தீர்வை மதிப்பிடப்பட்டு வசூலிக்கப்படும்வரை அந்த ஆவணம் அரசின் துறைகளிடம் இருக்கவேண்டும். அந்த ஆவணம் சம்பந்தப்பட்ட நபருக்கு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது அமைச்சரவர்கள் தந்த திருத்தம் சம்பந்தப்பட்ட இந்த அரசாங்க உத்திரவு நடது ஹைகோர்ட்டில் ஏதோ செல்லாது என தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், இம்மாதிரி பதியும் பத்திரங்களில் நிலத்தை எற்கெனவே என்ன விலைக்கு வாங்குகிறார்களோ அந்த விலைக்குத் தான் ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமேயொழிய, உத்தேசமாக இன்ன மதிப்பு இருக்கும் என்று ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்று சொல்லி வசூலிப்பது சரியல்ல என்று தீர்ப்பு வந்திருப்பதாகப் பத்திரிகைகளில்



24th January 1972] [திரு. கே. ராஜாராம்]

பார்த்தேன். இதில் அரசாங்கத்தின் நிலை என்ன? அப்பீல் செய்யப் போகிறார்களா அல்லது அந்த உத்திரவை ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஒவ்வொரு பதிவு அலுவலகத்திற்கும் 'கைடு லைன்' என்று சொத்து மதிப்பைத் தயாரித்துக் கொடுத்து அனுப்பியிருந்தோம். அப்படிக் கொடுத்து விட்டிருப்பது சரியல்ல என்ற அளவிற்கு தீர்ப்பு அளித்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி படித்தோம். உயர் நீதி மன்றத் தீர்ப்பின் காப்பி இன்னும் வந்து சேரவில்லை. வந்ததற்குப் பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

## V. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவரவர்களே, "1972-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22-ம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத்தின் கூட்டுப் பேரவையில் உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற்காக தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று முன்மொழிகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: இதை நான் வழிமொழிகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That an humble Address be presented to the Governor that the Members of the Tamil Nadu Legislative Council thank him for the Address delivered to the Members of the Legislature on the 22nd January 1972".

திரு. வி. தங்கபாண்டியன்: மேலவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்தக் கூட்டுக் கூட்டத்தில் தமிழ் நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளை விளக்கி, அதற்கு முன்னுரையாக இந்தியத் துணைக் கண்டம் சென்ற ஆண்டு இறுதியிலே பாகிஸ்தான் படையெடுப்புக்குத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அந்தப் படையெடுப்பிலே வெற்றிச் சிகரத்தைப் பொறித்து, உலக அரங்கில் இந்தியாவிற்கு ஒரு புதிய பெருமையும் சிறந்த மரியாதையும் ஏற்பட்ட நிகழ்ச்சியை எடுத்துக் கூறினார்கள். அதன் தொடர்பாக இந்தியக் துணைக் கண்டத்தில் ஒரு புதிய சுதந்திர வங்க நாடு உருவாகியிருக்கிறது. வங்கத்தின் உதயம் உலக வரலாற்றில் ஒரு மிகப் பெரிய திருப்பத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த வங்க நாட்டினுடைய தானைத் தலைவராகவும் அந்த நாட்டினுடைய இலட்சியபுரி வீரராகவும் உருவாவதற்கு தன்னுடைய கண்ணீரை, செந்நீரைச் சிந்திய விடுதலை வீரர் முஜிபூர் ரஹிமான் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றம் கேட்டுக் கொண்டது. இன்றைய தினம் அவர் விடுதலையாகி உலக அரங்கில் ஒரு புதிய நாட்டிற்குத் தலைவராக ஆகியிருக்கிறார். அந்த தானைத் தலைவருக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் நம் நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பது நம்முடைய தமிழ் நாட்டுப் பண்புக்கு உகந்தது என்ற முறையில் ஆளுநர் அவர்கள் தம்முடைய பேருரையில் இந்நிகழ்ச்சியை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அங்கு ஒரு பயங்கரமான நிலைமை ஏற்பட்டது நமக்கெல்லாம் தெரியும். ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிக்க முயன்றவர்கள் ஓட்டு முறையில் வெற்றிபெற்றவர்களை வேட்டு முறையால் அடக்கலாம் என்று எண்ணி

@ Printed as Appendix IV on pages 71

யிருந்தவர்கள், மாநில உரிமையைப் பறித்து விடலாம் என்று எண்ணியிருந்த மாபாவிகள், மொழி சுதந்திரத்தைப் பறிக்கத் திட்டமிட்டவர்கள் இன்றைய தினம் இருந்த இடம் தெரியவில்லை. இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்ற அளவில் நம் முப்படை வீரர்களின் தீரச்செயல்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கு மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றன. இந்த வெற்றியைத் தேடித்தந்த முப்படை தளபதிகளுக்கு நம் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ராணுவத்தில் உயிர் இழந்த வீரர்களுக்கு தமிழ் நாடு வீர வணக்கத்தை இந்த நேரத்தில் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்ட அரசியலுக்கு ஒரு சிறப்பான, மேன்மை தங்கிய இடத்தை இந்திய நாட்டினுடைய பிரதமர் மதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் தேடித் தந்திருக்கிறார்கள். அவருடைய தீர்க்கமான முடிவு இது. நேசக் கரம் நீட்டி ஒரு புதிய வங்கத்தை உருவாக்கினார் என்ற பெருமை பாரதப் பிரதமருக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர் எடுத்துக்கொண்ட போர் முயற்சிகளை, உலக அரங்கில் அவர் எடுத்துச் சொன்ன வாதங்களை, வலுவான கருத்துக்களை இன்றையதினம் பல அரசியல் வல்லுனர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட போர் முயற்சிகள், தேசப் பாதுகாப்பிற்கான திட்டங்கள் இவைகளை நல்ல இதயம் படைத்தவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். அரசியல் லாப நோக்கம் கருதாமல் நியாய உணர்ச்சியோடு நெஞ்சில் நீதி தேக்கி வைத்திருப்பவர்கள் தமிழ் நாடு அரசாங்கம் எடுத்த முடிவுகளைப் பாராட்டியிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும், புயலுக்குப் பின்னால் ஏற்பட்ட விளைவுகள் போல, போருக்குப் பின்னால் கடுமையான விளைவுகள் ஏற்பட்டிருந்தன. அதை நாட்டு மக்கள் சகித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாடு முதல்வர் அவர்கள் பல்வேறு சலுகைகளை இறந்து போன ராணுவ வீரர்களுக்கு அளித்தார்கள், அதை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டினார்கள். அத்தகைய நல்ல உள்ளம் படைத்த நாம் நம்முடைய கடமையை, நன்றிக் காணிக்கையை முறையாகச் செய்ய வேண்டும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மிகப் பெரிய நிதியினைத் திரட்டிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும், நம்மைவிட மிகப் பெரிய மாநிலங்கள், அளவிலே பெரிய, அதிகமான ஜனத்தொகை கொண்ட மாநிலங்களெல்லாம் இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்க முன்வரவில்லை. ஆனால் துணிந்து நாம் இந்த நாட்டிற்குச் செய்யவேண்டிய தலையாய கடமை என்று உணர்ந்து இவ்வளவு பெரிய தொகையைத் திரட்டுவதற்கு நம்முடைய அரசாங்கம் முன் நின்றது. இந்த முயற்சியில் நம்முடைய தமிழ் நாட்டு அரசாங்கம் முன்னனியில் இருக்கும் என்ற நம்பிக்கையை ஆளுநர் அவர்கள் தனது உரையில் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டம் மிகப் பெரிய போரில் ஈடுபட்டபோது, அந்தச் சோதனைக் கட்டத்தில் உலக அரங்கில் நம்முடைய பகைவர்கள் யார் யார், நண்பர்கள் யார் யார் என்று நம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. உலக அரங்கில் பலம் படைத்த நாடு என்று அழைக்கப்படுகின்ற அமெரிக்கா, நமது அண்டை நாடான செஞ்சீனு ஆகிய இரண்டு நாடுகளும் நம்முடைய பகைமை நாட்டுக்கு வக்காலத்து எடுத்தன. நமக்கு வேதனையான காட்சி என்னவென்றால், எந்த நாட்டில் காலனி ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்று குரல் கிளம்பியதோ அந்த அமெரிக்கா, சுதந்திர நாடாக இருக்க வேண்டுமென்று ஜார்ஜ் வாஷிங்டன் பாடுபட்ட அமெரிக்கா, ஜனநாயகத்திற்குப் புதிய இலக்கணம் Government of the people, for the people and by the people" வகுத்துக்





கொடுத்த அப்ரஹாம் லிங்கன் பிறந்த அமெரிக்கா, உலக உத்தமர்களில் தலைசிறந்த கோமான், உலக அமைதிக்காகவே உயிர் நீத்த உத்தமன் கென்னடி வாழ்ந்த அமெரிக்கா இந்த யுத்தத்தில் பாகிஸ்தானுக்குக் கை கொடுத்து உதவியது. ஆனால் அதே நேரத்தில் நமக்கு அரசியல் வானில் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் தெரிந்தது. நமக்கு ஆதரவாக, அரவணைப்பாக, உறுதுணையாக, பொது உடைமைப் பூங்கா மலரப் பாடுபடுகின்ற சோவியத் இரஷ்யா நமக்குக் கை கொடுத்தது. உலக அரங்கில் நமக்காக வாதாடியது. சந்தர்ப்பம் ஏற்பட்டால், நமக்காகப் போரிடவும் தயாராகவிருந்தது. அந்தத் திருநாட்டிற்கு நம்முடைய பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேதகு கவர்னர் அவர்கள் தனது உரையில் மாநில அரசாங்கம் எடுத்துள்ள பல்வேறு அபிவிருத்திப் பணிகள் குறித்தும், மேற்கொள்ளவிருக்கின்ற காரியங்களைக் கோடிட்டும் காட்டியிருக்கிறார். இன்னொன்றையும் எடுத்துக் காட்டியிருக்கிறார். மத்திய அரசாங்கம் எந்தெந்தக் காரியங்களைச் செய்யத் தவறியிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். மத்திய அரசாங்கம் அதிக அதிகாரங்களைத் தன் கையில் வைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால், பெருவாரியான பொருளாதார மாற்றத்தை மாநில அரசாங்கத்தால் உண்டாக்க முடியவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்த அரசின் சாதனைகள் ஒன்றன்பின் ஒன்றாக மேதகு கவர்னர் அவர்களின் உரையில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. நல்ல தகுதி வாய்ந்த தலைவர், நல்ல செல்வாக்கு மிகுந்த, சிறப்புப் பெற்ற கலைஞர் அவர்களுடைய சாதனை என்பது கவர்னர் அவர்களின் உரையில் காணக் கிடக்கிறது.

விவசாயத்தைப் பொறுத்த வரையில், எந்த ஆண்டையும் விட இந்த ஆண்டு புதிய நம்பிக்கை உருவாகியிருக்கிறது. 73 இலட்சம் டன் உற்பத்தி கிடைக்குமென்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பருவ மழையும் ஓரளவுக்குக் கிடைத்திருக்கிறது. அதோடு மின்சாரத் துறையில், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருப்பது குறிப்பிடத் தக்கது. அதனால் விவசாயம் ஓரளவுக்குப் பெருகியிருக்கிறது. அதே சமயத்தில் தொழில் துறையில் இந்த மாநிலம் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. தூத்துக்குடியில் உருவாகியிருக்கின்ற உர உற்பத்தித் தொழிற்சாலை, மணலியில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை இவைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தொழில் துறையில் நாம் எதிர்பார்க்கின்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், தமிழ் நாட்டில் உண்மையாக மிகப் பெரிய பொருளாதார முன்னேற்றம் ஏற்படுமென்ற நம்பிக்கை இருக்கிறது. அதே நேரத்தில் சேலம் உருக்காலை எதிர்பார்க்கப்பட்டு அதற்கான ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டிருந்தாலும் கூட, இன்னமும் மத்திய அரசாங்கம் பச்சைக்கொடி காட்டாத காரணத்தால், வேலைகள் முடங்கிக் கிடக்கின்றன என்பதை மத்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்தி கவர்னர் அவர்கள் தனது உரையில் சொல்லியிருக்கிறார். இவைகளையெல்லாம் விட, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும், சேதுசமுத்திரத் திட்டமும் தமிழகத்தின் நீண்டகாலப் பிரச்னைகள். இவைகள் எல்லாம் ஒத்தி வைக்கப்பட்ட பிரச்னைகள் அல்ல. இவைகள் மத்திய அரசாங்கத்தால் ஒத்துக் கொள்ளப்பட்டவை. நமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருகும் என்பதோடு, அதனால் ஏற்படுகின்ற வேலை வாய்ப்புகள் ஏராளம் என்பதை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் மத்திய அரசாங்கம் செய்ய வேண்டுமென்று சொல்கின்றபோது, அரசியல்

லாப நோக்கக்காரர்கள் மத்திய அரசாங்கத்தின் மீது குறை கூறுவதாகக் கருதக்கூடாது, எந்தக் கட்சியாகவிருந்தாலும் நாட்டுத் தேவையைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். பக்கத்து மாநிலத்தில் போர்க்கொடி உயர்த்தியது நினைவிருக்கலாம். மைசூர் மாநிலம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, 'எங்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லப்பட்ட பணம் தரப்படவில்லை' என்று அந்த மாநிலத்து கவர்னர் அவர்களே மத்திய அரசாங்கத்தின் மீது நேரடியாகக் குற்றம் சாட்டியிருக்கிறார். அதை அந்த மாநிலத்தின் சுதந்திரா கட்சி ஆதரித்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் கூட ஏற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கிறேன். மத்திய அரசாங்கத்திலிருக்கின்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்படி ஒருங்கிணைந்து வேலைத் திட்டங்களை நிறைவேற்றினால் வேகமான தொழில், இதர முன்னேற்றங்கள் காண இயலுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசாங்கம் எந்தப் பிரச்னையானாலும் பேசித் தீர்த்து, கூடிக்கலந்து, உரையாடி, தீர்த்துக்கொள்ளும் கொள்கையைக் கொண்டது. நமது தொழிற் சாலைகளுடைய வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், அதற்கு அடிப்படையாக தொழிலாளர்கள் அமைதியாக வாழவேண்டுமென்று நாம் நம்புகிறோம். ஆனால் தொழிலாளர் இனத்திற்காக ஒரே ஒரு கட்சிதான் இருக்கிறது, அவர்களுக்குத் தான் பேச நியாயமான உரிமை இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறார்கள். தமிழ் நாட்டில் தொழில் துறையில் இனிமையான கீதம் கேட்கின்ற சமயத்தில் சில பல நேரங்களில் அபஸ்வரம் கேட்கின்றது. தொழிலாளர்கள், முதலாளிகள் மத்தியில் சுமுகமான உறவு நிலவுவதை பாதிக்கும் வகையில் அரசியல் லாப நோக்கத்தோடு நடந்துகொண்டு வருகிறார்கள் என்பதை எடுத்துக் கூறாமல் இருக்க முடியாது.

மேதகு கவர்னர் அவர்களுடைய உரையில் இன்னொன்றையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்தத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத குடிசை மாற்று வாரியம் இந்தத் தமிழ் நாட்டில் நிறுவப்பட்டிருக்கிறது. இதை மத்திய அரசாங்க அமைச்சர்களே பாராட்டியிருக்கிறார்கள். இன்றையதினம் 39 இடங்களில் ஏறக்குறைய 4,587 குடியிருப்புகள் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் 42 இடங்களில் கட்டப்படவிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டங்களையெல்லாம் சென்னைக்கே கொடுக்கும் நிலைமை மாறி, அது மிக முக்கியமான நகரங்களான மதுரைக்கும் கோவைக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இந்தச் சென்னைக்கு இருக்கின்ற திட்டங்கள் எல்லாம் சென்னைக்கே மட்டுமல்லாமல் வேறு பல நகரங்களுக்கும் கிடைக்குமளவுக்குச் செய்ய வேண்டும்.

அதைப் போல் குடிநீர் வாரியம் உருவாக்கப்பட்டு அது ஒரு பெரிய திட்டமாக இயங்கி வருகிறது. இந்தக் குடிநீர் ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமல்லாமல், எல்லாப் பகுதி மக்களுக்கும் கிடைக்கும் நோக்கத்தோடு அது உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், தண்ணீர்ப் பற்றுக்குறை இருந்துகொண்டுதான் இருக்கிறது. இதுபற்றி ஏதாவது நிரந்தரமான முடிவினைத் துணிவாக எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். வடபுலத்திலே பார்த்தால், அங்கே அடிக்கடி வெள்ளத்தினால் பெரும் சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. நிவாரணமாக ஆண்டு



தோறும் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. அதே நேரத்திலே தென்புலத்திலே பெரும் வறட்சி நிலை. எனவே இவ்விரண்டையும் துடைக்கத் தக்க விதத்திலே, இரண்டையும் இணைக்கும் விதத்திலே, கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தினை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று அரசினைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது ஏதோ கற்பனைத் திட்டம் என்று சிலர் எண்ணலாம். ஆனால் இந்த விஞ்ஞான காலத்திலே இது நிறைவேற்றப்படக்கூடிய மிகச் சாதாரணத் திட்டம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சாதாரண ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள், பின் தங்கிய மக்களுக்கெல்லாம் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகை இந்த ஆண்டு சற்று அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உத்தியோகத் துறையில் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படுவது போல, வாணிப-வர்த்தகத் துறையில் அவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பெரிய வர்த்தக நிறுவனங்களிலே அரிசனங்களை, பின் தங்கிய வகுப்பினரை டைரெக்டராக நியமித்தால், அதே வேலை வாய்ப்பினைத் தேடிவரும் பின்தங்கிய வகுப்பினருக்குக் கூடுதலான வேலை வாய்ப்பினை அளிக்க முடியும் என்று கருதுகிறேன். இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கப்படும் திட்டம் முன்பிருந்தது. ஏனோ தெரியவில்லை, இப்போது அது தீவிரமாகச் செயல்படுத்தப்படவில்லை. இதுபற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து, இன்றைக்கும் கிராமங்கள் தேனடை போல இருக்கின்றன. சுதந்திரம் அடைந்து 20 ஆண்டுகள் ஆகியும் பல கிராமங்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகளில்லை. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து, கல்வித் துறையினைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கிராமங்களிலே அளிக்கப்படும் கல்வி தரமானதாக இல்லை. நகர்ப்புற மக்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியினைப் போல, தரமுள்ள கல்வி கிராமப்புற மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இன்றைக்கும் ஆலமரத்தடியிலும் குடிசையிலும்தான் பிள்ளைகளை உட்கார வைத்து கல்வி அளிக்கப்படுகிறதே தவிர, நிலைமை மாறவில்லை. பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை மட்டும் மேலே மேலே ஏற்றிக்கொண்டு போவதைவிட, இருக்கும் பள்ளிகளின் தரத்தினை உயர்த்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது ஒரு 'பேஷனாக'ப் போய்விட்டது, அரசினர் பள்ளிகளில் தரம் இல்லை, தனியார் பள்ளியில்தான் தரம் இருக்கிறது என்று அடிக்கடி சொல்லுவது. இம்மாதிரியெல்லாம் இல்லாமல், அனைத்துப் பள்ளிகளிலுமே தரம் உயர்த்தப்பட வேண்டும்.

நாம் நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழு வந்திருக்கிறது. அதில் சுட்டிக்காட்டியுள்ளபடி, ஒரு சில அதிகாரிகளை, ஒரு குறிப்பிட்ட திறமையின் அடிப்படையிலே மேல் நாடுகளுக்குச் சென்று அத்துறையில் மேலும் அறிவினைப் பெற்றுவர அனுப்புகிறோம். ஆனால் அவர்கள் திரும்பிவந்ததும், அவர்கள் இப்படி மேல்நாட்டிலே படித்ததற்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாத ஒரு துறைக்கு அவர்கள் நியமிக்கப்படுகிறதைப் பார்க்கிறோம். இந்நிலை மேலும் நீடிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. வி. தங்கபாண்டியன்] [24th January 1972

அடுத்து, வருவாய்த் துறையோடு கிராம வளர்ச்சித் துறை இன்றைக்குப் பின்னிப்பிணைந்திருப்பதைப் பார்க்கிறோம். சாதாரண பஞ்சாயத்து தலைவர் தேர்தல் என்றால்கூட, தாசில்தார்தான் தேதி நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கிறது, அவர் வந்துதான் தேர்தல் நடத்த வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலை சற்று தளர்த்தப்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துகள் சற்று சுதந்திரத்துடன் செயல்படத்தக்க விதத்தில் நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். மாவட்ட அளவிலே கிராம வளர்ச்சித் திட்டங்கள் செயலாக்கத்தினைப் பொறுத்த வரையில், சுதந்திரமாகப் பணியாற்ற வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.

அடுத்து, இந்தப் பெருவழித் துறையில் பணியாற்றும் சுமார் 17 ஆயிரம் காங்கி மஸ்தூர்கள் பத்து பதினைந்து ஆண்டுக் காலமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் அவர்கள் இன்னும் தினக்கூலியாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும், மேலும் பொங்கல் போன்ற பண்டிகைகளுக்கு அட்வான்ஸ் கொடுத்து, அதைப் பத்து மாதத் தவணைகளில் பிடித்துக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் விஷயத்தில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போதுள்ள அரசுதான் இவற்றைச் செய்யும் என்று பெரு நம்பிக்கையினைக் கொண்டுள்ள ஏழை மக்களுக்கு இவற்றைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சியின் அரிய பணிகளிலே பலவற்றுக்கும் முத்தாய்ப்பு வைத்தது போல, மேலும் பல சட்ட திட்டங்களை உருவாக்க இருக்கிறார்கள் என்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது குறித்து மேதகு கவர்னர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

(Deputy Chairman in the Chair)

THIRU D. SANTOSHAM : Mr. Deputy Chairman, Sir, I rise to support in general the Motion of Thanks that has been just moved and seconded. But in doing so, I wish to offer a few remarks, more by way of suggestions. But in regard to one particular action that has been recently taken by our Government, I want to express my strong dissent.

At the outset, I would like to pay my own humble homage and tribute to the heroic armed forces who through their suffering and sacrifices have won for us one of the most spectacular victories in World History. The brightest chapter in India's history has been recently written with the blood and sacrifices of our armed forces. Not only through their efforts, but because the civil population stood strongly united as a disciplined Nation behind them, this spectacular victory was made possible. For the effort of the armed forces as well as the civilian population the inspiring leadership of our brilliant Prime Minister, Thirumati Indira Gandhi, has been responsible and she has won the admiration of the whole World for her excellence and efficiency in leading us through War and even more so for her restraint and magnanimity during this conflict. For all these the Governor has paid a very elegant and a very eloquent tribute in his Address. But there is only one aspect to which the Governor has not made any reference in his Address to which, I think, he could have and should have made reference. It is to the praiseworthy part played by our Government and the people of Tamil Nadu in this successful war effort under the able and inspiring leadership of our



24th January 1972] [Thiru D. Santosham]

Hon. the Chief Minister. The Government and the people of Tamil Nadu were imbued with a very high pitch of patriotic fervour and supported the war efforts in every respect. They have come forward in offering encouragement and incentives to our armed forces. Not only that, they were the first to come forward with a definite plan to raise a huge sum of Rs. 10 crores within a span of 2 or 3 months for the National Defence Fund. Sir, probably, His Excellency thought it unnecessary to refer to this aspect, because these are all facts wellknown to you, Mr. Chairman, and to the Members of this House. But I think it necessary to recall this aspect of the war effort that has been undertaken by our Government for a particular reason. Very often when our Government and the Ministers talk about state autonomy, their motives come up for suspicion and it is always said that they are probably aiming at total secession. It is in this context, I think, that it is necessary to highlght the ardour and patriotic fervour displayed by our Hon. the Chief Minister and our Government during the hour of peril to our country. Definitely when our Hon. Chief Minister threw himself heart and soul into this war effort, he will not in any way weaken the Centre. If he asks for state autonomy, it must be for good reason. I want the powers that be at the Centre to realise. this. I want them to take note of the fact that he was the first person to offer such a huge figure of Rs. 10 crores to the National Defence Fund, and then to examine his request for autonomy not with any attribution of ulterior motive of secession but as a question on merits. There is a strong and unanswerable case for greater devolution of powers to the State especially on the fiscal and financial side. Under the present system, the Central Government has to be approached for getting licences before any major industry is to be started. It acts as a big burden, as a brake, as a hurdle to the industrial progress of this State. If this power can be taken away from the Centre and vested in the State, definitely each State will become full-fledged to work out its own industrial progress. I am sure each State would take more responsible and more drastic steps for the rapid industrialisation of the country. That would necessarily result in total progress of the whole country, of which every one can be really happy and proud.

Having made a short reference to the Centre-State relationship, I want to pass on immediately to the reference made by the Governor in his address to the problem of debt burden. He has pointedly said that for 1971-72 alone, the payment from our State to the Centre on this account both towards principal and interest has been to the tune of Rs. 64.86 crores, whereas the inflow by way of Central assistance is only to the tune of Rs. 40.40 crores. Having made this strong plea and having pointed out this grave situation, the Governor has made a very moderate suggestion. He has said that the Centre should set afoot an independent enquiry into the problem of debt burden of the States so that the existing debt is consolidated and such part of debt as relates to financially unproductive but socially beneficial expenditure be written off as grants or converted into soft loans. He goes on and says that this is only fit and proper because the benefits of these investments accrue not only to the State

[Thiru D. Santosham] [24th January 1972

Governments but also to the country as a whole. Having given such valid and good reason, the Governor has proposed that beneficial expenditure be written off as grants or converted into soft loans. I submit, Sir, that having regard to the good reason that he has himself pointed out, our Government should confidently write to the Centre and demand that his part of the debt should be written off as grant and not merely converted into soft loan. I think this second alternative need not at all be put forward to the Centre when the request is being made to the Centre.

The Governor's address, as was pointed out just now by the hon. Member Thiru. Thangapandian, refers to the general all-round progress made by our State during the last one year. It is undeniable that in all the aspects of our Government, particularly in the field of agriculture, industry and electrification, there has been praiseworthy progress made during the last one year. The Governor in his address has referred to the steps taken by the Government for solving the unemployment problem especially among the educated unemployed. As one who represents the Graduates constituency, I would like to confine myself to the problem of unemployment only among the educated. We are grateful to the Government for the various steps that they have taken for provision of employment for 2000 young men through the Youth Corps and the provision of Rs. 1,000 for loan to Industrial Training Institute trainees. All these are very good and we are grateful that the Government have come forward to solve the problem of unemployment among the educated. But is this enough? Some months ago, I was attending a Seminar organised by the Tamil Nadu Area Committee of the Y.M.C.A. to just discuss the problem of the educated unemployed. It was pointed out there that the total educated unemployed were in the region of about 5 to 7 lakhs—not less than 5 lakhs. A mere provision of 2,000 jobs by way of Youth Corps and a few hundred jobs through provision of loans for Industrial Training Institute trainees is only touching the fringe of the problem. This does not really tackle the main problem that has got to be solved. In that particular Seminar where academic thinkers were called upon to read papers the consensus of opinion so far as unemployment among the educated was concerned was this. Our country, in spite of the rapid progress that we are making in the field of industrialisation, is predominantly agricultural. It is bound to continue to be a predominantly agricultural country for some years to come. So, if we try to solve the problem of unemployment, this has got to be borne in mind and it is only through finding employment for our educated persons in agriculture, that we can tackle this problem really in a manner in which it should be and could be tackled. I think the only way in which we could do it is to make agriculture really attractive to our educated young men. How to do this? I think it is time that we set up a real Expert Committee to investigate and find out how agriculture can be made really attractive to our young men. Of course, we are building our schools and colleges by several dozens. Our Hon. the Education Minister is never tired of pointing out that we are



24th January 1972] [Thiru D. Santosham]

spending nearly 101 crores of rupees for all kinds of education in our State which represents nearly 31 per cent of the total Budget. While so, expenditure on education goes on increasing and it is bound to increase and unless we find employment for these persons in agriculture, there will be absolutely no salvation. While going into this question of finding employment for the educated young men in the field of agriculture, I would also like the Expert Committee to examine what will be the proper or minimum economic holding. Of course, the maximum ceiling has been fixed. I have no quarrel with it because it is an accepted fact. But it should also be found out what should be the minimum economic holding which would have the effect of attracting our young men to the field of agriculture. After this is done, steps should be taken in the field of agriculture for solving the problem of unemployment among our young men.

Sir, I have just returned after an extensive tour of the four southern districts. I have met my constituents, the bulk of whom are Graduate teachers. Wherever I went, I felt that they had a genuine grevance against one of the recent orders of our Government. On this point, I wish to submit that our Government have probably acted hastily. I am referring to the recent order of the Government rejecting the claim of the Graduate Teachers for revision of their pay. They have been pointing out how the salary scale fixed for them by the Second Pay Commission has been really unjust and unfair. I do not want to go into details but I shall only pinpoint this problem with reference to just three or four facts. As pointed out, there are several categories of Government employees who are all drawing Rs. 140 per month. It was the starting pay for Graduate teachers before the scale of pay fixed by the Second Pay Commission was adopted. They are non-medical demonstrators, resident teachers and Engineering Instructors—they were all receiving Rs. 140 as starting pay. Now after the scale of pay was fixed by the Second Pay Commission, all of them are started on Rs. 325. The Engineering Instructor in particular, who is working in the same high school as the Graduate teacher, takes 10 periods less in a whole week, whereas the Graduate teachers take nearly 20 to 24 periods in a week—not less than that—and they have also the additional responsibility of being class teachers. Such responsible persons, who are having two degrees and who were drawing Rs. 140, are now placed on a starting pay of Rs. 275 while the Engineering Instructors are being started on Rs. 325. The latter are only diploma-holders probably studying for 3 years after having passed the S.S.L.C. I submit, Sir, that these are facts which would clearly show that the salary scale fixed for these persons is definitely unjust and unfair. Now about Hindu Religious Department Inspectors, their previous starting pay was only Rs. 125. Now the Second Pay Commission has fixed their starting pay as Rs. 300, raised from 125 to Rs. 300. Now the Graduate teachers who were drawing Rs. 140 as starting pay prior to the Second Pay Commission scales are now started on Rs. 275. We can go on multiplying and quoting several instances. I think it is not necessary. During the last Budget discussion several Members here, Pulavar

[Thiru D. Santosham] [24th January 1972]

Arivudai Nambi, Thiru Rajah Iyer, Thiru Isvarmurti and I had spoken about this. I shall recall the very impassioned plea made by the hon. Member Pulavar Arivudai Nambi to the Hon. the Chief Minister to definitely reconsider the scales of pay and remove the obvious injustice that has been done to the Graduate teachers. If I remember correct, the Hon. the Chief Minister in his reply also stated that this request of the Graduate teachers would be considered with sympathy. When this promise came from the highest administrative head of the State, the Hon. the Chief Minister, we all believed that something good would come out of it. But all of a sudden, this announcement has been made in the Press that the plea for the revision of pay has been rejected. I quite understand the difficulties of the Government. Probably the financial stringency was one and the state of emergency might have been another. But I would request the Hon. Ministers to consider this question not purely from the point of view of money but the justice of the cause. If this is realised, I am sure, money can be found very easily. Iwant to say this. Wherever I went, I found there was a sense of frustration among the Graduate tecahers. They were saying எங்களைத்தான் புறக்கணித்து விட்டார்கள். They seem to say that this Government have done so much for every other class of people, that for all other employees they have done so much and have been liberal, and that only with reference to the Graduate teachers, they have meted out this kind of harsh treatment. They say that this is very unjust, unfair and discriminatory on the part of the Government. In some places—of course, I am saying this not with a view to conveying any threat ; not that the Government would be frightened—they are so disappointed that many of them are thinking in terms of some kind of protest. Sir, this situation which is assuming grave and serious proportions should be taken note of and solved by the Government. After all, education is considered to be so very important by our Government and our Government are spending 101 crores of rupees on education. If our teachers who mould and shape the character of our youth resort to some direct action or go on strike, it is not a desirable thing.

I hope that the decision that has been announced is only a temporary decision which was necessitated because of the emergency. As soon as the state of emergency is lifted, I hope that the Government would also reconsider the decision. I want such an assurance from the Government that they would reconsider the decision at a very early date so that the feelings of great disappointment and resentment of the Graduate teachers may be appeased to some extent. I do not even say that such an assurance will completely satisfy them, but such a genuine, *bona fide* assurance from the Government will, to some extent, satisfy them. Otherwise, I am sorry to say, the situations about to explode and some serious consequences may follow within a very short time. I want to make this a central point in my speech. Please do reconsider the decision with regard to salary revision for the Graduate teachers and within a short time, please announce that the decision that was already announced is only a temporary decision which was



24th January 1972] [Thiru D. Santosham]

necessitated by the emergency and that it will not be a permanent one. This has to be reconsidered very soon as soon as the emergency is lifted.

Another problem about which the Graduate teachers are very much agitated is this. A Graduate teacher is not usually looking forward to any great promotions. In other departments, even if a person joins as a clerk, he has a chance for promotion. He can rise up to the level of Tahsildar if not to the level of Deputy Collector. But in the Education Department, most teachers have to retire and die as teachers. For them, the only hope is the chance of becoming Headmasters like the hon. Member Thiru M. Rajah Iyer. But it is only for such brilliant men that such posts are reserved. Barring such exceptions, others have no chance of becoming Headmasters. So, the only hope of a teacher is to get selection grade post. For this, the present arrangement is 33-1/3 per cent for 'A' Wing, 15 per cent for 'B' Wing and 10 per cent for 'C' Wing. The situation is unfortunate in Tirunelveli and Kanyakumari districts which I recently toured. In Kanyakumari district, an aided school teacher, who has put in 20 or 21 years of service has not got the selection grade. Even in Tirunelveli district, in Board Schools which have now become Government schools, teachers who have put in 16 or 17 years of service have not got the selection grade. But in certain other districts, where the schools are cent per cent Government schools, teachers have got selection grade posts with six or seven years of service. This is clearly unjust and unfair. This kind of discrimination must not exist in Government service. At least with regard to Board School teachers, there is no justification in meting out step-motherly treatment to them. Having taken them, treat them as your own children. Having taken them, as Government employees, there is no justification for meting out step-motherly treatment to them.

There are also certain other problems. For fixing the number of selection grade posts, the Government Order lays down that the total strength of graduate teachers inside a district will be assessed as on 1st January 1971 and 15 per cent of that assessed strength will be treated as selection grade posts. On that basis, for Tirunelveli district, if the assessed strength as on 1st January 1971 is taken, there should be at least 87 selection grade posts. But, unfortunately, the Directorate of Education has assessed the strength as on 1st April 1970. They say that this G.O. is a mistake. I do not know how they can say that. They say that this G.O. has to be read with another G.O. issued in May 1970 which says that any appointment made subsequent to 1st April 1970 must have been made according to this G.O. I submit that this is wrong. When a G.O. is passed, it is passed after taking into consideration all other G.Os. previously passed and in spite of the existing G.O., the Government said that the strength should be assessed as on 1st January 1971. The other G.O. should have been even in the strictest interpretation confined to the narrowest

[Thiru D. Santosham] [24th January 1972

limits. It is there only for the purpose of certain promotions and not for other purposes. If so, more teachers in Tirunelveli district would be getting selection grade posts. I request the Government to look into this matter.

As regards the number, it is not a problem. So far as the Board School teachers are concerned, they are very much dissatisfied with the present arrangement. They think that it is a diminishing wing. Teacher appointment in future would continue to be made in 'A' Wing. A teacher must always have something to look forward to and something to achieve in life. I think the present classification of 'A' and 'B' Wings and saying that 'B' Wing is a diminishing wing which will gardually disappear and die is strictly not correct. An attempt should be made for a different kind of total integration.

I come now to one of my usual points in which unfortunately I have not been able to persuade the Hon. the Minister for Health, but I hope on some day, I will succeed. I was very much against the reduction in the total number of seats in medical colleges. The need for doctors is there. The aspiration for seats in Medical College is intense. The Government have said, "There is need for maintaining the standard of medical education. Therefore, reduction in the number of admissions is necessary". But assuming that, for the purpose of maintaining the standard, is such reduction necessary? Cannot the Government think of starting another medical college so that the number diminished might be made good by the opening of the new college? I know there is a decision taken by the National Planning Commission to the effect that during the Fourth Plan period, no new college should be started. If the number of seats had not been reduced, that decision would apply. But as the Government have reduced the number of seats, I think, Sir, that this is a valid ground for reconsidering the decision. A new medical college preferably in Ramanathapuram or Kanyakumari district would be very necessary.

I like to thank the Hon. the Minister for Public Health for having instituted the Post Graduate Diploma Course in Psychiatry in the Madurai Medical College. This is very necessary. Psychiatry is one of the most important branches of medicine in modern times and therefore, the opening of this branch in the Madurai Medical College is something to be welcomed. But along with this goes the request that there should be a modern hospital for mental diseases opened in Madurai for the benefit of southern districts. At present we have only one hospital, which we call 'Lunatic asylum' in Kilpauk. But one is not sufficient. It should not be in the nature of a 'lunatic asylum' as we used to think of in olden times, but it should be in the nature of a hospital giving treatment. Such a new and novel hospital could be started in Madurai as part of the Madurai Medical College. I request the Hon. the Minister for Public Health to consider this.



24th January 1972] [Thiru D. Santosham]

The next point I would urge is this. It has long been felt that justice, according to law, should be accessible and it should be within the reach of even a common man. If that is so, it is not merely sufficient to make it cheap. It must also be made available to him at his doorstep. There is no use in having courts hundreds of miles away and asking people to go there for getting justice. It is impossible for the common man to travel long distances for agitating a legal claim. I, therefore, submit that it is very necessary that a branch—a bench—of the High Court should be opened in one of the Southern districts, preferably in Madurai. At one point, the Hon. the Minister for Law practically accepted the suggestion to have a Bench called the 'Pandyan Bench' and it was about to be located in Madurai. But somehow, what was about to take place has now gone to the background. I do not want the Government to forget the earlier steps they have taken and the earlier promises they have given. I know there are difficulties. Some of the Judges of the High Court are against this move. I submit that the High Court should not be the final authority to judge the wishes of the people because they are not popularly elected and are not in touch with the common people. The Ministers who are in touch with the common people know the difficulties of the common people and they should take the initiative and interest in this very necessary salutary reform in the legal field.

The last point that I want to submit is this. In the Southern districts, we have the best scope for tourist development. Madurai, Rameswaram, Dhanushkodi, Tiruchendur, Cape, Common and Courtallam are theplaces which can be developed as a tourist paradise. Why not the Government intensify tourist attractions in these places? I feel that more efforts should be taken and more money should be spent in all these places. With these few remarks, I support the Motion of Thanks for the Governor's Address.

*திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:* அவைத் துணைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய தமிழக ஆளுநர் அவர்கள் உரையின் பேரிலே நண்பர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் முன் மொழிந்ததை நான் ஆதரிக்கும் வகையிலே இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதற்கு முன்பு நேற்று மதுரையில் நமது மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்களுக்கு மதுரை பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்திருக்கிறது. அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். உரிய காலத்தில் இக்கௌரவத்தினை வழங்கியிருக்கின்றார்கள். இது மிகமிகப் பொருத்தமானது.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது நாம் அடைந்த வெற்றிகுறித்து மிகவும் பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள். வெற்றி இவ்வளவு சிக்கிரம் கிட்டும் என்று யாருமே எண்ணவில்லை. எல்லாரும், இது ஒரு "Long-drawn-out struggle" ஆகத்தான் இருக்கும் என்று எண்ணினார்கள். அதையொட்டி நமது முதலமைச்சர் அவர்கள் யுத்த நிதிக்கென பத்துகோடி ரூபாய் நமது மாநிலத்தின் சார்பிலே கொடுப்பதாக வாக்களித்து, அதைத் திரட்டும் பணியிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்தியாவிலே எந்த மாநிலமும் இவ்வளவு பெரிய தொகையைத் தருவதாக ஏற்றுக்கொள்ள

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [24th January 1972

வில்லை. இப்போது யுத்தமும் நின்றுவிட்டது. இப்போது பார்த்தால், இரண்டு கோடி ரூபாய் என்ற அளவில்தான் திரட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்கினை, நாம் அனைவரும் முழுமனத்துடன் ஒத்துழைத்து, நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, யுத்தம் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலே நம்மிடம் ஏற்பட்ட ஒற்றுமை எப்போதும் இருக்கவேண்டும் என்றும் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த ஒற்றுமை உணர்ச்சியானது எப்போதும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைக்குக்கூட ஒரு பத்திரிகையில் பார்த்தேன், 'தனி சுதந்திர நாடு வேண்டும்' என்று ஒரு சில கட்சிக்காரர்கள் கோருகின்றார்கள். 'அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை' என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 'நமது வளர்ச்சிப் பணிகளுக்காக அதிக அதிகாரங்கள்தான் வேண்டும் என்று கோருகின்றோமே தவிர, தனிச் சுதந்திர நாடு வேண்டும் என்று அதற்கு யாரும் அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது, அதற்கு என் ஆதரவும் இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். இதை வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டு தென்மேற்குப் பருவக்காற்று சரிவர இல்லாமற்போனாலும், வடமேற்குப் பருவக்காற்று ஓரளவிற்கு முறையாக இருந்ததால், நாட்டின் பல பகுதிகளிலே இரண்டாம் போகம் சாகுபடி செய்யக்கூடிய அளவிற்குத் தண்ணீர் இருக்கின்றது. இந்த நேரத்தில் என் போன்ற விவசாயிகள் என்ன நினைக்கிறோம் என்றால், இந்த ஆண்டு விளையும் அமோக விளைச்சலினால் விலை குறைந்துபோய், விவசாயத்திற்காகச் செலவழித்த பணத்தைத் திரும்ப எடுக்கும் அளவிற்கு தான்யம் விலை போகுமா என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் ஒரு திருப்தி. பருத்தி விவசாயம் செய்கின்றவர்களுடைய நிலை ஓரளவிற்கு நன்றாக இருக்கும். காரணம் அமெரிக்காவிலிருந்து பி.எல். 480 திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி இறக்குமதி நிறுத்தப்பட்டுவிட்டபடியால், உள்ளூரில் விளையும் பருத்திக்கு நல்ல கிராக்கி இருக்கும். நமது அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் மாவட்டமான கோவை மாநிலத்தில் பருத்தி பயிரிட்டவர்களுடைய நிலை பரவாயில்லை. ஆனால் நெல் சாகுபடி செய்தவர்களுக்கு இந்த ஆண்டு நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். எனவே நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அரசாங்கம் 'நெல்லுக்கு சப்போர்ட்டிங் ப்ரைஸ்' கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் தானியங்களை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலைக்கு எடுத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மின் வசதியைப்பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய இந்திய உப கண்டத்திலே இருக்கிற மற்ற ராஜ்யங்களைப் பொறுத்த மட்டில், நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் எப்போதுமே முன்னணியில் நிற்கிறோம். நமக்கு மின் வசதி அதிகமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களில் எல்லா இடங்களுக்கும் மின் வசதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உணர்ச்சியுடன் நம்முடைய ஆளுநர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இதைக் கட்டாயம் அமைச்சரவை முடித்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அடுத்தபடியாக, சேலம் உருக்காலை சம்பந்தமாக ஆளுநர் அவர்களே, அவருடைய நாட்டுக்காரராக இருந்தாலும், கொஞ்சம் காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள், இதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதென்று. ஏன் தாமதமாகிறது என்று எனக்கே தெரியவில்லை. இப்படி ஏற்கெனவே ஒரு 10, 15 தினங்களுக்கு



24th January 1972] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

முன்பாக பல பேர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது துரிதமாக வேலை நடக்கப்போவதாக எதிர்பார்க்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரிக் காரியங்களில் துரிதமாக வேலை நடக்கவில்லையென்றால், லைசன்ஸ் பெறுகிற மற்ற வேலைகள் நம்மிடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்கிற வாதத்திற்குப் பலன் கிடைப்பதாக இருக்கும். மத்திய சர்க்கார் இந்த மாதிரிக் காரியங்களில் உரிய காலத்தில் நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய உதவியைச் செய்யும் என்று நான் நம்புகிறேன்.

டாக்டர் சந்தோஷம் அவர்கள் வேலையில்லாப் பிரச்னையைப் பற்றிப் பேசினார்கள். அவர் வக்கீல், டாக்டர் இல்லை. அவருடைய 'பிரதர்' டாக்டர். இப்போது நாம் எவ்வளவோ தொழில்களை ஏற்படுத்தி வேலை கிடைக்க வைக்கிறோம். ஐந்தில் ஒரு பங்கு கல்விக்காகச் செலவழிக்கிறோம். ஆயிரக்கணக்கான மாணவர்களை உண்டாக்குகிறோம். தினம் தினம் என்னைப் போன்றவர்களைப் பார்த்தால், வேலை கிடைக்கவில்லையே, 3 வருடம் ஆகிவிட்டது, 4 வருடம் ஆகிவிட்டது என்று பலர் சொல்கிற நிலைமையைப் பார்க்கிறோம். கண்கூடாகப் பார்க்கிறோம். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு நாம் வேண்டிய காரியங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இளைஞர் அணி விஷயத்தில் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இதனால் ஏற்படுகிற நன்மைகளைப் பொறுத்துத்தான் பார்க்கவேண்டுமென்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது நன்றாக வேலை செய்ய வேண்டும். இதன் மூலமாக நம்முடைய மாநிலத்திற்கு என்னென்ன காரியங்கள் நடக்கின்றன என்று அரசும் அறிகின்ற முறையில் இதை வகுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இப்போது ஒரு நிலை இருக்கிறது. நான் சென்ற தடவை சொன்னேன். கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் வசதி உயர வேண்டும். நகர்ப்புறங்களில் டீ கடை வைத்தால் நல்ல நிலைமையில் சம்பாதித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணம் கிராமங்களில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றுகிற வகையில் விவசாயம் கட்டுப்படியாகும் என்ற நிலைமை வர வேண்டும். ஒரு பி. எஸ். ஸி. மாணவன் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவனாக இருந்தாலும், அவன் டெமான்ஸ்ட்ரேடர் வேலைக்குத் தான் வருகிறான். விவசாயம் செய்து சம்பாதித்து விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. இந்த மாதிரி நிலைமையை மாற்றியாகவேண்டும். எல்லோருக்கும் தொழில் துறையில் வேலை வாய்ப்பு கொடுப்பது என்பது அரிதான காரியம். விவசாயத்தில் அதிகம் பேர்கள் ஈடுபடும்படியான ஒரு திட்டத்தை சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் முன்னோடியாக திட்டக் குழு, நிர்வாக சீரமைப்புக் குழு என்று அமைத்திருக்கிறார்கள். இதை அடுத்த மாநிலங்களும் பார்த்துச் செய்யும் அளவிற்கு இதை முன்னோடியாகச் செய்திருக்கிறார்கள். அதன் வேலை நல்ல முறையில் நடக்கிறது என்று மற்றவர்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்று ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாநிலத்திலே ஒரு சிறந்த முன்னாள் எகனாமிக் அட்வைசராக இருந்தவரை அதற்கு நியமித்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் நடக்குமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதனுடைய பலன்களை, அதனால் பின்னால் ஏற்படும்படியான தொழில் துறை முன்னேற்றங்களைப் பார்க்க வேண்டும். நம் மாநிலம் மற்ற எல்லா மாநிலங்களையும் விட தொழிலில் சிறந்த நிலையில் இருக்கிறது என்ற நிலை வரவேண்டும். இப்போது நம் மாநிலமானது பஞ்சாலைத்

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [24th January 1972

தொழில் முக்கியத்துவம் வாய்ந்த நிலைமையில் இருக்கிறது. மணலியில் பெட்ரோ கெமிகல் காம்பளக்ஸ், தூத்துக்குடியில் இரசாயன உரத் தொழிற் சாலை, டைர் தொழிற்சாலை, மற்ற தொழிற்சாலைகள் வரப்போகின்றன என்றெல்லாம் திட்டமிட்டிருக்கிறார்கள். இதில் நம்முடைய தொழில் துறை அமைச்சரவர்கள் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். படித்து வரும் இளைஞர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கடன் தொகையைப்பற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமக்கு மத்திய சர்க்காரிடத்திலிருந்து எவ்வளவு கிராண்டாக வருகிறதோ அந்த அளவிற்கு மேல் கடன் கொடுக்க வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் வருவாய் இல்லாமலேயே நம் சொந்த வருவாயில் நடத்தும்படியான நிலைமை என்று சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். கொடுக்க வேண்டிய காலத் தவணைகளை நீண்ட வருஷங்களுக்கு இலகுவான கடன்களாக ஆக்க வேண்டும், அல்லது மாரடோரியம் கொடுக்கவேண்டிய நிலைமை உண்டாக்க வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். இதை அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி நமக்கு வேண்டிய தொகையைப் பெற்றுக் கொண்டு, இதனால் ஏற்படக் கூடிய இழப்பைச் சீர்ப்படுத்த அரசு வழிவகை காணும், அதற்கு ஆளுநர் அவர்களுடைய ஆதரவு இருக்குமென்று நம்புகிறேன்.

போக்குவரத்துத் துறையைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள். பாண்டியன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், பல்லவா டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1948-ம் வருஷத்திலே இந்தப் போக்குவரத்துத் துறையை எடுக்கிற காலத்திலேயே இந்த நிர்வாகம் லாபகரமாக நடக்கவில்லையென்று சொல்லிக்கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். இப்போது எல்லாப் போக்குவரத்து ஸ்தாபனங்களையும் எடுத்திருக்கிறார்கள். எங்கள் பக்கத்தில் டி. வி. எஸ். ஸ்தாபனம் நடந்துகொண்டிருக்கிற முறையானது மக்களை மிகவும் கவர்ந்திருக்கிறது. நண்பர் போக்குவரத்து அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். "இந்த டி.வி.எஸ். ஸ்தாபனத்தை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். எந்த வகையிலும் அவர்கள் நடத்திய விதத்திற்குக் குறைந்த விதத்தில் நடக்கிறது என்ற ஒரு குறைபாடு இல்லாமல் இந்தத் துறையை நடத்த வேண்டும்". அப்போது தான் ஜனங்கள் இதை நல்ல ஒரு காரியம் என்று நினைப்பார்கள். நான் சில வருடங்களுக்கு முன்பு சொல்லியிருக்கிறேன், போக்குவரத்துக் கார்ப்பரேஷன் எல்லாவற்றையும் டி.வி.எஸ்ஸிடத்தில் கொடுத்தால் நல்லது என்று. அந்த மாதிரி நிலைமை இப்போது இல்லை. அவர்களிடத்திலிருந்து நாம் எடுத்திருக்கிறோம். ஆகவே அதை நல்ல முறையில் நடத்த வேண்டும். அதே போல சேரன், சோழன், பல்லவன், இந்த பாண்டியன் ஆகிய 4 கார்ப்பரேஷன்களையும் நல்ல முறையில் நடத்தி நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றோ நேற்றோ ஒரு நல்ல விஷயத்தை நான் பார்த்தேன். நம்முடைய அறநிலைய அமைச்சர் அவர்கள் மற்ற மதஸ்தர்கள் கல்வி, மற்ற ஸ்தாபனங்களை வைத்துக்கொண்டு அதன் மூலம் கிடைக்கிற சலுகைகளை வைத்து மற்றவர்களை தங்களுடைய மதத்திற்கு மாற்றிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் செங்கிப்பட்டி காச நோய் வைத்திய சாலையில் இருக்கிற வைத்தியர், இந்த மாதிரிச் சலுகைகளை உபயோகித்துக் கொண்டு, மற்றவர்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கிறார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நல்ல பண வருவாய் இருக்கிற நம்முடைய தேவஸ்தானங்களின் பணத்தை வைத்து,



24th January 1972] [திரு. எஸ். ஜெயராம் ரெட்டியார்]

நல்லபடியாக வேலை செய்யக் கூடிய ஜனங்களுக்கெல்லாம் வேலை கொடுத்து, உதவி செய்து, இந்து மதஸ்தர்களாலும் இந்த மாதிரி உதவி செய்ய முடியும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவச் செய்ய இந்த மாதிரி நல்ல காரியத்தை ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்கள். அது நல்லபடியாக ஆரம்பித்து நன்றாக நடந்து செழித்தோங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

கங்கை-காவிரி இணைப்பு பற்றியெல்லாம் பேசினார்கள். முன்பு இவைகளெல்லாம் நடக்காத காரியம் என்று சொன்னார்கள். இப்பொழுது நடக்கும் என்று காட்டப்பட்டிருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றோ இன்றோ இந்து பத்திரிகையில் பார்த்தேன். மின்சார இணைப்பு இலங்கையிலிருந்து கூட கொண்டுவரலாமென்று மத்திய அமைச்சர் டாக்டர் கே. எஸ். ராவ் அவர்களும் மேற்கு ஜெர்மனி நிபுணர் இருவரும் கூறியிருக்கிறார்கள். இம்மாதிரியான திட்டங்களை நிறைவேற்றி எல்லா இடங்களிலும் மின்சார வசதியை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்கள் இம்மாதிரியான வசதிகளுக்காக நகர்ப் புறங்களுக்குக் குடியேறாமல், கிராமங்களிலேயே நல்வாழ்வு வாழலாம் என்ற எண்ணத்தைக் கொள்ளும் அளவுக்கு இந்தத் திட்டம் செயல்பட வேண்டும். மற்றபடி எல்லா விதத்திலும் நம்முடைய தமிழ் நாட்டு அமைச்சரவை நல்ல வகையில் செயலாற்றி வருகிறதென்று எடுத்துக் கூறி, அதற்காக எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** தலைவர் அவர்களே, தமிழகத்து ஆளுநர் அவர்கள், சபையைத் தொடங்கி ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் புலப்படுத்திக்கொள்ள அனுமதித்ததற்கு முதலில் நன்றி. இந்த ஆளுநர் உரை என்ற சம்பிரதாயத்தின் மூலத்தை நாம் பார்த்தால், ஒரு உண்மையை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். நம்முடைய அந்தப் பாராளுமன்ற மரபு ஆங்கிலப் பாராளுமன்றத்தைத் தொடர்ந்து வருகிற ஒரு மரபு என்பது நமக்குத் தெரியும். அந்தப் பாராளுமன்ற நடைமுறை நிலைகள்தான் இந்தியாவிலும், தமிழகத்திலும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன என்பதை நாம் உணரவேண்டும். ஓராண்டு முடிந்து வரவு-செலவுத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு முடிந்த பிறகு இந்த ஆண்டுத் துவக்கத்திலே, அதற்கான வரவு-செலவுத் திட்டங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு அரசினரின் கருத்துக்கள் என்ன, எந்தெந்தத் துறையில் அரசினுடைய கவனம் செல்லப்போகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகவும் அவை இன்னவை என்றும், அவற்றிலே நாம் மேற்கொண்டு செய்யப்போவவை, செய்து முடித்தவை இவ்வளவு என்றும் அந்த அடிப்படையில் வருங்காலத்திற்கு நாமே மேற்கொள்ளவிருக்கிற நெறி என்ன, துறை என்ன, முறை என்ன, அளவு என்ன என்பனவற்றை எல்லாம் தேசாதிபதி உரையோ அல்லது ஆளுநர் உரையோ எடுத்துக் காட்டுவதாகும். அந்த அடிப்படையிலிருந்து அரசு எந்த நோக்கத்திலிருக்கிறது, எந்தெந்த முறையில் வரவு-செலவுத் திட்டத்தை அமைக்கப் போகிறது என்பதை நாம் தெரிந்துகொண்டு, அதன் மீது சபையிலே உறுப்பினர்கள் எடுத்துக் கூறுகின்ற கருத்துக்களையெல்லாம் அரசு கேட்டு, அந்த அடிப்படையிலே வரவு-செலவுத் திட்டங்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பது என்று அமைகின்ற முறையில் ஒரு முதல் சம்பிரதாயம் ஆளுநர் உரை என்பது. இது பல்லாண்டுகளாக இருந்து வருகின்ற ஒன்று என்பதை பழைய நெறிமுறைகளிலிருந்து, பதிப்புகளிலிருந்து

நாம் உணரலாம். அந்தக் கணக்கை எடுத்துக்கொண்டு பார்த்தால், நம்முடைய சம்பிரதாயப்படியும், நம்முடைய நாகரீகப்படியும் கவர்னர் பெருமானுக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்கிற முறையிலே அவர்களுடைய பேச்சு, உரையில் கண்டுள்ள விஷயங்களைப்பற்றி நம்முடைய கருத்துக்களைத் தெரிவிப்பது இன்றியமையாதது. அந்த ஒரு உதவி இன்று அமைந்திருப்பதால, அவருக்கு நாம் நம்முடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கான பிரேரணையைப் பிரேரேபித்து, அதன் மீது நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம். அந்த நன்றி தெரிவிப்புத் தீர்மானத்தை அவ்வளவு பேரும் ஆதரித்து, அதை ஆமோதித்து அதன் மூலம் என்னனென்னவற்றைச் சொன்னார்கள், எதை, எதைச் சொல்லவில்லை, எதைச் சொல்லியிருக்கவேண்டும் என்பது போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குத்தான் இந்த வசதி, வாய்ப்பு, சந்தர்ப்பம் என்று நான் சொல்லித் தெரியத் தேவையில்லை. அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு பார்த்தால், சென்ற ஆண்டிலே நம்முடைய அரசு செய்த அரிய பணிகளை எல்லாம் எடுத்துக் கூறுவதைவிட, இந்த மாநிலத்திற்குச் சம்பந்தப்பட்டவற்றைவிட, இந்திய தேசம் சம்பந்தப்பட்ட விஷயம், போர் விஷயங்களை எல்லாம் இங்கே சொல்லியிருப்பது தேவை தானா என்பனவற்றையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டியவர்களாகயிருக்கிறோம். முதல் பத்தி பொதுவாக இருக்கிறது. இரண்டாவது பத்தி, மூன்றாவது பத்தி, நான்காவது பத்திகள் பாகிஸ்தான் நம் மீது தொடர்ந்த யுத்தத்திலே இந்தியப் படைகள் பெற்ற வெற்றியும் அதன் காரணமாக நாம் அடைந்த மகிழ்ச்சியும் அதன் காரணமாக பெற்ற உவகையும் உண்மை என்றாலும், அது நம்முடைய அரசுக்கு உட்பட்டதா என்பதை நாம் சிறிது சிந்திக்கத்தான் வேண்டும். இதை மத்திய ஆட்சியில் அங்குள்ள ராஷ்ட்ரபதி, தேசத்தலைவன் உரையில் எடுத்துக்காட்டினால், நாம் புரிந்துகொள்ள முடியும். நம்முடைய படை வென்றது என்று சொன்னால், நமக்கெல்லாம் பெருமையிருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. நம்முடைய ஆளுகைக்குள் அந்தப் படைகள் இல்லை. நம்முடைய ஆளுகைக்குட்படாத படைகள், நம்முடைய முப்படைகள் என்று கூறி அவை வென்றன என்று சொல்லிக்கொண்டிருப்பது திருப்தியாக இருந்தாலும், எந்த வரைமுறைக்குட்பட்டது என்பது சிந்திக்க வேண்டியதொன்று. இப்படிப்பட்ட எல்லாவற்றையும் கூட இங்கு பேசலாம், இந்திய சர்வதேச நிலை இவற்றைப்பற்றியெல்லாம் பேசலாம் என்ற நிலையோடு மற்ற தேசங்களைக் கேள்வி கேட்கும் நிலை கூட வந்திருக்கிறது. இது பொருந்துமா என்பது சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நாட்டினுடைய பொதுவான போர் நிலையில் மகிழ்ச்சியைத் தெரிவித்து அரசாங்கத்தினுடைய கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் படையினர் வெற்றி பெற்றால், அது அவர்களுக்கும் பாதுகாப்பு, நாட்டுக்கும் பாதுகாப்பு, நமக்கும் பாதுகாப்பு. நமக்கும் சேர்த்துத்தான் அந்தப் படையினர் போராடியிருக்கிறார்கள் என்ற முறையில்தான் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன்: அந்த உணர்ச்சியிலும், அந்த மகிழ்ச்சியிலும் யாருக்கும் பின் வாங்காத அளவுக்கு உவகையும் பேருணர்வும் கொள்ள நாங்கள் தயாராகவிருக்கிறோம். ஆனாலும் இதை 'கான்ஸ்டிடியூஷன்'படி பார்த்தால், நம்முடைய மாநில ஆட்சிக்குள் இருக்கிறதா என்பது கொஞ்சம் சர்ச்சைக்குட்பட்ட விஷயம், அதற்கு மேல் நான் போகவிரும்பவில்லை. இதில் யாரையும் குறை கூறுவதற்கு முற்படுவதற்காகச் சொல்வதாகக் கருத வேண்டாம். எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடியதொன்றாகவிருந்தாலும், அதைத் தெரிவிக்க வேண்டிய அளவில், தெரிவிக்க வேண்டிய வகையில் தெரிவித்தால் நன்றாகவிருக்கும் என்று கருதுகிறேன். இந்த நிலையில் நமக்கு இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத் தந்ததற்காகவும், இதுமாதிரி நல்ல மரபுகள், நல்ல முறைகள் ஏற்படுத்திக்கொள்ளுவதுபற்றியும் சிந்தித்து, சரி — கொள்ளலாம், வேண்டாம் — என்று கேட்டு சிந்தித்து ஒரு முடிவிற்கு வருவதற்கும் இது ஒரு அரிய சந்தர்ப்பமாக இருக்கின்ற காரணத்தினாலே, நான் இதற்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



இனி அடுத்து, எல்லாவற்றையும் இங்கே பேசிவிட முடியாது. குறிப்பிட்ட ஒரு சில விஷயங்களைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரையில் பத்தாவது பத்தியில் 'சேலம் உருக்காலையைப் பொறுத்த மட்டில் திட்ட ஆலோசகர்கள் தங்கள் அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளனர் என்றாலும், இத்திட்டம் பற்றிய நடவடிக்கை தொடர்ந்து மெத்தனமாகவே உள்ளது என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆங்கில வாசகத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, மொழி பெயர்ப்பில், உள்ளது இல்லாமல் இருக்கிறது, இல்லாதது வந்திருக்கிறது. ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் சம்பந்தமில்லாமல், ஒருவேளை ஆங்கிலத்தில் உரை தயாரித்தவரே அதே எண்ணங்களை, கருத்துக்களை மனத்தில் கொண்டு தமிழிலும் உரையைத் தயாரித்துவிட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம் அவற்றிலுள்ள வாசகங்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு மொழிபெயர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசினருக்கு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

'இந்தத் திட்டம் பற்றிய நடவடிக்கை தொடர்ந்து மெத்தனமாகவே உள்ளது என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன்' என்று சொல்லி, அதே நேரத்தில், 'இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்திய அரசு உயர் மட்டத்தில் மிகுந்த அக்கறை உள்ளதென்பது எனக்குத் தெரியும்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது எனக்குப் புரியவில்லை. இது ரொம்பவும் குழப்பமான வேதாந்தத் தத்துவங்களைச் சொல்லுவதுபோல இருக்கிறது. தெளிவாக, இன்னது — இங்கே என்று புலப்படுத்த முடியாததைத் தத்துவார்த்தம் பேசுவது போல, அந்தரார்த்தம் சொல்லுவது போல, ஒரு நேரத்தில் எல்லாம் புரிவதுபோல வார்த்தைகள் அமைந்திருந்தாலும் ஒன்றும் புரியாததாகவே அமைந்திருக்கிறது. 'மாநிலத்தில் கொஞ்சம் மெத்தனமாகவே உள்ளது என்று வருந்தும் அதே நேரத்தில், அங்கே உயர் மட்டத்தில் மிகுந்த அக்கரை உள்ளது' என்று சொல்லும்போது, இதில் எங்கே என்ன தகாறு இருக்கிறது என்று தெரியவில்லை. எந்த மட்டத்தில் எங்கே தகாறு ? அங்கே தகராறு அல்லது மாநிலத்தில் தகராறு? கொஞ்சம் யோசிக்க வேண்டும். இன்னும் ஒன்றைக்கூடச் சொல்ல வேண்டும் இந்தச் சந்தர்ப்பத்தில். இந்தத் திட்டம் பற்றி முதல் முதலில் பிரஸ்தாபித்த காலத்திலிருந்து, தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக, 'இந்தச் சேலம் உருக்காலைத் திட்டம் பொருளாதார ரீதியில் வெற்றிகரமாக நடத்த முடியாத ஒன்று. ஏதோ தத்துவ ரீதியில், சமய ரீதியில், அரசியல் ரீதியில் இதை நிலை நாட்டலாமே தவிர, பொருளாதார ரீதியில் லாபகரமாக நடத்த முடியாது' என்று ஒரு சிலர் சொல்லிக்கொண்டிருந்தது

[திரு. சா. கணேசன்] [24th January 1972

உண்மை. இன்றைக்கும் அவர்கள் சொல்லிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். நான் அவர்களைக் குறை சொல்ல எண்ணவில்லை. அவர்கள் எனக்கு மிகுந்த நெருங்கிய நண்பர்கள்கூட. அடியேன் இவ்விடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளுவதெல்லாம், அவர்கள் சொல்லுவதுதான் உண்மையா? பொருளாதார ரீதியில் இத்திட்டத்தினை லாபகரமாக நடத்த முடியாதா? இந்த உண்மை காரணமாகத்தான் மத்திய அரசோ அல்லது மாநில அரசோ இதிலே தயக்கமோ அல்லது மெத்தனமோ காட்டிக்கொண்டிருக்கிறதா என்பதைச் சாங்கோபாங்கமாகச் சொல்லி, அது சாத்தியமானதாக இருந்தால், நடத்தியே தீர வேண்டும் அல்லது ஏதோ அதுபற்றிச் சொல்லுவது சமய சந்தர்ப்பங்களுக்கு அரசியல் ரீதியில் உதவியாக இருக்கும் என்பதற்காக இதை வைத்துக் கொண்டு இருப்பதானால், உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்லி 'அது வேண்டாம்' என்று சொல்லி, கை கழுவி விடுவது சிறப்பாக இருக்கும். இந்த இரண்டும் கெட்ட நிலையில் ஈரொட்டு என்று சொல்லுவார்களே—அங்கே ஒட்டு இங்கே ஒட்டு என்று—இந்த நிலையை மாற்ற அல்லது இதுதான் என்று திட்டவட்டமாகச் சொல்ல அரசு முன்வர வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அங்ஙனமே அடுத்துவரும் பத்தியில் தொழில்பற்றி வரும்போது, அதில் நல்ல அரிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதை மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். "தொழில் பிணக்குகளை தொழில் அதிபர்களும் தொழிற் சங்கங்களும் ஒருவரோடொருவர் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி சண்டை சச்சரவுகள் மூலம் தீர்த்துக்கொள்ள முயலுவது சரியான முறையாகாது" என்று இதில் காணக்கிடக்கின்றது. இந்த உணர்ச்சியை மதிக்கின்றேன், பாராட்டுகின்றேன். எது ஒன்றையும் சண்டை சச்சரவுகள் மூலம் தீர்த்துக்கொள்ள முடியாது. சண்டை சச்சரவுகள் மூலம் அதை மேலும் பெரிதுபடுத்திக்கொள்ளலாம், ஆனால் எதையும் தீர்த்துக்கொள்ள முடியாது. பேசி உடன்பாடு காண்பதில்தான் தீர்த்துக் கொள்ளலாம். அல்லது கோர்ட்டுகள் மூலம் பரிகாரம் காணலாம். சண்டை சச்சரவுகள் மூலம் தீமைகளைப் பெருக்கிக் கொள்ளலாம். எனவே குறிப்பிட்டுள்ள இந்த உணர்ச்சியினைப் பாராட்டுகின்றேன். அதே நேரத்தில் இதோடு கூட இன்னும் ஒன்றைச் சேர்த்து வைத்துவிட வேண்டும். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு அதில் ஈடுபட்டு, நைந்து, பாழாய்ப்போன நாடுகள் எல்லாம் இன்றைக்குத் தலை நிமிர்ந்து, ஏன், அமெரிக்காவைவிட மிகச் சிறந்த நிலையில் வளர்ந்துள்ள நிலைமையைப் பார்க்கிறோம். யுத்தம் முடிந்து அதன்பின் ஜெர்மன் நிலை என்ன என்பதைப்பற்றிப் படித்திருக்கின்றோம். அங்கே ஐம்பது பேருக்கு ஒரு தட்டு சாப்பாடு, ஐம்பது பேருக்கு ஒரு பூட்ஸ் என்ற கணக்கில் இருந்தது. யுத்தத்திற்குப் பிறகு ஐம்பது பேருக்கு ஒரு தட்டு சாப்பாடு என்றால் ஐம்பது பேரும் ஒரே தட்டில் சாப்பிடுவார்கள் என்றோ அல்லது ஐம்பது பேரும் ஒரு பூட்ஸைப் போட்டுக் கொள்ளுவார்கள் என்றோ அர்த்தமில்லை. சராசரிக் கணக்கில் பொருளாதார நிலை அப்படி இருந்தது என்பதைத்தான் அப்படிக் குறிப்பிடுகின்றார்கள். புள்ளி விவரம். அந்த நாடு இன்றைக்கு அமெரிக்கன் டாலரைவிட எங்கள் 'மார்க்' தரத்தில் உயர்ந்தது, அதற்குத்தான் முதல் மரியாதை என்று சொல்லி, இன்றைக்கு ஐரோப்பிய நாடுகள் மத்தியில் ஜெர்மனியின் 'மார்க்'குக்கே மதிப்பிருப்பதைப் பார்க்கிறோம். அந்த அளவிற்கு யுத்தத்திற்குப் பிறகு அந்த நாடுகள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. காரணம் என்ன? அங்கே உள்ள தொழிலகங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளாகும். அங்கே தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், அரசு ஆக இம்மூவருக்கும் இடையிலுள்ள சௌஜன்யம். அவர்கள் ஒரு ஒழுங்கு முறையைக் கடைபிடித்துக்கொண்டு தேச முன்னேற்றத்தின் பின்னால் நிற்கின்றார்கள். எனவே அப்படிப்பட்ட உணர்ச்சியினை நாம் கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகின்றேன். இந்த உணர்ச்சியினைக் கொள்ளுவதோடு மட்டுமல்லாமல், இதோடு மூன்றாவது ஒன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பதில் வலியுறுத்திக்கூற முன்வருகின்றேன். எந்த விஷயத்திலும் எப்போதும் விவகாரங்கள் இருக்கத் தான் இருக்கும். எப்போதும் இப்படிப்பட்ட விவகாரங்களில் பரஸ்பரம் பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமானால், பரஸ்பரம் பேச்சு வார்த்தை மூலம் சுமுகமான முடிவினை நிலைபெறச் செய்துகொள்ள வேண்டும். அப்படி முடியவில்லையென்றால், முடியாத சந்தர்ப்பங்களிலே 'மத்யஸ்தம்' என்று ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டு, அவர்கள் சொல்லும் முடிவே இறுதியானது, முடிவானது என்று இரண்டு சாராரும் கட்டுப்படவேண்டியதாகும் என்ற நிலைமையை அமைத்து விடுவோமானால், செம்மையாகலாம். அதற்கும் மேலே போகப்போனால், விவகாரங்கள், வம்புகள், தும்புகள், ஸ்ட்ரைக் முதலியன எங்கேயும் தலை தூக்கக்கூடாது என்ற கடுமையான சட்டம் கொஞ்சகாலமாவது இருந்தால்தான், இந்தத் தேசத்தின் பொருளாதாரம் சீர்படும், நிறைவு படும், நமது உற்பத்தியும் தரமாக இருக்கும், விலையும் முறையானதாக, 'ரீசனபிள் ப்ரைசாக' இருக்கும். இவற்றை நாம் மனத்தில் கொண்டு செயல்படுத்தத் தொடங்க வேண்டும். அதோடுகூட எந்தத் தொழிலிலும், தொழிற்சாலை மட்டத்தில், — தொழிலாளர்கள் மட்டத்தில், மாணக்கர்கள் மட்டத்தில் ஆக இந்த மூன்று துறைகளுள் எந்த அரசியல் கட்சிக்காரர்களும் தலை வைத்துக்கூட படுக்கக்கூடாது என்ற நியதியை நாம் அனைவரும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படி ஒரு சட்டமே செய்திட வேண்டும், விதி செய்ய வேண்டும். இப்படிச் செய்துகொண்டே சட்டமோ விதியோ மிக மிகக் கடுமையாக நிர்வகிக்கப்பட வேண்டும். மாணக்கர் துறை, தொழிலகங்கள், தொழிலாளர் துறை ஆக இந்த மூன்றிலுள்ளே அரசியல்வாதிக்கு இடமே இல்லாமல் செய்திடல் வேண்டும். இது மிகவும் அவசியமாகும் அவசரமும் ஆனதாகும். இப்போதுள்ள கல்வி முறையில் அரசியல் என்பது, 'பாலிடிக்ஸ்' என்பது, விஞ்ஞான ரீதியில், ஒரு 'ஸயன்ஸ்' என்ற முறையில் இருக்கலாம். படிக்கட்டும் ஏட்டில். வாதிடட்டும் பள்ளி அரங்கங்களில். இரு புறங்களையும் அவர்களே கேட்டு அவர்களே ஒரு முடிவிற்கு வரட்டும். ஆனால் எந்த ஒரு மாணக்கனும் சுதந்திராக் கட்சியில் உறுப்பினராக இருக்கக் கூடாது. காங்கிரஸில் உறுப்பினராக இருக்கக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருக்கக் கூடாது. . எந்த ஒரு அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இருக்கக் கூடாது என்ற ஒரு விதியைச் செய்திடல் வேண்டும். கட்சிவாதம் பேசிக்கொண்டு, தேசத்தின் முன்னேற்றத்திற்கு யாரும் குந்தகமாக இருத்தல் கூடாது என்ற எண்ணத்தின் வழி நின்று அந்தரங்க சுத்தியோடு நான் கேட்டுக் கொள்ளுவது . எல்லாம் இதுதான். இதை ஒவ்வொருவரும் மனத்தில் கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு அரசியல் கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலம் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். அதே நேரத்திலே அரசு இந்த நெறியிலே உறுதியாகக் கடுமையாக நின்று செயல்பட்டு, அதன் மூலமாக நிரந்தரமான நன்மையை மாநிலத்துக்கு, தேசத்துக்கு உண்டாக்கித் தரவேண்டும்.



24th January 1972] [திரு. சா. கணேசன்]

[திரு. சா. கணேசன்] [24th January 1972

இனி, அடுத்து, 16-வது பத்தியிலே "மாநகரத்தின் இட நெரிசலைத் தணிக்கும் வகையில் சென்னை மாநகரைச் சுற்றிலும் புதிய நகரங்களைத் தோற்றுவித்து, நகர வளர்ச்சிக்கான புதிய வழிமுறைகளை வகுப்பதே இச் சிக்கலுக்குத் தீர்வு காண நாம் மேற்கொள்ளக் கருதியுள்ள செயல்முறைத் திட்டமாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது நல்ல உணர்ச்சி, இதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதே நேரத்திலே, இன்னொன்றையும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைச் சுற்றியே நகரங்கள், துணை நகரங்கள் -- லைபர்ப்ஸ் — புற நகரங்கள் என்று இவைகளை ஏற்படுத்திக்கொண்டே போனால், தமிழகம் முழுவதும் சென்னையைச் சுற்றித்தான் குடியேற வேண்டிய நிர்ப்பந்தம் வரும். ஏதோ வீடுகளைக் கட்டிக்கொடுத்து விடுவார்கள்; தண்ணீர் எங்கே யிருந்து வந்துசேரும், சென்னையைச் சுற்றி ஒரு கோடி மக்கள் என்று வந்து விட்டால்? சும்மாயிருந்த ஏரிகள், புழலேரி, அது, இது என்றெல்லாம் வந்தும், தண்ணீர் போதவில்லை. வீராணத்திலிருந்து கொண்டுவரவேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படியும் பற்றாமல் போய்விடும். இன்னொன்று, பொருளாதார நெறியிலேயும், அமைப்பு நெறியிலேயும் கூட, எல்லாவற்றையும் சென்ட்ரலைஸ் பண்ணி வைத்தால் தேசத்துக்கு நன்மையா என்று ஆட்சியிலுள்ளவர்கள், சம்பந்தப்பட்டவர்கள், நம்மைப்போன்று பிரதிநிதித்துவம் வகிக்கிறவர்கள் எல்லோரும் யோசிக்க வேண்டும். நாம் யோசிக்க வேண்டும் — என்டோமென்ட் போர்டுக்கு மெட்ராஸில் என்ன வேலை? மெட்ராஸ் சிட்டியில் அதற்கு என்ன வேலை? அது கன்னியாகுமரி வரை ஆள வேண்டும், மெட்ராஸுக்கு வடக்கே ஒரு இஞ்ச்-வரை தான் அதற்கு வேலை — திருத்தணியை விட்டால் வேறு ஒன்றும் இல்லை. தெற்கே 400 மைல் வரை ஓட வேண்டும். கோவில்கள் அதிகம் அங்கே தான் — பாண்டிய நாட்டிலும், தஞ்சாவூரிலும் தான் ஜாஸ்தி. (ஒரு உறுப்பினர் குறுக்கீடு) எனக்கும் கொஞ்சம் தெரியும் என்று ஒத்துக்கொள்ள வேண்டும். பாண்டிய நாட்டில் இருக்கிற அளவுக்கு தஞ்சாவூரில் அதிகம் இல்லை. புதுக்கோட்டைப் பகுதியில் மட்டும் இருக்கிறது 2,500 கோவில்களுக்கு மேலே. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், அவ்வளவையும் நிர்வகிக்க சென்னையில் எதற்காக உட்கார்ந்துகொண்டு கஷ்டப்படுத்த வேண்டும்? கன்னியாகுமரியில் டிரஸ்டி நியமிப்பதில் தகராறு இருக்கிறதென்றால் நான்கு பேர் சேர்ந்துகொண்டு மெட்ராஸுக்குப் படையெடுக்க வேண்டும். மதுரையிலோ கன்னியா குமரியிலேயோ அந்த அதிகாரம் இருந்தால் அங்கேயே காரியம் முடிந்துவிடும். ஒரு டிரஸ்டி நியமனத்திற்கு 50 பேர் அல்லது 100 பேர் வருகிறோம். பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டு எதற்காகச் சென்னையில் இருக்க வேண்டும்? (சிரிப்பு) சிரிக்கிறதற்காகச் சொல்லவில்லை. நான் சொல்வது தவறாக இருந்தால், மன்னிப்புக் கேட்டுக்கொண்டு உட்காரத் தயாராயிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைநகரையே மாற்றி விடலாமா என்ற கருத்தையும் கூட சொல்லலாமே.

**திரு. சா. கணேசன்:** தலைநகரையே மாற்றலாமா என்பது பிரச்னையில்லை. ஆனால் தலைநகரில்தான் எல்லா அலுவலகங்களும் இருக்க வேண்டும் என்று எந்த இடத்திலேயும் இல்லை. அமெரிக்காவில் நடக்கிறதெல்லாம் தலைநகரிலேயே இருக்கிறதா? எங்கேயும் கிடையாது. எது தலைநகர், எது



24th January 1972] [திரு. சா. கணேசன்]

துறைமுக நகர், எது ஆட்சி நகர் என்று புரியாமல் குழப்பிக்கொண்டு இருக்கிறேன் நானே. தலைநகர் வேறு, நிர்வாகம் இருக்கிற இடம் வேறு. எங்கே இருக்க வேண்டுமோ அங்கேதான் இருக்க வேண்டும். தலைநகர் என்பதால் மெட்ராஸில் 'டாம்' கட்ட முடியுமா? எங்கே தண்ணீர், மலை, பள்ளம் இருக்கிறதோ, அங்கே தான் அணை கட்ட முடியும். அதேபோல் 'டாம்' கட்டுகிற இடத்தில், தலைநகர் வைக்கலாமா? எல்லாம் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்றில்லாமல், 'டி-சென்ட்ரலைஸ்' பண்ணினால், இவ்வளவு ஜனப்பெருக்கம் இங்கு வந்து சேராது, இவ்வளவு பெரிய நெருக்கடி வராது, இவ்வளவு சிரமம் வராது. அந்தந்த பிராந்தியங்களும் செழிக்கும். அதையும் நாம் மறந்துவிடக் கூடாது. பத்து பெரிய மனிதர்கள், படித்தவர்கள், மற்றவர்கள், ஃபேஷனபிள் ஜென்டில்மென் அங்கேயெல்லாம் இருப்பார்களானால், அங்கேயும் நாகரிகம் வளருமல்லவா? எல்லாம் மெட்ராஸுக்கு வந்து, காரைக்குடியும், புதுக்கோட்டையும் காடாக இருக்க வேண்டுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேவையில்லாததை எல்லாம் கொண்டுவந்து போட்டு இட நெருக்கடியை ஆர்டிபிஷியலாகச் செய்கிறோம். நிர்ப்பந்தத்தில் அவசியத்தில் சென்னைக்கு நெருக்கடி இல்லை. தேவையில்லாத அளவுக்குக் கொண்டுவந்து திணித்து நெருக்கடியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். ஆர்டிபிஷியல் ஸ்கேர்சிடியை உண்டாக்குகிறோம். வணிகர்கள் சூதாட்டம் நடத்துகிறார்கள் என்று பின்னாலே சொல்லப்பட்டிருக்கிறது. அதே போல் இது ஒரு அரசியல் ஸ்பெகுலேஷன், சூதாட்டம். இதற்குக் காரணம் யார் என்று நான் சொல்லவில்லை. யாரையும் குறை சொல்லுவதற்காக வசை புராணம் பாடுகிறவனல்ல நான். சொல்லுகின்ற விஷயத்தை அணுகிப்பார்த்து சரியாக இருந்தால் ஏற்றுக்கொள்ள வேண்டும். சரியென்று ஒப்புக் கொண்டால், பிறகு எந்தக் காரணத்தாலும் தள்ளக் கூடாது, செயல் முறையில் கொண்டுவர வேண்டும். அதுதான் என் வேண்டுகோள் அல்லது பிரார்த்தனை.

இதிலே பல விஷயங்கள் சொல்லப்படாமலும் இருக்கின்றன. நம்முடைய உற்பத்தி நமக்குப் போதாது. இந்த தேசத்தில் இருக்கிற விஷயங்களைப் பாராட்டுகிறோம். அதைக் குறை என்று சொல்லவில்லை. ஆனால் நம் மாநிலத்தில் இருக்கவேண்டிய பந்தோபஸ்து இருக்கிறதா? அதற்கு நாம் என்னென்ன கையாண்டிருக்கிறோம்? பல மாநிலங்களைப் பார்க்கிற போது, எந்த வகையிலும் தலைகுனிய வேண்டிய நிலையில் நாம் இல்லை, தலை நிமிர்ந்து நிற்கவேண்டிய நிலையில்தான் நாம் இருக்கிறோம். நான் மறுக்கவில்லை. நேற்று பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்த பிறகு, ஒரே குழப்பமாக இருக்கிறது. எனக்குப் புரிகிற விஷயம்தான். ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள 27 விக்கிரகங்கள் தூத்துக்குடியில் கைப்பற்றப் பட்டன என்ற செய்தியை எல்லோரும் பத்திரிகையில் பார்த்தோம். சென்னையிலே உள்ள பழம் பொருள் ஆய்வுத்துறை இயக்குநரையும் கலந்து, அவைகள் எந்த தேசத்தைச் சேர்ந்தவை, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவை, எந்த ஜில்லாவைச் சேர்ந்தவை, எந்த ஊரைச் சேர்ந்தவை என்று பார்த்திருக்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. சில பேர்களைக் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள்—சரியாகப் பார்த்ததாகத் தெரியவில்லை என்று. இன்னொருவர் சொல்கிறார்—"நான் பார்த்தேன். 20-ம் நூற்றாண்டு என்றால் கூட கோபித்துக்கொள்வீர்கள். 1901-ம் வருஷம் 20-ம் நூற்றாண்டு ஆரம்பிக்கிறது. இந்த 1970-ம் வருஷத்தில் செய்த சாமான்கள் அவைகளிலே பாதிக்கு

[திரு. சா. கணேசன்] [24th January 1972

மேல் இருக்கின்றன." அப்படியானால், ஒரு கோடி ரூபாய் மதிப்பிடக்கூடிய 27 சாமான்கள் சுலபமாக மாற்றப்பட்டுவிட்டனவா? புதிய உருப்படிகள் பழம் பெருமை வாய்ந்தவைகளுக்குப் பதிலாகப் போடப்பட்டிருக்கின்றனவா? இதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர்கள் எதுவும் சொல்லவில்லை. ஒரு கோடி ரூபாய் மதிப்பு என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. 27 விக்கிரகங்கள் என்பதும் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆனால் நான் சந்தித்த 'ஆர்கியாலாஜிகல் எக்ஸ்பர்ட்' அவர்கள் சொல்லுகிறார்கள்—"இருபதாம் நூற்றாண்டு என்று கூட சொல்லமாட்டேன். 1970-ம் வருஷம் உற்பத்தியாகியிருக்கிறது" என்று. இது என்ன? இதை அரசு மிக்க கவனமாகவும் ஜாக்கிரதையாகவும் கண்டுபிடிக்க வேண்டும்.

இதுமாதிரி பல துறைகளிலே நாம் எந்த அளவுக்குக் கடுமையாக கண்டிப்போடு செயல்பட வேண்டும் என்பதை எல்லாம் நிர்ணயிக்க வேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளை எல்லாம் நாம் செய்ய வேண்டும். தொழிற் துறையில் நம் மாநிலம் வளர வேண்டும், வளம் பெற்றிருக்க வேண்டும். தொழிற் துறைக்குள்ளே ஒழுங்கான, நியாயமான போட்டா போட்டி ஏற்படும்படியான நிலையில் தொழிற்துறையை வளர்க்க வேண்டும். குறிப்பிட்ட ஒருவருக்குத்தான் ஒரு பொருளை உற்பத்தி செய்ய உரிமை உண்டு என்று வைத்துவிட்டால், அவர் சொன்னதுதான் விலை, அவர் தந்ததுதான் தரம். நமக்கென்று பொறுக்கியெடுத்துப் பெறுகிற நிலை துய்ப்பவருக்கு இல்லாமல் போய்விடும். ஜென்மானுஜென்மாவாக, எதையெடுத்தாலும் பொறுக்கியெடுத்துப் பார்த்தே பழகிப்போன ஜாதி. "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று வார்த்தைகளுக்குள்ளே கூட பொறுக்கச் சொல்கிற ஜாதி இந்த ஜாதி. அப்படியிருக்க அந்த ஜாதி தந்ததை வாங்கிக் கொள்ள வேண்டும். கேட்டதைக் கொடுக்க வேண்டும் என்றால், தரம் இல்லை. தலைவிதி என்று நானும் நீங்களும் கட்டுப்பட்டுக்கொள்ளலாம். இதனால் தேசத்தின் பொருளாதாரமும் வளராது, வாணிகமும் வளராது, ஏற்றுமதியும் பெருகாது, லாபமும் சிறக்காது. ஆதலாலே ஒழுங்கான, நேர்மையான, சட்ட ரீதியான போட்டாபோட்டி வரும்படியாகச் செய்ய வேண்டும். இது ஒரு ஓட்டப் பந்தயம் மாதிரித்தான். ஸ்கூலிலும் காலேஜிலும் பந்தயம் வைத்தால் போதும் என்று நினைப்பது பாபம். அப்படிப்பட்ட போட்டாபோட்டி தேவை. தொழிற் துறையிலேயும் ஓட்டப்பந்தயம் வைக்க வேண்டும். எவனுடைய பொருள் அழகாக, நல்லதாக, விலை குறைவாக இருக்கிறது என்று பார்த்து, அதைத் துய்ப்பவர்கள் — கன்ஸ்யூமர்கள் பொறுக்கியெடுக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் சாதாரண மனிதனுக்கெல்லாம் இருக்கும்படியாக நாம் செய்ய வேண்டும்.

இந்த உரை 18-வது பகுதியில் விலைவாசி பற்றிப் போட்டிருக்கிறார்கள், விலைவாசி கூடிக்கொண்டே போகிறது என்று. இந்த நிலைமையை நாம் உணருகிறோம். இதைச் சொன்னார்களே தவிர, அதை ஏன் கட்டுப்படுத்தவில்லை? சில விஷயங்களை நாம் எதிர்ப்பார்ப்போம். எதிர்ப்பார்த்தபடி எல்லாமே நடந்துவிட்டால், இந்த உலகத்தில் யாருக்கும் கவலையே இருக்காது. அதையும் பார்க்க வேண்டும் "இன்றியமையாப் பொருள்கள் விற்பனையைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்தும் நடைமுறையைச் செயலுக்குக் கொண்டுவரக்கூடிய ஏற்பாட்டினை எப்பொழுதும் தயாராக வைத்திருப்போம்" என்று



24th January 1972] [திரு. சா. கணேசன்]

அதில் போட்டிருக்கிறது. கட்டுப்பாடு வருகிறது என்று தெரிந்தாலே—நான் பகிரங்கமாகச் சொல்லலாம்—என்னை யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள்—நான் ஒரு வியாபாரி; கட்டுப்பாடு வருகிறது என்று சொன்னாலே, அதைப் பதுக்கி வைக்க முயல்கிறேன். இதுதான் இயற்கை, கட்டுப்பாடு இல்லையென்று சொன்னால், தாராளமாகப் பொருள்கள் கிடைக்கின்றன; விலை குறைவாகக் கிடைக்கின்றன. இதைப் பார்க்கிறோம். எனவே எப்போது கஷ்டம் வருகிறது? உற்பத்தி மிகக் குறைந்துபோய் தேவைக்கு வேண்டிய அளவில் இல்லாமல் இருக்கிற நேரத்தில், சங்கடம் வருகிறது. அப்படிப்பட்ட சமயத்தில்தான் இந்தக் கட்டுக்கடை சரக்குகள் 'பஃப்பர் ஸ்டாக்' தேவை. எப்போதுமே இதை வைத்துக் கொண்டிருந்தால், வீணான நஷ்டமும் கஷ்டமும் வரும். ஒரு பெரிய அரசு லட்சக்கணக்கான டன்களை முடக்கி வைத்துக்கொண்டிருக்குமானால், முடக்குவது எதற்காக? வியாபாரி தவறு செய்தால், முடக்கி வைத்திருக்கிற சரக்கைத் திறந்துவிடும்போது, பிளாக் மார்க்கெட்டிங், விலையேற்றம் குறையும் என்பதற்காகத்தான். இது இல்லாமல் இதையும் நம்முடைய அரசு நெறியாகக் கொண்டு செய்யத் தொடங்கினால், நிச்சயமாகத் தீமை தான் வரும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை ஒட்டியே விலைவாசி விவரம் அமையும் என்று முன்னர் நிகழ்த்திய உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய ஆட்சியைக் குறை சொல்லவில்லை. நம்முடைய மாநில ஆட்சிக்கு உரிய உரிமைகள் உண்டு. அந்த உரிமைகளுக்குள் நின்றுகொண்டு அவர்களோடு போராடாமல் கூட இந்த நியதியை, இந்த நெறியை நாம் வகைப்படுத்த முடியும். அதைச் செய்ய நாம் முயல வேண்டும். அதை விட்டுவிட்டு விணாகப் போகக் கூடாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். மூன்று நாட்களுக்கு முன்னால் 'ரிப்பன் பில்டிங்' பக்கத்தில் ஒரு ஓட்டலில் போய் காஃபி சாப்பிட்டேன். அந்த ஓட்டல் பெயரைச் சொல்லி விளம்பரப் படுத்த விரும்பவில்லை. முந்தா நாள்தான் போனது. மூன்று அவுன்சு காபி 30 பைசா. பழைய காலத்தில் 'சைனீஸ்' எப்போதுமே தண்ணீர் குடிப்பதில்லை. வெறும் டீ இலையைக் கொதிக்கிற தண்ணீரில் போட்டு கோப்பையில் ஊற்றி "ஸூப்" என்று அதைக் குடிப்பார்கள். இவ்வளவு பெரிய கோப்பையை யார் செய்தார்கள் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எந்த ஓட்டல் அது?

**திரு. சா. கணேசன்:** இதுவரையில் அதுபோன்ற கோப்பையை ஆஸ்பத்திரியில் நான் பார்த்திருக்கிறேன். அந்த 'சைஸ்' இருக்கும். அந்த ஓட்டல் பெயரைச் சொல்லக் கூடாது என்றுதான் நான் சொல்லவில்லை. அவர்களுக்கு ஏன் நான் விளம்பரம் செய்ய வேண்டும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** காபி நன்றாக இருந்ததா என்பதற்காகக் கேட்டேன்.

**திரு. சா. கணேசன்:** அடுத்த முறை போகும்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரையும் கூட்டிச் செல்கிறேன். நானே வாங்கித் தருகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அந்த ஓட்டலில் வேறு ஏதேனும் விற்கிறார்களா?

**திரு. சா. கணேசன்:** அது தெரியாது. அவ்வளவு அநியாயமாகப் போகிறது.

[24th January 1972

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, காப்பியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். பல முறை ஓட்டல் அதிபர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசினோம். காப்பிக்கொட்டை விலை ஏறிவிட்டது, பால் விலை ஏறிவிட்டது, சர்க்கரை விலை ஏறிவிட்டது என்று ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு காரணம் சொல்கிறார்கள். நமக்குள்ள சட்டத்தை வைத்துக்கொண்டு கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போதிருக்கிற சட்டப்படி காபியை இந்த விலைக்கு இந்த அளவு கொடுக்க வேண்டுமென்று கட்டுப்படுத்த இடமில்லை. அவர்களைக் கூப்பிட்டு நாம் சொல்லும் போது அரசு சொல்கிறதே என்ற மரியாதைக்காக ஒப்புக்கொண்டு 5 பைசா குறைக்கிறோம் என்று சொல்கிறார்கள். இரண்டு மாதம் கழித்து மறுபடியும் விலையை ஏற்றுகிறார்கள். இது சாதாரணமாக நடக்கிறது. பெரிய ஓட்டல்களுக்குப் போனால், அசோகா போன்ற ஓட்டல்களுக்குப் போனால் காபி 75 பைசாவுக்கு விற்கிறார்கள் என்று சொல்லும்போது, அந்த ஓட்டலுக்குப் போவது தவறு. சாதாரண மக்கள் போகிற ஓட்டல்களுக்குப் போய்ப் பழகவேண்டும். சாதாரண மக்களுக்கு வசதியாக இருக்கிறது என்று பார்க்க வேண்டும். வசதி படைத்தவர்கள் ஒரு ரூபாய் கொடுத்துக் கூட காபி குடிக்கிறார்கள். அங்கே போய் ஏன் இந்த விலைக்கு விற்கிறது என்று கேட்டால், "சாப்பிட்டால் சாப்பிடுங்கள், இல்லையென்றால் போங்கள்" என்று சொல்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த எந்தச் சட்டம் இருக்கிறது என்று புரியவில்லை.

திரு. கே. ராஜாராம்: சட்டத்தில் இடமில்லாமல் இருக்கலாம். ஆனால் அமைச்சர் அவர்கள், அரசாங்கம் இதில் நடவடிக்கை எடுக்காது என்ற தைரியத்தை உண்டுபண்ணும்படியான பேச்சுகளைப் பேசுவதனால் அதிகமாக அவர்கள் இம்மாதிரித் தவறுகள் செய்ய ஆரம்பிக்கிறார்கள். தயவு செய்து சட்டத்தில் இடமில்லாவிட்டாலும் அதை விளம்பரப்படுத்த வேண்டாம். கூடுமான வரையில் அரசாங்கம் முயற்சி செய்து தவறான முறையில் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, சட்டத்தில் இடமில்லை என்று சொல்லி அவர்களைத் தைரியப்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டத்தில் இடமில்லை என்று சொன்னால், அரசாங்கத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை, ஓட்டல் அதிபர்கள் அரசு சொன்னால் கேட்கமாட்டார்கள் என்று அர்த்தமல்ல. காபி அளவையும் காபி விலையையும் நிர்ணயிக்க சட்டத்தில் இடமில்லை என்று சொன்னேனே தவிர, ஓட்டலுக்கும் அரசுக்கும் பலவிதத் தொடர்பு இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு செய்யலாம். ஓட்டலில் இருக்கிற பலகாரத்தில் இட்லி இந்த விலைக்குத்தான் விற்க வேண்டுமென்றால், ஒவ்வொரு ஓட்டலுக்கும் தராசு வைத்து இட்லியை எடை போட்டுப் பார்க்க வேண்டுமென்று சொல்ல வேண்டும். ஓட்டல் அதிபர்களிடம் நான் புதிய யோசனைகூட சொன்னேன். ஏ கிளாஸ், பி கிளாஸ், சி கிளாஸ் என்று ஓட்டல்களைப் பிரித்து ஏ கிளாஸ் ஓட்டலில் பொருள்கள் இன்ன விலை, பி கிளாஸ், சி கிளாஸ் ஓட்டல்களில் பொருள்கள் இன்ன விலை என்று போடுங்கள் என்று சொன்னேன். ஆனால் இது வரையில் அதை யாரும் பிரிக்கவில்லை. க்ளாஸைத்தான் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இப்போது தெரிகிறது.

(உறுப்பினர்கள் சிலர் இடைப் பேச்சுக்கு எழுந்தனர்.)



24th January 1972]

திரு. சா. கணேசன்: I am not going to yield. Sir, I am on my legs. நான் பேசுவதில் தெளிவு வேண்டுமென்றால், குறிப்பிட்டும் பதில் சொல்கிறேன். என்னையே உட்கார வைத்துக்கொண்டு, வேறு சர்ச்சைகள் நடந்தால், அது ஒழுங்கான நடவடிக்கை என்று நான் புரிந்து கொள்ளவில்லை. அதுதான் ஒழுங்கு என்றால், கட்டுப்படுகிறேன். பெரிய ஓட்டலில் ஒரு ரூபாய் காபி விற்பதை நான் மறுக்கவில்லை. 5 ரூபாய் போடட்டும். நான் சொல்வது சாதாரண ஓட்டல்தான். இதற்குச் சட்டம் இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. சுமார் 30 வருஷங்களுக்கு முன்னே—அந்தக் காலத்திலே ரயில்வே கம்பெனி நிர்வாகத்தில் இருந்தது. அதிலே கூட உப்புமா இத்தனை அவுன்சு, காஃபி இத்தனை அவுன்சு, மைசூர்பாகு, ஜிலேபி என்பது இத்தனை தோலா எடை என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதைத்தான் சொல்கிறேன் அரசாங்கத்திற்கு. பண்டங்களின் எடை அளவை நிர்ணயித்து விடுங்கள். ஏ-கிளாஸ் ஓட்டல், பி-கிளாஸ் ஓட்டல், அதற்குமேலே 5-ஸ்டார் ஓட்டல், 4-ஸ்டார், 3-ஸ்டார் என்று போவது சரியில்லை. 'நோ ஸ்டார்' . . . .

திரு. டி. சந்தோஷம்: On a point of clarfication. Sir, சுதந்திராக் கட்சிக்காரர்கள் எல்லாவற்றுக்கும் சுதந்திரம் வேண்டுமென்று சொல்லும்போது இதற்கு மட்டும் கட்டுப்பாடு வேண்டுமென்று சொல்வது அவர்கள் சுதந்திரத்தைப் பாதிப்பதாகாதா?

திரு. சா. கணேசன்: எல்லாவற்றிற்கும் சுதந்திரம் என்று வக்கீல் ஐயா அவர்கள் குறிப்பிட்டார்கள். சுதந்திரம் என்பதற்கு 'டெஃபினிஷன்' அவர்களுக்கே தெரியும். யார் வேண்டுமானாலும் எதையும் செய்யலாம் என்பது சுதந்திரமில்லை. எங்கே மனிதன் சுதந்திரம் அத்து மீறுகிறதோ அங்கே சுதந்திரம் அற்றவனாகிறான் என்பது சுதந்திராக் கட்சி மட்டுமல்ல, உலகிலுள்ள அறிவாளிகளின் கருத்து. என்னுடைய சுட்டு விரல் மற்றவர் முகத்தில் பட்டால், அந்த விரலை வெட்டுவதற்கு அவருக்குச் சுதந்திரம் வருகிறது. பிறரைக் குத்தாத வரையில் எனக்குச் சுதந்திரம். தருவதை வாங்கிக் கொள்வதுதான் சுதந்திரம் என்று வாதிட வழக்கறிஞர் அவர்கள் வருவார்களானால், என்னையும் மற்றவர்களையும் ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். அந்த அளவுக்கு ஓட்டலில் விலை கூடுகிறது, 'சைஸ்' குறைகிறது, தரம் மட்டமாகிறது, இதைப் பார்க்கிறோம். சைசும் தரமும் அப்படியே இருக்க வேண்டும். விலை கூடினாலும் பரவாயில்லை. ஆனால் விலை அப்படியே இருக்கும்போது, தரமும் சைசும் குறைந்து போகின்றன. இந்த மூன்று வகையிலும் வாங்குபவன் கஷ்டப்படுகிறான். ஸ்டாண்டர்ட் கெட்டுவிட்டது. அளவு குறைந்துவிட்டது. விலை மட்டும் கூடிவிட்டது. எல்லோரும் 100-க்கு 60 நாட்களுக்கு மேல் ஓட்டலில் தான் வாழ்கிறோம். வீட்டில் வாழவில்லை. இது எல்லோருக்கும் புரிகிற உண்மை. இதை ஒழுங்குபடுத்துவது, இதில் செயல்படவேண்டியது அவசியம் என்று சொல்லத் தொடங்கினேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எப்படி ஒழுங்குபடுத்துதல் என்பதைச் சொல்ல வேண்டும்.

திரு. சா. கணேசன்: இட்டிலியின் சாதாரணமான அளவு இன்னது தான், இதற்கு விலை இன்னது தான் என்று செய்ய வேண்டும். பெரிய ஓட்டல் வைத்திருக்கிறவர்களைப்பற்றி ஆட்சேபணையில்லை. மேல் நாட்டில்

[திரு. சா. கணேசன்] [24th January 1972

கஃபிடீரியாவில் சாப்பிட்டால் 3 ரூபாய், அதே சாமானை இன்னொருவர் கொண்டு வந்து 'சர்வ்' பண்ணச் செய்து சாப்பிட்டால், 30 ரூபாய். கவுண்டரில் பொருளைக் காட்டி அல்லது கேட்டு வாங்கி சாப்பிட்டால், 3 ஷில்லிங் ஆகும். டேபிளில் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு அதே சாமானுக்கு 30 ரூபாய் கொடுக்கிறோம். வேறு பண்டமில்லை. பரிமாறுகிற முறை, அதற்குக் காட்டுகிற வாடகை, அதற்குச் செலவழிக்கிற முதலீடு, அதற்கு வட்டி, இவற்றையெல்லாம் கவனித்து இப்படி வசூலிக்கப்படுகிறது. இப்படி பல்வேறு இடங்களிலும் செயல்படுவதைக் காண்கிறோம். இட்டிலி என்று சொன்னால், இன்னது என்று டெபனிஷன் செய்ய வேண்டும். காபி என்று சொன்னால் இன்னது என்று சொல்ல வேண்டும். இதற்கு முன்பு ஒரு சேர் காஃபி என்று சொல்வார்கள். இந்த லோட்டாவைப் போல இரண்டு மடங்கு இருக்கும்.

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, may I make a submission to the hon. Member? Why not the hon. Member introduce a private Member's Bill called 'Iddli Control Bill' or 'Coffee Control Bill'?

THIRU SAW GANESAN: Certainly. If the Chairman allows me to introduce such a Bill, tomorrow I will submit a Bill—Not only 'Iddli Control Bill' but 'All Control Bill'. (Cheers) இந்த மாதிரி ஒழுங்குபடுத்தினால் நியாயமாக இருக்கும், நன்மையாக இருக்கும். முன்பிருந்த ஒரு சேர் காஃபி போக, அது இப்போது என்னமோவாகி, இப்போது காஃபி சுக்கு கஷாயம், மருந்து மிக்ஸ்சர் சாப்பிடுவதற்கு ஈடாக வந்தாய்விட்டது. இப்போது காஃபி கிளாஸ் அவுன்ஸ் கிளாசு மாதிரி 'வி' மாதிரி இருக்கிறது. கீழே குவிந்து மேலே விரிந்து இருக்கிற நிலையில் ஏதோ ஒரு அரை அவுன்ஸ் தான் தேரும். இந்த மாதிரி நிலைமைகளையெல்லாம் செம்மைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் இந்த மாதிரியான நம்முடைய கருத்துக்களையெல்லாம் பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ற முறையில் அமைந்த இந்த உரையை நமக்குப் பெய்த ஆளுநர் பெருமானுக்கு நன்றி தெரிவிக்கின்ற உறுப்பினர்களுக்குள்ளே நானும் ஒருவனாகச் சேர்ந்து இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

• திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்களின் தீர்மானத்தை வழி மொழிந்து எனது கருத்துரையை வழங்குகின்றேன். நமது ஆளுநர் அவர்கள் பேருரையில் முதலாவது நம் நாட்டில் ஏற்பட்ட தேசச் சவாலை இந்திய நாடும் இந்திய மக்களும் படை வீரர்களும் எவ்வாறு ஏற்று, திறம்பட, உலகமே வியக்கின்ற நிலைமையில் வெற்றி கண்டு அண்டையிலே மாநிலச் சுயாட்சியில் தொடங்கி சுதந்திர நாடாகிய, தங்களுடைய உயிரைப் பணயம் வைத்துப் போராடிக் கொண்டிருந்த மக்களுக்கு உறுதுணையாக நின்று வங்க தேசத்தை உருவாக்கிய பெருமையை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாண்புமிகு சுதந்திரா கட்சித் தலைவரவர்கள் இங்கே பேசுகிற போது ஆளுநர் அவர்கள் பேருரையில் இத்தகைய கருத்து இடம் பெறலாமா என்ற ஒரு ஐயக் கருத்தை எடுத்து வைத்து விட்டு, அதை ஆராய்ச்சிக்கு விட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், ஆளுநர் அவர்கள் பேருரையில் இத்தகைய நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு புதிய பாரம்பரியத்தை உருவாக்கியதை நான்



24th January 1972] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

பெருமையாகவே கருதுகிறேன். இந்தியாவின் எந்தப் பகுதியிலும் ஏற்படுகிற தாகிய ஒரு தேசிய ஆபத்தான நிலையை இந்தியாவில் எல்லா மூலைகளிலும் வாழ்கிற மக்களும், அரசும் தங்களுடைய பிரச்னையாகக் கருத வேண்டும் என்ற நிலையில் ஆளுநர் உரையில் அதற்கு இடம் தந்திருப்பது இப்படி ஒவ்வொருவரும் கருத வேண்டும் என்ற ஒரு பாரம்பரியத்தை உருவாக்கியது. நமது மாநிலத்தில் தான் இப்படி இருக்கும் என்று நினைக்கிறேன். இதை அவர்கள் முறையா என்று சொன்னதால் மற்ற மாநிலங்களில் இப்படி நடந்திருக்குமோ என்று நினைக்கிறேன். அவ்வாறு இந்தியப் பெரு நாட்டிலே ஒரு பாரம்பரியத்தை உருவாக்கியதற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் மிகச் சிறப்பாக இந்த நாட்டின் விவசாயத் துறையில் நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம், உற்பத்தியை எவ்வளவு பெருக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பருவகால மழைகளெல்லாம் ஓரளவிற்குத் துணை புரிந்தாலும் கூட நமது அரசு எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகள் காரணமாக உற்பத்தியிலும் தரத்திலும் உயர்ந்திருக்கிறோம் என்பதை ஆளுநர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதனுடைய எதிரொலி என்ன வென்றால் இவ்வளவு பெருமளவில் உற்பத்தித் துறையில் ஈடுபட்டிருக்கிற நமக்கு மிகத் தேவையான இரசாயன உரம் தேவையான அளவிற்குக் கிடைக்கவில்லை. அதற்காக தூத்துக்குடியில் இரசாயன உரத் தொழிற்சாலையை விரைவில் தொடங்க வேண்டும். அதற்குரிய ஆக்க முறைகளில் ஈடுபட்டிருப்பதையும் குறிப்பிட்டிருப்பது விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெருமகிழ்ச்சியளிக்கிறது. விவசாயத் துறையில் மிகச் சிறப்பாக இன்னும் முன்னேற வேண்டுமென்றால், நமது நாட்டினுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு அண்டை மாநிலங்களுக்கு உணவு அனுப்புகிற சூழ்நிலையைப் பெற வேண்டுமானால், நம் நாட்டில் விவசாயத்திற்கு இன்றியமையாத இரசாயன உரத்தை நாமே உற்பத்தி செய்தால் தான் வெற்றி பெற முடியும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம் நாடு வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றி வாழ்வதற்கு ஒரே வழி தொழில் வளத்தைப் பெருக்கிக்கொள்வது தான். அதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளைச் சிறப்பாக ஆளுநர் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு மிக இன்றியமையாதது சேலம் உருக்காலை. இதை மிக விரைவில் கொண்டு வர வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாக, மத்திய சர்க்கார் காட்டுகின்ற மெத்தனத்தைச் சுட்டிக் காட்டி, உயர் மட்டத்தில் அக்கரை இருக்கிறது என்று அவருக்குத் தெரிந்ததை நமக்கு உணர்த்தியிருப்பதையும் நாம் இந்த உரையில் பார்க்கிறோம். உருக்காலை அமைய வேண்டியது மிக இன்றியமையாத ஒன்று. மாநில அரசு எல்லா மட்டத்திலும் வலியுறுத்திக்கொண்டிருப்பதால் மெத்தனம் இந்தப் பக்கத்தில் இல்லை. அந்தப் பக்கம் தான் மெத்தனம் இருக்கிறது. அந்தப் பக்கத்தில் உயர் மட்டத்தில் அக்கரை உள்ளது என்று சொல்லியிருப்பதிலிருந்து மெத்தனம் இங்கே இல்லை, அங்கே தான் இருக்கிறது என்று தெரிகிறது, மெத்தனம் காட்டியவர்கள் இப்போது அக்கரை கொண்டிருக்கிறார்கள் என்பது இதற்கு விளக்கமாக இருக்குமென்று நினைத்துக் கொள்கிறேன். அந்த அளவில் மத்திய அரசு மிகுந்த அக்கரை காட்டி மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாகிய இந்த

உருக்காலையை மிக விரைவில் கொண்டுவர வேண்டுமென்று இந்த நாட்டு மக்களும், அரசும் கருதுகிறது என்று ஆளுநர் அவர்கள் உணர்ந்து அவர்களுக்கு இதை உணர்த்தியிருப்பது பாராட்டுக்குரியது.

இதற்கு அடுத்தாற்போல, கல்வித்துறையிலே நாம் ஆற்றவேண்டிய, செய்யவேண்டிய ஒழுங்கு முறைகளைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில விஷயங்களை எடுத்துச்சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வித்துறையில், குறிப்பாக நமது வருவாயில் பெரும் பகுதியை செலவு செய்கிறோம். நமது வரவு-செலவுத் திட்டத்தில் முதலிடம் கொடுத்து 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அதற்கு அடுத்த கட்டமாக இருப்பது 28 கோடி தான். இவ்வளவு செலவு செய்யப்படுவது கல்வித் துறையில் தான். நம் நாட்டின் வருங்காலம் இதோடு இணைந்திருப்பதனால், மக்கள் வாழ்வு இதோடு பிணைந்திருப்பதனால் இவ்வளவு செலவு செய்கிறோம். இந்த நிலையில் 3-வது சம்பளக் கமிஷன் அறிவித்த அறிவிப்பிலிருந்து பல நன்மைகளை ஆசிரியப் பெருமக்கள் பெற்றிருக்கிறார்கள். அதற்கு மனப்பூர்வமாக இந்த அரசைப் பாராட்டுகிறோம், வணங்குகிறோம். அதில் காணப்படுகிற ஒரு சில குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆசிரியர்கள் சார்பில் கூறிக் கொண்டேயிருக்கிறோம். அடிப்படையாக ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதில் குறிப்பாக செலக்ஷன் கிரேடு அளித்திருக்கிறோம். இந்தச் சம்பளக் கமிஷனின் அறிக்கையை அமல் நடத்துவதற்குமுன் அரசுப் பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்குத் தான் செலக்ஷன் கிரேடு இருந்தது. டிஸ்டிரிக்ட் போர்டாக இருந்த 'பி' பிரிவில் இருக்கிற ஆசிரியர்களுக்கும் இது வரை அரசுப் பள்ளியில் இருக்கிற ஆசிரியர்களுக்கு எந்த வித சலுகை-அளிக்கப்படுகிறதோ அந்தச் சலுகை கிடைக்காமல் இருந்து வந்த தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் மற்ற எல்லாச் சலுகைகளையும் அளித்து, இந்த செலக்ஷன் கிரேடு சலுகையையும் இப்போது அளித்திருக்கிறோம். இது உண்மையில் பாராட்டத் தக்கது. ஆனால் 'ஏ' பிரிவு என்று சொல்லப்படுகின்ற ஆசிரியர்களுக்கு 33 சதவீதம் செலக்ஷன் கிரேடும், 'பி' பிரிவு அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு 15 சதவீதமும், தனியார், பள்ளி ஆசிரியர்களுக்கு 10 சதவீதமும் கொடுக்கப்படுகிறது. அந்த நிலை மாறி எல்லோருக்கும் ஒரே விதமான சதவீதம் ஏற்படுத்தி, அந்த செலக்ஷன் கிரேட் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலிக்கிறதென்று நினைக்கிறேன். அவ்வாறு பரிசீலிக்க வேண்டியது இன்றியமையாதது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஆராய்ந்து பார்த்தால், 33 சதவீதம் என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர, 10 வருஷம், 15 வருஷம் சர்வீஸ் ஆனவர்களுக்குக் கூட செலக்ஷன் கிரேடு கிடைக்கவில்லை. கிடைக்குமென்று உறுதிப்படுத்தப்படவில்லை. அரசுத் துறையில் பணி செய்கின்றவர்கள் வேலைக்கு நியமிக்கப்பட்டு இரண்டு வருஷங்களுக்குள் குறிப்பிட்ட டெஸ்ட்களில் பாஸ் செய்தவுடன் 'ரெகுலரைஸ்' செய்யப்படுகிறார்கள்—ஒழுங்குபடுத்தப் படுகிறார்கள்—புரொபேஷன் டிக்ளேர் செய்யப்பட்டு சில வருடங்கள் கழித்து கன்பர்மேஷன் செய்யப்படுகிறது. ஆனால் 'கன்பேர்ம்ட்' போஸ்ட்களில் 33 சதவீதம் என்று சொல்கின்றபோது, ஒரு ஆயிரம் பள்ளி ஆசிரியர்கள் இருந்தால், 500 பேர்தான் 'கன்பேர்ம்ட்' போஸ்ட்களில் இருப்பார்கள், அதிலே 33 சதவீதம் என்கிற போது 15 சதவீதம் தான் வரும். 33 சதவீதம் என்று சொல்வது அவ்வளவு



பொருத்தமாகவில்லை. எனவே மொத்த ஆசிரியர்கள் எண்ணிக்கையில் 33 சதவீதம் கொடுக்க வேண்டும். இப்பொழுது இருக்கிற முறையில் ஒருவரையும் திருப்திப்படுத்த முடியாது. இப்பொழுது அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு 33 சதவீதம் செலக்ஷன் கிரேடு கொடுத்து விட்டோம். அதைக் கொடுத்தும் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு ஆசிரியர்களில் பலவருட அனுபவமுடையவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற எண்ணம் வருகிறது. "பி' பிரிவு, 'ஏ' பிரிவு, தனியார் பள்ளி என்று ஆசிரியர்களிடையே பாகுபட்ட அந்த நிலை வராமல், ஆசிரியர்கள் பணியில் சேர்ந்து பத்து வருஷங்கள் முடிந்தவுடன் அவர்களுக்கு செலக்ஷன் கிரேட் கொடுப்பது என்று முடிவு செய்தால், மிக உயர்ந்த திட்டமாக அமையும். கேரள அரசாங்கம் 12 வருஷகாலம் ஒரு ஆசிரியர் பணி செய்தால் செலக்ஷன் கிரேடு கொடுத்து விடுகிறது. பட்டதாரி ஆசிரியராகவிருந்தாலும், மொழி ஆசிரியராகவிருந்தாலும், செகண்டரி கிரேட் ஆசிரியராகவிருந்தாலும், 12 வருஷம் சர்வீஸ் ஆகிவிட்டதென்றால், அடுத்த கிரேட் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையைக் கொள்ள வேண்டுமென்று நமது அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மிக விளக்கமாக எடுத்துச் சொல்வதென்றால், இப்பொழுது சில மாவட்டங்களில் குறிப்பாக வடஆற்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ஆறு வருஷம் வேலையில் இருந்தவர்களுக்கெல்லாம் செலக்ஷன் கிரேடு கிடைத்திருக்கிறது. இந்த நிலைமை இராமநாதபுரம் மாவட்டத்திலும் இருக்குமென்று நினைக்கிறேன். ஆறு, ஏழு, எட்டு வருஷங்கள் முடித்து டிஸ்டிரிக்ட் போர்ட் பள்ளிகளிலுள்ள 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் கிடைக்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் அதே வகைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், 14 வருஷங்கள் ஆனாலும் செலக்ஷன் கிரேடு கிடைக்காத நிலைமை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 15 வருஷங்கள் ஆகியும் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆக ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு விதமாக இது அமைந்திருக்கிறது. இது அடிப்படையில் தவறாகும். 'ரெவின்யூ டிஸ்டிரிக்ட்' என்ற அடிப்படையில் வைத்து இந்தச் சலுகைகள் கொடுப்பது என்றால்தான், இந்தத் தவறுகள் ஏற்படுகின்றன. சர்வீஸ் கணக்கு வைத்துக் கொடுத்தால், இந்தச் சூழ்நிலை உருவாகாது. பத்து வருஷம் அல்லது பன்னிரண்டு வருஷம் அனுபவம் என்று ஒரு முறை வைத்துக்கொண்டு, செலக்ஷன் கிரேடு கொடுத்தால், இந்த நிலையைத் தவிர்க்கலாம். அவர்களைத் திருப்தி பண்ணுவதற்காக என்று அவ்வப்போது சதவீதத்தை உயர்த்திக்கொண்டே போனால், ஒரு முடிவும் இல்லாமல் அதுவும் பாதகத்தையே விளைவிக்கும். எப்படியோ ஆசிரியர்கள் திருப்தி அடைய முடியாத சூழ்நிலை ஒவ்வொன்றாக ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் பத்து. அல்லது பன்னிரண்டு வருஷங்கள் சர்வீஸ் என்று வைத்துக்கொண்டு செலக்ஷன் கிரேட் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், டிஸ்டிரிக்ட் போர்டு ஆசிரியர்களை 'பி' பிரிவு ஆசிரியர்கள் என்று வைத்திருக்கின்றோம். டிஸ்டிரிக்ட் போர்டுகள் ஒழிக்கப்பட்டு பல காலம் ஆகிவிட்டது. டிஸ்டிரிக்ட் போர்டு பள்ளிகள் அனைத்தும் அரசுத்துறை பள்ளிகள் என்று அறிவிக்கப்பட்ட பிறகும், அவைகள் ஸ்பெஷல் ஆபிசர் நிர்வாகத்தின் கீழ்தான் இருந்து வந்தன. 1970-ல் டிஸ்டிரிக்ட் போர்ட் பள்ளிகள் அரசுப் பள்ளிகளோடு இணைந்தன. இண்டக்ரேஷன் அல்லது இணைப்பு என்று அறிவிக்கப்பட்டது. அதுதான் 'பி' லிங்க் என்பது. முழு அளவில் அரசு ஊழியர்கள் என்ற நிலைமை ஏற்படுத்தாமலேயே வைக்கப்பட்

டார்கள் அந்த ஆசிரியர்கள். அவர்களுக்கு உயர்வு கிடைத்தால் 'ஏ' பிரிவில் உள்ளவர்களுக்குப் பாதகம் ஏற்படுமென்று அச்சம் இருந்தது. வேலையில் சேர்ந்த நாளைக் கணக்கிட்டு எல்லா அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் சர்வீஸ் இன்டகிரேஷன் கொடுத்தால், எந்த விதமான பாதகமும் யாருக்கும் ஏற்படாது. எல்லா ஆசிரியர்களுக்கும் 2 : 1 என்ற ரேஷியோவில் செலக்ஷன் கிரேடு பதவி உயர்வு கொடுத்தால், மூன்று ஆசிரியர்கள் இருந்தால், ஒருவர் செலக்ஷன் கிரேட் பெறும் வாய்ப்பு இருக்கும். அது 33 சதவிதம் ஆகும். ஆகவே அரசுப் பள்ளி ஆசிரியர்களை மட்டும் தனிப்படுத்திப் பார்க்கக் கூடாது. எல்லா ஆசிரியர்களையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால் எண்ணிக்கைமிகும். அதற்கேற்ப 2 : 1 விகிதத்தில் பதவி உயர்வு அளித்தல் வேண்டும். அதல்லாமல் அவ்வப்போது ஏதாவது செய்துகொண்டிருந்தால், அது திருப்தியளிக்காது. பூர்ணமாக ஒன்றிணைப்பது, கம்பிளிட் இன்டகிரேஷன் ஒன்று தான் சரியான வழி என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். அரசு ஊழியர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், 'ஏ' பிரிவில் இருக்கின்றவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் 'பி' பிரிவில் உள்ள வர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற ஒரு நிலை இருக்கின்றது. இதனை மாற்ற வேலையில் சேர்ந்த நாளைக் கணக்கிட்டு இன்டகிரேஷன் செய்வதுதான் சரியான வழி.

அடுத்தபடியாக, இந்தப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு அளித்துள்ள சம்பள விகிதங்களைப் பொறுத்த வரையில், மேலும் புனர் பரிசிலனை செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆரம்பச் சம்பளம் ரூபாய் 275 என்று நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்து விட்டு மூன்று ஆண்டுகள் சிவில் இன்ஜினீரிங், மெக்கானிகல் இன்ஜினீரிங், டிப்ளமோ கோர்ஸ் படித்து விட்டு வருகிற டெக்னிகல் அஸிஸ்டெண்டுக்கு ரூ. 325 ப்ளஸ் ரூ. 25 என்று சம்பளம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்து விட்டு, பி.யூ.ஸி. ஒரு வருஷம் படித்துவிட்டு, மூன்று வருஷம் பி.ஏ. படித்து ஓராண்டு காலம் பி.டி. படித்து விட்டு வருகிறவர்களுக்கு ரூ. 275 சம்பளம் வைத்திருப்பது அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் அளிக்கிறது. வருங்கால இளைஞர் சமுதாயத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு இந்த மாதிரியான அதிருப்தி இருப்பது கூடாது. டெக்னிகல் அஸிஸ்டெண்டுகளுக்குக் கொடுக்காமலிருந் தால் கூட, இப்பொழுது இருக்கும் அதிருப்தி ஏற்பட்டிருக்காது. அந்த அதிருப்தியைப் போக்கிட வேண்டியது அரசின் கடமையாகும். இந்த நிலைமையை எல்லாம் புனர் பரிசிலனை செய்தாக வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுக்கு மிக அழுத்தமாக எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக் கிறேன். இதைப் பரிசிலனை செய்து அவர்களுக்கு நியாயம் வழங்கியாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குச் சம்பளம் ரூபாய் 250. அவர்கள் பதவி உயர்வு பெறுகின்றபோது 250-க்கு மேல் பெறுகிறார்கள். ஒரு சிலர் இப்படி இருக்கின்ற நிலைமையை மாற்ற வேண்டும். பட்டதாரி ஆசிரியர் களுக்கு 'ஸெலெக்ஷன் கிரேடு' என்று வரும்போது, ரூ. 275 லிருந்து ரூ. 400 கிடைக்கிறது. ரூ. 125 வித்தியாசம் இருக்கிறது. ஆனால் ஸெகண்டரி கிரேடு



ஆசிரியர்களுக்கு ரூ. 210 ஆரம்பம். இவர்கள் செலக்ஷன் கிரேடுக்கு வருவதற்கு முன்பே ரூ. 250/260 சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள். உண்மையில் இவர்களுக்கு ஸெலெக்ஷன் கிரேடு என்று வரும்போது இவர் களுடைய சம்பளம் கீழேதான் கொண்டுபோகப்படுகிறது. வாங்குகிற சம்பளத்தில் குறைவு ஏற்பட்டுவிடக்கூடாது என்று போதிய பாதுகாப்பு இருப்பதால், இவர்கள் பிழைத்திருக்கின்றார்கள். யாராவது ஸெலக்ஷன் கிரேடு கிடைத்த ஆசிரியர்களை எங்கேயாவது பார்க்கும்போது நமது பாராட்டுதல்களைத் தெரிவித்தால்கூட, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வெட்கப்படுகின்றார்கள். எனவே அவர்களுக்கு ஸெலக்ஷன் கிரேடு சம்பளம் ரூ. 300 ஆவது நிர்ணயிக்கப்பட்டுக் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த அரசினை மிக வன்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, இந்த 'பி' பிரிவு கழகப் பள்ளி ஆசிரியர்களில் ஸெலெக்ஷன் கிரேடு ஆசிரியர்களில் சிலருக்கு கெஸடட் போஸ்டு கொடுத்திருக்கின்றார்கள். மாநிலம் முழுவதுக்குமாக 80 ஸ்தானங்கள் கொடுத்திருக்கின்றார்கள். இதை மாவட்டத்திற்கு இவ்வளவு என்று இலக்கு வைத்து பிரித்துக்கொடுத்திருக்கின் றார்கள். பதவி உயர்வும் மாவட்ட மட்டத்திலேயே பரிசிலனை செய்து கொடுக்கப்படுகிறது. எப்பொழுதும் கெஸடட் போஸ்டுக்கு நபர்களை நியமிக் கும்போது, ஸெலெக்ஷன் (தேர்வு) மாநில ரீதியில்தான் இருக்க வேண்டுமே தவிர, மாவட்டத்திற்கு மாவட்டம் என்று பிரித்துக்கொடுப்பது தவறானதாகும். பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லுவார்கள். ஒரு சிலர் அப்படி இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். இன்னும் சிலர் இப்படித்தான் கொள்கை இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள்.

திரு. சா. கணேசன் : எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு பிறகு உங்கள் இஷ்டப்படியே செய்யுங்களேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : எனவே கெஸடட் போஸ்டு மாநில அளவில்தான் இருக்க வேண்டும் என்பதுதான் முறை. மாநில ரீதியில் ஸீனியாரிடியைப் பார்க்க வேண்டும்.

திரு. டி. சந்தோஷம் : இதில் நீதியைப் பார்த்து ஒரு முடிவெடுப்பது யாருக்கும் நஷ்டமாக இருக்காது. நீதி மன்றத்தில்கூட ஒவ்வொரு வழக்கிலும் ஒவ்வொரு விதமாக வாதாடுவார்கள். ஆனால் நீதியின் அடிப்படையிலேயே முடிவெடுப்பார்கள். அது போல ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமாக முறையை வகுத்துக் கொள்ளலாம் என்று சொன்னாலும், அரசாங்கம் நீதியின் அடிப்படையில் முடிவெடுக்கலாம். அப்படிப் பார்க்கும்போது, நிச்சயமாக இது மாவட்ட ரீதியாக இல்லாமல் மாநில ரீதியாக அமைவதுதான் நல்லது. இதில் சந்தேகம் இருக்க முடியாது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : வேறு எந்தத் துறையிலும் கெஸடட் போஸ்டுக்கு மாவட்ட ரீதியில் கொடுப்பது கிடையாது. இன்னும் சொல்லப் போனால், வேறு எந்த மாநிலத்திலும்கூட இப்படிப்பட்ட ஒரு முறை இருக்க முடியாது என்று நிச்சயமாகச் சொல்லலாம். எனவே இது மாநில அளவில் வைக்கப்பட வேண்டும் என்று மிகப் பணிவோடு, ஆனால் வன்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை அரசு பரிசிலனை செய்து நீதி வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [24th January 1972

இப்போது தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நாம் எல்லாச் சலுகைகளையும் வழங்கியிருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பு மட்டும் இல்லாமல் இருக்கிறது. இதற்கும் ஒரு சட்டத்தினைக் கொண்டுவந்து விட்டால், அது அவர்களுக்குச் செய்த பெரிய நன்மையாக இருக்கும். மேலும் டிபார்ட்மெண்டல் டெஸ்டுகள் அனைத்தையும் 'பாஸ்' செய்துவிட்ட 'க்வாலிஃபைடு' தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் மாவட்டக் கல்வியதிகாரியாக பதவி உயர்வு கொடுப்பதற்கான வழி முறைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் டி.இ.ஓ. பதவிகளில் ஒரு ஒதுக்கீடு—ஒரு 25 சதவிகிதமாவது ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் தனியாக எஜுகேஷனல் சர்வீஸ் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும். இந்தியன் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சர்வீஸ் ஐ.ஏ.எஸ்., இந்தியன் போலீஸ் சர்வீஸ், ஐ.பி.எஸ்., இந்தியன் பாரஸ்ட் சர்வீஸ் என்று இருப்பது போல, இந்தியன் எஜுகேஷனல் சர்வீஸ்', ஐ.இ.எஸ். என்று ஒன்றையும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நமது அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இதை ஏற்படுத்த முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை ஏற்படுத்தி, அதற்கான தேர்வுகளை எழுத ஆசிரியர்களுக்கு வாய்ப்பினை அளிக்க வேண்டும். சொல்லப்போனால் அவர்களுக்குத்தான் முதல் சலுகை என்று அறிவிக்கப்பட வேண்டும். பி.ஏ., எம்.ஏ., படித்து பட்டம் பெற்று ஆசிரியர்களாக குறைந்தது மூன்று அல்லது நான்காண்டுகாலம் பணியாற்றியவர்கள்தான் இந்தத் தேர்வுகளை எழுத வேண்டுமென்ற விதியினை ஏற்படுத்தலாம். இப்படிப்பட்டவர்கள் பள்ளி அனுபவத்துடன் இந்தியன் எஜுகேஷனல் அட்மிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பீரியன்ஸையும் அடைய முடியும். இதனால் கல்வி இலாகா நிர்வாகம் திறம்பட முடியும்.

இப்போது தகுதி பெற்ற இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களுக்கெல்லாம் நாம் முதல் நிலை தமிழ் ஆசிரியர் பதவி வழங்கியிருக்கிறோம். இப்போது அந்த மாதிரி இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு, தமிழாசிரியர்களுக்கு வழங்குவதாக முடிவெடுக்கப்பட்டு, 1800 கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 200, போஸ்டுகள் கொடுக்கப்பட இருக்கின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்னும் வேண்டுமானால்கூடத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். இவ்வளவு தாராளமாகப் பள்ளி ஆசிரியர்களின் நிலைமை உயர்ந்தது என்பது எந்தக் காலத்திலும் இல்லை. இது ஆசிரியர்களுக்கு ஒரு பொற்காலம் என்று சொன்னால், அது மிகையாகாது. இப்படிப்பட்ட சலுகைகள் எல்லாம் பிற மொழி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது இந்தி ஆசிரியர்கள் இல்லை. ஆனால் சில மாவட்டங்களிலே குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் சில இடங்களிலே மலையாளம் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். தெலுங்கு ஆசிரியர்களும் ஒரு சில மாவட்டங்களிலே இருக்கின்றார்கள். ஸமஸ்கிருத ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இவர்களின் மொத்த எண்ணிக்கை மிகக் குறைவேயாகும். இப்போதே 200 போஸ்டுகள் இருக்கின்றன. எனவே இவர்களுக்கும் கொடுத்தால் அனைவருக்கும் ஒரு உண்மையான திருப்தி ஏற்படும். அதிகச் செலவு ஒன்றும் இதனால் ஏற்படப்போவதில்லை. எனவே இதைக்கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.



24th January 1972] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

அடுத்து, கல்லூரிகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளைப் பொறுத்த மட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளுக்குத்தான் அதிக உதவிகளையும் சலுகைகளையும் கொடுக்க வேண்டும். இன்றைக்கு கல்வித் துறையில் தனியார் கல்லூரிகள் பெரும் சேவையாற்றுகின்றன. அதைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. பல கல்லூரிகள் இன்றைக்குத் தோன்றி புதிதாக புகுமுக வகுப்புகள் ஆரம்பிக்கின்றார்கள். பழைய கல்லூரிகளில் உள்ள புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு சம்பள உதவித் தொகை ரூ. 80 வீதம் அரசு கொடுக்கின்றது. ஆனால் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கல்லூரியில் மாணவர் ஒன்றுக்கு ரூ. 50 என்றுதான் கொடுக்கின்றார்கள். இது புதிய கல்லூரிகளை மிகமிக பாதிக்கின்றது. உண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்குத்தான் அதிகமான உதவி தேவை. "வெல் எஸ்டாபிளிஷ்டு" கல்லூரிகளுக்குச் சற்று குறைத்துக்கொடுத்தாலும், அவை தன்காலில் நிற்பதற்கு சக்தி பெற்றவையாக இருக்கின்றன. எனவே இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது அரசு ஐந்து ஏக்கர் வரை நில வரியை ரத்து செய்திருக்கிறது. பாராட்டுகின்றேன். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உயர் மட்டத்தில் உள்ள ரெவின்யூ அதிகாரிகள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால், Dry components of the first five acres அதாவது புஞ்சை நிலத்திற்குத்தான் அந்த வரி விலக்கு பொருந்தும். நஞ்சை நிலத்திற்கு இல்லை என்று சொல்லுகின்றார்கள். அப்படி வருமானால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு விவசாயியும் ஏக்கருக்கு 700 ரூபாய் என்ற அளவில் கட்ட வேண்டிவரும். அவர்கள் கடந்த பத்து பதினைந்து ஆண்டுக்காலமாக திருவிதாங்கூர்-கொச்சி இராஜ்யத்திலிருந்த காரணத்தினால், நிலவரி இன்றி இருந்த சலுகைபற்றிய சில தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றபடியால், கட்டாமல் இருக்கின்றார்கள். இப்போது இப்படிப்பட்ட ஒரு விளக்கம் சொன்னால், இது மிகவும் சிக்கலான பிரச்சனையாகிவிடும். எனவே அரசு இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே ரயத்வாரி ஸிஸ்டம் இந்த ஆண்டு முதல் அமுலுக்கு வருகிறது. முதல் ஐந்து ஏக்கருக்கு வரியில்லை என்று சொல்லவில்லை. புஞ்சைக்கு அடிப்படைத் தீர்வையை ரத்து செய்தது போல, நஞ்சைக்கும் ரத்து செய்திருக்கிறோம் என்றுதான் அர்த்தம். அடிப்படைத் தீர்வையை ரத்து செய்திருக்கின்றோம் என்றால், அது எல்லா மாவட்டத்திற்கும் பொருந்தும். ரயத்வாரி முறை அங்கே வரும்போது இதுவும் அங்கே அமுலாகும். மற்ற மற்ற வரிகள் அதாவது தண்ணீர் வரி, மற்றும் பெட்டர்மெண்டு வரிகள் இருந்தால், அவற்றைத் தள்ளுபடி செய்வதாக எப்போதும் சொல்லவில்லை. இப்போதுகூட தமிழ் நாட்டில் ஐந்து ஏக்கர் நஞ்செய்க்கு வரி இல்லை என்று சொன்னால், அடிப்படைத் தீர்வை இல்லை என்றுதான் பொருள். "பேஸிக் டாக்ஸ்" இல்லை என்று தான் சொல்லியிருக்கிறோமே தவிர, வரியில்லை என்று சொல்லவில்லை. முதல் ஐந்து ஏக்கர்களுக்கு எல்லா விலக்கும் உண்டு என்று கிடையாது. ஐந்து ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு அடிப்படை வரி இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறோம்..

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், 5 ஏக்கருக்கு அடிப்படை வரி இல்லை என்று. அதைத் தான் நாங்களும் எதிர்பார்க்கிறோம். தண்ணீர் வரி, செஸ்,

பஞ்சாயத்து செஸ் எல்லாம் கொடுக்கவேண்டியது தான். ரெவின்யூ போர்டு மெம்பரின் விளக்கம் 'டிரை காம்போனன்ட்' என்பதாகும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** டிரை காம்போனன்ட் என்றால் நஞ்சை, புஞ்சைக்கு விதிக்கப்படுகிற வரி, மண் தரத்தை வைத்துப் பிரித்திருக்கிறார்கள். அது மாவட்டத்துக்குத் தகுந்த மாதிரி வித்தியாசப்படும். புஞ்சைக்கு என்ன வரி இருக்கிறதோ அதோடு கூட வாட்டர் டாக்ஸ்-ம் சேர்ந்துதான் நஞ்சைக்கு வரியாகிறது. அடிப்படை வரியை நீக்கினால், வாட்டர் டாக்ஸ்தான் மீதம் இருக்கும். நஞ்சைக்கு வரி என்று தனியாக இல்லை. டிரை காம்போனன்ட்-ஐ நீக்குகிறோம் என்றால், அடிப்படை வரியை நீக்குகிறோம் என்று பொருள். வரியை எடுத்துவிட்டால், வாட்டர் டாக்ஸ், செஸ் மட்டும் வரும்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** உதவித் தலைவரவர்களே, அடுத்து நான் மிகவும் வற்புறுத்திச் சொல்ல விரும்புவது, மதுரையை இரண்டாவது தலை நகரமாக ஆக்க வேண்டும் என்பது தென் மாவட்டங்களின் கோரிக்கை. மாண்புமிகு உறுப்பினர் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கூட மிக அழகாகச் சொன்னார்கள். அதிகாரம் எல்லா மாவட்டங்களிலேயும் இருக்க வேண்டும். அறநிலையத் துறைத் தலைமை அலுவலகம் சென்னையில் ஏன் இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஒவ்வொரு இலாகாவின் தலைமையும் ஒவ்வொரு மாவட்டத்திலே இருக்க வேண்டும் என்ற கருத்தில் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அந்த வாதத்தின் அடிப்படையாக, தென் மாவட்டங்களுக்கு ஒரு செகண்ட் கேபிடல்-ஆக மதுரையை ஆக்க வேண்டும். ஒரு பிரச்சினைக்காக 500 மைலுக்கு அப்பாலுள்ள சென்னைக்கு, நாங்கள் எல்லாம் சட்டசபைக் கூட்டத்துக்காக இங்கேயிருக்கிறபோது, ஒருவர் வருவதென்றாலே ரூ. 100 அல்லது ரூ. 150 செலவாகும். ஒரு ஆசிரியர் அல்லது சாதாரண ஆள் இப்படி வருகிறபோது, நாங்கள் திரும்பிப் போய்விட்டால், அவருக்குத் திண்டாட்டம் தான். எங்கு தங்குவார்கள்? யாரைப் பார்த்துச் சொல்ல முடியும்? போய்விட்டுத் திரும்பவும் வர வேண்டும். தொலைவில் தலைநகர் இருப்பதால், அவல நிலை இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு இலாகாவைக் கொண்டுபோனால், அதுவும் ஒர்கிங் அரேஞ்ஜ்மெண்டுக்குச் சரியாக வராது. சட்டசபை செக்ரடேரியட் இருக்கிற இடத்தில் தான் மற்றத் தலைமை அலுவலகங்கள் எல்லாம் இருப்பது நன்மையாக இருக்கும். "செகண்ட் கேபிடல்" என்று மதுரையை வைத்தால், கல்வி இலாகாவைப் பொறுத்தவரை, அதிலே 2 அல்லது 3 ஜாயின்ட் டைரக்டர்கள் இருக்கிறார்கள், அவர்களிலே ஒரு ஜாயின்ட் டைரக்டரை மதுரையில் வைக்கலாம். அவர் தென் மாவட்டங்கள் நான்கையும் பொறுத்தவரையில் எல்லா விஷயங்களையும் பார்த்துக்கொள்ளலாம்; அதற்கு மேல் அப்பீல் செய்து கொள்வது என்றால் மட்டும் டைரக்டரிடமோ அல்லது செக்ரடேரியட்டுக்கோ வந்தால் போதும். இதனால் இரண்டு விதமான நன்மைகள் உள்ளன. ஒன்று அந்த மக்களுக்கு ஏற்படும் நன்மை. அடுத்தது சென்னையில் இருக்கிற இட நெருக்கடி தீரும், ஹோட்டலில் இருக்கிற கூட்டம் குறையும். "வி" டைப் காப்பி குடிக்கவேண்டிய சூழ்நிலை வராது. இது என்னுடைய அழுத்தமான கருத்து. இப்போது அவசியமில்லாமல் புறப்பட்டுவந்து சென்னையைச் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் பலர். நாங்கள் சொல்லி விடுகிறோம், இந்தக் காரியம் நடக்காது என்று. "நாங்கள் வருகிறோம், நீங்கள் கொஞ்சம் முயற்சியுங்கள்" என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.



நாங்களும் சரி என்று சொல்லித்தான ஆக வேண்டும். இல்லாவிட்டால், ஓட்டு கிடைக்காது. அவர்கள் வந்து வீணைகச் சென்னையைச் சுற்றிவிட்டுப் போகிறார்கள். இதற்குப் பதில் அவர்கள் மதுரையைச் சுற்றிக்கொண்டு இருந்தால் அதிகச் செலவாகாது. "செகண்ட் காபிடல்" என்று மதுரையை ஆக்கி அங்கே எல்லா இலாக்காக்களிலிருந்தும ஜாயின்ட் டைரக்டர் அளவில் ஒரு அதிகாரியை வைத்து அவருக்கு அதிகாரமும் கொடுத்தால், அங்கேயே பல காரியங்கள் முடிந்துவிடும். அதற்குப் பிறகு அப்பில் செய்வது என்றால, செக்ரடேரியட் லெவலில் இருக்கலாம். கோயம்புத்தூரில் வேண்டும் என்று பின்னால் அவர்கள் கேட்டால், அதுபற்றி அப்போது பார்த்துக்கொள்ளலாம். இதற்கு முன்னாலேயே கூட நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சந்தோஷம் அவர்களும் வற்புறுத்தியிருக்கிறோம். சட்டக் கல்லூரி மதுரையில் வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ஹைகோர்ட் பெஞ்ச் ஒன்று அங்கே வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மற்ற எல்லா வசதிகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதையே திரும்பவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையில் தொழில் வளத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, தொழில் பரவினால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்திலேயே அந்த மூலப் பொருள் சம்பந்தமான தொழிலை நிறுவவேண்டியது அவசியமாகும். தமிழ் நாட்டிலேயே ரப்பர் கிடைக்கும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் தான். அங்கே இருக்கிற ரப்பர் தான் இந்தியாவிலேயே முதல் தரமானது; அங்கேயிருந்து கல்கத்தா, மற்றப் பகுதிகளுக்கு ரப்பர் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில், கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு ரப்பர் தொழிற்சாலையை, பப்ளிக் செக்டாரில், பொதுத் துறையில், ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவுக்கெவ்வளவு பொதுத் துறையை நாம் சிறப்பாகக் கொண்டு வருகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவுதான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியுமே தவிர, தனியார் துறையால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியாது என்பது என்னுடைய அழுத்தமான கருத்து. அவர்கள் நினைத்த மாதிரி லாபம் அடிக்க தனியார் துறையை அரசு விடவில்லையென்றால், அவர்களே ஸ்ட்ரைக்கைத் தூண்டிவிட்டுவிடுவார்கள். அவர்களுக்கு நாட்டின் நன்மையைப்பற்றி அக்கறையில்லை. தாங்கள் மட்டும் வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள், அளவுகடந்த லாபம் வேண்டும் என்று நினைக்கிறார்கள். அரசோ சமுதாய அமைப்புகளோ இவர்களது கொள்ளை இலாப நோக்கிற்குத் தடை விதித்தால், நமக்கு வேண்டாம் இந்தத் தொல்லை என்று தொழிலை நிறுத்திவிடுவார்கள். பொதுத் துறை வளர்ந்தால் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். பொதுத் துறை லாபத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இயங்க வேண்டும். ஒன்றே ஒன்று நமக்குப் பற்றாக்குறையாக இருப்பது, நாணயமான தொழிலாளர்கள், நாணயமான நிர்வாகிகள், நாணயமான தொழில் அமைப்பு. இதனை நாடு முழுவதும் உணர வேண்டும். கல்வி நிலையங்களிலே பயிலும் இளம் உள்ளங்களில் நாணயத்தின் அவசியம், பொதுத் துறையின் இன்றியமையாமை, இந்த நாடு நம்முடைய நாடு என்ற உணர்வு இவைகளை நிலைக்களனாகத் தேக்கி வைப்பதில்தான் நாடு முன்னேற்றம் காண முடியும். 10 வருஷத்தில் நாம் எதிர்நோக்கும் நிலை உருவாகும் என்று நான் நம்பு

[திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை] [24th January 1972

கிறேன். மாணவர்களோடு இளம் பிஞ்சு உள்ளங்களோடு 25 ஆண்டுகளாகப் பழகிவருகிறேன். 25 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் உள்ளத்தில் இருந்த உணர்வைவிட இப்போதுள்ள மாணவர்கள் உள்ளத்தில் இருக்கிற நாட்டுணர்வு பொது உணர்வு அதிகமாக இருக்கிறது என்பதை நாங்கள் உருப்படியாக காண முடிகிறது. ஆனால் அதை முறைப்படுத்தி, செம்மைப்படுத்தி வளர்ப்போமானால், பொதுத் துறை நிச்சயமாக வெற்றி பெறும். அதன் மூலமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி எல்லா நன்மைகளையும் அடைய முடியும், ஆகவே இதை மிக விரைவில் மாவட்டந்தோறும் ஊக்குவித்துக்கொண்டு வர வேண்டும். பொதுத்துறையின் வெற்றிக்கு யார் இடையூறு செய்தாலும் தண்டிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் எங்கள் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு எங்களைப் போன்ற பிரதிநிதிகள் இடையூறு செய்யக் கூடாது. நான் இத்தகைய சிபார்சு செய்ததுமில்லை, சிபார்சு செய்யப் போவதில்லை. நாடு நல்ல முறையில் உருவாகி வருகிறது. இந்த அளவில் ஆளுநர் உரை மிகச் சிறப்பாக வருங்காலத்தில் எப்படிச் செயல்பட வேண்டுமென்று கோடிட்டு காட்டுகிற சூழ்நிலையில் இருப்பதற்கு நான் நன்றி தெரிவித்து நண்பர் உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் கொண்டுவந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமைகிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. STATUTORY RULES AND ORDERS.

* 1. Notification issued with G.O. Ms. No. 1137, Labour (Housing), dated the 7th September 1971, regarding rules for the control and management of properties of the Tamil Nadu Slum Clearance Board. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

* 2. Notification issued with G.O. Ms. No. 2900, Home, dated the 24th October 1970, in regard to amendments to the Madras Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 3. Notification issued with G.O. Ms. No. 1821, Home, dated the 27th July 1970 in regard to amendment to the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 4. Notification issued with G.O. Ms. No. 2488, Local Administration, dated the 11th November 1971, regarding constitution of a municipality with the name of Maduranthakam the



24th January 1972]

local area now within the jurisdiction of the Maduranthakam Town Panchayat in the Chingleput district. [Laid on the table of the House under secton 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 5. Notification issued with G.O. Ms. No. 2489, Local Administration, dated the 11th November 1971, regarding constitution of a municipality with the name of Suramangalam the local area now within the jurisdiction of the Surmangalam Town Panchayat in the Salem district. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 6. Notification issued with G.O. Ms. No. 2490, Local administration, dated the 11th November 1971, regarding constitution of a municipality with the name of Kumarpalayam, the local area now within the jurisdiction of the Kumarapalayam Town Panchayat in the Salem district. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 7. Notification issued with G.O. Ms. No. 2491, Local Administration, dated the 11th November 1971, regarding constitution of a municipality with the name of Goldenrock the local area now within the jurisdiction of the Goldenrock Town Panchayat in the Tiruchirappalli district. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 8. Notification issued with G.O. Ms. No. 2492, Local Administration, dated the 11th November 1971 regarding constitution of a municipality with the name of Sirkali the local area now within the jurisdiction of Sirkali Town Panchayat in the Thanjavur district. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 9. Notification issued with G.O. Ms. No. 373, Home, dated the 3rd February 1971, in regard to amendments to the Madras Spirituous Essences Rules, 1959. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 10. Notification issued with G.O. Ms. No. 2643, Home, dated the 22nd October 1969, in regard to amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 11. Notification issued with G.O. Ms. No. 76, Excise and Prohibition, dated the 8th October 1971, in regard to the maximum limit of liquor that may be transported or held in the possession of a person at any one time shall not apply to the Foreign Delegates attending the Inter-Regional Seminar on Industrial Proceessing of

[24th January 1972

Rice to be held in the Indian Institute of Technology Campus, Madras between the 11th and 16th October 1971. [Laid on the table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 8 of 1971).]

* 12. Notification issued with G.O. Ms. No. 3398, Revenue, dated the 4th November 1971, in regard to amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

* 13. Order issued with G.O. R. No. 1997, Revenue, dated the 5th November 1971, exempting from liability to Entertainments Tax one cinematograph film show organised by the Secretary, Madhya Association, Madras, on 7th November 1971 at Paragon Theatre, Madras with the film "Baktha Kanaka Dasa". [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 14. Order issued with G.O. Rt. No. 1989, Revenue, dated the 4th November, 1971 exempting from liability to Entertainments Tax, one cinematograph film show organised by the Secretary, Indra Dhanush on 31st November 1971 at Rajakumari Theatre, Madras with the film "Samskara". [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).

* 15. Notification issued with G.O. Ms. No. 779, Rural Development and Local Administration, dated the 26th March 1971 in regard to rules governing the Classification, Control and Appeal in respect of the posts coming under Classes I-A, I-B and II in the service of the Corporation of Madras. [Laid on the table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

16 Notification issued with G.O. Ms. No. 2433, Rural Development and Local Administration, dated the 4th November, 1971 in regard to dissolution of the Wallajah Panchayat Union Council with effect on and from the 4th November 1971 and re-constitution of the Wallajah Panchayat Union Council with effect on and from the 4th February 1972. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

17. Notification issued with G.O. Ms. No. 1848, Public (Services-A), dated 11th June 1971 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to Repeal of the Madras Civil Services (Safeguarding of National Security) Rules, 1954. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

*B. Reports, Notifications and other Papers*

* 1. Returns of Assets of 54 Members of the Tamil Nadu Legislative Assembly (including the Hon. Chief Minister and four Hon. Ministers) for the year ending 31st March 1971.



24th January 1972]

* 2. Notification issued with G.O. Ms. No. 2234, Revenue, dated the 11th August 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the written undertakings executed by the Tamil Nadu Small Industries Development Corporation for obtaining loans and advances sanctioned by the Government of Tamil Nadu.

* 3. Notification issued with G.O. Ms. No. 2297, Revenue, dated the 19th August 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the endowment deed to be executed by the Managing Trustee of Annavinayagar Devasthanam Trust, Gannapathipuram in Agastheeswaram taluk, Kanyakumari district in favour of Annavinayagar Devashthanam College, Ganapathipuram.

* 4. Notification issued with G.O. Ms. No. 1797, Revenue, dated the 22nd June 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the documents executed relating to the purchase of the properties specified in favour of Anna Arulagam, Cheyyar, North Arcot district.

* 5. Notification issued with G.O. Ms. No. 2134, Revenue, dated the 8th July, 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of the reconveyance deed relating to 6.31 acres of land in survey Number 6 of Vijayaraghavan Mudaliar Chatram Village of Tirunelveli taluk in Tirunelveli district of the value of Rs. 61,558-55 (Rupees sixty one thousand five hundred and fifty eight and paise fifty five-only) to be executed by the Principal of the Medical College, Palayamkottai in favour of the Muslim Orphanage Committee, Palayamkottai, Tirunelveli district.

* 6. Notification issued with G.O. Ms. No. 2374, Revenue, dated the 30th August 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed executed by the Ceylon Pentecostal Mission of Madras represented by its Chief Pastor through the holder of his power of attorney in favour of the Young Men's Christians Association, Madurai.

* 7. Notification issued with G.O. Ms. No. 2317, Revenue, dated the 21st August 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deeds of immovable properties executed by Burma and Ceylon repatriates in favour of the Government for securing business loans.

* 8. Notification issued with G.O. Ms. No. 2747, Revenue, dated the 21st September, 1971 in regard to amendment to the Tamil Nadu Stamp (Prevention of undervaluation of Instruments) Rules, 1968, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

* 9. Notification issued with G.O. Ms. No. 2837, Revenue, dated the 25th September 1971 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of the bonds to be executed by the Tamil Nadu Electricity Board for availing of the rediscounting facilities offered by the Industrial Development Bank of India from time to time.

* 10. Notification issued with G.O. Ms. No. 2398, Revenue, dated the 31st August 1971 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of the deed of declaration of trust to be executed by the Ambur Muslim Educational Society, Ambur represented by its President and General Secretary, for the purpose of creation of endowment in favour of the College Management Committee of the Mazharul Uloom College, Ambur.

---

£ Laid on the table of the House on 18th December 1971.

* Sent by post to all M.L.Cs. on 10th January 1972.





## APPENDIX I

[*Vide* answer to Starred Question No. 1 on page 2]

| தொடர் எண்ணும், நாளிதழின் பெயரும். | வழக்கின் கருப்பொருள். | வழக்கின் முடிவு. | மேல் முறையீடு எதுவும் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருப்பின் அதன் முடிவு. | குறிப்புக்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 நவசக்தி .. | செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் 13—4—1967 நாளிட்ட "நவசக்தி" இதழில் முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரை இழிவுபடுத்தும் வகையில் கட்டுரை வெளியீடு—கண்ணதாசன், எம். தனுஷ்கோடி ஆகியோர் மீது வழக்குகள் நடவடிக்கை. | திரு. கண்ணதாசனுக்குரூ. 500 அபராதம் தண்டனை விதிக்கப்பட்டது. அதை செலுத்தத் தவறினால் 2 திங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று ஆணையிடப்பட்டது. நன்னடத்தைக்காக ரூ. 506 பிணைப்பத்திரம் எழுதிக் கொடுப்பதின் மேல் திரு. எம். தனுஷ்கோடியை விடுவிக்குமாறும் ஓர் ஆண்டுக்கால அளவிற்குள் கட்டளையிடப்படும்போது அவர் நீதி மன்றத்திற்கு வந்து தண்டனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சென்னை தலைமை செஷன்ஸ் நீதிபதி கட்டளையிட்டுள்ளார். | குற்றம் சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த மேல் முறையீடு பின்னர் திரும்பப் பெறப்பட்டது. | .. |
| 2 ஜெயக்கொடி .. | செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் 23—3—1969 நாளிட்ட ஜெயக்கொடி இதழில் "இவர்கள் சந்தித்தால்" என்ற தலைப்பின்கீழ் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டது குறித்து. | திரு. எம். கே. டி. சுப்பிரமணியத்திற்கு 6 திங்கள் சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. வண்ணை கலைதாசன் ரூ. 1000 அபராதம் செலுத்தத் தவறினால் 3 திங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் சென்னை முதல் செஷன்ஸ் நீதிபதி 18—3—1970 அன்று தீர்ப்பளித்தார். | உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. செஷன்ஸ் நீதி மன்றத்தின் தண்டனையை உயர் நீதி மன்றம் உறுதி செய்தது. | .. |

| தொடர் எண்ணும், நாளிதழின் பெயரும். | வழக்கின் கருப்பொருள். | வழக்கின் முடிவு. | மேல் முறையீடு எதுவும் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருப்பின் அதன் முடிவு. | குறிப்புக்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 ஜெயக்கொடி .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும் 14—3—1969 நாளிட்ட ஜெயக்கொடி இதழில் "தமிழ் நாட்டையே பங்கு போடுகிறார்கள் தி. மு. க. மந்திரிகள்" என்ற தலைப்பின் கீழ் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்று வெளியீடு. | குற்றம் சாட்டப்பட்ட திரு. எம். கே. டி. சுப்பிரமணியத்திற்கு 18—3—1970 அன்று சென்னை முதல் செஷன்ஸ் நீதிபதி 6 திங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்தார். | சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. செஷன்ஸ் நீதி மன்றத்தில் தண்டனையை உயர்நீதி மன்றம் உறுதி செய்தது. | .. |
| 4 ஜெயக்கொடி .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும் 29—4—1969 நாளிட்ட ஜெயக்கொடி இதழில் "ஒ பொது மக்களே இன்பச் செயல்கள் முதலியவற்றிற்காக நீங்கள் வாக்கு அளித்துள்ளீர்" என்ற தலைப்பின் கீழ் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்று வெளியீடு. | குற்றம் சாட்டப்பட்ட திரு. எம். கே. டி. சுப்பிரமணியத்திற்கு 19—3—1970 அன்று சென்னை முதல் செஷன்ஸ் நீதிபதி ஆறு திங்கள் சிறைத்தண்டனை விதித்தார். | ஷை | .. |
| 5 நாத்திகம் .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும் 17—3—1969 நாளிட்ட நாத்திகம் இதழில் "மந்திரிகளின் சொந்தக் கணக்கு" என்ற தலைப்பின்கீழ் ஆட்சேபகரமான கட்டுரை வெளியீடு. | குற்றம் சாட்டப்பட்ட திரு. பி. ராமசாமிக்கு 18—3—1970 அன்று சென்னை முதல் செஷன்ஸ் நீதிபதி 3 திங்கள் சாதாரண சிறைத் தண்டனையும் ரூ. 1000 அபராதத் தொகை செலுத்தத் தவறினால் 3 திங்கள் சிறைத் தண்டனையும் விதித்தார். | உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. செஷன்ஸ் நீதி மன்றத்தின் தண்டனை உறுதி செய்யப்பட்டது. | .. |
| 6 நாத்திகம் .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், 9—5—1969 நாளிட்ட நாத்திகம் இதழில் "காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் கொள்ளைக்காரர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்" என்ற தலைப்பின்கீழ் ஆட்சேபகரமான கட்டுரை வெளியீடு. | குற்றம் சாட்டப்பட்ட திரு. பி. ராமசாமிக்கு 2—2—1970 அன்று சென்னை முதல் செஷன்ஸ் நீதிபதி ரூ. 1,000 அபராதமும் மேற்படி தொகை செலுத்தத் தவறினால் 3 திங்கள் சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். | உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. செஷன்ஸ் நீதிமன்றத்தின் தண்டனை உறுதி செய்யப்பட்டது. | .. |
| 7 நாத்திகம் .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், 28—2—1969 நாளிட்ட நாத்திகம் இதழில் கோயம்புத்தூர் அரசுத் தலைமையிட மருத்துவமனை தொடர்பாக ஆட்சேபகரமான கட்டுரை ஒன்று வெளியீடு. | குற்றம் சாட்டப்பட்ட திரு. பி. ராமசாமிக்கு 13—11—1969 அன்று சென்னை முதல் செஷன்ஸ் நீதிபதி ரூ. 1000 அபராதமும் மேற்படி தொகை செலுத்தத் தவறினால் 6 திங்கள் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார். | ஷை | .. |
| 8 நவசக்தி .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், 30—3—1969 நாளிட்ட நவசக்தி இதழில் தென் சரகம் காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. நாராயணன் மீது குற்றம் "மதுரை கேட்கும் நீதி" என்ற தலைப்பின்கீழ் ஆட்சேபகரமான கட்டுரை வெளியீடு. | குற்றம் சாட்டப்பட்ட திரு. எம். தரைன்கோடிக்கும், திரு. பி. சி. கணேசனுக்கும் மதுரை செஷன்ஸ் நீதிபதி தலா ரூ. 200 அபராதம் விதித்தார். (குற்றம் சாட்டப்பட்டவர்கள் அபராதத் தொகையை நீதிமன்றத்தில் செலுத்தினர். | இல்லை. | .. |
| 9 நாத்திகம் .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும் 16—6—1969 நாளிட்ட நாத்திகம் தமிழ் நாளிதழில் சென்னை காவல் துறை கமிஷனரை இழிவுபடுத்தும் வகையில் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டது—நடவடிக்கை. | சென்னை செஷன்ஸ் மன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு பின்னர் திரும்பப் பெறப்பட்டது. | இல்லை. | .. |

| தொடர் எண்ணும், நாளிதழின் பெயரும். (1) | வழக்கின் கருப்பொருள். (2) | வழக்கின் முடிவு. (3) | மேல் முறையீடு எதுவும் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருப்பின் அதன் முடிவு. (4) | குறிப்புக்கள். (5) |
|---|---|---|---|---|
| 10 பிராட்வே டைம்ஸ் | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், 20—6—1969 நாளிட்ட "பிராட்வே டைம்ஸ்" ஒழுக்கக் கண்காணிப்பு கமிஷனரை இழிவுபடுத்தும் வகையில் ஆட்சேபகரமான கட்டுரை வெளியிட்டது. | சென்னை செஷன்ஸ் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு பின்னர் திரும்பப் பெறப்பட்டது. | .. | .. |
| 11 சர்வாதிகாரி .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், 29—3—1970 நாளிட்ட சர்வாதிகாரி தமிழ் வார இதழில் ஆட்சேபகரமான செய்தி வெளியிடப்பட்டது. | .. | .. | வழக்கு திரும்பப் பெறப்பட்டது. |
| 12 சர்வாதிகாரி .. | செய்தித்தாள்களும், பத்திரிகைகளும், 31—5—1970 நாளிட்ட சர்வாதிகாரி தமிழ் வார இதழில் "வீராணம் திட்டத்தில் ஒரு கோடி கொள்ளை" என்ற தலைப்பின் கீழ் ஆட்சேபகரமான கட்டுரை வெளியிடப்பட்டது—நடவடிக்கை. | குற்றம் சாட்டப்பட்ட குமாரசாமி, T. T. அரசு ஆகியோருக்கு தலா ஒரு வருடம், ஆறு மாதம் கடுமையான சிறைத் தண்டனை விதித்து சென்னை செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார். | .. | .. |



# APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 10 on page 9]

(அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்தில் 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் நாளன்று நடந்த மேற்கு இராமநாதபுரம் அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில், மதுரையில், கால்நடை மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தும்படி தமிழ்நாடு அரசைக் கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அத்தீர்மானத்தை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் சென்னை, கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநருக்கு அனுப்பி மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரியை நிறுவ அரசுக்கு பரிந்துரை அனுப்புமாறும் கேட்டுள்ளார்.

சென்னை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் இத்தீர்மானத்தை கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆய்வு இயக்குநருக்கு அனுப்பித்து அவரது குறிப்புரையை வேண்டினர்.

கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் கீழ்கண்ட குறிப்புரையை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் அனுப்பினர் :—

"மதுரையில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியை துவக்குவது பற்றி பரிசீலிக்கப்பட்டது. தற்போது சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் மூலம் வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் தேவைக்கு மேற்பட்டதாக உள்ளது. ஆகவே இதுவரை இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கக் கூடாது என்றே ஒரே மாதிரியான நிலையை அரசுக்கு இக் கல்லூரி எடுத்துக் கூறி வந்துள்ளது. இம்மாநிலத்தில் கால்நடை மருத்துவர்களைப் பொறுத்தவரையில் வேலையில்லாத் திண்டாட்டம் மற்ற மாநிலங்களான ஆந்திரம், பீகார், ஒரிஸ்ஸா போன்றில்லாமல் பெருமைப்படத்தக்க நிலையில் இருந்து வருகிறது. இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகளையுடைய ஆந்திரம், மத்திய பிரதேசம், பீகார் மாநிலங்களில் மாணவர்கள் மிகக் குறைந்த அளவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

"இம்மாநிலத்தை பொறுத்தவரையில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்குவதால் அடுத்த சில வருடங்களில் எவ்விதமான வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்படாதென்றாலும் புதிய கல்லூரியிலிருந்து மாணவர்கள் வெளியேற ஆரம்பித்துவிட்டால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டிய பிரச்னையைச் சமாளிக்க வேண்டியிருக்கும்."

"இக்கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைத்து புதிய கால்நடை மருத்துவக் கல்லூரியில் மீதியைச் சேர்த்துக் கல்வி புகட்டினாலும்கூட வேலை வாய்ப்பில் உள்ள கடும் போட்டியினால் இக்கல்லூரிப் பட்டதாரிகளே பெரிதும் விரும்பப்படுவார்கள். காரணம் புதிய கல்லூரிக்குத் தேவையான வசதிகள் எல்லாம் ஆரம்பக்காலத்தில் போதுமானதாக இருக்க இயலாது. அவ்வசதிகளையெல்லாம் பெற பத்து ஆண்டுகளுக்கு மேலாகும். ஆகவே அதுவரை புதிய கல்லூரியிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளின் தரம் இரண்டாந்தரமானதாகவே இருக்கும்."

[24th January 1972

"மேற்கூறிய காரணங்களால் மதுரையில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கச் சாதகமான பரிந்துரையை அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆய்வுத்துறை இயக்குநர் அளித்த மேற்கண்ட குறிப்புரையைச் சென்னை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் ஏற்று அக்கடித நகலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அனுப்பியுள்ளார். ஆகையால் தற்போது மதுரையில் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தும் எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.

## APPENDIX III.

[*Vide* answer to Starred Question No. 12 on page 12]

(அ) 715.

(இ) (i (1) பொறிப்பகுதி பொருத்துபவர்.

(2) கடைசல் பிடிப்பவர்.

(3) இயந்திரவேலையாள் (மில்லர்).

(4) இயந்திர வேலையாள் (அரைக்கும் இயந்திரம்).

(5) இயந்திர வேலையாள் (உருவாக்கும் இயந்திரம், துவாரம் போடும் இயந்திரம், ப்ளேனர்).

(6) கம்மியர் (கருவிகள்).

(7) மாதிரியமைப்புச் செய்பவர்.

(8) அச்சு வார்ப்பவர்.

(9) கருமான்.

(10) உலோகத்தகடு வேலையாள்.

(11) குழாய் பொருத்துபவர்.

(12) பற்றவைப்பவர் (காற்றைச் செலுத்திப் பற்றவைத்தல், மின் சக்தியினால் பற்றவைத்தல்).

(13) மின்சாரப் பணியாள்.

(14) கம்மியாள்.

(15) தச்சர்.

(16) ஆலை அமைப்புத் திட்டமிடுபவர்/கம்மியர்/பெறுதல்.

(17) கருவிகள், வார்ப்பு அச்சு தயாரிப்பவர்.

(18 கம்மியர் (குளிர் பதனம், தட்பவெப்ப நிலையைக் கட்டுப் படுத்துதல்).

(19) கம்மியர் (மோட்டார் வண்டி).

(20) கம்மியர் (டீசல்).



24th January 1972]

(21) கம்மியர் (மண் அகற்றும் இயந்திரம்).

(22) கொதிகலன் வேலை உதவியாளர்.

(23) கம்மியர், (இரசாயன உற்பத்தி இயந்திரங்கள் பழுது பார்த்தல்/நிர்வகித்தல்).

(24) கம்மியர் (பஞ்சாலை இயந்திரங்கள்).

(25) நெசவாளர்.

(26) கையால் அச்சுக்கோப்பவர்.

(27) வரி அச்சு இயந்திரம் இயக்குபவர்.

(28) அச்சு எழுத்து இயந்திர வேலையாள்.

(29) வண்ணப்பட அச்சுக்களைத் திருத்துபவர்.

(30) அச்சுப்படிவங்கள் செதுக்குபவர்.

(31) தனி எழுத்து வார்ப்பவர்.

(32) புத்தகம் கட்டுபவர்.

(இ) (ii) (1) அசோக் லேலண்டு லிமிடெட், சென்னை.

(2) இந்தியா பிஸ்டன்ஸ் லிமிடெட், சென்னை.

(3)பெஸ்ட் அண்ட் கட்பெனி (பி), லிமிடெட் (பம்ப்), சென்னை.

(4) பின்னி லிமிடெட் (பி அண்ட் சி மில்ஸ்), சென்னை.

(5) கார்பொரண்டம் யூனிவர்சல்ஸ் லிமிடெட், சென்னை.

(6) இந்தியா போர்ஜ் அண்ட் ட்ராப் ஸ்டாம்பிங்ஸ் லிமிடெட், சென்னை.

(7) கே.ஸி.பி. லிமிடெட், சென்னை.

(8) ஸிம்ப்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.

(9) லூகாஸ்-டி.வி.எஸ். லி'மிடெட், சென்னை.

(10) டான்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை

(11) டி.ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, சென்னை-53.

(12) டஃபே லிமிடெட், சென்னை.

(13) சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ், வடலூர்.

(14) அடிசன் அண்ட் கம்பெனி லிமிடெட், சென்னை-2.

(15) டான்சி மெஷின் ஷாப், சென்னை-32.

(16) இன்ஜின் வால்வ்ஸ் லிமிடெட், சென்னை-16.

(17) பின்னி லிமிடெட், சென்னை-61.

(18) தேவி சினி புரொஜக்டர் கம்பெனி லிமிடெட், சென்னை-32

(19) டான்சி டை காஸ்டிங்ஸ், சென்னை-32.

(20) என்.டி.டி.எப். டூல் ரூம், வேலூர்.

(21) டான்லப், இந்தியா, லிமிடெட், சென்னை-53.

(22) என்பீல்ட், இந்தியா, லிமிடெட், சென்னை-19.

(23) சுந்தரம் கிளேடன், லிமிடெட், சென்னை-50.

[24th January 1972

(24) ராயலா கார்ப்பரேஷன் (பி), லிமிடெட், சென்னை-32.

(25) டூல் ரூம் ஷாப், சென்னை-58.

(26) டி.ஐ. டைமண்ட் செயின் லிமிடெட், சென்னை-53.

(27) டான்சி பவுண்டரி, சென்னை-32.

(28) இ.ஐ.டி. பாரி லிமிடெட். ராணிப்பேட்டை.

(29) மாடர்ன் வுட்கிராப்ட்ஸ், சென்னை-3.

(30) டான்சி பர்னிசர் ஒர்க்ஸ், சென்னை-32.

(31) டான்சி எலெக்டிரிகல் ஒர்க்ஸ், சென்னை-32.

(32) ஹைவலம் இன்டஸ்ட்ரிஸ், சென்னை-32.

(33) சேதுராம் தியாகராஜன் கம்பெனி, சென்னை-2.

(34) வெஸ்டர்ன், இந்தியா, மேட்ச் கம்பெனி, சென்னை-18.

(35) டி.எஸ்.டிடி., அயனாவரம் டிப்போ, சென்னை-23.

(35) டி.எஸ்.டி.டி., அயனாவரம் டிப்போ, சென்னை-23.

(37) யூனியன் சர்வீஸ் (பி), லிமிடெட், சென்னை-2.

(38) டி.எஸ்.டி.டி. சென்ட்ரல் டிப்போ, சென்னை-2.

(39) டி.எஸ்.டி.டி. படுலாஸ் ரோடு டிப்போ, சென்னை-2.

(40) சென்ட்ரல் ஒர்க்ஷாப், சென்னை-35.

(41) ஹைவேஸ் அண்ட் ரூரல் ஒர்க்ஸ், சென்னை-25.

(42) லார்சன் அண்ட் டூப்ரோ லிமிடெட், சென்னை-2.

(43) ஸிப் இண்டஸ்டிரிஸ் (பி), லிமிடெட், சென்னை.

(44) பிரேக்ஸ், இண்டியா, லிமிடெட், சென்னை-50.

(45) இ.ஐ.டி. பாரி லிமிடெட், சென்னை-57.

(46) மார்ஷல் அண்ட் சன்ஸ், சென்னை-58.

(47) புரொடக்டிவிடி எலெமென்ட்ஸ், சென்னை-58.

(48) ட்யூப் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா, சென்னை-11.

(49) ஆர்ம்செஸ், இன்ஜினியர்ஸ் (பி), லிமிடெட், சென்னை.

(50) டி.ஐ. மில்ஸ் லிமிடெட், சென்னை-53.

(51) சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ், சென்னை.

(52) ரெஃப்ரிஜரேஷன் அண்ட் ஹோம் அப்ளையர்ஸ், சென்னை.

(53) ரிச்சர்ட்சன் அண்ட் குருடாஸ் லிமிடெட், சென்னை.

(54) ஸ்பென்சர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.

(55) வோல்டாஸ் லிமிடெட், சென்னை.

(56) ஷா வாலேஸ் அண்ட் கம்பெனி, சென்னை.

(57) யூனிகார்ன் (பி), லிமிடெட், சென்னை-16.

(58) ஈஸ்வரன் அண்ட் சன்ஸ் (பி), லிமிடெட், சென்னை-19.

(59) டையோசிஸன் பிரஸ், சென்னை-7.

(60) ஆசியன் பிரின்டர்ஸ், சென்னை-14.



24th January 1972]

(61) சிடி பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை-14.

(62) ஜுபிடர் பிரஸ் (பி), லிமிடெட், சென்னை-18.

(63) கிரிதர் ஆரிட் பிரிண்டர்ஸ், சென்னை-1.

(64) தி காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.

(65) இந்தியன் எக்ஸ்பிரஸ் (மதுரை), லிமிடெட், சென்னை.

(66) மதுரா மில்ஸ் லிமிடெட், அம்பாசமுத்திரம்.

(67) மதுரா மில்ஸ் லிமிடெட், தூத்துக்குடி.

(68) தாரங்கதாரா கெமிகல்ஸ், சாஹூபுரம்.

(69) தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை டிப்போ, நாகர்கோவில்.

(70) இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தாழையூத்து.

(71) டான்சி பவுண்டரி, பேட்டை.

(72) டான்சி பர்னிச்சர் ஒர்க்ஸ், பத்தமடை.

(73) ஏ.ஆர்.ஏ.எஸ். அண்ட் பி.வி.பி.வி. சன்ஸ், பாளையங்கோட்டை.

(74) டி.வி.எஸ். அண்ட் சன்ஸ் (பி), லிமிடெட், திருநெல்வேலி.

(75) டி.வி.எஸ். அண்ட் சன்ஸ் (பி), லிமிடெட், பாளையங்கோட்டை.

(76) லேன் ஆடோமொபைல்ஸ், திருநெல்வேலி.

(77) பி.எஸ்.ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட், கோவை.

(78) இந்தியன் ரெஃப்ரிஜரேஷன் லிமிடெட், கோவை.

(79) பர்ன் அண்ட் கம்பெனி லிமிடெட், சேலம்.

(80) எக்சல் இண்டஸ்டிரீஸ், கோவை.

(81) ராஜு நாயுடு அண்ட் கம்பெனி, கோவை.

(82) சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ், ஈரோடு.

(83) தி ஏ.ஸி.ஸி. லிமிடெட், மதுக்கரை.

(84) டான்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கிருஷ்ணகிரி.

(85) தி கலா இன்டஸ்டிரீஸ், கோவை.

(86) கே.என்.டி. ரூல்ஸ் அண்ட் எகிப்மெண்ட்ஸ், கோவை

(87) லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ், கோவை.

(88) எஸ். ஆர். எம். வி. இன்டஸ்டிரியல் செக்ஷன், கோவை.

(89) நீடில் இன்டஸ்டிரீஸ் லிமிடெட், கேட்டி.

(90) மேட்டூர் கெமிகல்ஸ் இன்டஸ்டிரீஸ், மேட்டூர் அணை.

(91) ராமு பவுண்டரி, கோவை.

(92) டி.பி.எப். (பி), லிமிடெட், கோவை.

(93) தி மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட், மேட்டூர் அணை.

(94) ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (எஸ்.ஐ), லிமிடெட், கோவை.

(95) டான்சி பர்னிசர் ஒர்க்ஸ் அண்ட் சா மில், பொள்ளாச்சி.

(96) ஸ்ரீவத்ஸா இன்ஜினியரிங் அண்ட் டிரேடிங் கம்பெனி, கோவை.

[24th January 1972

(97) எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கோவை.

(98) ஆனமலைஸ் இன்ஜினியரிங், பொள்ளாச்சி.

(99) டான்சி மெஷின் டூல்ஸ், ஈரோடு.

(100) அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, உடுமலைப்பேட்டை.

(101) ஸ்ரீராஜேந்திர மில்ஸ், சேலம்.

(102) ரீஜெனரல் ஒர்க்ஷாப், சேலம்.

(103) விஜயலக்ஷ்மி மில்ஸ் லிமிடெட், கோவை.

(104) டெக்கான் சுகர்ஸ் அண்ட் அப்காரி, புகளூர்.

(105) செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன், புலியூர்.

(106) சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், சிருமுகை.

(107) தி சவுத் மெட்ராஸ் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன், திருச்சிராப்பள்ளி.

(108) சிம்கோ மீட்டர்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

(109) சிம்ப்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

(110) டான்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கரூர்.

(111) திரு. ஆரூரான் சுகர்ஸ், வடபாதிமங்கலம்.

(112) அக்ரிகல்சுரல் இம்பிளிமெண்ட்ஸ் ஒர்க்ஷாப், திருவாரூர்.

(113) ஐ.எஸ்.ஆர். மில்ஸ், நாகப்பட்டினம்.

(114) டால்மியா சிமெண்ட்ஸ், கல்லக்குடி.

(115) டான்சி பர்னிசர் அண்ட் ஸ்மித்தி ஒர்க்ஸ், மன்னார்குடி.

(116) டான்சி டூல் அண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி.

(117) டி.வி.எஸ். அண்ட் சன்ஸ் (பி), லிமிடெட், புதுக்கோட்டை.

(118) ரீஜினல் ஒர்க்ஷாப், தஞ்சாவூர்.

(119) கும்பகோணம் ஆட்டோ ஒர்க்ஸ் (பி) லிமிடெட், கும்பகோணம்.

(120) முனிசிபல் சென்ட்ரல் ஒர்க்ஷாப், மதுரை.

(121) மதுராமில்ஸ், லிமிடெட், மதுரை.

(122) சிவகாமி மில்ஸ், தேனூர்.

(123) டெக்ஸ்டைல் மில் பார்ட்ஸ் யூனிட், மதுரை.

(124) தியாகேசர் ஆலை, மணப்பாறை.

(125) தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ், தஞ்சை.

(126) ஏ.ஆர்.ஏ.எஸ். அண்ட் பி.வி.பி.வி. நாடார் அண்ட் கம்பெனி, மதுரை.

(127) டி.வி.எஸ். அண்ட் சன்ஸ், மதுரை.

(128) கவர்ன்மெண்ட் ரீஜினல் ஒர்க்ஷாப், மதுரை.

(129) டூல் ரூம் ஷாப், விருதுநகர்.

(130) ஸ்டாண்டர்டு இண்டஸ்டிரீஸ், மதுரை.



24th January 1972]

(131) மதுரா சுகர்ஸ், பாண்டியராஜபுரம்.

(132) காமன் லீஸ் ஷாப், மதுரை.

(133) ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ், மதுரை.

(134) சுந்தரம் இன்டஸ்டிரீஸ், மதுரை.

(135) ஜியார்ஜ் ஓக்ஸ் லிமிடெட், மதுரை.

(136) டி நேபிலி பிரஸ், மதுரை.

(137) செயின்ட் ஜோசப் பிரிண்டிங் பிரஸ், கோவை.

(138) பாண்டியன் ஆடோமொபைல்ஸ், திருநெல்வேலி.

(139) காமன் லீஸ் ஷாப், பேட்டை.

(140) பார்ம் இன்ப்ளிமெண்ட்ஸ் யூனிட், திருச்சி.

(141) ராமன் அண்ட் ராமன் லிமிடெட், கும்பகோணம்.

(142) கோதாரி சுகர்ஸ், காட்டூர்.

(143) இந்துஸ்தான் லீவர்ஸ், திருச்சி.

(144) காவேரி சுகர்ஸ் அண்ட் கெமிகல்ஸ், பேட்டை வாய்த்தலை.

(145) எல்.ஜி.பி. அண்ட் பிரதர், திருச்சி.

(146) காவேரி ஸ்டரக்சுரல்ஸ், திருச்சி.

(147) ஸ்ரீ ராமவிலாஸ் பஸ் சர்வீஸ், குடந்தை.

(148) டூல் ரூம் ஷாப், சென்னை-32.

(149) என்னூர் பவுண்டரீஸ் லிமிடெட், சென்னை.

(150) இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி ஆப் இந்தியா, சென்னை.

(151) ஜெனரல் இன்ஜினியரிங் இன்டஸ்டிரீஸ், சென்னை.

(152) மெடல் பாக்ஸ் கம்பெனி ஆப் இந்தியா, சென்னை.

(153) எஸ்.ஆர்.பி. டூல்ஸ், சென்னை.

(154) சிம்ப்ஸன் அண்ட் கம்பெனி, சென்னை-11.

(155) சாரதா மெஷினரி கார்ப்பரேஷன், சென்னை.

(156) வி.எஸ்.டி. சர்வீஸ் ஸ்டேஷன், சென்னை.

(157) அருணா சுகர்ஸ், பெண்ணாடம்.

(158) கிராம்ப்டன் இன்ஜினியரிங் கம்பெனி, சென்னை.

(159) மோட்டார் வாகன நிர்வாக ஆர்கனைசேஷன், சென்னை.

(160) டி.எஸ்.டி.டி., வடபழனி டிப்போ.

(161) டி.எஸ்.டி.டி., தண்டையார்ப்பேட்டை டிப்போ.

(162) டி.எஸ்.டி.டி., வடக்கு டிப்போ.

(163) இன்ஜினியரிங் எகிப்மெண்ட்ஸ், சென்னை-58.

(164) நேஷனல் எலெக்டிரிகல்ஸ், சென்னை.

(165) ப்ளூ ஸ்டார் இன்ஜினியரிங் லிமிடெட், சென்னை.

(166) காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.

(167) நாதன் பிரஸ், சென்னை.

(168) ஜனதா பிரிண்டிங் அண்ட் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை.

(169) ஹோ அண்ட் கம்பெனி, சென்னை.

(170) ஹிந்தி பிரசார் பிரஸ், சென்னை.

(171) ஐ.எஸ்.எஸ்.டி. பிரஸ், சென்னை.

(172) நியூடன் அண்ட் கம்பெனி, சென்னை.

(173) எம்.எல்.ஜே. பிரஸ், சென்னை.

(174) பார்கர் பிரஸ், சென்னை.

(175) பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸ், சென்னை.

(176) டான்சி போர்ஜிங்ஸ், சென்னை-32.

(177) இ.ஐ.டி. பாரி லிமிடெட், நெல்லிகுப்பம்.

(178) பயனீர், மில்ஸ், கோவை.

(179) மேட்டூர் பேர்ட்ஸல் லிமிடெட் மேட்டூர் அணை.

(180) நேஷனல் கார்பன் கம்பெனி லிமிடெட், சென்னை.

(181) கோத்தாரி டெக்ஸ்டைல்ஸ், கோவை.

(182) ஞானம்பிகா மில்ஸ், கோவை.

(183) மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ், மேட்டூர் அணை.

(184) கோபாலகிருஷ்ண மில்ஸ், கோவை.

(185) டி.பி.எப்ம். டெக்ஸ்டைல்ஸ், கோவை.

(186) குமரன் மில்ஸ், திருப்பூர்.

(187) வட ஆற்காடு கூட்டுறவு நூற்பு ஆலை, ஆம்பூர்.

(188) ஜவஹர் மில்ஸ், சேலம்.

(189) சதர்ன் இன்ஜினியரிங் இன்டஸ்டிரீஸ், கோவை.

(190) சோவா (பி) லிமிடெட், கோவை.

(191) சிம்ப்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட், உதகை.

(192) இந்தியா சிமெண்ட்ஸ், சங்ககிரி.

(193) டான்சி டூல்ஸ், போத்தனூர்.

(194) ப்ளூ மவுண்ட் சுவிட்ச்கியர்ஸ் (பி), லிமிடெட், கோவை.

(195) எல்கி எகிப்மெண்ட்ஸ், கோவை.

(196) வசந்தா மில்ஸ், கோவை.





# APPENDIX IV.

[*Vide* item IV on page 17]

*Address by Thiru Kodardas Kalidas Shah, Governor of Tamil Nadu, to the Members of the Tamil Nadu Legislative Assembly and the Tamil Nadu Legislative Council, assembled together at the Assembly Chamber, Fort St. George, at 11 a.m. on Saturday, the 22nd January* 1972.

Hon'ble Members of the Legislature,

It is my pleasant privilege to welcome you all to this joint session of the Legislature. This is the first occasion on which I am meeting you in a joint session. I greet you most warmly and pledge my support to you in the service of the people of Tamil Nadu.

2. We are meeting at a time when as a nation we can legitimately take pride in fighting for and upholding the principles of democracy and socialism. The heroism, devotion to duty and spirit of sacrifice of our armed forces will continue to inspire generations. Neither superiority in arms nor treacherous moves of the unscrupulous enemy backed by some of the ill-informed powers could help the enemy to succeed in his nefarious designs. Thanks to the valour of our armed forces and the dynamic, sober and astute leadership of Prime Minister Indira Gandhi, our commitment to democracy has been honoured. In the words of Rabindranath Tagore, we are proud to say that the insulted people of this continent have not only asserted their self-respect but also vindicated their honour and strengthened the foundations of democracy. We have proved to the world that our intention at no time was territorial aggrandizement but the survival of peace and democracy in our sub-continent in general and Bangla Desh in particular. On this proud occasion, on my behalf and on behalf of all of you, I salute the memory of those brave men of the armed forces who died so that India may live. I am happy to say that the Government of Tamil Nadu have announced measures and taken steps which will give utmost relief to their dependents who are entitled to every consideration as members of our family.

3. During the last year, millions of families were obliged to take shelter in India on account of the genocide committed by the military regime of Pakistan. The whole country stood as a man to sustain these helpless millions in their time of suffering. At the same time, we note with regret that the international community, paid only lip service to the cause of these people. Continuous threats and provocative postures by West Pakistani military junta made it imperative for us to be prepared for all eventualities. Had it not been for the complete co-operation of the entire people of India, it would have been impossible to find the resources to bear these burdens. Instead of advising the military junta of West Pakistan to respect realities, some of the powers encouraged the mad gamble of this junta which ultimately led to naked aggression against India. I hope they will ere long correct their unjustified

attitude and recognise the reality of Bangla Desh. At the same time. I am confident that I am expressing your sentiments fully when I say that as a nation we are grateful to those countries especially the U.S.S.R., which have stood by us during these troubled and difficult days.

4. The unity of the people in the recent struggle against the foreign invader has been unique and has changed the course of history. I have no doubt that in stepping up economy and in building prosperity the same unity will play a major role. The problems of peace are most important. They will have to be tackled with the same sense of unity of purpose and expedition. I am sure that in our war on poverty, this Government and the Central Government will act with the same spirit of dedication and commitment. This Government's aspirations mirror the desires of the common man. This Government re-dedicates itself to the well-being and uplift of the masses in general and the struggling people in particular.

5. During the year gone by, the State had, a good season on the agricultural front. The rainfall during the south-west monsoon was, by and large, normal excepting in parts of Madras, Chinglepu†, North Arcot, Tiruchirappalli and Nilgiris. During the north-east monsoon, almost all districts received insufficient rains. However, the earlier rainfall and the better distribution of later rains in certain districts have specifically helped our dry land areas. It is our estimate that the production of foodgrains will reach a target of 73 lak tonnes representing an increas of 3.84 per cent over the last year's level of 70.3 lakh tonnes. This compares well with the level of 50.6 lakh tonnes in 1968-69. I need hardly point out that this has been the effect of continued and sustained emphasis on the provision of necessary inputs such as fertilisers, pesticides, better seeds, more credit and better water management. Nearly 44.93 lakhs of acres were covered under high-yielding varieties of paddy in 1970-71. This represents nearly two-thirds of the area under paddy. Our target for 1971-72 is to cover 50 lakhs of acres under high-yielding varieties of paddy. We have also stepped up our emphasis on multiple cropping 12.99 lakh acres were brought under multiple cropping in 1970-71 as against 2.15 lakh acres in 1967-68. During the year, there was a sharp step-up in the demand for fertilisers. In fact, the total consumption of fertilisers has gone up to 1.73 lakh tonnes of Nitrogen, 0.72 lakh tonnes of Phosphorous and 0.51 lakh tonnes of Potassium. We have tried to improve the working of the co-operatives and increase the availability of short and medium term credit from Rs. 31.41 crores in 1966-67 to Rs. 55.00 crores in 1971-72 and the long-term credit from Rs. 2.73 crores in 1966-67 to Rs. 21.00 crores in 1971-72. The revial and renovation of the co-operative movement continue apace.

6. Pursuant to the goal of self-reliance in cotton, we have taken up an intensive programme for expansion of long staple cotton varieties to cover about 2.50 lakh acres. The development of the





Kudumiamalai Agricultural Farm and the establishment of the Agricultural University at Coimbatore are important steps in the field of agricultural education and extension. As the House is aware, we have taken a number of steps to ensure that the small farmers and landless peasants are given adequate attention in the planning process. Small Farmers' Development Agencies and the Marginal Farmers' Development Agencies have started working in the districts of South Arcot, Madurai, Tirunelveli, North Arcot and Salem. Similarly, Dry Farming Projects have been started in Kovilpatti and Kudumiamalai.

7. It is well-known that rural electrification plays an important role in the modernisation of our countryside. In spite of the paucity of financial resources and shortage of raw materials, we have increased the total number of villages electrified from 25,000 by the end of 1966-67 to 48,137 by the end of December 1971. If the present tempo of rural electrification continues, we hope to be able to cover 58,800 villages and hamlets by the end of 1972-73. The number of pumpsets electrified in the State during the last year 1971 was 63,416. The total number of pumpsets electrified in the State would go up from 2.57 lakhs in 1966-67 to 5.74 lakhs by the end of 1971 and by the end of 1972, the total number of pumpsets electrified will be 6.34 lakhs.

8. This Government is aware of the importance of industrialisation of the State. The clearance of naptha as a feed-stock for the project for the manufacture of fertilisers at Tuticorin is an important milestone in our industrial development. The fertiliser project at Tuticorin will cost Rs. 71 crores and is expected to produce 3.52,000 tonnes of ammonia and 5,12,000 tonnes of urea. It will also sustain a Soda Ash-*cum*-Ammonium Chloride Project which is expected to cost roughly Rs. 10 crores. The project for Soda Ash will also be set up by Tamil Nadu Industrial Development Corporation and Southern Petro-Chemical Industries Corporation together. As the House is aware, a linked project which is coming up in Tuticorin is the heavy water project which was initiated with the help of the late Dr. Vikram Sarabhai, the Chairman of the Atomic Energy Commission. It is unfortunate, that a top scientist of the calibre and devotion of Dr. Vikram Sarabhai should have passed away when he was needed most. However, I am confident that this project for manufacture of heavy water will go on stream as scheduled and stand as a living monument to that great Scientist.

9. As a result of the earnest steps taken by this Government and with the assistance of Government of India and financial institutions, an investment of nearly Rs. 100 and odd crores will take place in the Tuticorin area. We are also writing to the Government of India about the urgent necessity to set up an Industrial Refinery at Tuticorin so as to rid the country of dependence on imported naptha. Simultaneously, our request for the establishment of a massive petro-chemical complex at Manali continues to be alidly reiterated. I hope that the Government of India will take an immediate decision on this very important

[24th January 1972

request. This project would enable the employment of a very large number of educated young men and at the same time help to produce adequate quantities of plastics which would incidentally decrease to an extent our reliance on imports of non-ferrous metals.

10. In regard to the Salem Steel Plant, while the Consultants have submitted their report, I regret to say that action on this project continues to be rather slow. While I am aware that there is keen interest at the highest level in the Governmnt of India in pushing through the project, I hope that this interest will be translated into expeditious action at all stages.

11. A number of letters of intent have been received as a result of the incessant efforts made by the Tamil Nadu Industrial Development Corporation during the last few months—thanks to the assistance of the Union Minister for Industrial Development. The latest letter of intent which we have received is for production of 2,100 tonnes of nylon filament yarn. This is proposed to be set up in public sector. Other items covered by letters of intent are :—

B.C.T. powder, Borax and Boric Acid, Calcium Carbide, Potassium Chlorate, Cigarettes, Steering gears and Cigarette tissue. These letters of intent altogether involve a total investment of more than Rs. 21.35 crores. Action has already been taken to establish these industries in the joint sector. As has been announced already, our policy in the field of industry is realistic and we wish to blend private initiative and Governmental control through the establishment of industries in the joint sector. We will consider most earnestly and sympathetically the approach of any entrepreneur inside the country with adequate managerial resources to participate in the expeditious establishment of new industries.

12. I am happy to say that the Southern Structurals Limited which had been revived under the Government management has today been put on a more sound footing and its order books have improved. The Textools Limited which the Government have taken over, has also revived. The Tamil Nadu Textile Corporation is doing well and expects to make a profit of Rs 5.2 lakhs during 1971-72. In respect of six textile mills for which we had sought Government of India's concurrence to take over, we are still awaiting a positive response. The Small Industries Development Corporation which the Government had set up during the last year, is pursuing its policy of provision of scarce raw materials, technical consultancy and hire-purchase facilities for the purchase of machinery, besides construction of worksheds. The State Industries Promotional Corporation of Tamil Nadu has also commenced operations and will be the agency for routing incentives to industries, particularly in backward areas.



24th January 1972]

13. This Government attaches the highest importance to the maintenance of peaceful industrial relations. While I am happy to note that Tamil Nadu has had a record of industrial peace in recent weeks there have been a few unpleasant developments. I hope and trust that the State will soon resume its steady path of peace and harmony in the industrial scene. In this context I wish to reiterate the views expressed by the Chief Minister regarding the imperative need to avert inter-union rivalry and to state that this Government believes in the policy of having one union for each industry. These unions should be led by persons chosen from amongst the workers themselves. Industrial disputes should be settled by mutual discussion and bargaining and not through confrontation and conflict.

14. During the year gone by, Government approached the problem of unemployment from a number of directions. One of the most important steps taken in this direction was the setting up of the Youth corps. The move has been hailed both inside the country and outside as imaginative. Nearly 2,000 youth corps volunteers have been recruited and trained and from the first results that are coming to me, I am confident that they are proving valuable assets to the work of social development in the State. The scheme for giving a loan of Rs. 1,000 to those trained in the Industrial Training Institutes has also been put into operation. With a view to tackling the problem of the educated unemployed, Government propose to utilise the scheme of Government of India for enabling technical entrepreneurs to start new industries. A sum of Rs. 48 lakhs has been allocated this year out of which Rs. 20 lakhs will be set apart for enabling hire-purchase of indigenous machinery, Rs. 7½ lakhs for industrial estates, Rs. 5 lakhs for commercial estates, Rs. 3 lakhs for Technician's co-operatives and Rs. 12.5 lakhs for providing Equity Capital for new industrial enterprises to be started by technically qualified persons. Besides, we have undertaken programmes for giving employment to the rural unskilled labourers through rural works projects. We have been able to secure clearance from the Government of India for an accelerated programme for rural works including the programme in chronically drought affected areas. In the current year alone, the total expenditure on these works will be Rs. 3.91 crores. Another important project which we have initiated is for the development of market complexes including roads in the districts of Thanjavur, Tiruchirappalli and South Arcot at a cost of Rs. 1.5 crores. During the current year, a sum of Rs. 50 lakhs will be spent on the development of roads and market complexes in these districts.

15. Government recognise that planned development creates stresses and strains in the metropolitan areas also. This is partly due to the rush of people from the villages to the city in search of employment. While our attempts continue in the shape of modernising the country side so as to create opportunities for employment outside the metropolitan areas, we have also to tackle the problem of slums within the city. The Slum Clearance Board which we had set up last year has so far spent Rs. 2.80 crores in

building 7,000 tenements and is expected to incur an expenditure of Rs. 3.65 crores this year. We expect to expand its activities by generating its own resources and getting increased assistance from the Government of India. We also hope that the industrial units both in the Central and private sectors who employ large masses of people, will set apart adequate provisions to assist the Slum Clearance Board.

16. We have also prepared a metropolitan development plan for the next twenty years, which takes into account the problem arising from the development of Madras City. The details of this plan have to be integrated with the perspective plan for the State under preparation. The broad strategy is to develop new modes of urban growth and establish new towns around the city of Madras so as to alleviate the pressure on the City. Some of these details are under discussion with Government of India and we hope to initiate positive action on this plan expeditiously.

17. As the House is aware, Government have extended a number of facilities to the Harijans and the Backward Classes. The amounts allocated by the State Government for Harijan Welfare has increased from Rs. 3.59 crores in 1966-67 to Rs. 5.32 crores in 1971-72 notwithstanding the fact that earmarked assistance from the Government of India for these schemes has been stopped with effect from 1969–70. The total provision of funds for the specific benefit of Backward Classes has also expanded from Rs. 0.91 crores in 1966–67 to Rs. 3.03 croers in 1971–72.

18. Due to various features of the national and international economic situation, the price situation has continued to cause anxiety. As mentioned in earlier addresses to this House, and as the House is aware this will depend on the decisions that are taken at the Central level. All that is feasible on our part is to keep the level of food production as high as possible and to ensure that when demand arises there will be a system for controlled distribution of essential commodities which we can bring into action. Government have also taken a decision to establish a separate machinery under the Department of Civil Supplies to secure adequate quantities of foodgrains and other commodities and to establish buffer stocks so as to insulate the market to the extent possible from speculative influences. At the same time, I would like to reiterate on behalf of this Government, the plea that timely dicisions be taken by Government of India to import adequate quantity of industrial raw materials such as cotton and staple fibre, steel and drugs so that the price situation can be kept under control.

19. This Government believes that a co-ordinated price-wage-profit policy should be evolved in consultation with the States so that a realistic wage price structure can be produced. I would like to reiterate the view of this Government that the Centre should constantly keep in mind that its decisions on emoluments of employees have a direct impact on the emoluments of Government





servants. The financial resources of the State Government's are under strain and do not have the same elasticity as those of the Centre.

20. The Administrative Reforms Commission and the State Planning Commission have commenced work. The Administrative Reforms Commission has set up a number of groups to examine the procedures of Government. The Planning Commission has set up a number of Task Forces to look into various aspects of the States economy, and I am confident that the reports of these two bodies will play a vital role in modernising the administration of the State and meet their economic level of development. I am also happy to note that the establishment of the State Planning Commission has been welcomed by experts both inside and outside the Government, as also by the Government of India and that it has been held forth as a model for other States to follow. I am hopeful that it will now be possible to draw up plans also at district level, which will help us particularly to step up the income of the lower-income group and accelerate the pace of economic growth.

21. In earlier meetings, the Union Planning Commission and the State Government were not able to arrive at agreed decisions on the size of the Plan of the State. However, as a result of the discussions held by the Chief Minister with the Central Planning Commission and the Union Finance Minister in December 1971, it has been possible to arrive at certain agreed conclusions on the Plan for 1972–73. It is now expected that the agreed Plan of the State for the current year will be of the order of Rs. 1,15 crores and for 1972–73 it will be Rs. 1,17 crores.

22. You have been aware of the heavy financial burden arising from the repayment of debt to the Government of India. During the Five-Year Plan period, our total repayment to the Government of India comes to nearly Rs. 1,54.9 crores as against the anticipated loan from the Government of India of only Rs. 1,41 crores. This reverse flow of aid from the Centre to the State is one of the primary reasons for the financial stringency facing the State. Taking the year 1971–72 alone, our total repayment has come to a high figure of Rs. 43.03 crores on account of principal and Rs. 21.83 crores on account of interest. This has to be compared with the total Central assistance of Rs. 40.40 crores from the Government of India. The continuance of this imbalance in the flow of resources to the State has been high-lighted by the Chief Minister in his speech to the House while presenting the Interim Budget for 1971–72. I hope and trust that the Central Finance Ministry will set a foot an independent enquiry into the problem of debt burden of the States so that the existing debt is consolidated and that such part of debt as relates to financially unproductive but socially beneficial expenditure be written off as grants or converted into soft loans. This is only fit and proper because the benefits of these investments accrue not only to the State Governments but also to the country as a whole.

[24th January 1972

23. In this short session, while you do not have a heavy agenda of legislation, you have the important Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 coming up for your approval.

24. Hon'ble Members are aware that we have to travel a long way before even the minimum requirements of the entire population can be met. It is only through the combined efforts of all of you that this difficult task can be fulfilled. This House has always upheld the highest norms of democracy and set an example of a disciplined and informed democracy. I am beholden to all of you for your continued co-operation and generous understanding. I have no doubt that you will rededicate yourselves to the task of reconstruction with the same fervour for values and welfare of our people and vie with one another in upholding the noble traditions of this House. May I convey my best wishes for the success of your efforts ?

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Tuesday, the 25th January 1972.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I. FELICITATIONS TO THE HON. THE MINISTER FOR EDUCATION AND LOCAL ADMINISTRATION ON THE CONFERMENT OF THE DOCTORATE DEGREE ON HIM BY THE MADURAI UNIVERSITY.

*மிஸ்டர் சேர்மன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குச் சென்ற 23—1—1972 ஞாயிறு மதுரைப் பல்கலைக் கழகத்தில் பாராட்டளித்த டாக்டர் பட்டத்திற்காக இம்மாமன்றம் தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. (கை தட்டல்) நாவலர் அவர்களே, நீங்கள் தமிழுக்காகவும், தமிழர்க்காகவும், செய்து கொண்டிருக்கின்ற இலக்கிய சேவைக்காக, தமிழ் ஆய்வதற்காக, தமிழின் மேன்மையை உலகம் அறிந்து தமிழ் மொழி தமிழர்க்கே அல்லாது எங்களுக்கும் சொந்தம் என பிற நாட்டார் போற்றி வளர்ப்பதற்குக் காரணமாயிருந்த சங்கம் அமைத்த மதுரையில், அதை ஒரு காலத்தில் ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரையே தாங்கி, இருபதாம் நூற்றுண்டின் நெடுஞ்செழியன் தங்களுக்கு பட்டமளித்து, தக்கோரைச் சிறப்பிப்பது தமிழரின் கடமை என்ற முடிவில் தங்களைப் பாராட்டியிருக்கிறது.

தமிழகத்தின் கல்வி அமைச்சர் என்பதால் மட்டுமே அல்லாமல் சுமார் முப்பது ஆண்டுகளாக தாங்கள் இலக்கியத்திற்குச் செய்த சேவையை, மேடைகளில் ஒரு மொழியின் தேவை, சிறப்பு இயல்பு என்பவைகளை ஆயிரக்கணக்கான ஆதாரங்களைக் காட்டி ஆற்றிய பேருரையால் உங்களைத் தமிழகமும் அதன் அறிவாலயங்களும் மறக்கவில்லை, மறக்காது என்பதையே நீங்கள் பெற்ற பட்டம் காட்டுகிறது. அந்த வகையில் நீங்கள் பெற்ற சிறப்பு எங்களுடையது என எண்ணி இம்மாமன்றம் நீங்கள் நீடூழி வாழவும், உங்கள் அரசியல் இலக்கியப் பணி மேன்மேலும் சிறக்கவும் பாராட்டுகிறது. (கை தட்டல்).

## II. QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Clash between the Students and the Workers of the State Transport Department.*

*16 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM AND THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether it is a fact that there was a clash between the students and the workers of the State Transport Department at Anna Nagar, Madras, on 17th August 1971; and

(b) if so, the details thereof?

[25th January 1972

### மாணவர்களுக்கும் அரசு பேருந்து தொழிலாளர்களுக்கும் கை கலப்பு

**திரு. பி. திருஞானசம்பந்தம் :**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை அண்ணா நகரில் மாணவர்களுக்கும் அரசு பேருந்து தொழிலாளர்களுக்கும் 17—8—1971-ஆம் நாள் கை கலப்பு ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) சென்னை, அண்ணா நகரின் அருகிலுள்ள கந்தசாமி நாயுடு கல்லூரியைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கும், அரசுப் போக்குவரத்துப் பேருந்து ஒன்றில் பயணித்துணை வலவர் ஆகியோருக்கும் இடையே 16—8—1971-ல் தகராறு நடந்தது. இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து அடுத்த நாள், அதாவது 17—8—1971-ல் கந்தசாமி நாயுடு கல்லூரி முன்பு அரசுப் பேருந்து நின்றபோது அந்தப்பேருந்தின் மீது கற்களை எறிந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் வலவர் மற்றும் பயணி ஒருவர் ஆகியோர் காயமடைந்தனர். பேருந்துக்கும் சேதம் ஏற்பட்டது. பேருந்து சேருமிடத்திற்கருகில் இருந்த அரசு போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள் ஆரவாரம் செய்து கொண்டு அங்கிருந்த மாணவர்களைத் துரத்திச் சென்றதாகவும் கல்லூரி வளவுக்குள் நுழைந்து கற்களை எறிந்ததாகவும் கூறப்பட்டது. சில மாணவர்கள் காயமடைந்தனர். கல்லூரிக் கட்டிடத்தின் சாளரக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. கல்லூரி முதல்வர் வேண்டிக்கொண்டதன் மேல் பேருந்து சேருமிடத்திற்குப் பேருந்துப் பணியாளர்கள் பிறகு திரும்பிச் சென்றார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அடிக்கடி இப்படிப்பட்ட கை கலப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? சுமார் ஐந்தாண்டுகளில் எத்தனை முறை இந்தக் கை கலப்புகள் ஏற்பட்டிருக்கும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காரணம், அவர்களுக்குள்ளே பொறுமை இன்மைதான். எத்தனை கை கலப்புகள் ஏற்பட்டன என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. அந்த விவரங்களை ஆராய்ந்துகொண்டிருப்பதும் அவசியமில்லை.



25th January 1972]

### " Star " Hotels.

* 17. Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether " Star " Hotels in Madras City have been permitted to serve liquor to customers ; and

(b) if so, the details thereof?

### ஸ்டார் ஹோட்டல்கள்

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகரிலுள்ள " ஸ்டார் " ஹோட்டல்களுக்கு வருபவர்களுக்கு மது வழங்க அவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் ரூ. 10,000 கட்டணம் செலுத்துவதன் பேரில் " நட்சத்திர " ஓட்டல்களுக்கு உரிமம் வழங்கப்படுகின்றது. இந்த உரிமத்தின் கீழ், மேற்படி ஓட்டல்களில் தங்கியிருப்பவர்களுக்கு மது வழங்குவதற்காக அல்லது அவர்கள் அந்த ஓட்டல்களில் உள்ள தங்களது சொந்த அறைகளுக்கு எடுத்துச் செல்வதற்காக அல்லது அந்த ஓட்டல்களில் வழக்கமாகத் தங்கியிருப்பவர்கள், ஓட்டல் வளவினுள் இது காரியத்துக்காக உரிம அதிகாரியினால் ஏற்பளிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் மது அருந்துவதற்காக மேற்படி ஓட்டல்களில் மது வைத்திருக்க அனுமதிக்கப்படுகின்றது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** சென்னை நகரத்தில் ஸ்டார் ஓட்டல்கள் எத்தனை இருக்கின்றன? ஸ்டார் ஓட்டல் என்றால் என்ன? ஸ்டார் ஓட்டல்களின் பெயர்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஸ்டார் ஓட்டல் என்றால் நட்சத்திர ஓட்டல் என்று பெயர். (சிரிப்பு)

நண்பர் ஜானிபாய் எதிர்பார்ப்பது போல, நட்சத்திர ஓட்டல் என்றால் ஸ்டார்கள் இருக்கிற ஓட்டல் அல்ல. அங்குள்ள வசதிகளைப் பொறுத்துக் குறிப்பிடுவதாகும். சாப்பிடும் அறைகள். நீச்சல் குளம், மாநாடுகள் போன்ற அப்படிப்பட்ட கூட்டங்கள் நடப்பதற்கான அறைகள் .நடனம் நடத்துவதற்கான இடவசதி, பூங்கா வசதி, ஏர்-கண்டிஷன் ரூம், மாடி அடுக்கு அறைகள் இவையெல்லாம் கணக்கிடப்பட்டு அவற்றை ஸ்டார் ஓட்டல் என்று நிர்ணயிக்கப்படுகிறது. அதில் 5 ஸ்டார் ஓட்டல் தான் புகழ் பெற்றதாகவும் பெருமைக்குரியதாகவும் கருதப்படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில். 5 ஸ்டார் ஓட்டல் எதுவும் இல்லை. 3 ஸ்டார் ஓட்டல்கள்தான் இருக்கின்றன.

சென்னையில் ஓட்டல் இம்பீரியல், ஓட்டல் ஓஷியானிக், ஓட்டல் அசோகா, ஓட்டல் கிளாரிட்ஜ், ஓட்டல், சவேரா, ஓட்டல் விக்டோரியா, ஓட்டல் அருண், குவீன்ஸ் ஓட்டல், ஓட்டல் கணேஷ் ஆகியவை அந்த ஸ்டார் ஓட்டல்களாக கருதப்படுகின்றன.

### Hippies

* 18. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to ban the movement of hippies in Tamil Nadu ; and

(*b*) whether the Government realise that the culture of Tamil Nadu is affected due to the movement of hippies?

### ஹிப்பிகள்

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாட்டில் ஹிப்பிகள் நடமாடுவதை தடை செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) அவர்கள் தமிழ் நாட்டில் நடமாடுவதால் தமிழ் நாட்டின் கலாச்சாரம் பாதிக்கப்படுவதாக அரசாங்கம் உணர்கின்றதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) இல்லை.

(இ) இல்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஹிப்பிகள் என்ற பெயர் எப்படி வந்தது? விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட உருவங்கள் கொண்டவர்களை நாம் ஹிப்பிகள் என்று அழைக்கிறோம். ஹிப்பிகள் என்று தனி இனமோ ஜாதியோ இது வரையில் இல்லை.

THIRU A. R. DAMODARAN : The cult of 'hippidom' has now extended to Indian children also. May I know whether the answer relates to foreign hippies or also to Indian hippies?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த பதில் அந்நிய ஹிப்பிகளைப் பொறுத்துத்தான் அளிக்கப்பட்டது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அடையாறில் உள்ள எலியட் கடற்கரையில் சென்னைக்கு வருகிற ஹிப்பிகளில் பலர் வந்து ஆடையின்றி குளிப்பதாகவும் அதன் காரணமாக அங்குச் செல்வோர் அருவருப்பு அடைவதாகவும் சொல்லப்படுகிறதே, அதுபற்றி அரசிற்குத் தெரியுமா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இருந்தாலும் அதைப் பற்றி ஒரு சிறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இதுவரை, இந்த மாநிலத்திற்குள் வந்துள்ள ஹிப்பிகள் இங்கு சமூக, சட்டம்--ஒழுங்குப் பிரச்னைகள் எதனையும் தோற்றுவிக்கவில்லை. ஹிப்பிபோல் தோற்றமளித்த ஐரிஷ் நாட்டவரான ஜேன் காலின் ஸ்டேஸி ஹால் என்பவர் 27—7—71 அன்று சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கக் காணப்பட்டார். தமிழ் நாடு பிச்சைக்காரர்கள் சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் காவலர் அவரைக் கைது செய்தனர். இருப்பினும், பின்னர் அவர் தமிழ் நாடு பிச்சைக்காரர்கள் நன்னடத்தைச் சட்டத்தின் 9-வது பிரிவின் கீழ் விடுவிக்கப்பட்டார். இந்த ஒரேயொரு நிகழ்ச்சியைத் தவிர, ஹிப்பிகள் நடவடிக்கை எதுவும் தமிழ் நாட்டின் பண்பாட்டைப் பாதித்ததாக அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அளவுக்கு ஹிப்பிகள் பிரச்னை மிகக் கடுமையாக இல்லாதிருப்பினும் கூட, ஹிப்பிகளின் நடமாட்டங்கள், நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருமாறும், அவர்கள் மயக்கமூட்டும் போதைப் பொருள்களை விற்பது, தரக்குறைவாக நடந்துகொள்வது, நிலையின்றி அங்குமிங்கும் திரிவது, பிச்சையெடுப்பது முதலியவற்றில் ஈடுபட்டால், அதனை மிகக் கடுமையாக எடுத்துக் கொள்ளுமாறும், தொடர்புடைய உள்ளூர் அதிகார மன்றங்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகை வெளிநாட்டவர்கள் தவறான செயலில் ஈடுபட்டனர் என நீதிமன்றத்தில் நிரூபிக்கப் போதுமான சாட்சியம் கிடைக்காவிட்டாலும் கூட அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட வேண்டுமென்றும், இந்த வகை வெளி நாட்டவர்கள், அவர்கள் நுழைவிசைவில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கும் அதிகமாக இந்தியாவில் தங்கக் கால நீட்டிப்பு அளிக்கப்படக் கூடாது என்றும், அவர்கள் நுழைவிசைவினைப் பெறுமல், விமானம் மூலம் அல்லது கடல் வழியாக இந்தியாவிற்கு வந்துள்ளவர்களானால், இந்திய நாட்டில் இறங்குவதற்காக அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்ட 21 நாட்களுக்கு மேல் இந்தியாவில் அவர்கள் தங்கக் கால நீட்டிப்பு அளிக்கப்படக் கூடாது என்றும் கூட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

THIRU G. VASANTHA PAI : Will the Government consider, Sir, putting them in the Zoo for a change?

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, ஹிப்பிகள் தாராளமாகச் செலவு செய்துகொண்டிருக்கிறார்களே, அது நம் நாட்டுப் பணமா அல்லது அவர்கள் எங்கிருந்து வருகிறார்களோ அங்கேயிருந்து பணம் வருகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் அங்கிருந்து வரும்போது கொண்டு வருகிறார்கள். சில பேர் கேட்டாலும் தருவார்கள். (சிரிப்பு)

[25th January 1972

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஹிப்பிகளின் அடிப்படை நோக்கம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அடிப்படைக் காலத்திற்குச் செல்வதுதான் அவர்கள் நோக்கம். (சிரிப்பு)

*Nuisance Caused by Vegetable Vendors.*

* 19 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Commissioner of Police, Madras, is aware of the nuisance caused to free flow of traffic by vegetable vendors around the Mada Streets in Mylapore ?

**காய்கறி விற்பவர்களால் இடையூறு**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மயிலை, மாடவீதிகளைச் சுற்றி, காய்கறி விற்பவர்களால் தடங்கலற்ற போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கப்படுகிறது என்பதை சென்னை, காவல் துறைக் கமிஷனர் அறிவாரா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆம்.

*Change of School Hours*

* 20. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to change the School hours ; and

(*b*) if so, the details thereof?

**பள்ளிக்கூட அலுவல் நேரங்களை மாற்றுதல்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக்கூட அலுவல் நேரங்களை மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வகுப்பு நேரங்களை மாற்றுவது நன்மை பயக்கும், என்ற கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நடைமுறையில் இதனை எந்த அளவுக்கு செயல்படுத்த முடியும் என்பதுபற்றி பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டும்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, பல பள்ளிகள் நேரத்தை மாற்றிக் கொண்டு அதைச் செயல்படுத்த முடியாமல் மீண்டும் பழைய நேரத்திற்கே வந்துவிட்டன. ஆகவே பள்ளிகளை



25th January 1972]

வற்புறுத்தாமல் தலைமையாசிரியரின் முடிவுக்கே இத்திட்டத்தை விட்டு விட்டால், அது செயல்படுவதற்குச் சௌகரியமாக இருக்குமென்பதை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பொதுவாக வற்புறுத்தப்படுகிற தன்மை ஏற்படவில்லை. அதுபற்றி ஆணை பிறப்பிக்கப்படவில்லை. கால மாறுதல் ஏற்படுத்துவது நன்மை பயக்கும் என்று ரேன்ஜ் அளவில் துவக்கப் பள்ளிகளில் மற்ற இடங்களிலும் ஏற்படுத்துகிறார்கள் என்று கருதுகிறேன். சிலர் தாமதமாகவே அதற்கு உடன்பட்டு வருகிறார்கள். நன்மை பயக்கும் என்று சில பள்ளிகளிலும் வைத்திருக்கிறார்கள். அதில் நன்மை இருப்பதாகவும் அவர்கள் சொல்கிறார்கள். வைணவக் கல்லூரி, கந்தசாமி கல்லூரி ஆகியவற்றில் காலை 7½ மணிக்குத் துவங்கி 1½ மணிக்கு முடிக்கிறார்கள். பேராசிரியர்கள் அதில் நன்மை இருக்கிறது என்று கருதுகிறார்கள். அதை வற்புறுத்தி இன்ன நேரத்தில்தான் துவங்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இப்படிப்பட்ட நேரம் படிப்புக்கு ஏற்றதாக இருக்குமென்று எடுத்துத் தெரிவிக்கப்பட்டது.

*Madras Zoo*

* 21 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the Government have received any complaint regarding the neglect of animals in the Madras Zoo; and

(*b*) if so, the action taken thereon ?

**சென்னை விலங்குக் காட்சி சாலை**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள விலங்குக் காட்சிச் சாலையில் விலங்குகள் சரிவர கவனிக்கப்படாமலிருப்பது குறித்துப் புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். விலங்கு காட்சி சாலையை வேறு வசதியான இடத்திற்கு மாற்றுவதற்கான யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த விலங்குக் காட்சி சாலையிலுள்ள பல விலங்குகள் நோயுற்ற நிலையில் இருப்பதாகவும் அதைக் கண்காணிப்பதற்கு தனியாக மிருக வைத்தியர் ஒருவர் இல்லை என்றும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

[25th January 1972

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அங்கு விலங்குகளுக்கு ஒருவித நோய் ஏற்பட்டது. அது ஓரளவுக்குத் தணிக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுகிறது. மிருக வைத்தியர் இருக்கிறாரா இல்லையா என்ற குறிப்பு இல்லை, அங்கு 600 விலங்குகளுக்கு மேலாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்குச் சூழ்நிலை ஏற்றதாக இல்லை என்ற காரணத்தால் விரைவில் அதை மாற்ற வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே 21 ஏக்கர் நிலத்தில் 600 விலங்குகள் இப்போது இருக்கின்றன. அதைத் தக்க இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற முறையில் கிண்டிக்கு அருகிலுள்ள பகுதியும் வண்டலூர் பகுதியும் அதற்கேற்ற இடங்களாக ஆலோசிக்கப்பட்டன. கிண்டிக்குப் பக்கத்தில் மாற்றுவதுதான் பொறுத்தமாக இருக்குமென்று தெரிவிக்கப்பட்டு, புது டில்லியிலிருந்து வந்த விலங்கின இயக்குனர் இரண்டு இடங்களையும் பார்வையிட்டுவிட்டு, எந்த இடம் பொருத்தமுள்ளது என்று அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. வந்தால் அந்த இடத்திற்கு விரைவில் மாற்ற வேண்டுமென்று இருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாது. இப்போது விலங்குக்காட்சி சாலை இருக்கிற இடத்தை ரயில்வே துறையினர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தந்தால் லட்சக்கணக்கான ரூபாய் அதற்காக விலை கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு புதிய விலங்குக் காட்சி சாலையை இன்னும் செம்மையாக அமைக்க முடியும் என்ற கருத்து இருக்கிறது. மிருக வைத்தியர் தற்போது அங்கே இருக்கிறாரா இல்லையா என்ற குறிப்பு இல்லை

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** நான் எதிர்பார்த்த கேள்விக்கு அமைச்சர் சூசகமாகப் பதில் சொல்லிவிட்டார்கள். வண்டலூருக்கா கிண்டிக்கா என்பது சந்தேகமாக இருந்தது. வண்டலூர் என்றால் அதை பார்க்கப் போகிறவர்களுக்கு தூரமாக இருக்கும். கிண்டியில் வைத்தால், சென்னைக்கு வருகிறவர்கள் அதைப் பார்ப்பதற்கு சவுகரியமாக இருக்கும். அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கருத்து அறிவிக்கப்பட்டு, கிண்டியில் இருப்பது பொருத்தமாக இருக்குமென்ற கருத்தில்தான் இப்போது ஆராயப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** நம்முடைய சென்னை மாநகராட்சியினால் மிருகக்காட்சி சாலையைச் சரிவர நடத்த முடியவில்லை என்றும் மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல, இதை மாநில அரசே எடுத்து, காட்டு இலாகா மூலமாகவோ, சுற்றுலா இலாகா மூலமாகவோ நடத்துவதற்கு ஏதேனும் அரசிடம் குறிப்பிருக்கிறதா?



25th January 1972]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதில் மாநகராட்சி மன்றத்தின் கருத்தை அறியவேண்டும். அவர்களாகப் பார்த்து இதை விட்டுவிட்டால் அதற்குப் பிறகு காட்டிலாகாவுக்கோ, விலங்கினத் துறைக்கோ விட்டு நடத்தச் செய்யலாம். மாநகராட்சியிலிருந்து கருத்து அறிய வேண்டியிருக்கிறது. பிறகுதான் தக்க முடிவை எடுக்கலாம்.

*National Commission of UNESCO*

* 22. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the help, if any, received from the National Commission of UNESCO for educational reform in the State?

'யுனெஸ்கோ'வின் தேசிய ஆணைக்குழு

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

இம் மாநிலத்தில் கல்விச் சீர்திருத்தத்திற்காக 'யுனெஸ்கோ'வின் தேசிய ஆணைக் குழுவிடமிருந்து உதவி பெற்றிருப்பின் அது யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆரம்பப் பள்ளிகளிலும் நடுத்தரப் பள்ளிகளிலும் அறிவியல் பயிற்சியை வளர்ப்பதற்கு யு.என்.ஐ.சி.ப்-லிருந்து உதவி கிடைத்தது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவர் அவர்களே, இது யுனெஸ்கோ உதவி பற்றியது. இருந்தாலும் அண்மையில் முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது அமெரிக்க நிபுணர்கள் இங்கே கல்விச் சீர்திருத்தத்திற்காக வருகிறார்கள் என்ற செய்தி வந்தது. அதுபற்றி அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் கருத்தின் அடிப்படையில் பரிசீலனை நடந்துகொண்டு வருகிறது. இப்போதைக்கு முடிவாக உதவிகளின் தன்மை அறியப்பட்ட பிறகு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். யுனெஸ்கோ தந்த வகையில் 50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவியல் முறையில் பயிற்சி அளிக்க 100 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடுநிலைப் பள்ளிகளில் 30 தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு பள்ளிக்கு 3 ஆசிரியர்கள் விதம் 90 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

*Elementary School Teachers*

* 23 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether the teachers of the Kanyakumari district have protested about January-February, 1971, to the take over of Elementary Schools by the Panchayat Union; and

(*b*) If so, the reasons therefor and details thereof?

[25th January 1972

### தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளிகளை, ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளுவதற்கு 1971, ஜனவரி-பிப்ரவரி அளவில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்களா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ? அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

### *Director of Public Libraries*

* 24. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the Government have any proposal to appoint a separate Director of Public Libraries in the State; and

(*b*) if so, the details thereof?

### பொது நூலக இயக்குநர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) மாநிலத்தில் உள்ள பொது நூலகங்களுக்காகத் தனியாக இயக்குநர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948, பிரிவு 4-ன்படி தற்பொழுது பள்ளிக் கல்வி இயக்குநரே அலுவலால் தமிழகப் பொது நூலக இயக்குநராகப் பணிபுரிகிறார். அண்மையில் நடந்த நூலக ஆணைக்குழுத் தலைவர்கள், செயலர்கள் மற்றும் மாவட்ட மத்திய நூலகர்கள் மாநாட்டில் நூலகத்துறைக்குத் தனி இயக்குநரை நியமனம் செய்வது குறித்து பரிந்துரை செய்யப்பட்டு இது அரசினரின் பரிசீலனையில் உள்ளது.

### *Pharmacists' Association*

* 25 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Government have received any representation from the Tamil Nadu Government Pharmacists' Association about the 28th January, 1971 ; and

(*b*) if so, the details thereof?

@ Printed as Appendix I on page 148



25th January 1972]

### மருந்து கலப்பவர்கள் சங்கம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஜனவரி 28-ஆம் நாள் வாக்கில் தமிழ்நாடு அரசு மருந்துகலப்பவர்கள் சங்கத்திடமிருந்து சார்புரை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மக்கள் நல்வாழ்வு (மற்றும்) குடும்பநலத் திட்ட இயக்குநருக்கு 17-2-71 அன்று ஒரு மனு கிடைக்கப்பெற்றது. மருந்து கலப்பாளர்களிடமிருந்து கிடைத்தது.

(இ) அம்மனுவில் கண்ட கோரிக்கைகள் வருமாறு :—

(1) சம்பள விகிதத்தை உயர்த்தல்.

(2) பதவி உயர்வுக்கான வாய்ப்புகள்.

(3) குடியிருப்பு வசதிகள் அமைத்தல்.

(4) வாராந்திர விடுப்பு கொடுப்பதற்கு விடுப்பு ஒதுக்கு இடங்கள் ஏற்படுத்தல்.

(5) எழுத்துப்பணி படியினை உயர்த்துதல்.

(6) சங்கக் கட்டிடம் கட்டுவதற்கு சென்னையில் ஒரு இடம் ஒதுக்குதல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே தமிழ்நாடு அரசிலே ஊழியம் செய்கிற மருந்து கலப்பவர்கள் வாராந்திர விடுமுறை வேண்டும் என்ற கோரிக்கையை பல ஆண்டுகளாகவே கூறிக்கொண்டு வருகிறார்கள். இதை அரசு கவனித்து இதில் பெரிய செலவு இல்லாத காரணத்தால், அதை அவர்களுக்கு அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வாராந்திர விடுமுறை அளிப்பது என்பது சில மருத்துவ மனைகளில்தான் இயலக்கூடியதாகும். வேறு பல இடங்களில் விடுமுறை அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக " Creation of leave reserve posts of Pharmacists so that they could be given weekly holidays " என்ற முறையில் 10 நியமனம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மருந்து கலக்கிற தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எல்லா மருந்தகங்களிலும் இருக்கிறார்கள். பத்து இடங்கள் என்றால், எந்த இடம்? மாநிலம் பூராவும் இருக்கிறார்கள். வாரத்திற்கு ஞாயிற்றுக்கிழமை கூட விடுமுறை இல்லை என்ற நிலைமை இருப்பதால், அந்தப் பத்து இடங்கள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

[25th January 1972

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டீச்சிங் ஹாஸ்பிட்டலாக இருக்கிற மருத்துவ மனைகளில் தான் தொடர்ந்து ஏழு நாட்களும் வேலையிருக்கும். வேறு சில மருத்துவ மனைகளில் ஏழு நாட்களும் வேலை இருப்பதில்லை.

*Greater Madras*

* 26. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Government have submitted any **plan for** greater Madras to the Union Planning Commission ; and

(*b*) if so, details thereof?

சென்னைப் பெருநகர்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னைப் பெருநகருக்கான திட்டம் எதையாவது அரசு மத்திய திட்டக் குழுவுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சிக்கான சென்னைப் பெருநகர்த் திட்டம் " 1971-1991 " 20 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றக்கூடியபடி ஒன்று 1971, ஜூன் திங்களில் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக, இருபதாண்டு நீண்டகால முதலீடாக ரூபாய் 938 கோடியும், அடுத்த ஐந்தாண்டுக் காலத்தின் குறுகிய கால முதலீடாக ரூபாய் 185 கோடியும் தேவைப்படுகிறது. வேலை வாய்ப்பு, வீட்டுவசதி, குடிதண்ணீர் வழங்கல், போக்குவரத்துத் தேவைகள், கல்வி சுகாதாரம் பொழுதுபோக்கு வசதிகள் உள்ளிட்ட சமுதாய நலன்கள் போன்ற துறைகளில் சென்னை பெருநகர்ப் பகுதிக்கு குறுகிய கால, நீண்ட காலத்தேவைகளை இத்திட்டம் மதிப்பிட்டதுடன், படிப்படியாக இத்தேவைகளை நிறைவு செய்வதற்கான வழிகளைக் குறித்தும் கருத்துத் தெரிவித்திருக்கிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசிடமிருந்தும் உலக வங்கி போன்ற அனைத்து நாடுகள் நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி வேண்டப்பட்டுள்ளது.

THIRU G. SWAMINATHAN : Sir, I remember a report was submitted by the former Commissioners of the Corporation of Madras, Thiru K. J. M. Shetty and Thiru C. Badrinath, and that report was sent to the Government. I want to know whether that report will be placed on the table of the Legislature so that there may be a discussion. Again, there was a proposal that there should be a Development Authority constituted including the M.L.As and M.L.Cs. May I know whether such a Development Authority, as it is constituted in New Delhi, will also be created in Madras City for the purpose of development of Madras ?



25th January 1972]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட ஆலோசனையைக் கருவாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆலோசனையாகத்தான் இது இருக்கிறது. ஏற்கெனவே இருந்த ஆணையர்கள் தெரிவித்த கருத்தெல்லாம் பின்னர் பல்வேறு பரிசிலனைக்கு ஆளாகி மறுபடியும் ஆராயப்பட்டு இது சம்பந்தமாக, " A team of World Bank officials including Mr. Vestory, Chief Urban Development Division visited Madras in November 1969." என்று அவர்கள் இங்கு வந்திருந்து பல்வேறு ஆலோசனைகளை நடத்தி ஒரு விரிவான திட்டமாக இது கருதப்பட்டு மத்திய அரசு இதற்கு அனுமதி வழங்குவது மட்டுமல்லாமல், வெளியிலிருந்து பொருள் உதவி செய்யக்கூடிய உலக வங்கி போன்ற அமைப்பு இதற்கு உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அடிப்படையில் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், விரிவாக ஆராயப்பட்டு தெரிவிக்கப்பட்டது. இது புறநகர் வளர்ச்சித் திட்டத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகும்.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether there is any proposal to have another Marina in the North Madras area ? I remember that was one of the recommendations of that Committee.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இன்னொரு மெரினா என்று சொல்கிற அளவுக்கு இடவசதி சென்னை நகர ஓரத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அங்குள்ள கடற்கரையைச் சுத்தப்படுத்தவோ, ஒழுங்கு படுத்தவோ வேண்டுமானால் செய்யலாம். அதற்குக் கூட வடக்குப் பகுதி அவ்வளவு பொருத்தமானதாக இன்றைக்கும் இல்லை என்பது சென்று பார்க்கிறவர்களுக்கு நன்றாகத் தெரியும். மக்கள் தொகை தானாகவே பெருகி நெருக்கம் காரணமாக எதிர்காலத்தில் போக்குவரத்து முதலியவை தடைப்படுமானால், அப்படி ஏற்படாத வகையில் நகரத்தின் மையப்பகுதி விளங்குவதற்கும் சென்னை நகரைச் சுற்றிலும் 450 சதுர மைல் அளவுக்குள் சிறு நகரங்களை முன் கூட்டியே முறைப்படுத்தி ஒரு அமைப்புக்கு உட்படுத்தி வளர்ப்பதற்கு வழி செய்வதன் மூலமாக, வளர்ந்தால் இப்படித்தான் வளர வேண்டுமென்ற வழிவகுப்பதன் மூலமாக. சென்னை நகரத்தின் வளர்ச்சிக்கு குந்தகம் இல்லாமல் பாதுகாப்பதுதான் இந்தத் திட்டத்தின் பெரியநோக்கமாகும்.

THIRU A. R. DAMODARAN : Sir, a Plan for Rs. 930 crores has been prepared—obviously a perspective plan—for the next 20 years. How is it, Sir, that we either in the Legislature or even the members of the general public have no idea of such a plan being prepared ? May I request the Hon. Minister to have this information at least published in the magazine of the Tamil Nadu Government so that the general public may discuss this matter and make suggestions?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திட்டமிடுவது என்பதைப் பற்றிய பொதுவான கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தேதியில் திட்டமிடுகிறபொழுது இப்படிப்பட்ட எண்ணத்தோடு என்றுதான் பொருளே தவிர ரூ. 938 கோடி செலவழிக்கப்படுமென்றும் இந்தச் செலவோடு நின்றுவிடுமென்றும் சொல்ல முடியாது. ஒரு வேளை 20 ஆண்டு காலத்தில் என்று மேற்கொள்ளப்படுவதை முடிக்க 30 ஆண்டுக் காலம் கூட ஆகலாம். இப்படிப்பட்ட திட்டத்தினால் எந்த வழியில் முன்னேறுகிறோம், எந்த வகையான அமைப்புக்கு உட்படுகிறோம் என்று தெரியும். மத்திய அரசு ஒப்புக்கொண்டால், 5 ஆண்டுக் காலத்திற்குள் குறுகிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன் கூட்டியே, அது நிறைவேறுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளும்போது, பொது மக்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

### Erskine Hospital, Madurai

*27 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru D. SANTOSHAM) Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether there are facilities for fitting artificial limbs to patients whose limbs are amputated in the Erskine Hospital at Madurai; and

(b) if not, whether there is any proposal to set up a suitable unit at Madurai?

### எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உறுப்புகள் வெட்டியெடுக்கப்பட்ட நோயாளிகட்கு செயற்கை உறுப்புகள் பொருத்துவதற்கு மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் வசதிகள் உள்ளனவா?

(இ) இல்லையெனில் அதற்கான தக்க பிரிவு ஒன்றை மதுரையில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### Rice Smuggling

*28. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the number of donkey impounded in connection with the rice smuggling cases near Tamil Nadu–Kerala border during 1970–71 ?



### அரிசி கடத்தல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1970-71-ஆம் ஆண்டில் தமிழ்நாடு-கேரளா எல்லையில், அரிசி கடத்தல் வழக்குகள் தொடர்பாக பட்டியில் அடைக்கப்பட்ட கழுதைகளின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1970-71ல் தமிழ் நாடு கேரள எல்லைகளுக்கருகே, அரிசி கடத்திய நேர்வுகள் தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் துறையின் உணவுப்பிரிவு அதிகாரிகளால் நூற்று முப்பத்து மூன்று கழுதைகள் பிடிக்கப்பட்டுப் பட்டிகளில் அடைக்கப்பட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்தக் கழுதைகளின் சொந்தக்காரர்கள் பிடிக்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகள்தான் பிடிக்கப்பட்டன. சொந்தக்காரர்கள் பிடிக்கப்படவில்லை. அவற்றின் மேல் ஏற்றி வந்த அரிசியை அரசு பறிமுதல் செய்தது. கழுதைகளைப் பிடித்து பட்டியில் அடைத்து கடைசியில் அபராதம் விதிக்கப்பட்டது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : உணவுப் பொருள்களைத் கள்ளத்தனமாக ஏற்றிக்கொண்டு போகும் பிற வாகனங்களைப் பறிமுதல் செய்வதைப் போல, கழுதைகள் பறிமுதல் செய்யப்பட்டனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகளைப் பிடித்து நீதி மன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தினதும் ரூ. 10 அபராதம் போடப்பட்டு, அதை அவர்கள் கட்டி, கழுதைகளை எடுத்துக் கொண்டு போனதாகத் தெரிகிறது. வேறு தகவல் இல்லை. அங்கத்தினர் சொல்வதைப் போல, கழுதைகளைப் பறிமுதல் செய்து ஏலம் போடலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அபராதம் கட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அபராதம் கட்டிய அந்தச் சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகளைத்தான் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். ஒரு வழக்கில் ரூ. 10-ம் வேறு வழக்கில் ரூ. 40-ம் அபராதம் போட்டிருக்கிறார்கள். பாக்கி இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதாக விவரமிருக்கிறது. அங்கத்தினர் சொல்வதைப் போல, கழுதைகளை மீட்க வருகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். அப்படி எடுக்கும்போது கழுதைகளை நம்மிடத்திலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டால், என்ன செய்வது என்பதுதான் பிரச்னை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அபராதம் செலுத்தும் வரையில் கழுதைகள் என்ன செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகளாக இருந்தாலும் வாயில்லாப் பிராணிகள். அரசாங்கம் அவற்றிற்குத் தீனி போட வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறது.

*Prices of Edible Oils*

*29. Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether the Government are aware of the rise in prices of edible oils in the State; and

(b) if so, the details thereof?

**உட்கொள்ளத்தக்க எண்ணெய்களின் விலை**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் உட்கொள்ளத்தக்க எண்ணெய்களின் விலை உயர்ந்துள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) உணவிற்குப் பயன்படும் எண்ணெய் வகைகளின் விலை இம்மாநிலத்தில் பொதுவாக இறங்குமுகமாகவுள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

*Craft Instructors*

*30. Q.—Thiru M. RAJAH IYER: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) the number of Craft Instructors in Industrial Training Institutes in Tamil Nadu who possess National Apprenticeship Certificates (1961 Act);

(b) the number of such Instructors whose services have not yet been regularised as on date ; and

(c) the reasons therefor?

**கைத் தொழில் ஆசிரியர்கள்.**

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில், தொழிற் பயிற்சிக் கூடங்களில் உள்ள தேசியத் தொழில் பயிலுநர்ச் சான்றிதழ்கள் (1961-ஆம் ஆண்டுச் சட்டம்) பெற்றுள்ள கைத் தொழில் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?



(இ) நாளது தேதியன்றுள்ளபடி, பணி முறைப்படுத்தப்படாத அத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) நாற்பத்தைந்து.

(இ) இருபத்தெட்டு.

(உ) இந்த இருபத்தெட்டு தொழிற்பயிற்சியாசிரியர்களின் கல்வித் தகுதிகள் இப்போதுள்ள விதிகளுக்கிணங்க இல்லையாதலால் அவர்களது பணிகளை முறைப்படுத்த முடியவில்லை. இருந்த போதிலும் வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றதும் அவர்களுக்குச் சாதகமாகத் தொடர்புடைய விதிகளைத் தளர்த்தி அவர்களுடைய பணிகள் முறைப்படுத்தப்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த தேசிய தொழில் பயிலுநர் சான்றிதழ் பெற்றவர்களுக்கு விசேஷச் சலுகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். அப்படியிருக்க, இவர்களை நியமனம் செய்வதில் என் காலதாமதம் ஏற்பட வேண்டும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்தப் போஸ்டுக்குள்ள தகுதியிலிருந்து வேறுபட்ட தகுதி பெற்றிருக்கிறார்கள் இவர்கள். அதாவது, நேஷனல் அப்பிரெண்டிஸ் சேர்டிபிகேட். அவசரத் தேவைக்காக 1966-67-ல் 45 பேர்களைப் போட்டார்கள். இருக்கிற விதிகளைத் தளர்த்தித்தான் அவர்களை 'ரெகுலரைஸ்' செய்ய முடியும். அப்படி 17 பேர்களுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. மீதிப் பேர்களுக்கு 'ப்ரபோஸல்' அனுப்பும்படி, டைரக்டர் ஆஃப் எம்ப்ளாய்மென்ட் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

*Tamil Nadu Cement Factory, Alankulam*

*31. Q.—Thiru R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any preference in providing employment is given to those farmers who have lost their lands due to acquisition of the lands for the Tamil Nadu Cement Factory, Alankulam; and

(b) if so, the number of such persons recruited so far?

**தமிழ்நாடு சிமின்ட் தொழிற்சாலை, ஆலங்குளம்.**

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஆலங்குளம் தமிழ்நாடு சிமின்ட் தொழிற்சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்த காரணத்தால் நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு அத்தொழிற்சாலையில் வேலையளிப்பதில் சலுகை காட்டப்படுகிறதா?

[25th January 1972

(இ) ஆமெனில், இதுவரை எத்தனை பேர் அம்மாதிரி வேலையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) 172 பேர்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, அண்மையில் வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள் நிலங்கள் கொடுத்தவர்களுடைய குடும்பங்களிலிருந்து எடுக்கப்படாமல், வெகுதூரத்திலிருந்து வந்தவர்கள் எடுக்கப்பட்டிருப்பதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படி ஏதாவது பிரச்சாரம் நடைபெறுகிறதா என்று எனக்குத் தெரியாது. என்னிடமுள்ள தகவலின்படி 933 பேர்களை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். அண்மையில் மஸ்தூர் என்ற முறையில் 543 பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 172 பேர்கள் நிலத்தை விட்டுக் கொடுத்தவர்கள். வேலை வாய்ப்புகள் வரும்போது நிலத்தை இழந்தவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது, முதலிடம் ஷெட்யூல்டு காஸ்ட், ஷெட்யூல்டு டிரைப், இரண்டாவது இடம் லாண்ட்லெஸ் அக்ரிகல்சுரல் லேபரர் என்று போட்டு அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

*Ground water Exploration*

*32. *Q.*—Thiru M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the Union Government have undertaken the ground water exploration in Thanjavur District: and

(*b*) if so, the details thereof.

*நில நீர் ஆய்வுப் பணி*

**திரு. எம். ஆறுமுகசாமி:** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மத்திய அரசு நிலநீர் ஆய்வுப் பணி மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) சோதனைக்குழாய் கிணறு அமைப்பு என்று அழைக்கப்பட்ட இந்திய அரசின் விவசாயத்துறையிலுள்ள மத்திய நிலநீர் வாரியம் துளையிடும் வேலைகளை இரு கட்டங்களாக மேற்கொண்டு, முதல் கட்டம் 1957-58-லும் இரண்டாவது கட்டம் 1969-71-லும்மாக தஞ்சை மாவட்டத்தில் நடத்தி இருக்கிறது. முதல் கட்டத்தில்



25th January 1972]

துளையிடப்பட்ட 7 துளை துவாரங்களில் ( Bore holes ) மூன்று துளை துவாரங்கள் உற்பத்தி கிணறுகளாக ( Production wells ) மாற்றப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் துளைக்கப்பட்ட 33 சோதனை துவாரங்களில் 19 துளைகள் உற்பத்தி குழாய்க் கிணறுகளாக மாற்றப்பட்டுள்ளன. மீதி துவாரங்கள் கைவிடப்பட்டன.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** எந்தெந்த இடங்களில் தோண்டப்பட்டவை பயன் உள்ளவையாக இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** முதல் கட்டத்தில் தோண்டப்பட்ட கிணறுகளில், மருங்குளம் 803 அடி, திருவோணம் 999 அடி, புதுப்பட்டி 779 அடி. மற்ற விவரங்கள் இல்லை.

**திரு. வி. வெங்கா:** வானத்தையே பார்த்துக்கொண்டிருக்கிற செங்கல்பட்டு மாவட்டத்தில் நில நீர் ஆய்வு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இது மத்திய அரசாங்கத்தால் செய்யப்படுகிறது. தமிழ் நாடு அரசாங்கத்தால் நடத்தப்படுகிற விரிவான திட்டம் டைரக்டர் ஆஃப் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன்-ஆல் மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** தஞ்சாவூர் ஜில்லாவிலே ஏராளமான குழாய்க் கிணறுகள் போடுவதற்காக பெரிய திட்டம் ஏற்பாடாகியிருக்கிறது என்று பத்திரிக்கையிலே படித்தேன். இது விஷயமாக ஏதாவது தகவல் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு இது சம்பந்தமான கேள்வியைப் போட்டால், அவர்கள் விவரமாகப் பதில் சொல்வார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தஞ்சை மாவட்டத்திற்கு காவிரி நீர் வருவது தடைப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகையினால் அதிகமான அளவில் நிலத்தின் அடியிலிருந்து தண்ணீர் எடுக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தஞ்சை மாவட்டத்தில் நிலத்துக்கடியிலுள்ள நீரைப்பற்றி இப்போது ஸ்டேட் டைரக்டர் ஆஃப் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் வேலை செய்து வருகிறது. புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்ட மக்களின் அச்சத்தைப் போக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

*Irrigation Schemes*

*33 *Q.*—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) the number of irrigation schemes sanctioned by the Government as on date, in the Ramanathapuram District;

(*b*) the number of irrigation schemes under the examination of the Government, as on date: and

(*c*) the names of such schemes and the areas benefited by them?

[25th January 1972

*நீர்ப் பாசனத் திட்டங்கள்.*

*திரு. வி. தங்கபாண்டியன் :* மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை நீர்ப் பாசனத் திட்டங்கள் அரசாங்கத்தால் இன்றுள்ளவாறு அனுமதிக்கப் பட்டுள்ளன ?

(இ) எத்தனை நீர்ப் பாசனத் திட்டங்கள் இன்றுள்ளவாறு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளன ?

(உ) திட்டங்களின் பெயர்களும் பயன்பெறும் பகுதிகளும் யாவை ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* (அ) ஒவ்வொன்றும் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மதிப் பீடுள்ள 38 நீர்பாசனத் திட்டங்களும் ஒவ்வொன்றும் ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைந்த மதிப்பீடுள்ள 658 திட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(இ) 45 நீர்பாசனத் திட்டங்கள்.

(உ) ஒவ்வொன்றும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மதிப் பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் பரிசீலனையில் உள்ளதுமான நீர்ப்பாசனத்திட்டங்களின் விவர அறிக்கை @ மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒரு லட்சத்திற்குக் குறைவான திட்டங்கள் அதிகமாயிருப்பதால் அவைகளின் விவரங்கள் கொடுக்கப்படவில்லை.

*திரு. வி. தங்கபாண்டியன் :* தலைவரவர்களே, அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ள சில முக்கியமான திட்டங்கள் இராமநாத புரம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்று கருதுகிற நிலையில், அவைகளை வருகிற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசு சேர்க்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* ஏற்கெனவே கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி, இதுவரை 6 கோடி ரூபாய்க்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருக் கின்றன. இப்போது 2 கோடி ரூபாய் அளவுக்கு மதிப்புள்ள திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. முறையாக 'எகனுமிக் ஸ்கீம்' அடிப்படையில் அனுமதிக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

*திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :* தலைவரவர்களே, இராம நாதபுரம் மாவட்டத்தில் ஏற்கெனவே பல வருஷங்களாகச் சில திட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அத் திட்டங்கள் மூலம் எத்தனை ஏக்கர் நிலத்தில் விளைச்சல் ஏற்பட்

@ Printed as Appendix II on pages 149-154



25th January 1972]

டிருக்கிறது, எத்தனை ஏக்கர் நிலம் விளைச்சல் இல்லாமல் இன்னமும் உப்பு மண்ணுகவே இருக்கிறது ? இந்த மாதிரி விஷயங்களை ஆராய்ந்து பார்த்து, நல்ல மண் வளம் உள்ள இடங்களில் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களினால் ஏற்பட்ட பலனைப்பற்றிய விவரம் இல்லாவிட்டாலும்கூட, வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் மூலம் 1,04,102 ஏக்கர் நிலம் பயன் அடையும். அதே போல் 'பிலவுக்கால்' நீர்த் தேக்கத் திட்டத்தால் 10,358 ஏக்கர் நிலம் பயனடையும். மற்றத் திட்டங்களினாலும் ஏராளமான ஏக்கர் நிலம் பயனடைவதாக இருக்கிறது.

*Primary Land Development Bank*

* 34. *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have passed any orders recently to stop the opening of branches in all the regions of the Taluk Primary Land Development Banks;

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether the Government's scheme for opening Primary Land Development Banks in the regions has been suspended; and

(*d*) the reasons therefor?

*ஆரம்ப நிலவள வங்கிகள்*

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :* மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தாலுகா ஆரம்ப நிலவள வங்கிகள் வட்டாரந்தோறும் கிளைகள் திறக்கப்படுவதை நிறுத்தி விடும்படி அண்மையில் அரசு ஏதேனும் உத்திரவிட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணங்கள் என்ன ?

(உ) வட்டாரங்கள்தோறும் ஆரம்ப நிலவள வங்கிகளை நிறுவும் அரசின் திட்டம் தொடர்ந்து செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?

(எ) அதற்குக் காரணம் என்ன ?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :* (அ) & (உ) இல்லை.

(இ) & (எ) இவ்வினுக்களுக்கு இடமில்லை.

*Registrar of Co-operative Societies*

* 35 *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of persons who held the posts of Registrars of Co-operative Societies in the Co-operation Department in our State from 1st April 1967 to 30th June 1971; and

(*b*) the period for which each one of them held that office?

[25th January 1972

மாநில கூட்டுறவு பதிவாளர்கள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் 1-4-1967 முதல் 30-6-1971 வரையிலுள்ள காலத்தில் மாநில பதிவாளர்களாக பதவி வகித்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் ஒவ்வொருவரும் பதவி வகித்த காலம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) 5 பேர்கள். ஒவ்வொருவரும் தலா ஒரு வருடம்.

(இ) அவர்கள் பதவி வகித்த காலங்கள் முறையே:—

(1) திரு வி. கே. சி. நடராசன், ஐ.ஏ.எஸ்., 20—4—1967 லிருந்து 12-9-1968வரை.

2. திரு. கே. எஸ். நரசிம்மன். ஐ.ஏ.எஸ்., 26-10-1968-லிருந்து 5-7-1969வரை.

3. திரு. பி. பி. கிருஷ்ணசாமி, ஐ.ஏ.எஸ்., 6-7-1969-லிருந்து 4-7-1970வரை.

4. திரு. கே. ஜே. எம். ஷெட்டி, ஐ.ஏ.எஸ்.. 4-11-1970-லிருந்து 24-4-1971 வரை.

5. திரு. பி. எம். பெல்லியப்பா, ஐ.ஏ.எஸ்., 25-4-1971-லிருந்து இன்றைய நாள் வரை.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

THIRU V. ISVARMURTI: Sir, I move—

"That the following be added at the end:

'but regret to note that no mention has been made to comply with the legitimate request of 20,000 graduate teachers to revise their pay scales.' "

THIRU T. K. SUBBIAH seconded the amendment.

* திரு. டி. கே சுப்பையா: தலைவர் அவர்களே,

"இறுதியில் கீழ்க்கண்ட திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்—

'இருப்பினும் ஆளுநரின் உரையில் நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அளவுக்கு மீறி உயர்ந்து வருவதைக் குறைப்பதற்குச் சரியான நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியைப்பற்றி ஏதும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.' "



25th January 1972]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

MR. CHAIRMAN: Now the motion and the amendments are before the House for discussion.

* திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மேலவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன்.

கவர்னர் அவர்கள் சமீபத்தில் நடந்து முடிந்த யுத்தத்தில் நமது வெற்றிபற்றிக் குறிப்பிட்டு, "நமது முப்படையினர், போரிலே காட்டிய வியத்தகு வீரம் கடமைப்பற்றுறுதி, தியாக மனப்பான்மை ஆகியவை அடுத்து வரும் பல தலைமுறையினரை ஊக்குவிக்கும்" என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இது மாநில அரசு சட்ட மன்றத்திலே பிரஸ்தாபிக்கக்கூடிய ஒரு விஷயம் இல்லை என்று சிலர் குறிப்பிட்டார்கள். அந்த மாதிரி ஐயப்பாட்டிற்கே இடமில்லை. காரணம் பாரதம் முழுவதும் உள்ள இளைஞர்களும் மற்றவர்களும் நமது வெற்றிபற்றித் தெரிந்து கொள்ளவும், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே கிடைக்கும் அனுபவங்களிலே பங்குபெறவும் வேண்டுமானுல், இதுபற்றிக் குறிப்பிடுவதே பொருத்தமானதாகும் என்று நான் கருதுகிறேன். "வன்முறையற்ற விரோதிக்குப் பணபலமும் படைபலமும் மிக்க நாடுகள் சில, உள்ள நிலைமைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் உதவி செய்தபோதிலும், மாற்றானின் படுமோசமான நோக்கம் நிறைவேறவில்லை" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள் கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில். இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் நிலைக்கு நாம் பரிதாபப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம்முடைய சுதந்திரத்திற்காக நாம் போராடிக் கொண்டிருந்தபோது, அமெரிக்கா தொடர்ந்து தன்னுடைய தார்மீக ஆதரவினைப் பாகிஸ்தானுக்கு அளித்து வந்தது. இப்படி ஆதரவினை அளித்த அமெரிக்கா எத்தகைய நாடு என்று பார்த்தால், பல கஷ்ட நஷ்டங்களுக்குப் பிறகு 200 ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திரம் பெற்றது அந்நாடு. இப்படிப்பட்ட ஒரு நாடு வங்க தேசத்திற்கு ஆதரவினைக் கொடுக்காவிட்டாலும், எதிராக நின்று, தன் தார்மீக ஆதரவினை சுதந்திரத்திற்கு எதிராக நின்றவர்களுக்கு அளித்து வந்தது கண்டு நாம் எல்லோரும் ஆச்சரியப்பட்டோம். இம்மாதிரி ஒரு நிலை அமெரிக்காவிற்கு ஏற்பட்டு விட்டதே, அமெரிக்காவா இப்படி நடந்துகொள்ளுகிறது என்று நாம் எல்லோரும் ஆச்சரியப்பட்டோம். வங்க தேசத்திலிருந்து சுமார் ஒரு கோடிப்பேர் நமது நாட்டிற்கு வந்து தஞ்சம் புகுந்தார்கள். அவர்களைப் பராமரிக்கும் பெரும் கஷ்டமும் நமக்குத்தான் வந்தது. அந்த நேரத்தி[illegible] நாடுகள் அதற்காக அந்த தேசத்திற்கும் நமது [illegible] தெரிவித்தன. ஆனுல் அதோடு நின்[illegible]டார்கள் [illegible]ன் சொல்ல வேண்டியிருக்கிறது. [illegible] அளவிற்கு உத[illegible]ச்



63041

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [25th January 1972

செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்ய அந்த நாடுகள் முன்வரவில்லை. உதவுகிறதாக அவர்கள் வாக்களித்துவிட்டு, கணிசமான அளவிற்கும் அவர்கள் உதவவில்லை. இப்படிப்பட்ட நேரத்தில், நம்மைச் சுற்றியிருக்கும் பல நாடுகள் எந்தெந்த மாதிரி நடந்துகொள்ளும் என்பதை நன்கு எடுத்துக்காட்டும் சந்தர்ப்பமாக இது அமைந்தது. இந்த நிலைமைகள் நமக்குச் சிறந்த அனுபவங்களைத் தந்திருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் இங்கே பிரஸ்தாபிப்பதன்மூலம் எதிர்காலத்தில் நமது நாட்டின் இளைஞர்களுக்கு நல்ல அனுபவத்தினை ஏற்படுத்தித் தரலாம் என்பதில் சந்தேகமில்லை. பல சந்தர்ப்பங்களிலே சில வல்லரசுகள் நமது நாட்டிற்கு உதவிகளை அளித்திருந்தாலும், இத்தகைய ஒரு சூழ்நிலையில் அந்த வல்லரசுகள் எப்படி நமக்கு எதிராகப் போகக்கூடும் என்பதை இந்த சந்தாப்பம் நமக்கு நன்கு எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆனால் இப்படி வல்லரசுகள் நமக்கு எதிராக இருக்கின்றன என்ற எண்ணமே யாருக்கும் தோன்றாத அளவிற்கு இந்த யுத்தத்தில் பாரதம் நடந்து கொண்டிருப்பதானது மிக மிகப் பெருமைப்படக்கூடிய ஒன்றாகும்.

'உற்றவிடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ கற்றூண்
பிளந்திருவதல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோதான்'

என்ற தமிழ் நாட்டின் மூதுரைக்கு ஒப்ப, நமது பாரத கண்டத்தில் உள்ள இந்த மரபினை அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. அமெரிக்கா போன்ற வல்லரசுகள் நமக்கு மாறாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தும்கூட, நாம் கொண்ட கொள்கையினை சற்றும் தளரவிடாமல், நியாயத்தின்பால், ஜனநாயகத்தின்பால் நாம் வைத்துள்ள நம்பிக்கை காரணமாக. உலக நாடுகளின் கவனம் முழுதும் நல்ல முறையிலே நம் பக்கம் திரும்பவைத்தது உண்மையிலேயே போற்றக்கூடிய ஒன்றாகும். நாம் சுதந்திரம் பெறாது இருந்த காலத்திலேயே, சுதந்திரத்திற்காகப் போராடிய பல நாடுகளுக்கு நாம் அந்தக் காலத்தில் நமது தார்மீக ஆதரவினைக் கொடுத்துக்கொண்டு வந்திருக்கின்றோம். அதே கொள்கையின் அடிப்படையிலேயே, நாம் சுதந்திரம் பெற்ற பிறகும்கூட, செயல் முறையில் வங்க தேசம் தன்னுடைய சுதந்திரத்திற்காகப் போராடிய நேரத்தில், நாம் அதன் பக்கம் நின்றோம் என்பதில் பெருமை கொள்ளவேண்டும். இந்தப் போரில் நமது பாரதப் பிரதமர் ஏற்றுக்கொண்ட ஒரு நிலையானது உலகத்திலுள்ள பேரறிஞர்கள், பெரிய அரசியல் மேதைகள் எல்லாம் போற்றத்தக்க விதத்தில் அமைந்துவிட்டது குறித்து நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டும், பாராட்ட வேண்டும். அவர் சற்றும் பொறுமை இழக்காது, நிதானத்துடன் நடந்து கொண்டது நமது பாரத நாட்டிற்கே பெருமை தேடித்தந்தது



25th January 1972] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் வீர மரணம் அடைந்த நமது வீரர்களுக்கு நமது கவர்னர் அவர்கள் அஞ்சலி செலுத்தும் விதத்தில் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாக அமைந்திருக்கின்றது. அதற்காக அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். இச்சந்தர்ப்பத்திலே, சோவியத் யூனியனுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். முன்பே நாம் அந்த நாட்டிற்கு நன்றியைத் தெரிவித்திருக்கிறோம். அதிலும் இது கவர்னர் அவர்களுடைய உரையில் காணப்படுவது மிகவும் பொருத்தமானதாகும். வருங்காலத்தில் இப்போது நாம் ஏற்ற கொள்கையும், நாம் காட்டியுள்ள ஒற்றுமையும் மிகப் பெரிய வழிகாட்டியாக அமையும், அமைய வேண்டும் என்ற கருத்தினை மனத்தில் வைத்துக்கொண்டு, நாம் எல்லோரும் பாடுபட வேண்டும். இப்போது பிற நாடுகளிலிருந்து நிபந்தனையற்ற உதவிகள் வருவதுபற்றிப் பரிசீலனை செய்வோமே தவிர, நிபந்தனையுடன் கூடிய உதவிகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நமது பாரத நாட்டின் அரசு தீர்மானித்து, அத்தீர்மானத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இனிதான் நமக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

மேலும் கவர்னர் அவர்கள் பருவ மழை குறைந்துபோய் விட்டதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலே இராமநாதபுரம் மாவட்டம் குறிப்பிடப்படவில்லை. மாவட்டம் முழுதும் பருவ மழையின்மையால் பாதிக்கப்படவில்லை என்றாலும்கூட, சில தாலுகாக்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் நான்கு பிர்காக்களும் பழைய காலம் போல தொடர்ந்து வறட்சி நிலையிலேயே இருந்து வருகின்றன. இது ரொம்பவும் சங்கடமாக இருக்கிறது. சில பகுதிகளில் கடந்த ஆண்டில் இருந்த பருவ மழை கூட ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் இந்த ஆண்டு இல்லை. இந்தக் கஷ்டங்கள் அங்கே தொடர்ந்து இருந்து கொண்டு வருகின்றன. அதற்கான பரிகார முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உர விநியோகம், கடன் வசதி இவைகளைப்பற்றி விவரங்கள் ஏதோ குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நமது விவசாய உற்பத்தியில் கணிசமான உயர்வு நாம் கண்டிருக்கிறோம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உர விநியோகம், கடன் வசதி சம்பந்தப்பட்ட வரையில், இன்னும் செய்முறைகள் திட்டமிட்ட வகையில் அமைய வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். உதாரணத்திற்கு, ராஜபாளையத்தில் இருக்கும் வேர்ஹவுசிங் கார்ப்பரேஷனுக்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் மார்க்கெட்டிங் சொசைட்டி கோடவுனுக்குமுள்ள தூரம் ஏழு மைல்கள். அங்கேயிருந்து ஒரு லாரியில் அந்த உரம் போடப்பட்டு வருமானால், 20 நிமிடங்களில் அந்த கோடவுனுக்கு வந்து சேரும். அப்படியிருக்க, ராஜபாளையம் வேர்ஹவுசிங் கோடவுனிலிருந்து சுமார் ஒரு மைலுக்கு அதிகமாகத் தூரமுள்ள ராஜபாளையம்

ரயில்வே ஸ்டேஷனுக்கு லாரியில் எடுத்துக்கொண்டு போய், அங்கே ரயில்வே வேகன்களில் ஏற்றப்பட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் ரயில் நிலயத்தில் வேகன்கள் இறங்க வசதி இல்லாததால், முப்பது மைல் தூரத்திலிருக்கின்ற விருதுநகருக்குச் செலுத்தப்பட்டு அங்கேயிருந்து திரும்ப ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து, அங்கிருந்து ஆறு பர்லாங் தூரத்திலுள்ள மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு அந்த மூட்டைகள் போகின்றன. இந்த ஏற்பாடு எப்படி நடக்கிறது என்பதே விளங்கவில்லை. இருபது நிமிஷத்தில் லாரியில் செல்லக்கூடிய மூட்டைகள் லாரியில் ஏற்றப்பட்டு, இரயிலில் ஏற்றப்பட்டு, இத்தனை மைல்கள் சென்று, பல தினங்களுக்குப் பின்னுல் வந்து சேருகின்றன.

பழைய உரங்கள் இன்னும் பலவிடங்களிலிருந்து வருவதாகக் கூறப்படுகிறது. உரங்கள் தேவைப்படுகின்ற இடங்களுக்கு அவ்வப்போது அனுப்பி வைத்து அங்கு போதுமான ஸ்டாக் வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சாக்கு கெட்டுவிட்டது, உரம் கெட்டுவிட்டது என்று கூறப்படுகின்ற புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. அரசாங்கம் ஸ்டாக் வைக்கும் இடங்களிலேயே இந்தக் குறைகள் இருக்கின்றன. அது மட்டுமல்ல. கடந்த கால அனுபவத்தைக் கொண்டு, ஒவ்வொரு ஜில்லாவிலும், எந்தெந்தப் பகுதியில் எவ்வளவு உரம் தேவை என்று அறிந்து. அருகாமையிலேயே ஸ்டாக் வைத்தால் தேவைப்படும்போது அனுப்புவதற்கு அனுகூலமாகவிருக்கும். நான் ஒவ்வொரு வருஷமும் பார்த்துக்கொண்டு வருகிறேன். காரைக்குடியிலிருந்து சுமார் 100, 120 மைல்கள் தூரத்திலிருக்கின்ற ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அரசாங்கத்தினுடைய உர ஸ்டாக் லாரிகளில் கொண்டுவரப்படுகிறது. ஏன் ஸ்ரீவில்லிபுத்தூர் அல்லது ராஜபாளையத்திலேயே ஸ்டாக் செய்து வைக்கக்கூடாது? அது மட்டுமல்ல, காரைக்குடி பகுதியைவிட விவசாயிகளுக்கு அதிகமாக உரம் தேவைப்படும் பகுதிகள் இங்குதான் இருக்கின்றன. அந்தத் தேவையை அனுசரித்து அங்கேயே ஸ்டாக் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரயில்வேக்குச் சொந்தமான இடங்களில் அங்கே நிரந்தரமான கோட்வுன்கள் கட்டி வைத்துக்கொண்டு அங்கே, இந்த உர மூட்டைகளை ஸ்டாக் செய்து வைத்தால், உதவியாக இருப்பதோடு உரமும் கெட்டுவிடாமல் இருக்கும். அந்த ஏற்பாட்டையும் அரசு கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் வசதிகள் பெருகியிருக்கின்றன. ஆனால் அந்தக் கடன் வசதிகளைப் பெறுவதில் உள்ள கஷ்டங்கள் மேலும் வளர்ந்திருக்கின்றன. உலக வங்கி, ரிசர்வ் வங்கி, இவைகள் என்னென்ன முறைகளில் இந்தக் கடன் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று நிபந்தனைகள் போட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கடன் வசதிகள் எந்த அளவில் விநியோகிக்கப்படுகிறதென்று யாருக்கும் தெரியாத ஒரு நிலை இருக்கிறது. ஒருவர் கடன் கேட்கும்போது தன்னுடைய விண்ணப்பத்தோடு, தனது



நிலம் எந்த ரெவின்யூ கிராமத்தில் இருக்கிறது என்று அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களின் கிணறுகளின் இட அமைப்பைக் குறிக்கும் ஒரு 'பிளான்' போட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒவ்வொரு கிணற்றிலும் எவ்வளவு பாசன நீர் வசதியிருக்கிறது என்ற விவரத்தையும் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பெரிய பிளான் தயாரித்து அந்த விண்ணப்பத்தோடு அனுப்பி வைக்க வேண்டும். ஜில்லாக்களிலே நில நீர் நிலைமையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு இன்ஜினியர்கள் நியமித்திருக்கிறார்கள். அவர்கள் சென்று பார்த்து சரி என்று ஒத்துக்கொண்டதற்குப் பின்னுல், அந்த விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு கடன் கொடுக்கப்படுகிறது என்று தெரிகிறது. ஒரு நூறு அடி தூரத்திற்குள்ளாக கிணறுகள் இருக்கக் கூடாதென்று சொல்லப்படுகிறது. நெருக்கடியாக கிணறுகள் இருக்கக்கூடாது என்று ஒரு நிபந்தனை இருக்கிறது. இதை எந்த அளவில் செயல்படுத்த முடியும் என்பதைப்பற்றியும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவை நடைமுறை அனுபவத்திற்கு ஒத்துக்கொள்ளாது என்று கருதுகிறேன். இத்தனை விவரங்களையும் தேடி, யார், யாரை எல்லாம் காண வேண்டுமோ என்றும் அஞ்சும் நிலை இருக்கிறது.

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்:** யாரையும் தேடிக் கொண்டு அலைய வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு பிளாக்கிலும் இன்ஜினீயர்கள் நியமித்துக் கொண்டு வருகிறோம். அதைப்போல் உங்களுடைய பிளாக்கிலும் வெகு விரைவில் இன்ஜினீயர் நியமிக்கப்படுவார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஒவ்வொரு பிளாக்கிலும் இன்ஜினியர்கள் போட்டால் வேலை வாய்ப்பு கிடைக்கும். அவசியம் நியமிக்க வேண்டும். ஒரு விவசாயி தனது விண்ணப்பத்தை அனுப்பும்போது, இந்த விவரங்களுக்காகத் தேடி அலைந்து செல்வதை விட, அந்த அதிகாரியே சென்று அரை மணி நேரத்தில் அவற்றைச் சேகரித்துக் கொள்ளலாமென்று கருதுகிறேன். அம்மாதிரி முடிவு எடுக்காமல் ஆரம்பத்திலேயே, விண்ணப்பத்தை அனுப்பும்போதே இவ்வளவு கஷ்டங்களைக் கொடுப்பது மிகவும் தொந்தரவானது, நியாயமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. டிராக்டர் வாங்குவதற்குக் கடன் வாங்க வேண்டுமானுல், அதற்காக ரூபாய் 40,000 கேட்டால், 14,000 ரூபாய் விவசாயி கையில் முன் பணமாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நிலவள வங்கி 30,000 ரூபாய் கொடுக்கும். இதே போன்று ஒவ்வொரு இனத்திற்கும் செலவு செய்வதில் 25 சதம் வைத்துக் கொள்ள வேண்டும். இது பெரிய விவசாயி, அவருடைய தகுதிக்கு ஏற்றபடி அந்தத் தொகை. குறைந்த தொகை கேட்கின்றபோது பத்து சதம், அதாவது ஆயிரம் ரூபாய் கடன் கேட்கும் ஒரு சிறிய விவசாயி 100 ரூபாய் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படியிருந்தால்தான் விண்ணப்பம் அனுப்ப

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [1972 சனவரி 25

வேண்டும். இவையெல்லாம் சிரமமான காரியம். நூறு ரூபாய் இருந்தால் ஆயிரம் ரூபாய் சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. ஒரு விவசாயி அந்த மாதிரி ஒரு நிபந்தனைக்குட்பட்டு கடன் வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதை நான் ஒரு வகையில் வரவேற்கிறேன். ஆனால் திட்டமிட்ட ஒரு தொழில் செய்வதில் அவர்களுக்குப் பழக்கம் ஏற்பட வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் ஒத்துழைப்பின் பேரில் இந்தக் காரியங்கள் காலப் போக்கில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கடன் வழங்கும் விஷயத்திலும், பாசன வசதிகள் செய்து கொடுப்பதற்கு லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டிகள் அமைப்பதற்கும் இந்த அரசு தீவிர முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டிகளை அமைப்பதற்கு பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். எல்லா கூட்டங்களிலும் அதைப்பற்றி எடுத்துச் சொல்லி வருகிறார். அவர் விழுப்புரத்தில் ஆங்கிலத்தில் பேசிய பேச்சு டேப் ரிகார்ட் செய்யப்பட்டு அந்தப் பிரசங்கத்தை மதுரையில் ஒரு மணி பத்து நிமிஷ நேரத்திற்குப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகும் அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் கொடுத்துப் பேசினார். அப்படி டேப் ரிகார்ட் செய்து போடப்பட்ட பேச்சுக்குப் பின்னால் விளக்கம் கொடுத்து ரொம்பப் பெருமை யோடு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேசுகிறபோது, அமைச்சர் அவர்கள் இந்தத் துறை குதிரை வேகத்தில் செயல் படுமென்று சொன்னார்கள். அந்த மாதிரியாக இப்படி வேகமாகப் பணி புரிய வேண்டுமென்று மனதில் உள்ள உணர்ச்சியை அவர்கள் நன்றாகத் தெரிவித்துக்கொண்டார்கள். நான் நினைக்கிறேன், ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி கிராமங்களுக்குச் சென்று சில விவசாயிகளை அந்தச் சங்கத்திற்கு அங்கத்தினர்களாகச் சேர்த்து அவர்கள் ஒரு சங்கத்தை அமைப்பது அவர்களுடைய சக்திக்கு மிகவும் அப்பாற்பட்டது என்று கருதுகிறேன். இதைப் பற்றி அமைச்சர் அவர்களிடம் தனியே பேச வேண்டுமென்று கருதியிருந்தேன். எங்கிருந்தோ ஒரு அதிகாரி வருகிறார். எங்கிருந்தோ வருகிற அதிகாரி அந்த ஸ்தலத்தில் அனுபவமற்றவராக இருக்கிறார். பல விவசாயிகள் அவருக்குப் பரிச்சயம் அற்றவர்களாக இருப்பார்கள். இது ரொம்ப அனுகூலமான திட்டமென்று அவர்கள் முடிவிற்கு வருவது கஷ்டம். அந்தந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள், எம்.எல்.ஏக்கள், சட்ட மன்ற அங்கத்தினர்கள், அந்த யூனியன் சேர்மென்கள் இப்படிச் செல்வாக்கு உள்ளவர்கள் இவர்களைக் கொண்டு ஒத்துழைப்பின் பேரில் எங்கெங்கெல்லாம் இந்தச் சங்கத்தை அமைத்தால் செயல்படுமோ, எங்கு அக்கறை உள்ளவர்கள் இருக்கிறார்களோ, இப்படிப்பட்ட சங்கத்தை அமைக்க முன்வருகிறார்களோ அந்த இடங்களில் இந்தச் சங்கத்தை அமைத்துச் செயல்படுவது நல்லது. 100 சங்கங்கள் அமைத்து



25th January 1972] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

ஒன்றிரண்டு சங்கங்கள் மட்டும் செயல்பட்டால், அது உந்துதல் அளிப்பதாக இருக்காது. ஆரம்பித்த சங்கங்களை ஒவ்வொன்றாகச் சரியாகச் செயல்படும்படியான வகையில் ஆரம்பித்து நல்ல பயனும் அளிக்கிறது என்பதைப் பிரத்யட்ச பூர்வமாக உணர்ந்தால், இப்படித் தொடர்ந்து செய்துகொண்டு போவது நல்லது என்று கருதுகிறேன். சில மாதங்களுக்கு முன்னாலே, சென்ற வருஷத்திலே ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்தச் சங்கங்களை, லிஃப்ட் இர்ரிகேஷன் சொசைடிகளை ஏற்படுத்தினார்கள். இப்போது கூட சில இடங்களில் அந்தந்த ஜில்லா கூட்டுறவு வங்கிகளிலிருந்து இந்தச் சங்கங்கள் பேரால் தபால் அனுப்பினால், விலாசதார் ஊரில் இல்லை என்று தபால் திரும்பி வருகிறது. அப்படி அவசர அவசரமாகச் சங்கங்களை அமைத்து விட்டார்கள். ஆகையினாலே இனி அத்தகைய குறைபாடுகள் எங்கும் ஏற்படாமல், அந்தச் சங்கங்களை அமைக்கும்போதே, இப்படிச் சங்கம் அமைத்து தொடர்ந்து செயல்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை ஸ்தலத்தில் இருக்கிறதாவென்று கவனித்துச் செய்வது கூட்டுறவுத் துறைக்கு நல்லது. அமைச்சரவர்கள் மனதில் உள்ள இந்த முன்னேற்றகரமான காரியங்கள் சீக்கிரம் பலன் அளிக்க வேண்டுமென்றால் இன்னும் பொறுமையாக சரியானபடிக்குத் திட்டமிட்டு இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பருத்தி பயிரிடுவதில் தன்னிறைவு ஏற்படும்படியான மும்முரத் திட்டத்தைக் கொண்டு வந்தது ஏற்கெனவே அறிந்தது. அதையும் கவர்னர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு மார்கெடிங் சொசைடி 1954-ம் ஆண்டிலிருந்து விதை பெருக்கு திட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறது. அந்த விவசாயிகளுக்கு விதையைக் கடனாகக் கொடுக்கக் கூடாது என்று கூட்டுறவு இலாகாவினர் சொல்கிறார்கள். கடன் கொடுப்பது மார்கெடிங் சொசைடியினுடைய வேலையல்ல. ஆமாம். வாஸ்தவம். அவர்கள் எடுத்துக்கொண்டிருப்பது விதை பெருக்குத் திட்டம். அந்தத் திட்டப்படி விவசாயிகளுக்கு விதையை அந்தச் சங்கம் கொடுக்க வேண்டும். அது கொடுக்கிறபோது அந்த விதையை வாங்குவதற்கு அந்த விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய கிராம சங்கம் கடன் கொடுக்க வேண்டுமாம். அது கடன் கொடுத்த பிறகு தான் இவர்கள் கொடுக்க வேண்டுமாம். அரசாங்கம் கொடுக்கக் கூடிய சீட் ஃபார்ம் திட்டத்தில் அடுத்துள்ள சங்கரன்கோவில் பகுதியில் அடுத்த சர்வே நம்பரில் விதை அரசால் கொடுக்கப் படுகிறது. அடுத்து உள்ள சர்வே நம்பரிலுள்ள இடத்தில் மார்கெடிங் சொசைடி நடத்தக்கூடிய திட்டத்தில் விதை கடனாகக் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். இது எவ்வளவு தூரம் பொருத்தமாக இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். முருங்கைக்காய் என்றால் பத்தியம் முறிந்து போகுமா என்ன? கடன் கொடுப்பது மார்கெடிங் சொசைடி வேலையாக இருக்க வேண்டாம். ஆனால் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டு நடத்துகிறபோது இந்த விதைக்குக் கடன் கொடுப்பதன் மூலமாக என்ன ஏற்படுகிறது? இதில் நஷ்டம் என்ன, கஷ்டம் என்ன. எங்கு

தொந்திரவு வருகிறது என்று புரியவில்லை. விவசாயிகளின் பருத்தியை மார்கெடிங் சொசைடி வாங்குகிறது. அந்த விவசாயியிடத்திலிருந்து பருத்தியை வாங்கிறபோது. விதையினுடைய கிரயத்தை கழித்துக்கொண்டு பணம் கொடுக்கிறார்கள். அவர்களுடைய தொடர்பு எந்த வகையிலும் அமையவில்லை என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அனுபவத்தையொட்டி உணராது ஏதோ. தத்துவங்களை மனதில் கொண்டு இந்த விதையை கடனுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொல்வது சரியல்ல. அது மட்டுமல்ல. அந்த விவசாயியோடு கூட்டுறவுச் சங்கம் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. கடன் கொடுப்பது ஒரு சங்கம், விதை கொடுப்பது ஒரு சங்கம் என்று இப்படி இருந்தால், ஒருவருக்கொருவர் பரிச்சயம் அற்றவர்களாக இருக்கிறார்கள். விவசாயி கூட்டுறவுச் சங்கத்தோடு தொடர்பு கொண்டு இருந்தால், விதை பெருக்கு திட்டத்தில் அவர்கள் உணர்ந்து ஒத்து அந்தக் காரியங்களைச் செய்து கொள்கிற மனப்பாங்கு ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகையினாலே கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக வழக்கம்போல கடன் கொடுத்துக்கொண்டு இருந்து விட்டு இப்போது இன்னும் அனுமதி கிடைக்கப்படவில்லை. இந்த பிப்ரவரி மாதம் விதையைக் கொடுக்க வேண்டும். ஆகவே அவசரமாக இப்போதே அனுமதி கொடுக்க வேண்டும். ரிசர்வ் பாங்கு இப்படிச் சொல்கிறார்கள். ஆகவே இவர்கள் முடியாது என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் தயவு செய்து இதை மனதில் கொண்டு இதற்கான அனுமதியைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஒழுங்குபடுத்தப்பட்ட மார்கெட் கமிட்டிகள் பல இடங்களில் ஏற்படுத்தப்படுகின்றன. பல இடங்களிலும் விவசாயிகள் விளைபொருள்களை அங்கே கொண்டுவந்து, அவை விற்கப்பட வேண்டுமென்று "நோட்டிஃபை" செய்யப்படுகிறது. அந்த யார்டுக்குள்ளே விற்க வேண்டுமென்று உத்திரவு இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் "சீட் ஃபார்ம்" சம்பந்தப்பட்ட மட்டில், "சீட் ஃபார்ம்" விளை பொருள்கள் சம்பந்தப்பட்ட மட்டில், விதி விலக்கு இருக்க வேண்டும். இதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இதைக் கூட்டுறவு அமைச்சரவர்கள் மனதில் கொண்டு இப்படி கூட்டுறவுச் சங்கங்கள் நடத்திக்கொண்டு வரக்கூடிய இந்தத் திட்டங்கள் பாதிக்கப்படாத வகையில் செய்ய வேண்டும். இப்படி உற்பத்தி செய்யக்கூடிய விதை பெருக்குத் திட்டம் சம்பந்தமான விளைபொருள்களையும் அங்கு கொண்டு செல்ல வேண்டுமானால், அதனுடைய பரிசுத்தம், கலப்படம் ஏற்படாத நிலைமையை அங்கே காண முடியாது. இதற்காக இந்தத் திட்டத்தைச் சுத்தமாக, கலப்பினம் இல்லாது கொண்டுவர வேண்டுமென்று பல ஆண்டுகள், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு இனத்தைக் கண்டுபிடிக்கிறார்கள், விவசாய இலாகாவினர். ஒரு செடியிலுள்ள பூ மகரந்தத்தை எடுத்து இன்னொரு செடியிலுள்ள பூ மகரந்தத்தோடு சேர்த்து பைகளைத் தைத்துக் கட்டி இனக் கலப்பு ஏற்படுத்தி புதிய இனங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். அந்த நிலையில் 5 ஆண்டுகளுக்குப்பின் முதலில் ஒரு மூட்டை விதை கிடைக்கும். அதை ஒரு 5 ஏக்கர், 20 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டு அப்படியே ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் என்று கொண்டு போக வேண்டும். இப்படி கஷ்டப்பட்டு கண்டுபிடித்த தயாரிப்பை, மார்கெடிங் சம்பந்தப்பட்ட மட்டில், இந்த யார்டுக்கு இந்தப் பொருள்களைக் கொண்டுபோக வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால், எல்லாம் கஷ்டமாகிவிடும். ஆகையினால் இதையும் மனதில் கொண்டு இதற்கான விதி விலக்கை அளிக்க விவசாய இலாகாவும் கூட்டுறவு இலாகாவும் கலந்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





மின்சார வசதி நம் தமிழ் நாட்டில் நல்ல முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய நிலையை அவர்கள் அதிலே தெரிவித்திருக்கிறார்கள். நேற்றுக்கூட ஒரு கேள்வி இங்கே வந்தது. ஆனால் பதில் சொல்லவில்லை. பாகனேரியிலே ஒரு உயர்நிலைப் பள்ளியினுடைய கிணற்றிலே தண்ணீர் இறைப்பதற்கு வாங்கி வைத்த பம்பு செட்டுக்கு 6 வருஷங்களாக மின்சாரத் தொடர்பு கிடைக்கவில்லை என்று அரசுக்குத் தெரியுமா என்று அந்தக் கேள்வி கேட்கப்பட்டது. இப்படி பல இடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. முழுமை விழாவிற்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. குற்றம் சாட்டுவதாக நினைக்கக்கூடாது. பல இடங்களில் இத்தகைய சிரமங்கள் இருக்கின்றன. முழுமை விழாவென்பது தெருக்களிலே லைட்டுகள் போட்டு விடக்கூடிய ஒன்று மட்டுமல்ல என்பதை மனதில் கொண்டு இது பலன் அளிக்கக்கூடிய பல காரியங்களை நடத்துவதற்கு இடையூறாக விடப்பட்டிருக்கிறதோ என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மின்சார வரவு-செலவுத் திட்டம்பற்றி நாம் இங்கே விவாதிக்கும்போது, அதில் மின்சாரக் கட்டணத்தில் உயர்வு ஒன்றும் குறிப்பிடாமல் இருந்தது பற்றி மகிழ்ச்சியடைந்தோம். நான்கூட அதுபற்றி சந்தோஷப்பட்டேன். ஆனால் இப்போது அந்த சந்தோஷத்திற்கு இடம் இல்லாது போய்விட்டது. அப்போது ஒன்றுமில்லை என்று இருந்தது இப்போது 12 பைசாவிற்கு உயர்த்தப்பட்டுவிட்டது. இது உண்மையிலேயே விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும். உண்மையிலேயே கணக்குப் போட்டுப் பார்த்தால், ஒரு ஏக்கருக்கு எவ்வளவு குதிரை சக்தி கொண்ட மோட்டாரைப் போட வேண்டியிருக்கிறது, எவ்வளவு கட்டணம் ஆகிறது, மொத்தத்தில் எவ்வளவு செலவாகிறது என்று பார்த்தால், சொல்லுவார்களே, 'உழுதவன் கணக்குப்போட்டால் உழக்கும் மிஞ்சாது' என்று, அதுபோலத்தான் இருக்கும். முன்பே பலர் தெரிவித்தார்கள், விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணத்தினை உயர்த்தக்கூடாது என்று. எனவே இதையெல்லாம் மனத்தில்

கொண்டு, வரக்கூடிய வரவு-செலவுத் திட்டத்தில் கொஞ்சம் அனுகூலமான ஏற்பாடுகளைச் செய்தால், சலுகைகளைத் தெரிவித்தால் உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தொழில் வளர்ச்சிபற்றிக் குறிப்பிடும்போது, தூத்துக்குடியில் ரூ. 71 கோடி செலவில் ஒரு உரத் தொழிற்சாலையை அமைக்க இருப்பது குறித்துக் குறிப்பிட்டிருப்பது பெருமைப்படத்தக்கதாகும். இந்தத் தொகையில் தமிழக அரசு ரூ. 5 கோடியை மூலதனமாகப் போட இருப்பதாகத் தெரிகிறது. இத்தொழிற்சாலையுடன் பல உபதொழிற்சாலைகளும் ஏற்பட இருப்பது குறித்து பெருமைப்படலாம். இதை இரண்டாண்டு காலத்தில் இலாபம் கிடைக்கத்தக்க தொழிற்சாலையாக அமைக்க முடியும் என்ற அளவில், இத்தொழிற்சாலையின் நிர்வாகத்தினர் 25 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கையை வினியோகம் செய்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் காலாகாலத்தில் நிறைவேற்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சில தொழில்கள்பற்றிக்கூட பிரஸ்தாபம் இருந்து வருகிறது. முதலில் பிரஸ்தாபம் செய்கின்றார்கள். பிறகு ஏனோ தெரியவில்லை, ஒன்றுமில்லாமல் விட்டுவிடுகின்றார்கள். சேலம் உருக்காலையைப்பற்றி கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'மெத்தனமாக இருக்கின்றார்கள்' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மெத்தனம் எங்கே இருக்கின்றது என்று தெரியவில்லை. மெத்தனம் அங்கே இருந்தாலும், இங்கே இருந்தாலும், தமிழ் நாட்டிற்கு மிக மிகத் தேவையான இத்தொழிற்சாலை விரைவில் அமைந்திட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும் இன்றைய நிலையில் பார்த்தால், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா அல்லது இப்படியே நீடித்துக்கொண்டு போகப்படுமா அல்லது கைவிட்டுவிடுவார்களா என்று தெரியவில்லை. எனவே, இது பற்றி நமது மாநில அரசு மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்துக் கொண்டு ஆவன செய்ய வேண்டும். இத் திட்டம் பற்றிப் பெரும்பாலான மக்களுக்குச் சந்தேகம் இருக்கின்றது.

பல தொழிற்சாலைகளுக்கு அனுமதி வேண்டி கடிதங்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன என்று காணப்படுகின்றது. இப்படி மனுச்செய்துகொண்டு தொழில்களை ஆரம்பிக்க முன் வருகின்றவர்கள் யார் என்று சொல்லப்படவில்லை. தொழில்கள் பெருக வேண்டும். எனவே இத்தொழில்களை ஆரம்பிக்க முன்வருபவர்களுக்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுத்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசு பஞ்சாலைக் கழகத்தின், அதாவது அரசு ஏற்றுக் கொண்டுள்ள ஐந்து பஞ்சாலைகளில் இலாபம் இப்போது ரூபாய் ஐந்து லட்சம் என்று கூறப்பட்டிருக்கின்றது. கிடைத்த இலாபம் ஒரு மில்லிலா அல்லது ஐந்து மில்களிலுமாகச் சேர்ந்தா என்று தெரியவில்லை. நான் கேள்விப்படுவது ஒரு ஆலையில்தான் என்று. ஆனால் மற்ற மில்களில் என்ன லாப நஷ்டம் என்று தெரியவில்லை.





எல்லா மில்களிலும் கணிசமான லாபம் கிடைக்கிறமாதிரி ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசு மேற்கொண்ட இந்தப் பஞ்சாலை நிர்வாகத்தில் அரசுக்குப் பல அனுகூலங்கள் இருக்கின்றன. பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. வரிச்சலுகை, மின்சாரக் கட்டணச் சலுகை, கடன் சலுகை என்று பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட அனுகூலங்களை அரசு அனுபவித்துக்கொண்டு, 'நமக்கு லாபம் கிடைத்திருக்கிறது' என்று அங்கே உள்ள அதிகாரிகள் மெத்தனமாக இருந்துவிடக் கூடாது. இது விஷயத்தில் அரசு எச்சரிக்கையாக இருந்திட வேண்டும். இந்தச் சலுகைகளால் கிடைக்கும் அனுகூலங்களை வைத்துக்கொண்டு, அங்கே உள்ள அதிகாரிகள் லாபம் கிடைக்கிறது என்று கருதிவிடக் கூடாது. அனுபவம் உள்ள அதிகாரிகள் அப்படிக் கருதமாட்டார்கள். ஆனால் நமது தேவைக்கு ஒப்ப புதிய புதிய அதிகாரிகளை அங்கே நாம் நியமிக்கின்றோம். அவர்கள் இந்த மாதிரிக் கருதிவிடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, தொழில் துறையில் அமைதியின்மைபற்றி வருத்தம் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனாலும் சிம்சன் நிறுவனத்திலுள்ள தொழிலாளர் பிணக்குபற்றிய சசப்பான உண்மையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே இப்போதுள்ள குழப்பமான நிலைமைகள் நீங்கி அங்கே அமைதி ஏற்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேலையில்லாப் பிரச்சனை பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்கு யார் பொறுப்பு, மத்திய அரசா, மாநில அரசா என்று தெரியவில்லை. பிரச்சனை இருக்கிறது. எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும். எந்த ஒரு கட்டத்திலாவது தீர்ந்து விடும் என்று சொல்லி விட முடியாது. வேலையில்லாப் பிரச்சனை என்று சொல்லும்போது, நமக்கு நகர்ப்புறங்களில் உள்ள ஆலைத் தொழிலாளர்கள் நினைவுதான் ஏற்படுகிறது. ஆனால் கிராமப் புறங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் நிலை மனதில் தோன்றுவதில்லை. அவர்களுடைய கஷ்டங்கள் சொல்லில் அடங்காது. அவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள். அதிலும் குறிப்பாக விவசாயக் கூலிகள் படும் கஷ்டம் சொற்பமானது இல்லை. அவர்களுக்கு அதிகப்படியான அளவிற்குக் கூலி கொடுக்கக்கூடிய வகையில், உற்பத்தி செய்பவர்களுக்கு உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலை கிடைக்கும்படி அரசு ஏதாவது செய்ய வேண்டும். அப்போதுதான் விவசாயமும் இலாபகரமானதாக இருக்க முடியும் என்ற எண்ணம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தோன்றும். அப்போதுதான் விவசாயக் கூலியாட்களுக்குக் கூடுதலான கூலி கொடுக்க முடியும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விலை ஏறிவிட்டது என்று சொல்லுகின்றார்களே ?

[25th January 1972

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கூடித்தான் இருக்கிறது. ஆனால் அந்தக் கூடுதல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அனுகூலமானதாக இருக்கவில்லை. வியாபாரத்தில் உள்ளவர்களுக்குத்தான் அனுகூலமானதாக இருக்கின்றது. ஓரளவிற்கு விவசாயக் கூலிகளுக்கு இன்றைக்கு வாங்கும் சக்தி ஏற்பட்டுவிட்டது என்றாலும்கூட, அந்த சக்தியை விவசாயிகள்தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்காக விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அரிசி விலை ஏறிவிட்டது பற்றிக் குறிப்பிட்டார்கள். அரிசி விலை ஏறியிருப்பது நியாயம் என்று கூறிவிட முடியாது. என் கிராமத்துக்கு அருகில் கிணற்று வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் கேட்டார், 'ரேடியோவில் சொல்லுகின்றார்கள், 75 லட்சம் டன், 80 லட்சம் டன் என்று. ஆனால் அரிசி விலை மூன்று ரூபாய், மூன்றரை ரூபாய் என்று விற்கின்றதே' என்று சொன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் உண்மை என்னவோ படி அரிசி ரூ. 3¼-க்குத்தான் விற்கிறது. கொஞ்சம் தரம் குறைந்த அரிசியாக இருந்தால், விலை சற்று குறைந்திருக்கிறது. இன்றைக்கு சாதாரண விவசாயிகளுக்குக்கூட இப்படிப்பட்ட சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி இது ஒரு விஷச்சக்கரமாக இருந்து கொண்டு வருகின்றது. ஆகவே வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட மட்டில் சொல்லப்போனால், இப்போதுள்ள திட்டங்கள் எல்லாம் தாற்காலிகப் பரிகாரம் அளிக்கத்தக்க திட்டங்களாகத்தான் இருக்கின்றனவே தவிர, நிரந்தரமாக, நிலையாக ஒரு நிலை உருவாவதற்கு ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். மேலும், வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில், இரண்டு கோடி ரூபாய்த் திட்டம் என்று பல இடங்களிலே போர்டுகள் போடப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட திட்டங்களை இராமநாதபுரம் மாவட்டத்தில் பார்க்கிறோம். ஆனால் இப்படிச் செய்யப்பட்ட வேலைக்கு இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. வேலை வாங்கியவர்கள் பிளாக்கில் உள்ளவர்கள். இதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள், சங்கடப்படுகின்றார்கள். வேலைகள் முழுமையாகச் செய்யப்படவில்லை என்றாலும்கூட, செய்த வேலைக்குப் பணம் தரப்படவில்லை என்று சொல்லும்போது கஷ்டமாக இருக்கிறது. எனவே இதைப் பரிசீலித்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மது விலக்கு ரத்து செய்யப்பட்டதால், அந்தக் கஷ்டமான பகுதிகளில் கஷ்டம் இன்னும் அதிகமாக இருக்கிறது. நாங்கள் அன்றே எடுத்துச் சொன்னோம். இந்தச் சனியனை வைத்துக் கொண்டிருப்பதால் ஒரு பத்து, பதினைந்து கோடி ரூபாய் வருமானம் கிடைத்தால் அது பெரிதல்ல. இதை ஒழித்துக் கட்டினால் பல குடும்பங்கள் மறுபடியும் பழையபடி நிம்மதி பெறும். ஐம்பது வீடுகளைக் கொண்ட ஒரு சிறு பகுதி, என்ன நினைத்துக் கொண்டதோ, ஒரு நாளைக்கு கள் குடிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு பெண்டாட்டி, பிள்ளை, குழந்தைகள் எல்லோரும் கள் குடித்துவிட்டு வந்தார்கள். அன்றும் மறு தினமும்



25th January 1972] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

வீடு பூராவும் பட்டினி. இந்த நிலைமை ஒரு பகுதி வீடுகள் பூராவும் ஒரு நாள் நடந்தது. அரசாங்கத்திற்கு வருமானம் குறைந்து, செய்யப்பட வேண்டிய வேலைகள் செய்யப்படாமல் போகும் நிலை, அதிர்ஷ்டவசமாக தமிழ் நாட்டில் இல்லை. 93 கோடி விற்பனை வரி கிடைக்கும் என்று கணக்கிட்டோம். இப்போது 100 கோடிக்குமேல் வந்துவிட்டது என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். இதைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெருநகர்ப் பகுதி வேலை சம்பந்தப்பட்ட வரையில் நேற்றுச் சொன்னார்கள். நகர்ப் புறங்கள் தான் பிரதானம் என்று நாம் நினைத்தால், அந்த வேலைகள் அங்கு நடைபெறுகின்றபோது, கிராமப்புறங்களில் இருக்கின்றவர்கள் நகர்ப்புறக் குடிசைகளுக்குச் சமமாகக்கூட வாழ முடியவில்லையே என்று நினைக்கும் மனப்பான்மை வளர்ந்து விடுகிறது. நகர்ப்புறங்கள் முடிந்த பிறகு, கிராமங்களுக்கு வரலாம் என்று நினைத்தால், சமுத்திரத்தில் அலை ஓயப்போவதில்லை, நாமும் குளிக்கப் போவதில்லை. நாம் நகரத்தை மட்டுமே பெருக்கி வாழ வைத்தால், நமக்குத் தலைவலி தான். அது அரசாங்கத்திற்கும் தலைவலி, நம் எல்லோருக்குமே தலைவலி தான். நேற்று திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிகாரங்கள், அமைப்புகள் ஒரே இடத்தில் வைக்கப்படாமல் பிரித்து வைக்கப்பட்டால், காரியங்கள் துரிதமாக நடைபெறும் என்று சொன்னார்கள். அதைச் செய்ய வேண்டும், அப்படிச் செய்தால் அரசினுடைய அமைப்புக்கோ அதனுடைய நிர்வாகத்திற்கோ சங்கடம் ஏற்படாது. ஒரே ரிஜிஸ்ட்ரார் இருந்த இடத்தில் பல ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார்கள் போடப்பட்டு இப்படியாக வளர்ந்து கொண்டே போகிறது. அதே போல் விவசாயத் துறையில் பத்து ஜாயின்ட் டைரக்டர்களுக்கு மேல் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஜில்லாவுக்கு ஒருவராக போடப்பட்டு அந்தந்தப் பகுதி மக்களுடைய பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்று ஆராய்ந்து அங்கேயே தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளைப் பரவலாக்குவது நல்லது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'நாட்டுப்புறத்தை புதுமைப்படுத்துவதில் தொடர்ந்து நாம் முயற்சிகள் மேற்கொண்டு வருகையில், மாநகருக்குள் மூளைக்கும் குடிசை வாழ் பகுதிகள் பிரச்னையையும் தீர்க்க வேண்டியுள்ளது' என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நகர்புறங்களைப் போலவே, கிராமப்புறங்களிலும் பசுமை தெரிய வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். அங்கேயும் வசதிகள் பெருக வேண்டும். இந்த உரையில் அது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். வளரும் தலைமுறைக்கு அந்தப் பகுதிகளை நல்ல முறையில் சீரமைத்தாலொழிய, அவர்கள் அங்கே தங்க மாட்டார்கள். நகரங்கள் விடமைப்பு முடியும் வரை பொறுத்திருப்பது என்பது கூடாது. அதற்கு இப்பொழுதே நல்லதொரு திட்டத்தை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச்

செய்ய வேண்டும். நகரப்புறங்களில் உள்ளவர்கள்தான் அதிக வருமானம் கொடுக்கிறார்கள், அவர்களுக்கு அதிக வசதி தேவை என்று சொல்லப்படும் ஒரு வார்த்தை அரசு மேற்கொள்ளாது என்று கருதுகிறேன். சர்க்காருக்கு அதிக வருமானம் கொடுக்கிறவர்கள் கிராமப்புற மக்கள்தான். அந்தப் பகுதிகளுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்குப் பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆறு கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறோம். வீடு கட்டும் சங்கங்கள் என்று பெயரளவில் வைத்திருக்கிறோம். ரூரல் ஹவுசிங் சொசைட்டி என்று வைத்திருக்கிறோம். கடன் கேட்டால், பணம் இல்லையென்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. நாராயணசாமி** : அவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன். நீண்ட நேரம் பேச வேண்டுமென்று ஆசையில் இருந்தாலும், இருக்கின்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்ற போது, இங்கு யாரைப் பார்த்து எதைச் சொல்வது என்று புரியவில்லை. இருந்தாலும் இந்த உரையின் மீது எல்லோரும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் நடந்த போரைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறி, வெற்றிக்குக் காரணமாயிருந்த நமது படைகளுக்கு பாராட்டுதல்கள் தெரிவித்து, போரில் உயிர்நீத்த வீரர்களுக்கெல்லாம் அனுதாபத்தைத் தெரிவித்து கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் போரில் நாட்டு மக்கள் எல்லோரும் ஏகமனதாக ஒத்துழைப்பு தந்திருக்கிறார்கள். உலகம் மிக கவனத்தோடு இந்தப் போரைக் கவனித்து வந்தது. குறிப்பாக அமெரிக்கா போன்ற பிற்போக்கு நாடுகள் எல்லாம் உலகத்திலே தங்களது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே ஒரு குழப்ப நிலையை உண்டாக்கி வந்தார்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். அமெரிக்காவைப்பற்றிக் கண்டித்த குரலில் நாம் அதிகம் சொல்லவில்லை என்று சிலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அதைச் சொல்வதன் காரணமாக, தங்களை முற்போக்கு வாதி என்று காட்டிக்கொள்ள முடியும் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்று வந்த பிறகு சொன்னார்கள். அமெரிக்காவில் நிர்வாகப் பொறுப்பில் இருக்கின்றவர்கள் சரியாகயில்லையே தவிர, அமெரிக்க மக்கள் இந்தியாவின் மீதும், வங்க தேச மக்கள் மீதும் மிக அனுதாபமாகவிருக்கிறார்கள். இதைத் தப்பு அர்த்தம் பண்ணிப் பெரிதாக விளம்பரப்படுத்தி விட்டார்கள். அமெரிக்காவினுடைய கொடுமையையோ அமெரிக்காவால்தான் இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது என்பதையோ எடுத்துக் கூறுவதில் நம்முடைய அமைச்சர்களில் எவரும் மற்றவர்களுக்குக் குறைந்தவர்கள் இல்லை. இந்த சர்க்காரில் இருக்கின்ற அமைச்சர்கள் நன்கு பாடம் படித்தவர்கள். ஆகவே பொதுவாக நம்முடைய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் கூறப்பட்டுள்ள யுத்த விவரங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. இதிலே குறிப்பாக தமிழ் நாட்டு சர்க்கார் எடுத்துக்கொண்ட போர் வெற்றி முயற்சிகள் நல்ல முறையில் அமைந்து, அவைகளுக்கு ஆதரவு கிடைத்ததுபற்றி எல்லாம் எடுத்துக் கூறி, அதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் யுத்தம் முடிந்த பிறகு நாம் மேலும் பாதுகாப்பு நிதிக்கு ரூபாய் பத்து கோடி தர வேண்டுமென்று அறிவித்தார்கள். ஒரே திங்களில் பல கோடி ரூபாய் சேருகின்ற அளவில் மக்கள் ஆதரவு தந்தார்கள். இந்தப் போரில் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி, பல உயிர்களை இழந்த குடும்பங்களுக்கு உதவிட நம்முடைய பிரதம மந்திரி பல நல்ல திட்டங்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு அவைகளுக்கெல்லாம் ஒத்துழைப்புத் தருவதாக அறிவித்திருக்கிறது. அதற்கு மக்கள் அனைவரும் தங்களுடைய முழு ஆதரவையும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசுகிறபோது ஒன்று குறிப்பிட்டார்கள். சிம்சன் கம்பெனி பிரச்சினை தனக்கு ஒன்றும் புரியவில்லை என்று சொன்னார்கள். உள்ளபடியே இது ஒரு பெரிய பிரச்சினை தான், ஒன்றுமே புரியவில்லையென்று சொன்னார்கள். இது பெரிய பிரச்சினையாக ஆக்கப்பட்டது. இப்போது நடந்த போரில் மக்கள் கவனம் இருந்தபோது இந்தப் பத்திரிக்கைகள்எல்லாம் சேர்ந்து காட்டூர் கோபாலைப் பற்றி தினமும் போட்டு வந்தார்கள். இந்த சிம்சன் பிரச்சினையில் அவர்கள் காட்டியிருக்கிற அக்கறை மிக அதிகம். இந்தியா பாகிஸ்தானோடு போர் நடத்துகிறபோது இந்தியாவிற்குச் சாதகமாக கொடுக்கப்பட்ட விளம்பரத்தை விட அதிகமான விளம்பரம் காட்டூர் கோபால் பதவியிலிருந்து விலக வேண்டுமென்ற பிரச்சினைக்குக் கொடுக்கப்பட்டது. இதைப்பற்றி நான் பேச வேண்டுமென்று நினைக்கவில்லை. திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லையென்று சொன்னார்கள். இதிலே ஒன்றுமில்லை. ஆனால் பத்திரிகைகள் வசம் கட்டிக் கொண்டு பிரமாதப் படுத்தினார்கள். யுத்த நிதி சேர்க்க வேண்டுமா இல்லையா என்பதில் அக்கறை காட்டவில்லை. இதற்காக ஐக்கிய முன்னணி, சர்வ கட்சி கூட்டம் கூட்டி இதைப் பெரிய பிரச்சினை ஆக்கினார்கள். இதில் தொழிற் சங்கத்தைச் சேராதவர்கள் சேர்ந்தார்கள். இதில் சுதந்திராக் கட்சி தலைமை நின்று போராடியது, அது தொழிலாளர்களுக்காகப் போராடியது இந்த நாடு செய்த பாக்கியம். இதில் ஒரே பிரச்சினை என்னவென்றால், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சண்டையில்லை. காட்டூர் கோபால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன், இதிலே இருக்கக்கூடாது என்பது தான். இதில் சுதந்திராக் கட்சிக்காரர்கள் தலைமை வகித்தார்கள். தமிழ் நாட்டில்

[திரு. பி. நாராயணசாமி] [25th January 1972

இது ஒரு பெரிய அதிசயம். இன்றைக்கு அரசியலில் இந்தியா இருக்கிற நிலைமையையும் யுத்தத்தில் ஈடுபட்டு நம் வீரர்கள் குடும்பங்களெல்லாம் எவ்வளவு, சங்கடப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற நிலைமையையும் பாராமல் அவ்வளவு வேகமாக இந்தப் பிரச்சினையில் போராடினார்கள் காட்டூர் கோபால் வந்தாய் விட்டது. இரண்டணா கூலி உயர்வு வேண்டுமென்று போராட்டம் நடந்தால், முதலாளி ஒரு அணா கொடுத்து போராட்டத்தைச் சரிக் கட்டுவார்கள். இது தொழிலாளி சார்பாக தொழிற்சங்கம் முதலாளிகளோடு பேசுகிற பேச்சு. இதிலே பல முறைகள் தலையிட்டு எல்லா கட்சிகளும் சேர்ந்து நடத்தியிருக்கிறோம். திடீர் திடீரென்று ஏற்படும் போராட்டங்களில் அமைதி ஏற்படச் செய்வோம். இது தொழிலாளர்களுக்குச் சாதகமாக நடத்தப்பட்ட போராட்டமல்ல. யார் விட்டிலாவது கேடு நடந்தால், அடுத்த விட்டு அம்மா அந்த விட்டிற்கு வந்து தன் மாமியார் செய்த குறைபாடுகளைச் சொல்லி ஒப்பாரி வைத்த மாதிரி சிம்சன் பிரச்னையைச் சொல்லி முதலமைச்சர் தலைபில் எந்த அளவிற்குக் குற்றம் சாட்டவேண்டும், சர்க்காரை ஆட்டலாமா என்ற ஒரே பிரச்னைதான் தலைகாட்டியது இப்போது கூட கவர்னர் அவர்கள் அறிக்கையில் தொழிற் சங்கத்தில் தொழிலாளர்கள் தான் தலைவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சங்க வாதிகள் வெளியார் இருக்க வேண்டும், உள் ஆள் இருந்தால் அவர்கள் பயப்படுவார்கள் என்கிறார்கள். தொழிற் சங்கத்தில் தலைவராக இருப்பவர்கள் தொழிலாளியாக இல்லையாவென்றால், நிறையப் பேர் இருக்கிறார்கள். திறம்பட நடத்தி வருகிறார்கள். ஆனால் வெளியார் கவலைப்படுகிறார்கள். சிம்சனில் என்ன பிரச்னை என்றால், காட்டூர் கோபால் இருக்கக் கூடாது. ஒப்பந்தம் செய்து கொண்டதில் தவறு என்றார்கள். முதலமைச்சர் காட்டூர் கோபால் வேண்டாம் என்று சொன்னால், தேர்தல் இன்னும் 30, 40 நாட்களில் வருகிறது; அப்போது செய்து கொள்ளுங்களேன் என்றார்கள். காட்டூர் கோபால் வெளியேற வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தியது. பொதுவாக தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும் சொல்கிறேன். சோஷலிசத்தில் தீவிரம் என்று பேசிக்கொண்டிருப்பார்கள். ஒரு தேர்தலில் பார்த்தால், யார் பிற்போக்குச் சக்தியை வளர்த்திருக்கிறார்கள் என்று பார்த்தால், யார் தீவிரமாக சோஷலிசம் பேசுகிறார்களோ அவர்கள் தான் செய்திருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரைக்கும் சோஷலிசக் கொள்கையிலோ பிற்போக்கு வாதிகளை எதிர்ப்பதிலோ எந்தப் பொதுத் தேர்தலிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரைக்கும் நிச்சயமாக மாறியது கிடையாது. ஒரு தேர்தலில் பார்த்தால் தாங்கள் பெரிய சோஷலிச வாதி என்று சொல்லிக்கொள்கிறவர்கள் அந்தத் தேர்தலில் ஒரு தலைவரைப் பிடித்து அவர் தான் சோஷலிச வாதி என்று அறிமுகப்படுத்துவார்கள். அடுத்த வருஷம் அந்த ஆள்



25th January 1972] [திரு. பி. நாராயணசாமி]

பிற்போக்கு வாதி என்று சொல்வார்கள். அவர்கள் சொல்கிறார்கள், அமெரிக்காவினுடைய வாரிசுகள், அந்தக் கொள்கையை ஆதரிப்பவர்கள் தமிழகத்தில் நம் பகுதியில் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் சோஷலிசக் கொள்கை கொண்டவர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள். சோஷலிஸ்டுகள் என்று சொல்லவில்லை. அவர்களுக்கு நேற்று ஒரு கொள்கை, 1967-இல் ஒரு கொள்கை, 1972-இல் ஒரு கொள்கை, 1976-இல் ஒரு கொள்கை இப்படியே அவர்கள் கொள்கையை மாற்றுவதில் மிக்க வல்லவர்கள். மக்களிடம் அறிமுகப்படுத்தும்போது பார்த்தால், தாங்கள் தான் பெரிய சோஷலிச வாதி என்று சொல்வார்கள். இன்றைக்குத் தமிழ் நாட்டில் பெரிய தலைவர் ஒருவரைப் பார்த்து அவர் தான் முற்போக்கு வாதி என்று சொல்வார்கள். 5 வருஷம் கழித்து அவர் பிற்போக்கு வாதி, நாங்கள் முட்டாள்தனமாக ஏமாந்து போய்விட்டோம் என்று சொல்வார்கள். எல்லோரும் சேர்ந்து கொண்டு இந்த சிம்ஸன் பிரச்னையில் அதி தீவிர வாதிகளாகி விட்டார்கள். சிம்ஸன் பிரச்னையில் சாதாரணமாகத் தெரிகிற பிரச்னை காட்டூர் கோபாலை வெளியே அனுப்ப வேண்டும் என்பது தான். நாம் பெரிய அரசாங்கத்தையே மாற்றுகிறோம். யார் யார் இருந்த இடத்தில் யார் யாரை உட்கார வைத்திருக்கிறோம்? மாறி உட்கார்ந்திருக்கிறோம். இவ்வளவு பெரிய பிரச்னையே மாறுகிற போது, மக்கள் கவனத்தைத் திருப்புகிற அளவிலே தொழிற் சங்க விவகாரத்தில் இப்படிப்பட்ட பிரச்னையை வைத்துக்கொண்டு பேசினார்கள். தொழில் அமைப்புகளை அதிகமாக ஆரம்பிக்கின்ற நல்ல நேரத்தில் பாடுபட்டு எந்தத் தொழிற்சாலையை மூட வேண்டுமென்று பார்க்கிறார்கள். இது தான் பிரச்னை. இப்போது ஒவ்வொரு கட்சிக்காரரும் நான் இதை மூடி வந்து விட்டேன், அந்தத் தொழிற்சாலையை மூடி விட்டேன் என்று பேசுவது வழக்கமாய் விட்டது. விவசாயத் துறையிலோ மற்றத் துறையிலோ இந்தத் தொழிற் சங்க வாதிகள் பேசுகிற போது, விவசாயிகள் உபயோகிக்கும் உரத்தின் விலை அதிகமாகப் போய்விட்டது என்று சொன்னது கிடையாது. விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று சொன்னது கிடையாது. விதை நெல்லைப்பற்றிப் பேசினது கிடையாது. எந்த அளவிற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்வதற்கு மனது வருவதில்லை. இவர்கள் தான் முற்போக்கு சோஷலிஸ்டு என்ற முறையில் பல திட்டங்களைச் சொல்லி வருகிறார்கள். தொழிலாளர்களே தொழிற்சங்கத் தலைவர்களாக இருப்பதில் ஆபத்தில்லை. இவர்கள் கூடாது என்று சொன்னால் கூட, கவர்னர் பெருமான் உரையில் சேர்த்திருந்தால் கூட, இந்த சிம்ஸன் பிரச்னையில் என்ன நடந்தது என்று உணர்ந்து பார்க்க வேண்டும். பொதுவாக தொழில் வளம் அதிகமாகப் பெருக வேண்டுமென்று சொல்லி தமிழகத்தில் தொழில் அமைதி இருந்தது. வேறே ஒரு காரணமும் இல்லை. 1967-இல் தமிழ் நாட்டில் ஆட்சி மாறிய ஒரே காரணமாக, ஆட்சிக் கொள்கை மாறியதன் காரணமாக அமைதி இருந்தது. முதலமைச்சர் எந்தக் காரியத்தில் சோஷலிசத்திற்கு, தொழிலாளர்களுக்குப்

பாதகமாக இருந்தார் என்று சொல்ல முடியாது. சொல்வதற்கு யாரும் கிடையாது. இப்போது கூட நம் தஞ்சை மாவட்டத்தில் வலிவலத்தில் ஒரு பெரிய பிரச்னை. சர்க்கார் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது தெரியும். 200 சொச்சம் ஏக்கரை பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கிற ஒரு முதலாளி பல பேரில் எழுதி வைத்துக்கொண்டு சாகுபடி பண்ணிக் கொண்டு வந்தார். இது கோயில் நிர்வாகத்தில் இருக்கப்பட்ட நிலம். இந்தப் பிரச்னை வந்தது. இதிலே நாங்கள் எல்லோரும் இருந்தோம். நம்முடைய சர்வோதயத் தலைவர் திரு. ஜகன்னாதன் அவர்கள் தலைமை வகித்தார். மற்றக் கட்சிகளோடு சேர்ந்து கொண்டு முற்போக்கு வாதி என்று சொல்கிறவர்கள், நாங்கள் தான் பொதுவுடைமைத் தத்துவத்தை நிலை நாட்டுகிறவர்கள் என்று பேசுகிறவர்கள், முதலாளிகட்கு "சைட்" பண்ணிக்கொண்டிருந்தார்கள். இது திரு. ஜகன்னாதன் அவர்களுக்குத் தெரியும். அப்போது அற நிலையப் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் இங்கே நடக்கிற பிரச்னையில் விவசாயிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே சண்டையில்லை. இது சர்க்காருக்கும் இருக்கிற மிராசுதாருக்கும் இடையே சண்டை என்று பேசினார். திரு. ஜகன்னாதன் அவர்கள், நான் எத்தனையோ தலைவர்களைப் பார்த்திருக்கிறேன், இந்த அளவிற்கு ஏழைகளுடைய சார்பில் நின்று நல்லது செய்கிறேன் என்று சொன்னது மிகவும் நல்லது என்று பாராட்டினார்கள். என்னென்ன காரியங்கள் செய்து ஏழை விவசாயிகளுக்கு நிலம் வாங்கிக் கொடுக்க முடியுமோ அதை வாங்கிக் கொடுத்திருக்கிறது இந்த சர்க்கார். எந்தத் திட்டத்தை எடுத்தாலும், எந்தக் காரியங்களை எடுத்தாலும் பிற்போக்குத் தன்மை நிச்சயமாகக் கிடையாது. உலகத்தில் சைனா இருக்கிறது. அவர்கள் தான் பெரிய பொதுவுடைமை வாதிகள் என்று சொல்கிறார்கள். அவர்கள் கொடியில் சிவப்பு ரொம்ப ரத்தச் சிவப்பாக, டார்க் சிவப்பாக இருக்கும். மற்ற கம்யூனிஸ்டு நாடுகளின் கொடி கொஞ்சம் லைட் கலரில் இருக்கும். அவனும் அமெரிக்காவும் எப்படி ஒன்று சேர்ந்தார்கள்? அப்துல் காதரும் அமாவாசையும் என்று சொல்வார்கள் அல்லவா, அது போல் இப்போது சைனாவும் அமெரிக்காவும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அரசியலில் யாரும் ஏன் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலைமை தமிழ் நாட்டில் இருக்கிறது. சிம்லன் பிரச்னையில் இருக்கிறது. சென்ற பொதுத் தேர்தலிலும் அப்படித்தான் இருந்தது.

**மிஸ்டர் சேர்மன் :** அமாவாசைக்கு லீவு விடும்போது, அப்துல் காதருக்கும் லீவு தானே. (சிரிப்பு)

**திரு. பி. நாராயணசாமி :** அப்படி அவர்கள் நடந்துகொள்ளும் போது, தங்களை மக்களிடம் அடையாளம் காண்பித்துக்கொள்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. உள்ளபடியே சொல்கிறேன். நம் சர்க்கார் செய்துள்ள நல்ல காரியங்களுக்கு உதாரணமாக வலிவலத்தைப் போல் பலவற்றை என்னால் எடுத்துக்காட்ட





முடியும். தஞ்சை மாவட்டத்திலிருக்கிற விவசாயிகளுக்கு இந்த சர்க்கார் பெரிய நன்மைகளைச் செய்திருக்கிறது. நாங்கள் கனவு கூடக் கண்டிராத அளவுக்கு விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அரிசன விவசாயிகளானாலும் சரி, மற்ற நடுத்தர விவசாயிகளானாலும் சரி' 100-க்கு 90 பேர்கள் பிறருக்குச் சொந்தமான இடத்தில் தான் குடிசை போட்டுக்கொண்டு குடியிருக்கிறவர்களாவார்கள். வசதி படைத்தவர்கள் கூட கோவிலுக்குச் சொந்தமான அல்லது மிராசுதாருக்குச் சொந்தமான இடங்களில் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். கோவிலுக்கு டிரஸ்டியாகப் போய் அல்லது எப்படியோ செல்வாக்கு உண்டாக்கிக்கொண்டு இருந்து வருகிறார்கள். அங்கேயிருக்கிற நிலமும் 40 சதவீதம் வரை கோயிலுக்கோ அல்லது மிராசுதாருக்கோ தான் சொந்தமாக இருக்கும். 2,000 வேலி நிலம், ஒரு தாலூகா முழுவதும் ஒரு மிராசுதாருக்குச் சொந்தம். பக்கத்திலுள்ள தாலூகா அவருடைய சம்பந்திக்குச் சொந்தம். இவ்வளவு நிலப்பரப்பு சொந்தமாக உள்ள மிராசுதாரர்கள் வேறு எந்த மாவட்டத்திலும் கிடையாது. குடியிருக்கிறவர்களுக்கு அந்த நிலம் சொந்தமென்று ஆக்கியிருக்கிறது நம் சர்க்கார். இப்படியெல்லாம் செய்திருக்கும்போது உற்பத்தியில் ஏதாவது குறைந்திருக்கிறதா என்றால், இல்லை. சிறப்பாகக் கடன்கள்—குறைந்த கால, நீண்ட காலக் கடன்கள்—கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் எங்கள் மாவட்டத்தில் எப்படி அதிகமாகக் கொடுத்தோமோ, அதைப் போல் நல்ல முறையில் வசூல் செய்திருக்கிறோம் சிறப்பாக. 1968-69-லே 50 லட்சம் டன்னாக இருந்த உற்பத்தியை சென்ற ஆண்டு 70 டன்—ஆக்கி, இப்போது 73 லட்சம் டன்னுக்குக் கொண்டு வந்து, அடுத்து லட்சம் டன்னுக்குப் போகும் அளவில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** இவ்வளவு விளைந்திருக்கிற போதும் விலைவாசி குறையவில்லையே.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விலை குறைந்துகொண்டு தான் வருகிறது.

**திரு. பி. நாராயணசாமி :** விலை ஏறுகிறதா இறங்குகிறதா என்று தெரியாது. விலை ஏறினாலும், விவசாயிகள் நமக்குக் கொஞ்சம் அதிகமாகப் பணம் வருகிறது என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு கருப்பு மார்க்கெட் மிகவும் குறைவு. எங்கள் பகுதியிலிருந்து வெளியே போனால்தான் விலை கூடுகிறது. தஞ்சை விவசாயிக்கு அதிகம் கிடைக்கிறதில்லை. இரண்டு ரூபாய் விலை ஏறினால், கூட்டுறவுத் துறை, சிவில் சப்ளை இலாகா, ஃபுட் கார்ப்பொரேஷன் வந்து விடும். எங்களுக்கு நியாயான விலைக்குக் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். அதிகமாக உள்ள விலையெல்லாம் வாங்கிறவர்களுக்கும் விற்கிறவர்களுக்கும் இடையே உள்ள நிலைமைதான்.

*[திரு. ப. உ. சண்முகம்]* [25th January 1972

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நான் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். அரசாங்க விலைக்கே இப்போது நெல் அங்கே கிடைக்கிறது என்றுதான் தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்துள்ள செய்திகள் கூறுகின்றன. இந்த நேரத்தில் நான் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு இந்த அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்வது, அரசாங்கம் அறிவித்திருக்கிற உத்தரவாத விலைக்கு அரசாங்கம் வாங்க எப்போதும் தயாராக இருக்கிறது. எஃப்.சி.ஐ. இதற்கு ஏஜன்டாக நியமிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏஜன்டுகளாக நியமித்திருக்கிறோம். தனிப்பட்டவர்களையும் நியமித்திருக்கிறோம். அவர்களுக்கெல்லாம் ஏஜன்டுகளுக்கு உள்ள கமிஷன் கொடுக்கப்படுகிறது. இந்த ஏஜன்டுகள் விவசாயிகளை மோசடி செய்து அரசாங்க விலைக்குக் குறைத்து வாங்கி, அரசாங்க விலைக்கே அரசாங்கத்திற்கு விற்று, மேற்கொண்டு கமிஷனும் பெற்றுவிடக் கூடாது, விவசாயிகள் ஏமாறக்கூடாது என்பதற்காக இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, விவசாயிகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்க விலைக்குக் குறைவாக யாருக்கும் கொடுக்கத் தேவையில்லை. அப்படி வாங்குவதற்கு எஃப்.சி.ஐ.யோ அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட எந்த ஒரு ஏஜன்டோ முயற்சித்தால், அதை அரசின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு வருவார்களானால், நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு உத்தரவாத விலைக்கு எவ்வளவு நெல் கிடைத்தாலும் அரசு வாங்கத் தயாராக இருக்கிறது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. நாராயணசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிவிப்புக்கு மிக்க நன்றி. நாங்கள் அப்படி ஒன்றும் ஏமாந்து போகவில்லை. அரசாங்க விலைக்குக் குறைத்து விற்கிற நிலை அங்கே இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** கிராமப்புறங்களில் உள்ள சிறிய விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குகிற இடங்களில் சரிவர வாங்காமல், சில சமயங்களில் அவர்கள் ஏஜன்டுகளாக இருக்கிறவர்களிடம் கொண்டுபோய்ப் போட வேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்படுகிறது. இந்த மாதிரி நிலைமை வராமல், அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியதைப் போல், அரசு பார்த்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களிடம் பேசும்போது, இதைப் பற்றி விவாதித்தேன். அவர்களும் இந்த நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட கஷ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எடுத்துச்சொல்லப்பட்



25th January 1972]

டிருக்கிறது. எந்தவிதக் குறையும் இருக்காது; அப்படி ஏதாவது குறை இருப்பதாகச் செய்தி இருந்தால், உடனுக்குடன் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** கூட்டுறவு ஸ்தாபனங்கள் இந்த மாதிரிக் கொள்முதல் செய்ய நியமிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். கிராமப்புறங்களில் எல்லாம் அநேக கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளுக்கே கொள்முதல் செய்யும் அதிகாரத்தைக் கொடுத்து, அவைகளே விவசாயிகளிடம் தானியத்தை வாங்கி அனுப்ப ஏற்பாடு செய்ய முடியாதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கிராமங்களிலுள்ள எல்லாக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் கொள்முதல் செய்யும் அதிகாரம் கொடுக்கவில்லை. எந்தெந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏஜன்டாக நியமித்தால் நல்லது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசீலித்து அவைகளை ஏஜன்டாக நியமிக்கும்படி சொல்லுகிறார்கள். அந்தப் பட்டியல் கூட தயாராக இருக்கிறது. தஞ்சையைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மன்னை நாராயணசாமி போன்றவர்கள். "ஐயோ, விலை விழுந்துவிட்டது வாங்க ஆள் இல்லை, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது" என்று பின்னால் கூச்சல் போடக் கூடாதே என்று எச்சரிக்கையாக இருப்பதற்காகத்தான், இந்த விளக்கங்கள் எல்லாம். நண்பர் திரு. மன்னை நாராயணசாமிக்கு அல்ல, தஞ்சைத் தரணி மக்களுக்காக. தெரிவித்தேன்.

* **திரு. கே. ராஜாராம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முக்கியமான அறிக்கை ஒன்றை இந்தச் சபை மூலமாக வெளியிட்டதால், மற்றொரு விளக்கத்தையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கிராமங்களிலே கொள்முதல் செய்யப்படும் நெல்லை 'கோடவுனுக்கு'க் கொண்டு போவதற்கான வண்டி வாடகை ஏற்றுக் கூலி, இறக்குக் கூலி இவற்றையெல்லாம் கழித்துக் கொண்டு மீதி விலை தான் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படிச் செய்யாமல், அரசாங்கம் நிர்ணயித்த விலை முழுவதும் கிராம விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தெளிவாக மறுபடியும் சொல்கிறேன். அரசு உத்தரவாதம் அளித்திருக்கிற விலை விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும். அதற்கு மேல் கமிஷன் ஏஜென்டுக்குக் கொடுக்கிறோம். அந்தக் கமிஷனை வைத்துக்கொண்டு டிரான்ஸ்போர்டேஷன் சார்ஜ் செய்து கொள்வார்கள். இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. டிரான்ஸ்போர்ட் சார்ஜை விவசாயிகளிடத்தில் கழித்துக் கொள்ளக் கூடாது. அரசாங்கம் உத்தரவாதம் அளித்திருக்கிற அந்த விலைக்கு அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

**திரு. பி. நாராயணசாமி :** தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், விவசாயிகளுக்கு 1967-க்கு முன் அந்தக் கஷ்டம் இருந்தது. 1967-க்கு முன்னால் நாங்கள் மக்கள் முன் வைத்த பிரச்னை அதுதான். 1967-க்குப் பிறகு எந்த விவசாயியிடமும்

மகசூலில் குறைத்து வாங்க முடியாது. குறுவை நெல் அறுக்கும் போது ஐப்பசி, கார்த்திகை மாதம், அடைமழை காலம். அந்த மாதங்களில் வியாபாரிகள் திறமையைக் காட்டி விலையைக் குறைப்பார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மன்னை நாராயணசாமிக்கு, அவருடைய தகவலுக்கு ஒன்று சொல்கிறேன். நேற்றைய தினம் சந்திரசேகரபுரம் கூட்டுறவு சங்கத்திலிருந்து அரசாங்க விலைக்கே நெல் வந்து வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகவல் தெரியாது. அந்தத் தகவல் வந்திருப்பதால் தெரிவிக்கிறேன்.

**திரு. பி. நாராயணசாமி :** அரசாங்க விலைக்கு எந்த விவசாயியும் குறைத்துக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. அரசாங்க விலை என்பது களத்துமேட்டு விலை என்று நிர்ணயிக்கவில்லை. ஆகையால் நம்முடைய தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த நிலையில்லை. தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை அமைச்சர் அவர்கள் அதிகமாக எடுத்துக் கொண்டதால் எனக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** கொள்முதல் செய்யும் இடத்திற்குக் கொண்டு வந்து மூட்டைகளைக் கொடுக்கிற பொறுப்பு விவசாயிகளுக்கு உண்டு என்று நண்பர் கூறுவதாகத் தெரிகிறது. அந்தப் பொறுப்பு விவசாயிகளுக்கு இல்லை என்று அமைச்சர் சொல்லுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எந்த இடத்தில் எஜெண்டு இருக்கிறார்களோ அந்த இடத்திற்குக் கொண்டு வந்து கொடுக்க வேண்டியது விவசாயிகளுடைய பொறுப்பு. எஜெண்டுகள் போய் வாங்குவது இப்போதில்லை. அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து கொடுத்தால் அரசாங்க விலைக்கு வாங்க வேண்டும். ஒரு மைல் முதல் மூன்று மைல்களுக்குள்ளாக ஏஜெண்டுகள் இருக்குமளவுக்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** வேறு மாவட்டங்களில் இப்படியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தஞ்சை மாவட்டத்தில் ஏறக்குறைய 15 லட்சம் ஏக்கர் அறுவடைக்கு வந்திருக்கிறது. ஏப்ரலில் நிறைய அறுவடைக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி மார்க்கெட்டுக்கு வரும்போது அவற்றை எடுத்துக் கொள்வோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** லெவி முறை இருப்பதால், தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளியில் அதிகமாக நெல் போகாமல் இருக்கிறது. லெவி முறையை எடுத்த பிறகு தஞ்சை மாவட்டத்தின் குறுவை நெல் வெளியில் செல்லும் வாய்ப்பு இருந்தது. அதனால் விலையும் அதிகம் கிடைத்தது. எல்லா இடத்திற்கும் போகிற நிலை இருந்தது. அமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல லெவி





முறையை எடுத்துவிட்டால், தஞ்சையிலிருந்து தாராளமாக நெல் வெளியே போவதற்கும் அதனால் அதிக விலை இன்னும் தஞ்சையிலிருப்பவர்களுக்குக் கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்குமென்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சங்கடமான நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. விற்கிற அரிசி விலை ஏறிவிட்டால் அரிசி விலை உயர்ந்துவிட்டதே என்று அரசைக் குறை சொல்கிறார்கள். நெல் விலை குறைந்தாலும், அரசைக் குறை சொல்கிறார்கள். இப்போது போடப்பட்டிருக்கிற லெவி முறையை அரசாங்கம் ரத்து செய்வதாக இல்லை. லெவி முறை இருப்பதால் தான் விலை குறைவாக இருக்கிறது. குறுவையில் நன்றாகச் சம்பாதித்திருக்கிறார்கள். இப்போது லெவியை ரத்து செய்துவிட்டால், அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிற சென்னை. கோவைப் பகுதிகளில் தேவையான நெல் கையிருப்புக்குக் கிடைக்காமல் போய்விடக்கூடும். அதற்குக் கொடுக்க வேண்டுமென்றுதான் 25% லெவி போட்டிருக்கிறோம். அதற்கு மேல் நெல் வந்தாலும், அரசாங்கம் ஸ்டாக் வைக்கத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெல்லை அதிகமாக வாங்கி, அரசாங்கத்தில் கையிருப்பு வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக லெவி முறையை வைத்திருக்கிறோம். இப்போது அதை ரத்து செய்வதாக இல்லை.

**திரு. பி. நாராயணசாமி :** தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குத் தனிச் சலுகைகள் வேண்டுமென்று நான் கேட்கவில்லை. எப்போதும் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு அதிகமான வருமானம் கிடைப்பதில்லை. ஒருசில பெரும் நிலச்சுவான்தார்கள் தான் அதிக விலைக்கு விற்பது வழக்கம். சாதாரண விவசாயிகள், கடன் வாங்கி விவசாயம் செய்கிறவர்கள் களத்து மேட்டிலேயே நெல்லை விற்கிறார்கள். வியாபாரிகள் அவர்களிடம் போய், குறைந்த விலைக்கு வாங்கி, ஸ்டாக் வைத்துக்கொண்டு, விலை ஏறிய பிறகு விற்பார்கள். சிறிய கிராமங்களைப் பார்த்தால், அங்கே எங்கு பார்த்தாலும் நெல்லை வைத்து சேறு கட்டி வைத்திருப்பார்கள். ரோடுகள், வீடுகள் கூட அதிகமாகப் பார்க்க முடியாது. ஆனால் இந்தச் சேறு கட்டி வைத்திருப்பதைப் பார்க்கலாம். ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து நெல்லைச் சேமித்து அப்படிச் சேறு கட்டி வைப்பார்கள். அவர்களிலே சிலர் வியாபாரிகள். சாதாரண விவசாயியிடம் விலையைக் குறைத்து வாங்கி, சீசன் முடிந்தவுடன் அதிகமான விலைக்கு விற்று சம்பாதித்து, பரம்பரையாகப் பழக்கப்பட்டவர்கள். 1967-க்குப் பிறகு சர்க்கார் முழு கவனத்துடன் இதில் அக்கறை காட்டுவதால் விவசாயிகள் நலமடைகிறார்கள். சிறிது விலை குறைந்தாலும், நாங்கள் அமைச்சர்களைப் பார்க்க ஓடி வருகிறோம். விலை குறைந்துவிட்டதே என்று குரல் கொடுக்கிறோம். எஃப்.சி.ஐ. மூலமாகவும் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவும் சிவில் சப்ளை மூலமாகவும் வாங்கப்படுவதால், இது வரையில் சர்க்கார் அனுமதித்த விலைக்குக்

[திரு. பி. நாராயணசாமி] [25th January 1972

குறைந்து விற்கக் கூடிய நிலைமை அங்கே ஏற்படவில்லை. ஆகவே சர்க்கார் விலையை மேலும் கூட்டிக் கொடுக்கும் அளவில் சிறு நஷ்டம் ஏற்பட்டாலும், சகாயத் தொகையாக மற்றத் தொழில்களுக்குக் கொடுப்பதைப் போல போனசாகக் கொடுத்தால், நன்றாக இருக்கும். ஆனால் இப்போது அதைக் கேட்பதற்கு நியாயமில்லை. அவர்களே கேட்காமல் கொடுப்பார்கள். அவர்களிடம் அந்தப் பெருந்தன்மை இருப்பதால் செய்வார்கள். இந்த வாரம் முழுவதும் சல்பேட் கிடைக்கவில்லை. எந்த தொழிற்சங்க வாதியும் அதுபற்றி வாய்திறக்கவில்லை. மத்திய சர்க்கார் ஒரு டன்னுக்கு 100 ரூபாய் விலை ஏற்றிவிட்டார்கள். மூட்டைக்கு ரூ. 10 அம்மோனியம் சல்பேட் விலை ஏறிவிட்டது. ஆனால் அங்குள்ள விவசாயிகள் இந்த சர்க்காரைத்தான் திட்டுகிறார்கள்.

* **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இடையில் யுத்த காலத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி நமக்கு ஏறத்தாழ 20 ஆயிரம் டன் வந்து சேரவில்லை. உடனே பாக்டரி உர கம்பெனியிலிருந்து நேரடியாகத் தருவித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. முதலாவதாக தஞ்சைக்கும் கோவைக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இடையில் இப்போது வந்துவிட்டது. மன்னை தெரிவித்தது போல டன்னுக்கு ரூ. 100 அதிகமாகத்தான் இருக்கிறது. மூட்டைக்கு ரூ. 10 அதிகமாகக் கொடுத்து வாங்குவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். கோவை மாவட்டத்தில் கொண்டுவந்து இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த மாவட்டத்திற்குத் தேவையானால், உடனடியாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்போது இருப்பில் உரம் இருக்கிறது.

**திரு. பி. நாராயணசாமி:** இப்போது எங்களுக்குத் தேவையில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு தேவையிருக்கும். தண்ணீர் வந்த பிறகு அம்மோனியம் சல்பேட் தெளிக்கப்போகிறோம். மன்னார்குடியில் உர ஆலை வைத்திருக்கிறோம். குறைந்த அளவில் விலை நிர்ணயம் செய்து கலந்து விற்பதற்கான ஏற்பாடு செய்துவிட்டோம். தனிப்பட்ட வியாபாரிகளோடு போட்டி போட முடியவில்லை. மத்திய சர்க்கார் எந்த எண்ணத்தில் விலையை உயர்த்தியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அமோனியம் சல்பேட்டை விட யூரியா மட்டமில்லை. ஆனால் அமோனியம் நல்லது என்ற எண்ணம் மக்களிடத்தில் இருக்கிறது. அதை நம்முடைய சர்க்கார் மாற்ற வேண்டும். டிராக்டருக்கு ரேட்டு ரூ. 30-லிருந்து ரூ. 60 பண்ணியிருப்பதாகத் தெரிகிறது. டிரில்லுக்கு ரூ. 10 லிருந்து ரூ. 40 செய்திருக்கிறார்கள். மணிக்கு ரூ. 35 என்பது இப்போது மணிக்கு ரூ. 60 ஆக்கியிருக்கிறார்கள். இது மத்திய சர்க்கார் நிர்ணயித்ததா அல்லது மாநில சர்க்கார் ஏற்பாடா என்பதை அறிய விரும்புகிறேன்.



25th January 1972]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** டீசல் மற்றவை விலை உயர்ந்துவிட்டதால், அதுவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில் இதைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்று அவர்களிடம் கேட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மன்னை நாராயணசாமி அவர்கள் விலை ஏறியதற்குக் காரணம் மத்திய சர்க்காரா, மாநில சர்க்காரா என்று கேட்டுவிட்டு, மாநில சர்க்கார்தான் என்றதும் என்ன சொல்வதென்று அவருக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இது விவசாயிகளுக்கு ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. நாராயணசாமி:** நானாவது அதைக் கேட்டேன். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அதையே மறந்துவிட்டார்கள். யார் செய்தாலும் நல்லது என்றால், நல்லது என்று பாராட்டுகிறோம். தவறு இருந்தால், அதைக் கேட்கிறோம். கிராமங்களில் எல்லாம் மின்சாரத்தை வழங்கியிருந்தாலும் கூட, திரு. நாயுடு அவர்கள் எங்கோ உள்ள ஒரு கிணற்றைத் தேடிப் பிடித்து அங்கே பம்புக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை என்றார்கள். 1966-67-ஆம் ஆண்டில் 25 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. இப்போது அது 48 ஆயிரம் கிராமங்களாக உயர்த்தப்பட்டிருப்பது பெருமைக்குரியதாகும். இவ்வளவு செய்தும்கூட ஏதோ ஒரு கிராமத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு மின்விசை இணைப்பு கொடுக்கப்படவில்லை என்ற குறை சொல்லப்பட்டது. செய்தவைகளைப் பாராட்டிவிட்டு குறையைச் சொல்லியிருந்தாலும், பரவாயில்லை. பாராட்டுகள் எங்கெங்கே உரியனவோ அங்கெல்லாம் நிச்சயம் பாராட்டுகளைச் சொல்லுவோம். குறைகள் இருந்தாலும் அவற்றை எடுத்துக் காட்டத் தயங்குவதில்லை. ஆள்வது யார் என்பது பிரச்சினை இல்லை. செய்பவைகளைத்தான் நாம் நோக்குகிறோம். எனவே அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றேன், இப்படி உயர்த்தப்பட்டுள்ள ட்ராக்டர் வாடகையைக் குறைக்க வேண்டும் என்று.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** குறைப்பது அல்லது உயர்த்துவது என்பது அரசாங்கத்திடம் இல்லை. இவற்றை நிர்ணயம் செய்வதற்கு என்று ஒரு கார்ப்பொரேஷன் இருக்கின்றது. எனவே கார்ப்பொரேஷனைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றுதான் நான் அமைச்சர் அவர்களிடம் கூறினேன்.

**திரு. பி. நாராயணசாமி:** எப்படியோ, இது குறைக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். விவசாயத் துறையில் மிக அதிகமான அளவிற்கு, தஞ்சை மாவட்டத்தில் நாங்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆனால் இப்போது பெய்த மழை காரணமாக மாவட்டத்திலுள்ள சாலைவசதிகள் அனைத்தும் சீர்குலைந்து போய்விட்டன. அவைகள் எல்லாம் முறையாகச் செப்பனிடப்பட வேண்டும். இப்போதுள்ள நிலை

என்னவென்றால், திருச்சி மாவட்டத்தில் ரோடு வேலையில் ஒரு ரூபாய்க்கு வேலை செய்தால், அதே வேலையைத் தஞ்சை மாவட்டத்தில் செய்வதற்கு பத்து ரூபாய் ஆகும். எனவே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், சாலை போடுவதிலோ பராமரிப்பதிலோ, மாவட்டத்திற்கு இவ்வளவு தொகை என்று ஒதுக்கும் முறையினை விட்டுவிட்டு, மாவட்டத்திற்கு இவ்வளவு மைல் நீளம் சாலைகள் என்று எடுத்துக்கொண்டால், தஞ்சை மாவட்டம் உண்மையிலேயே பயன்பெறும். மாவட்டத்திற்கு இவ்வளவு ரூபாய் என்று ஒதுக்கினால், அது தஞ்சை மாவட்டத்திற்குப் பயன்படாது. திருச்சி மாவட்டத்தில் ஒரு மைலுக்கு பத்தாயிரம் ரூபாய் என்றால், தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு மைலுக்கு 40 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் செலவாகும். திருச்சியிலிருந்து 20 ரூபாய் ஜல்லியைக் கொண்டுவருவதற்கு 80 ரூபாய், 100 ரூபாய் என்று வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே தஞ்சை மாவட்டத்திற்குச் சாலை போடுவதற்கு என்று ரூ. 10 லட்சம், திருச்சி மாவட்டத்திற்கு ரூ. 10 லட்சம், மதுரை மாவட்டத்திற்கு ரூ. 10 லட்சம் என்ற கணக்கில் நிதி ஒதுக்கினால், பிரயோஜனமில்லை. பதிலாக தஞ்சை மாவட்டத்தில் 10 மைல், திருச்சி மாவட்டத்தில் 10 மைல் என்று ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு என்று கோடிக்கணக்கில் செலவழித்திருக்கின்றார்களே ?

**திரு. பி. நாராயணசாமி :** அதனால்தான் நாடே வாழ்கிறது. முன்பெல்லாம் மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் கூறுவார்கள், 'பப்ளிக் வேஸ்டு டிபார்ட்மெண்டு' என்று. அந்த மாதிரி அத்துறையின்கீழ் மற்ற மாவட்டங்களில் செலவழித்தால், உல்லாசத்துக்குத்தான் பயன்படும். ஆனால் தஞ்சையில் செலவழிப்பதெல்லாம் தங்கமாகத் திரும்பிவருகிறது. தஞ்சை மாவட்டத்தில் செலவழிப்பது அனைத்தும், இம்மாநில சர்க்காரைப் பலப்படுத்தும். இன்று மத்திய அரசே சொல்லியிருக்கிறது, உணவு உற்பத்தியில் 8.6 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது என்று. அதில் 90 சதவிகிதம் தஞ்சை மாவட்டத்திற்குத்தான் இருக்கிறது என்பதை யாரும் மறக்காமல் நன்றியுடன் இருப்பார்கள் என்று கருதுகிறேன். விளையாட்டிற்காகச் சொல்லவில்லை. இந்த ஆண்டிலிருந்து, சாலைகள் போடுவதிலோ பராமரிப்பிலோ, மைல் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அதிலும் இந்த ஆண்டு பெரும் மழை பெய்துவிட்ட காரணத்தினால், மாவட்டத்தில் போக்குவரத்து மிகவும் சீர்குலைந்துவிட்டது. எனவே இதைப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.





மேலும் கடந்த இரண்டொரு ஆண்டுகளில் மின்சாரத் துறையிலும் மற்றத் துறையிலும் ஏற்படுத்திய முன்னேற்றங்கள் குறித்து பெருமைப்படுகிறோம், பாராட்டுகிறோம். அடுத்து, மாநிலங்களுக்கு மேலும் அதிகாரங்கள் வேண்டும் என்ற நமது கோரிக்கையில் யார் யார் எந்தெந்த அளவிற்கு அபிப்பிராயப்படுகின்றார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நமது உடன் இருப்பவர்கள் பலர் சர்க்காருடைய திட்டங்களைப்பற்றி தனியாகப் பேசும்போது வானளாவப் புகழ்ந்து பேசுகின்றார்கள். ஆனால் இப்படிப்பட்ட பொது மன்றங்களிலே பாராட்டுவதில்லை. அவர்களுடைய சங்கடங்கள் எனக்குப் புரியும். எனவே கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த எல்லாப் பிரச்சினைகளும் வெற்றிகரமாக முடிந்திருப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலும் எதிர்க் கட்சியினர் என்ற முறையில் குறைகள் சொல்லித்தான் தீர வேண்டும் என்ற முறையில் குறைகளைச் சொல்லுகின்றார்கள். ஆனால் அநேகமாக குறை காண வேண்டும் என்பதற்காகவே குறை சொல்லுவது என்று இருந்தால், எதிர் காலத்தில் எல்லாமே சிம்சன் பிரச்சினை மாதிரித்தான் தமிழ் நாட்டில் வருமே தவிர, ஒரு பிரச்சனையிலும் சர்க்காரை கொள்கை ரீதியிலும் குறை சொல்லத்தக்க அளவிற்கு இராது என்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிரச்சனைகளைக் குழப்பி விட வேண்டாம் என்று மட்டும் பிற கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தமிழகத்தின் தொழிற் துறைக்கு மிகச் சிறப்பான எதிர்காலம் இருக்கிறது. எனவே தொழிலாளர்களுக்கு அல்லது விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று அவர்களுடைய முன்னேற்றத்திற்கு என்று அரசு சில காரியங்களைச் செய்ய முனையும்போது கட்சி மாச்சரியம் கற்பிக்காமல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்க வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். இது வரையில் இந்த ஆட்சியில் தொழிலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்குக் குறை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று யாருமே சொல்ல முடியாது. ஆனால் பத்திரிகை உலகில் ஒரு சில வயிற்றெரிச்சல்காரர்கள் இருப்பதால் அவர்கள் இந்த அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மிகச் சாதாரண பிரச்னையையும் பெரிதுபடுத்துகின்றார்கள். இப்போது அந்தப் பிரச்சனைக்கு நான் அதிகமாகப் போக விரும்பவில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டியது பற்றிக் குறிப்பிட்டேன். இதை எல்லோருமே ஓரளவிற்கு ஒப்புக்கொள்ளத்தான் செய்கின்றார்கள். இப்போது ஒரு சிறிய விஷயத்தை எடுத்துக்கொண்டால், டிராக்டர் வாடகையைக் குறைக்க வேண்டுமானால், அரசுக்கு அதிகாரம் இல்லை. அம்மோனியம் சல்பேட் டன் ஒன்றுக்கு ரூ. 100 கூடியிருக்கிறது. இந்த விலையைக் குறைக்க வேண்டுமானால், அரசுக்கு அதிகாரம் இல்லை. எனவேதான் கூடுதலான அதிகாரம் வேண்டுமென்று எடுத்துச் சொல்லுகிறோம். கோடிட்டுத் தனியாகப் பிரித்துக் கொண்டு போய்விட வேண்டும் என்று யாரும் கோரவில்லை. இதைக் கேட்டால், ஒரு சிலர் கலைஞர் அவர்களை முஜிபர் ரெஹ்மானுக்கு

ஒப்பிட்டுப் பேசுகின்றார்கள். அதில்கூட தவறில்லை. ஆண்டவனை நேசிப்பவர்கள் அவனுக்கு அர்ச்சனை செய்யும்போது லட்சார்ச்சனை என்று செய்கின்றார்கள். அன்பினால் செய்கின்றார்கள். ஆனால் செய்யப்படும் அர்ச்சனையில் யாருக்காவது ஒரு பெயருக்கு அர்த்தம் தெரியுமா என்றால், தெரியாது. ஆனாலும் அன்பினால் அப்படிப் பெயரிட்டு அழைக்கின்றார்கள். அந்த மாதிரி நமது தமிழகத்திற்கு கலைஞர் அவர்கள் நல்ல பல கொள்கைகளை உருவாக்கிச் செயலாற்றி வருகின்றார்கள் என்பதற்காக ஒரு சிலர் அப்படியும் சொல்லலாம். கொள்கைக்காகத்தான் அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்றார்களே தவிர, தனிப்பட்ட தலைவர் தமிழ்நாட்டில் இல்லை. இப்படிப்பட்ட கொள்கைக்காக அவர் செய்த தியாகங்களை மதித்து அவரைப் புகழ்கின்றோம், பாராட்டுகின்றோம். இது பிடிக்காத ஒரு சிலர், அகில உலகக் கட்சி, அகில இந்தியக் கட்சி என்று சொல்லிக்கொண்டு பலாத்காரத்தின் வழி செல்லும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு எப்படியாவது இந்த அரசுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயலாற்றுவதுதான் வேதனை தரத்தக்கதாக இருக்கின்றது. இந்தத் தீவிர வாதிகளுக்கு தமிழ் நாட்டினை எதிர் நோக்கியிருக்கும் பிரச்சனைகளில் அக்கரை கிடையாது. அவர்கள் எதையும் அகில இந்திய ரீதியில்தான் 'அணுகுவோம் என்று சொல்லிக் கொள்ளுவார்கள். இப்போது விடுதலை பெற்ற பங்களா தேஷில் அதன் விடுதலைக்காக அனைவரும் தங்கள் கட்சி வித்தியாசங்களை மறந்து பாடுபட்டார்கள். ஆனால் இங்கே அதிக அதிகாரம் வேண்டும் என்று நாம் கோரும் கோரிக்கைக்கு ஆதரவளிக்கத் தயங்குகின்றார்கள். நாட்டைப் பிரித்தாக வேண்டும், துண்டு போட வேண்டும் என்று யாருக்கும் எண்ணமில்லை. இப்படிப்பட்ட பிரச்சனைகள் எழுமானால், தாய் நாட்டின், இந்திய நாட்டின் ஒற்றுமையைக் காப்பதில் யாருக்கும் குறைந்தவர்கள் இல்லை நாங்கள். எனவே அரசுக்கு மேலும் சில உரிமைகளை வாங்கிக் கொடுக்கும் பிரச்சனையில் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன். நாம் பிரிந்து போய்விட வேண்டும். பிரிந்து போய் நமது மாநிலத்திற்கு எல்லைக்கோடு வகுக்க வேண்டும் என்ற எண்ணம் நம்மில் யாருக்குமே இல்லை. நாம் மத்திய அரசிடமிருந்து அதிகமான உரிமைகளைப் பெற வேண்டும் என்பதுதான் நாம் வேண்டுவது. இன்றைக்கு நம்மைப் பிரிவினை வாதிகள் என்று சொல்பவர்களே, அண்மையில் நமது நாடு பாகிஸ்தானோடு சண்டையில் ஈடுபட்டிருந்தபோது நமது பிரதம மந்திரி அவர்களைக் குறை கூறி பத்திரிகையில் எழுதியதையும் நாம் படித்திருக்கின்றோம். அப்படிச் சொல்லிவிட்டு இங்கே வந்து இந்தியாவினுடைய ஒற்றுமையைப்பற்றிப் பேசுகின்றார்கள். அகில உலகத்தில் ரஷ்யாவைத் தவிர வேறு யாரும் நமக்கு ஆதரவு கொடுக்காத நோத்தில் இங்கு நமது மக்கள் தங்கள் கடமையைச் செய்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி பாகிஸ்தான் விஷயத்தில் குறை சொல்லிவிட்டார், அது தவறு என்று ஒரு





தலைவர் பத்திரிகையில் எழுதிவிட்டார். அந்தக் கட்சிக்காரர்கள் இப்பொழுது தேச ஒற்றுமையைப்பற்றிப் பேசுகிறார்கள். பிரிவினையைப் பற்றி முதலமைச்சர் பேசலாமா என்று பேசுகிறார்கள். நாட்டு உணர்ச்சியிலும், நாட்டு ஒற்றுமை உணர்ச்சியிலும் நமது அமைச்சர்கள் யாருக்கும் பின் வாங்கியவர்கள் அல்ல.

வேளாண்மைத் துறை நல்ல முறையில் வளர்ச்சி பெறுவதற்கு உரம் முதலியவற்றைக் குறைந்த விலைக்குத் தருவதோடு, விவசாயக் கருவிகளையும் பெற்றுத் தந்தால் நல்லதொரு நிலைமை உருவாகும் என்று தெரிவித்துக்கொண்டு கவர்னர் அவர்களது உரை மிகச் சிறந்ததாகும், அதை முழுவதுமாக ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பேருரையில் எல்லோருக்கும் நம்பிக்கை தரக்கூடிய பல கருத்துக்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் வரவேற்க வேண்டும். குறிப்பாக வேலையில்லாத் திண்டாட்டத்தின் கடுமையை நமது அரசு நல்ல முறையில் உணர்ந்திருக்கிறது, அதைப் போக்குவதற்கு நல்ல நல்ல திட்டங்களை வகுத்துப் பணி செய்து வருவதையெல்லாம் பார்க்கிறோம். இது பெரியதொரு கஷ்டமான பிரச்சினை. இதை எல்லோரும் சேர்ந்து கடுமையை மேலும் குறைப்பதற்கு வழி காண வேண்டும். இத் தருணத்தில் நம்முடைய கல்விக் கொள்கையால் இந்த வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் தீவிரமாகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். அதை மட்டும் இப்பொழுது எடுத்துக் கூற விரும்புகிறேன். பத்திரிகைக் குறிப்புகளிலிருந்து ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகிய மூன்றையும் சேர்த்து கல்வியை 11 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாகக் குறைத்துவிடுவது என்று அரசாங்கம் முடிவெடுத்து விட்டதாகத் தெரிகிறது. அப்படி முடிவெடுக்கப்பட்டிருக்குமானால் அது பெரிதும் வருந்தத்தக்கது என்று கூற விரும்புகிறேன். இதனால் பயிற்சிபெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் தீவிரமடையும் என்று சொல்ல விரும்புகிறேன். இப்பொழுதே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலருக்கு வேலையில்லாத நிலைமை இருக்கிறது. நாமே 'அப்ரெண்டிஸ் டீச்சர்ஸ் ஸ்கீம்' என்று பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கிறோம். அப்படியிருந்தும் ஆயிரக் கணக்கான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பதினொரு ஆண்டுப் படிப்பை பத்து ஆண்டுகளாகச் சுருக்கினால் பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே இன்னும் வேலையில்லாத கொடுமை தீவிரமாகும். கேரளத்தில் இன்னும் சில ஆண்டுகளுக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மூடி வைப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். அங்கே இந்தப் பத்தாண்டுக் கல்வி முறை அமுலில் இருக்கிறது. நமது அரசு கல்வித்

[திரு. எம். ராஜா அய்யர்] [25th January 1972

துறை அதிகாரிகளைப் பக்கத்து மாநிலத்துக்கு அனுப்பி அங்கே இந்தப் பத்தாண்டு காலப் படிப்புத் திட்டம் எப்படி அமுலாக்கப் படுகிறது, அதன் விளைவுகள் என்னவென்று ஆராய்ந்து வர வேண்டும் என்று கருதுகிறேன். திடீரென்று அவசரப்பட்டு கல்வி இலாகா முடிவிற்கு வந்துவிடக் கூடாது. எங்கு பார்த்தாலும் கூக்குரல் ஏற்பட்டிருக்கிறது. பதினொன்றிலிருந்து பத்து ஆண்டு களாகக் குறைப்பதென்று முடிவாகிவிட்டதென்று பத்திரிகைக் குறிப்புகள் கூறுகின்றன. அப்படி முடிவு எடுத்திருக்கக் கூடாது என்று பெரிதும் நான் விரும்புகிறேன். அந்த முடிவை எடுக்கும் முன்னால் ஆலோசனைக் குழுக்கள் அமைத்து தீவிரமாக ஆலோசிக்க வேண்டுமென்று கருதுகிறேன். இது புதியதல்ல. 1960-ஆம் ஆண்டு 10 ஆண்டுகள் என்ற திட்டம் 2 ஆண்டுகளுக்கு அமுலில் இருந்தது. 1963-ம் ஆண்டில் அது கைவிடப்பட்டது. அது தோல்வியடையும் என்பதை, 2 ஆண்டுக்கால அனுபவமே எடுத்துக் காட்டியது. 1963ல் புது 8வது வகுப்பு, 9வது வகுப்பு என்று சொல்லப்பட்டது. அந்த ஆண்டு புது 8வது வகுப்பிலிருந்து தேர்ச்சி பெற்றவர் களெல்லாம் 10வது வகுப்புக்குச் சென்றார்கள். 8வது வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் 9வது வகுப்புக்கு அனுப்பப்பட்டு அவர்கள் 9வது வகுப்புக்குச் செல்கிறோம் என்ற மனத் திருப்தி அடைந்தார் கள். அதே வகுப்பு தான் புதிய 9வது என்ற நிலைமை ஏற்பட்டது. ஆரம்பப் பள்ளியிலா, நடுத்தரப் பள்ளியிலா அல்லது உயர்நிலைப் பள்ளியிலா, எங்கு எப்படிக் குறைப்பது என்பதைப் பார்க்க வேண்டும். சுலபமாக ஒரு கணக்கு சொல்லப்படுகிறது. மாதத்திற்கு 22 நாட்கள் வீதம் 10 ஆண்டுகளில் 2,200 வேலை நாட்கள் பள்ளி நடத்தினால் இப்பொழுது ஆண்டுக்கு 220 வீதம் 11 ஆண்டுகளில் கிடைக்கும் 2,200 நாட்களுக்கு சமம் என்று போட்டால், கணக்கு வந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. இது ஒரு கணித மாயம். Mathematical fallacy அது தப்பான கணக்கு. அப்படிப் பார்த்துக்கொண்டே போனால், ஆண்டு ஒன்றுக்கு 250 நாட்கள் வீதம் 9 ஆண்டுகள் கூடப்போதும் என்று போட்டு மேலும் குறைத்துவிடலாம். இது மாணவர்களின் கிரகிப்பு வேகத்தையும் தன்மையையும் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. ஒரு ஆண்டில் 365 நாட்களில் படிக்காத நேரத்தில் மாணவர்கள் நன்றாகப் படிப்பதற்கு வேண்டிய பற்பல விளையாட்டுகளில் ஈடு படுத்தி வருகிறோம். 11 ஆண்டுக் காலப் பள்ளிப் படிப்பைக் குறைத்தால், இது நடக்காத ஒன்றாகிவிடும். 1930லும் 1940லும் பள்ளிகளில் படித்த மாணவர்கள் 11 ஆண்டுக் காலம் படித்து கல்லூரிக்குச் சென்றார்கள். அப்படி வந்த மாணவர்கள் நல்ல வசதி பெற்ற சூழ்நிலையிலிருந்து வந்தவர்கள். இப்பொழுது சமூ கத்திலே ஒரு பெரும் புரட்சி ஏற்படுத்தியிருக்கிறோம். எந்த வித மான வசதியுமில்லாத சூழ்நிலையில் படிக்க வேண்டியவர்கள் இருக் கிறார்கள். படித்த பெற்றோர்கள் என்று சொல்லிக்கொள்ளும் வசதி படைத்த மாணவர்கள் இல்லை. எவ்வளவோ குறைபாடுகள் இருக்கும் குடும்பங்களிலிருந்து லட்சோபலட்சம் மாணவர்கள் பள்ளிகளுக்கு வருகிறார்கள். என்னுடைய பள்ளியிலேயே அரிஜன மாணவர்களும் பின் தங்கிய வகுப்பினர் என்று சொல்லப்படும்



25th January 1972] [திரு. எம். ராஜா அய்யர்]

இன மாணவர்களும் பலர் இருக்கிறார்கள். இராமனாதபுரம் மாவட் டத்தில் அவர்களின் எண்ணிக்கையைக் கணிசமாகப் பார்க்கலாம். 11 ஆண்டுக் காலம் படித்த படிப்பை ஒரு ஆண்டு குறைப்பது என்பது இந்த வசதியற்ற சூழ்நிலையில் உள்ள குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கும் அந்தச் சமூகத்திற்கும் நல்லதல்ல என்று கூறிக்கொள்கிறேன். ஆகையினால் பள்ளிப் படிப்பு காலத்தைக் குறைக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். உண்மையிலேயே பிற நாடுகளிலெல்லாம் இது கைவிடப் பட்டிருக்கிறது. இம்மாதிரி அடிக்கடி மாறுதல் செய்வது கூடாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு ரஷ்ய நிபுணர் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார். கடைசியில் கேள்விகள் கேட்கச் சொன்னார். கல்வியில் எப்படி மாறுதல் செய்கின்றீர்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றுதல் ஏற்படுகிறது என்று கேட்டதற்கு அவர் உடனே பதில் சொன்னார், "நாங்கள் 50 ஆண்டு காலம் அதைப் பற்றி ஆராய்கிறோம். அதன் பிறகு ஒரு முடிவெடுக் கிறோம். 5 அல்லது 6 தலைமுறைக்கு அதை மாற்றாமல் இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம்" என்று கூறினார். விலைவாசி என்பதைப் பற்றியெல்லாம் அவரிடம் கேட்கப்பட்டது. விலைவாசி யெல்லாம் பொருளின் சப்ளை, டிமாண்ட் இவைகளைப் பொருத்து மாறுமல்லவா என்று கேட்கப்பட்டது. "சப்ளை குறைந்தால் விலை அதிகமாகும். டிமாண்ட் குறைந்தால், விலைவாசி குறைந்து போகிறது. இது உலக நியதியா?" என்று கேட்கப்பட்டது. அவர் "நீங்கள் போஸ்டாபீசுக்குச் செல்கிறீர்கள். அங்கு 100 பேர் வந் திருக்கிறார்கள். கார்டு 10 பைசா விற்கிறது. 1,000 பேர் வந்துவிட் டால், 10 பைசா கார்டு 12 பைசாவுக்கு விற்கப்படுமா?" என்று கேட்டார். தபால் வில்லைகள் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்படுகின்றன. அம்மாதிரியாக மற்றப்பொருள்களை உற் பத்தி செய்ய முடியுமா என்று கேட்டதற்கு, "உங்கள் நாட்டில் எப்படிப் போஸ்டல் வில்லைகளை அரசினர் கண்ட்ரோல் பண்ணிக் கொடுக்கிறார்களோ அதே போல் விளை பொருள்களை யெல்லாம் நாங்கள் சேகரித்து இந்த விலைக்குத் தான் கொடுக்க வேண்டு மென்று கொடுக்கிறோம்" என்று சொன்னார். அதில் எந்தவிதமான மாறுதலும் இருக்காது என்று அவருடைய நாட்டு அடிப்படைத் தத்துவங்களை விளக்கிக்கொண்டிருந்தார். அரசாங்கமே செய் கிறது. முழு உற்பத்தியும் அவர்கள் கையில், கொடுப்பதும் அவர் கள் கையில். மீன்ஸ் ஆப் புரொடக்ஷன் அண்டு மீன்ஸ் ஆப் டிஸ்ட் ரிப்யூஷன் (Means of production and means of distribution) அவர்கள் கையில். இந்தப் பொருளாதாரத் தத்துவத்தைப் பற்றி இன்று பேச முன்வரவில்லை. என்னுடைய நேரத்தை கல்வித்தத்து வத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். அடிக்கடி கல்வித் திட்டத்தில் மாறுதல் செய்வது நல்லதல்ல என்று கூற விரும்புகிறேன். இப்பொழுது 8 ஆண்டுகள் முடிந்தவுடனே அது ஒரு கட்டம், ஒரு 'டர்மினல் ஸ்டேஜ்' என்று சொல்கிறோம். ஆரம்பப் பள்ளி 5 ஆண்டுகள், நடுத்தரப் பள்ளி 3 ஆண்டுகள், ஆக 8 ஆண்டுகள் முடிந்தவுடனே ஒரு மாணவன் ஒரு பொது அறிவு

[திரு. எம். ராஜா அய்யர்] [25th January 1972

பெறுகிறான். அதை வைத்துக் கொண்டு அவன் பிட்டராகவோ. மெகானிக்காகவோ தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்குச் செல்கின்றான். 11 ஆண்டுகள் கல்வி பெற்ற பிறகு ஆசிரியர் பயிற்சிக்குச் செல்கின்றான். இத்தனை ஆண்டு கல்வி கட்டாயம் தேவை என்று கூறுகிறார்கள். மேல் நாட்டு நிபுணர் மெக்காலே ஏன் அடிப்படைக் கல்வி ஆசிரியருக்கு அவசியம் என்று அழகாகச் சொன்னார். " நான் ஆசிரியர்களாக விரும்புகிறவர்களுக்கு ஆழமான கல்வி தேவை என்று விரும்புகிறேன். என்னுடைய பெட்டியின் சாவியை ஒருவரை நம்பிக் கொடுப்பதற்கு. அவரிடம் என் பெட்டியின் சாவியைக் கொடுப்பதற்குக் கூட நான் அஞ்சுவேன். அப்படிப்பட்ட ஒருவருக்கு என்னுடைய குழந்தையின் மனதின் சாவியைக் கொடுக்க முன்வருவேனா ? அத்துடன் நாட்டின் வருங்காலம், சிறப்பு, தலைவிதி எல்லாவற்றையும் அவரிடம் நான் கொடுக்க மாட்டேன். அவருக்குப் போதிய பொது அறிவு இருந்தாலொழிய அவரை நம்பி நாட்டின் மக்களை ஒப்பிக்க முடியாது " என்று மேல் நாட்டு நிபுணர் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். ஆகையினால் எத்தனை ஆண்டுகள் பொதுக் கல்வி வேண்டுமென்ற அடிப்படையை மாற்றவேண்டிய அவசியம் இன்றைக்கு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இதற்கு மற்றொரு காரணம் கூறப்படுகிறது. 11 ஆண்டுகளும் அதன் பிறகு 1 ஆண்டும் ஆக 12 ஆண்டும் இலவசக் கல்வி என்று சொல்லிவிட்டோம். இன்னும் ஒரு ஆண்டு கூடுமானால் அது அரசுக்கு ஒரு பெரிய பொறுப்பாகும். நிதி வசதி இடம் கொடுக்காது என்று கூறுகிறார்கள். வேண்டுமானால் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி தேவைதானா என்று மறுபடி ஆராயலாம். பள்ளிக் கல்வி இலவசமாகக் கொடுக்க வேண்டியது அவசியம்தான். கல்லூரியில் ஏழைகளுக்கெல்லாம் இலவசக் கல்வி இருக்கிறது. பிற்பட்ட வகுப்புகளிலிருந்து வருகிறவர்களுக்கு இலவசக் கல்வி இருக்கிறது. இதைத் தவிர அவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கோடிக் கணக்கில் கொடுக்கிறோம். 4 ஆண்டுகளுக்கு முன்னால் 1 கோடிக்குக் குறைவாக பிற்பட்ட வகுப்பிற்கு உதவியாகக் கொடுக்கப்பட்ட இடத்தில் இன்று 3 கோடிக்கு மேல் கொடுக்கிறோம் என்று நாம் கூறுகிறோம். இந்த சமுதாய நியாயத்தை யாரும் மறுக்க முடியாது. ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை. இத்தகைய உபகாரச் சம்பளங்களை அள்ளிக் கொடுக்கும் இந்த நாளில் நாம் புகுமுக வகுப்பில் எல்லோருக்கும் பணம் படைத்தவர்களுக்கும் இலவசக் கல்வி கொடுப்பது தேவைதானா என்பதை வேண்டுமானால் மறு பரிசீலனை செய்யலாம். அதற்காக நாம் இந்தப் பள்ளியின் கல்வி ஆண்டுகளை 11லிருந்து 10 ஆகக் குறைப்பது அபாயகரமானது என்று கூற விரும்புகிறேன். அப்படியே குறைக்க வேண்டுமென்ற முடிவிற்கு அரசு வந்து விடுமானால், இந்த 11 ஆண்டுக் கல்வி நம் சிறுவர்களுக்குக் கிடைக்குமாறு செய்ய வேண்டும். 10 ஆண்டுகள் பள்ளியில் படிக்க வேண்டும். ஒரு ஆண்டு பிரி பிரைமரி கிளாஸ் என்று வைத்துக் கொண்டு மறுபடி பேரை வேண்டுமானால் மாற்றலாம். 10 ஆண்டுக் கல்வி, அதற்கு முன்பு, 1வது வகுப்புக்கு



25th January 1972] [திரு. எம். ராஜா அய்யர்]

முன்பு, ஆரம்ப வகுப்பு இருக்கிறதல்லவா, முன்பெல்லாம் 1வது வகுப்பிற்கு முன்பு பாலர் வகுப்பு என்று ஒரு வகுப்பு உண்டு. அதை அப்போது அரை கிளாஸ் என்று சொல்வோம். அந்த மாதிரியாக பிராக்ஷனல் ஸ்டாண்டர்டு, பிரி பிரைமரி என்று வைப்போம். ஆனால் அதையும் ஒரு முன் யோசனையுடன் செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்போது முதல் வகுப்பில் சேருவதற்கு 5 ஆண்டு கட்டாயமாக முடித்திருக்க வேண்டுமென்று கூறுகிறோம். அப்போது தான் 16 ஆண்டுகள் முடிவு பெற்று கல்லூரிக் கல்வியைப் பெறுவதற்கு வேண்டிய மனப் பக்குவத்துடன் கல்லூரிக் கல்வியில் நுழைய முடியும். 5 பிளஸ், 5 வயது பூர்த்தியாகி இருந்தாலொழிய, ஒன்றாவது வகுப்பிற்குள் நுழைய முடியாது என்று இன்று விதி இருக்கிறது. ஆனால் இந்த விதி யாராலும் அனுஷ்டிக்கப்படுவதில்லை. 4 ஆண்டுகள் ஆனவுடனே 5 ஆண்டுகள் ஆகிவிட்டன என் குழந்தைக்கு என்று சொல்லி, 6 வயது என்று கூறி, பள்ளியில் சேர்த்து விடுகிறார்களே. பள்ளியில் சேர்க்கும்போது பிறந்த சான்று எதும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. குழந்தையை வீட்டில் வைத்துக்கொண்டிருப்பது கஷ்டமாக இருக்கிறது என்று 4 வயது முடிந்தவுடனே சேர்த்து விடுகிறோம். அந்தக் குழந்தைகளைப் பிறந்த சான்றுடன் 1வது வகுப்பிற்கு முன்பு பிரி பிரைமரி கிளாசில் சேர்க்க வேண்டுமென்று வைத்துக்கொள்ளலாம். அப்போது 5வது வயதில் பிரி பிரைமரி ஸ்டாண்டர்டிலும் பிறகு 1 முதல் 10 வகுப்புகளிலும் படிப்பார்கள். 5 ஆண்டு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் 3 ஆண்டு நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களும் 3 ஆண்டுகள் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களும் பணியாற்றுவார்கள். இதில் எந்தவிதக் குறைபாடும் இருக்காது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டதாரி ஆசிரியர்களின் ஏமாற்றத்தைப்பற்றி எனது நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்களும் திரு. சங்கரலிங்கம் பிள்ளை அவர்களும் மிக அழகாக எடுத்துக் கூறினார்கள். அரசாங்கம் இதிலும் அவசரப்பட்டு ஒரு முடிவிற்கு வந்து விட்டதாக நான் கருதுகிறேன். பட்டதாரி ஆசிரியர்களின் மனக்குறையானது நியாயமானது என்று கூற விரும்புகிறேன். அனுபவமுள்ள ஒரு தலைமை ஆசிரியர் நான். என் பள்ளியில் பார்க்கிறேன். ஒரு டிப்ளமா ஹோல்டர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்கிறார். 3 ஆண்டுகள் படித்து டிப்ளமா பெற்றிருக்கிறார். அதற்கு மேல் 6 வாரங்கள் ஆசிரியராக இருப்பதற்கு ஏதோ ஒரு 'ஓரியண்டேஷன் கோர்ஸ்' தான் பெறுகிறார். அவர்களுக்கு அடிப்படைக் கல்வி எஸ்.எஸ்.எல்.சி. தான். 3 ஆண்டுகள் எல்.எம்.இ., எம்.இ.இ. இப்படி படித்து பெயரளவில் சிறிய ஆசிரியர் பயிற்சி பெற்று அவர்கள் பெறும் சம்பளம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இல்லை. உயர்நிலைப்பள்ளி ஆசிரியரின் வேலை பள்ளியின் ஆணி வேர் என்று கூற வேண்டும். அவருடைய வேலைப்பளுவைப்பற்றிக் கூற ஆரம்பித்தால் பல நிமிஷங்கள் எடுத்துக் கூற வேண்டும். அதை இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்பவில்லை. அவர் இந்த என்ஜினியரிங் இன்ஸ்ட்ரக்டர்

பெரும் சம்பளத்தை விட 50 ரூபாய் குறைவாக வாங்குகிறார். என்ஜினியரிங் இன்ஸ்ட்ரக்டருக்கு 10 பீரியட்டுகள் வேலை. அதில் 10 பிள்ளைகள் இருப்பார்கள். 10 பீரியட்டும் வேலையில்லை, பல பீரியட்கள் பிராக்டிகல் வகுப்புகளாக இருக்கின்றன. அதைப் பார்க்கிறதற்கு ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர்கள் சீனியர் மெக்கானிக், ஜூனியர் மெக்கானிக் ஆகியோர் இருக்கிறார்கள். வேலைப் பளு மிகக் குறைவாக இருக்கக்கூடிய அவர்களுக்கு 325—65 வரையிலும் சம்பளம். வேலை முழுவதையும் பார்க்கக்கூடிய ஒரு பட்டதாரி ஆசிரியர் மனம் நொந்து வேலை செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. தனியார் பள்ளியில் இந்த என்ஜினியரிங் இன்ஸ்ட்ரக்டர்கள் எல்லாம் 5, 6 பீரியட்டுகள் போக 30 பீரியட்டுகள் சும்மா இருக்கிறார்களே என்று நீங்கள் சென்று லைப்ரரியைப் பாருங்கள் என்று அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கிறோம். அவர்கள் தனியார் பள்ளியில் செய்து தீர வேண்டுமென்ற கடமை உணர்ச்சியுடன் ஏற்றுச் செய்கிறார்கள். அம்மாதிரியான மனப்பான்மையை அரசினர் பள்ளியில் பார்க்க இயலாது. அங்கு வேலை பார்க்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கட்டாயம் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். இது பரிசீலனையில் இருக்கிறது, மறு பரிசீலனையில் இருக்கிறது என்று திட்டவட்டமாக ஒரு அறிக்கை வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்று முடிவெடுப்பது நியாயமல்ல என்று நான் நன்றாக உணர்கிறேன். இந்த எண்ணமில்லை என்று கூறுவது எனது மதிப்பிற்குரிய நண்பர்களுக்குச் செய்யும் ஒரு நல்ல காரியமல்ல என்று கூற விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர் பிரதிநிதிகள் இருவர், ஆசிரியர் தொகுதியிலிருந்து வந்து சபைக்குப் பெரிதும் தொண்டு செய்கின்ற சிறந்த நண்பர்கள் அவர்கள், அவர்கள் யார் என்று நாம் நன்றாக அறிவோம். அவர்கள் இப்போது மறுபடியும் தேர்தலுக்கு நிற்கிறார்கள். இல்லையென்ற முடிவை இப்போது கூறுவது சரியான காலமல்ல என்று கூறுகிறேன். இதைக் கட்டாயமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். பரிசீலனை செய்கிறோம் என்று அறிக்கை விடவேண்டும். அப்படி அறிக்கை விட்டாலொழிய, இந்த மேலவையில் சிறந்த சேவை செய்யும் அங்கத்தினர்களின் கைகள் கட்டப்பட்டு, அவர்கள் தேர்தல் வேலை செய்யவேண்டிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கப்போகிறோம். இது பெரிதும் வருந்தத்தக்கது. கட்டாயமாக மறு பரிசீலனையில் இருக்கிறது. இது தீவிரமான மறு பரிசீலனையில் இருக்கிறது என்று அரசு அனுதாபத்துடன் ஏற்றுக்கொண்டு இந்த அறிக்கை விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை ஆசிரியர்களின் பிரச்னை பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது நண்பர்கள், "வட ஆற்காடு மாவட்டத்தில் 17 பேர்களுக்குக் கிடைத்தால், நீங்கள் ஏன் பொறாமைப்படுகிறீர்கள்" என்று சொன்னார்கள். இந்தப் பிரச்னையில் இருக்கக்கூடிய அடிப்படை உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. டிஸ்ட்ரிக்ட் போர்டு ஹை ஸ்கூல் தலைமை ஆசிரியர்களை கவர்மென்ட் "பி" விங்குக்குக் கொண்டு வந்தோம், அவர்களுக்கு அதிகமாக கெஜட்டட் ஸ்கேல்



கொடுக்கிறோம் என்று சொன்னோம். கெஜட்டட் ஸ்கேல் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறோம். ஆனால் இப்போது என்ன சொல்கிறோம்? 1,000 மாணவர்களுக்கும் அதிகமாக இருக்கக்கூடிய பெரும் உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கிற தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 450—600 என்ற ஸ்கேலை ரூ 500—750 ஆக உயர்த்திக் கொடுக்கிறோம். இது கெஜட்டட் ஹெட்மாஸ்டர் ஸ்கேல் ஆகாது. 1,000 மாணவர்களுக்கு மேல் இருக்கிற பெரும் உயர்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் எல்லோருக்கும் விசேஷமான ஸ்கேல் இருக்கிறது. இது 'பி' விங்கில் இருக்கிறபடியால், இதுதான் கெஜட்டட் ஹெட்மாஸ்டர் ஸ்கேல் என்று எல்லோருக்கும் தோன்றுகிறது. நம் மாநிலத்திலேயே அப்படிப்பட்ட பள்ளிகள் 80 தான் இருக்கின்றன. அப்படிப்பட்ட கெஜட்டட் ஹெட்மாஸ்டர் போஸ்ட் ஒன்று கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை. ஒன்றே ஒன்று இராமநாதபுரம் மாவட்டத்தில், இரண்டு திருநெல்வேலி மாவட்டத்தில், மூன்று மதுரை மாவட்டத்தில், ஆக தென் மாவட்டங்கள் நான்கிலும் சேர்ந்து ஆறு போஸ்டுகள்தான். வடக்கு மாவட்டங்களில்தான் மற்ற 74 இடங்களும் இருக்கின்றன. இதை எடுத்துக் காட்டும்போது, வட ஆற்காட்டில் 17 பேர்களுக்குக் கிடைக்கிறதே என்று சொல்லும்போது, அவர்கள் சொல்லுகிறார்கள், "நாங்கள் எவ்வளவு சிரமப்பட்டு 1,000 பேர்களைச் சேர்த்திருக்கிறோம்; நாங்கள் ஏன் அதன் பலனை அனுபவிக்கக்கூடாது? ஏன் நீங்கள் பொறாமைப்படுகிறீர்கள்?" என்று. கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில், இந்த மாதிரியான எண்ணிக்கை வீக்கம் இருக்கிற பள்ளிகளை நாங்கள் சிரமப்பட்டு உடைத்து, சிறிய பள்ளிகளாக ஆக்குகிறோம். எது சீரிய தொண்டு என்று அரசு ஆராய வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். ஆண்டுதோறும் எங்கள் ஆண்டு அறிக்கையில் கூறுகிறோம், 1,400 பிள்ளைகளைக் கொண்ட இது பள்ளியா அல்லது தொழிற்சாலையா, இந்த எண்ணிக்கை குறைய வேண்டாமா, இவ்வூரில் இன்னும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள், அக்கம்பக்கத்தில் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்பட வேண்டாமா என்று. மூன்று உயர்நிலைப் பள்ளிகள் இருந்த எங்கள் இராமநாதபுரம் நகரைச் சுற்றி, இன்று 12 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஒரே இடத்தில் அதிகமாக இருந்த பிள்ளைகள் எல்லாம் சிதறி மற்றப் பள்ளிகளுக்குச் சென்று சிறந்த கல்வி பெற வழி செய்கிறோம். அதற்காக அவர்களுக்கு தண்டனை அளிப்பது போல் இருக்கிறது. "உங்களுக்கு இந்த கெஜட்டட் ஹெட்மாஸ்டர் ஸ்கேல் கிடையாது" என்று கூறுவது. அதை மறந்து விடுவோம்—வட ஆற்காடு மாவட்டத்தில் 1,000 பிள்ளைகளுக்கு மேல் இருக்கிற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு வேலைப்பளு அதிகம். ஆகவே அதற்குரிய ஸ்கேல் இருக்கட்டும், ஆனால் டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகளில் இருக்கிற ஹெட்மாஸ்டர்களுக்கு கெஜட்டட் ஹெட்மாஸ்டர் பதவிகளை மாநில ரீதியில் நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும். எப்படி பி.டி. ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேட் இருக்கிறதோ, அப்படியே டிஸ்ட்ரிக்ட் போர்ட் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் மாவட்டக் கல்வி அதிகாரி

களுக்கு ஒப்ப, 15 சதவிதம் செலக்ஷன் கிரேட் என்று கொடுத்து, அப்படிக் கொடுக்கும்போது, அதை மாவட்ட ரீதியாகக் கொடுக்காதபடி, மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 25 ஆண்டு அனுபவம் உள்ள தலைமை ஆசிரியருக்கு இல்லை என்று சொல்லி விட்டு, 10 ஆண்டே அனுபவம் உள்ள வட ஆற்காடு மாவட்டத் தலைமையாசிரியருக்கு கொடுத்துவிடாதபடி, இந்தமாதிரியான கெஜட்டட் ஹெட்மாஸ்டர் ஸ்கேலை மாநிலம் ரீதியில் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த செலக்ஷன் கிரேட் கொடுத்ததற்கு அரசுக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம்; இதைக் கொடுத்ததினால் ஏற்பட்ட விளைவுகளை அரசு கவனித்து, அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். ஏதோ கொடுத்து விட்டோம், குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவது அழகல்ல. டபுள் டெக்கர் பஸ்களை இப்போது எடுத்துவிட்டீர்கள். ஏன் முதலில் கொண்டு வந்தீர்கள் என்று கேட்டார்கள். சௌகரியமாக இருக்கும் என்று கொண்டு வந்தோம். பயணம் செய்பவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்பது தெரிந்தது, வாபஸ் வாங்கிவிட்டோம் என்று சொன்னார்கள். அந்த பதிலில் உள்ள நேர்மையைப் பாராட்ட வேண்டும். அதைத்தான் "இன்டெலக்டுவல் ஆனஸ்டி" என்று சொல்கிறோம். நாம் எதிர்பாராத முறையில் தவறு ஏற்படும்போது, தவறை ஏற்றுக்கொண்டு திருத்திக் கொள்வது தான் அழகேயொழிய, 'வைத்து விட்டோம், இதை மாற்றவே மாட்டோம்' என்று சொல்வது அழகேயல்ல. அந்த மாதிரி ஒரு துறையிலும் இல்லை. ஏன் இந்தக் கல்வித் துறையில் இருக்க வேண்டும்? செலக்ஷன் கிரேட் வைத்தோம், நல்லது என்று செய்தோம், மனமார ஆசிரியர்கள் எல்லாம் வாழ்த்துகிறார்கள். பின்னால் ஏற்பட்டது என்ன? ஒரு தனியார் உயர்நிலைப் பள்ளியில் 22 ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஒரு பி.டி. ஆசிரியருக்கு செலக்ஷன் கிரேட் இல்லை. ரூ. 450லேயே அவருடைய சம்பளம் நின்றுகொண்டிருக்கிறது. ஆனால் டிஸ்ட்ரிக்ட் போர்டு ஹைஸ்கூலில் 6 ஆண்டுகள் அனுபவம் உள்ள பி.டி. ஆசிரியருக்குக் கிடைக்கிறது. தனியார் பள்ளி ஆசிரியரிடம் படித்த மாணவனுக்கு, தொழிற் பயிற்சி பெற்ற மாணவனுக்கு 6 ஆண்டுகளில் செலக்ஷன் கிரேட் கிடைத்து விடுகிறது. அங்கே சென்று, 'எனக்கு செலக்ஷன் கிரேட் கிடைத்து விட்டது. சார். அது இல்லாமலேயே நீங்கள் சாகப் போகிறீர்களா?' என்று தனியார் பள்ளியில் இருக்கிறவரைப் பார்த்துக் கேட்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏன் இந்தக் கஷ்டம் ஏற்பட்டதென்றால், டிஸ்டிரிக்ட் போர்ட் ஹைஸ்கூலுக்கு 15 சதவீதம், தனியார் ஹைஸ்கூலுக்கு 10 சதவீதம் என்று வைக்கப்பட்டது. தனியார் பள்ளிகளுக்கு 15 சத வீதம் என்று வைத்திருந்தாலும், இந்தக் குறை தீராது. ஏனெனில் தனியார் பள்ளிகள் பல ஆண்டுகளுக்கு முன்னால் தோற்றுவிக்கப்பட்டன; அங்கே பணிபுரியும் ஆசிரியர்கள் மிகவும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.





ஆனால் சென்ற 10 ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட பள்ளிகள் எல்லாம் கவர்ன்மென்ட் 'பி' விங் அதாவது டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகள். புதிய 30 டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகளுக்கு ஒரு தனியார் பள்ளி வீதம் வந்தால் அதிகம். டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகளும் அதிகம், ஆரம்பிக்கப்பட்ட காலமும் சமீபம். ஆகையினால் அதிலே இருக்கிற ஆசிரியர்கள் எல்லோருக்கும் 10 ஆண்டுகளுக்கு மேலே அனுபவம் இருக்காது. அவர்களில் 100க்கு 15 வீதம் செலக்ஷன் கிரேட் என்றால், 5, 6 ஆண்டுகளில் கிடைத்துவிடுகிறது. அவர்களுக்கெல்லாம் பட்டதாரி ஆசிரியர்கள் சம்பளப் பிரச்னைப்பற்றிக் கவலையே இல்லை. நீங்கள் அடித்துக்கொள்ளுங்கள், எனக்கு செலக்ஷன் கிரேட் கிடைத்துவிட்டது, இந்த ஸ்கேல் 275-ல் ஆரம்பித்தால் என்ன 325-ல் ஆரம்பித்தால் என்ன, நான் போகிறேன் 450 ஸ்கேலுக்கு, என்று சொல்லுகிறார்கள். எய்டெட் ஸ்கூலில் இருக்கிறவர்கள் குறைவான எண்ணிக்கை. 10 பெர்சன்ட்தான் செலக்ஷன் கிரேட் என்றதால், தனியார் பள்ளிகளில் 20 ஆண்டுகளுக்குக் குறைந்த அனுபவமுள்ள எந்த பி.டி. ஆசிரியருக்கும் செகண்டரி கிரேட் அசிஸ்டண்டுக்கும் கிடைக்கவில்லை. செலக்ஷன் கிரேடில், முன்பு வாங்கிய சம்பளம்தான் செகன்டரி கிரேட் ஆசிரியருக்குக் கிடைக்கிறது. அடுத்த வருஷம் ரிடையராகப் போகிறார், 32 ஆண்டு அனுபவத்தோடு. அவர்களுக்கு ஒரு உயர்வாவது போட்டுக் கொடுக்க வேண்டும். மாவட்ட ரீதியாக செலக்ஷன் கிரேட் கொடுத்தது சரிதான். அரசுப் பள்ளிகள்—33-ம் 1/3; 'பி' விங்—15; தனியார்பள்ளி 10 சதவீதம் என்று நிர்ணயிக்கப்பட்டது. எல்லோருக்கும் சேர்த்து மாவட்ட ரீதியில் 15 சதவீதம் அல்லது 20 சதவீதம் என்று வைத்தால், அந்த மாவட்டத்தில் இருக்கிற எல்லா அனுபவமிக்க ஆசிரியர்களுக்கும் கிடைத்திருக்கும். அனுபவமிக்க ஒருவருக்குக் கிட்டாது, நேற்று வந்து சேர்ந்தவருக்குக் கிடைக்கும் இந்த விநோதங்கள் எல்லாம் இல்லாதபடி பார்த்துக்கொள்ளலாம் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓரிரண்டு விஷயங்களை மட்டும்—பொதுவாக எங்கள் மிகவும் பிற்போக்கான கிழக்கு முகவை மாவட்டத்தைப் பற்றிக் கூறி நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். என் நண்பர்கள் என்னைக் குறை கூறுகிறபடியால், இந்தக் குறையை நான் எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களைப்பற்றி மட்டும் கூறிவிட்டு, பிற விஷயங்களை நீங்கள் பேசாமல் விட்டுவிடுகிறீர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு மாவட்டப் பெரியார் ஒருவர் என் மேல் குறை கூறினார். அந்த மனக்குறையைப் போக்குவதற்காக ஓரிரண்டு விஷயங்களை மட்டும் கூறி நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வைகை சீரமைப்புக்கு லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்குவதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இந்த வைகை நதி எங்கள் வீட்டுக்குப் பின்புறம் இருக்கும் பெரிய கண்மாயில் வந்து விழுகிறதே தவிர நேராகப் போய் சமுத்திரத்தில் கலக்கவில்லை.

அந்தப் பெரிய கண்மாயில்தான் விழுகிறது. அதன் ஆயக்கட்டை அதிகப்படுத்தலாம். அதற்குக் கிழக்கே ஐந்தாறு சிறிய கண்மாய்கள் உள்ளன. இதில் வீணாகும் தண்ணீரை அவற்றுக்குக் கொடுங்கள் என்றால், அதை ஏற்றுக்கொள்ளவே மாட்டோம். என்கிறார்கள். இவ்வாண்டு வெள்ளத்தில் இந்தக் கண்மாயில் விழும் தண்ணீர் மிக அதிகமாகி நகரத்தையே அழித்துக் விடக் கூடாதே என்பதற்காக மிகவும் சிரமப்பட்டு இந்தக் கண்மாயைத் திறந்து விட்டு தண்ணீரை நேரடியாகக் கடலுக்கு அனுப்பினோம். எப்போதும் தண்ணீர் வீணாகிறது’ என்று சொல்லுவதற்கில்லை; எப்போதாவது அசாதாரணமாக இந்த வருஷத்தைப் போல் வைகையில் வெள்ளம் வந்தால்தான், அப்படிப்பட்ட நிலைமை. பெரிய கண்மாய்க்குக் கிழக்கே இருக்கிற ஐந்தாறு சிறிய கண்மாய்களுக்கும் தண்ணீர் கொடுக்கலாம்; இதன் ஆயக்கட்டையும் அதிகப்படுத்தலாம். வைகை நீர்ப்பாசனத்தின் ஆயக்கட்டை அதிகப்படுத்தும்போது, மதுரையிலிருந்து ஆரம்பிக்கக் கூடாது என்று வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன். பெரிய கண்மாய்க்குக் கிழக்கேயிருந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பித்து கீழேயிருந்து அதிகப்படுத்த வேண்டும். மேலே ஆயக்கட்டை அதிகப்படுத்தினால், கீழே தண்ணீரே வராத அபாயம் நேரிட்டுவிடும். இதன் மூலம் இன்னும் 1,000 ஏக்கர் பயிர் செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். பேராவூர் கண்மாய்க்கு 300 ஏக்கர் பயிரிடுவதற்கு பெரிய கண்மாய்த் தண்ணீர் கிடைக்கிறது. இப்போது இரவோடு இரவாகக் கிடைக்கிறது; அதிகாரபூர்வமாகக் கிடைக்கவில்லை. பெரிய கண்மாய் ஆயக்கட்டுதார்களுக்கு பணம் கொடுத்து வருகிறார்கள். ஆகையினால்தான் இந்தப் பெரிய கண்மாய் ஆயக்கட்டுதார்கள் நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலை இருக்கக்கூடாது. இந்த ஆயக்கட்டை அதிகப்படுத்த வேண்டும். கிழக்கு இராமநாதபுரத்தில் இருக்கிற சிறிய கண்மாய்களுக்குப் பெரிய கண்மாயிலிருந்து தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, அற நிலைய அமைச்சர் அவர்கள் இருப்பதால், அவர்களிடம் கூறிக்கொண்டு நான் விடை பெற விரும்புகிறேன். ராமேஸ்வரம் என்பது கிழக்கு இராமநாதபுரத்திற்கு மட்டும் சொந்தமல்ல. நம் நாட்டிற்கே சொந்தமான பொக்கிஷம் இதுதான். ராமேஸ்வர ஆலயம் என்று போடப்பட்டுள்ள படத்தைப் பார்க்கும்போது, அதிலே கோபுரத்தைப் போடுவதில்லை. அந்தக் கோவிலின் கோபுரத்தை யாரும் போடுவதில்லை. எப்படியிருக்கும் என்றும் தெரியாது. ராமேஸ்வரம் ஆலயம் என்றால், அதனுடைய மூன்றாவது பிரகாரத்தைத்தான் படம் எடுத்துப் போடுவது வழக்கம். அப்படி பிரசித்தி பெற்றது மூன்றாவது பிரகாரம். அதைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். அந்த மூன்றாவது பிரகாரத்தில் தீ விபத்து ஏற்பட்டு. இன்று அடைபட்டு, ஒருவரும் உள்ளே நுழையக் கூடாது என்ற நிலையில் வைத்திருப்பது மிகவும் துரதிர்ஷ்ட வசமானதாகும். காரணம், அங்குள்ள கடைகளில்



வைத்திருந்த சுலபமாக தீப் பிடித்துக்கொள்ளக்கூடிய எரிபொருள்கள் மூலமாக அப்படிப்பட்ட சில சாமான்களை வியாபாரத்திற்கு வைத்திருந்தால், அக்கடைகளில் தீப் பற்றி பெருமளவில் பிரகாரமே இன்று சீர்குலைந்து இடிந்து கிடப்பது . . . .

மிஸ்டர் சேர்மன்: எரிபொருள் என்றால் கற்பூரமா?

திரு. எம். ராஜா அய்யர்: பொம்மைகள். வளைகள் முதலியன. அங்கே மரத்தூள்களில் பொம்மை செய்கிறார்கள். சங்கு, சோளிகள் விற்பதால் அபாயமில்லை. அந்த இடங்களிலிருந்து கிளம்பிய தீ அந்தப் பிரகாரத்திற்கே பெருந்தீங்கை இழைத்திருக்கிறது. சில லட்ச ரூபாய் செலவாகும் அதைப் புதுப்பிக்க என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்கு அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உதவியை அறநிலைய ஆணையரின் பொதுப் பணத்திலிருந்து கொடுப்பது பொருத்தமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அபாயமான தீ விபத்து நமக்குப் பெரும் படிப்பினையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆலயங்களிலுள்ள கடைகளை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த ஆலயமாக இருந்தாலும் சரி. ராமேஸ்வரம் ஆலயத்தில் விபத்து ஏற்பட்டவுடனே எல்லோரும் விரைந்து சென்று அவ்வளவு பேரையும் வெளியேற்றினோம். அவர்கள் எங்கே போகிறார்கள்? அவர்கள் அமைச்சர்களிடம் வந்து கொஞ்சம் காலம் கொடுக்க வேண்டுமென்று வாங்கிக்கொண்டு வந்து விடுகிறார்கள். உடனே வெளியேறச் சொன்னாலும், பல்வேறு கஷ்டங்கள் ஏற்படும் என்பதால் தைப்பூசம் கழிந்ததும் வெளியேற வேண்டுமென்று சொல்லப்பட்டது. அவர்கள் வெளியே போகமாட்டார்கள். அதற்குப் பிறகு மாசி மகம், பங்குனி உத்திரம் என்று வரிசையாக வருகின்ற திருவிழாக்களைக் காட்டி அது கழிந்ததும் போவதாகச் சொல்வார்கள். அவர்கள் போகிறவர்களாகத் தெரியவில்லை. இது கொள்கை அளவில் எடுக்கக்கூடிய முடிவாக இருக்க வேண்டும். எந்த ஆலயத்திலும் கடைகள் வெளியில்தான் வைக்க வேண்டும். அப்படிச் சொல்வதால் என்ன விளைவுகள் ஏற்பட்டாலும் சரி, வெளியே கடைகளைக் கட்டிக் கொடுத்து அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. டி. வி. நாராயணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற கூட்டு அவையிலே தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆற்றிய பேருரையின் மீது நன்றி தெரிவிக்கும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

மிஸ்டர் சேர்மன்: அவர் முன்மொழிந்த தீர்மானம். அவர் கொண்டுவரவில்லை.

திரு. டி. வி. நாராயணசாமி: அதையொட்டி சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர்

[திரு. டி. வி. நாராயணசாமி] [25th January 1972

நம்முடைய அரசு மேற்கொண்டுள்ள சிறந்த திட்டங்களைப் பற்றிச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே நாட்டுப் பாதுகாப்புக்காக நமது அரசு மேற்கொண்ட பணிகளைக் குறித்து சிறப்பாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு மற்ற அரசுகளைக் காட்டிலும், இந்திய துணைக் கண்டத்திலுள்ள வேறு பல மாநில அரசுகளைக் காட்டிலும் அதிக அளவிலே நாட்டுப் பாதுகாப்புக்காகத் தன்னை ஒப்படைத்துக்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். இப்போது மட்டுமல்ல. அன்றைய தினம் காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில், சீனர் போராட்டம் ஏற்பட்ட நேரத்தில் கூட சிறைச்சாலையிலிருந்து வெளி வந்த நேரத்தில் நம்மையெல்லாம் ஆளாக்கிய பெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் கூறினார்கள். நேருவுக்கு நேசக்கரம் கொடுப்போம் என்று சொல்லி அன்றைய தினமே நாடு எங்கும் சுற்றி நல்ல பிரசாரத்தைச் செய்து ஒருமைப்பாட்டு உணர்ச்சியை ஏற்படுத்தி ஏராளமான பணத்தைப் பாதுகாப்புக்காக மக்கள் மத்தியில் திரட்டிக் கொடுத்தார்கள். அந்தப் பாரம்பரியத்தில் வந்த கலைஞர் அவர்கள், மற்ற மாநிலங்கள் அறிவிக்கும் முன்னர், 10 கோடி ரூபாய் நாங்கள் பாதுகாப்பு நிதிக்காகத் தருகிறோம், தேசப் பாதுகாப்புக்குத் தருகிறோம் என்று சொன்னது மிகமிகக் குறிப்பிடத்தக்கது. எல்லோராலும் பாராட்டப்படத் தகுந்த ஒன்று. அந்த அடிப்படையிலே நாம் இன்றைய தினம் எந்தக் கட்சியினருக்கும் குறைந்தவர்கள் அல்ல என்பதை நாடு அறிந்திருக்கிறது. ஆனாலும் நாட்டுப் பாதுகாப்பு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய நேரத்தில் நம்முடைய நாட்டிலேயிருக்கிற, ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிற மற்றக் கட்சிக்காரர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், சிம்சன் நிறுவன விவகாரத்தில் ஒன்றாகச் சேர்ந்து, வன்முறையில் நம்பிக்கை கொண்டவர்களுடன் சேர்ந்து, இந்த அரசை எதிர்ப்பதற்கு அதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கூட சொன்னார்கள். இந்த சிம்சன் பிரச்னை என்பது புரியாத குழப்பமாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் மன்னை நாராயணசாமி அவர்கள் அதற்குச் சிறப்பாகப் பதில் அளித்தார்கள். அது புரியாத பிரச்னை ஒன்றுமில்லை. ஒன்று தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்த நாட்டிலே அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் மாநிலங்களின் பூந்தோட்டம் தமிழகம் என்று சொல்லுமளவிற்கு நல்ல ஜனநாயக நெறியோடு நடந்துகொண்டிருக்கிறது. இதைக் காணச் சகியாதவர்கள், வன்முறையில் நம்பிக்கை கொண்டவர்கள், இந்த நாட்டிலே எப்படியாவது குழப்பத்தை ஏற்படுத்தி, மீண்டும் தாங்கள் ஆட்சிக்கு வந்து விட வேண்டுமென்ற நப்பாசை கொண்டவர்கள், சேரத் தகாதவர்களோடு சேர்ந்து கொண்டு, ஏதாவது



25th January 1972] [திரு. டி. வி. நாராயணசாமி]

காரணத்தைக் காட்டி, இந்த நாட்டிலே குழப்பத்தை விளைவிக்க முயற்சிக்கிறார்கள் என்பதுதான் சிம்சன் பிரச்னை என்று நமக்குப் புரிகிற நிலைமை. காட்டூர் கோபால் ராஜினாமா செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கை. மற்றொரு கோரிக்கை அவர்கள் செய்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டுமென்பது. இப்போது அந்தப் பிரச்னையை விட்டுவிட்டார்கள். காட்டூர் கோபால் ராஜினாமா செய்த பிறகும்கூட இப்போது அவர்கள் மீண்டும் குழப்பத்தை, வன்முறைகளை இன்றைய தினம் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டிலேயிருக்கிற நல்லறிவாளர்கள் இதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த நாட்டில் ஏழை மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள். அவர்கள் ஏமாற்றப்பட்ட நிலையில் இல்லை. தங்களுக்காக இருக்கிற ஆட்சி, இந்த நாட்டிலே அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிற மக்களுக்காக இருக்கிற ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை மனதார உணர்ந்து அவர்கள் கடந்த தேர்தலில் மகத்தான வாக்குகளைத் தந்து பெருவாரியான இடத்தைக் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்த நம்பிக்கைக்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சிறப்புதான். நாம் ஆட்சியை வைத்துக் கொண்டு யாரையும் பயமுறுத்தி எதையும் பெறவில்லை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்த அளவுக்கு மக்கள் நம்பிக்கை பெற்று இந்த ஆட்சி தொடர்ந்து இந்த நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதற்கு இன்றைய தினம் நம்முடைய முதல்வர் அவர்கள் சிறப்பாக இந்தப் பிரச்சினையில் முடிவெடுத்து அறுவர் கமிட்டியை அமைத்திருக்கிறார்கள். இதற்குப் பிறகும் கூட ஏதாவதொரு கருத்தை அவர்கள் சொல்லிக் கொண்டேயிருக்கின்றார்கள். தொழிலாளர்களைத் தூண்டிவிடுகின்றார்கள். இவ்வளவையும் செய்துவிட்டு, நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென்று எழுதுகின்றார்கள். இப்படிப் பட்டவர்களைக் கண்டிக்க முன்வர வேண்டும். 'தேர்தல் நடைபெற இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. அதற்குப் பிறகு அது நடைபெறும்' என்று ஒரு வெறும் அபிப்பிராயம் மட்டுமே கூறினார் காட்டூர் கோபால் அவர்கள். 'எப்படி இப்படிப்பட்ட கருத்தினை காட்டூர் கோபால் சொல்லலாம்' என்றும் 'ஆறுபேர் கமிட்டி சொல்ல வேண்டிய அபிப்பிராயத்தினை இந்தக் காட்டூர் கோபால் எப்படிச் சொல்ல முடியும்' என்றும் கண்டனம் தெரிவித்தார்கள். இன்றைக்குத் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு குழப்பத்தை விளைவித்து அதன் காரணமாகத் தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு, அவர்கள் குடும்பங்கள் சீரழியும் நிலைமையில் ரத்தம் சிந்துவதிலேயே நம்பிக்கை கொண்ட கட்சிகளோடு தங்களைப் பிணைத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கொண்ட காழ்ப்பு உணர்ச்சி காரணமாக இப்படிப்பட்ட வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இதற்கு இடம் கொடுத்து விடாமல், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அரசியல் வாதிகள் இந்த அரசுக்குப் பக்க துணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. டி. வி. நாராயணசாமி] [25th January 1972

அடுத்து, வேளாண்மைத் துறையில் பல அரிய சாதனைகளை நமது அரசு செய்து காட்டியிருக்கிறது. உணவுத் துறையில் தன்னிறைவு கண்டிருக்கிறோம். சற்று முன்பு திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, விலைகள் ஏறிவிட்டன என்று சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை என்றும் கூட சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1967-ல் ஏற்பட்டது. அதற்கு முன்பு இருந்த நிலை என்ன என்று சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கு முன்பு பணம் கொடுத்தாலும் அரிசி இல்லை என்ற நிலை இருந்தது. ஆனால் இப்போது உணவு உற்பத்தியில் நாம் ஏற்படுத்திக்கொண்ட இலக்கைவிட மிக அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். முன்பு 54 லட்சம் டன் உற்பத்தியானது இப்போது 73 லட்சம் டன்னாய் பெருகியிருக்கும் சாதனையைப் பார்க்கிறோம். மற்றும் நமது கிராமங்கள் எங்கே பார்த்தாலும் ஒளிமயமாகக் காட்சியளிக்கின்றன. அந்த அளவிற்கு மிகக் குறுகிய காலத்தில் மின்சாரத்துறை கிராமங்களை ஒளிமயமாகச் செய்திருக்கிறது. இது சாதாரணமானதல்ல. 1966-67-ல் 25 ஆயிரம் கிராமங்களுக்கு மட்டுமே மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் மேலும் 23 ஆயிரம் கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்து, இப்போது ஏறக்குறைய 48 ஆயிரம் கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 1972-73 முடிவிற்குள் 58,800 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் கொடுக்கப்பட இருக்கிறது. அதற்குப் பிறகு தமிழகத்திலே எந்த கிராமமும் மின் இணைப்பு இல்லாமல் இல்லை என்ற நிலை ஏற்பட இருக்கிறது. இது பெருமகிழ்ச்சி அடைய வேண்டிய ஒன்றாகும்.

மேலும் இளைஞர் அணியில் 2 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டு அவர்களுக்குச் சமுதாய நலப் பணியில் நல்ல பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையை நமது அரசு குறைத்திருக்கிறது. இது மிகவும் பெருமைக்குரியதொன்றாகும். மேலும் படித்த பட்டதாரிகளுக்கு. வேலையின்றி, அவதிப்படும் பட்டதாரிகளுக்கு, உதவித் தொகை கொடுக்கும் வகையில் ரூ. 48 லட்சம் ஒதுக்கீடு செய்திருப்பது கண்டு பெருமிதம் கொள்கிறோம், அரசினைப் பாராட்டுகிறோம். காலப்போக்கில் நல்ல திட்டங்கள் போட்டு இந்த அரசு தொழிலாளர்களுக்கும் படித்த வாலிபர்களுக்கும் நல்ல முறையில் எதிர்காலத்தினை உருவாக்கித்தரும் என்ற பெரு நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

விவசாயத் துறையைப் பொறுத்த வரையில், ஏற்கனவே இருந்த அரசு செய்து காட்ட முடியாத சாதனையை நாம் செய்திருக்கிறோம். இத்துறையில் பெரும் புரட்சிகரமான மாறுதலைச் செய்து காண்பித்திருக்கின்றோம்.



25th January 1972] [திரு. டி. வி. நாராயணசாமி]

பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள், வேலையில்லாத் திண்டாட்டம் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும் என்று. எப்போதும் இப்படிப்பட்ட திண்டாட்டங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும் என்று ஒரு அவநம்பிக்கையினைப் பொது வாழ்வில் உள்ளவர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு நாள், ஒருபொழுதாகிலும் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தினை நாம் போக்கியே தீர வேண்டும் என்ற நம்பிக்கையோடுதான் நாம் செயலாற்ற வேண்டும். எப்படி என்று கேட்கலாம். நமது நாட்டில் விவசாயத்தில் ஈடுபடுத்தப்படாத தரிசு நிலங்கள் லட்சக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. வேறு எந்த நாட்டிலும் இது போல இல்லை. ஜப்பான் போன்ற நாடுகளில் நிலம் இல்லாத காரணத்தினால், வீட்டின் மேல் தளத்திலேயே அரையடி மண்ணைக்கொட்டி, அதில் பயிர் செய்கின்றார்கள். தரையில் இடம் இன்றி கடலில் தளம் அமைத்து அதிலே பயிர் செய்யலாமா என்று ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றார்கள் மேலை நாடுகளிலே. ஆனால் நமது நாட்டிலே இடத்திற்குப் பஞ்சம் இல்லை. நிலம் ஏராளமாக இருக்கிறது. மணற்பரப்பான இடத்தில் சிமெண்டு தளம் போட்டு அதற்குமேலே மண்ணிட்டுப் பயிரிடலாமா என்ற ஒரு திட்டத்தினை நமது நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். அதற்குக் கூட அவசியமில்லை. விவசாயத்திற்குக் கொண்டுவரக்கூடிய தரிசு நிலம் ஏராளமாக இருக்கிறது. அங்கேயெல்லாம் கூட்டுறவு முறையில் பெரும் பண்ணைகளை அமைக்கலாம். 200 ஏக்கர், 300 ஏக்கர், 500 ஏக்கர் என்ற அளவில் பெரும் கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்து அவற்றில் நிலமற்ற ஏழை விவசாயிகளைப் பங்குதாரர்களாக ஆக்கி அவர்களை அதில் ஈடுபடுத்தலாம். இந்த முறையில் நமது நாடு முழுதும் செய்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்க முடியாதா? இதை நமது அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றும் அரிசன நலத் துறையிலும் பின் தங்கிய வகுப்பினரை முன்னேற்றம் அடையச் செய்யும் பணியிலும் நமது அரசு கணிசமான தொகையைச் செலவழித்து வருவது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பற்பல திட்டங்களில் முன்னேற்றம் அடைந்தாலும், கலைத்துறை வளர்ச்சி பற்றி ஆளுநர் உரையில் ஒரு வார்த்தை கூட குறிப்பிடாதது சற்று ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் கொடுக்கிறது. இத்துறையில் நமது அரசு செய்ய வேண்டியது ஏராளமாக இருக்கின்றது. இத்துறையினை நாம் அலட்சியப்படுத்துவதற்கில்லை. இதைச் சீர்திருத்துவதற்கு என ஒரு வாரியம் ஒன்றினை அமைத்து இதில் முன்னேற்றம் காணவேண்டும். இன்றைக்கு கலைத் துறையில் கஷ்டப்படும் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். நடிகர்கள் மட்டுமின்றி. இத்துறையில் பங்கு ஏற்று தொழில் புரியும் பல தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எனவே இக்கஷ்டங்கள் பற்றி ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்யத்தக்க விதத்தில் ஒரு

[திரு. டி. வி. நாராயணசாமி] [25th January 1972

குழுவினை அமைத்து பரிசீலனை செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதைக் கலை உலகத்தின் சார்பில் பணிவன்போடு அரசிடம் வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேற்றுக்கூட சமுதாயத்தில் உள்ள ஒழுக்கக்கேடுகள்பற்றி இந்த மாமன்றத்தில் பேசப்பட்டது. ஆபாச திரைப்படங்கள் பற்றியும் ஆபாச நடனங்கள் பற்றியும் குறிப்பிடப் பட்டது. தொழில் வளத்தைப் பற்றிப் பேசப்படுகிறது. இந்த நாட்டில் ஆபாசமான அருவருக்கத்தக்க காட்சிகள் இல்லாதிருக்குமானால், மன வளம் ஏற்படுவதற்கு வழி உண்டு என்று சொல்லப் படுகிறது. அந்த வளத்தைத் தருவது கலை, சிறந்த நாடகம், திரைப் படங்கள் ஆகும். நம் நாட்டுப் பண்பு, நம் நாட்டு நாகரீகம், நம் நாட்டின் தூய்மையான தொன்மை, நம் நாட்டிலிருக்கிற நல்ல பல அம்சங்களைக் கெடுத்து வருவது மேலை நாட்டுக் கலாசாரத்தோடு இணைத்து கெடுக்கப்படும் அளவுக்குக் காரியங்கள் நடைபெறுவது தான். இந்த நாட்டில் நல்ல கருத்துக்களைப் புகுத்துமளவுக்கு, நல்ல மன வளத்தை ஏற்படுத்துமளவுக்கு, தேச உணர்ச்சியை வளர்க்குமளவுக்கு நாடகத்தின் மூலமாக, சினிமாவின் மூலமாக, கலைத்துறை வாயிலாக காரியங்கள் ஆற்றலாம் என்று நான் நம்புகிறேன். இது நிச்சயமாக வெற்றி அடையக்கூடியதொன்று. இதற்கு ஒரு குழு போட்டு ஆராய வேண்டும். இதையெல்லாம் அரசுடைமையாக்கி, திரைப் படங்களையெல்லாம் அரசுடைமையாக்கி, அவற்றை அரசு தயாரித்து, கண்டவர்களெல்லாம் கருத்துக்களை எடுத்துச் சொல்லி சமுதாய நலனில் நாட்டமில்லாதவர்கள் இந்தத் தொழில் புகுந்து மக்களுடைய மன வளத்தைப் பாழாக்குமளவுக்கு விட்டுவிடாமல் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால், நிச்சயமாக கலைத் துறையைக் கவனித்தாக வேண்டும். அந்த முறையில் கவனித்தால் நல்லது என்று கருதுகிறேன். அரசுடைமை ஆக்குவதால், இந்தக் காரியங்களைச் செய்ய முடியுமா அல்லது தனியார் துறையிடம் இருக்கும்பொழுது, சிறந்த முறையில் செய்யலாமா அல்லது ஒரு வாரியத்தை அமைத்து அதன் மூலமாக அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கிச் செய்ய முடியுமா என்று பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எப்பொழுது பார்த்தாலும், சட்ட மன்றத்தில் திரைப்பட ஆபாசம் என்ற பேச்சு வருகிறது. அதற்கு முடிவு கட்டப்பட வேண்டும். இந்தக் கால கட்டத்தில் இந்தத் துறையிலிருக்கிறவர்கள் கொஞ்சம்கூட சிந்தனையற்றவர்களாக தங்கள் போக்கிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக ஹிப்பிகளைப்பற்றிப் பேசினோம். கேள்வி கேட்கப்பட்டது. பதில் சொல்லப்பட்டது. எல்லோரும் சிரித்தோம். வேடிக்கையான பிரச்னை என்று சிரிக்கிறதைத் தவிர அது எத்தனை நாளாக நம்முடைய இளைஞர்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சிந்திக்க மறந்துவிடக் கூடாது. வளர்ந்துகொண்டிருக்கிற பருவத்தில் நெறியிழந்து போகும் நிலைமைக்கு, கலாசாரச் சீரழிவு ஏற்படுமளவுக்கு, நிலைமை உருவாகிவிடும் என்பதை அறிய வேண்டும். ஆகவே ஒரு நாட்டில் நல்ல நெறி உருவாக வேண்டுமானால், அந்த நாட்டில் பத்திரிகைத், தாம் நல்ல முறையிலிருக்கக்



25th January 1972] [திரு. டி. வி. நாராயணசாமி]

கண்காணித்துக்கொள்ள வேண்டும். பத்திரிகை என்றால், எல்லாவற்றையும் எழுதிவிடுவது என்பதல்ல. நம்முடைய பண்பு, நாகரீகம், நம்முடைய பழமை அதிலே இருக்கிற நேர்மை. அந்த அடிப்படையில் கருத்துக்கள் வருமளவுக்கு பத்திரிகைத் துறை இருக்க வேண்டும். மற்றும் திரைப்படத் துறை, நாடகத்துறை, மற்றும் நாடகம் போன்ற நடனக்கலைகள் எல்லாவற்றிலும் இந்த நிலைமையைக் கொண்டுவர வேண்டும். மதத் துறையிலும் கூட நாம் முன்னேற்றம் செய்ய வேண்டும். ஆலயங்களிலே எத்தனையோ அருவருக்கத்தக்க காட்சிகளைப் பார்க்கிறோம். ஆடையில்லாமல் பொம்மைகள் போடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இவைகளையெல்லாம் சீர்திருத்தம் செய்து ஒரு புரட்சிகரமான சமுதாயம் அமைகின்ற அதே நேரத்தில், கடமை உணர்ச்சியோடு அந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அதை நம்முடைய அரசு, இந்தத் தமிழக அரசுதான் செய்ய முடியும். பற்பல சாதனைகளைச் செய்து காட்டிய அரசு, ஜனநாயக மரபை ஏற்படுத்திய அரசு, ஜனநாயகம் பணம் படைத்தவர்களுக்கும் சீமான்களுக்கும் அல்ல ஏழைகளுக்கு உரித்தானது, சாதாரணக் குடிசைகளில் வாழும் ஏழை கூட இன்றைய தினம் அமைச்சராகலாம் என்ற நிலைமையை உருவாக்கிய அரசு நமது அரசு, இந்தத் தமிழக அரசு. இந்த அரசு எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையின் காரணத்தால், இங்கு எடுத்துக்கூறியவற்றை ஆராயத்தக்க ஒரு குழுவை அமைத்து அதன் மூலமாக இந்த நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் சீரிய மேம்பாட்டை உண்டாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. on Friday, the 28th instant.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A.—Statutory Rules and Orders.*

* 18. Notifications issued with G.O. Ms. No. 1138, Labour (Housing), dated the 7th September 1971, maldng certain rules under sections 35 and 36 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance( Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

* 19. Notification issued with G.O. Ms. No. 3196, Public (Services-A), dated the 22nd October 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Exhibition Assistant, Mobile Unit under Health Education Bureau, within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India].

[திரு. டி. வி. நாராயணசாமி] [25th January 1972

* 20. Notification issued with G.O. Ms. No. 3197, Public (Services-A), dated the 2nd October 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the posts of Scientific Assistant Grades I and II in the Tamil Nadu Chemical Examiner's Laboratory Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India].

* 21. Notification issued with G.O. Ms. No. 15, Excise and Prohibition, dated the 17th August 1971, in regard to amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

B.—*Reports, Notifications and other Papers.*

& 11. The Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 as introduced in the Lok Sabha.

& 12. The Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 as passed by both Houses of Parliament.

& 13. Lok Sabha Debate on the Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971.

& 14. Rajya Sabha Debate on the Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971.

* 15. Notification issued with G.O. Ms. No. 2566, Revenue, dated the 9th September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the deed of exchange to be executed by Sri Ramakrishna Kudil of Tiruchirappalli district.

* 16 Notification issued with G.O.Ms. No. 3566, Revenue, dated the 9th November 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the deed of declaration of trust in favour of the South India Teachers Union Council of Educational Research.

* 17. Notifiation issued with G.O.Ms. No. 2406, Revenue, dated the 1st September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed in favour of the Government of Tamil Nadu.

* 18. Notification issued with G.O. Ms. No. 2636, Revenue, dated the 13th September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed in favour of Mahatma Gandhiji Centenary Memorial Government Hospital Committee, Cumbum, Madurai district.



25th January 1972]

* 19. Notification issued with G.O.Ms. No. 2750, Revenue, dated the 21st September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed to be executed in favour of the repatriates from Burma and Ceylon for purchase of business places by means of loans sanctioned to them by the Government.

* 20. Notification issued with G.O.Ms. No. 2805, Revenue, dated the 24th September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed in favour of the Kanyakumari Educational Society.

* 21. Notification issued with G.O. Ms. No. 2759, Revenue, dated the 22nd September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift settlement deeds to be executed in favour of Yadhava College, Madurai.

* 22. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on the 31st March 1971, placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969 :—

1. Pulavar O. Arivudai Nambi

2. Thiru T.K. Shanmugam

23. Report of the Tamil Nadu Livestock Development Committee, 1970.

* Laid on the table of the House on 24th January 1972.

& Circulated to all M.L.Cs. on 21st January 1972.

## APPENDIX I.

(*Vide* answer to Starred Question No. 23 on page 88)

According to section 65 (*e*) of the Tamil Nadu Panchayat Act, 1958, the opening and maintenance and expansion or improvement of Elementary schools in Panchayat Union areas are among the functions assigned to the Panchayat Union Councils. The Elementary schools in non-municipal areas in the State, except in Kanyakumari district and Shencottah Taluk in Tirunelveli district known as "Transferred Territories, are run by the Panchayat Union Councils and revenues by way of taxation and grants are assigned to the Panchayat Union Councils for this purpose. In the case of the transferred territories". Section 65 (*e*) requiring the Panchayat Union Councils to run the Elementary schools and the allied provisions regarding the devolution of funds have not been extended. The Elementary schools in these areas were formerly run by the erstwhile Travancore-Cochin State and they are now run by the Tamil Nadu Government. If these schools are transferred to the Panchayat Unions, they, with their limited resources, will not be able to run these institutions and there will be problems with regard to transfer of Government staff to Panchayat Unions. The Government have therefore ordered that status quo may continue till such time as the Government are in a position to introduce the ryotwari settlement in Kanyakumari district based on the settlement operations that are now nearing completion.

Anticipating the above transfer of control of Government Elementary schools to the Panchayat Union Councils, about 500 teachers of Kanyakumari district took out a procession on 27th March 71. They convened a meeting and adopted the following resolutions :—

(i) requesting the Government not bring the Government Primary and Middle Schools under the control of Panchayat Unions; and

(ii) demanding promotions to the graduate teachers on the basis of seniority.



## APPENDIX II

(Vide answer to Starred Question No. 33 on page 98)

ராமநாதபுரம் மாவட்டத்தில் அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்.

விவர அறிக்கை.

| வரிசை எண். (1) | பயன்பெறும் வட்டமும் திட்டத்தின் பெயரும். (2) | மதிப்பீட்டுச் செலவுத் தொகை. (3) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| | **சாத்தூர் வட்டம்—** | |
| 1 | மாத்திச் சேரி கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 2·40 |
| 2 | முத்துசாமிபுரம் கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 2·75 |
| 3 | வல்லம்பட்டி கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 5·06 |
| 4 | சங்கரநாதம் கிராமத்தின் அருகில் வைப்பாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டுதல். | 11·14 |
| 5 | மீனம்பட்டி கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 1·94 |
| 6 | கம்மபட்டி கிராமத்தின் அருகில் ஓர் புதிய குளம் அமைத்தல். | 2·69 |
| 7 | படந்தால் கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 1·40 |
| 8 | புதுக்கோட்டை பெரியகுளம், நல்லய்யன்குளம் முதலிய குளங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் அளித்தல். | 1·44 |
| 9 | குமாரலிங்கபுரம் கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 1·62 |
| 10 | கீழ்திருத்தாங்கல் கிராமத்தருகில் புதிய குளம் அமைத்தல். | 1·92 |
| | **அருப்புக்கோட்டை வட்டம்—** | |
| 11 | திருவிருந்தால்புரம் கிராமத்தின் அருகில் ஒரு புதியகுளம் அமைத்தல். | 5·20 |
| | **ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்—** | |
| 12 | தென்கரை கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 3·14 |
| 13 | பிலவுக்கால் நீர்த்தேக்கத் திட்டம் .. .. | 83·16 |
| 14 | புத்தூர் மேம்மெனி குளத்தை தூர் எடுத்துப் பண்படுத்தல். | 1·10 |
| 15 | சிவனேரி குளத்தைத் தூர் எடுத்துப் பண்படுத்தல் | 1·60 |

| வரிசை எண். | பயன்பெறும் வட்டமும், திட்டத்தின் பெயரும். | மதிப்பீட்டுச் செலவுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் லட்சத்தில்) |
| | **சிவகெங்கை வட்டம்—** | |
| 16 | செய்களத்தூர் முதலிய குளங்களுக்கு நீர் வசதி செய்வதற்காக உப்பாரின் குறுக்கே ஓர் அணை கட்டுதல். | 10·93 |
| 17 | கடம்பங்குடி, வெள்ளங்குடி முதலிய குளங்களுக்கு நீர் வசதி செய்ய நட்டாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டுதல். | 2·53 |
| 18 | ஆலங்குடி குளத்திலிருந்து எருமைக்குளம் குளத்திற்கு உபரி நீர் செல்லும் கால்வாயை மேம்படுத்துதல். | 1·45 |
| | **முதுகுளத்தூர் வட்டம்—** | |
| 19 | நாராயண காவேரி திட்டம் .. .. | 10·25 |
| 20 | புதுக்குளம் குளத்தைச் சிறப்பாகப் பழுது பார்த்தல். | 1·32 |
| 21 | மேலகொடுமலூர் குளத்தைச் சிறப்பாகப் பழுது பார்த்தல். | 1·83 |
| 22 | கீழத்தூவல், கீரனூர் முதலிய குளங்களுக்கு நீர் வசதி செய்ய பரலியாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டுதல். | 13·03 |
| | **திருப்பத்தூர் வட்டம்—** | |
| 23 | ராஜக்கால்வாய் வாய்க்காலைச் சிறப்பாகப் பழுது பார்த்தல். | 1·45 |
| 24 | மணிமுத்தாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டி, நீரை அஞ்சுக்கல் கால்வாய்க்குத் திருப்புதல். | 1·99 |
| 25 | கண்வராயன்பட்டி கிராமத்தின் அருகில் விருசுலியாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 2·94 |
| 26 | பிராம்மணபட்டி குளத்தையும் கால்வாயையும் சிறப்பாகப் பழுது பார்த்தல். | 1·97 |
| | **திருவாடானை வட்டம்—** | |
| 27 | அஞ்சுகோட்டை கால்வாயைப் புதுப்பித்தல் .. | 4·40 |
| 28 | ஆர். எஸ். மங்கலம் முதலிய குளங்களைச் சீரமைத்தல். | 26·40 |
| 29 | சீனக்கண்மாய் முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய சருகாணி நதியின் குறுக்கே அணை கட்டுதல். | 1·86 |
| 30 | காண்டியூர் தினைவாயில் முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய தேனாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 1·83 |



| வரிசை எண். | பயன் பெறும் வட்டமும், திட்டத்தின் பெயரும். | மதிப்பீட்டுச் செலவுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் லட்சத்தில்.) |
| | **திருவாடானை வட்டம்—தொடர்ச்சி** | |
| 31 | சிறுகாம்பியூர் முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 6·40 |
| 32 | திருப்பக்கோட்டை, மங்களக்குடி கால்வாய்களுக்கு நீர் வசதி செய்ய மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 10·16 |
| 33 | ராதனூர் குளத்தைச் சிறப்பாகப் பழுது பார்த்தல் | 1·44 |
| | **பரமக்குடி வட்டம்—** | |
| 34 | வெண்ணத்த உடையார்கால் திட்டத்தைப் புதுப்பித்தல். | 2·00 |
| 35 | கூத்தன்கால் திட்டத்தைப் புதுப்பித்தல் .. | 12·00 |
| 36 | மேல்நாட்டார்காலைப் புதுப்பித்தல் .. .. | 7·70 |
| | **இராமநாதபுரம் வட்டம் –** | |
| 37 | வேளாங்குளம் முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய நய்யாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல். | 2·00 |
| 38 | வைகை சீரமைப்புத் திட்டம் .. .. .. | 433·00 |
| | மொத்தம் .. | 685·74 அல்லது 686·00 |

**இராமநாதபுரம் மாவட்டத்தில் பரிசீலனையில் உள்ள திட்டங்கள்.**

| வரிசை எண். | பயன்பெறும் வட்டமும் திட்டத்தின் பெயரும். | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **சாத்தூர் வட்டம்—** | ரூபாய். |
| 1 | இராமலிங்கபுரம் கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 2,83,000 |
| 2 | பேரிநாய்க்கன்பட்டி கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைதல். | 1,13,000 |

| வரிசை எண். | பயன்பெறும் வட்டமும் திட்டத்தின் பெயரும். | மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **சாத்தூர் வட்டம்—தொடர்ச்சி.** | ரூபாய். |
| 3 | கோமபாங்கிபுரம் கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 1,66,000 |
| 4 | விஜயராமாப்பேரி கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 2,75,000 |
| 5 | சாமிநாதன் கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 11,10,000 |
| 6 | மேட்டுக்குண்டு குளத்திற்கு அதிக நீர் கொண்டு வரல். | .... |
| 7 | கோவிந்தநல்லூர் கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 1,03,000 |
| 8 | வெம்பகோட்டை கிராமத்தின் அருகில் வைப்பாற்றின் குறுக்கே ஓர் நீர்த்தேக்கம் கட்டுதல். | 34,00,000 |
| 9 | பலவநத்தம் கிராமத்தின் அருகே ஒரு புதிய குளம் அமைத்தல். | 2,65,000 |
| 10 | காட்டானூர் புலியன்குளம் குளங்களுக்கு நீர்வசதி செய்ய கிரிதாமலின் குறுக்கே ஓர் அணை கட்டுதல். | 2,65,000 |
| 11 | ஓடத்தூர் குளத்துநீர் வசதி செய்ய, கிரிதாமலின் குறுக்கே அணை கட்டுதல். | 5,80,000 |
| 12 | இருஞ்சிரை முதலிய குளங்களுக்கு நீர் வசதி செய்ய கிரிதாமலின் குறுக்கே அணை கட்டுதல். | 9,00,000 |
| 13 | சீமைக்கால் கால்வாய்க்கு நீரைத் திருப்ப கிரிதாமலின் குறுக்கே அணை கட்டுதல். | 3,71,000 |
| 14 | நல்லுக்குறிச்சி முதலிய குளங்களுக்கு நீர் வசதி செய்ய கிரிதாமலின் குறுக்கே அணை கட்டுதல். | 1,94,000 |
| 15 | திருச்சுழி குளத்திற்கு நீர்வசதி செய்ய, குண்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 3,71,000 |
| 16 | தெற்குநாதம் கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 3,66,000 |
| 17 | கஞ்சம்பட்டி கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 1,77,000 |
| 18 | ஆணைக்குளம் முதலிய குளங்களுக்கு நீர் வசதி செய்ய குண்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 7,25,000 |
| 19 | ஆயக்குளம் கிராமத்தின் அருகில் புதிய குளம் அமைத்தல். | 1,44,000 |
| 20 | பெரியவள்ளிக்குளம் கிராமத்தின் அருகே புதிய குளம் அமைத்தல். | 1,43,000 |



| வரிசை எண். | பயன்பெறும் வட்டமும், திட்டத்தின் பெயரும். | மதிப்பீடு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **சாத்தூர் வட்டம்—தொடர்ச்சி.** | ரூபாய். |
| 21 | மல்லன்கிணர் முதலிய குளங்களுச்கு நீர்வசதி செய்ய கௌண்ட நதியின் குறுக்கே அணை கட்டுதல். | 23,30,000 |
| 22 | குல்லூர் சந்தை கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைத்தல். | 25,00,000 |
| | **முதுகுளத்தூர் வட்டம்—** | |
| 23 | கொடுகு சந்தை கிராமத்தின் அருகில் சக்கிலியன் ஓடை திட்டம். | 2,10,000 |
| 24 | சங்கரதேவன்காலைப் புதுப்பித்தல் .. .. | 2,30,000 |
| 25 | செங்கப்படை கிராமத்தின் அருகில் ஓர் புதிய குளம் அமைத்தல். | 59,70,000 |
| 26 | கள்ளிக்குளம் காரைக்குடி முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய கிரிதாமல் நதியின் குறுக்கே ஓர் அணை கட்டுதல். | 9,50 000 |
| 27 | சதுர்வேதமங்கலம் குளத்திற்குக்கீழ் உபரி நீர் செல்லும் கால்வாயைப் புனரமைத்தல். | 2,45,000 |
| | **ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்—** | |
| 28 | கோளபுரம் குளத்திற்குப் பாசன வசதிகள் அளித்தல். | .... |
| 29 | இன்ஜார்செங்குளம் குளத்திற்கு நீர்வசதி செய்ய கால்வாயும் அணையும் கட்டுதல். | 2,65,000 |
| 30 | வைகை பேயனூறு திட்டம் (இதற்கு விரிவான ஆய்வு பெரிய நடுத்தரப்பாசன ஆய்வு வட்டத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது). | |
| | **சிவகெங்கை வட்டம்—** | |
| 31 | ஆலங்குடிகுளத்திலிருந்து இடது பக்க கால்வாயை ஆழப்படுத்துதல். | 3,10,000 |
| | **திருப்பத்தூர் வட்டம்—** | |
| 32 | பெருச்சிகோயில் கிராமத்தின் அருகில் சனம்பிரப்பு உபரி கால்வாய் குறுக்கே அணை கட்டுதல். | 1,60,000 |
| 33 | இப்போதிருக்கும் கல்லணையை சிறுமருதூர் குளத்துடன் இணைக்கும்படி ஓர் இணைப்புக்கால்வாய் வெட்டுதல். | 1,75,000 |
| 34 | கல்லுப்பட்டி புதுக்கண்மாய்க்குக் கீழ்உள்ள உபரி நீர் செல்லும் கால்வாயைப் புதுப்பித்தல். | 1,14,000 |
| 35 | செம்பனூறு குளத்தை நீர்த்தேக்கமாக மாற்றுதல் | 6,00,000 |
| 36 | ராஜக்காவலுக்கு நீர்வசதி செய்ய பாலாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | .... |

| வரிசை எண். (1) | பயன்பெறும் வட்டமும், திட்டத்தின் பெயரும். (2) | மதிப்பீடு. ரூபாய். (3) |
|---|---|---|
| | **திருப்பத்தூர் வட்டம்—தொடர்ச்சி.** | |
| 37 | மாதவராயன்பட்டி முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய பாலாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 3,82,000 |
| 38 | அருணாசல காவேரி கால்வாயைப் புதுப்பித்தல் .. | 4,06,000 |
| 39 | சருகனி ஆற்றின் குறுக்கே திரணி வரத்துக் கால்வாயின் முகவாயில் ஓர் அணை கட்டுதல். | 1,60,000 |
| 40 | மல்லனூர் முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய திருப்பக் கோட்டை உபரிநீர் செல்லும் கால்வாய் குறுக்கே அணை கட்டுதல். | 4,85,000 |
| 41 | கருகனி ஆற்றுக்கு குறுக்கே ராதானூர் கால்வாய் முகவாயில் ஓர் அணை கட்டுதல். | 10,10,000 |
| 42 | சிறுநல்லூர் முதலிய குளங்களுக்கு நீர்வசதி செய்ய சருகானி நதியின் குறுக்கே அணை கட்டுதல். | 6,00,000 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| 43 | குடக்கோட்டை கிராமத்திலிருக்கும் தரவியைப் புதுப்பித்தல். | 1,26,000 |
| 44 | சக்கரக்கோட்டை கிராமத்திலிருக்கும் தரணியைப் புதுப்பித்தல். | 2,15,000 |
| 45 | ஆலங்குளம் தோணி பாலம் (Causeway) அருகில் நீரேற்றுத் திட்டம். | 3,50,000 |
| | மொத்தம் .. | 277,54,000 |

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Friday, the 28th January 1972.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS.

MR. CHAIRMAN : Question 36 is withdrawn.

*Loss of seats in Parliament*

* 37 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to compensate the loss of seats in parliament due to the implementation of Family Planning?

*நாடாளுமன்றத்தில் இழந்த இடங்கள்*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தியதால், நாடாளுமன்றத்தில் இழந்த இடங்களை ஈடு செய்வதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, என்ன திட்டங்கள் என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி பாராளுமன்றத்திற்கான இடங்களை ஒதுக்க வேண்டுமென்ற வகையில்தான் மத்திய அரசை மாநில அரசு அணுகுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 1971-ல் சென்சஸ் எடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கான இடங்கள் எந்தத் தேர்தலில் நிர்ணயிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971-ம் ஆண்டு சென்சஸ் கணக்கு இன்னும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அதன்படிகூட இப்போதிருக்கிற ஒரு இடத்தை நாம் இழக்க நேரிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இதையொட்டித்தான் 1951-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையிலே நாடாளுமன்றத்திற்கான இடங்களை நம் மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று நாம் கேட்கிறோம்.

[28th January 1972

திரு. கே. ராஜாராம்: இந்த அபிப்ராயத்தை நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் வற்புறுத்த அரசாங்கம் எண்ணியிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்.டி.சி.—யில் அரசாங்கத்தின் சார்பாக வலியுறுத்துவதாக இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், நாடாளுமன்றத்தில் திரு. மாறன் இதனையொட்டி ஒரு தீர்மானத்தைக் கொடுத்தார். ஆனால் மூன்றில் இரண்டு பங்கு அதற்கு வாக்குகள் வேண்டுமென்ற அளவில் அந்தத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது என்றாலும் கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அரசியல் சட்ட 82-வது பிரிவின்படி சென்சஸ் எடுத்து முடிந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் மறுபடியும் அந்தக் கணக்கை வைத்து அடுத்த தேர்தலை நடத்த வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. 82-வது பிரிவில் இருக்கிற வரையில் 1951-ம் ஆண்டு சென்சசை வைத்து எப்படி இடம் ஒதுக்க முடியும் என்று முதலமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது முடியாது, திருத்தம் தேவை என்பதற்காகத்தான் 1951-ம் ஆண்டுக் கணக்கை வைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கிறோம். இப்படி ஆண்டுக்கு ஆண்டு தமிழ் நாட்டைப் போன்று மற்ற மாநிலங்கள் குடும்பநலத் திட்டத்தினைத் தீவிரமாக அமல்படுத்தி ஒரு புறத்தில் திட்டத்தில் வெற்றி கண்டு, ஒரு புறம் நாடாளுமன்றத்தில் இடம் இழப்பது நல்லதல்ல. இந்த நிலைமையை உணர்ந்து மத்திய அரசு செயல் படுமென்று நம்புகிறோம்.

திரு. கே. ராஜாராம்: இதை அவர்கள் ஒப்புக்கொள்ளத் தவறினால் குடும்ப நலத் திட்டத்தை உற்சாகத்துடன் நிறைவேற்றுவதில் குறைகள் ஏற்படும், பாதிக்கும் என்று மத்திய அரசிற்கு மாநில அரசு எடுத்துக் கூறுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குடும்பநலத் திட்டம் என்பது இந்தியா முழுமைக்கு என்றாலும் அதைத் தமிழ் நாடு வெற்றிகரமாக நிறைவேற்றுவதன் காரணமாக இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விடத் தீவிரமாக அமல்படுத்துகிறது. அதன் பலனை நல்ல முறையில் அனுபவிப்பதற்கு இங்கே குடும்ப நலத் திட்டம் நல்லமுறையில் செயல் பட்டால்தான் முடியும். நாட்டின் வளத்தைப் பெருக்கும் அதே நேரத்தில் நாடாளுமன்றத்தில் இடத்தை இழக்க நாம் தயாராக இல்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: 1971 கணக்கின்படி வந்தால் நாடாளுமன்றத்தில் எவ்வளவு இடத்தை நாம் இழக்க நேரிடும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இழக்க இருக்கிறோம் என்றால், இழப்பதற்குத் தயாராகிவிட்டோம் என்று பொருள். இழக்க நேரிடலாம் ஓர் இடத்தை. அதையும் இழக்காமல் இருப்பதற்கு நாம் வாதிடுவோம்.

## *Cashew Liquor*

* 38 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are any proposals to start a Cashew Liquor Unit at Panruti; and

(b) if so, the details thereof?



28th January 1972]

## முந்திரிச் சாராயம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பண்ருட்டியில் முந்திரிச் சாராயம் தயாரிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்கு செயற்குறிப்புகள் ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) முந்திரிப் பழங்களிலிருந்து அருந்தத்தக்க மதுவினை பண்ருட்டியில் தயாரிப்பதற்கு தங்களுக்கு அனுமதி வழங்குமாறு இதுவரை இருவர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர்:—

1. திருவாளர்கள் அருணா சுகர்ஸ் லிமிடெட், சென்னை.
2. திரு. எ. டி. சில்வா, சென்னை.

இவர்களது வேண்டுகோள்பற்றி வருவாய்த்துறை (ஆயத்தீர்வை-மதுவிலக்கு) வாரியத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கந்தர்வக் கோட்டை வழியாகப் புதுக்கோட்டை போகும் பாதையில் முந்திரிக் காடுகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் முந்திரிச் சாராயத்தைத் தயாரிப்பதற்கு அரசு வழிமுறைகளை ஆராயுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கான விண்ணப்பம் அனுப்புவதற்கு உறுப்பினர் முன்வந்தால் பரிசிலிக்கப்படும்.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, முந்திரிச் சாராயத் தொழிற்சாலையை அரசே நடத்தி அதன் மூலமாக வருமானத்தைப் பெறுவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசு நடத்துகிற அளவுக்கு இதில் அரசு முந்திரிக் கொட்டையாக இருக்க விரும்பவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: முந்திரியிலிருந்து பென்னி என்ற பானத்தைத் தயார் செய்து கோவாவில் நிறைய விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்தில் இதை விரும்பமாட்டார்கள் என்று சொல்லப் படுகிறதே, முதலமைச்சர் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அனுபவம் இல்லை.

## *Skin and Hides Market*

* 40 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware that the skin and hides market was paralysed in this State during the last week of August, 1971; and

(b) if so, the reasons therefor?

[28th January 1972

தோல் அங்காடிகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, ஆகஸ்டு கடைசி வாரத்தில் இம் மாநிலத்தில் தோல் அங்காடிகள் முடங்கிக் கிடந்தன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*Iron Ore*

*41 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Japanese Team has been requested to undertake any experiment into the iron ore findings in Tiruvannamalai in North Arcot District;

(*b*) whether it has submitted its report; and

(*c*) if so, the details thereof?

இரும்புக் கனிகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் இரும்புக் கனிகள் கிடைப்பது பற்றிச் சோதனைகள் நடத்தும்படி ஜப்பானியக் குழு ஏதாகிலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா?

(இ) அது தன்னுடைய அறிக்கையை பணித்தனுப்பியுள்ளதா?

(உ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Tamil Nadu Industrial Development Corporation*

*42 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Union Government have issued letters of intent to the Tamil Nadu Industrial Development Corporation for the manufacture of Tyres and Tubes; and

(*b*) if so, the details thereof?

தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) டயர்கள், டியூப்கள் தயாரிப்பதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு மத்திய அரசு, அனுமதிக் கடிதம் ...



28th January 1972]

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ஆண்டொன்றுக்கு 3 லட்சம் மோட்டார் டயர்களையும் டியூப்களையும் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ, 1970-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்திய அரசு இசைவுக் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளது. இத்திட்டம் கூட்டுத்துறையில் இருக்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

THIRU M. RAJAH IYER: Sir, may I know whether the Tamil Nadu Industrial Development Corporation is working at a profit and whether the investment made by the public to this Corporation is guaranteed by the Government? This is a different question. Sir, I find that the Tamil Nadu Investment Corporation is seeking full guarantee by the Government and I find from the papers that the Tamil Nadu Industrial Development Corporation also solicits funds from the public. May I know whether that also is guaranteed and the Corporation is also working at a profit?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டிட்கோ நிறுவனத்திலிருந்து தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றியது கேள்வி. டிட்கோ வொர்க்கிங் ரிசல்ட் என்னிடத்தில் இல்லை. நம்முடைய கொள்கை இந்த நிறுவனத்தின் மூலமாக புதிய தொழிற்சாலை வரும்போது தனி நிறுவனமாக அது ஆக்கப்பட்டு அதன் வரவு-செலவு தனியாக வைக்கப்படுகின்றன. டிட்கோவிற்கும் இதற்கும் நேரடியாக வரவு-செலவு இல்லாவிட்டாலும், இவர்கள் அதில் பங்குதாரர்களாக இருப்பார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. the Minister for Industries said that the application was made in December 1970. May I know, Sir, why the matter is being delayed so long? May I know whether there is any foreign exchange involved or collaboration agreement stands to be approved? If not, why is there too much delay in giving letter of intent to this concern?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லெட்டர் ஆஃப் இன்டென்ட் 1970 டிசம்பர் திங்களில் தரப்பட்டதாகச் சொன்னேன். அந்தத் தொழிற்சாலை தொடங்குவதற்கு இப்போது ஒரு ஆண்டு ஆகிவிட்டது. இதற்குக் காரணம் மத்திய அரசாங்கம் லெட்டர் ஆஃப் இன்டென்ட் கொடுப்பதில் காலம் கடத்துகிறார்கள். கேட்டதற்குப் பிறகு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன்னேற்பாடுகள் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். முக்கியமானது டெக்னிகல் கோலாபரேஷன். இதற்கு வெளிநாட்டு உதவி தேவைப்படுகிறது. நாமே அதையும் தேடிக் கொடுக்கவேண்டும் அவர்களிடத்தில் என்றார்கள். அதையும் தேடிக் கொடுத்தோம். அந்த அனுமதிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். இப்போதைக்கு மத்திய அரசாங்கம் இதில் முடிவெடுக்குமா என்ற சந்தேகம் பெருமளவில் இருந்துவருகிறது. பல மாநிலங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் சேர்த்து நாங்களே டெக்னிகல் கொலாபரேஷன் வாங்கி நாங்களே பிரித்துக் கொடுக்

[28th January 1972

கிறோம் என்று அவர்கள் வாதிடுகிறார்கள். அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள வெளிநாட்டுக்காரர்கள் தயாராக இல்லையென்று கேள்விப்படுகிறோம். தமிழ் நாட்டுக்கு நல்ல காலம் வருமென்று எதிர்பார்க்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether the Government will consider the suggestion in view of the fact that there are already five Tyre Factories in India established with foreign collaboration and in view of the difficulty that is likely to be experienced in getting fresh collaboration ? May I know whether the Government of Tamil Nadu will approach the existing Tyre Companies to find out whether joint sector project could not be started in Madras ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையில் நானும் முதலமைச்சரும் சென்ற பொழுது நம்முடைய அரசின் சார்பில் இந்த யோசனையைச் சொன்னோம். மத்திய அரசின் எம்.ஆர்.டி.பி. குறுக்கே வருகிறது. இங்கேயுள்ள தொழிற்சாலை வேறு தொழிற்சாலையோடு சேர்ந்து தொழிலைத் தொடங்கினால், அவர்களுக்கு இந்தச் சட்டத்தின்கீழ் விதிவிலக்கு தர வேண்டுமென்ற கொள்கைப் பிரச்னையில் மத்திய அரசாங்கம் முடிவெடுக்க இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் தமிழ் நாட்டிலுள்ள டன்லப் தொழிற்சாலையோடு நாமே பேச்சுவார்த்தைக்குக் கேட்டு அவர்களும் பேச வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். டன்லப்புக்கு அனுமதி தரும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. அதுபற்றி மத்திய தொழிலமைச்சரிடம் சொன்னோம். மத்திய அரசாங்கம் உறுதியாக இது போன்ற நல்ல கொள்கையுடன் இருக்கிற தொழிற்சாலைக்கு டெக்னிகல் கொலாபரேஷன் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானால் நாட்டுக்கே நல்லது என்று கருதுகிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, in seeking collaboration with the existing foreign-*cum*-Indian concerns in India, it may be sufficient if we pay them technical collaboration fee without inviting financial participation, because the Hon. Minister suggested that a Company like the Dunlop may be objected to by the Government of India on the ground that it is a foreign concern. May I know whether the Government of Tamil Nadu would investigate the possibility of seeking only technical collaboration and pay them collaboration fee as 'block fee' which may be possible under the present circumstances ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதிருக்கிற பிரச்னையே அதுதான். பைனான்ஷியல் பார்ட்டிசிபேஷனுக்கே இடமில்லை. இப்போதிருக்கிற பிரச்னையெல்லாம் டெக்னிகல் கொலாபரேஷன் தர வேண்டும். அதற்கு மொத்தமாக ஃபீஸ் கொடுக்க வேண்டும் ராயல்டி என்ற முறையில். எத்தனை ஆண்டுகள், ஐந்தாண்டா, பத்தாண்டா என்ற பிரச்னைதான் மத்திய அரசாங்கம் முடிவெடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், டன்லப் கம்பெனியை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். டன்லப் கம்பெனிக்காரர்கள் பேச்சுவார்த்தை நடத்த அடுத்த மாதம் வருவதற்கு இருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்தால்தான் இதைச் செய்ய முடியும்.



28th January 1972]

* 43 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Industrial Development Corporation has been negotiating with internationally known manufacturers of Sodium to assist its Hydrosulphite project at Karaikudi; and

(*b*) if so, the details thereof ?

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், காரைக்குடியில் இருக்கும் தனது ஹைட்ரோசல்பைட் திட்டத்துக்கு உதவி புரிவதற்கு அனைத்து நாடுகளிலும் சோடியம் தயாரிப்பாளர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறதா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனம் மத்திய அரசிடமிருந்து ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில் ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோசல்பைட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத் துறையில் நிறுவ பூர்வாங்க அனுமதி பெற்றுள்ளது. அந்த ஆலையை நிறுவுவதற்காக தமிழ்நாடு கெமிகல் புராடக்ட்ஸ் லிமிடெட் என்ற புது நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நிறுவனம் அந்த ஆலையை நிறுவுவதற்காக மிகச் சாதகமான அந்நிய தொழில் நுணுக்க உதவியைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

THIRU G. SWAMINATHAN : May I know, Sir, with what country we are trying to have collaboration arrangement?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல நாடுகளோடு நாம் இந்தப் பேச்சு வார்த்தை நடத்துகிறோம். நம் மாநிலத்திலுள்ள பிரச்னை லிங்கைரா-மெட்டீரியலாக ஏற்றுக்கொண்டு தொழில் நுட்பம் பெறுவதா அல்லது ரா-மெட்டீரியல் இல்லாமல் ஜப்பான் நாடு புதுமுறையில் கண்டுபிடித்திருக்கிற யோசனையைப் பெறுவதா என்பது. ஜப்பானிய நிறுவனம் இந்தத் தொழிற்சாலை நிறுவனத்தோடு பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : இந்தத் தொழிற்சாலையைக் காரைக்குடியில் ஏற்படுத்துவதால் எத்தனை தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether there is a slump in the market for Sodium Hydrosulphite ? People are saying that it may not have a ready market in the country because it is no longer used, most probably in textiles.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய தமிழ் நாட்டில் டெக்ஸ்டைல் தொழிலுக்கு இது தேவைப்படுகிறது. அண்மையில் விலை ஏறுவதும் திடீரென்று குறைவதுமாக மாறிமாறி வருகிறது. இந்தத் திட்டத்திற்கு —

[28th January 1972

பொருள்களுக்கு எதிர் காலத்தில் சந்தை இருக்குமா என்ற ஐயம் தெரிவிக்கப்பட்டு நம்முடைய நிபுணர்கள் ஆராய்ந்ததில் மார்க்கெட் இருக்குமென்று சொல்கிறார்கள். இதற்குப் போட்டியாக கோளாவிலே ஒரு நிறுவனம் இருக்கிறது. அவர்களே மார்க்கெட் இல்லை என்று வாதிடுகிறார்கள். அவர்கள் வாதிடுவதால் நாமும் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இது தேவைதான். மொத்தமாக இந்திய அளவில் இது தேவையா என்பதைப்பற்றி மத்திய அரசு இதற்கு அனுமதி கொடுப்பதற்கு முன்பு டி. ஜி. டி. கருத்தைத் தெரிவித்து, அந்நிய நாட்டுச் சந்தையைக் கணக்குப் பார்த்து, அனுமதி கொடுக்கிறார்கள். ஆகையால் இதற்குச் சந்தை இருக்குமென்ற நம்பிக்கையில் தான் தொடங்கப்படுகிறது.

THIRU G. SWAMINATHAN: May I know, Sir, whether the Hon. Minister had a talk about this project in the United States of America when he had been there?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அமெரிக்காவிலே இந்தத் தொழில் புதுவிதமான முறையில், சிங்க்-ஆக்ஸைடு என்ற துணை பொருள் வெறும் ஆய்வு முறையில் அங்கே இருக்கிறது. சிங்க்-ஆக்சைடு தனி உப பொருளாக வருவதால், இதிலுள்ள நஷ்ட லாபத்தை ஈடுகட்ட வாய்ப்பு இருக்குமென்று அங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானிலே சிங்கே வேண்டாமென்று புதிய முறையைத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். சிங்க் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டியிருப்பதால் ஜப்பான் முறை சரிவருமா, அமெரிக்க முறை சரிவருமா என்று பரிசீலிக்கவேண்டியிருக்கிறது.

## *Tamil Chamber of Commerce*

* 44 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Chamber of Commerce has submitted any memorandum the Government about 26th October 1971, about non-availability of Alcohol to Industries;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

### தமிழ்நாடு வணிகக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிற்சாலைகளுக்கு ஆல்கஹால் கிடைக்காததைக் குறித்து, 1971 அக்டோபர் 26-ஆம் நாள் அளவில் தமிழ் நாடு வணிகக் கழகம் அரசுக்கு விண்ணப்பம் ஏதும் பணிந்தனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.



28th January 1972]

(இ) சாராயம் காய்ச்சும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சாராயத்தில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை தொழிற்சாலை, பரிசோதனைக் கூடங்களின் உபயோகத்துக்கென்று ஒதுக்க வேண்டும் என்று தமிழக வர்த்தகக் கழகம் கோரியிருக்கிறது.

(உ) அது அரசின் பரிசீலனையிலுள்ளது.

THIRU G. SWAMINATHAN: Sir, are the Government aware that for want of alcohal, Pharmaceutical industries are starving nowadays?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக மதுவிலக்குக் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக சாராயத்திற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது தமிழ் நாட்டிலே, அதற்குத் தேவையான மோலாசஸ் நாம் கொடுக்க வேண்டும். திடீரென்று ஏற்பட்ட சூழ்நிலையிலே ஓரளவுக்குத் தொழிற்சாலைகளுக்குப் போதுமான அளவு நாம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும், அதற்கான புதிய முயற்சி எடுத்து அண்மையில் உத்தரப் பிரதேசத்திலிருந்து 11 லட்சம் லிட்டர் இதற்காக வாங்கிக்கொடுக்க முன்வந்தோம். இப்போது 2 மிலியன் காலன் உற்பத்தி செய்யுமளவிற்கு கோவை மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது அது இன்னும் ஓராண்டில் உற்பத்தி தொடங்கும். அதற்குப் பிறகு பெருமளவில் தர முடியும். கூட்டுறவுத் துறையில் இரண்டு மிலியன் காலன் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். இப்போது இன்னும் மூன்று கூட்டுறவுத் துறையில் வர இருக்கின்றன. மொலாசஸ் அதிகமாகக் கிடைக்கும்போது இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டு விடும்.

THIRU G. SWAMINATHAN: Sir, will the Government consider reducing alcohol for drinking and giving it to industries on a priority basis?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக நம்முடைய அனுபவத்தில் தமிழ் நாட்டில் கூட அந்தப் பழக்கம் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. முதலிலுள்ள கிராக்கி வரவரக் குறைந்துவருகிறது. சர்க்கார் தலையிடாமலே அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டுவிடுமென்று நம்புகிறோம்.

## *Expenditure on residences, furniture etc.*

* 45 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent on the articles of furniture, furnishing materials, renovation, repairs and upkeep of the residences of the Hon. Ministers of the Government during the year 1970–71?

### மாண்புமிகு அமைச்சர்களின் இருப்பிடங்கள், மரச் சாமான்களுக்கான செலவு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

[28th January 1972

1970-71-ல் மாண்புமிகு அமைச்சர்களின் இருப்பிடங்களுக்கு, மேசை, நாற்காலிகள், அறை அலங்காரப் பொருள்கள், புதுப்பித்தல், பழுது பார்த்தல், பேணுதல் முதலியவை குறித்து அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1970-71-ஆம் ஆண்டில் தமிழக அமைச்சர்கள் குடியிருக்கும் வீடுகளைப் பராமரிப்பதற்காகவும், மரச்சாமான்கள், பொருட்கள், திரைச்சீலைகள், வீடுகளைப் புதுப்பித்து பழுது பார்ப்பதற்கும் மொத்தம் ரூபாய் 1,70,874 செலவாகியுள்ளது.

*New road along the sea coast*

* 46 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any new road has been along the sea coast in Santhome area in Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof ?

கடற்கரையை ஒட்டிய புதிய சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மைலாப்பூர் சாந்தோம் பகுதியின் கடற்கரை நெடுக புதிய சாலை ஏதேனும் போடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள மெரினா கடற்கரை-முதல், ஓசியானிக் ஓட்டலின் எதிரில் தெற்கு கடற்கரையும் சேரும் இடம் வரையிலும், கடற்கரையை ஒட்டி ரூபாய் 20.85 இலட்சம் செலவில் ஒரு விஸ்தரிப்புச் சாலை போடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

*Celluar concrete plant Ennore*

* 47 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the cellular concrete plant of the State Housing Board is to be set up at Ennore; and

(*b*) if so, the details thereof ?

எண்ணூர் புழை கற்கலவை தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) எண்ணூரில், மாநில வீட்டு வசதி வாரியத்தின் புழை கற்கலவை தொழிற்சாலை (Cellular Concrete Plant) அமைக்கப்படவிருக்கிறதா ?



28th January 1972]

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) ஆம்.

(இ) இப்புழைக் கற்கலவைத் தொழிற்சாலை முன்னரே வார்க்கப்பட்ட செங்கற்களையும் மணலையும் மூலப்பொருளாகப் பயன்படுத்தி மணல் தளக் கற்களையும் உற்பத்தி செய்ய அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி உதவி முழுவதையும் இந்திய அரசு கடன்க மாநிலத் திட்ட வரம்பிற்கு புறம்பாக அளித்துள்ளது. இத்தொழிற்சாலைக்கான (திருத்த) மதிப்பீடு ரூ. 365 லட்சமென்று மதிப்பிடப்படுகிறது. மணலைப் பயன்படுத்தி மாதிரி உற்பத்தி 1972 சனவரி இரண்டாவது வாரத்தில் மேற்கொள்ளப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர் 6 வாரத்திற்குள் முறையான உற்பத்தி ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU V. ISVARMURTI : Sir, has this industry anything to do with the constructon of pre-fabricated house ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : தலைவர் அவர்களே, ப்ரீ-ஃபேப்பிரிகேட்டட் ஹவுஸுக்கும் (Prefabricated house) இதற்கும் சம்பந்தமில்லை. தொகைக் கற்கள் என்ற பெயரில் புது மாதிரியான செங்கற்கள் போலந்து நாட்டு உதவியோடு தயாரிக்கப்படுவதாகும்.

THIRU A. R. DAMODARAN : Sir, is it accepted that cellular concrete, which is being produced here, is likely to bring down the cost of house construction?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : இந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவந்ததற்கே காரணம் 5 சதவிகிதம் கட்டிடச் செலவில் மிச்சமாகும் என்பதுதான்.

*Tamil Nadu Tourism Development Corporation*

* 48 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Tourism Development Corporation has invited suggestions from the public for a Motif and Slogan about 1971; and

(*b*) if so, the details thereof ?

தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் 1971-ம் ஆண்டைக் குறித்து பொதுமக்களிடமிருந்து சுற்றுலா நோக்கம், முழக்கம் குறித்து பொது மக்கள் தங்கள் கருத்துரைகளை அனுப்பும்படி கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

THE HON. THIRU K. RAJARAM : (*a*) Yes, The Tamil Nadu Tourism Development Corporation Limited has invited suggestions from the public for a Motif and Slogan.

[28th January 1972

(b) Advertisements were released inviting suggestions from leading Artists and Advertising Agencies for a Motif and Slogan for adoption by the Tourism Corporation. It was specified that the Motif suggested should be simple and must represent Tamil Culture and tradition. It was also offered that the accepted Motif and Slogan would be given a suitable reward. The advertisements were released for publication in the Indian Express, The Hindu and in the Tamil Arasu in September, 1971. As no Motif worth acceptance was received, the Board of Directors decided to entrust the work to the National Institute of Desigus, Ahmedabad.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether the 'Motif and Slogan' are for the whole of the State or for individual districts also ?

THE HON. THIRU K. RAJARAM : Sir, it is meant for the entire State of Tamil Nadu.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the lack of response, may I know what was the reward that was offered ?

THE HON. THIRU K. RAJARAM : The Tamil Nadu Tourism Development Corporation Limited is thinking of giving up to Rs. 5,000 as reward.

*Trampled to death by elephants*

* 49 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the number of persons trampled to death by elephants in the forest lands adjoining Gobichettipalayam in Coimbatore District about 9th August 1971; and

(b) if so, the details thereof ?

*யானை மிதித்து சாவு*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆகஸ்டு 12-ஆம் நாள் அளவில் கோயம்புத்தூர் மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தை அடுத்துள்ள காட்டு நிலங்களில் யானைகளால் பல காவலாட்கள் மிதித்துக் கொல்லப்பட்டனரா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) & (இ) அரசுக்குக் கிடைத்துள்ள அறிக்கையின்படி, 1971-ம் ஆண்டு ஆகஸ்டு 7, 8 தேதிகளில், வடக்குக் கோயம்புத்தூர் வனக் கோட்டத்தைச் சேர்ந்த தலமலை வனச் சரகத்தில் உள்ள தாளவாடி பகுதியில் மூவர் யானையால் மிதித்துக் கொல்லப்பட்டனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுகின்றனவா ? அவை எப்படி நடக்கின்றன ? எத்தனை முறை நடக்கின்றன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : எப்படி நடக்கிறது என்ற விவரமில்லை. அப்படிப்பட்ட யானைகளைச் சுடுவதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.



28th January 1972]

*Pangolin Animal*

* 50 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any giant pangolin animal has been captured in Banavaram Forest near Arni about the 12th December 1970; and

(b) whether any steps have been taken to protect this breed ?

*எறும்புதின்னி பெரும் விலங்கு*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970 டிசம்பர் 12-ஆம் நாள் அளவில் ஆரணிக்கு அருகில் பாணவரம் காட்டில் எறும்புதின்னி பெரும் விலங்கு ஏதாவது பிடிக்கப் பட்டதா ?

(இ) இந்த இனத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் இந்த வனவிலங்கு இனத்திற்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்காக அரசின் பரிசிலனையில் உள்ள வன விலங்குகள், வனப் பறவைகள் பாதுகாப்பு மசோதாவில், வகை செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இந்த விலங்கினம் பிடிக்கப்பட்டு எங்கே வைக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கிண்டி பூங்காவிலே தனியாகக் கூண்டு அமைத்து ஓராண்டுக் காலமாக வைக்கப்பட்டிருக்கிறது.

*Separate road for Harijans*

* 39 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether a separate road has been laid for Harijans in Sevalapuri village of Gingee taluk in South Arcot district; and

(b) if so, the details thereof ?

*அரிசனங்களுக்குத் தனி சாலை*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டம், செஞ்சி தாலூக்கா, செவலபுரி கிராமத்தில் அரிசனங்களுக்கெனத் தனியாகச் சாலை போடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

(*Note*.--An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

## II. ADJOURNMENT MOTION *re* FAILURE TO OFFER PROTECTION TO THE MEETING CONDUCTED BY THE RULING CONGRESS AT TIRUCHI ON REPUBLIC DAY.

MR. CHAIRMAN : I am going to take up only the ' Adjournment Motion ' regarding the incident at Tiruchi. Regarding B.& C. Mills, particulars are awaited and I will take it up tomorrow.

I have received notice of a motion from Thiru M. Arumugaswami, M.L.C., for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the failure of the police to offer legitimate protection to the meeting conducted by the Ruling Congress at Tiruchi on the Republic Day and to prevent organized attack on the speakers and audience.

I want to know from the hon. Member how the matter falls within the scope of the rules and also the viewpoint of the Government in this regard from the Hon. the Chief Minister.

Now the hon. Member will briefly explain.

* திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர்களே, இந்த ஆண்டு குடியரசு தினத்தன்று திருச்சியில் காங்கிரஸ் (ஆர்) கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்திய கூட்டத்தில் யாரோ சிலர்—எந்தக் கட்சி என்று என்னாலே திட்டவட்டமாகச் சொல்ல இயலாது—அந்தக் கூட்டத்தில் கலகம் செய்ததாகவும், ஆனால் கலகம் செய்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசாதே என்று கோஷமிட்டதால் ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்று யூகிக்க இடமிருக்கிறது என்றும் தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த நேரத்தில் அங்கே கூட்டத்தில் காவலாக இருந்த காவல் துறையைச் சேர்ந்த போலீஸ்காரர்கள், அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு வெறுமனே சும்மாயிருந்ததாகவும், பாதுகாப்பு நடவடிக்கைகள் கோரப்பட்டபோதும்கூட, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேடையிலிருந்த சிலர் தாக்கப்பட்டார்கள் என்றும் தெரிகிறது. இன்றையதினம் காலையில் அந்தக் கூட்டத்தில் பேசிய தஞ்சை இராமமூர்த்தி என்ற தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் என்னோடு தொலைபேசியில் பேசியபோது, அவரே மேடையில் இருந்ததாகவும், அவரைக் குறிப்பிட்டே வசை மாரி பாடி தாக்க முற்பட்டதாகவும், அவர் சொன்னார். இதுபோன்ற நிகழ்ச்சிகள் சமீபகாலமாக தமிழ்நாட்டில் பல இடங்களிலேயும் நடந்துகொண்டு வருகின்றன. எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள்



மட்டும்தான் இதைச் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. பல்வேறு கட்சிக் கூட்டங்களிலேயும் இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்றன. கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டமானாலும் சரிதான், காங்கிரஸ் கட்சிக் கூட்டமானாலும் சரிதான். இந்த நிகழ்ச்சி, இப்படிப்பட்ட போக்கு தொடர்ந்து அனுமதிக்கப்பட்டு வந்தால், நாளடைவில் யாரும் பொதுக்கூட்டங்களைப் பந்தோபஸ்தாக நடத்த முடியாத நிலைமை உண்டாகும், பல்பரம் அவரவர்கள் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சொல்லி ஆதரவு தேடுவதற்கு பதிலாக, வேறொரு வகையில் வன்முறையில் ஈடுபடுவதின் மூலமாகத் தங்கள் கருத்துக்கு வலுத் தேடும் துர்பாக்கிய நிலைமை தமிழ் நாட்டில் ஏற்பட்டுவிடும். இதுபற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து இதுபோன்ற பொதுக் கூட்டங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு பந்தோபஸ்து அளிப்பதுடன் அரசியல் கட்சிக்காரர்களை—ஏனென்றால் அவர்கள் தான் இந்தப் பொதுக் கூட்டங்களில் பிரதான பங்கினை ஏற்கிறார்கள்—கூடிப்பேசி இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். கூட்டங்களில் ஒருவேளை கோபத்தைத் தூண்டும் பேச்சைப் பேசுவது கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருக்கலாம். அப்படிப்பட்ட நிலைமை உண்டாகாது கட்டுப்பாடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பிரேரேபிப்பதன் மூலம், அவையின் நடவடிக்கைகளை ஒரு மணி நேரத்துக்கு ஒத்தி வைத்து, இந்த முக்கியமான பிரச்னையைப்பற்றிப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின்பாலும் எங்கள்பாலும் மிகுந்த அன்பு உண்டு. ஆகவேதான் காலையில் பத்திரிகையில் வந்த செய்திக்கு ஒரு மறுப்பு என் மூலமாக அளிக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பார் என்று கருதுகிறேன். நான் சொல்லித்தான் அவர் கொடுத்தார் என்று தயவுசெய்து யாரும் கருதிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தின் மூலமாக ஒரு விளக்கம் அளிப்பதற்கான வாய்ப்பினை எனக்கு அளித்ததற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சியில் பத்திரிகையில் வந்திருக்கிற அளவுக்கு அவ்வளவு பரபரப்பான சம்பவம் எதுவும் நடைபெற்றுவிடவில்லை. ஆனால் ஒரு சிறியசம்பவம் கூட, கூட்டங்களில் அவர்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு எதிராக, நடைபெறக் கூடாது என்ற அழுத்தமான எண்ணம் உடையவர்கள் தாம் நாம் அனைவரும். திருச்சியில் குடியரசு தினத்தன்று இந்திரா காங்கிரஸ் நண்பர்களால் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது; ஒரு 300 அல்லது 400 பேர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை இராமமூர்த்தி அவர்களும் மற்றும் சிலரும் அந்தக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். பொதுவாக நாம் குடியரசு தினம், நாட்டு விடுதலை நாள் இப்படிப்பட்ட தேசிய விழாக்களிலாவது மற்றக் கட்சிகளைக் குறைகூறிப் பேசாமல்

இருக்கின்ற நல்ல மரபை பெரிய தலைவர்களிலிருந்து சாதாரண சொற்பொழிவாளர்கள் வரை எல்லாக் கட்சியினரும் கடைப்பிடிப்பது நல்லது என்று நினைக்கிறேன். நாம் அனைவரும் இந்தியாவில் ஒற்றுமையாக இருக்கிறோம், நமக்குள்ளே கட்சி மாச்சர்யங்கள் ஆயிரம் இருந்தாலும், இந்திய மண்ணைக் காப்பாற்றுவதற்கும், இந்தியா மீது அந்நியர் ஆக்கிரமிப்பாக இருந்தாலும் அல்லது பொதுவான நல்ல நோக்கங்களை நிறைவேற்றுவதாக இருந்தாலும் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்று காட்டுவதற்காகவாவது, அந்த ஒரு நாளை நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதை உணர்வு பூர்வமாகக் காட்டுகிற நாளாக எடுத்துக் கொள்ள வேண்டும். பல வெளிநாடுகளில் எத்தனை கட்சி மாறுபாடுகள் இருந்தாலும், தேசியத் திருவிழாக்களைக் கொண்டாடுகிறார்கள் என்றால், கட்சி மாறுபாடுகளை மறந்துவிட்டு, அனைவரும் ஒரே மேடையில் கூடிநின்று தங்கள் நாட்டைப் பற்றியும் தங்கள் நாட்டு சுதந்திரத்தைப் பற்றியும், தங்களுடைய நாட்டு மக்கள் சமுதாயம் வாழவேண்டிய நல்ல முறைகள் பற்றியும் எடுத்துச்சொல்கிற நல்ல அரசியல் பண்பாட்டினைக் கடைப்பிடித்து வருகிறார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை, ஆகஸ்ட் 15, குடியரசு நாள், உத்தமர் காந்தியடிகள் விழா, நேருபிரான் விழா, இந்த விழாக்களை எல்லாம் நடத்துகிறபோது, நம் மாநில அளவிலாவது அனைத்துக் கட்சிக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்கிற அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அனைத்துக் கட்சிக் கூட்டமாக நடத்தி வருகிறோம். தனிப்பட்ட கட்சிகள் சார்பாக நடத்த வேண்டாமென்று தெரிவித்தாலும், யாரும் ஏற்றுக்கொள்வதாக இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். திருச்சியில் நடைபெற்ற குடியரசு நாள் விழாக் கூட்டத்தில் இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் பேசும்போது, கழக ஆட்சியையும், அமைச்சர்களையும் பலவாறாகத் தாக்கிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டார்கள் பெயரை, தஞ்சை இராமமூர்த்தி என்று. காலையிலேகூட நான் பேரவையில் பேசும்போது, பெயரைக் குறிப்பிடவில்லை. அவர்களே பெயரைக் குறிப்பிட்ட காரணத்தால், சொல்லுகிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களுமாக காவிரி நீர்ப் பிரச்சினைக்காக ஒரு கூட்டம் நடத்தினோம். அந்தப் பொதுக் கூட்டத்திற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் வந்திருந்தார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொல்கிறார்கள் 'வந்திருந்தேன்' என்று. தஞ்சை இராமமூர்த்தியைப் பேசச் சொன்னதும், ஒலிபெருக்கி முன்னால் போய் நின்று பேச ஆரம்பித்தார். எப்படி ஆரம்பித்தார் என்றால், இந்தியாவை ஆளுகிற கட்சியின் சார்பில் பேசுகிறேன் என்ற ஆணவத்தோடு பேசுகிறேன் என்று ஆரம்பித்தார். உடனே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராசாராம் அவர்கள் சொன்னார்கள், 'இப்படி ஒரு கட்சிக்கு நாலு பேர் இருந்தால் போதும், உருப்பட்டுவிடும்' என்று. அப்படிப்பட்டவர்தான் இன்றைக்கு அறிக்கை விட்டிருக்கிறார் பத்திரிகையில். அதைப் படித்துவிட்டு நண்பர் திரு. ஆறுமுகசாமி இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார். அவர்கள் நல்ல அரசியல் அனுபவம் வாய்ந்தவர், பழுத்த அனுபவம் வாய்ந்தவர் இந்த விஷயத்துக்காகக் கொண்டு வந்திருக்கிறாரா என்றால், இல்லை. முதலில் சொன்ன விஷயம் நன்கு அம்பலத்துக்கு வரட்டும் என்று



தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். உள்ளபடியே அமைச்சர்கள் தவறே செய்கிறார்கள் என்றால், அவைகளைப்பற்றி ஆதாரபூர்வமாகக் குற்றம் சாட்டுவதற்கு இரண்டு அவைகள் இருக்கின்றன. அங்கே எடுத்துச் சொல்லலாம். அல்லது மேடைகளில் பேசுகிற நேரத்தில் ஆதாரங்களோடு குற்றம் சாட்டிச் சொல்லலாம். நான் அமெரிக்கா நாட்டுக்குச் சென்றபோது, என்ன எழுதினார்கள்? என்ன பேசினார்கள்? நான் தனிப்பட்ட கருணாநிதி மட்டுமல்ல. நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிற தமிழக மாநிலத்தின் முதலமைச்சராகவும் இருக்கிறேன். அந்த நேரத்தில் என்ன எழுதப்பட்டது? இருக்கிற பணத்தையெல்லாம் மற்ற மந்திரிகள் ஏமாந்து போய்க் கொடுத்துவிட்டார்கள், கருணாநிதி மட்டும் புத்திசாலித்தனமாகப் பணத்தை வைரமாக மாற்றி அமெரிக்காவுக்குக் கொண்டுபோய் ஒரு பாங்கில் போட்டு விட்டார் என்று பத்திரிகையில் எழுதினார்கள். மேடைகளில் பேசினார்கள். கருணாநிதியைப்பற்றி, உங்களுடைய முதலமைச்சரைப் பற்றித்தான். அதற்குப் பிறகு நான் திரும்பிவந்தபோது, வருவதற்கு ஒரு நாள் என் தாமதம் தெரியுமா, நான் காலையில் பம்பாய்க்கு வந்துவிட்டேன். புயல் நெருக்கடியின் காரணமாக விமானம் கிடைக்காமல் தங்கியிருந்தேன். காரணம் கற்பித்து விமானத்தில் சாமான்களைக் கள்ளக் கடத்தல் மூலம் கொண்டுவந்ததாகவும் அவை பிடிபட்டு பம்பாய் விமான நிலையத்தில் நான் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய அமைச்சர் சவான் அவர்கள் தலையிட்டு விடுவித்ததாகவும் பேசினார்கள். அப்படிப் பத்திரிகையில் எழுதினார்கள். இப்படித் தினந்தோறும் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. அதற்குப் பிறகு ரூ. 50 லட்சம், ஒரு கோடி 'ரெயிட்' செய்யப்பட்டதாக எழுதுகிறார்கள். ஒரே பத்திரிகையில் எழுதுகிறார்கள். ஒரே பேச்சாளர் பேசுகிறார். எல்லாப் பணத்தையும் வைரமாக மாற்றிப் பாங்கியில் போட்டுவிட்டார்கள் என்கிறார்கள். பிறகு ஒரு கோடி ரூபாய் 'ரெயிட்' செய்யப்பட்டது என்று சொல்கிறார்கள். இப்படி அவதூறான முறையில் பேசுவது மட்டுமல்ல, வீட்டிலிருக்கிற அன்னையர், சகோதரியார், துணைவியார், பெண்டு பிள்ளைகள் இவர்களையெல்லாம் கூட இன்றைக்கு மேடைக்கு இழுக்கப்படுகிற அளவுக்கு மிகக் கேவலமான வார்த்தைகள் பேசப்படுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் என்ற முறையில் அல்ல, அந்தக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவன் என்ற முறையில் இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்காவது பேசினால், இங்கிருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்கள் அப்படிக் குறிப்பிடுவார்களேயானால், அவர்களைக் கண்டிப்பதற்கும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். பல முறை கண்டிக்கப்பட்டிருக்கிறது, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே நான் பல சொற்பொழிவாளர்களைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களும் இதே அளவுக்குக் கண்டிக்க முற்பட்டால், அப்படிப்பட்ட முறையில் செயல்பட்டால், கட்சியிலிருந்து விலக்கிவிடுவோம் என்ற கடுமையான நடவடிக்கை எடுத்தால், தமிழ் நாட்டு அரசியல் நாகரிகம் பொன்னேபோல் போற்றிக் காப்பாற்றப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அளவில் திருச்சியில் நடைபெற்ற கூட்டம்

*[டாக்டர் மு. கருணாநிதி]* [28th January 1972

இறுதிவரையில் நடைபெற்றதாகத் தகவல் வந்திருக்கிறது. கூட்டத்தில் காரசாரமான, கேவலமான வார்த்தைகள் கையாளப்பட்டபோது, ஒரு நண்பர் மூர்த்தி என்பவர் மேடை முன்வந்து இப்படிப் பேசாதே என்று சொல்ல, மேடையில் இருப்பவர்களுக்கும் மூர்த்திக்கும் வாய்த்தகராறு முற்றி போலீசார் தலையிட்டு மூர்த்தியைக் கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டார்கள். பிறகு இந்திரா காங்கிரஸ் கட்சி தந்த புகார் மீது 75-ஆவது சட்டப் பிரிவின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. போலீசார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாதவண்ணம் மனோநிலை, அரசியல் பண்பாடு அமைவதற்கு எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த விவாதத்திற்குப் பிறகு விவாதம் தேவையில்லையென்று தலைவர் அவர்கள் மூலம் கூறி அமைகிறேன்.

MR. CHAIRMAN: In view of the statement of the Hon. the Chief Minister and as the matter does not involve more than the ordinary administration of law and order, I withhold my consent to the raising of the matter.

The next adjournment motion will be taken up to morrow.

## III. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. CHAIRMAN: Thiru Muthuswamy will now move the amendment.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

"இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

'இருப்பினும், ஆளுநர் உரையில்,

1. தமிழ் நாட்டில் ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் பணி புரியும் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் உரிய தேதியில் சம்பளம் வழங்க வழிவகை செய்ய குறிப்பிடாதது குறித்தும்,

2. தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான பாதுகாப்புச் சட்டம் கொண்டுவருவது பற்றி குறிப்பிடாததும் வருந்தத்தக்கது.

THIRU M. RAJAH IYER: I second amendment Sir,

மிஸ்டர் சேர்மன்: இன்றைக்குப் பேசுவதற்கு 13 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நாளைக்குப் பேசுவதற்கும் 13 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். 31-ம் தேதி விவாதம் முடிகிறது. ஏற்கனவே ரொம்ப நேரம் பேசிவிட்டார்கள். இனியும் அதிகமாகப் பேசமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகையால் ஒவ்வொருவரும் 10 நிமிஷத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

* THIRU A. P. JANARDHANAM: Mr. Chairman, Sir, at the very outset, I want to compliment the Governor on trying to imbibe the rudiments of Tamil and I hope, in course of time, he will begin to appreciate the poems of Bharathi and Bharthidasan's songs, the grandeur of Anna's prose and Tamil literature of Kalaignar. The Governor has referred to the principles of Democray and Socialism being encouraged here. Democracy is an adult form of Government and it needs sobriety, experience and wisdom. Particularly in Tamil Nadu, we are happy that parties, irrespective of their affiliations or interest, have helped in nurturing democracy. Socialism has been defined as a broad human movement of welfare undertaken for the good of the masses. In that also, Tamil Nadu stands foremost. We have entered the 25th year of freedom. As such, we had the springtime of freedom. All the underdeveloped Nations have gone through various dramatic experiences. In many places, there have been attacks, there have been assassinations, and there have been revolutions. Especially in Latin America and the Middle East, revolutions have been endemic. Fortunately, in this sub-continent, Democracy has been stabilised. Thanks to the sound commonsense of our masses, thanks to the active participation of our voters, thanks to the enlightened training our leaders had under British masters, parliamentary institutions have come to stay in this particular part of the country. We have recently won a war. That has raised our stock in the eyes of the world. Indira Gandhi, by her astute leadership, has been called the Empress of India. She has been rightly applauded by statesmen the world over. Even President Nixon is having second thoughts. The war against Yahya is over. But the war against poverty, the war against malnutrition, the war against diseases, the war against unemployment, etc., has to go on. The Governor has referred to America as having been ill-informed in this war. America has been a model for both extremes. America has produced Abraham Lincoln, Jefferson, Thomas Paine, Walt Disney, Kennedy and Martin Luther King. So far, we salute America. But America has also produced Alcapone, Baby-faced Nelson. America has also produced the wrong models—the twist, the jerk and the monkey—all these for the dances. America has also produced Marijuana and the like kidnappers who kidnapped the baby of Charles Lindbergh without any compunction. I can go on quoting. If you turn the pages of 'Master Detective', you will find how diabolically the master minds of crime work. America is an immature country. Amecica is an adolescent country. But so far as it has preached democratic platitudes, so far as it has great Astronauts, so far as it has spent money on space research, so far as it has helped us, we welcome America. But for me, personally, we have a nice Asian model. Japan is our model. It has integrated the conventional, the traditonal, with the modern. In the space of a few decades, Japan has compressed the progress of a few centuries. The Meiri, the Shogunate, the Sammurai, they have all done their best to put Japan on the industrial map of the world. In a few years, I fear Japan may bypass and surpass the United States of America. Those who have been to Japan have been in raptures over everything from Expo. 70 to the humble taxi drivers of Japan. The Chairman of the Council, the hon. Member Thiru Swaminathan and the Hon. Minister Navalar



28th January 1972]

[28th January 1972

have testified to the fact that they were impressed with the decorum, the decency, the ceremony, the courtesy they found in Japan. Japan is a very good model for us. They have transplanted everything. They have turned rural economy into modern industry. Not only that. Without oil, without iron, without steel, Japan has produced many things and come to the first rank. Thanks to human ingenuity, thanks to copying wisely from the West, thanks to adopting the latest techniques, the Japanese have now raised their standard of living to a very high degree. In the latest 'Swarajya', I found an article written by Thiru K. R. Ramanujam stating that the lowest of the Japanese get an average monthly income of Rs. 10,000. There is no unemployment there. So we can conveniently take Japan as our model. Even China has impressed. A great journalist has written that the Chinese are better fed, that the Chinese are better organised and that the Chinese standard has gone up. The Communists in their various drives may be ruthless. But except for a handful of intellectuals, they find it hard. Everywhere from Hungary to China, this is the same tale. But their standard of living has gone up. China under Mao-Tse-Tung—the days of the long march—that has been praised. They were a contrast to the Kuomintang. The leaders of the Communist Party came from the peasant stock. They dedicated themselves, thought gallantly, while ruthlessly pursuing the goal. They have put China on the map of the world. Now Mr. Nixon tries to woo China. The pingpong diplomacy is the result of Chinese performance. So, we have two Asian giants—Japan and China. I think India can take lessons from them.

The Governor has referred to our aspiration and desire to better the lot of the common man. For the next 50 or 60 years, we have identified ourselves with the common man, the basic sentiments of the slum dwellers, the basic sentiments of the untouchables, and the basic urges of the Backward Classes. This has been the fulcrum, the backbone, the keystone of the Justice Party, the Dravida Kazhagam, the Dravida Munnetra Kazhagam and the Self-Respect Movement. In 1971, we were returned to power, only because we identified ourselves with the common man.

The Governor has referred to Centre-State relations. I have spoken often about the Centre-State relationship here. The Hon. Chairman has gracefully allotted only 10 minutes. I want to just finish my speech soon. The Centre-State relations is a vexed question. It is not peculiar to the D.M.K. The latest to indulge in it are Thiru Dharma Vira and Thiru Veerendra Patil. The great French Philosopher, Lemmanais, has said that if the Constitution is heavily weighted in favour of the Centre, there is applexy at the Centre and anaemia at the extremities. That is the sickness of our body politic. Even for installing the statue of Raja Raja Chola and the issue of Bharathi Dasan stamp, our just demands are being spurned by the Centre. When we demand these things, when we say that we have given up secession



28th January 1972]

once and for all, when our Hon. the Chief Minister has declared in unequivocal terms in Thanjavur that we have given up secession, still from the waste paper basket of history, voices are raised that we are still harping on secession. In 1962 itself we gave it up. What we demand is State autonomy. State autonomy is different from self-determination. In a sub-continent bristling with so many languages, so many races, so many religions, and so many castes, the forces of division are very, very strong. It is the care of the Centre, just like a mother nurturing and guiding her children, to nurture the component states. When we go there, we have to be treated well. Our sentiments have to be respected. That is why I say the Centre has to take a more graceful attitude. The Centre has to accommodate us. They can sit opposite to us at the table, talk out and thrash out everything. We are not monsters. We were painted as monsters before our revered Anna went to Delhi. But after he went to Delhi, he impressed everybody with his magnanimity, sincerity and simplicity. We are all common people. We have a rich heritage. We were schooled in the morals of Thiruvalluvar. We are rooted in the precepts of Anna. We won't do any mischief. Whatever we do, we will explicitly, openly, after open statements, indulge in everything. We never believe in underground activities. So Delhi can talk with us.

The Rajamannar Committee Report was not drafted by the D.M.K. Party Members. By no stretch of imagination can anyone call Mr. P. Chandra Reddy, Dr. Rajamannar or Dr. A. L. Mudaliar as of the D.M.K. Their labours seem to be wasted on the Centre. If that is the callous attitude of the Centre, what can we do? Here, we are a magnanimous lot. We are trying to extend our best. Our Hon. Chief Minister, Kalaignar Karunanidhi, has promised 10 crores of rupees to the National Defence Fund. We have given blood and money. We have done our best to supply the sinews of war. When the country is in danger, we are one in every effort. Whenever our frontiers are in danger, whenever our lives are in jeopardy, whenever the enemy strikes us, we raise as one man, with the Punjabi, the Bengali and with every other people. Is this the treatment that we get from the Centre? That is the question I ask. We are a question mark to-day. But tomorrow, the youngsters will come who will demand in an authoritarian voice, "Give us justice, give us justice."

The Governor has pleaded for industrial peace here. We are for industrial peace here. But what a combination of people we find here. There is a political overtone in the present industrial unrest, in the present labour unrest in this State. Misery is the seed bed of communism. The Communists thrive on misery. They foment strikes. If the strike succeeds, they get prestige. If the strike fails, misery mounts. There also the Communist has the hunting ground. But as we are concerned, everybody is our comrade and we will try our best to settle everything amicably. I have great respect for the Governor who has put forward all these views.

[28th January 1972

The Swatantra Leader, Thiru Saw Ganesan, referred to the mad rush to the cities. The lure of the City is very, very strong. The younger generation has the matinee idols. They have discarded the old idols. Here they have neons and grand shows. That is the way of the metrapolis. Our people have gone elsewhere and are living in sub-human conditions. In Calcutta in veritable cement pipes our people are living. In Delhi in the shade of the Purana Quila our people are eking out their existence. In Bombay I had been to Dharavi. It is a stinking hell. In the *periphery* of the city, it is a veritable hell where the mass of humanity breed, live and drag in their miserable existence. What can we do about it ? In Madras, the Hon. the Minister for Public Health has referred to the Master Plan for Madras. We are doing our best. The slums are the rotten core of the apple of the City. We are trying to remove slums in a phased manner. The Slum Clearance Board of Madras has taken great credit for trying to remove the slums in a phased manner. The evils of City life have been dealt with by writers for many years. In 1937, Lin Yu Tang, a celebrated writer, has suggested that City life leads to softened brains and hardened livers, ulcerated duodenums and lacerated intestines, over-worked stomachs and overtaxed kidneys, inflammed bladders and outraged spleens, dilated hearts and shattered nerves. These are the maladies which the City people suffer from. We are trying our best to remove them. But one thing, I will clearly say, namely, that the D.M.K. cannot be shaken from its massive majority support, from the affections of the people. There is only one element. If we forget Anna, if we forget our principles, if we fall from the precepts held out by Anna, then alone we will fall. Otherwise, no force on earth can shake us.

Thank you, Sir.

* திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது என்னுடைய ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தினுடைய பல சாதனைகளைப் பார்க்கிற இந்த நேரத்தில் சமீப காலத்தில் பொருளாதாரத் துறையில் அரசாங்கம் பின்பற்றி வரக்கூடிய தொழிலாளர் கொள்கையைப்பற்றி இங்கே சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று நம்புகிறேன். தொழிலாளர்கள் துறையைப் பொறுத்த வரை, ஒரு நல்ல தொழிலாளர் கொகை தான் பொருளாதாரக் கொள்கைக்கு அடிப்படையாக அமையும். ஆனால் இப்போது அரசாங்கம் சில புதிய கருத்துக்களை மக்களிடத்தில் வைத்திருக்கிறது. ஒரு தொழிலிலே பல தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. இந்த தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகளால் இயக்கப்படுவதால் தொழிலாளர்களுடைய நலன்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு தொழில் அதிபர்கள் முன்னிலையில் வைக்கப்பட முடியாமல் போகிறது. ஆகவே தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பலன்கள் கிடைக்காமல் போகின்றன என்ற ஒரு கருத்து சொல்லப்படுகிறது. அதே போன்று தொழிற் சங்கங்களின் தலைவர்களாக இருப்பவர்கள் அந்தத் தொழிலிலே பணி செய்பவர்களாக இல்லாமல் வெளியார்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்தத் தொழிற் சங்கங்களுக்குத் தலைவர்களாக வரவேண்டியவர்கள் இந்தத் தொழில்





களில் ஈடுபடுபவர்களாகவும் பணிபுரிபவர்களாகவும் இருக்க வேண்டுமென்று இரண்டு முக்கிய கருத்துக்கள் இன்று அரசாங்கத்தால் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்திலே நான் பொதுப்படையாக தொழிலாளர் இயக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிற ஒரு மாணவன் என்ற அடிப்படையில் பார்க்கிற போது, இந்த இரண்டு கருத்துக்கள் சர்வதேச ரீதியில் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்துக்களாக இல்லையென்ற உண்மையை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன். தொழிலாளர் இயக்கம் எவ்வாறு வளர்ந்திருக்கிறது என்றால், முதலாளிகளுடைய பிடியிலிருந்து தொழிலாளர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தியில்லாதவர்கள். ஆகவே, அவர்களுக்கு உரிமைகளை எடுத்துச் சொல்லி, அவர்களைச் சங்கமாக அமைத்து தொழில் அதிபர்களிடத்தில் இணையாக நின்று விவாதம் செய்து நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் தான் தொழிலாளர் இயக்கங்கள் உலகமெல்லாம் வளர்ந்திருக்கின்றன. பிரிட்டனில் அப்படித் தான் வளர்ந்தது. மற்றும் பின் தங்கிய நாடுகளில்கூட தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லாம் பரந்த பொதுநல நோக்கத்துடன் தொழிலாளர்களுக்கு நன்மை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் வந்தார்கள். பின்பு கட்சி அடிப்படையில் வந்தார்கள். பின்பு தீவிர வாதிகள், தீவிர கட்சிகள் எல்லாம் தொழிற் சங்கங்களில் தலையிட்டுத் தான் தொழிலாளர் இயக்கத்தை இந்த அளவுக்கு வளர்த்திருக்கிறார்கள் என்ற உண்மையை ஒத்துக் கொண்டாலும், இது இப்படித் தான் வளர்ந்திருக்க முடியும், வேறு எப்படியும் வளர்ந்திருக்க முடியாது என்று இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். பிரிட்டனை எடுத்துக்கொண்டாலும் கூட, பல தொழில்களிலே அதாவது "மேன்யுவல் லேபர்" என்று சொல்லக் கூடிய தொழில்களிலே அந்தத் தொழிலுக்கு வெளியே இருப்பவர்கள் தான் தொழிற் சங்கத் தலைவர்களாக இருக்கிறார்கள். பல தொழில்களிலே "நான்—மேன்யுவல் தொழிலாளர்கள்" தான், அதாவது "ஒயிட் காலர்டு" தொழிலாளர்கள் தான்—மூளையால் வேலை செய்பவர்கள் தான்—அப்படிப்பட்ட தொழிற் சங்கங்களிலே தலைவர்களாக இருக்கிறார்கள். நாடுதோறும் அத்தகைய ஒரு சூழ்நிலை இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். இங்கு பாங்கு எம்பிளாயிஸ் சங்கத்தை எடுத்துக்கொண்டாலும், ஆசிரியர் சங்கங்களை எடுத்துக்கொண்டாலும் அந்தத் தொழிலிலே இருப்பவர்கள்தான், சங்கங்களிலே இருப்பவர்கள் தான் தலைவர்களாக இருக்கிறார்கள். மேலும் நாம் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்லக் கூடிய இந்தத் தத்துவத்தை இதற்கு முன்பும் பல சமயங்களிலே கேட்டிருக்கிறோம். இந்தக் கருத்தை வைப்பவர்கள் எல்லாம் எந்த அடிப்படையிலே வைக்கிறார்கள் என்றால், அந்தத் தொழிற் சங்கத்திலே தாங்களும் இடம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தான். இப்படி வைக்கும்பொழுது, இது பொதுப்படையான ஒரு கருத்தாக இருக்கலாம். அவர்களின் நோக்கம் எல்லாம், அங்கே இருக்கும் தொழிற் சங்கத்திலே தாமும் இடம் பெற வேண்டும் என்பது தான். நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்வதெல்லாம், தொழிற் சங்கங்கள் அகில இந்திய ரீதியிலேயும், சர்வ தேச ரீதியிலேயும் அமைந்திருப்பதால், தயவுசெய்து இந்தக் கருத்தை அவற்றிலே சொல்ல வேண்டாம் என்பது தான். நாம் ஒரு முற்போக்கான தொழிற் கொள்கைக்குப் பதிலாக, ஒரு முற்போக்கான தொழிற் கொள்கையை உடைக்கும் அளவிலே இந்தக் கருத்தை வைக்க வேண்டா

மென்று இந்த அரசாங்கத்தின் மீது நான் வைத்திருக்கும் உயர்ந்த மரியாதையின் பேரில் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்தோடு இந்தியத் தொழிற் சங்கத்திலே பயிலும் ஒரு மாணவன் என்ற ரீதியிலேயும் இதைச் சொல்லிக்கொள்கிறேன். எனவே, இந்தக் கருத்தை மாநில அரசு மேலும் பரிசீலனை செய்து, செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்திலே தொழிற் சங்கங்களுக்கு அந்தத் தொழிலிலே இல்லாத வெளியார்கள் தான் தலைவர்களாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தொழிற் சங்கங்களிலே தொழிலாளர்களே தலைவர்களாக இருந்தால், அதிலே எப்படி பிற்போக்கு வந்துவிடும் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** நான் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் வேண்டுமென்ற கருத்தைச் சொன்னேன். இப்பொழுது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கேள்விக்கு நான் பதில் சொல்ல வருகிறேன். ஒரு தொழிற் சங்கத்திற்குத் தலைவராக வரவேண்டியவர் அந்தத் தொழிலையே சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற கருத்தை அரசாங்கம் வைத்திருக்கின்றது. அதையும் நான் அவ்வளவு ஒரு முற்போக்கான கருத்தாகக் கருதவில்லை என்பதற்கான விளக்கத்தையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கொள்கையைப் பொதுப்படையாக நாம் வைத்தால், இதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் யாராக இருப்பார்கள் என்றால், மிக்க பலவீனமாக இருக்கும் தொழிற் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள்தான். உதாரணமாக பாங்குத் தொழிலாளர்களுக்கு அது பொருந்தாமல் இருக்கலாம். ஆனால் மில் தொழிலாளர்களுக்கும், நீண்ட நாட்களாகவே ஒன்று சேர்க்கப்படாமல் இருக்கும்படியான விவசாயத் தொழிலாளர்களுக்கோ, நிச்சயமாக அது பொருந்தாது. எந்த விவசாயக் கூலியும் ஒரு விவசாயச் சங்கத்தை அமைக்கும்பொழுது, அவரே அதற்கு தலைவராக இருந்து, நிலச்சுவான் தாரருக்கு இணையாக இருந்து சண்டை போட்டு அந்தக் கூலியை மற்ற விவசாயக் கூலிகளுக்குப் பெற்றுத் தர முடியாது. அதே போல் தேயிலைத் தொழில், காப்பித் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் பிலான்டேஷன் லேபரை எடுத்துக்கொண்டாலும், அவர்களிலே ஒருவர் அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்து, தோட்ட முதலாளிகளுடன் சண்டை போட்டு, அவர்களுக்கு இணையாக இருந்து பேச்சு வார்த்தை நடத்தி எந்தவிதமான நன்மையும் செய்ய முடியாது என்று நான் சொல்லிக்கொண்டே போகலாம். அதைப் போலவே "உமன் ஒர்க்கர்ஸ்" என்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பல நாடுகளிலே—இன்னும் சரியாக வளர்ச்சியடைந்த நாடுகளிலே கூட—இன்னும் ஒன்று சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, அங்கெல்லாம் வெளியே இருக்கக் கூடியவர்களைத் தான் தலைவராக வைத்திருக்க வேண்டும். அப்படித் தான் அங்கிருக்கும் தொழிற் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்தக் காரணத்தையே உதாரணமாகச் சொல்லி, அந்தத் தொழில்களைச் சேர்ந்தவர்களையே தலைவர்களாகப் போட வேண்டுமென்று சட்டமியற்றினால், அந்தத் தொழிற் சங்க இயக்கத்தை நசுக்குவதாக நான் சொல்லாவிட்டாலும், அந்தத் தொழிற் சங்க இயக்கம் வளர்ச்சியடையாமல் இன்னும் பல ஆண்டுக்காலம் பின்தங்கியிருக்கும் நிலைமையை ஏற்படுத்திவிடும் என்பதிலேதான் அது முற்போக்கான கொள்கை இல்லை என்று கூறுகிறேன். உழைப்பவர்களுக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் பாடுபட இந்த அரசாங்கம் மீண்டும் அதை





வலியுறுத்தி அதற்காக ஒரு சட்டத்தை இயற்றக் கூடும். தொழிற் சங்கங்களுக்காக மற்ற பல சட்டங்களை இயற்றும்பொழுது, பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதுபற்றியும் அதை எப்படி எப்படி சமாளிப்பது என்பது பற்றியும் நான் சொல்லத் தேவையில்லை. அப்படி ஒரு சட்டம் ஏற்படுமானால், நிச்சயமாக அந்தச் சட்டத்தை இந்தியத் தொழிற் சங்க இயக்கம் வரவேற்காது. அதை நிச்சயமாக ஆட்சேபிக்கும். அதற்குச் சரியான அடிப்படை இருக்கிறது என்ற அளவிலே தான் இந்த இரண்டாவது கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். இது தொழிற் கொள்கை பற்றிய என்னுடைய இரண்டாவது கருத்தாகும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம் கூடாது என்ற எங்களுடைய கருத்தை தங்களுடைய கட்சி ஒத்துக் கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** நான் மிகுந்த தெளிவோடு சொன்னேன். நான் இது என்னுடைய கட்சிக் கொள்கை என்ற முறையிலே இதைச் சொல்லவில்லை. கட்சிப் பெயரிலே அதைச் சொன்னால், நான் சொல்லக்கூடிய தொழிலாளர்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு நல்ல கருத்து பரிசீலிக்கப் படாமல் போய்விடலாம் என்ற நோக்கத்தில் தான் நான் கட்சியை இங்கே வைக்காமல், தொழிற் சங்க இயக்கத்திலே அக்கறை கொண்ட ஒரு மாணவன் என்ற முறையிலே நான் இந்தக் கருத்தை அரசாங்கத்திற்கு வைத்தேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்.** அண்மையில் டெல்லியில் நடந்த ஐ.எல்.ஓ. மாநாட்டில் பல்வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டுமென்ற கருத்தைச்சொல்லி, அது பரிசிலனையில் இருப்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள 5-00 p.m.
விரும்புவது, அந்த மத்தியத் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூட்டிய முத்தரப்பு மாநாட்டிலே கூட இந்தக் கருத்து வைக்கப்பட்டது. நமது அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள், அங்கு கூட இந்தக் கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் மகாராஷ்டிரம் அதற்கு ஒரு சட்டம் இயற்றியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால், அது கூட அங்கீகரிக்கப்பட்ட முக்கியமான 3, 4 தொழிற்சங்கங்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்ற செய்தியை நான் சமீபத்திலேதான் பேப்பர்களிலே படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே, அந்தக் கருத்தைப் பொதுப்படையாக எல்லோரும் வரவேற்றார்கள்: ஆனால் அதை ஏன் செயல்படுத்த முடியவில்லை என்றால். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தனிப்பட்ட கொள்கைகளை தங்களுடைய கட்சிக் கூட்டத்திலே சொல்லுவதும், கட்சி அதில் ஒரு முடிவு எடுத்த பிறகு அதை இப்படி பொது இடங்களிலே பேசும் பொழுது; தங்களுடைய கட்சியின் கொள்கையைத் தான் சொல்லுவது என்ற சம்பிரதாயம் இருக்கும் பொழுது, தாங்கள் மட்டும் கட்சிக்கு முரண்பாடாக பேசுவதினுடைய காரணத்தை அறிய விரும்புகிறேன்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** இதிலே அரசாங்கத்தின் இரண்டு கருத்துக்களைப் பற்றி எங்கள் கட்சி இன்னும் ஏதொரு முடிவும் எடுக்கவில்லை என்று அறிகிறேன்

[28th January 1972

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அபிப்பிராயம் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: கட்சிக் கூட்டம் போட்டு முடிவு எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது, நேற்று நடந்த கூட்டத்திலே இதுபற்றி ஒன்றும் பேசவில்லை என்பது தான். அதைத் தான் அவர் கூறுகிறார்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தொழிற் சங்க இயக்கத்தைப் பற்றிப் பேசுகின்ற இந்த நேரத்திலே இன்னும் அதிலே ஒரு முக்கியமான பிரிவினராய் இருக்கக் கூடிய ஆசிரியர்களைப்பற்றி என்னுடைய நிலையை எடுத்துச் சொல்வது முறையாகும் என்று கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் என் மீது பெருத்த அன்பு வைத்து அன்று ஒரு நாள் இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் விஷயத்திலே எல்லாவற்றையும் அனுதாபமாகக் கவனிப்பதாக நேரிலே சொன்னார்கள். அதை நான் பல இடங்களிலே சொல்லி எனக்கு மரியாதை சம்பாதித்துக்கொண்டேன். எந்த அளவுக்கு அந்த சந்திப்பைப் பயன்படுத்தி நான் மரியாதை சம்பாதித்துக்கொண்டேனோ, அந்த அளவுக்கு நான் இப்பொழுது ஒரு பெரிய இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்கள் கூட்டத்திலே அவர்களைக் கேட்கும் பொழுது சொன்னார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் சந்திக்க முயற்சி செய்தோம், ஆனால் அவர்களுடைய பேட்டி எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று. அப்படி அவர்கள் வருத்தப்படும்பொழுது, நான் பேட்டியைப் பெற்ற வாய்ப்பு எனக்கு நல்ல வழியாக அமைந்துவிட்டது. நான் இந்த நேரத்திலே அவர்களுடைய பிரச்சினையைச் சொல்வது, மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர்களுடைய அனுதாபத்தைப் பெறும் நம்பிக்கையிலே தான். சமீபத்திலே நான் சேலம் மாவட்டத்திலே 5, 6 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து அந்தப் பட்டதாரி ஆசிரியர்களை எல்லாம் சந்தித்து வந்திருக்கிறேன். இரண்டு நாளைக்கு முன்னால் கூட வேலூரிலே அவர்களுடைய செயற் குழுக்கூட்டம் நடந்து, அதிலே நான் கலந்து கொண்டேன். அவர்களுடைய உணர்ச்சிகள் நிச்சயமாகப் புண்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை மிக வருத்தத்துடன் இங்கே சொல்லிக் கொள்கிறேன். எந்தக் கட்டத்திலே அரசாங்கம் இந்த முடிவை எடுத்திருக்கிறதோ அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்றை மட்டும் நிச்சயமாக நான் சொல்ல முடியும். அரசாங்கம் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு மாபெரும் தவறை அவர்களுக்கு இழைத்திருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். ஒரு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய உள்ளத்திலே ஒரு பெரிய புண் ஏற்பட்டிருக்கிறது.

சென்ற மாதம் 25-ம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆசிரியர்களின் 14 வகையான ஆசிரியப் பிரிவுகளின் கோரிக்கைகளும் ஆராயப்பட்டு, அந்தக் கோரிக்கைகளுக்கு எவ்வித நியாயமும் இல்லையென்று அரசாங்கம் அந்தக் கோரிக்கைகளை மறுத்திருக்கிறது. இந்த 14 பிரிவு ஆசிரியர்களில் பல பிரிவினருக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை.

பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு எந்தவித நியாயமும் இல்லையென்று சொல்லுவது காரணமாக பல ஆசிரியர்களின் மனம் புண் பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு



28th January 1972] [திரு. வி. ஈஸ்வரமூர்த்தி]

விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களும் "இவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம், விரைவில் சாதகமான முடிவு எடுக்கப்படும்" என்றெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் ஓராண்டுக்காலம் காத்திருந்தார்கள். ஓராண்டுக் காலம் கழித்து எந்தவித விளக்கமும் இல்லாமல் கோரிக்கைகள் மொத்தமாக நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலை அவர்களுடைய மனதிலே ஒரு பெரிய கிளர்ச்சியை ஏற்படுத்தி, ஆசிரியர்கள் அனைவரும் பல தீவிரத் திட்டங்களையெல்லாம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய கோரிக்கைகளை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இதை வெறும் பேச்சுக்கோ அல்லது வாதத்துக்கோ கூறவில்லை. தயவுசெய்து இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்று, அவர்களுடைய குறைகளைச் சொல்வதற்கு சில நிமிடங்களாவது கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டு விட்டால், பாதிப் பிரச்னை தீர்ந்தது போல் இருக்கும். ஏதோ அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்துவிட்டால், அது நம்முடைய கல்வித் துறைக்கு இழுக்காகும்.

சட்டமன்ற உறுப்பினர்களால் கல்வி இலாகாவினிடத்திலிருந்து ஆதாரப் பூர்வமான செய்திகளைப் பெற முடிவதில்லை. அதைப் பற்றியெல்லாம் நான் பேசுவது முறையாகாது என்று கருதுகிறேன். கல்வி இலாகா அதிகாரிகள் சரியாக முறைப்படுத்தப்படவில்லை. ஆசிரியர்கள் பல சமயங்களில் என்ன செய்வது என்று புரியாமல் கல்வித் துறை இயக்குநர், கல்வித் துறை செயலாளர் போன்றவர்களைச் சந்திக்க முயற்சித்தபோது, உதாசீனப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே நான் இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றிக் கூட விளக்க விரும்பவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சில நிமிஷங்களாவது அவர்களுடன் பேச வேண்டும், அவர்களுக்குச் சம்பள உயர்வு ஏன் தரவில்லையென்றாலும் அவர்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் நல்ல முறையில் வாழ வேண்டுமென்றால், ஏதாவது ஒரு முறையில் இந்த ஆசிரியர்களின் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய ஆசிரியர்களின் சங்கங்கள் நிச்சயமாகத் தொழிற் சங்கங்களைப் போல் செயல்பட நாம் அங்கீகரிக்க முடியாது.

ஜெ.ட்டு. மாஸ்டர்ஸ் கன்வென்ஷன் என்று இருக்கிறது. அவர்கள் அடிக்கடி அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு அவர்கள் சம்பளத்தை உயர்த்திக் 5-10 p.m.
கொண்டிருக்கிறார்கள். தமிழாசிரியர்கள் கழகம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேண்டிய கழகம் என்பதால், அவர்களும் பல சலுகைகளைப் பெறுகிறார்கள். தமிழாசிரியர்களுக்குக் கேட்பது எல்லாம் கிடைக்கிறது. பட்டதாரி

[திரு. வி. ஈஸ்வரமூர்த்தி] [28th January 1972

களுக்கு மதிப்பு இல்லை. இந்த மூன்று சங்கங்களையும் இணைத்து ஒரே பெயரில், எந்தப் பெயர் வைத்தாலும் சரி, அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவர்களுடைய குறைகளைக் கேட்கக் கூடிய ஒரு கருவியாக அமைத்துக் கொடுத்தால் தான், இந்த ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்க முடியுமென்று கூறிக்கொண்டு மீண்டும் முதல்வர் அவர்கள் இந்தப் பட்டதாரி ஆசிரியர்களின் குறைகளை நேரில் கேட்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஜி. பராங்குசம்: தலைவர் அவர்களே, ஆளுநரின் உரையின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க பாண்டியன் அவர்கள் கூறிய நன்றி உரைத் தீர்மானத்தின்மீது நான் இரண்டொரு கருத்துக்களை இம் மன்றத்தில் பேசலாம் என்று கருதுகிறேன்.

பொதுவாக ஆளுநரின் உரை எதிர்கால வேலைத் திட்டங்களை எடுத்துக் காட்டுகிற அளவுக்கு, நம்முடைய அரசு செய்ய வேண்டிய, செய்திருக்கின்ற காரியங்களையும் எடுத்துக் காட்டுகின்ற அளவிலே இருக்கிறது என்பதையும், இதுவரையில் இந்த அரசு சாதித்திருக்கின்றவைகளைத் தெளிவாகவும் அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

முதலமைச்சராக இருக்கின்ற நமது கலைஞர் அவர்கள் இந்த அரசு 1972-க்குள் மின்சார விளக்கே இல்லையென்ற கிராமம் இல்லையென்ற நிலைமை உருவாக்கித் தந்து விட வேண்டுமென்று உறுதியளித்திருந்தார்கள். அந்த அடிப்படையில் இன்றையதினம் மின்சார இலாகா பொறுப்புகளை ஏற்று, சிறந்த முறையில் 1972-க்குள் முடித்து விடுகின்ற அளவுக்குச் செயலாற்றி வருகிறது என்பதற்கு நம்முடைய ஆளுநரின் உரையில் விளக்கம் தந்திருக்கிறார்கள்.

அடுத்து, உணவுத் துறையில் நாம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டும் அளவுக்கு 73 லட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்து, இந்த நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஓரளவுக்குத் தவிர்க்கப்பட்டு, ரேஷன் கடைகளில் மக்கள் நின்றுகொண்டிருந்த நிலைமையை மாற்றி, கட்டுப்பாடு இல்லாத அளவுக்கு எங்கே வேண்டுமானாலும் அரிசி கொண்டு போகின்ற நிலையில் இன்றைய தினம் அரசு திருப்திகரமான உணவு நிலைமை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நம்முடைய ஆளுநரின் உரை நமக்கு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

அடுத்தபடியாக, இன்றைய தினம் இந்த ஆளுநரின் உரையின் மீது பேசும் போது பலர் சிம்சன் தொழிலாளர் பிரச்சினைபற்றிப் பேசினார்கள். சிம்சன் தொழிலாளர் பிரச்னையை வைத்து இந்தத் தமிழகத்தில் சென்ற 3 மாத காலமாக நடைபெற்ற நிலைமைகளை எல்லாம் மன்றத்தில் பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். சிம்சன் தொழிலாளர் பிரச்னை ஒரு சாதாரணப் பிரச்னை. இந்த அரசின் மீது எப்படியாவது தாக்குதலை ஏற்படுத்த வேண்டும் என்ற தவறான எண்ணங்களைக் கொண்டு இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது என்பதைப் பொதுவாக நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்கள். இந்த அரசின் வளர்ச்சியிலே மிகவும் பொறாமை கொண்டவர்கள், இந்த அரசின் வளர்ச்சிக்கு ஏதாவது தடங்கல் உண்டுபண்ண வேண்டும் என்ற எண்ணத்தின் மீது



28th January 1972] [திரு. ஜி. பராங்குசம்]

இந்தச் சிறிய பிரச்னையைப் பெரிதாக ஆக்கி அதிலும் மத்திய அரசு தலையிடும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்கினார்கள். கடைசியாக அந்தப் பிரச்னை ஒரு சாதாரணப் பிரச்சினையாக ஆக்கப்பட்டது. ஆனால் அதற்கு மீண்டும் உயிர் கொடுக்கும் அளவுக்குப் பெரிது படுத்துகிறார்கள்.

ஒருபுறத்தில் ஒற்றுமை நிலவ வேண்டுமென்று பேசுகிறார்கள். இன்னொரு புறத்தில் உற்பத்தி பெருக வேண்டுமென்று பேசுகிறார்கள். பெருந்தலைவர் முதற்கொண்டு இன்றைய தினம் பேசுகிறார்கள். 'நாட்டில் சமதர்ம சோஷலிசம் வளர வேண்டும் என்று சொன்னால், உற்பத்தி அதிகமாகப் பெருக வேண்டும், உற்பத்தி எந்த அளவுக்குப் பெருகுகிறதோ, அந்த அளவுக்குத் தான் நாட்டில் சமதர்மம் பெருக முடியும்' என்று பேசுகிறார்கள். நம்முடைய இந்திய உபகண்டத்தில் தலைவராக இருக்கிற ஜனாதிபதி அவர்கள் கூட மூன்று ஆண்டுக் காலத்திற்கு வேலை நிறுத்தமோ கதவடைப்போ கூடாதென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வாரம் கூட அதை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய குடியரசு தினத்திற்காக நாட்டு மக்களுக்கு அளித்த வாழ்த்துக்களில் அதையே வலியுறுத்தியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் தலைவர்கள் வலியுறுத்திக்கொண்டிருந்தாலும், அவைகளையெல்லாம் புறக்கணித்து விட்டு, எப்படியாவது தமிழகத்தில் இருக்கிற தமிழக அரசைக் கவிழ்ப்பதற்கோ அல்லது அவர்களுக்குத் தொல்லை தர வேண்டுமென்ற எண்ணத்திலோ எப்படியோ தொழிலாளர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டு தொழிலாளர்கள் மீது பாசத்தைக் காட்டுவது போல் நடந்து, தொழிலாளர்களைச் சிக்கலான நிலைக்குக் கொண்டு போகிறார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில், இதற்கு ஒரு சரியான மாற்றுத் திட்டத்தைத் தந்தார்கள். அரசியல் வாதிகள் தொழிற் சங்க இயக்கத்திலே புகுந்து தொழிலாளர்களை அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்ற எண்ணத்தை நீண்டநெடுங்காலமாக எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் சொல்லிவந்தாலும்கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி, ஒன்று சொல்லுவார்கள். தொழிற் சங்க இயக்கத்தில் அரசியல் கட்சியின் தலைவர்கள் அதில் புகுந்து அவர்களுடைய நோக்கத்திற்காக தொழிற் சங்கங்களை இழுத்துச் செல்லுவதும், தொழிலாளர்களை அதற்காகப் பயன் படுத்துவதும் தொழிலாளர்களுக்குப் பாதகம் செய்கிற காரியம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்முறை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், பல ஆண்டுக்காலமாக தொழிற் சங்க இயக்கத்தில் நேரடியாகத் தலையிடுவதே இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி வந்தார்கள். தொழிற் சங்க இயக்கம் இன்றைய நிலையில் சீர்கெட்டிருக்கிறது, ஒவ்வொரு அரசியல் கட்சிக்காரரும் தங்களுடைய தலைமைக்காக, தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, ஒரு தொழிற் சங்கத்தை அமைத்துக்கொண்டு, தொழிலாளர்களைப் பிளவுபடுத்தி அவர்கள் சிதறுண்டு கிடக்கிறார்கள்; இந்த நிலையில் நாமும் எதற்காக ஒரு சங்கத்தை அமைக்க வேண்டுமென்று பல ஆண்டுகாலமாகச் சொல்லிவந்தார்கள். இந்தக் கருத்துக்களைப் பொது மேடைகளிலும் சொல்லி வந்தார்கள். ஒவ்வொரு சங்கத் தலைவரிடமும் சொல்லிவந்தார்கள். கூடுமான அளவுக்குத் தொழிற் சங்க இயக்கத்தில் சங்கத்தைப் பிளக்கும் காரியத்தில் ஈடுபடாதீர்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிவந்தார்கள். இவைகளையெல்லாம் யாரும் கேட்டபாடில்லை. ஒரு காலத்தில் இந்திய உபகண்டத்தில் தொழிற் சங்க இயக்கம் என்றால், ஒரே சங்கமாக இருந்தது என்பது நம்முடைய பெரும் தலைவர்களுக்குத் தெரியும். அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் என்ற

ஒரே ஸ்தாபனம் தான் இந்தியாவில் இருந்தது. அந்த ஸ்தாபனத்திற்கு நம்முடைய பெருமதிப்புக்குரிய மறைந்துபோன பண்டித நேரு அவர்கள் கூட தலைவராக இருந்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தை சுக்கு நூறாக உடைக்க முதலாவதாக முயற்சி எடுத்தவர் நமது மதிப்பிற்குரிய மறைந்த மாவீரர் படேல் அவர்கள் ஆவார்கள். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கம் தான் இன்றைய தினம் ஐ.என்.டி.யு.சி. என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட ஆசைப்படுகிறேன். தொழிற் சங்க இயக்கத்தை நாங்கள் பிளவுபடுத்தி விட்டதாகவோ அல்லது அரசாங்கம் பிளவுபடுத்தச் சாதகமாக இருக்கிறது என்றோ குற்றம்சாட்டுபவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புவதெல்லாம், முதலாவது இந்த நாட்டில் 1947-ம் ஆண்டில் சுதந்திரம் வந்தவுடன் தொழிற் சங்கக் காங்கிரசில் கம்யூனிஸ்டுகள் புகுந்துவிட்டார்கள், கம்யூனிஸ்டுகள் கையில் தொழிற் சங்கம் போய்விட்டது, ஆகவே நமக்கு ஒரு ஸ்தாபனம் வேண்டும், தொழிலாளர்களை நம் பக்கம் இழுத்து வர வேண்டுமென்ற எண்ணத்தின் மீது பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து ஐ.என்.டி.யு.சி. ஆரம்பிக்கப்பட்டது. 1947-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஐ.என்.டி.யு.சி. 1949-50-க்குள் இந்திய உபகண்டத்தில், எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் 7 பேர் சேர்ந்தால் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக் கொள்ளலாம் என்று தொழிற்சங்கச் சட்டமிருக்கிறது, 'ரிஜிஸ்டர்' பண்ணிக்கொள்ளலாம் என்ற அந்த முறையில், எந்த எந்த இடங்களில் தொழிற்சங்கங்களை கம்யூனிஸ்டுகள் வைத்திருந்தார்களோ, அங்கெல்லாம் இந்த ஐ.என்.டி.யு.சி. அமைக்கப்படும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் மிக வன்மையாகக் கண்டித்தார்கள். ஐ.என்.டி.யு.சி ஆரம்பிக்கப்படவேண்டாமென்று சொன்னார்கள். இன்று தொழிலாளர் நல அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. நடராசன் அவர்கள் கூட அவர்கள் பத்திரிகையில் பத்தி பத்தியாக எழுதினார்கள். ஐ.என்.டி.யு.சி தொழிற்சங்க இயக்கத்தைப் பிளக்க ஆரம்பிக்கப்படுகிறது, தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்க ஆரம்பிக்கப்படுகிறது, தொழிற்சங்கத்தில் கருங்காலிகளை உற்பத்தி பண்ண ஆரம்பிக்கப்படுகிறது, அது வேண்டாமென்று எழுதினார்கள். இவ்வளவு சொல்லியும் இந்த நாட்டில் ஐ.என்.டி.யு.சி. அமைக்கப்பட்டு, அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசைச் சின்னாபின்னப்படுத்தினார்கள். காரணம் சொன்னார்கள். கம்யூனிஸ்டுகள் புகுந்துவிட்டார்கள், கம்யூனிஸ்டுகள் கையில் தொழிற்சங்கக் காங்கிரஸ் போய்விட்டது. ஆகவே இனி தொழிற்சங்கக் காங்கிரசை உடைத்தெறிய வேண்டுமென்று சொல்லி, எங்கே போராட்டம் நடந்தாலும் சரி, வேலைநிறுத்தம் நடைபெற்றாலும் சரிதான், அதற்கு விரோதமாகக் கருங்காலிகளை உற்பத்தி செய்தார்கள். 1946-ல் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.
5-20 p.m. இன்றையதினம் பாதுகாப்பு இல்லையென்று சொல்லுகிறார்கள். 1946-லிருந்து எனக்குத் தெரியும். தொழிற்சங்க இயக்கத்தின் சரித்திரம் ஓரளவுக்குத் தெரியும். தொழிற்சங்க இயக்கத்தில் எந்தப் போராட்டமானாலும் சரி, ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வரை, 1967-க்கு முன்னால் 22 ஆண்டுச் சரித்திரத்தைப் பாருங்கள். அதற்கு முன்பு கொஞ்ச நாள் காலம் சென்ற திரு. பிரகாசம் ஆட்சிகாலத்திலும் பாருங்கள். எங்காவது தொழிற்சங்க இயக்கத்தை வளரவிட்டிருக்கிறார்களா? அடிதடியில்லாமல் போராட்டம் நடைபெற்றிருக்கிறதா? துப்பாக்கிப் பிரயோகம் இல்லாமல் நடைபெற்றிருக்கிறதா? எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. பொன்மலையில் 1946-ல் தான் ஒரு தொழிலாளியாக இருந்தேன். மலபார் போலிசை விட்டு வீடு புகுந்து அடித்தார்கள். பெண்டு பிள்ளைகளையெல்லாம் அடித்தார்கள். ஹெரிசன் என்ற வெள்ளைக்காரனை விட்டு சுடச்



சொன்னார்கள். சிட்டுக் குருவிகளைச் சுடுவது போல் 5 பேர்களைச் சுட்டுத் தள்ளினார்கள். அப்போது நான் பெரியார் ராமசாமி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். "ஐயா அவர்களே, பொன்மலையில் இப்பேர்ப்பட்ட கொடுமையைப் பார்த்ததில்லை. சரித்திரத்தில் படித்திருக்கிறேன். அன்றையதினம் ஜாலியன் வாலா பாக்கில் யாரோ டையர் என்பவன் சுட்டுக் கொன்று இழுத்துச் சென்றானாம். அதே காட்சியை பொன்மலையில் பார்க்கிறேன்" என்று அந்த நேரத்தில் கடிதத்தில் எழுதினேன். இவைகளையெல்லாம், யாரோ நாங்கள் தொழிற் சங்க இயக்கத்திற்கு விரோதமாக இருக்கிறோம் என்று சொன்னார்களே, அது உண்மைக்கு மாறாகச் சொல்லுகிற காரியங்கள் என்று எடுத்துக் காட்டுவதற்காகவே சொல்லுகிறேன். அதுபோல் வரிசையாகச் சொல்ல முடியும். அருமை நண்பர் மறைந்த ஜீவானந்தம் எத்தனை முறை அடிக்கப்பட்டிருக்கிறார், சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறார். மதுரையில் இப்போது மதுரை மேயராக இருக்கும் நண்பர் திரு. முத்து அவர்கள் தொழிற் சங்க இயக்கத்திற்கு ஆதரவு தந்ததாக அவர் மீது வழக்கு போடப்பட்டது அந்த அரசாங்கத்தால். இவைகளையெல்லாம் நல்ல முறையில் சொல்ல முடியும். இன்று பேசுகிறார்கள், சொல்லுகிறார்கள். பெரும் தலைவர் நேற்றைய தினம் குடியரசு தினத்தில் மிகவும் வேதனைப்பட்டுச் சொல்லுகிறார் உற்பத்தி பெருக வேண்டுமென்று. இதை யாரும் தொழிலாளர்கள் மத்தியில் சொல்லவில்லை. எந்த அரசியல் தலைவர்களும் சொல்லவில்லையென்று சொல்லுகிறார்கள். யார் சொல்லவில்லை, எல்லாத் தலைவர்களும் சொல்லுகிறார்கள். அரசு சொல்லுகிறது உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று. ஆனால் இப்படிச் சொல்லிவிட்டு, பின்னால் அந்தப் போராட்டங்களுக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள். யாருடைய தலைமையில் பேசினார்கள் என்றால், சிம்சன் தொழிலாளர்கள் போராட்டத்திற்கு யார் காரணமாக இருந்தார்களோ அந்த மணிவர்மா தலைமையிலே பேசுகிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராக இருக்கும் அவரை வைத்துக் கொண்டு அங்கே உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால் என்ன அர்த்தம்? அங்கே 3 மாத காலத்திற்குக் கதவடைப்புக்குக் காரணமாக இருந்தவர்களே அவர்கள் தானே. அப்படிப்பட்ட கதவடைப்பின் காரணமாக, எவ்வளவு உற்பத்தி இன்றைக்குக் குறைந்திருக்கிறது? இந்திய நாட்டின் ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் 3 வருஷங்களுக்கு எந்தவிதமான போராட்டமும் கூடாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முடிந்தது இந்த சிம்சன் தொழிலாளர்கள் போராட்டம் என்று தெரிந்ததும், வெவ்வேறு இடங்களிலே போராட்டங்களைத் துவக்குகின்றார்கள். எனக்கு நன்றாகத் தெரியும், நம்முடைய நாட்டில் தொழிலாளர்களை வைத்துத்தான் அரசியலை நடத்த வேண்டும் என்று சில கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டுமென்றால், அது பயன்படலாம். ஆனால், நம்முடைய பெரு மதிப்பிற்குரிய பெரும் தலைவர் இருக்கின்ற கட்சிக்காரர்கள் எல்லாம். . .

* திரு. கே. ராஜாராம்: பெரும் தலைவர், பெரும் தலைவர் என்று ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றி அதாவது திரு. காமராஜர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்று நான் நினைக்கிறேன். இங்கு இல்லாதவர்களைப் பற்றி நாம் பேசுவது மரபு இல்லை. பொதுப்படைக் கொள்கையைப் பற்றி அதாவது இது காங்கிரஸ் கொள்கை, இது திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை என்று முறைப்படுத்திப் பேசுவது நல்லது. இந்த அவையிலே இல்லாத ஒருவரைப்பற்றிப் பேச வேண்டாமென்று அரசாங்கக் கட்சிக் கொரடா அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[28th January 1972

* திரு. ஜி. பாரங்குசம்: நான் அவர்களை மட்டும் சொல்லவில்லை, நம் நாட்டின் ஜனாதிபதி அவர்களையும் சொல்லுகிறேன். ஏனென்று சொன்னால், இவர்கள் மதிப்பிற்குரிய தலைவர்கள். அதாவது நாட்டு மக்கள் மதிக்கக் கூடிய தலைவர்கள். நாட்டுக்கு வழி காட்டக்கூடிய தலைவர்கள். இவர்கள் எல்லாம் இப்படிச் சொல்லுவது, செய்வது சரியா என்ற காரணத்திற்காகத் தான் சொன்னேனே தவிர, நான் அவர்களையெல்லாம் குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இவர்கள் எல்லாம் எங்களைப் போன்றவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டியவர்கள். நல்லதைச் சொல்ல வேண்டியவர்கள். தொழிலாளர்களுக்கு நல்ல வழி காட்ட வேண்டியவர்கள். தொழிலாளர்கள் ஆத்திரப்பட்டு, அராஜகத்திலே இறங்கும் நிலைமை வருமானால், அவர்களைச் சமாதானப்படுத்தி, நாட்டின் நிலையை எடுத்துச் சொல்லி, இந்த நாட்டின் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லி, அவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டியவர்கள். இப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் இந்த நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள்; இவர்கள் எல்லாம் தொழிலாளர்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்று சொல்லும்பொழுது, தொழிலாளர்களும் அவர்கள் வலையில் விழுந்து விடுகிறார்கள் என்று சொன்னால் தொழிலாளர்கள் இந்த அரசின் சொத்து "நாட்டின் சொத்து" என்று புரிந்து கொள்ளவில்லை என்று தான் சொல்லுவேன். ஆகவே தான் தமிழக அரசு பஸ்ஸை உடைக்கிறார்கள். இப்படி பஸ்ஸை அடித்து நொறுக்குகிறார்கள் என்றால், என்ன காரணம்? தமிழக அரசு பஸ் யாருக்குச் சொந்தமானது? இது அரசினுடைய சொத்து அல்லவா? அப்படியென்றால் அது நம்முடைய சொத்து அல்லவா? எனவே, நாம் பஸ்ஸை உடைத்தால் அதிலே வரும் நஷ்டம் நம் தேசிய நஷ்டமில்லையா என்பதை உணரும் அளவுக்குத் தொழிலாளர்கள் மத்தியிலே அந்த போதனையைச் செய்யவில்லை. அவர்கள் மனதிலே அந்த எண்ணம் வரும் அளவுக்கு இல்லை. எந்தப் போராட்டம் நடைபெற்றாலும் பஸ்ஸை உடைக்க வேண்டுமென்ற நிலைமை. நான் சென்ற வாரம் திருச்சியிலேயிருந்து தஞ்சாவூருக்கு வந்துகொண்டிருக்கும் பொழுது, திருவெறும்பூரிலே இருக்கும் ஐ.டி.ஐ. மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஏதோ வார்டன் பிரச்சினையாகும். அவர்கள் தமிழக அரசு பஸ் ஒன்றை அடித்து, கண்ணாடியை நொறுக்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது போலீசார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். காரணம், பையன்களை அடித்தால் ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயம் அவர்களுக்கு. நான் அந்த வழியாக வந்தவன், அங்கிருந்த மாணவர்களை அழைத்துப் பேசி எதற்காக இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டேன். இப்படியெல்லாம் செய்யக் கூடாது என்று அவர்களிடம் சொல்லி, 1-1/2 மணி நேரம் நான் அங்கே இருந்தேன். இது எப்பொழுது என்றால், நான் தஞ்சைக்குக் கழகப் பொதுக் குழுக் கூட்டத்திற்குப் போகும்பொழுது.

THIRU G. SWAMINATHAN: Sir, may I know whether 'Illustrated Weekly' could be read in the House? (Laughter)

* திரு. ஜி. பாரங்குசம்: ஆகவே, இந்த மாதிரி நிலைமையிலே இன்றைய தினம் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி தான், மாணவர்களாக இருந்தாலும் சரி தான், அவர்கள் எல்லாம் உணருகின்ற அளவுக்குக் காரியங்கள் செய்யப்படாமலிருப்பது மிக, மிக வருந்தத்தக்கது. இருந்தாலும், இன்றைய தினம் நம்முடைய அரசு சார்பிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம் என்ற நிலைமையிலே இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் அப்படிக் கொண்டு வருவது கூடாது என்றார்கள். ஒரு தொழிலுக்கு



28th January 1972] [திரு. ஜி. பாரங்குசம்]

ஒரு தொழிற்சங்கம் என்பது இன்றைக்கு நேற்றைக்கு அல்ல, நீண்ட நெடுங்காலமாகவே எல்லா கட்சித் தலைவர்களும் சொல்லி வந்த ஒரு கோரிக்கை தான். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் இருக்க வேண்டும்; அந்தத் தொழிற் சங்கத்திற்கு அந்தத் தொழிலிலே இருப்பவர்களே தலைவராக வர வேண்டுமென்று கூறி வந்திருக்கிறார்கள். 1952-லே கூட திரு. கோபால்சாமி அவர்கள் ரயில்வே அமைச்சராக இருந்தபொழுது, திரு. வாசவதா தலைமையிலே இருந்த இந்திய தேசிய தொழிற் சங்க பெடரேஷனையும், திரு. குருசாமி அவர்கள் தலைமையிலே இருந்த அகில இந்திய தொழிற் சங்க பெடரேஷனையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்தார்கள், நீங்கள் இரண்டு தொழிற் சங்கங்களாக இருப்பதால், எங்களுக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது, இரண்டையும் சேர்த்து ஒரே தொழிற் சங்கமாக ஆக்கிவிடுங்கள் என்றார்கள். காரணம், நீங்கள் ஒரு பிரச்சினையை வைக்கிறீர்கள், அவர்கள் ஒரு பிரச்சினையை வைக்கிறார்கள்; ஆகவே இரண்டு பேரும் ஒன்றாகப் போங்கள் என்று சொல்லி, இரண்டு பக்கமும் இரண்டு குழு அமைத்து, 6 மாத காலம் அவகாசம் வேறு கொடுத்து பேச்சு வார்த்தை நடத்தச் சொன்னார்கள். ஆனால், அது கடைசியாக வெற்றி பெறவில்லை. அப்பொழுது அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் அதாவது அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரசிலே இருந்தவர்களும், இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரசிலே இருந்தவர்களும் அந்தக் கொள்கையை எப்பொழுதுமே மறுத்தவர்கள் இல்லை. ஆனால், இப்பொழுது சில நண்பர்கள் அதை மறுக்கிறார்கள். கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு கூட யாரும் இதை மறுக்கவில்லை. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருந்த கொள்கையை அடிப்படையாக வைத்து, இன்றைய தினம் நம்முடைய அரசு ஒரு சட்ட வடிவு கொண்டு வந்தால், அதனால் தொழிலாளர்களுக்கு நல்ல பலன் ஏற்படக்கூடும். தொழிலாளர்கள் மூலமாகவே தொழிற் சங்கங்கள் நடத்தப்பட, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலைமை ஏற்படுத்தி, தொழிற்சங்கங்கள் பிளவுபடாமல் இருப்பதற்காகவும்; தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த அரசு இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்; அதை உளமார வரவேற்கிறேன். இப்படிப்பட்ட நல்லதொரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவார்களானால், தமிழகத்தைப் பொறுத்த மட்டிலாவது, உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தொழிலாளர் உரிமை பறி போகாமல் இருப்பதற்கும் தொழிலாளர்களும், முதலாளிகளும், நிர்வாக அதிகாரிகளும் கலந்து பேசி காரியங்களைச்செய்வதற்கும், இது பயன்படும். அந்த வகையிலே இதை நான் வரவேற்று, இந்த ஆளுநர் அறிக்கைக்காக நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் முழு மனதுடன் வழி மொழிந்து, என் உரையை முடிக்கிறேன்.

திரு. கி. க. ஷண்முகம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழக ஆளுநர் அவர்களின் உரையினை வரவேற்றுப் பாராட்டும் முறையில் சில கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக, மதுரைப் பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டம் பெற்ற நம் பெருமதிப்பிற்குரிய கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு தமிழரசுக் கழகத்தின் சார்பில் என் உளம் நிறைந்த பாராட்டுதல்களையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நாவலர் அவர்களுக்கும் டாக்டர் பட்டம்

[திரு. தி. க. ஷண்முகம்] [28th January 1972

வழங்கிச் சிறப்பித்ததன் மூலம் தமது பல்கலைக் கழகங்கள் தம் பெருமையை மேலும் உயர்த்திக் கொண்டன என்று கூறினால், அது மிகையாகாது. சென்ற கால நடைமுறையிலிருந்து சிறிது முன்னேறி, தமிழ் நாட்டின் இரு பெரும் தமிழ் இலக்கியச் செல்வர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கியுள்ள இரு பல்கலைக் கழகங்களுக்கும் தமிழரசுக் கழகத்தின் பாராட்டினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தச் செயல் மேலும் தொடர வேண்டுமென நான் உளமாற விரும்புகிறேன். நம் அருந்தமிழ் மொழியிலே சிறந்த ஆராய்ச்சியாளர்களாக விளங்கும் இன்னும் சில தமிழ்ப் பேரறிஞர்களுக்கு இந்தப் பெருமைக்குரிய டாக்டர் பட்டத்தினை வழங்கி தாய் மொழிக்குச் சிறப்பளிக்குமாறு இம் மாமன்றத்தின் சார்பில் தமிழகப் பல்கலைக் கழகங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு துறையிலும் புகழ் வாய்ந்த தமிழ்ப் பெரு மக்களுக்கு டாக்டர் பட்டம் வழங்க வேண்டுமென்பது என் கருத்தாகும். இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய நுண்கலைத் துறைகளில் சிறப்பு வாய்ந்த பெரு மக்களுக்கும் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்க வேண்டுமென்ற சீரிய கருத்தினை அமரரான பேரறிஞர் அண்ணா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் எங்கள் நாடகம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிப் பேசியபோது குறிப்பிட்டார்கள் என்பதை இங்கு நினைவு கூட்ட விரும்புகிறேன். திருப்பதிப் பல்கலைக் கழகம் நம் பெருமைக்குரிய இசைவாணி திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அம்மையார் அவர்கட்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளதை இங்கு பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். வங்காளத்திலுள்ள ரவீந்திர பாரதி பல்கலைக் கழகம் நாட்டியக்கலை மேதை திருமதி பாலசரஸ்வதி அவர்கட்கும், திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கட்கும் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்ததையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். இதே போன்று கலைத் துறையிலே பிரசித்தி பெற்றுள்ள கலையுலகப் பெரு மக்களுக்கு இச்சிறப்பினைச் செய்வதன் மூலம் நம் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் மேலும் பெருமை பெற வேண்டுமென்பது என்னுடைய ஆசை ஆகும்.

அடுத்தபடியாக, பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பையும், சர்வாதிகார வெறியினையும் பாரதம் முறியடித்தது பற்றியும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நமது உரையில் விளக்கமாகவும் உணர்ச்சியோடும் எடுத்துச் சொல்லியிருப்பது குறித்து எனது மட்டற்ற மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆளுநர் அவர்கள் இவ்வாறு கூறியிருப்பது தேவை தானா என்ற ஐயப்பாடு இங்கு எழுப்பப்பட்டது. ஒரு தனி மாநில அரசு என்ற வகையில் அது சம்பந்தமாக நாம் ஆற்றிய கடமையை இந்த மாமன்றத்துக்கு நினைவூட்டுவதும் நம்முடைய மாபெரும் வீரர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து பெற்றுள்ள வெற்றியின் சிறப்பினை ஆய்வு செய்வதும், இந்த மாநில ஆளுநரின் புனிதமான கடமை என்றே தமிழரசுக் கழகம் கருதுகிறது. உண்மையாக எண்ணிப் பார்ப்போமானால், கடுமையது நிறுத்தப்பட்டிருக்கிறதே தவிர, போர் முடிந்து விடவில்லை. போரில் சம்பந்தப்பட்ட நாடுகளிடையே பூசல் தீர்ந்து சமரசம் ஏற்படவில்லை. போரினால் ஏற்பட்ட நிலைமைகளை சமாளிக்க ரூபாய் 10 கோடி தர வேண்டிய பெரும் பொறுப்பினைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. எனவே, இந்த மகத்தான போர் எந்தெந்தத் தத்துவங்களுக்காக, தர்மங்களுக்காக நடைபெற்றது என்பதனை ஆளுநர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் தமிழ் மாநிலத்தின் பொருளாதாரம் நலிவுற்றிருப்பதனை மிகுந்த கவலையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தப் பொருளாதாரச் சீர்கேடு அகற்றப்படுவதற்கான வழியினையும் அவர் எடுத்துக் காட்டத்



28th January 1972] [திரு. தி. க. ஷண்முகம்]

தவறவில்லை. மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு தர வேண்டிய கடன் தொகையில் ஒரு பகுதியினை உதவி மானியமாகக் கருதி ரத்து செய்யப்பட வேண்டுமென்று அவர் கூறியிருப்பதனை நான் வரவேற்கிறேன். இதுபற்றி ஆராய ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் கூறியிருப்பதும் வரவேற்கத் தக்கதுதான்.

அவர்களின் உரையில் ஒரு பகுதி இது :—" நமக்குக் கிடைக்கும் உதவித் தொகையை விட நாம் திருப்பிச் செலுத்தும் தொகை அதிகமாயிருக்கிற இச்சீர்கேடான போக்கினை, முதலமைச்சர் 1971-72 இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினைச் சட்ட மன்றத்தின் முன்வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். மாநிலங்களின் கடன்சுமை ஒருங்கு தொகுக்கப்படுவதற்கும், நிதி வகையில் ஆதாயம் அளிக்காத ஆனால் சமூக நீதி அடிப்படையில் செய்ய வேண்டிய செலவுக்காக வாங்கிய கடன் தொகையை மானியமாகக் கருதி கணக்கிலிருந்து கழித்து விடுவதற்காகவும், அல்லது திருப்பிக் கொடுப்பதற்கு எளிதான கடன்களாக்குவதற்காகவும், அக்கடன் சுமை குறித்து தனி விசாரணை ஒன்றை மேற்கொள்ள மத்திய நிதியமைச்சு ஆவன செய்யும் என்று நான் நம்புகிறேன் ".

இவ்வாறு ஆளுநர் அவர்கள் விசாரணைக் கமிஷன் நியமனத்தை அழுத்தமாகச் சொல்லியிருப்பதைப் பாராட்டுகிறேன்.

என்றாலும், இந்தப் பொருளாதாரச் சீர்குலைவுக்கு அடிப்படைக் காரணம் என்ன? இதுபற்றி நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மாநிலங்களுக்கு நிதி விஷயத்தில் போதிய சுதந்திரம் இல்லாதது தான் இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமென்று எளிதாக நமக்குப் புலப்படுகிறது. ஆண்டுதோறும் வளர்ந்துகொண்டே போகக் கூடிய வரியினங்களெல்லாம் மத்திய அரசுக்கே உரிமையாக்கப்பட்டுள்ளன. இந்த அவல நிலை உலகிலுள்ள வேறு கூட்டமைப்பு நாடுகள் எதிலும் இல்லையென்றே நான் கருதுகிறேன். மத்திய அரசிடமுள்ள வரியினங்கள் சிலவற்றையாவது மாநிலங்களுக்கு மாற்றித் தந்தால் ஒழிய, இந்தப் பொருளாதாரச் சீர்கேடு அகலாது. மத்திய அரசில் நாம் கடன் வாங்குவதும், அந்தக் கடனுக்குரிய வட்டியைக் கூடக் கொடுக்க முடியாமல் திணறுவதும், பின்னர் கடனை மானிய உதவியாக மாற்றுமாறு டில்லிக்கு விண்ணப்பம் போடுவதும் வழக்கமாகி விட்டது. தமிழரசுக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் வலியுறுத்தும் மாநில சுயாட்சி மாநிலங்களுக்கு வழங்கப் பெற்றிருந்தால், இந்த மாநிலத்தின் பொருளாதார நிலை வேறு விதமாக அமைந்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

முந்திய ஆண்டிலே ஆளுநர் அவர்களின் உரைகளின் உரையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டுமெனக் கோருவது வழக்கமாக இருந்தது. இந்த ஆண்டு ஆளுநர் உரையில் மாநில சுயாட்சி பற்றிய பேச்சே இல்லாதது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளிக்கும் போது இதுபற்றி விளக்குவாரென நம்புகிறேன்.

மாநில சுயாட்சி என்பது பிரிவினைக் கோரிக்கை தான் என்று ஒரு சிலர் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து திரிகிறார்கள். இப்படிச் சொல்லுவது ஒன்று அறியாமை அல்லது அறிந்தே சொல்லும் பொய்.

நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாநில சுயாட்சி கோரும் தம்மை, வங்க பந்து முஜிபுர் ரகிமானோடு ஒப்பிட்டு இணைத்துப்பேசியதற்காக சுயாட்சியினை எதிர்ப்போரால் தூற்றப்படுகிறார். முதல்வரின் அந்தக் கருத்து தவறானதென்று நாங்கள் எண்ணவில்லை. வீரர் முஜிபுர் ரகிமான் நமது

முதல்வர் கலைஞர் அவர்கள் கோருவதை விட அதிகமான அதிகாரங்களை கிழக்கு வங்க மாநிலத்திற்குக் கோரினார் என்பது மெய்தான். அதனை முதல்வர் அவர்களே தஞ்சைப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. க. ஷண்முகம் அவர்கள் முதல்வர் அவர்கள் தன்னை முஜிபுர் ரகிமான் என்று ஒப்புக்கொண்டார் என்று சொன்னார்கள். முதல்வர் அவர்கள் எங்கும் அப்படி தன்னை முஜிபுர் ரகிமானாக ஒப்பிட்டுப் பேசவில்லை என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. தி. க. ஷண்முகம் :** தலைவர் அவர்களே, பத்திரிகையில் படித்ததை வைத்துத் தான் நான் அப்படிப் பேசினேன்.

**மிஸ்டர் சேர்மன் :** பத்திரிகையில் வருகின்ற செய்திகளை ஆதாரமாக வைத்துப் பேசுவது இங்கு மரபல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் எந்த அறிக்கையிலும், எந்தப் பத்திரிகை நிருபரிடத்திலும் தன்னை முஜிபுர் ரகிமான் என்று ஒப்பிட்டுப் பேசியதாக ஆதாரமில்லை. அப்படி ஏதாவது பத்திரிகையில் போட்டிருந்தால் அது அவரவர் விருப்பு வெறுப்பைக் காட்டுகிறது. நான் இதை ஏன் இங்கு வலியுறுத்துகிறேன் என்றால், நாளைய தினம் பத்திரிகையில் திரு. டி. கே. ஷண்முகம் இப்படிப் பேசினார் என்று போடுவதற்காக சில பத்திரிகைகள் காத்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கழுகுகளுக்கு இரையாகக் கூடாது என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

**திரு. தி. க. ஷண்முகம் :** மிக்க நன்றி. உண்மை என்னவென்றால், பாகிஸ்தானின் தேசிய ஒருமைப்பாட்டினை ஒப்புக்கொண்டு தான் கிழக்கு வங்கத்துக்கு அதிக அதிகாரங்கள் கோரினார் முஜிபுர் ரகிமான். நமது கலைஞரும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்குக் கேடு செய்யாத வகையில் தான் மாநில சுயாட்சியினை வற்புறுத்துகிறார். இந்த வகையில் நமது கலைஞர் அவர்கள் முஜிபுர் ரகிமானைப் போன்றவர் தாம். இதைக் கேட்டுத் தேசியவாதிகள் என்போர் எதற்காக அஞ்ச வேண்டும்? மாநில சுயாட்சியினைக் கோரும் கலைஞர் அவர்களோ, அல்லது எங்கள் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களோ வங்காளச் சிங்கம் முஜிபுர் ரகிமான்களாக மாறுவதால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊனம் எதுவும் நேர்ந்து விடாது. மாநில சுயாட்சியினை எதிர்ப்பவர்கள் யாஹியாகான்களாக மாறினால் தான், தேச ஒருமைப்பாடு அழியும். இந்த அப்பட்டமான உண்மை இப்போது எஞ்சியிருக்கும் பாகிஸ்தானின் அதிபர் பூட்டோவாலும், பாகிஸ்தான் மக்களாலும் உணரப்படுகிறது. வங்க தேசம் பாகிஸ்தானிலிருந்து பிரிந்ததற்கு மாநில சுயாட்சியினை வழங்க மறுத்த சர்வாதிகாரி யாகியாகான் தான் காரணமென்பதனை எஞ்சியிருக்கும் பாகிஸ்தான் மக்கள் இப்போது தெளிவாக உணர்ந்து விட்டார்கள். அதனால் தான் அதிபர் பூட்டோ பேசிய ஒரு பொதுக் கூட்டத்திலே "முஜிபுர் ரகிமானை விடுதலை செய்" "முஜிபுர் ரகிமானை விடுதலை செய்" "யாகியா கானைத் தூக்கில் போடு" என்றெல்லாம் பொதுமக்கள் ஆவேசத்தோடு முழக்கம் செய்திருக்கிறார்கள். வங்க தேசம் பிரிந்து விட்ட பின்னரும் கூட முஜிபுர் ரகிமானைப் பிரிவினைவாதியாகப் பாகிஸ்தான் மக்கள் கருதவில்லை. இதனை இங்குள்ளவர்கள், எங்களுக்குத் தேசியம் போதிக்க வருவோர் தெரிந்து கொள்ள வேண்டும். மாநில சுயாட்சி கோருவோர்களுக்கெல்லாம் பிரிவினைவாதிகள் என்று பட்டம் சூட்டி விடுவதனாலேயே பாரதத்தின் ஒருமைப்பாட்டினைக் காப்பாற்றி விட முடியாது.





தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், இந்திய தேசிய ஒருமைப் பாடு தான் முக்கியம், மாநில சுயாட்சி அதற்கு அடுத்தபடியானது தான் என்று சொல்லியிருக்கிறார். தேசிய ஒருமைப்பாட்டில் தமக்குள்ள நம்பிக்கையை, உறுதியை அவர் வலியுறுத்தும் வகையில் அவ்வாறு பேசியிருப்பதனை நான் வரவேற்கின்றேன். ஆனால், முழுமையான மாநில சுயாட்சியினை இரண்டாந்தரமான பிரச்சினையாக கலைஞர் அவர்கள் கூறியிருப்பதனைத் தமிழரசுக் கழகம் வரவேற்பதற்கில்லை. இந்திய தேசிய ஒருமைப்பாடு எவ்வளவு முக்கியமானதோ, அந்த அளவுக்கு மாநில சுயாட்சியும் முக்கியமானது தான். எங்கள் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் அடிக்கடி சொல்வது போல இந்த இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவையாகும். தேச ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகவே மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். தேசத்தைத் துண்டாடுவதற்கு நாங்கள் ஒருபோதும் உடந்தையாக இருக்க மாட்டோம். தேசியப் பாரம்பரையில் வந்த தமிழரசுக் கழகம் பிரிவினைப் பேச்சுக்கு என்றும் இடம் தராது. பிரிவினையை எதிர்த்து இயக்கம் நடத்தியவர்கள் தமிழரசுக் கழகத்தார். இதனை மாநில சுயாட்சியினை எதிர்க்கும் என் அருமை தேசிய நண்பர்கள் உணருமாறு வேண்டுகிறேன்.

ஒருமைப்பாட்டினை வலியுறுத்தி மாநிலங்களின் உரிமைகளை வழங்க மறுப்பது ஜனநாயகமோ, சோஷலிசமோ ஆகாது. இன்றைய நிலையில் மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள உறவு ஆண்டைக்கும், அடிமைக்கும் உள்ளது போன்ற உறவு தான். இது எப்படி ஜனநாயகமாக இருக்க முடியும்!

அதிகாரங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் குவித்திருக்கும் இன்றைய நிலை நாம் விரும்பும் சோஷலிச சமுதாயத்தைப் படைப்பதற்கு உதவி புரியாது. செல்வத்தைப் பரவலாக்குவது தான் சோஷலிசமென்றால், அதற்கு முன் அதிகாரங்களையும் பரவலாக்க வேண்டும் என்பது தான் எங்கள் கோரிக்கையாகும்.

அடுத்தபடியாக ஆளுனர் உரையில் தொழிற் சங்கங்களின் தலைவர்களாக தொழிலாளர்களே வரவேண்டுமென்று குறிப்பிடப் பட்டுள்ளது. இதனைத் தமிழரசுக் கழகம் வரவேற்கின்றது. ஆனால், அது நடைமுறைக்கு வாராதபடி ஒரு பெரிய தடையிருக்கிறது. நாட்டில் எங்கும்—எதிலும் ஆங்கில மொழி ஆதிக்கம் புரிகிறது. தொழில் கோர்ட்டுகளிலே கூட ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்துகின்றது. தொழிலாளர் சம்பந்தப்பட்ட சட்டங்களும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. இதனால்தான் கைவருந்திப் பிழைக்கும் பாட்டாளி மக்களின் தலைவர்களாக மேட்டுக்குடி வர்க்கத்தைச் சார்ந்த பட்டதாரிகளே பெரும்பாலும் வர முடிகின்றது. தமிழகத்தில் தமிழினத்தின் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே இடம் பெற்றாலன்றி, தொழிற் சங்ககளின் தலைவர்களாகத் தொழிலாளிகளே வருவதென்பது சாத்தியமில்லை. சட்டத்தின் மூலம் தொழிலாளர்களே தலைவர்களாகும் நிலையினை அரசு ஏற்படுத்தலாம். ஆனால், அந்தத் தலைவர்களை வழி நடத்திச் செல்லப் பட்டதாரிகளும், வழக்கறிஞர்களும் தேவைப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த அவல நிலையினை, அதாவது ஆங்கில மொழி ஆதிக்கத்தை அகற்றவும் அரசு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போக்குவரத்துத் துறை நிறுவனங்களை ஏற்படுத்தி, அவற்றிற்குப் பல்லவன், சேரன், சோழன், பாண்டியன் ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க மாமன்னர்களின் பெயர்களை வைத்திருப்பது குறித்து, நம் தமிழக அரசினை

நான் வாயார நாவார—நெஞ்சாரப் பாராட்டுகிறேன். இப்படியெல்லாம் பெயர்களை வைப்பது தேவைதானா என்று ஒரு சிலர் கேட்கலாம். கேலி பேசலாம், கிண்டல் சித்திரங்கள் போடலாம். இதுபோன்ற செயல்களை தமிழ் உணர்வுள்ளவர்கள்தான் புரிந்துகொள்ள முடியும். தமிழ் நாட்டில் வரலாற்றுச் சிறப்புகளில் நம்பிக்கையும் ஆர்வமும் இல்லாதவர்களுக்கெல்லாம் இது தேவையற்றதாகத் தான் தோன்றும். நாடு, மொழி, இனம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு நிற்பதாக—பரந்த மனப்பான்மையென்று வெளியே சொல்லிக்கொண்டு, அழுத்தமான ஜாதிப்பித்திலே குளிர் காய்பவர்களால் இந்தப் புனிதமான உணர்வுகளையெல்லாம் புரிந்துகொள்ள முடியாது.

அடுத்தபடியாக, வறுமையில் வாடும் பிரசித்தி பெற்ற வயதான கலைஞர்கள் பலருக்கு மானிய உதவி வழங்கி அவர்களின் இறுதிகாலத்தில் ஆதரவு காட்டி வரும் தமிழக அரசைப் பாராட்டவும், போற்றவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரை மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து இந்த உதவியை அளித்துவந்தன. இப்போது மத்திய அரசினர் மேற்கொண்டு மானிய உதவியளிக்க மறுத்துவிட்டதால், நம் மாநில அரசே துணிவோடும் கருணையோடும் முன்வந்து 195 கலைஞர்களுக்கு உதவி வழங்கியுள்ளது, மிக்கப் போற்றத் தக்கதாகும். இந்தப் பட்டியலிலேயுள்ள சிலர் காலமாகிவிட்டார்கள். சேர்க்கப்பட வேண்டியவர்கள் சிலர் பட்டியலிலே என்ன காரணத்தாலோ இடம்பெறவில்லை. இவற்றையெல்லாம் கல்வித் துறைச் செயலாளர் அவர்களுக்கு நான் விரிவாக எழுதியிருக்கிறேன். மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விரைவாக இந்தப் பட்டியலைக் கவனித்து விடுபட்ட கலைஞர்களுக்கும் அந்த உதவி மானியம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தப் பட்டியலிலே விடுபட்டுள்ள கலைஞர்களிலே சிலர் மிக நெருக்கடியான நிலைமையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டியது என் கடமையாகும்.

இந்த அளவோடு என் உரையினை முடித்துக்கொண்டு மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரையினை மகிழ்வோடு வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

*** திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது நாடு உணவு உற்பத்தியைப் பெருக்கி 73 லட்சம் டன் என்ற குறிக்கோளை அடைந்திருக்கிறது. தன் நிறைவு பெற்று நம்முடைய அண்டை மாநிலங்களுக்கும் நாம் கொடுக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறோம். அதே சமயத்தில் உணவு தானிய வகையறுக்கள், எண்ணெய் வகையறுக்கள் விலைவாசி, விஷம் போல ஏறிக்கொண்டே போகின்றது. விவசாயக் கூலி உயர்ந்துவிட்டது. விவசாயிகள் விவசாயம் செய்யும் ஊக்கம் குறைந்து வருகிறது. எங்கள் பக்கத்தில் எல்லாக் கூலியும் பணமாகக் கொடுக்கப்படுகிறது. விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படுமென்று சொல்லிக்கொள்கிறேன். ரசாயன உர விலையைக் குறைக்கும் முயற்சியோடு சமயா சமயங்களில் உரம், விதைகள், விவசாயக் கடன் கிடைக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும், சிறு பாசனத் திட்டங்களை கன்னியாகுமரி ஜில்லாவில் நிறைவேற்ற வேண்டுமென்றும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். தற்போது ரயத்துவாரி கரம் 1964-ம் வருஷத்திலிருந்து எங்களுடைய மாவட்டத்தில் சுமத்தப்பட்டிருக்கிறது. அடிப்படைக் கரத்தைக் குறைக்க



வேண்டுமென்று நம்முடைய அரசு விரும்புகிற இந்தக் காலத்தில் விவசாயிகளுக்குப் பெரும் சுமையை வைப்பது சரியா என்பதை ஆராய வேண்டும். அரசு தயவு செய்து அதைக் குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகள் அவர்களுடைய உடமைகளை விற்றுத்தான் அந்தக் கரத்தைத் தீர்க்க வேண்டியிருக்கிறது.

அடுத்து, கோதையாறு மின் திட்டம் ஆசியாவிலேயே பெரிய திட்டம். அதன் வேலை இப்போது தொடங்கியிருக்கிறது. அதன் தண்ணீரும் கீழ் அணையில் பேச்சிப்பாறையில் நிரம்பி அளவு குறையாமல் இருக்கிறது. மன்னர் ஆட்சி காலத்தில் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயம் செய்வதற்கு மே மாதம் 15 அல்லது 20 தேதிக்குள்ளாக தண்ணீரைத் திறந்துவிடுவார்கள். அங்குள்ள விவசாயம் என்ன மாதிரி இருக்கிறது என்றால், பங்குனி மாதத்திலும் பருவ பருத்தி சித்திரை மாத முதல் வாரப் பருவத்தில் விதைப்பார்கள். 30 நாட்கள் கழிவதற்கு முன்பு நீர் பாய்ச்ச வேண்டியிருக்கிறது. இந்தக் கருத்தை நாங்கள் பல சமயங்களில் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் எடுத்துக் கூறியும், இது வரையிலும் அந்த சவுகரியத்தை எங்களுக்குச் செய்யவில்லை. இந்த முறை 15 அல்லது 20 தேதிக்குள் தண்ணீரைத் திறந்துவிட்டு விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அணையில் தண்ணீர் குறையக் கூடிய நிலைமையில்லை. ஆகையால் இந்த அரசு அதைக் கவனத்தில் கொண்டு எங்களுக்கு மே மாதம் 20-ம் தேதிக்குள்ளாக அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிற் துறையில் முன்னேற்றம் அடைந்திருப்பதாக கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் இத்துறையில் பின் தங்கியிருக்கிறது. அங்கே நல்ல முறையில் தொழிலை வளர்க்க முடியும். அங்கு உற்பத்தியாகும் ரப்பரை எல்லாம் நம் நாட்டிலிருந்து வெளியே அனுப்பி அங்கே ரப்பர் தொழிற்சாலைக்கு அவற்றை உபயோகிக்கிறார்கள். அந்த ரப்பரைக் கொண்டு நல்லவிதமாக ஒரு ரப்பர் தொழிற்சாலையை நாம் அமைக்கலாம். இது தொழிலாளர் பிரச்னை தீருவதற்கு உதவியாகவும் இருக்கும். இதே போன்ற மணவாளக்குறிச்சியில் உள்ள மணலிலுள்ள மூலப் பொருள்களை மத்திய அரசால் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த நாம் சிபாரிசு செய்யலாம். இன்னும் கிடைக்கக்கூடிய கனிப் பொருள்களைக் கொண்டு தொழிற்சாலைகள் பலவற்றை ஏற்படுத்த அங்கே வாய்ப்பிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் நடக்கிற நூற்பாலை தற்போது 12,000 கதிர்களைக் கொண்டு நடக்கிறது. அதை 20 ஆயிரம் கதிர்களாக ஆக்கினால், இன்னும் அந்தத் தொழில் முன்னேறும். இதற்கெல்லாம் அடித்தளமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரிக்கு திருநெல்வேலியிலிருந்து ரயில் பாதை அமைவதற்கு சர்வே பூர்த்தியாகிவிட்டது. நம்முடைய அரசு இதற்காக சிபாரிசு செய்திருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பு ரயில்வே அமைச்சர் கன்னியாகுமரிக்கு வந்தபோது கண்டிப்பாக இந்த வருஷ பட்ஜெட்டில் அது சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து நம்முடைய அரசு துரிதப்படுத்த வேண்டும். அந்த மாவட்டத் தொழில் முன்னேற்றத்திற்கு ரயில்வே மிகவும் உதவிகரமானது.

அடுத்து, வேலையில்லாத பிரச்னை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், சிறிய மாவட்டமாக இருந்தாலும், வேலைதேடித் தரும் ஸ்தாபனத்தில் பட்டதாரிகள் ஏராளமாகப் பதிவு செய்யப்பட்டு 30 ஆயிரத்திற்கு மேல் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. இந்த அவல நிலைமையைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, எங்கள் சமுதாயப் பிரச்சினை. இது பழம்பெரும் சமுதாயமான விஸ்வகர்ம சமுதாயம், ஐந்தொழிலைத் தொழிலாகக் கொண்ட சமுதாயம். அந்த சமுதாயத்துக்குக் குறிப்பாக உள்ள நகைத்தொழிலை சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்னால் பிடித்த நிமையினால் அவர்கள் படும் கஷ்டத்தைப்பற்றி இந்த அவையில் தீர்மானம் மூலமாகக்கொண்டு வந்து பேசியிருக்கிறேன். இருந்தபோதிலும், நமது சர்க்கார் அப்போதைக்கப்போது நமது குறைகளைக் கேட்டு கொஞ்சம் கொஞ்சம் சீர்திருத்தங்கள் செய்து வந்திருக்கிறார்கள். 1968-ம் வருஷம் மத்திய அரசுக் கடன் பெற்ற நகைத் தொழிலாளர்கள் இரண்டு வருஷத்தில் கடனைத் திரும்ப அடைக்கவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், அவர்களுக்குத் தொழில் செய்ய சான்றிதழ்கள் வழங்க உத்தரவு பிறப்பித்தார்கள். அதன்படி சான்றிதழ்கள் வாங்கி தொழில் செய்துவந்தபோதிலும், அந்தத் தொழிலாளர்களுக்குப் போதிய தொழிலும் இல்லை; அதோடு விலைவாசி உயர்வால் அவர்கள் வருகிற வருவாயைக்கொண்டு வாழ்க்கையையும் நடத்திக்கொண்டு கடனையும் தீர்க்க முடியாத நிலைமையில், அவர்களுக்கு மேலும் ஒரு வருஷம் நீட்டிக்கொடுக்கப்பட்டது. அந்தத் தவணையும் தீர்ந்து, இப்போது நான்காவது வருஷத்தில் மத்திய அரசுக் கடனைத் தீர்க்காதவர்களிடமிருந்து தொழில் செய்யும் சான்றிதழ்களைப் பறிமுதல் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க நமது சர்க்கார் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கவர்னர் பெருமான் உரையில் 4-ம் பக்கத்தில் "இன்னமும் ஏழை எளியவரின் வாழ்க்கையில் ஏற்றம் ஏற்படுவதற்கு, அவல வாழ்வு ஆனந்த வாழ்வு ஆவதற்குத் தன்னால் ஆனதையெல்லாம் செய்ய இந்த அரசு மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை மெய்ப்பித்துக்காட்ட பொற்கொல்லர்களுடைய துயரைத் துடைத்துக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் மத்திய அரசு தங்க இறக்குமதிக் கொள்கையைக் கடைப்பிடித்து இறக்குமதி செய்வதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அது வரவேற்கத்தக்கது. சாதாரணமாக ரூ. 100 கோடி மேற்பட்ட மதிப்புடைய நவநாகரிகமான நகைகளை ஏற்றுமதி செய்து வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்தியிருப்பதால், இதையும் மனதில் கொண்டு, கூடுதலாகத் தங்கம் இறக்குமதி செய்து பொற்கொல்லர் துயர் துடைக்க நமது அரசும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உலக மார்க்கெட்டில் 10 கிராம் எடையுள்ள தங்கத்தின் விலை ரூ. 103 ஆக இருக்கிறது. தற்போது நம் நாட்டில் அதன் விலை ரூ. 210 ஆக இருக்கிறது. அதிகமாகத் தங்கத்தை இறக்குமதி செய்தால், உள்நாட்டில் அதன் விலை குறையும்; அதனால் கள்ளக்கடத்தலும் குறையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தக் கருத்தை நமது அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்து வேண்டிய சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பண்டைக்காலம் தொட்டு கைத்தொழில் ஒன்றையே நம்பி வாழ்ந்து வந்த விஸ்வகர்ம சமுதாயம் இன்று அவல நிலையில் இருக்கிறது. அந்த சமுதாயத்தினரின் எண்ணிக்கையைத் தோராயமாகச் சொல்லுவது சரியில்லை. 1941-ம் வருஷத்து ஜனசங்கியைக் கணக்குப் பார்த்தால், நன்கு தெரியும்; அதிலிருந்து 30 வருஷத்தில் இவ்வளவு கூடியிருக்கும் என்று தெரிந்துகொள்ளலாம். இதுவரை அரசாங்க உத்தியோகத்தில் மாவட்டக் கலெக்டர் போன்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியாகவோ, அல்லது நீதிமன்றத்தில் நீதிபதியாகவோ இந்த சமுதாயத்தினர் இருந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை. இந்த மாநகராட்சியை எடுத்துக்கொண்டால், சுமார் ஒன்றரை லட்சம் பேர்கள் இருப்பார்கள். இன்னும் கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களிலும், 350-க்கு மேற்பட்ட



பஞ்சாயத்து யூனியன்களிலும் இந்த சமுதாயத்தினர் பரவலாக இருக்கிறார்கள். எந்தக் கிராமத்தை எடுத்துக்கொண்டாலும், இவர்கள் இல்லாத இடமேயில்லை. ஆனால் இந்த சமுதாயத்தினர் ஒன்றுசேர்ந்து ஒரு இடத்தில் இல்லாததால், இவர்களுக்கு அதிக ஆதரவு இல்லாமல், சட்டமன்றத்துக்குக்கூட வர வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. தற்போது சட்டமன்றத்திற்கு இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைத் தங்கள் கட்சியிலிருந்து தேர்ந்தெடுத்ததற்காக நமது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6-00 p.m.

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** இப்போது சட்ட மன்றத்தில் உறுப்பினராக உள்ள திரு. கணபதி அவர்கள் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

**திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி:** அவரைத் தான் நானும் குறிப்பிட்டேன். இந்த சந்தர்ப்பத்தில் கட்சியிலிருந்து அவரைத் தேர்ந்தெடுத்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆர்ட்டிசான் சிற்பக்கலைக்காக காலஞ்சென்ற திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியை இந்த சபைக்குத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்குப் பிறகு சிலகால இடைவெளிக்குப்பிறகு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக தலைவர் திரு. காமராஜர் அவர்களாலும் திரு. பக்தவத்சலம் அவர்களாலும் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனது பதவி விரைவில் முடிய இருக்கிறது. ஆகையால் முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து என்னுடைய ஸ்தானத்தில் பொற்கொல்லர் பிரதிநிதியாக ஒரு நல்லவரையும், ஆர்ட்டிசான் சிற்பக்கலைக்காக ஒருவரையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த சமுதாயத்தில் நல்ல படித்த பட்டதாரிகள், எஞ்சினியர்கள் முதலியவர்கள் இருக்கிறார்கள்; 25 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் உள்ள இந்த சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதற்கு அவர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து டில்லி ராஜ்ய சபைக்கு அனுப்ப வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அண்டைய மாநிலமான ஆந்திராவில் அறநிலையப் பாதுகாப்பு இலாகா எண்டோமெண்டு போர்டிலிருந்து ஆஸ்தான சிற்பியாக திரு. கணபதி ஸ்தபதியாரை நியமித்து, அவர் மேற்பார்வையில் கோயில் திருப்பணிகள், விக்கிரகங்கள் அமைப்பு போன்ற எல்லா வேலைகளும் நடைபெறுகின்றன. தமிழ் நாட்டில் சிறந்த சிற்பிகள், ஸ்தபதிகள், நல்லமுறையில் சாஸ்திரம் பயின்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை ஆஸ்தான சிற்பியாக நியமிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நியமனத்தால் சிற்பக்கலை வளர்ச்சி அடையும்; மற்ற நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்து பார்ப்பவர்கள் பாராட்டுவார்கள். இதற்குச் சான்று. கன்னியாகுமரியில் நமது முதல்வர் அவர்கள் தலைமையில் இந்திய ராஷ்டிரபதி அவர்களால் திறந்துவைக்கப்பட்ட ஸ்வாமி விவேகானந்தர் நினைவுச்சின்னம். இதைப் படைத்தவர் திரு. எஸ். கே. ஆச்சாரியா என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். மேலும் என்னுடைய வேண்டுகோளை நல்லவிதமாகப் பரிசிலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. சாம்பசிவம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து நானும் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மேதகு ஆளுநர் உரையிலே

சொல்ல வேண்டியவைகளை எல்லாம் விரிவாகவும் சுருக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் வேளாண்மையைப்பற்றி எடுத்த எடுப்பிலேயே விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மை முன்னேற்றத்துக்காக எந்த அளவுக்கு இந்த அரசு செய்திருக்கிறது, இன்னும் செய்ய இருக்கிறது, அதனால் கண்ட பலன் என்ன என்பனவற்றையெல்லாம் நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயம் நல்ல முறையில் செழித்தால்தான் எந்தமாதிரியான போர் வந்தாலும், எப்படிப்பட்ட பஞ்சம் வந்தாலும், நாட்டு மக்கள் வயிறார உண்ண உணவு இருக்கிறது என்ற நம்பிக்கை ஏற்படும். காவிரியிலே அணை கட்டுகிற காரணத்தால், காவிரி நீரை நம்பியிருக்கிற தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படாமலிருக்க, ஏராளமான குழாய்க் கிணறுகளைத் தோண்டி நிரந்தரமாக விவசாயம் செய்ய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக, மின்சாரத்தைப் பற்றியும் சொல்லி யிருக்கிறார்கள். மேலும் தொழில் வளர்ச்சியிலே சேலம் இரும்பாலையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்; இதிலே மத்திய அரசு போதிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை மிகவும் நாசூக்காக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஏனென்றால் ‘வருகிறது, வருகிறது’ என்று சொல்லிக்கொண்டே காலம் தாழ்த்தினால், ‘எப்போது வருகிறது?’ என்ற கேள்வியை மக்கள் எழுப்பிய வண்ணம் இருக்கிறார்கள். அந்தக் கேள்விக்குறி நீண்டுபோகாவண்ணம் இருப்பதற்கு மத்திய அரசுக்கு ஆளுநர் அவர்கள் தன் நிலையிலிருந்து எந்த அளவுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமோ அந்த அளவுக்குச் சுட்டிக்காட்டியிருப்பது பாராட்டத்தக்கதாக இருக்கிறது. தொழிற் சங்கங்களைப்பற்றியெல்லாம் தொழிற் சங்கத் தலைவர்களும், தொழிற் சங்க இயக்கத்தின் மாணவன் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். உண்மையிலேயே தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களுக்கு நல்ல முறையிலே பயன்பட வேண்டும் என்ற காரணத்துக்காகத்தான் ஒரு அழகான திட்டத்தை நமது முதல்வர் அவர்கள் அளித்துள்ளார்கள். பொதுவாக தொழிற் சங்கங்கள் பெரும்பாலும் தொழிலாளர் நலனைக் கவனிப்பதை விட்டு விட்டு, தங்கள் தங்கள் கட்சியை வளர்ப்பதிலும், ஆளும் கட்சியை எதிர்த்து ஏதாவது கிளர்ச்சி நடத்துவதிலும் ஈடுபட்டிருக்கின்றனவே தவிர, உண்மையில் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் எண்ணம் கொண்டவையாக இல்லை. உண்மையிலேயே தொழிலாளர்களுக்குப் பாடுபட, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்க வேண்டும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர் தான் அந்தத் தொழிற் சங்கத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இது நடைமுறைக்கு வந்தால், தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தவிர மற்றப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தாமல், தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகையினால் இந்த முறையை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அதே போன்று வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மற்றும் இளைஞர் அணி ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கல்வி கற்றால் கணக்கர் போன்ற வேலைக்குச் செல்வது என்று இல்லாமல், கல்வி கற்றவர் அந்த வேலையைச் செய்ய நாட்டு மக்களுக்கு விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தி, அதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்து கிராமங்களில் பரப்பி தங்கள் கற்ற கல்வியின் பயனை அடையச் செய்து மக்களுக்கு நல்ல முறையில் நாட்டின் நடப்புகளை அறிவிக்க, அவர்கள் நன்கு வாழ இந்த இளைஞர் அணி பெரிதும் பயன்படும்.





இந்த இளைஞர் அணி சமுதாயத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தப் பயன்படும். இதை மற்ற மாநிலங்களில் கூட பாராட்டியிருக்கிறார்கள். மேலும் ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட இனத்தவருக்கும் ‘பேக்வார்டு கிளாஸ்’ அமைச்சரை ஏற்படுத்தி அவர்கள் தகுந்த முறையில் முன்னேற்றம் அடையச் செய்யவேண்டி மத்திய சர்க்காருடைய உதவியில்லாமல் ஏராளமாகப் பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இப்படிப் பின் அணியில் உள்ள மக்கள் முன்னேறுவதற்காக இந்த அரசு என்ன செய்கிறது என்பது மிகவும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு, பல சீர்திருத்த சாதனைகளைச் செய்து அரசாங்கத்தின் கொள்கைகளை விரிவாகச் சொல்லியிருக்கும் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவர் அவர்களே, மேதகு கவர்னர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகிற வாய்ப்பினை அளித்ததற்கு தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேதகு கவர்னர் அவர்களுக்கு ஒரு நன்றி தெரிவித்தால் போதாது. நூற்றுக்கணக்கான நன்றிகள் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கவர்னர் அவர்கள் பேருரையில் அவர்கள் பாராட்டுக்குரிய சில நல்ல கருத்துக்கள் நாட்டு மக்களுக்கும் நமக்கும் எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், ஒரு வருத்தமான செய்தியும் சொல்லியிருக்கிறார். அந்த வருத்தமான செய்தி என்னவென்றால் இப்போது நடந்து கொண்டிருக்கிற சிம்சன் போராட்டம். அது வருத்தமானது என்று சொல்லுகிறார். மற்றதையெல்லாம் பாராட்டி இப்படிப்பட்ட சிறப்புகளையெல்லாம் நம்முடைய ஆட்சி செய்கிறது என்று நமக்கெல்லாம் எடுத்துச் சொல்லி ஒரு வருத்தம் என்றால், அது தான் சிம்சன். நாம் வருத்தப்பட வேண்டுமோ என்னவோ என்னுடைய பாராட்டுதல் இருக்கிறது. சிம்சன் போராட்டம் இன்று நேற்றல்ல. நெடுங்காலமாகவே நடந்துவருகிறது. அதற்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, “மற்ற நாட்டுத் தொழிலாளர்களைப் பாருங்கள். ஜப்பான் நாட்டுத் தொழிலாளர்களைப் பாருங்கள். ரஷிய நாட்டுத் தொழிலாளர்களைப் பாருங்கள். சீன நாட்டுத் தொழிலாளர்களைப் பாருங்கள். ஏதாவது மனக்கசப்பு இருக்குமானால், அந்தத் தொழிலை நடத்துகிற மேனேஜ்மெண்டுக்கும் உங்களுக்கும் தகராறு இருந்தால், அவர்களை அவமானப்படுத்தவேண்டுமென்றால் வேலை அதிகமாகச் செய்து அதனால் நாட்டுக்குப் பயன் தரக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்யுங்கள்; அந்த மேனேஜ்மெண்டுக்காரர்கள் அவமானப்படுவார்கள்” என்று இதற்கு முன்பு இருந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அதை சிம்சன் தொழிலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டாமா? சிம்சன் தொழிலாளர்கள் அங்கே நடத்துகிற பெரிய போராட்டத்தின் காரணமாக, நாட்டு மக்களுக்குப் பொதுவாக இருக்கிற, நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டிய எவ்வளவு பெரிய சாமான்களை உடைத்தெறிகிறார்கள் என்று பார்க்கும்போது, அது வருத்தப்பட வேண்டிய விஷயம்தான். சிம்சன் தொழிலாளர்களுக்கும் தேசியமயமாக்கப்பட்ட பஸ் போக்குவரத்துக்கும் என்ன சம்பந்தம்? ஏன் உடைக்கிறார்கள்? அது நியாயம் தானா? அதைத் தலைவர்கள் கேட்க வேண்டாமா? இப்போது முதலமைச்சர் கூட கூறியிருக்கிறார்களே, “தொழிற் சங்கம் என்றால், அதற்கு கட்சிக்காரர்கள் தேவையில்லை. தொழிலாளர்களே சங்கத்தை அமைத்துக் கொள்ளட்டும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்கட்டும், ஒரு தலைவன் இருக்கட்டும். நன்றாகக் காரியங்கள் நடத்தலாம். தொழிலுக்கு சம்பந்தப்பட்டவர்கள் அதற்குத் தலைவராக இருக்க வேண்டும்.” என்று. இது நியாயம்

[திரு. சி. வி. ராஜகோபால்] [28th January 1972

கருத்தல்லவா? எல்லாக் கட்சிக்காரர்களும் இதை அனுசரிக்க வேண்டாமா? இதை ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? ஒன்றிரண்டு கட்சிக்காரர்கள் பேசுகிறார்கள். சிம்சன் தொழிற் சங்கம் என்றால், நாங்கள் தான் அதற்கு 'அத்தாரிட்டி' என்று கூறுகிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்குத் தான் 'அத்தாரிட்டி' இருக்கிறதா? 'அத்தாரிட்டி' ஒரு ஆட்சியாகத் தான் இருக்க வேண்டும். சிம்சன் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள், வேதனைப்படுகிறார்கள். ஆட்சியில் உள்ளவர்கள் நுழைந்து அவர்களுக்கு என்ன கஷ்டம் என்று பார்க்கவேண்டிய பொறுப்பு உடையவர்கள். ஆட்சியில் யார் இருந்தாலும், இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது, அதற்கு முன்பு காங்கிரஸ் இருந்தது, பின்னால் எந்தக் கட்சி வருமோ, ஆட்சியில் உள்ளவர்கள் அதைக் கவனிக்க வேண்டும். யாரோ ஒரு சிலர் ஒரு கட்சியை வைத்துக் கொண்டு ஒருவரைத் தலைவராக ஏற்படுத்திக்கொண்டு, நாங்கள் தான் தொழிற் சங்கம் என்று சொல்வது தொழிலாளர் மக்களை அடியோடு கொல்லுகிற சிதைக்-
6-10 p.m. கத்தக்க மனப்பான்மையே ஒழிய, வேறு என்ன இருக்கிறது? அவர்களுக்குள்ளே அடித்துக்கொள்ளுகிறார்கள். உதைத்துக்கொள்ளுகிறார்கள். எவ்வளவு வேதனையாக இருக்கிறது? பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, தொழிலாளர்கள் உழைக்க வேண்டும். உழைப்புக்கேற்ற கூலி வேண்டும். இந்த இரண்டு தத்துவமும் யாரிடம் இருக்கிறது? இன்றைக்கு யாராவது ஒன்று சொல்லிவிட்டால், உடனே போராட்டத்தில் இறங்குகிறார்கள். காட்டூர் கோபால் சிம்சன் தொழிலாளர்களின் தலைவர். அவர் கம்பெனியிடம் தொழிலாளர்களுக்காக ஒரு கோரிக்கை வைத்து, ஏதோ பெற்றுக் கொடுத்தார். "நீங்கள் கொடுத்த கோரிக்கை தான்." காலையில் ஒரு கோரிக்கை. மாலையில் ஒரு கோரிக்கை. "உங்கள் கோரிக்கை நிரந்தரமாக இருப்பதில்லை". நம்முடைய தொழிலுக்கு இது தகுந்த கோரிக்கையல்ல என்று கூறியிருந்தால், போராட வேண்டியது தான். அவ்வாறு இல்லாமல் சச்சரவுகள் அதிகமாகப் போய்க்கொண்டிருக்கின்றன. இப்படி இருக்கும்பொழுது, இந்த ஆட்சியாளர்கள் அவர்களை எல்லாம் அழைத்து இப்படி இருக்கக்கூடாதென்று ஒரு பஞ்சாயத்து பண்ணுகிற நேரத்தில், டில்லியிலிருந்து மத்திய அரசாங்கத்தின் இரண்டு பெரிய அமைச்சர்கள் வந்தார்கள். வந்தவர்கள் இந்த ஆட்சியாளர்களைப் பார்த்து, என்ன செய்தீர்கள் என்று ஒரு வார்த்தை கேட்டிருக்க வேண்டாமா? இப்படி உங்கள் ஆட்சியில் சிம்சன் கம்பனி தொழிற்சாலைகளில் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளுகிறார்களே, என்ன காரணம், என்ன சங்கடங்கள் இருக்கின்றன, எதனால் இப்படிப்பட்ட வினைகள் ஏற்பட்டன என்று டில்லியிலிருந்து வந்த மந்திரிகள் இங்கிருக்கிற முதலமைச்சரை வினவியிருக்க வேண்டாமா? ஏன் வினவவில்லை? அவர்களைப் பொறுப்பில்லாதவர்கள் என்று கூறமாட்டேன். அப்படிப்பட்டவர்கள் விசாரிக்க வேண்டாமா, உடனே போய்விடுவதா? எவ்வளவு பெரிய விஷயம். எவ்வளவு பெரிய அரசியலில் இருப்பவர்கள் சாதாரணமாக வேடிக்கையாக ஓடிப்படுவதா? வந்தவர்கள் போகட்டும். முதலமைச்சரைக் கூட கவனிக்கவில்லை. நீங்கள் ஏதாவது செய்துவிட்டுப் போனீர்களா? நீங்கள் போன பிறகு காட்டூர் கோபால் சாகிறாரா, பிறகு பெரியவர்களை நடக்கிறதென்றால், அதற்குள்ளே என்ன இருக்கிறது என்று ஆட்சியாளர்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? வன்முறை செயல்கள் எவ்வளவு? இவர்களுக்கு மட்டுமல்ல, பாமர மக்களைப் பாதிக்கிறதே. யாரோ நான்கு கருங்காலிகள் என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்டவர்களைக் கொண்டு வந்துவிட்டு கொடுப்பது அவ்வளவு பொருத்தமல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கையைப் பார்த்தேன். இனிமேல் வன்முறையில் ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன் என்று. அது ஜனநாயக அடிப்படை-



28th January 1972] [திரு. சி. வி. ராஜகோபால்]

யில். என்ன செய்வது, பாவம். இப்படி ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு போனால் என்ன ஆகும்? அந்தத் தொழிலாளர் மக்கள் வாழ வேண்டும், அவர்கள் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பொது மக்களிடத்தில் சொல்ல வேண்டும். அதற்குப் பதிலாக அரசியல் கட்சிக்காரர்கள் புகுந்துகொண்டு, இவ்வளவு பெரிய சஞ்சலங்களை உண்டாக்குகிறார்கள். தயவு செய்து அரசியல் கட்சிக்காரர்கள், திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் கூட கூறுகிறேன், நமக்கு அந்தத் தொழிலாளர்கள் மீது அக்கறை இருக்குமானால், தொழில் சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்குப் பற்றுக்குறை, தேவைகள், இருந்தால், அந்த சிம்சன் மேனேஜ்மெண்டோடு போராடி வாங்கித் தருவோம் என்று சொன்னால், நான் பாராட்டியிருப்பேன். அதை விட்டுவிட்டு உன்னுடைய கட்சி நுழைகிறது, என்னுடைய கட்சி நுழையவில்லை என்று பேசினால், நான் சொல்லுகிறேன், அப்படிப்பட்ட அரசியல் வேண்டாம். அரசியலை வீட்டுக்குப் போய் வைத்துக்கொள்ளலாம். பகல் பூராவும் 8 மணி நேரம் வேலை செய்கிறோம். போதிய வசதிகள் கொடுக்கவில்லை, போதிய கூலி கொடுக்கவில்லை என்பதற்காக மட்டும் போராடியிருந்தால், அந்தப் போராட்டத்தில் நிச்சயமாக வெளியில் இருப்பவர்கள் கூட பங்கு கொண்டு சில காரியங்களைச் செய்யலாம் என்று சொல்லலாம். அவ்வாறு இல்லாமல், பல கட்சிக்காரர்கள் தூண்டுதல். காரணம் ஜனநாயகம். அவர்களிடம் ஓட்டு வாங்க வேண்டும். அதற்காக இந்த அற்பத்தனமாக காரியத்தைச் செய்ய வேண்டுமா? அது தான் என்னுடைய கேள்வி. ஆகவே தயவுசெய்து நான் பணிவன்புடன் எல்லாக் கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொள்கிறேன், வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்ற கட்சிக்காரர்களையும் நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன், தொழிலாளர்கள் வாழ வேண்டும், அந்தத் தொழிலாளர்கள் வாழ்ந்தால் தான் இந்த நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய பலன்கள் கிடைக்கும். அதிலே ஒரு சில அங்கங்கள் பழுதுபட்டால், அது தொழிலாளர்களை எங்கெங்கே கொண்டு செல்லும் என்பதை எண்ணித் தான் நான் சொல்லுகிறேன். பல கட்சிக்காரர்களின் உள்ளத்திலே தங்களுடைய கட்சி இந்த சங்கத்திற்குள்ளே போகுமா, சின்னஞ்சிறு கட்சிகளாக இருக்கும் நாம் அந்தச் சங்கத்தைப் பிடிப்போமா என்று கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் மனப்பான்மை தேவையில்லை என்பது என்னுடைய எண்ணம். அப்படிப்பட்ட எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக அந்தக் கட்சிக்காரர்களையெல்லாம் கேட்டுக் கொள்ளுகிறேன். அவைகளை. தொழிலாளர்கள் பார்த்துக்கொள்ளட்டும் அவர்களுக்குத் தெரியும். அவ்வளவு பெரிய தொழில் நுட்பக்காரர்களுக்கு இந்தச் சாதாரண விஷயங்கள் கூடவா புரியாது. இந்த மாதிரி அரசியலை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் பாழாக்குவது ஏன்?

அடுத்து, உணவுத் துறையிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் காட்டியிருப்பது போல், 1967-68-ல் 67 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறார்கள்; 1970-71-ல் 70 இலட்சம் டன் உணவு உற்பத்தி காட்டியிருக்கிறார்கள். இந்த வருஷம் 3 இலட்சம் டன் அதிகமான உற்பத்தியைச் செய்து காட்டியிருக்கிறார்கள். ஆகவே, உணவு உற்பத்தி நாளுக்கு, நாள் கொஞ்சம் அதிகரித்துக்கொண்டு தான் வருகிறது. உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள், "கொஞ்சம் விலைகள் எல்லாம் ஏறியிருக்கின்றன" என்று. விலை ஏறாமல் என்ன செய்யும்? அந்த விவசாயி எரு வாங்கப்போனால்; விலை ஒன்றிலிருந்து பத்து மடங்கு விலை ஏறியிருக்கிறது. அவன் விதை வாங்கப் போனாலும் அதுவும் விலை ஏறியிருக்கிறது. உழவுச் சத்தம் ஏறியிருக்கிறது. எனவே, அரிசி போன்றவற்றின் விலை ஏறித்தா

இருக்க வேண்டியிருக்கிறது. நெல் விலை குறைந்தால், விவசாயிகள் அடித்துக் கொள்கிறார்களே; அய்யோ நெல் விலை கீழே விழுந்து விட்டதே, எங்களால் வாழ முடியவில்லையே என்கிறார்கள். என்னுடைய நண்பர் திரு. வெங்கா கூட சொல்லியிருக்கிறார், நிலத்தை விட்டுவிட்டு நான் ஓடிவிடப் போகிறேன் என்று. நான் 7 ஏக்கர் விவசாயம் செய்கிறேன், ஆனால் எனக்குக் கட்டுபடி ஆகவில்லை, ஆகவே நான் ஓடிவிடப் போகிறேன் என்கிறார். வெளியே கொஞ்சம் விலை அதிகமாகத்தான் இருக்கிறது. இந்த விலை ஏற்றத்திற்கான காரணத்தைகூட, மேதகு கவர்னர் பெருமாள் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் உறவு நிலைக்க வேண்டும்; அப்படி நிலைத்தால் தான் இந்த விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்கிறார். ஒரு இடத்திலே ஏற்றி இன்னொரு இடத்திலே இறக்குவது என்பது விலைவாசிகளைக் கட்டுப் படுத்த உதவாது. ஆகவே தான் மத்திய மாநில உறவு நிலைக்க வேண்டும் என்பதற்காகப் பல மாதிரியான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்தது, முன்னேற்றக் கழகத்தினர் பிரிவினைக்காரர்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே சொல்லுகிறேன், நாங்கள் பிரிவினைக் காரர்கள் இல்லை. பிரிவினை மனப்போக்கை நாங்கள் கைவிட்டு நெடுங்காலம் ஆகிறது. அண்ணாத்துரை அவர்கள் அன்றைக்குத் திராவிட நாடு பிரச்சினையை ஒரு காரணத்திற்காகச் சொன்னார். அவர் நினைத்தது நிறைவேறியதும், தேசிய ஒருமைப்பாடு வேண்டும் என்று அவர் சொன்னார். நாங்கள் கொஞ்சம் வளர வேண்டும். எங்களுக்கு என்று இருக்கும் நிலையைச் சிறிது மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் பிரிவினைக் கொள்கையை அன்றைக்கு வைத்தார். வளரும் குழந்தைகளுக்கு எப்படி டானிக் டாக்டர்கள் கொடுக்கிறார்களோ அது மாதிரி, நம்முடைய மாநிலத்தை வளர்ப்பதற்காக சில நிலைகளை நாங்கள் வைத்திருந்தோம். அப்பொழுது அந்தத் திராவிட நாட்டுப் பிரச்சினையை தூக்கி எறிந்துவிட்டோம் என்றால், எங்களை ஏன் இன்னமும் பிரிவினைவாதிகள் என்று சொல்லுகிறீர்கள். தேசிய ஒருமைப்பாடு எண்ணம் எங்களுக்கு உண்டு, இந்தியாவைக் காப்பதில் இந்திய அரசுக்குப் பக்க பலமாக இருப்போம் என்பதை நாங்கள் இரண்டு, மூன்று தடவைகள் காட்டியிருக்கிறோம். சீனா இந்தியாவின் மீது படையெடுத்தபொழுது, நம்முடைய இலட்சியங்களைத் தூக்கி வையுங்கள், நாட்டை காக்க வேண்டும்என்று எங்கள் தலைவர் அண்ணா துரை அவர்கள் சொன்னார். நாடு இருந்தால் தானே நாம் இருப்போம், நாடு இருந்தால் தானே ஒரு ஆட்சி இருக்கும், நாடு இல்லையேல் ஆட்சி இல்லையே, நாடு இல்லையேல் மக்கள் இல்லையே என்று எல்லாம் அவர் கதறியிருக்கும் பொழுது, நாம் ஏன் மத்திய அரசிலிருந்து விடுபட்டு எங்களுக்குத் தனியாகப் பட்டம் கட்டிக்கொண்டு நாங்கள் அமர்ந்து விடுகிறோம் என்று நாங்கள் ஒரு போதும் சொல்ல மாட்டோம், அப்படிச் சொல்லுவது கூட தரம் ஆகாது.

6-20 p.m. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் பல கேள்விகளைக் கேட்டார்கள். ஒரு தொழிலைத் துவக்க எவ்வளவு அதிகாரம் தேவைப்படுகிறது திரு. தாமோதரன் அவர்கள் கூட கேட்டார்கள் "லெட்டர் ஆப் இன்டன்ட்" இந்தத் தொழிலுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து சீக்கிரம் கிடைக்கிறதா என்று. நான் என்ன செய்வது, மத்திய அரசுக்கு எழுதிக் கொண்டிருக்கிறேன், ஆனால் அவர்கள் அனுப்பவில்லையே என்று மிக்க வேதனையுடன் தொழிற் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொழில் தமிழ் நாட்டில் வளர வேண்டும், அதற்காக "பாரின் கொலாபரேஷன்" க்குக் கூட பேச்சு வார்த்தை நடக்கிறது. ஆனால் நமக்கு ஒரு முக்கியமான மூலப்





பொருள் தேவை என்றால் அதை மத்திய அரசு தானே இறக்குமதி செய்து தருகிறது. அப்படி இருக்கின்ற அதிகாரத்தை அவர்கள் இட்டால் தானே. எனவே, இருக்கின்ற அதிகாரத்திலே நியாகப் பார்த்து எங்களுக்குப் பிச்சை வழங்க வேண்டும் என்று வைத்திருக்கிறீர்களே, அந்த அதிகாரத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள். அதிலே நாங்களும் கொஞ்சம் எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லுவது தான் மத்திய அரசு மாநில அரசுக் கூட்டு என்பது. அதை விடுத்து, ஏதோ அவர்களிடமிருந்து பகைத்துக் கொண்டு நாங்கள் சிலோன் பக்கம் ஓடிவிடுகிறோம், என்று சொல்வது எங்கள் நோக்கமில்லை.

நமக்கு மத்திய அரசு உதவித் தொகையாக 40.40 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். ஆனால் வருகிற ஆண்டில் நாம் திருப்பித் தரும் தொகை 43.03 கோடியாக வந்துவிடுகிறது. நாம் உதவித் தொகையாகத்தான் தமிழ் நாட்டில் பெற்றுக்கொண்டிருக்கிறோம். திருப்பித் தரும்பொழுது வட்டித் தொகையை கூட கட்ட முடியாமல் தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் தவிக்கிறார்கள் என்று சொல்லலாம். சாதாரண மக்களை மேம்படுத்த வேண்டுமென்று இங்கே அமர்ந்த பிறகு, அதற்கு ஆவன இந்த ஆட்சியாளர்கள் ஏதாவது செய்ய வேண்டாமா? தொழிற் துறையிலே விருத்தி செய்ய வேண்டாமா? எனக்குத் தெரியுமே, தொழிற் துறை அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் வந்த பொழுது, ஒரு அறிக்கை தந்தார் கொடுத்தார். இந்தப் பகுதியிலே நெசவுத் தொழில் அதிகமாக இருக்கிறது, ஆகவே தொழிலாளர்கள் சாயம்போட வேண்டிய அளவுக்குச் சாயம் கிடைக்காததால், "சாயத் தொழிற்சாலை" இங்கே வரும் என்றார். அதற்குப் பிறகு பட்டு நெசவுக்கு என்ன தேவை என்றார், சரிகை என்றோம். சரிகையை எங்கேயோ நாம் வட நாட்டிலேயிருந்து எதிர் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். சரிகை உற்பத்தியை இங்கேயே ஆரம்பிப்போம் என்று சொன்னார்கள். அதற்கிடையிலே அதைப்பற்றி நாங்கள் கேட்டால், அதற்கு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறேன் என்கிறார்கள். தொழில் அமைச்சரை அதுபற்றி அடிக்கடி கேட்டால், அவர் என்ன செய்வார்; அவர் ஜேபியிலே இருந்தால், எடுத்து வைத்து விடுவார். இன்னொரு ஜேபியைத் தடவி அவர் மெதுவாக எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமை அல்லவா இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சாயத் தொழிற்சாலை வரவிருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: சாயத் தொழிற்சாலை வரும் என்று அமைச்சர் சொல்லிவிட்டார். ஆகவே தான் நாங்கள் மத்திய மாநில உறவு பலப்பட வேண்டும் என்று கேட்கிறோம். அதை விடுத்து. மாற்று கட்சியினர்கள் எங்களைப் பார்த்து பிரிவினைக்காரர்கள் என்று பேசுவது உண்மையிலேயே மிகக் கேவலமாக இருக்கிறது. எனவே, எதிர்க் கட்சிக்காரர்கள் இப்படிப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்காக எனக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நம்நாடு சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் ஆகியும் கூட தமிழ் நாட்டில் பணி புரியக் கூடிய, உள்ளாட்சித் துறையில் பணி புரியக் கூடிய ஆசிரியர்களுக்கு அதாவது நகராட்சி பள்ளிகளிலேயும், ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலேயும் பணி புரியும் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் ஊதியம் கிடைக்கும் என்று உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது. பல இடங்களில் 2, 3 மாதங்களுக்குச் சம்பளம்

[திரு. செ. முத்துசாமி] [28th January 1972

இல்லாமல் ஆசிரியர்கள் போராடிப் பெற்ருக வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகிறது. ஆசிரியப் பெரு மக்களுக்கு 1-ம் தேதியே சம்பளம் வழங்கப்படும் என்று உறுதிமொழி அளித்திருந்தும், ஜனவரி முதல் வழங்கப்படாமலிருப்பது கண்டு வருத்தப்படுகிறேன். 1-ம் தேதியே சம்பளம் வழங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு நாளும், நான் ஆசிரியர் கூட்டணியில் பொதுச் செயலாளனுக இருப்பதால், இந்தப் பஞ்சாயத்திலிருந்து சம்பளம் வரவில்லை, இந்த நகராட்சியிலிருந்து சம்பளம் வரவில்லை என்று தந்திகளையும், தபால்களையும் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இந்த நிலைமை நாள்தோறும் வளர்ந்து வருகிறது. இதற்கு உடனடியாக ஒரு தீர்வு காண வேண்டும்.

அடுத்து, தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள், ஆண்டான் அடிமை என்ற முறையில், சட்டம் பாதுகாப்பற்ற நிலையில் பணியாற்றி வருகிருர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டம் வரும் என்று தெரிந்த உடனேயே தனியார் பள்ளி மானேஜர்கள் ஆசிரியர்களை வெளியேற்றிக்கொண்டிருக்கிருர்கள். இப்படித் துரத்தப்பட்ட ஆசிரியர்களுக்கெல்லாம் பாதுகாப்பளிப்பதற்காக இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பிலிருந்தே ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தற்போது கிருஸ்தவர்கள், முஸ்லீம்கள் போன்ற மைனுரிட்டி சமூகத்தினர் பள்ளிகளை நடத்தி வருகிருர்கள். மதத்தின் அடிப்படையில் மைனுரிட்டி என்று சொல்லி அவர்கள் நடத்தும் பள்ளிகளில் அரசு தலையிட முடியாது என்று சட்டம் இருக்கிறது. தமிழக அரசு இவைகளையெல்லாம் மாற்றும் வகையில் சட்டமியற்றி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெரும்பாலான பள்ளிகள் மைனுரிட்டி சமூகத்தினரால் நடத்தப்படுகின்றன. அதில் மெஜாரிட்டி சமூகத்தினர் பாதிக்கப்பட்டு வருகிருர்கள். ஆகவே மெஜாரிட்டி சமூகத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில் சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பட்டதாரி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்னை நீண்ட காலமாகப் பரிசீலனையில் இருந்தது. ஓராண்டு காலமாக இந்தப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருந்து சென்ற மாதம் இந்த வேண்டுகோள் மறுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக அமைக்கப்பட்டிருந்த குழு பரிசீலித்து இல்லை என்று கூறியிருக்கிறது. இதற்கு இவ்வளவு காலம் எடுத்திருப்பது கண்டு நான் மெத்த வருந்துகிறேன். 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதி சி.எல். போட்டு போராட்டம் நடத்த முயற்சித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "நீங்கள் போராடித்தான் பெற வேண்டும் என்பதில்லை. நான் உங்களுடைய பிரச்னையைக் கவனிக்கிறேன்'. 'என்று சொன்னுர்கள். ஆகவே சி.எல். எடுக்காமல் போராட்டத்தை ஒத்தி வைத்தார்கள்.



28th January 1972] [திரு. செ. முத்துசாமி]

ஒத்தி வைத்து ஓராண்டுக் காலமாகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் இதைப் பரிசீலித்து, இருவரும் கலந்து முடிவெடுப்போம் என்று சொல்லியிருக்கிருர்கள். 6-30 p.m.

கல்லூரியில் உள்ள டியூடரை விட பி.டி. ஆசிரியர்களுக்கு நிறையப் பொறுப்பு இருக்கிறது என்று சொன்னபோது, இவைகளை எல்லாம் பரிசீலித்து முடிவெடுப்பதாகச் சொன்னுர்கள். ஆனல் கடைசியில் உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் மறுக்கப்பட்டு விட்டன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே 20,000 ஆசிரியர்கள் இருக்கிருர்கள். தங்களுக்குச் சாதகமான பதில் வராவிட்டால், பிப்ரவரி 25-ம் தேதி சி. எல். எடுக்கும் நிலைக்குக் கட்டாயப்படுத்தப்படுகிருேம், ஓராண்டுக் காலம், பொறுத்திருந்தோம், இனி போராட வேண்டும் என்று இப்போது செயற்குழு முடிவு எடுத்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக ஆசிரியர்கள் தொழிற் சங்க உரிமைகளைக் கேட்கிருர்கள். பல நாடுகளில் இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில நாடுகளில் சட்டப்படி உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தொழிற் சங்க உரிமையின் மூலம் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாதா என்றுதான் இந்த உரிமையைக் கேட்கிருர்கள்.

ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அரசியல் இல்லை. ஆசிரியர் சங்கங்களுக்கே ஆசிரியர்கள்தான் தலைவர்களாக இருக்கிருர்கள். சென்ற டிசம்பர் 18-ம் தேதி முதலமைச்சர் அவர்களிடத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் வெளியே காத்துக்கொண்டிருக்கிருர்கள் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள் நீங்கள் ஒரு முறை பார்த்தால் போதும் என்று சொன்னுர்கள். நான் அப்படிச் சொல்லத் தயாராக இல்லை.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களைப் பார்க்க வேண்டும். பட்டதாரி ஆசிரியர்களுக்கு இந்த ஒரு வாய்ப்புக் கிடைத்தால், அவர்களுடைய கோரிக்கைகள் கவனிக்கப்பட்டு தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் ஒரு முறை பார்த்தால் போதும் என்று கூறினேன்.

**திரு. செ. முத்துசாமி:** மிக்க நன்றி, கிடைக்கும் என்ருல் நான் பெருமைப்படுகிறேன். ஆகவே அரசு மீண்டும் அவர்களுடைய கோரிக்கைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசுக்கு இது ஒரு பெரிய விஷயமல்ல. ஓராண்டுக் காலம் பொறுமையாகக் காத்திருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமானவை என்ற காரணத்தால் மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்று மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, இப்போது பாதுகாப்பு நிதியை ஆசிரியப் பெருமக்கள் வழங்குகிருர்கள். சென்ற கூட்டத்தில் நான் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுத்தேன். ஆசிரியப் பெருமக்கள் ஒரு நாள் ஊதியத்தை எல்லா இடங்களிலும் வழங்கியிருக்கிருர்கள். அப்படி வழங்கிய பிறகு இப்போது மீண்டும் வழங்க வேண்டு

மென்றும் லாட்டரி சீட்டுகள் வாங்க வேண்டுமென்றும் ஒவ்வொருவரும் ரூ. 50, ரூ. 100 அளவுக்குத் தந்தாக வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். பாவம் ஏழை ஆசிரியர்கள். எப்போதும் கிராம முனிசிப், கிராம கர்ணம், கிராம சேவக் போன்றவர்கள் உதவி மக்களுக்குத் தேவைப்படும். அவர்கள் எப்படியும் சமாளிப்பார்கள். ஆனால் ஆசிரியர்களுடைய தயவு அட்மிஷன் காலங்களில்தான் பெற்றோர்களுக்குத் தேவைப்படும். அட்மிஷன் நேரமாக இருந்தாலும், யாரும் கேட்டால் ஐந்து பத்து கொடுப்பார்கள். அதை வாங்கி வழங்க முடியும். இப்போது ரூ. 50, ரூ. 100 என்று ஒவ்வொருவரும் தர வேண்டுமென்பது மிகவும் வேதனையாக இருக்கிறது. அவர்கள் கொடுக்காவிட்டாலும், சம்பளத்திலிருந்து பிடிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு டி. இ. ஓ. ஆசிரியரைக் கூப்பிட்டு ரூ. 50 கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். "பள்ளிச் சீரமைப்புக்காகக் கேட்டீர்கள், தந்தோம், இப்போது எப்படி ரூ. 50 கொடுக்க முடியும்?" என்று கேட்டதற்கு, "இது பிளாட் பாரம் என்று நினைக்காதே, இது என் ஆர்டர். It is my order. You must pay. இல்லாவிட்டால் நீ ராஜினாமா செய்துவிட்டுப்போ" என்று ஒரு கல்வி அதிகாரி சொல்கிற அளவுக்கு நிலைமையிருக்கிறது. நல்ல எண்ணத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் பத்து கோடி பாதுகாப்பு நிதியாக வழங்குவதாக வாக்களித்தார்கள். ஆனால் நடைமுறையில் சாதாரண ஆசிரியப் பெருமக்களிடமிருந்து ரூ. 100, ரூ. 50 என்று கேட்கப்படுகிற நிலைமை நீடிக்க வேண்டாமென்றும் அதை உடனடியாகப் பரிசீலித்து, தக்கதைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே வழங்கியிருக்கிறார்கள். இன்னும் பல இடங்களில் ரூ. 5, ரூ. 10-க்கு டிக்கெட் வாங்கியிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் தயவு செய்து வேறு டிக்கெட் எதுவும் தர வேண்டாமென்று கேட்டுக்கொள்ளும் நிலைமையில் ஆசிரியப் பெருமக்கள் இருக்கிறார்கள். இந்தப் பரிதாபகரமான நிலையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இதை உடனே ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டப் பிரச்னை இருக்கிறது. முன்பு சேலம் தர்மபுரி இரண்டும் ஒரே மாவட்டமாக இருந்தது. டிஸ்ட்ரிக்ட் போர்டாக இருந்தபோது இரண்டையும் ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட்டாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட்டில் மாறுதல் இல்லை. முன்பு சேலத்தில் இருந்தவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் "அப்பாயின்ட்" செய்யப்பட்டுவிட்டார்கள். சேலம்-தர்மபுரி இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஆசிரியர்கள் வேண்டிக்கொண்டதற்காக இது பிரிக்கப்படவில்லை. நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்பட்டது. நிர்வாகத்தில் உள்ளவர்கள் பிரிந்து போகிற நேரத்தில் ஆசிரியர்களுடைய விருப்பத்தைப் பல ஆண்டுகள் கழித்துக் கேட்டார்கள். 1966-ல் இன்டெக்ரேஷன் ஆர்டர் வந்தபொழுது, ஒன்றைப் போட்டார்கள். 1970-க்குப் பிறகு ஆசிரியர்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட்டாக மாற்றப்பட்டு அந்த உத்தரவு வந்தபொழுது, இரண்டு ரெவின்யூ ஜில்லாவுக்கும் ஒரு டி.இ.ஓ. என்று வைத்தார்கள். சேலம், தர்மபுரி ஆகியவற்றின் ஆசிரியர்கள் மாற்றம் நியமனம் நடக்கும்போது அவர்களுடைய விருப்பத்தைக் கேட்கவில்லை. இப்போது ஆசிரியர்கள் சேலம் பகுதிக்குப் போக வேண்டுமென்பதற்காக அங்கிருந்து பல முறை பலரோடு வரவேண்டியிருக்கிறது. பல நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து மாறுதலுக்காக அலையும் அவல நிலை இன்றைக்கு இருக்கிறது அவர்களுக்கு. அரசு திட்டவட்டமாக ஆணையிடவில்லை. இப்போது ஏ-விங், பி-விங் என்று பிரிக்கப்பட்டு ஆசிரி





யர்கள் மாறுதல் இல்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் ஏற்கனவே 6-40 p.m.
இந்த 'விங்' முறை வேண்டாமென்று டைரக்டரிடம் சொன்னோம். இரண்டு விங்கிலும் உள்ளவர்கள் தனித்தனியாக மாறுதல் வசதியில்லாமல் இருப்பதால், கணவன் மனைவியாகப் பணியாற்றுகிறவர்கள் எல்லாம் மாறுதல் வேண்டிக் கஷ்டப்படுகிறார்கள். கல்வித் துறையில் உள்ளவர்கள் அமைச்சரிலிருந்து அதிகாரிகள் வரை பலமுறை இந்தக் குறையை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இது வரையில் தீர்வு காணப்படவில்லை. ஏ-விங்கில் உள்ள அத்தனை போஸ்ட்களையும் பி-விங் போஸ்டாக மாற்றி, ஏறக்குறைய 500 பேர்கள் மாறுதல் கேட்டார்கள். 250 ஆசிரியர்களுக்கு 'ஏ' விங் கொடுப்பதன் மூலம் ஆசிரியப் பெருமக்களின் எண்ணத்தை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும், அவர்கள் விருப்பத்தின் பேரில் இது பிரிக்கப்படவில்லை என்பதாலும் இது ஒரே நிர்வாகமாக இருப்பதாலும், அதைத் தீர்க்கும் முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்று பெரிதும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஏ-விங், பி-விங் குக்கு மாற்றுவது அதிகாரிகளுடைய ஒரு சொட்டு இங்கில் இருக்கிறது. பெரிய பழைய கோயில்களைப்பற்றிப் பிரச்னைப் பெரிதாகப் பேசப்படுகிறது. நாளுக்கு நாள் சட்டம் மாறுகிற இந்த நேரத்தில் ஒரு சொட்டு இங்கினால் ஆணை போடும் நிலை கல்வித் துறையில் இருப்பதால், இந்தப் பிரச்னையை எளிதாகத் தீர்த்துவிடலாம். இரண்டு விங்கிலும் உள்ளவர்கள் இதற்காக அலைகிறார்கள். அவர்களுடன் சட்டமன்ற உறுப்பினர்களும் போகவேண்டியிருக்கிறது. கல்வித் துறையில் நீண்டகாலமாகப் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. சேலம், தர்மபுரி மாவட்டப் பிரச்னை நீண்ட காலமாகக் கஷ்டமான நிலைமையினை உண்டாக்கி வருகிறது. பலமுறை எடுத்துச் சொல்லியும் ஏனென்று கேட்பாரில்லை. ஏ-விங், பி-விங் பிரச்னை சிக்கலாக இருப்பதால், ஆசிரியர்களுக்கு மாறுதல் அளிக்க வேண்டும். கணவன் மனைவியாகப் பணியாற்றுகிறவர்களுக்காவது முதலில் சர்க்கார் கவனித்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வி அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் இதற்கு வேண்டிய உத்தரவை இட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைமையாசிரியர்கள் இது வரையில் ரப்பர் ஸ்டாம்பாக இருந்தோம். தலைமையாசிரியர்கள் என்று சீல்தான் போட்டுக்கொள்வோம். வேறு வித்தியாசம் கிடையாது. உயர்நிலைப் பள்ளிகளில் தனி சம்பளம் இருக்கிறது. அதே நேரத்தில் தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு அளிக்கும் கூடுதல் பணியையும் அவர்கள் செய்கிறார்கள். ஒரு ரூ. 5 கூட அலவன்ஸ் இல்லை அவர்களுக்கு. ஏழைப் பிள்ளைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தில் பங்கு கொண்டு, அதற்காக உள்ள பேரேட்டில் கணக்குகளை எழுதி வேலை செய்கிறார்கள். பள்ளி வேலை நேரத்தில் அதை எழுதக் கூடாது என்று வேறு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அவ்வளவு செய்தும் அவர்களுக்கு ஒரு ஐந்து ரூபாய் அலவன்சு கிடையாது. மற்றத் துறைகளில் வேறு பணி கொடுத்தால் அதற்கென தனியாக அலவன்சு கொடுக்கிறார்கள். கொடுத்துவந்த தலைமையாசிரியர் படியும் நிறுத்தப்பட்டுவிட்டது. 1962-ல் மிகவும் வேடிக்கையாக இதை நிறுத்தினார்கள். கொடுத்த கூடுதலான பொறுப்புக்காக அளிக்கப்பட்ட டியூட்டி அலவன்சு நீக்கப்பட்டது. அது 1970-ல் சம்பளக் குழுவிடம் சொல்லப்பட்டு அப்போது உள்ளாட்சி அமைச்சராகவும் தற்போது உணவு அமைச்சராகவும் உள்ளவர்களிடம் அதுபற்றி முறையிட்டபோது, அதைத் தருவதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லி ரூ. 2

[திரு. செ. முத்துசாமி] [28th January 1972

கொடுத்து இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறோம், இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். கொடுக்கப்பட்டிருப்பது என்ன? 4 ஆசிரியர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் ஐந்து ரூபாய், 300 பிள்ளைகளுக்கு மேல் உள்ள பள்ளியில் பத்து ரூபாய் கொடுப்பது என்று 1971 பிப்ரவரி மாதம் போடப்பட்ட உத்தரவு இன்னும் நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படவில்லை. அமுல்படுத்தப்படவில்லை. அரசாங்கத்திடம் பலமுறை கேட்டு மகாநாடுகள் நடத்தி அமைச்சரிடம் போராடி ஆர்டர் பெறுகிறோம். அதை அமுல் செய்வதற்கு அதிகாரிகள் தயங்குகிறார்கள். இதற்கு உடனடியாகக் கல்வி அமைச்சர் அவர்கள் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல ஆண்டுகள் கஷ்டப்பட்டு வாங்குகிற நன்மைகளை இடையில் உள்ளவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். அதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரே ஒரு பிரச்னையை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தொழிலாசிரியர்கள் என்று சிலரை வைத்திருக்கிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் தொழில் கற்றுக் கொடுப்பதற்காக அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 30 தருகிறார்கள். இந்தக் காலத்தில் முதியோர் பென்ஷன் கூட அதிகமாகிவிட்டது. ரிடையர் ஆனவர்கள் கொஞ்சம் தான் சாப்பாடு சாப்பிடுவார்கள், வயதாகிவிட்டதால். அவர்களுக்கு ரூ. 20 கொடுக்கிறோம். ஃபுல் டைம் ஆக இருந்தால் இரண்டு பள்ளிகளுக்குச் சேர்ந்து நியமித்து விடுகிறார்கள். காலையில் ஒரு பள்ளி, மாலையில் ஒரு பள்ளி. இரண்டு பள்ளிகளில் வேலை செய்தால் ரூ. 60 கொடுக்கிறார்கள். 1969 மகாநாட்டில் நாங்கள் கேட்டோம். இதற்கு 6 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆசிரியப் பெருமக்கள் எவ்வளவோ நிதிகளைத் திரட்டித் தருகிறோம். எதற்கும் மறுப்புச் சொல்லாமல் திரட்டித் தருகிறார்கள். பாதுகாப்பு நிதிக்கு சில கோடி ரூபாய்களைத் தந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ரூ. 6 லட்சம் பெரிதல்ல அரசுக்கு. சம்பளக் குழுவிலே இதைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். ரி-ஃபிக்சேஷன் செய்யவில்லை. 5½ லட்சம் எம்ப்ளாயீஸ்களில் இந்த பி.டி.க்களுக்கு ரி-ஃபிக்சேஷன் இல்லை. மைனாரிடி, மதத்தின் பெயரால் மைனாரிடி, என்றெல்லாம் பேசி சலுகை பெறுகிறார்கள். தொழிலாசிரியர்களுக்கு நிச்சயமாக அவர்கள் சம்பளத்தை மாற்றி அதிகப்படுத்தி உத்தரவிட்டு அரசு அவர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி இருக்கையில் அமருகிறேன்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet
6 45 p.m. at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders*

22. Notification issued with G.O. Ms. No. 2380, Home, dated the 30th August 1971 in regard to an amendment to rule 209 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]



28th January 1972]

23. Notification issued with G.O. Ms. No. 2205, Home, dated the 10th August 1971, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

### *B. Reports, Notifications and other Papers*

24. Erratum issued with Roc. No. 164237/69, dated the 25th February 1970 to the notification published in page 420 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th December, 1969, relating to bifurcation of Madampatti town panchayat.

25. Notification issued with G.O. Ms. No. 244, Labour, dated the 21st February 1970, in regard to an amendment to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Saturday, the 29th January 1972.*

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

### *Starred Questions.*

### *Central Buffalo Farm*

* 59 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government are proposing to start a Central Buffalo Farm at Alamadhi near Madras; and

(*b*) if so, the salient features of the scheme ?

### மத்திய எருமைப் பண்ணை

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னைக்கு அருகில், 'அலமாதி' என்னுமிடத்தில் மத்திய எருமைப் பண்ணை ஒன்றைத் தொடங்க அரசு கருதியிருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விவர அறிக்கை[a] ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்த எருமைப் பண்ணை துவங்குவதற்கு எவ்வளவு ஏக்கர் நிலம் தேவைப்படும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, எவ்வளவு ஏக்கர் என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை. ஏற்கனவே நம்முடைய தமிழக அரசு நடத்திவந்த பால் வற்றிய மாடுகளுக்கான பெரிய பண்ணையின் நிலப் பரப்பு முழுவதையும் முர்ரா எருமைப் பண்ணையாக அமைப்பதற்குப் பொருத்தமாக இருக்குமென்று மத்திய அரசு இலாகாவினர் கேட்டதால், அப்படியே முழு அளவு இடம் ஒதுக்கப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சென்னைக்கு மிக அருகில் இந்தப் பண்ணையை அமைக்கத் தனியான காரணங்கள் ஏதாவது இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தென்னகத்தில் இப்படிப்பட்ட எருமைப் பண்ணை-முர்ரா பண்ணை பெருமளவிற்குப் பெருகி வளரும் நிலையில் ஏற்பட வேண்டுமென்று மத்திய அரசு விரும்புகிறது. அதற்காக பல்வேறு இடங்களைத் தேர்ந்தெடுக்க முயற்சித்தார்கள். ஏற்கனவே அமைத்திருந்த பண்ணை அதன் சுற்றுச் சார்பு அதற்குப் பொருத்தமுடையது

---

a Printed as Appendix I on pages 269–270

என்று விரும்பினார்கள். எனவே அந்தத் திட்டம் ரூ. 82 லட்சம் முதலீட்டில் அவர்களால் தொடங்கப்பட விருக்கிறது.

திரு கே. ராஜாராம்: அலமாதியில் மாநில அரசு நடத்தி வந்த பால் வற்றிய வறண்ட மாடுகளின் பண்ணை இப்போது அங்கே ஒன்றுமேயில்லை. மத்திய அரசிற்கு எருமைப் பண்ணை வைப்பதற்கு அந்த நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய பண்ணையும் ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்கனவே மாநில அரசு நடத்தி வந்த வறண்ட மாடுகளின் பண்ணை இப்போது காலியாகிவிட்டது. ஆகவே கூடிய சீக்கிரம் அதைத் திருத்தி எருமைப் பண்ணை வைத்து நகரத்திற்கு பால் வளம் அதிகரிப்பதற்கு ஏதாவது செய்ய முயற்சிக்கப்படுமா? மாநிலத்தில் நல்ல எருமைப் பண்ணையின் மூலம் அந்த இனம் பெருக வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பொதுவாக மத்திய அரசு இலாகாக்கள் திட்டமிடுகிறபோது, அத்திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றுவதற்கான இயந்திர அமைப்பு இல்லாதிருக்கிறது. மாநில அரசு இயந்திர அமைப்பு உடனுக்குடன் நிறைவேற்றும் நிலையில் இருக்கிறது. மாநில நிர்வாகத்தில் உள்ளவர்கள் சொல்வதை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது. தண்ணீர் கிடைக்கக்கூடிய கூற்றலையாறு தலைப் பகுதியில் தாங்களாகவே கிணறுகளை அமைத்துக்கொள்வதாகக் கேட்டார்கள். அப்படி அவர்கள் நினைத்தபடி கிணறுகள் அமைப்பது நீர்ப்பாசனத் திட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதால், தேவைப்படுகிற ஏறத்தாழ 11.59 லட்சம் காலன் தண்ணீரை ஒவ்வொரு நாளும் வழங்க தமிழக அரசு முன்வந்து அதையும் ஏற்றுக்கொண்டு, இப்போது மத்திய அரசு அதை விரிவாக விரைவாகத் தொடங்குவதாக தெரிவித்திருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: இந்த விஷயம் இவ்வளவு சிக்கலாக இருக்கும்போது, நாம் நடத்தி வந்த வறண்ட மாடுகளின் பண்ணையை ரத்து செய்துவிட்டு, நகரத்திலுள்ள பலருடைய வறண்ட மாடுகளைக் கொண்டுபோய் வளர்ப்பதற்கும் இடமில்லாமல் சிக்கலாக இருக்கிறது. அதற்கு வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அந்த அளவு வறண்ட மாடுகள் அந்தப் பண்ணைக்கு அனுப்பப்படுவதில்லை. சில தான் அனுப்பப்பட்டன. இவ்வளவு பெரிய பண்ணை வறண்ட மாடுகளை வைத்திருந்து அவை பால் வழங்கும் நிலையில் வெளியிலனுப்பும் நிலைக்குத் தேவைப்படவும் இல்லை. அவைகளுக்கு வேறு ஏற்பாடுகள், மக்களுடைய தேவைக்கேற்ப அப்போதைக்கப்போது அமைத்துக்கொள்ள முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: முன்னால் இருந்த பண்ணையில் 'ரின்டர்பெஸ்ட்' என்ற நோயின் காரணமாக நாற்றுக்கணக்கான மாடுகள் இறந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அந்த நோய் அறவே போய்விட்டதா என்பதைக் கவனித்து இப்போது அரசுப் பண்ணை வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஒரு வியாதி இந்தப் பண்ணையில் இருந்ததாகச் செய்தியில்லை. அப்படிச் சில வியாதிகள் பொதுவாக மாடுகளுக்கு வருவதால் கூட, இதைக் கேட்டிருக்கலாம். பொதுவாக இந்த வியாதிகள் அண்மைக் காலத்தில் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.



திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: ரூ. 82 லட்சம் செலவில் 750 எருமை மாடுகள் இருக்க, இந்தப் பண்ணை அமையும்போது, நாள் ஒன்றுக்கு ஆயிரம் அல்லது 1,200 லிட்டர் பால் கிடைக்கச் செய்யக் கூடும் என்று தெரிகிறது. அது மிகவும் குறைவு அல்லவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாட்டுப் பண்ணை அமைப்பதற்கு திரு. கிருஷ்ணசாமி நாயுடு போன்றவர்கள் அனுபவம் பெற்றவர்களாக இருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன். பாலுக்காக அமைகின்ற பண்ணைகள் சில. மாடுகளின் தரத்தை நாடு முழுவதும் உணர்த்துவதற்கு அமைகின்ற பண்ணைகள் சில. முர்ரா எருமைகளின் தரத்திற்கு பிற எருமைகளை உயர்த்துவதற்காக அப்படி மத்திய வங்கியைப் போல இருந்து, அங்கிருந்து அனுப்பப்படுகிற பல்வேறு சாதனங்களின் மூலமாக—முர்ரா காளைகளின் மூலமாக—இந்த வட்டாரத்தில் நல்ல இன வளர்ச்சி அமைக்கப்படுவதாகும். உயர்ந்த தரத்திலுள்ள பால் தருகிற எருமைகளை வைத்து பண்ணை அமைப்பதால், 1,000 முதல் 1,500 லிட்டர் பாலையும் வழங்க அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

## *Family Planning Scheme*

*60 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any incentive scheme is being proposed to be implemented by the District Collector, Thanjavur, for Family Planning drive in that district;

(*b*) if so, the nature of the scheme; and

(*c*) whether the same will be followed in other districts?

### குடும்ப நலத் திட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்திற்காக அந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் ஊக்கத் திட்டம் ஏதேனும் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் தன்மை யாது?

(உ) இத்திட்டம் ஏனைய மாவட்டங்களிலும் பின்பற்றப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் குடும்ப நலத் திட்டம் நடைபெற்றிருந்தாலும், தஞ்சை மாவட்டத்தில் நடைபெறும் திட்டத்தில் வருகிற நோயாளிகள் மருத்துவ மனைகளில் நல்ல முறையில் வைக்கப்பட்டு அவர்கள் உடல் தேறிய பிறகு, அங்கிருந்து அனுப்பப்படுகிறார்கள். இதனால் அவர்கள் உடல் நலம்பெறுவது மட்டுமல்லாமல், குடும்ப நலத் திட்டமும் சரியாக நிறைவேறுகிறது. இதைப்பற்றி அவர்கள் மற்றவர்களிடம்

@ Printed as Appendix II on pages 270-271

[29th January 1972

சொல்வதற்கும் ஏதுவாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை செய்து அனுப்புகிறார்கள். ஆனால் சிகிச்சை பெற்றவர்களுக்கு வெளியில் அனுப்பப்பட்ட இரண்டு மூன்று நாட்கள் கழித்து ஏதாவது உடல் நலக்குறைவு ஏற்பட்டால், அதைக் கண்டு பயந்து பலர் வருவதில்லை. இதை மனதில் கொண்டு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய திட்டத்தின்படி மற்ற மாவட்டங்களிலும் இந்தக் குடும்ப நலத் திட்டத்தை நல்ல முறையில் விஸ்தரிக்க அரசு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தக் கேள்வியின் மூலமாக அங்கத்தினர் தஞ்சை ஜில்லாவில் நடைபெற்ற குடும்ப நலத் திட்டச் செயல்முறையை மனதில் கொண்டு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய திட்டத்தின்படி நல்வாழ்வு நிலையங்கள் மிக நல்ல முறையில் மக்கள் விரும்பும் வகையில் பயன்பட்டன என்று சொன்னதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் அண்மையில்தான் 15—11—1971-ல் ஏறத்தாழ 40 நாட்களுக்கு நடைபெறுவதற்காகத் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று பத்திரிகை நிருபர்கள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றிப் பார்த்து எழுதியிருக்கிறார்கள். ஏறத்தாழ இதற்கு ஈடாக ஐந்தாறு நாட்கள் தங்கிச் செய்துகொள்ளவும், உடல் நலத்தையும் கவனித்துத் திருப்பியனுப்பும் முறை தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களிலும் கையாளப்பட்டது. அங்கே உள்ள நல்வாழ்வு நிலையங்களில் நோயாளிகளுக்குக் கலை நிகழ்ச்சிகளை அமைத்து மகிழ வைக்கிறார்கள். உணவு அளிப்பதிலும் வழக்கமாக அவர்கள் உட்கொள்ளும் உணவில்லாமல் நல்ல தரமான உணவை அளிப்பதற்கும், வேறு நோய் இருந்தால் அதற்கும் சிகிச்சையளித்தும் ஆறு நாட்கள் நிம்மதியாக இருந்து பிறகு அவர்கள் திரும்புவதற்கு ஏற்ற வகையில் செயல்படுகின்றன. மத்திய அரசிலிருந்து வந்த அதிகாரி ஒருவர் இதைப் பார்த்துவிட்டுச் சென்றபொழுது, இந்த முறையைப் பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார் என்ற முறையிலும் இதைத் தொடர்ந்து அரசாங்கம் பின்பற்றும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மத்திய திட்ட அமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் நடத்தப்பெற்ற இந்த நல்வாழ்வுத் திட்டத்தைப் பார்த்து நல்ல முறையில் பாராட்டிப் பேசினார்கள் என்பதையும் அரசிற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** விவரம் தெரியும். மேலும் அங்கத்தினர்கள் மக்களிடத்தில் சொல்லி இதற்குச் செல்வாக்குத் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு எவ்வளவு அதிகமாகச் செலவாகும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழக்ன்:** தலைவர் அவர்களே, இதற்கு ஓரளவு மாவட்ட ஆட்சியாளர்கள் மக்களிடமிருந்து நன்கொடை பெறுகிறார்கள். ஆனால் மேலும் மத்திய அரசு தருகிற உதவித் தொகை ரூ. 30 அடிப்படையில் வருவதையும் ரூ. 20 அதிக எண்ணிக்கையுள்ளவர்களுக்குச் செய்வதற்குத் தரும் செலவையும் விட ரூ. 10 அல்லது ரூ. 20 செலவாகிறது. அதையும் மாநில அரசுதான் இது வரையில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வந்திருக்கிறது.



29th January 1972]

## *Professor of Radiology*

* 61 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Professor of Radiology, recently posted to Thanjavur Medical College, is an expert in Cobalt Therapy with foreign training; and

(*b*) if so, the reason for transferring such an expert to Thanjavur Medical College, where there is no Cobalt or Deep 'X' ray Therapy?

### கதிரியக்கப் பேராசிரியர்

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் நியமிக்கப்பட்ட கதிரியக்கப் பேராசிரியர், வெளிநாட்டில் பயிற்சி பெற்றவரும், கோபால்ட் சிகிச்சை முறையில் வல்லுநருமாவார் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், கோபால்ட் சிகிச்சை முறை அல்லது ஆழ் "எக்ஸ்" கதிர் சிகிச்சை முறை இல்லாத தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு அத்தகைய வல்லுநரை மாற்றியதன் காரணமென்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்திலேயே சென்னை மருத்துவக் கல்லூரியில் மட்டும் ஒரே ஒரு 'ரேடியோ தெராபி' பேராசிரியர் பதவி உள்ளது. அப்பதவியை தஞ்சை மருத்துவக் கல்லூரியிலிருக்கும் மருத்துவ அதிகாரியைக் காட்டிலும் 'மூத்தவர்' வகிக்கிறார்.

## *Concrete Mixtures*

* 51 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Slum Clearance Board has purchased a number of concrete mixtures;

(*b*) if so, the expenditure incurred thereon; and

(*c*) the names of the firms from whom they were purchased?

### கான்கிரீட் கலவை இயந்திரங்கள்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிசை மாற்று வாரியம் பல கான்கிரீட் கலவை இயந்திரங்களை வாங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான செலவு யாது?

(உ) அவை வாங்கப்பட்ட நிறுவனங்களின் பெயரென்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, காங்கிரீட் கலவை இயந்திரங்கள் இல்லாமலே எவ்வாறு காங்கிரீட் கலக்கும் பணி நடைபெறுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது வாரியத்தின் வேலையை மேற்கொள்கிற காண்ட்ராக்டர்கள் தங்களிடம் உள்ள சொந்தக் கலவை இயந்திரங்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு முன்பு இவற்றை வாங்கலாம் என்ற யோசனையில் அதற்காக டெண்டர்கள் விடப்பட்டன. அவையும் வந்து சேர்ந்தன. இதற்கிடையில் காண்ட்ராக்டர்களே தாங்கள் வைத்துப் பயன்படுத்தும்போது அரசும் அதை வாங்குவதால் செலவுதானே அதிகமாகும் என்று கருதப்படுகிறது.

### *Manhandling of Manager and Cashier*

* 52 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Manager and Cashier of the Employees' State Insurance Office in Singanallur in Coimbatore District were manhandled about 23rd June, 1971; and

(*b*) if so, the details thereof ?

### மேலாளர், காசாளர் மீது தாக்குதல்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி அலுவலக மேலாளரும், காசாளரும் 1971, ஜுன் 23 ஆம் நாள் அளவில் தாக்கப்பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 23—6—1971 அன்று பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டமொன்று சிங்காநல்லூர் தொழிலாளர் நலக் காப்புறுதி அலுவலகத்தின் முன்னால் கூடியது. அக்கூட்டத்திலிருந்த தொழிலாளர்கள் தாங்கள் அளித்த மருத்துவச் சான்றிதழ்களின் அடிப்படையில் தங்களுக்கு உடனடியாகப் பணம் கொடுக்கப்படவேண்டுமென்று கோரினார்கள். நிதி வசதியின்மை காரணமாகவும், சான்றிதழ்கள் சரிபார்க்கப்படாமல் உள்ள நிலையிலும் தாங்கள் உடனடியாகப் பணம் கொடுக்க இயலாதென்று அலுவலக மேலாளரும் காசாளரும் தெரிவித்தார்கள். தொழிலாளர்கள் 10 பேர் வலுக்கட்டாயமாக அலுவலகத்துக்குள் நுழைந்து மேலாளரையும் காசாளரையும் தாக்கினார்கள். அந்தப் பத்துத் தொழிலாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஏழு பேர் கைது செய்யப்பட்டார்கள். மூன்று பேர் நீதிமன்றத்தில் சரணடைந்தார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களனைவரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு தங்கள் மீது கருணை காட்ட வேண்டுமென்று இறைஞ்சினார்கள். கோயம்புத்தூர் மாவட்ட மாஜிஸ்திரேட் அவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்து, நன்னடத்தைக்கான உறுதி மொழிப் பத்திரங்கள் எழுதிக்கொடுத்ததன் பேரில் அவர்களை விடுதலை செய்தார்.



### *Stray cattle*

* 53 Q.—THIRU G. SWAMINATHAN and THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that stray cattle are posing considerable traffic problem in Madras City; and

(*b*) if so, the action taken thereon?

### பாரியாய்த் திரியும் கால்நடைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் பாரியாய்த் திரியும் கால்நடையால் போக்குவரத்துத் தொல்லை இருந்து வருவது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) சென்னை மாநகரில் உள்ள சாலைகளில் கால்நடைகள் பாரியாய்த் திரிவது காணப்படுகின்றது. ஆயினும் இவற்றினால் போக்குவரத்துக்குக் கணிசமான அளவுக்கு இடையூறு ஏற்படுவதில்லை. சில நேரங்களில் கொஞ்சம் இடையூறுகள் ஏற்படவும் செய்கின்றன.

(இ) பாரியாய்த் திரியும் கால்நடைகள் வளைத்துப் பிடிக்கப்பட்டு, சென்னை மாநகரில் பல்வேறு காவல் நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ள கால்நடைப் பட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சென்னை மாநகர் காவல் துறைச் சட்டத்தின் 71-வது பிரிவின் (ix) பகுதியின் கீழ், கால்நடை உரிமையாளர்கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்படுகிற கால்நடை உரிமையாளர்கள் அபராதம் விதிக்கப்படுகின்றனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இதுபோன்ற கால்நடைகளை நகரங்களிலிருந்து ஐந்து அல்லது பத்து மைல் தூரத்திற்கு அப்பால் வைக்க வேண்டுமென்று சட்டத்தை இயற்றி அதன் காரணமாக கால்நடைகள் நகரத்திற்குள் வராமல் தடுத்திருக்கிறார்கள். அது போன்ற ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உரிமை கோரப்படாத கால்நடைகளை சென்னை நகரத்திற்கு வெளியே உள்ள கால்நடைப் பண்ணைக்கு அனுப்பி வைக்கலாமா என்று மாநகராட்சி மன்றம் யோசித்து, அதுபற்றி வெளியிலுள்ள அந்தப் பண்ணை நிர்வாகிகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. பதில் எதிர்பார்க்கப்படுகிறது. தக்க பதில் வந்த பிறகு கால்நடைகளை அங்கே அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். ஆறுமுகசாமி : இது வரையில் அம்மாதிரிப் பிடிக்கப்பட்ட கால்நடைகளைத் திரும்பக் காவல் நிலையத்திற்குக் கொண்டு போன பிறகு விட்டு விடப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அபராதம் வசூலிக்கப்பட்ட பிறகு விடப்படுகிறது. அப்படி ஆயிரக்கணக்கான ரூபாய் அபராதமாகவும் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** அன்-க்ளெய்ம்டாக (  ) இருந்த மாடுகள் சும்மா திருப்பி விடப்படுவதாக அறிகிறேன். அது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கால்நடைகளில் கன்றுகளாக உள்ளவற்றை அவ்வாறு பிடித்தால் அவற்றை எஸ்.பி.சி.ஏ. மூலமாக பெரம்பூருக்குப் பக்கத்தில் ஒரு பாதிரியார் நடத்துகின்ற மடாலயத்திற்கு 200 கன்றுகள் வரையில் அவர் வளர்ப்பதற்கு ஒப்புக்கொண்டிருப்பதால், அனுப்பப்படுகின்றன. வயதான மாடுகளுக்குச் சரியான போக்கிடம் இன்னும் கிடைக்கவில்லை.

**திரு. கே. ராஜாராம் :** உரிமம் பெறாத 'ஸ்ட்ரே காட்டில்' என்பவற்றிற்கு அபராதம் கட்டுகிறார்களே, அவர்கள் அந்த மாடுகளுக்குச் சொந்தக்காரர்களாகத் தானே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட மாடுகளை ஊருக்கு அப்பால் ஐந்து மைலுக்கு அப்பால் ஏதேனும் பண்ணை வைத்து அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உரிமம் கோரப்படாத மாடுகள் என்று சொன்னேன். அதற்குச் சொந்தக்காரர்கள் இல்லாத என்றுதான் பொருள். அந்தப் பொருளில்தான் சொன்னேன். சொந்தக்காரர்கள் இருந்தாலும், அபராதம் குறைவாக இருப்பதால், 50 காசு ஒரு ரூபாயாக இருப்பதால் வெள்ளாடு, செம்மறி ஆடு, பன்றிகளுக்கு 50 காசும் மற்றவைகளுக்கு ஒரு ரூபாய் என்றும் இருப்பதால் அதைக்கட்டி மீட்டுக்கொண்டு போய் மறுபடியும் விட்டுவிடுகிறார்கள். சொந்தக்காரர்களுக்கு அக்கால்நடைகளைப் பராமரிக்கத் தகுந்த தொழுவமோ வேறிடமோ இல்லை. அதனால் வெளியே விட்டுவிடுகிறார்கள். ஒரு ரூபாய்தானே என்று செலுத்திவிடுகிறார்கள். முதலில் உரிமம் இல்லாத, சொந்தக்காரர்கள் இல்லாத கால்நடைகளைப் பிடித்து வெளியில் உள்ள பண்ணைக்கு அனுப்ப மாநகராட்சி மன்றம் யோசித்து வருகிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** உரிமம் கோரப்படாத கால்நடைகள் இப்போது அரசாங்கப் பொறுப்பில் எத்தனை இருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எத்தனை தேவை என்று சொன்னால், கணக்குப் பார்க்கலாம்.

## *Complaints pending in the office of the Director of School Education, Madras*

*54 Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the details of the complaints pending in the Office of the Director of School Education, Madras referred to it by the complaints cell of the Secretariat; and

(*b*) the stage at which the matters stand at present ?

**பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் முடிவுபெறாமல் உள்ள புகார்கள்**

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைமைச் செயலகப் புகார்ப் பிரிவு, பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி, அவரது அலுவலகத்தில் முடிவுபெறாமல் உள்ள புகார்களின் விவரங்கள் யாவை?

(இ) இவை தற்போது எந்த நிலையில் உள்ளன?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) மேலவையின் முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** பள்ளிக் கல்வி இயக்குநருக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டு அனுப்புகிற புகார்களுக்கு பதில் எழுத வேண்டுமென்ற விதிமுறை வைத்தால், பல பிரச்னைகள் தீருவதற்கு வழியாகும். இதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையிலும், அனுப்பப்படுகிற அத்தகைய கடிதங்களுக்கு உடனடியாக பதில் எழுத வேண்டுமென்ற குறிப்பு அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிடும் விஷயம் என்ன நிலையில் இருக்கிறது, அது நடக்குமா நடக்காதா என்பதையும் காலத்தாழ்வு ஏற்படுமென்றால், உடனே சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் அதைப் புரிந்துகொள்வார்கள். அதைச் செய்ய வேண்டுமென்ற குறிப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எம். ராஜா அய்யர் :** இங்கே குறிப்பிடப்பட்டுள்ள 31 முறையீடுகள், பென்ஷன் கொடுக்கவில்லை, சம்பளம் கொடுக்கவில்லை, காலதாமதமாகிறது என்றுதான் இருக்கின்றன. இவையெல்லாம் முறையீட்டுக் கழகத்திற்கு வந்த புகார்களாகும். இதைத் தவிர கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு நூற்றுக்கணக்கான புகார்கள் வந்திருக்கக் கூடும். அவற்றைப் பற்றிய புள்ளி விவரம் தம்மிடம் இருக்கிறதா? குறிப்பாக ஓய்வூதியம், ஊதியம் சம்பந்தப்பட்ட புகார்கள் சம்பந்தமாக, குறிப்பிட்ட கால வரையறைக்குள்ளாக, இரண்டு மாதங்களுக்குள்ளாக, கல்வி இயக்குனர் முடிவெடுத்து அறிவிக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கல்வி இயக்குனர் அலுவலகத்திலும் புகார்கள் வருகின்றன. அவற்றின் மொத்த எண்ணிக்கை சொல்வதற்கில்லை. குறிப்பிட்ட குறிப்புகளைக் கேட்டதால், அவை தரப்பட்டிருக்கின்றன. ஓய்வூதியத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே இருந்த காலத்தாழ்வு ஓரளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எப்போது ஓய்வு பெறுகிறார்கள் என்பதை முன்கூட்டியே கண்டு ஐந்தாறு திங்களுக்கு முன்னால் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து ஓய்வு பெற்றவுடனேயே ஓய்வூதியம் வழங்கும் அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** முன்னால் உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், பள்ளிக் கல்வி இயக்குனருக்கு எழுதுகிற கடிதங்களுக்கு பதில் வருவதில்லை. பொதுவான விஷயத்தைப்பற்றி எழுதினாலும் பதில் வருவதில்லை. நானும் ஒரு இறந்த ஆசிரியருடைய மனைவிக்கு உதவித் தொகை தருவது சம்பந்தமாக மூன்றுமுறை கடிதம் எழுதி அதற்குப் பதில் எழுதப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்காவது கட்டாயமாகப் பதில் அனுப்ப வேண்டுமென்ற ஏற்பாட்டை அரசு உடனடியாகச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலில் குறிப்பிட்டபடி, சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்கு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் இருக்கிற நிலைமைக்கு உடனடியாகத் தகவல்

---

* Printed as Appendix III on pages 272–278

[29th January 1972

அனுப்ப வேண்டுமென்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பிறகு தெரிவிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தகவல் வராமலிருந்தால் அதை அரசு கவனித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. எஸ். முத்துசாமி: இந்த விவா அறிக்கையில், பல தகவல்கள் மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து தலைமைக் கல்வி அலுவலகத்திற்கு வரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கிற எழுத்தர்கள் குறைந்து விட்டதால், இது போன்ற தாமதம் ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா? அறிந்திருந்தால் கிளார்க்குகளை அதிகமாகப் போட்டு அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: காலத்தாழ்வுக்கான காரணங்கள் என்ன என்பது புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போன்ற காரணமாக இருந்தால், அது தனியாகக் கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படவேண்டியதாகும். ஆனால் எல்லாவற்றிற்கும் அதுதான் காரணமாக இருக்குமென்று சொல்வதற்கில்லை. பொதுவாகவே இதில் ஏற்படும் நிலைமை மற்றவை பற்றி சுற்றறிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குனருக்கும் கல்லூரிக் கல்வி இயக்குனருக்கும் விடப்பட்டிருக்கின்றன.

## Temple Tanks

* 55 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Corporation of Madras has taken a number of temple tanks in Madras on lease; and

(b) if so, the details thereof?

### கோவில் குளங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள கோவில் குளங்கள் பலவற்றை சென்னை மாநகராட்சி குத்தகைக்கு எடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மைலாப்பூர் ஆதிகேசவபெருமாள் கோயில் நம்பகர்களின் கோரிக்கையின்பேரிலும், பொது மக்களின் நலத்தை முன்னிட்டும், மைலாப்பூரில் உள்ள சித்திரக்குளத்தைச் சென்னை மாநகராட்சி ஆண்டுதோறும் பெயரளவு வாடகையாக ரூ. 1-க்கு 1953 முதல் 99 ஆண்டுக்கு குத்தகைக்கு எடுத்துள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தக் குளங்களை நிர்வகிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து மாநகராட்சி மானியம் ஏதும் பெற்றுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சுகாதார நிலையம்போன்று தண்ணீரைத் தூய்மைப் படுத்துதல், பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது. குளம் பழுதுபட்டிருப்பதால், சரிப்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டம் வகுத்து, ரூ. 66,500



29th January 1972]

மதிப்பீட்டில் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அறநிலையப் பாதுகாப்புத் துறையை மாநகராட்சி கேட்டிருக்கிறது. அது அறநிலையப் பாதுகாப்புத் துறையின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

## Secondary Education Board

* 56 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have constituted a Secondary Education Board in the State; and

(b) if so, the details thereof?

### இடைநிலைக் கல்வி வாரியம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இடைநிலைக் கல்வி வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். மாநில இடைநிலைக் கல்விக் குழு 25—10—1971 நாளிட்ட 1828 என்னுள்ள அரசாணையின்படி (நிலை) திருத்தி அமைக்கப்பட்டு பணியாற்றி வருகிறது.

(இ) இக்குழு பதினேழு நபர்களைக் கொண்டது. அவர்கள் கீழ்க்கண்ட சார்பிற்கு பிரதிநிதியாவார்:—

| | |
|---|---|
| அரசு அதிகாரிகள் (அலுவலால் உறுப்பினர்) | 5 |
| மதுரைப் பல்கலைக் கழகம் | 2 |
| அண்ணாமலை பல்கலைக் கழகம் | 1 |
| ஆசிரியர் சார்பில் | 2 |
| நிர்வாகத்தினர் சார்பில் | 3 |
| சென்னைப் பல்கலைக் கழகம் | 4 |

இது சட்டரீதியற்ற ஒரு குழுவாகும். பள்ளிக் கல்வி இயக்குநரே இதன் தலைவர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த வாரியத்தில் சட்டப் பேரவை, சட்டமன்ற உறுப்பினர்கள் எவரும் இடம் பெறவில்லை என்று அறிகிறேன். அதற்குக் காரணம் என்ன என்பதையும் அவர்கள் ஒருவர் இருவர் இதில் இருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் சொல்லி அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கென்று தனி விதிமுறை இருக்கிறதா இல்லையா என்று தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அறிந்து சொல்ல முடியும். அதில் சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறச் செய்ய இயலுமா இயலாதா என்று தெரியவில்லை. அந்தக் கருத்தை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : இடைநிலைக் கல்வி வாரியம் ஆண்டுக்கு எத்தனை முறை கூடுகிறது? இதற்கு முன் இருந்த வாரியம் கூடவேயில்லை என்ற புகார் அரசிற்கு வந்திருக்கிறதா? ஆண்டுக்கு இத்தனை முறை கூடவேண்டுமென்ற விதியிருக்கிறதா? அது அனுஷ்டிக்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் குழுவின் காலம் 3 ஆண்டு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டுக்கு இத்தனை முறை கூட வேண்டுமென்ற விதிமுறை இருக்கக் கூடும். இதற்கு முன்னால் சரியாகக் கூடாமல் இருந்தது. அப்படியிருக்கக் கூடாது என்றுதான் திருத்தியமைக்கப்பட்டு அதன் பணிகள் செம்மையாக ஆற்றப்பட வேண்டுமென்ற அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether the subject of reforms in the educational system in so far as secondary education is concerned, are placed before this Board for its advice or whether the Board has any other functions ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக இடைநிலைக் கல்வி பற்றி, பொதுவான பிரச்னைபற்றி, அவ்வப்போது ஆலோசனை கூறுவதற்குத் தான் இந்தக் குழு இருக்கிறது. சிலபஸ் மற்றவைகளுக்கு தனிக் குழுக்கள் தனித்தனியாக அமைத்து அந்தந்தத் துறைக்கு உரிய வல்லுநர்களும் சிறப்பன்னர்களும் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் ஆராய்கிறார்கள். அந்த சிலபஸ் எல்லோருடைய பரிசீலனைக்கும் வைக்கப்பட்ட பிறகு நடைமுறைப்படுத்தும் முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## *Tailoring Instructor*

• 57 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the qualifications prescribed for tailoring instructors serving in Secondary Schools; and

(*b*) whether any such qualified tailoring instructor serving in the Virudhunagar Educational District, has been denied his salary as unqualified ?

## தையற்கலை ஆசிரியர்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் தையற்கலை ஆசிரியர் பதவிகளுக்கு வரையறுக்கப்பட்ட தகுதிகள் யாவை?

(இ) விருதுநகர் கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் அத்தகைய தகுதியுடைய தையற்கலை ஆசிரியர் யாருக்கேனும், அவர் தகுதியற்றவர் என்ற காரணம் காட்டப்பட்டு ஊதியம் மறுக்கப்பட்டதா?



(Electric Motor Pump)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) பொதுத் தொகுதி ; எட்டாம் வகுப்பு அல்லது எஸ். எஸ். எல். சி. தேர்வு அல்லது சமமான பகுதி.

தொழில் நுட்பத் தகுதி : (i) தொழில் பள்ளி சான்றிதழ்

அல்லது

(ii) அரசு தொழில் நுட்பத் தேர்வு (கீழ்நிலை)

அல்லது

(iii) இந்திய அரசின் வேலை வாய்ப்பு மற்றும் மறு குடியமர்த்தல் இயக்கத்தினர் வழங்கும் சான்றிதழ்

அல்லது

(iv) இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற பயிற்சி முறைகள்.

(இ) இல்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, விருதுநகர் கல்வி மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கிற தனியார் உயர்நிலைப் பள்ளியில் தையல் ஆசிரியர் இந்தத் தகுதிகள் எல்லாம் பெற்றிருந்தும் அவருக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்ற புகார் அரசிற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விருதுநகர் கல்வி மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சி.எம்.எஸ். உயர்நிலைப் பள்ளியில் தையல் ஆசிரியராகப் பணியாற்றிய ஒருவருக்கு அதற்குத் தகுதியில்லாததால், விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அது தவறு என்று பள்ளித் தணிக்கையில் குறிப்பிடப்பட்டதால், 1969 டிசம்பர் மாதம் முதல் அவருடைய ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த நிலைமை சரி செய்யப்பட்டு அவருக்குச் சம்பளம் கொடுக்க 7—4—1971-ல் உத்தரவு போடப்பட்டது. நிறுத்திவைக்கப்பட்ட சம்பளம் கொடுக்கப்பட்டதாகவும் நிலுவை எதுவும் இல்லையென்றும் பள்ளிக் கல்வி இயக்குனர் தெரிவித்தார்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்தை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவந்ததற்குக் காரணம் ஒருவர் தகுதி பெற்றிருந்தும் கூட அவர் தகுதி பெறவில்லையென்று காரணம் காட்டி பல மாதங்கள் சம்பளம் கொடுக்காமலிருந்ததைப் பற்றி அரசு விசாரித்து ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்று அந்த அதிகாரிகளிடம் "எக்ஸ்ப்ளனேஷன்" வாங்க அரசு முன்வர வேண்டும். அதைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தணிக்கை அதிகாரி அப்படிக் குறிப்பிட்டிருந்ததன் காரணமாக கல்வித் துறையினர் நிறுத்தி வைத்தார்கள். பிறகு ஆராய்ந்த வகையில் அது திருத்தியமைக்கப்பட்டு ஊதியம் கொடுக்கப்பட்டது. இதுபற்றித் தனி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. கே. ராஜாராம்: தவறான தணிக்கை ரிபோர்ட் கொடுத்த அந்த அதிகாரியின் பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? இம்மாதிரி

[29th January 1972

தவறான அறிக்கையினால் ஒரு ஆசிரியர் குடும்பம் பல மாதங்கள் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தணிக்கை அதிகாரி அப்படி அறிவித்திருந்தார். அதன் பேரில் நிறுத்திவைக்கப்பட்டது. பிறகு பள்ளிக் கல்வி இயக்குனர் அவர்கள் உத்தரவிட்டு மீண்டும் சம்பளம் கொடுக்கப்பட்டது என்ற விவரமிருக்கிறது. வேறு வகையில் அதற்கு "எக்ஸம்ப்ஷன்" கொடுத்துத் திருத்தினார்களா என்ற விவரமில்லை. உண்மையிலேயே தணிக்கை அதிகாரி தவறாகச் சொல்லியிருந்தால், அதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

### *Office of the Commissioner for Government Examinations, Madras*

* 58 Q.—THIRU D. SANTOSHAM :
THIRU M. RAJAH IYER : Will the Hon. the
THIRU V. ISVARMURTI :
Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the proposal to decentralise the office of the Commissioner for Government Examinations, Madras, as recommended by the Working Committee headed by the Hon. Minister for Education is still pending; and

(b) if so, the stage and the steps taken to fulfil the recommendation of the Committee ?

அரசினர் தேர்வுகள் ஆணையர் அலுவலகம்.

திரு. டி. சந்தோஷம் :
திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி
திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :
நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாண்புமிகு கல்வி அமைச்சர் தலைமையிலுள்ள செயற்குழு செய்த பரிந்துரையின்படி சென்னை, அரசினர் தேர்வுகள் ஆணையர் அலுவலகத்தின் அதிகாரங்களைப் பரவலாக்கும் திட்டம் ஏதேனுமுண்டா ?

(இ) ஆமெனில், இக்குழுவின் பரிவுரையை நிறைவேற்றும் பணி எந்நிலையில் உள்ளது ? அவ்வாறு நிறைவேற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளின் நிமித்தம், தேர்வு ஆணையர் அலுவலகத்தைப் பிரிப்பது கைவிடப்பட்டது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இப்போது இம்மாதிரிப் பரிட்சைக்கு உட்காரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஒரேயிடத்தில் தேர்வுக் கமிஷனர்



29th January 1972]

Commissioner for Examinations அலுவலகம் இருப்பதை மூன்று பிராந்தியங்களில் பிரித்துவைப்பது நல்லது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா ? அப்படி அந்தந்தப் பிராந்தியங்களில் இருந்து வருகிறவர்கள் அவர்களுடைய மார்க்குகளைத் தெரிந்துகொள்வதற்கு அல்லது அணுகுவதற்கு ஏற்ற நிலையில் டெபுடி கமிஷனர் அந்தஸ்தில் அதிகாரிகளை நியமித்து ரீஜனல் சென்டர்கள் மூன்றாவது ஏற்படுத்தி, அந்த இலாகாவில் டி-சென்ட்ரலைசேஷன் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு துணை அலுவலகம் மதுரையில் வைக்கலாமா என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டது. இங்கே ஒரு ஆணையாளரும் அங்கே ஒரு துணை ஆணையாளரும் வைப்பதன் மூலமாக அந்தப் பணியை இரண்டிடங்களில் வைப்பதை ஆராய்ந்த வரையில் செலவு அதிகமாக இருக்கும் என்பது ஒரு பக்கமிருந்தாலும், ஆணையாளரும் துணை ஆணையாளரும் அவ்வப்போது கூடிக் கலந்து பேசி நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால், ஒரே இடத்தில் இருப்பது நல்லது என்ற முடிவுக்கு வந்தார்கள். தேர்வு நடத்துகிற ஆணையாளர்களைப் பொறுத்தவரையில், பல வகையாகப் பிரித்தாலும், ஒரே இடத்தில் வைத்தாலும், அவர்களது பணி ஒரே வகையாக அமைந்திருக்கிறது. அதை "டிஸ்ட்ரிபியூட்" செய்வதால் தனிப் பலன் எதுவும் ஏற்படப்போவதில்லை. தற்போது அந்த எண்ணம் கைவிடப்பட்டு, தற்போது இங்கேயே வைக்கப்பட்டு, சிலபல தொழிற் நுட்ப தன்மைகளைப் பொறுத்த வரையிலும், சுருக்கெழுத்து மற்ற தன்மைகளில் உள்ள தேர்வுகள் எல்லாம் தொழில்நுட்பக் கல்வி துறைக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இப்போது அவர்களே நடத்துகிறார்கள். இவற்றைப் பிரித்து வைத்தால், பலன் ஏற்படும் என்று தெரிந்தால், பிறகு பரிசீலிக்கலாம். தற்போது அந்த எண்ணம் இல்லை என்பதால் கைவிடப்பட்டிருக்கிறது.

### *Train Services from Mettupalayam to Ootacamund*

* 62 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government are aware of the fact that the train services from Mettupalayam to Ootacamund are to be cancelled by the Central Government; and

(b) whether the State Government will take steps to continue the train service ?

மேட்டுப்பாளையம்-உதகை புகைவண்டி

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி செல்கிற புகை வண்டியை மத்திய அரசு நிறுத்தப் போவதை அரசு அறியுமா ?

(இ) அதைத் தொடர்ந்து நடத்த மாநில அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆதாயமில்லாத எந்தப் பாதையையும் அகற்றுவது தங்கள் விருப்பம் அல்ல என்று 5—7—1969 தேதியன்று மாநில அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பொழுது மைய அரசினால் அமைக்கப்பட்ட ஆதாயமில்லாத கிளை இருப்புப்பாதைகளின் குழுவின் தலைவர் தெளிவு படுத்தியிருக்கிறார்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[29th January 1972

### Unemployed Engineering Graduates

* 63 Q.—THIRU G. SWAMINATHAN and THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of unemployed engineering graduates in the State as on date; and

(b) the steps taken by the Government to solve their unemployment problem ?

### வேலை கிடைக்காத பொறியியற் பட்டதாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இன்றுவரை வேலை கிடைக்காத பொறியியற் பட்டதாரிகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்களது வேலையில்லாச் சிக்கலைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 2,822 (30—9—1971 அன்று உள்ளபடி).

(இ) வேலையற்றிருக்கும் பொறியாளர்களுக்கு ஓரளவு வேலை வாய்ப்பு வசதியளிக்க அரசு அண்மையில் பாசன மின்சக்தித்திட்டங்களை ஆய்வு செய்யும் பணியையும் நிறைவேற்றும் பணியையும் மேற்கொண்டுள்ளது. அத்துடன் 600 பொறியியல் பட்டதாரிகளுக்குத் தொழில் பழகுவோர்க்குரிய பயிற்சியளிக்கும் திட்டம் 1970 அக்டோபரில் அரசு ஒப்புதல் பெற்றுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : கடந்த 3, 4 ஆண்டுகளாக வேலையில்லாத பொறியியற் பட்டதாரிகள் தொகை அதிகரித்து வருகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சொல்லாமலே அது விளங்கும்.

### Rural Housing Scheme

* 64 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Union Government have undertaken the entire cost of Rural Housing in this State; and

(b) if so, the details thereof ?

### கிராமப் புற வீடு கட்டும் திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?



29th January 1972]

மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) & (இ) இல்லை. எனினும் இந்திய அரசு கிராமப்புறங்களில் வீட்டு மனை இல்லாத தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்க ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு 100 சதவீதம் மானியமாக, மாநில திட்ட வரம்பிற்கு புறம்பாக, மாநிலங்களுக்கு சில நிபந்தனையின்கீழ் வழங்கும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, மாநில அரசு கிராமப்புற வீடு கட்டும் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : மாநில அரசுதான் இந்தக் கிராமப்புறங்களுக்கான திட்டத்தை வரைமுறையாகச் செய்து வருகிறது. மத்திய அரசு உதவியும் வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்தில் அந்தந்தக் கிராமத்தில் எவ்வளவு ரூபாய் அதிகபட்சம் ஒரு வீட்டுக்குச் செலவழிக்க வேண்டியிருக்கும் ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : இந்தத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வீடு, வீட்டுமனை இல்லாத ஒருவருக்கு வீட்டு மனைக்கு 100 சத விகிதம் மானியமாகத் தந்து இலவசமாக வழங்கலாம் என்று மத்திய அரசுத் திட்டம் சொல்லியிருக்கிறது. 100 சதுர கெஜத்திற்கும் அதிகமில்லாத அளவு நிலம் தருவதாகவும் அதற்கு ரூ. 150 வரையிலும் செலவு செய்யலாம் என்றும் அந்தத் திட்டத்தில் குறித்திருக்கிறார்கள்.

### South Madras Neighbourhood Scheme

* 65 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Backward Classes, be pleased to state—

(a) whether it is a fact that compensation has not yet been paid to owners, from whom lands were acquired in the year 1962, for the South Madras Neighbourhood Scheme ;

(b) if so, the reasons therefor; and

(c) the action proposed to be taken by the Government in the matter ?

### தென் சென்னை புறநகர் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் சென்னை புறநகர் திட்டத்திற்காக 1962-ஆம் ஆண்டு கையகப் படுத்தப்பட்ட நிலங்களின் சொந்தக்காரருக்கு இழப்பீட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

[29th January 1972

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, புறநகர்த் திட்டத்தில் 1962-ல் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் உள்ளவர்கள் பலருக்கு இன்னும் பணம் கிடைக்கவில்லை, செங்கற்பட்டு சப்-கோர்ட்டில் அவை வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: நிலத்திற்குத் தரப்படவேண்டிய தொகையை சர்க்கார் கோர்ட்டில் செலுத்திவிட்டது. ரெவின்யூ டெபாசிட்டில் வைத்து அதன் மூலமாக நிலச் சொந்தக்காரர்கள் பெற்றுவிட்டார்கள். நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலம் தங்களுக்கு எந்த முறையில் உரிமையுள்ளது என்பதை நீதி மன்றத்திற்கு வந்து நிரூபித்துத்தான் நில ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கும் எங்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: இழப்பீட்டுத் தொகை எவ்வளவு ரூபாய் அரசு செலுத்தியிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: இழப்பீட்டுத் தொகை 5 சதவிகிதம் சராசரி விலையில் மதிப்பிட வேண்டுமென்றும் சொலேஷியம் சராசரி 5 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்றும் நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த விஷயம் கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. க. ராசாராம்: அந்த நிலங்களை ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடுவதால், நிலத்திற்கான தொகை ரெவின்யூ டெபாசிட்டிலும் கோர்ட்டிலும் கட்டப்பட்டது. கோர்ட் மூலமாகப் பெற்றுக் கொள்கிறார்கள்.

*Government High School, Paganeri*

* @ 5 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Education and Local Admministration be pleased to state whether it is a fact that the electric motor pump-set purchased for the use of Government High School, Paganeri, Ramanathapuram District, has been kept idle for the last six years for want of power connection?

பாகனேரி அரசினர் உயர்நிலைப் பள்ளி

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இராமநாதபுரம் மாவட்டம் பாகனேரி அரசினர் உயர்நிலைப் பள்ளி உபயோகத்திற்கு வாங்கிய, மின்சார தண்ணீர் இறைக்கும் சாதனம் (Electric Motor Pump) மின் இணைப்பு இல்லாத காரணத்தால் கடந்த 6 ஆண்டுகளாக உபயோகமற்று இருப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம், மின் இணைப்பு வசதியைச் செய்து தர நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டுவிட்டது.

---

@ Postponed from the list of questions for 24th January 1972.



29th January 1972]

*Lalitha Kala Academy*

* @ 6 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the assets and liabilities of the Lalit Kala Academy have been settled; and

(*b*) if so, the details thereof?

லளித கலா அக்காடமி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) லளித கலா அக்காடமியின் இருப்புகளும் பொறுப்புகளும் முடிவு கட்டப்பட்டுவிட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம். தமிழ் நாடு மாநில லளிதகலா அகாடமி (கலின்கலைக் கழகம்) தற்போது செயலில் இல்லை. அகாடமியின் சொத்துக்களுக்கு சட்டபூர்வமாக உரிமைகோருபவர் யாருமில்லை. இந்திய அரசியலமைப்பின் 296வது பிரிவின்கீழ் காலக் கழிவு (Lapse) அரசு உறுபொருள் (escheat) அல்லது தகுந்த உரிமை கோருபவர்கள் எவரும் இலாமை (bona vacantia) காரணமாக சொத்து ஒன்று அரசைச் சேர்ந்துவிடும். அதாவது ஒரு சொத்துக்குச் சட்டபூர்வமாக உரிமை கோருபவர் இல்லாவிடில் அச்சொத்து அரசின் உடைமையாகிவிடும். அதன்படி இந்திய ஸ்டேட் வங்கியில் அகாடமியின் பெயரில் இருந்த ரூ. 253.93 மாநில அரசுக்கணக்கில் வரவு வைக்கப்படுமாறு ஆணையிடப்பட்டது. பின்வரும் இயங்கும் சொத்துக்களும் மாநில அரசிடம் உரிமை நிலைபெற வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. ஓவியங்கள், சிற்பங்கள், மட்பாண்டப்பொருட்கள், மேசை நாற்காலிகள், பிற கருவிகள், எழுது பொருள்கள், சஞ்சிகைகள், நூலக நூல்கள் முதலியன.

திரு வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, இந்த லளித கலா அகாடமியை மூடிவிட்ட காரணத்தால், ஓவியம் பயிலும் மாணவர்களின் படங்களை ஆண்டு தோறும் காட்சிக்கு வைத்து பரிசுகள் வழங்கும் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த முடியாமலிருக்கிறது என்பதையும், இந்த அகாடமியை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் மனதில் கொண்டு இதைப் புதுப்பிக்க, உயிர்ப்பிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த அகாடமியை—கலைக் கழகத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்ற முயற்சியினை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அதற்கான வரைவுக்குறிப்பைத் தயாரிக்கும்படி கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். மத்திய அரசும் இதை ஒரு சென்டர் ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு, அதற்காக ரூ. 1,80,000 அளவில் ஒரு திட்டமும் தீட்டி, அதில் 50 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும், மீதி 50 சதவிகிதத்தை

---

@ Postponed from the list of questions for 24th January 1972.

[29th January 1972

மத்திய லளித கலா அகாடமி ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறது. இதற்காக இங்கே ஒரு ஏக்கர் நிலம் கேட்டு, அதையும் வழங்க அரசு முன்வந்திருக்கிறது. அப்படிப்பட்ட அக்காடமி போன்ற அமைப்பு உருவாக வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த அகாடமி என்ன பணியைச் செய்து வருகிறது, இது எந்தப் பொருளாதாரத்தைக் கொண்டு இயங்குகிறது, என்ன செய்வதற்கு இதைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சாகித்ய அகாடமியைப் போன்றது தான் இந்த அகாடமியும். சாகித்ய அகாடமி இலக்கியங்களைப் பற்றியது; இந்த லளித கலா அகாடமி என்பது ஃபைன் ஆர்ட்ஸ் என்ற கவின் கலைகளைப் பற்றியது. இதன் பெயரைக் கூட 'கவின் கலைக் கழகம்' என்று மாற்றியமைக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், இது பலருக்குப் புரியாமல் இருக்கிறது. ஆதலால் கவின் கலைக் கழகம் என்று வைத்து, சிற்பம், ஓவியம் ஆகியவற்றில் வல்லுநர்களை ஊக்குவிக்கவும் அவர்களுடைய சிறந்த படங்கள் படைப்புக்களுக்குப் பரிசு வழங்கவுமான பணிகளை ஏற்கும். ஓவியம், சிற்பம் போன்ற கலைகளுக்கு நலந்தரும் கருத்துக்களை வகுக்கவும் இந்த அமைப்பு பயன்படும்.

திரு. எஸ். முத்துசாமி: தலைவரவர்களே, இந்த 'லளித கலா அகாடமி' யைத் தமிழ்ப்படுத்தியதுபோல், இதுபோன்று புரியாத சங்கங்களின் பெயர்களையும் தமிழ்ப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவ்வப்போது எவ்வெவற்றைத் தமிழ்ப்படுத்தி புரியும் அளவில் ஆக்க முடியுமோ, அந்த முறையில் ஆக்கிக்கொண்டு வருகிறோம்.

### *Attestation from Gazetted Officers*

* @ 7 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the difficulties of candidates seeking admission into Government Educational Institutions in procuring attestation from Gazetted Officers; and

(b) if so, the action taken thereon?

அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளிடமிருந்து சான்றொப்பம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் மாணவர்கள், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து சான்றொப்பம் பெறுவதில் இடர்பாடுகளுக்குட்படுகின்றனரென்பதை அரசு அறியுமா?

@ Postponed from the list of questions for 24th January 1972.



29th January 1972]

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. இது குறித்து முறையீடுகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### *Photos of candidates seeking admission into the colleges*

* @ 8 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the fact that some private colleges insist on photos of candidates seeking admission into their colleges; and

(b) if so, whether the same practice will be followed in Government Educational Institutions also?

தனியார் கல்லூரிகளில் சேர புகைப்படங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் கல்லூரிகளில் சேர இடம் வேண்டி விண்ணப்பிக்கும் மாணவர்களிடம் அவர்களது புகைப்படங்களைச் சில கல்லூரிகள் கேட்கின்றன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இத்தகைய நடைமுறை அரசுக் கல்வி நிறுவனங்களிலும் பின்பற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) அரசுக் கல்லூரிகளில் இம்முறையைப் பின்பற்றுவதற்கான செயற்குறிப்பு எதுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர்வர்களே, எந்தக் காரணத்துக்காக இந்தப் புகைப்படங்கள் தனியார் கல்லூரியில் கேட்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. எந்தக் கல்லூரியில் கேட்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை. புகைப்படம் கேட்கக் கூடாது என்றும் இல்லை, கேட்கலாம் என்றும் இல்லை. எந்தக் கல்லூரியிலாவது கேட்கிறார்களா என்ற விவரக் குறிப்பு இல்லை. அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்த வரை, புகைப்படம் வேண்டும் என்ற உத்தரவு எதுவுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மாணவர்களுக்குப் பதிலாக மற்றவர்கள் பரிட்சை எழுதுகிறார்கள் என்பதற்காகப் புகைப்படங்களைக் கேட்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அப்படி ஆள் மாறாட்டம் ஏதாவது நடந்திருக்கிறதா?

@ Postponed from the list of questions for 24th January 1972.

[29th January 1972

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தேர்வைப் பொறுத்த வரை புகைப் படம் கேட்கிற முறை வந்தால், நல்லது தான். ஆள் மாருட்டம் நடக்கிற கேஸ்கள் ஆங்காங்கு ஒன்றிரண்டு நடக்கின்றன. வேறு பல மாநிலங்களில் இது அதிகமாக நடக்கிறது. தேர்வுகளுக்கு அந்த முறை வந்தால், நிலைமையைச் செம்மைப்படுத்தப் பயன்படுவதாக இருக்கும். இப்போது அப்படிப் பட்ட ஆணைகள் எதுவும் பிறப்பிப்பதாக இல்லை.

*Tamil Nadu Graduates Teachers' Association*

* @ 9 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Tamil Nadu Graduate Teachers' Association has represented to the Government during March-April, 1971 about refixation of their scales of pay;

(b) if so, whether the representation has been examined; and

(c) the action taken thereon ?

*தமிழ்நாடு பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கம்*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் தனது ஆசிரியர்களின் சம்பள விதங்களை மறுநிர்ணயம் செய்யுமாறு 1971-ஆம் ஆண்டு மார்ச்சு-ஏப்ரல் திங்களில் அரசுக்கு முறையீடு ஏதும் செய்ததா ?

(இ) ஆமெனில், அந்த முறையீடு பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இத்தகைய கோரிக்கை வந்துள்ளது. நிதி நிலைமையை மனதில் கொண்டு இது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்தக் கோரிக்கையின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் உறுதிமொழிகள் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தினர் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் அனுதாபத்துடன் கவனிக்கும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட தன் உரையிலே குறிப்பிட்டார்கள். பல கேடிகரிகளாகப் பிரித்துத்தான் இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. இதே "கேடிகரி" அடிப்படையில் இன்னும் பலர் வருகிறார்கள். ஒரு கேடிகரியைப் பொறுத்த வரை, ஊதியத்தை உரிர்த்துகிற சூழ்நிலை ஏற்பட்டால், எல்லா கேடிகரிக்கும் உயர்த்த வேண்டுமென்ற சங்கடம் ஏற்படுகிறது.

---

@ Postponed from the List of Questions for 24th January 1972



29th January 1972]

நிதித்துறை இந்த ஆட்சேபணையை எழுப்பிக்கொண்டிருக்கிறது. இதில் வேறு என்ன செய்யலாம் என்று பரிசீலனை இருந்து வருகிறது. சங்கடங்கள் தீருகிற நிலைமை ஏற்பட்டால்தான், இதற்கு வழி காண முடியும்.

THIRU A. R. DAMODARAN : Sir, has any communication been sent by the Government saying that the consideration has been completed and that the demands of the Graduate teachers cannot be met ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட குறிப்பு எதுவும் அனுப்பப்பட்டதாகத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் கொடுக்க முடியும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அது மிகவும் நம்பிக்கையூட்டக்கூடிய பெருஞ்செய்தியாக இருக்கிறது.. ஏனென்றால் இப்போது ஆசிரியர்கள் சமூகத்தில் ஒரு அரசு ஆணை கொடுக்கப்பட்டு அதிலே, கீழ்க்கண்ட ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினை தீர்ந்து விட்டது, மறு பரிசிலனை செய்வதற்கு இடமேயில்லை என்று கூறி, அதில் முதலாவதாக இந்தப் பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்னை திர்ந்து விட்டதாகவும் மறு பரிசீலனைக்கு இடமில்லை யென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் அவர்கள் பெரிதும் மனம் நொந்துபோயிருக்கிறார்கள். இப்போது அந்தக் கோரிக்கை மறு பரிசிலனை செய்யப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய செய்தியை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Supplementaries must be short.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அனுப்பப்பட்டிருக்கிற அதனையும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் சொன்னதையும், ஆக இரண்டையும் சேர்த்துப் பரிசீலிக்க அரசு தயாராயிருக்கிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : 25—12—1971 அன்றைய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில், இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு விட்டதாகவும், இதில் நியாயம் எதுவும் இல்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறது அந்த உத்தரவிலே, என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றிக்கூடக் கவலையில்லை. மீண்டும் இதை அரசாங்கம் பரிசீலிக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் ; அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விரைவிலே பரிசீலித்து, ஒரு நல்ல சாதகமான முடிவை அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நன்றி தெரிவித்த பிறகு, மறுபடியும் என்னிடத்திலிருந்து பதில் எதிர்பார்ப்பது வேடிக்கையாக இருக்கிறது. நன்றி தெரிவித்ததற்கு அடையாளமாக, தொடர்ந்து எந்தவிதக் கிளர்ச்சியும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பொறுப்புள்ளவர்கள் கடமையாகும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ADJOURNMENT MOTION *re* STRIKE IN THE B. & C. MILLS AT MADRAS.

MR. CHAIRMAN : Thiru M. Arumugaswami has given notice of an adjournment motion regarding the serious situation arising out of the strike in B & C Mills at Madras involving a large number of workers from 25th January 1972. The hon. Member will now briefly explain the position.

*திரு. எம். ஆறுமுகசாமி :* தலைவரவர்களே, கடந்த 25-ஆம் நாளிலிருந்து சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். அவர்கள் தரப்பில் சொல்லப்படுகிற காரணம் எல்லாம்—வேஜ் போர்டு என்று சொல்லப்படுகிற சம்பள நிர்ணயக் குழு பஞ்சாலையில் இன்னின்ன பகுதியினருக்கு இன்னின்ன சம்பளம் என்று நிர்ணயித்திருந்தும்கூட, தமிழ் நாட்டில் இருக்கிற மிகப் பெரிய நூற்பு நெசவாலையான பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலை அதை அமுல் செய்யவில்லை என்பதாகும். இதற்காக அவர்கள் வேண்டுகோள் விடுத்தும் பொறுமையாக இருந்தும் ஏறத்தாழ பல மாதங்களாக அமைதியான முறையிலே கேட்டுவந்த பிறகும், அந்த நிர்வாகத்தினர் இசைந்துவராத சூழ்நிலையில் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருக்கிறார்கள். பெரும்பாலான தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; ஒரு பகுதியினர்தான் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. இந்த வேலைநிறுத்தத்தை முடித்து ஒரு சமரசம் காண்பதற்கு அங்கு ஏதாவது இடையூறு இருக்குமானால்—நான் கூட காலையில் சில நண்பர்கள் சொல்லக் கேள்விப்பட்டேன், அந்த இடையூறுகள் பெரும் அளவுக்கு அகற்றப்பட்டுவிட்டன என்று—அந்த இடையூறுகள் அகற்றப்பட்டுவிட்ட சூழ்நிலையில், தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பெற்று மீண்டும் வேலைக்குச் செல்லவும், அவர்கள் தங்களுடைய தொழிற் சங்கத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும், நல்ல முறையில் தேர்தல் நடத்தி தாங்கள் விரும்பும் நிர்வாகக் குழுவினரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவுமான சூழ்நிலையை உடனடியாக அரசு ஏற்படுத்த வேண்டும். அப்படி நடவடிக்கை மேற்கொள்ளத் தவறினால், சென்னையில் ஏற்கெனவே பலவிதக் குழப்பங்கள் இருந்து வருகிற நிலையில், அது சாதாரண தொழிற்சாலைகளிலிருந்து தற்காப்பு இலாகாவுக்குச் சொந்தமான தொழில் பகுதிகளுக்கும் தாவிவிட்ட நிலையில், அமைதி குலையும் ஆபத்து இருக்கிறபடியாலும், ஊரில் இதன் காரணமாக தொழிலாளர்கள் மத்தியில் பதட்ட நிலைமை இருப்பதாலும், அரசு உடனடியாகத் தலையிட்டு நல்ல முறையில் இந்த வேலை நிறுத்தத்தை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துவதற்காக இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இந்தப் பிரச்னையைப்பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The Hon. the Chief Minister will now state the viewpoint of the Government.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் இந்தப் பிரச்சினையை விரைவிலே பேசித் தீர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இது பேசித் தீர்க்கப்பட்டுவிட்ட பிரச்சினையானாலும், இது பற்றிய சில விவரங்களை நான் இங்கே கூற விரும்புகிறேன். கோரிக்கைகள்





என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது பி அண்ட் சி ஆலையிலே உருவான பிரச்சினை கோரிக்கைகளின் அடிப்படையிலே ஏற்பட்டதுகூட அல்ல; கோரிக்கைகளையும் வைத்தார்கள்; என்றாலும், அவை முக்கியமானவையாகக் கருதப்படவில்லை. அங்கே விரைவில் தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற ஒரு எண்ணம் ஏற்பட்டது.

ஏற்கனவே அதற்குத் தலைவராக இருந்தவர் இடையிலே பதவி விலகிவிட்ட காரணத்தினால், அந்த யூனியன் இரு பிரிவாக ஆகிவிட்ட நிலையில் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கணபதி என்ற நண்பர் தற்காலிகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கே தொழிலாளர்கள் கணபதி தலைமையில் அந்தத் தொழிற் சங்கத்தின் தேர்தல் எல்லாத் தொழிலாளர்களும் வாக்களிக்கின்ற வகையில் நேரடித் தேர்தலாக இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பி, அந்த அளவுக்கு தற்பொழுதிருக்கும் பைலா திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால், அந்தக் கோரிக்கை நியாயமானதில்லை, இப்பொழுதிருக்கும் 'பைலாபடி' தான் அந்தச் சங்கத்தின் தேர்தல் நடைபெற வேண்டுமென்று திரு. அந்தோணிப் பிள்ளை வாதாடினார். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், சிம்சன் நிறுவனத்திலே தொழிற் சங்க 'பைலாபடி' தேர்தல் நடத்தக் கூடாது, எல்லாத் தொழிலாளர்களும் வாக்களிக்கும் வகையிலே நேரடித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று அங்கே கூறினார்கள். ஆனால், பி அண்டு சி மில்லிலே தற்பொழுதிருக்கும் தொழிற் சங்க 'பைலாபடி' தான் தேர்தல் நடைபெற வேண்டும் என்ற வேடிக்கையான சூழ்நிலை இருந்தது. எனவே, அங்கிருந்த தொழிலாளர்களும், அவர்களுடைய வற்புறுத்தலுக்கிணங்க முன்னேற்றக் கழகச் சார்புடைய தொழிற் சங்கத்தைச் சேர்ந்த கணபதியும் பழைய பைலா திருத்தப்பட்டு நேரடித் தேர்தல் நடைபெற வேண்டுமென்று வாதிட்டார்கள். ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், ஒரு நிலையான கொள்கையை இதிலே வைத்திருந்தது. எப்படி சிம்சன் நிறுவனத்திலே தொழிற் சங்கத் தேர்தல் 'பைலாபடி' தான் தேர்தல் நடைபெற வேண்டும் என்று கூறியதோ, அதே போல் தான் பி அண்டு சி நிறுவனத்திலேயும் தொழிற் சங்கத் தேர்தல் இப்பொழுதிருக்கும் பைலாபடி தான் நடைபெற வேண்டுமென்று கூறியது. அந்தத் தேர்தல் அங்கே நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் தற்காலிகத் தலைவர் கணபதி அவர்களும், அவர்களைச் சேர்ந்த நிர்வாகிகளும் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டால், விரைவில் சங்கத் தேர்தல் பைலாபடி நடத்த ஏற்பாடு செய்ய முடியும் என்பதற்கிணங்க நமது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். நானும், மற்றத் தொழிற் சங்கத் தலைவர்களையும் கணபதியையும் அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி இன்று காலையில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, சென்னைத் தொழிலாளர் சங்கத் தலைவர் கணபதியும் அவரைச் சேர்ந்த நிர்வாகிகளும் பொறுப்பிலிருந்து விலகிவிட்டதால், பி அண்டு சி மில்லிலே இப்பொழுதுள்ள பைலாபடி சங்கத் தேர்தலை நடத்த எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களின் ஊதிய உயர்வு சம்பந்தமாக நடுவர் தீர்ப்புப்படி இதுவரை தந்திருப்பது போக, மீதம் உள்ள தொகையை மில் நிர்வாகம் தமிழ் புத்தாண்டு தினத்திற்குள் தந்துவிடுவதாகச் சொல்லியிருக்கின்றது. மற்றப் பிரச்சினைகளைச் சங்க நிர்வாகிகளும், ஆலை நிறுவனமும் கலந்து பேசி தீர்வு காண்பதற்கு ஆலை நிர்வாகிகள் இசைந்திருக்கிறார்கள். இந்த விவரங்களை இரு சார்பிலேயும் உள்ள தொழிலாளர் தலைவர்களிடம் நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி,

[டாக்டர் மு. கருணாநிதி] [29th January 1972

அவர்களும் அவைகளை எல்லாம் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பி அண்டு சி ஆலைத் தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குச் செல்லுமாறு தமிழக அரசு சார்பிலே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களும் வேலைக்குச் செல்லுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பிரச்சினை பேசித் தீர்க்கப்பட்டிருக்கிறது. இதைப் போலவே தான் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பேசித் தீர்க்க வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கரை கொண்டதாக இருக்கிறது. அதற்கேற்ற வகையில் தொழிலாளர்களைத் தொழிற் சங்கத் தலைவர்கள் பயிற்றுவிக்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, இந்த விவரங்களுக்குப் பிறகு, இந்தச் சபையை ஒத்திவைத்து இதைப்பற்றி மறுபடியும் விவாதிக்க, இந்தத் தீர்மானத்தை அளித்தவரே விரும்பமாட்டார் என்று கூறி, அமர்கிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி : முதலமைச்சர் அவர்கள் கூறிய விளக்கம் எனக்குப் பிற்பகலிலேயே கிடைத்தது; நான் ரொம்பவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும், இந்த விவரத்தைப் பற்றிச் சட்டப் பேரவையிலே அறிக்கை கொடுக்க இயலாத நிலையில், மேலவையிலாவது விவரங்கள் அதிகமாகக் கொடுக்க இயலும் என்பதால்தான் இதை நான் வற்புறுத்தினேன். இந்த ஆலைத் தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்சினைகளிலே அரசுக்கு நான் ஏதேனும் பேச்சுவார்த்தைகளில் உதவிகரமாக இருக்க முடியும் என்று கருதினால், அதற்கு நான் தயாராக இருக்கிறேன். வன்முறையற்ற சங்கமாக, தொழிற்சாலைக்குள்ளே அரசியல் இல்லாத தொழிற் சங்கங்கள் நடப்பதற்காக எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளிலேயும் நான் என்னுடைய ஒத்துழைப்பை இந்த அரசுக்குத் தர தயாராக இருக்கிறேன் என்று கூறி, அமர்கிறேன்.

MR. CHAIRMAN : Having heard both the Member and the Hon. the Chief Minister, I withhold my consent to the raising of the matter.

## III. CALLING ATTENTION TO THE CONTEMPLATED MOVE FOR AN EARLY LEGISLATION ON CEILING ON URBAN PROPERTY WHICH IS A STATE SUBJECT.

THIRU G. SWAMINATHAN : Sir, I beg to call the attention of the Hon. the Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the contemplated move for an early Central Legislation on ceiling on urban property which is a State subject.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிலங்கள், கட்டிடங்கள் வடிவிலுள்ள நகர்ப்புற உடைமைகள் மீது மேல்வரம்பு வரையறுக்க வேண்டியதன் தேவையைக் குறிப்பிட்டு இந்தியத் தலைமை அமைச்சர் நமது முதல் அமைச்சருக்கு எழுதிய கடிதம் ஒன்று 1970 பிப்ரவரியில் பெறப்பட்டது. இப்பொருள் குறித்த பல்வேறு கூறுகள் பற்றி ஆய்வு செய்வதற்காக செயற்குழு ஒன்றை இந்திய அரசு நியமித்திருப்பதாகவும், இதன் தொடர்பாக முதல் அமைச்சர் தமது கருத்தைத் தெரிவிக்குமாறும்



29th January 1972] [திரு. ப. உ. சண்முகம்]

அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. இந்தக் கடிதத்தில் எழுப்பப்பட்டிருந்த பொருள்களை ஆய்வு செய்ததன் விளைவாக, நமது அரசு 1971 ஜூலைத் திங்களில் நகர்ப்புற உடமைகள் குறித்த ஆய்வுக்குழு ஒன்றை நிறுவியது. அக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாயுள்ளனர் :—

1. வருவாய்த்துறை வாரிய முதல் உறுப்பினர் (தலைவர்).

2. நகர்ப்புற நிலவரி குறித்து பொறுப்பு வகிக்கிற வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்.

3. அரசுச் செயலாளர், வருவாய்த் துறை.

4. அரசுச் செயலாளர், சட்டத் துறை.

5. அரசு தரப்பு வழக்குரைஞர், சென்னை.

6. நகர்ப்புற நிலவரி ஆணையாளர் (உறுப்பினர்-செயலாளர்).

சென்னை மாநகரில் நகர்ப்புற உடமைகள் எவ்வாறு செறிந்துள்ளது என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு, குறிப்பாக, கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து அறிக்கையொன்றைப் பணிந்தனுப்புமாறு இக்குழு கேட்கப்பட்டுள்ளது :—

(I) உடைமையின் மதிப்பையொட்டி மேல்வரம்பு வரையறுக்கப்பட வேண்டுமா அல்லது கட்டிடம் கட்டப்பட்டுள்ள பகுதியையொட்டி மேல்வரம்பு வரையறுக்கப்பட வேண்டுமா?

(II) தனிப்பட்ட நபர் ஒருவர், பிரிவினையாகாத இந்து குடும்பம் ஒன்று, ஒரு பொறுப்புக் கழகம், பிற வகை நிறுவனங்கள் இவற்றைப் பொறுத்த வரையில் வரையறுக்கப்படவிருக்கிற சரியான மேல்வரம்புத் தொகை அல்லது தொகைகள்;

(III) கட்டிடம் எழுப்பப்படாமலுள்ள நிலத்திற்கு மேலே சொல்லியிருப்பதை விடக் குறைந்த மேல்வரம்புத் தொகை இருக்க வேண்டுமா?

(IV) நகர்ப்புற உடமைகளின் வாயிலாக பொருளாதார முறையில் விரும்பத்தக்க பயன்பாட்டை மேம்படுத்தி வரும் எந்தெந்த வகை அல்லது தரங்களைச் சேர்ந்த உடமைகளுக்கு மேல் வரம்பிலிருந்து விலக்களிக்கலாம்;

(V) மேல்வரம்பிற்கு மேற்பட்டு நகர்ப்புற உடைமைகளை சொந்தத்தில் வைத்திருப்பதை ஊக்குவிக்காமலிருக்கும் வகையில் சொத்து வரியையும் எஸ்டேட் வரியையும் கூடுதலாக விதிக்க வேண்டியதன் அவசியம்;

(VI) குடியிருப்பிற்கான அல்லது குடியிருப்பிற்காகாத காரியங்களுக்காகப் பயன் படுத்தப்படுகிற பிரிக்க முடியாத தனி வீடுகளைப் பொறுத்த வரையில் மேல்வரம்பைச் செயல்படுத்த முடியுமா? ஆம் எனில், எவ்வாறு செயல்படுத்த வேண்டும்? அவற்றைப் பொறுத்த வரையில், மேல் வரம்புக்கு மேற்பட்ட உடமைக்காக எஸ்டேட் வரியையும் சொத்து வரியையும் கூடுதலாக விதித்தால் போதுமா?

(VII) மேல்வரம்பிற்கு மேற்பட்ட நகர்ப்புற உடைமைகளைக் கட்டாயமாகக் கையகப்படுத்துவதற்காக சிறப்புச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டியதன் அவசியம்; அதன் தொடர்பாக 'பொதுக்காரியம்' என்பதற்குரிய பொருள் விளக்கம்; இழப்பீடு எந்த அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்?

(VIII) கட்டாயமாகக் கையகப்படுத்தப்படும் நகர்ப்புற உடைமை எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும்?

திரு. பி. கே. நாயக் அவர்களது தலைமையில், நகர்ப்புற உடைமைகள் மீது மேல்வாம்பு கட்டுவது குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய அரசால் நியமிக்கப்பட்ட செயற்குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள பரிவுரைகளையும் கருத்துக்களையும், மற்றும் இந்திய அரசு அனுப்பியுள்ள வரைவு சட்ட முன்வடிவில் கண்ட விதித்துறைகளையும் ஆலோசித்துப் பார்க்கும்படியும் இக்குழு வேண்டப்பட்டுள்ளது. இக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது.

இதற்கிடையில், அந்தந்த மாநில அரசுகள் நகர்ப்புற உடைமைகள்மீது மேல்வரம்பு வரையறுப்பது குறித்து சட்டமியற்றுவதற்குப் பதிலாக, இந்திய அரசு அதுகுறித்து பொதுவானதொரு சட்டத்தை இயற்றவேண்டும் என்று இந்திய அரசு கருத்து தெரிவித்தது.

தற்போது நகர்ப்புற உடைமைமீது சட்டம் இயற்றுதல் மாநில அரசின் அதிகாரத்தில் உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 252-வது பிரிவின் கீழ், மேற்சொன்னவாறு சட்டமியற்ற, மாநிலச் சட்ட மன்றங்கள் தீர்மான மொன்றை நிறைவேற்றியதன் பின்னரே மத்திய அரசு இதுகுறித்துச் சட்ட மியற்றலாம். இதுபற்றிப் பல்வேறு மாநிலங்களாலும் தனித்தனியாகச் சட்டமியற்றப்படுவதற்குப் பதிலாக, பொதுவான மத்தியச் சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டுமென்று மத்திய அரசால் வற்புறுத்தப்படுகிறது. ஏனெனில், அத்தகைய மத்தியச் சட்டமொன்றின்கீழ், இந்தியாவில் எந்த இடத்திலும் குடும்பங்களுக்குச் சொந்தமாயுள்ள உடைமைகளை மதிப்பிடுதல் முதலிய காரியங்களுக்காக மொத்தமாக எடுத்துக்கொண்டு ஆய்வு செய்யலாம்; மேலும், நாடு முழுவதிலும் உடைமைகளைக் கையகப்படுத்து வதற்கும் இழப்பீடு வழங்குவதற்கும் மத்தியச் சட்டம் ஒரு சீரான அடிப் படையைப் பின்பற்றுவதற்கு வழிகோலும்.

இந்திய அரசின் கருத்துரை பரிசீலிக்கப்பட்டது. இச் செயற்குறிப்பு சிக்கலான ஒன்றாக உள்ளதாலும், விவரங்கள் அடங்கல் முறையில் பரிசீலிக்கப் பட்டாலொழிய இச்செயற்குறிப்பை முழுமையாகப் புரிந்துகொள்வது இயலாது என்பதாலும், இதுகுறித்து மத்திய அரசோ, மாநில அரசோ சட்டமியற்ற முற்படுவதற்குமுன் இதுகுறித்த அனைத்துக்கூறுகள் பற்றியும் ஆராய்வதற்காக, அதிகாரிகள் அளவில் எல்லா மாநிலங்களும் பங்கு பெறும் மாநாடு ஒன்றை நடத்துவது தன்மை பயப்பதாக இருக்கும் என்று கருதப் பட்டது. அதற்கிணங்க, இப்பிரச்சினை குறித்து விவாதம் அனைத்து மாநிலங்களின் அதிகாரிகள் பங்கு கொள்ளும் மாநாடு ஒன்றைக்கூட்டுமாறு, நமது முதலமைச்சர் இந்தியத் தலைமையமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.





இருந்தபோதிலும், முன்னதாக மாநிலங்களின் பார்வைக்கு அனுப்பப் பட்ட வரைவுச் சட்ட முன்வடிவில், பல்வேறு மாநிலங்கள் அனுப்பியுள்ள பதில்கள், தெரிவித்துள்ள கருத்துரைகள், ஆகியவற்றையொட்டி, அதிற் செய்யத் தேவைப்படும் திருத்தங்கள் குறித்துப் பரிசிலனை செய்யும்பொருட்டு, இந்திய அரசு, பொதுப்பணிகள்-வீட்டுவசதி அமைச்சகத்தின் 4—1—1972-ஆம் நாளிட்ட ஆணையில், திரு. பி. சி. மேத்தியூவைத் தலைவராகக் கொண்ட இன்னொரு ஆய்வுக்குழுவை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே கூறியுள்ளவாறு, நகர்ப்புற உடைமைகளுக்கு மேல்வரம்பு கட்டுவது மாநில சட்டமன்றங்களுக்கே உரிய சட்டமியற்றும் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் 252-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ள அளவைத் தவிர, அது நாடாளுமன்ற வரம்பிற்குட் பட்டதன்று. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலச் சட்ட மன்றங்கள் இப்பொருள்பற்றிச் சட்டமியற்ற நாடாளுமன்றத்துக்கு அதிகாரமளித்துத் தீர்மானமொன்றை நிறைவேற்றினால் அதன்படி இப் பொருளை நிறைப்படுத்தி, நாடாளுமன்றம் அவசியமாக சட்டத்தை இயற்றலாம். அவ்வாறு நிறைவேற்றப்படும் சட்டம் அந்த மாநிலங்களுக்குப் பொருந்தும். அத்துடன் நமது சட்டமன்றங்களின் காரியத்துக்காக நிறை வேற்றப்பட்ட தீர்மானமொன்றின்மூலம் அதனை, அடுத்து ஏற்றுக் கொள்கிற எந்த மாநிலத்திற்கும் பொருந்தும். எனவே, சட்ட நிலைமை யாதெனில், தமிழ்நாடு சட்டமன்றம், இப்பொருள்பற்றிச் சட்டமியற்ற நாடாளுமன்றத் திற்கு அதிகாரமளித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுமளிருக்கிற வரையில் அல்லது மத்தியச் சட்டமொன்றை ஏற்றுக்கொண்டு தீர்மான மொன்றை நிறைவேற்றுகிற வரையில், நகர்ப்புற உடைமைக்கு மேல் வரம்பு கட்டுகிற நாடாளுமன்றச் சட்டம் தமிழ்நாடு மாநிலத்துக்குப் பொருந்தாது. எனவே, நகர்ப்புற உடைமைக்கு மேல்வரம்பு கட்டும் மத்தியச் சட்டம் தமிழ் நாட்டின்மீது திணிக்கப்படலாம் என்று அச்சுறத் தேவையில்லை. இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையையொட்டி தமிழ்நாடு இது குறித்துத் தனக்கென்று தனிச்சட்டம் ஒன்றை இயற்றிக்கொள்ளலாம். இக் குழுவின் அறிக்கை விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்துக்கு நன்றி. இந்தப் பிரச்னை மாநிலங்களுடைய அதிகாரத்தைப் பொறுத்தது. ஏற்கனவேயே மகாராஷ்டிரத்திலும் ஹரியானா மாநிலத்திலும் இது போன்ற ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தில் இயற்றவேண்டுமென்று கேட்டு அதன் காரணமாக பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படவிருக்கிறது. மைசூர், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் மாநில அளவிலேயே இச் சட்டத்தினைச் செய்து கொள்ளுகிறோம் என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டன. தம் சட்ட வரம்புக்கு உட்பட்ட ஒரு விஷயத்தை பார்லிமெண்டில் ஏன் கொண்டு வருகிறார்கள் என்பதுதான் பிரச்னை. இது மாநில அதிகாரத்துக்கு உட்பட்ட ஒன்றானதால் எங்களுடைய சட்டமன்றம் சட்டம் நிறைவேற்றும் என்று நம் அரசு மத்திய அரசுக்குச் சொல்லுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[29th January 1972

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் படித்த அறிக்கையில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. நாம் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசுகள் மத்திய அரசே சட்டம் இயற்றலாம் என்றால், அந்தச் சட்டத்தை மத்திய சர்க்கார் இயற்றலாம். எந்த மாநிலங்கள் ஒத்துக்கொள்ளுகின்றனவோ, அந்த மாநிலங்களுக்குத்தான் அது பொருந்தும். அந்தச் சட்டத்தை முதலில் நிறைவேற்றுவதற்கு அனுமதி அளிக்காத மாநிலங்கள்கூட மத்திய சர்க்கார் சட்டம் நிறைவேற்றியதற்குப் பிறகு சட்டத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று ஏற்றுக்கொண்டால், அது அமுலுக்கு வரும். மாநில அரசு மத்திய சர்க்கார் சட்டத்தை இரண்டு அவைகளிலும் நிறைவேற்றும் காலம் வரையில் மத்திய அரசுச் சட்டம் நம்மை பாதிக்காது. இது அரசியல் சட்டத்தில் இருக்கிற விதிமுறை. இதை நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எழுத வேண்டிய அவசியமுமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மத்திய அரசிலிருந்து மாநில அளவில் தீர்மானிக்கிறீர்களா, மத்திய அளவில் தீர்மானிக்கலாமா? என்று கேட்கப்பட்டிருக்கிறது. சில மாநிலங்கள் நாங்களே தீர்மானம் செய்துகொள்கிறோம் என்று சொன்ன பிறகு நம் மாநிலம் மட்டும் அது போன்று சொல்லாமல் இருக்கக் காரணம் என்ன? இரண்டாவதாக இந்தியா அளவில் பல்வேறு மாநிலங்களுடைய கருத்தை அறிய மாநாடு கூட்டலாம் என்று முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள். மாநிலங்களின் மாநாட்டில் ஒரு பெரும்பாலான கருத்து ஏற்பட்டால் மத்திய அவையில் இதைப்பற்றித் தீர்மானம் நிறைவேற்றலாம் என்பதற்கு நம் மாநிலம் சம்மதம் கொடுக்கும் அளவில் நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அதுபோன்ற நிலைமையை அரசு தவிர்க்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதையும் தெளிவாகச் சொன்னேன். மத்திய சர்க்காரிலிருந்து ஒரு கடிதம் வந்த பிறகு, அதை மாநில அரசு பரிசீலித்து மத்திய சர்க்கார் அனுப்பியிருக்கும் நகல் சட்டத்தில் சிக்கல் இருக்கிறது என்று ஆலோசித்து, நம்மைப் பொறுத்தவரையில், நம் மாநிலத்துக்குத் தேவையான ஒன்றை ஆய்வு செய்வதற்கு ஒரு தனிக் குழுவைப் போட்டு அதனுடைய பரிந்துரைகளை எதிர்பார்க்கிறோம். அது வந்த பிறகு அரசு ஒரு முடிவு எடுக்கும்.

## IV. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. CHAIRMAN: There are 17 hon. Members who have given their names to speak to-day. It is not possible for all the Members to participate within the time available unless they cut short their speeches. The hon. Members may please be brief.

* THIRU A. R. DAMODARAN: Mr. Chairman Sir, the Governor's Address is a very convenient document because we can speak on matters mentioned in the Address as well as on matters that are not mentioned in the Address. However, we are glad that it has been stated in this Address that the people



29th January 1972] [Thiru A. R. Damodaran]

of Tamil Nadu welcome wholeheartedly the recent successful conclusion of the war that took place and tributes have been paid to the Armed Forces and the civilian administration in Delhi for having managed the situation and for having conducted one of the mightiest operations in history. Probably hon. Members of this House may not be aware, Sir, that one of the most prominent Generals who took part in the recent struggle was a General who was posted as the Staff Officer in the Wellingdon Military Training School in the year 1962 when the Chinese invaded India. General Manekshaw—one of the ablest Generals of our Armed Forces was at that time relegated to the background because of certian conflicts which he had with the then Defence Minister Thiru V. K. Krishna Menon. If to-day I mention this it is only to highlight the point that perhaps the struggle would not have taken the backward course it did in 1962, if we had treated the army with the respect it deserved. I am grateful that at least in 1971, we have recognised the true merit of these great men who have made themselves responsible for achieving victory in the struggle that took place. We, in Tamil Nadu, are grateful that Sheikh Mujibur Rehman has come back to Bangla Desh and that in the international field also much of the adverse public opinion that existed has been mitigated by our victory and more and more Nations are veering round to the view that we have taken a just stand in this struggle. My friend Mr. Janardhanam referred to the fact the Nixon Administration in the United States had adopted a rather peculiar attitude and he went on to state that it was unfortunate that a country like the United States which had produced an Abraham Lincoln had also produced an alcapone and that the United States which produced Mr. Kennedy should also have produced a Kissinger but in my opinion this need not deter us because I have always had faith that as far as the Democratic Nations of the World are concerned, there is always room for a change in public opinion and although the Nixon administration's stand has been severely condemned and rightly condemned, I have faith and belief that public opinion in the United States of America has asserted itself and will assert itself in the future as is witnessed by the statements that have been made by John Kenneth Galbraith, by Mr. Sherman Cooper, by Senator Kennedy, by Senator Humphrey and a host of important Americans who are in a position to influence the course of American foreign policy. We in India, therefore, need not be unusually disappointed and need not consider it hopeless that the United States has embarked on an unalterable course in its foreign policy and I am sure that in the course of the next few weeks, it will take a definitely different stand because as I have said Democratic Nations in the World will always stand by each other. Having said this, may I now pass on to another subject which is of great topical interest not only in Tamil Nadu but also in other States? Ever since this Government has taken charge of Tamil Nadu, it has stressed and very rightly so in my opinion the need for a rethinking of what has been termed as the Centre-State relationship. In 1967, when Dr. Annadurai

[Thiru A. R. Damodaran] [29th January 1972

presented the first Budget of the D.M.K. Government, he stated in very clear and precise terms, as has been repeated in the Governor's Address, the difficulties regarding the mounting debt burden of the State Government and Dr. Annadurai at that time stressed the vital necessity of having a fresh look on various aspects of Centre-State relationship because in 1967, the complexion of many of the State Governments had changed and we had come from the single Party rule at the Centre to multi-party rule in the various States. Sir, while I agree that the political complexion in India has changed again and that we are now veering round to the old position of individual bossism from the Centre, may I, however, state that whatever may happen in the other States, where elections are going to be held, we in Tamil Nadu feel very strongly on this matter and we need not be ashamed of reiterating what I presume is a very valid and basic philosophy of this Government. In fact, if the D.M.K. Government is to have any credibility at all it can only rest on this very vital issue of provincial autonomy because this is not an issue that has been raised by Dr. Karunanidhi during the past one or two years but this issue has been fought in the State every since the 1935 Government of India Act when we in this State stressed that States should have more powers without disturbing the overall federal structure. To-day the situation, as I said, may have changed in other States. It may change even further after March. Whatever may be the position in other States, whether the people of those States have the right to elect their Chief Ministers or whether the Chief Ministers will be dismissed and nominated by some individual boss in Delhi is not my concern. I am thankful that such a situation will never arise in Tamil Nadu. If democracy is to have any meaning, if democracy is to have meaning to the people of the State, it is my belief that the Leaders in a State have to be elected by the people concerned and in fact, the very split that took place in the Congress was because of the alleged protest that Party bosses were laying down policies without reference to public opinion. That charge has now been completely forgotten. Party leaders even amongst the Ruling Party seem to be on their way out. New blood is being recruited on various considerations and the Chief Ministers are being nominated in their respective States and I state that this is going to lead to a rather dangerous situation because I think after March or April even the Chief Ministers may be called together and at the so called Chief Ministers' Conference, our Chief Minister may be presented with a *fait accompli* and we may have some Chief Minister who even stands up and says that the wonderful powers that have been given to the States are more than sufficient and it is only the Chief Minister of Tamil Nadu who does not know how to use these powers. I wish to be particularly frank to-day because I feel certain interested political parties are unfortunately giving a political tinge to this whole outlook of Centre-State relationship. It is not a question of Dr. Karunanidhi getting more



29th January 1972] [Thiru A. R. Damodaran]

powers. It is not a question of any individual leader of any Political partly getting these powers. But I beieve that the entire faith and philosophy of this Government, the reason why it received the massive mandate both in 1967-1971 was that the people felt that this was a Government which would strain every nerve and every muscle to see that provincial autonomy was enlarged so that this State could try to fulfil the responsibilities that fell upon it under the Constitution. The people of the State are to-day asking, "There is so much of unemployment. What are the Tamil Nadu Government doing or" Questions have been asked as to how many industries have been set up in Tamil Nadu. My sympathies have always been with the Tamil Nadu Government because I have felt that under the present situation we are merely acting as glorified brokers forwarding petitions for licences to the Government of India and—it is surely possible for the Government of India and I know for a fact that it is being done—many useful projects which should have been given to this State are being successfully sabotaged by a very efficient bureaucracy in Delhi. In 1967, we had referred to the need of establishing a Petro-Chemical Complex in Manali. We are now in the year 1972. In 1968 the Koyali Petro-Chemical Complex was licensed. Letters of intent had been given and an industrial complex has already grown in Gujarat, representing an investment of 300 crores. But so far as the Manali Petro-Chemical Complex is concerned, not a word of reply, I presume, has been obtained from the Government of India. Letters of intent may be granted. I remember in 1963, when out of a foolish ambition to become an industrialist, an ambition which I have since given up, I also applied for a letter of intent to the Government of India. I received a letter of intent to estblish a factory with a certain amount of foreign collaboration. The letter of intent was granted nine months after my application. Afterwards I went abroad in 1964, negotiated with a very prominent West German Industrialist on a collaboration agreement. I brought back the collaboration agreement and gave it to the Department of Industrial Development for approval. Sir, for 1 1/2 years, a Deputy Secretary sat on the file. The only reason I was able to get is that after I submitted my collaboration agreement for approval, some industrialist in Bengal had also submitted a collaboration agreement from the very same industrialist and for 1½ years no reply was given by the Government of India. In the meantime, I applied for another licence to import capital goods, etc. The whole process took four years. In 1967, fearing that my life might be wasted in running to Delhi and getting those licences. I wrote to the Department of Industrial Development and requested that the letter of intent might be cancelled as due to devaluation, the whole project had been rendered null and void. I am only quoting this personal example not because I want any help but to show the various obstacles in establishing industries (Interruption). The cancellation would have been very prompt because the West Bengal Industrialist had to be helped at that time. But anyhow this is the way in which the Government

[Thiru A. R. Damodaran] [29th January 1972

of India moves and if there are complaints of delay in granting licences from the State, as the Hon. the Minister for Industrial Development pointed out with regard to Tyre Factory, they are valid. I do not know whether the people in India are aware of the fact that there has been a very severe shortage so far as tyres are concerned. For the past one or two years the fleet operators and the people who run buses and lorries have had to wait for six months to get tyres for their vehicles. Many factories were not allowed to expand under the so—called plea that monopoly should not grow in our country. The Government of India had put brakes on the expansion of efficient units with the result that the people are suffering to-day. And a tyre which was selling at Rs. 300 almost 15 years ago is now selling at Rs. 920 because of massive excise duty and other taxation. When the Tamil Nadu Government applied for a Factory to be set up for tyres, what is the reason for a decision on this matter being delayed so long? I think we have to be on guard and I only mention this to show that we should all co-operate with the Government in seeing that the powers of the State are enlarged so that it is not necessary for us to run so frequently to Delhi to convince the powers that be that something should be done out of mercy or out of kindness by the administrators in Delhi.

Sir, there is only one more point which I would refer to as the time is limited. I see you watching the clock. This is in regard to the point already made by the hon. Member Thiru M. Rajah Iyer regarding Educational reforms proposed in our State. Sir, so many things are heard and so many reforms have been suggested in the newspapers, that we do not know where we are. I would request the Hon. the Minister for Education to take the opportunity of the Budget Session, if he proposes to introduce any reforms in Secondary or Primary Education, to give us the benefit of a White Paper on Education which will enable the general public and the legislature to discuss this matter when the Budget Session is convened.

Sir, I have one more remark to make. That is about the recent Conference that took place of University teachers in Madras. This Conference was addressed by the Chancellor of the Madras University and at that Conference, the Chancellor of the Madras University was reported to have made certain remarks about the standard of attainment of Madras University Graduates. The Chancellors, like good children, should be seen and not heard so often. But I am sorry to say that in this particular case, not only have the remarks been made that the attainment and proficiency of our University Graduates has sadly deteriorated but a remark was also made not in keeping with the dignity and prestige of a gubernatorial office, of that of a Chancellor of a University, that the Vice-Chancellor was keeping mum on many matters. Sir, I am adverting to this point because I feel that this unfortunate remark of the Chancellor of a University about the products of his own University



29th January 1972] [Thiru A. R. Damodaran]

has resulted in a very bad impression bering created abroad and I have received many letters from Madras University Graduates who have referred to the Chancellor's remarks which have been published in various foreign newspapers. This has led to many of our graduates not only losing employment opportunity but being subjected to ridicule at the hands of foreign Universities. Sir, if the Chancellor had felt that reforms were required in University Education, I feel he should have addressed a letter to the Vice-Chancellor of the Madras University and this should have been considered by the appropriate academic bodies of the University. If the Hon. Minister had stated that standards had fallen, and that some improvement was required, he makes himself politically responsible for the statement and this is a matter that could be debated in these Houses. But when such a distinguished person as the Chancellor of a University makes this statement, it has certain unfortunate repercussions and I hope that this criticism will be taken in the right spirit because I do not want any reflections to be cast on the graduates of the Madras University. All of us are aware that standards have to be improved, but before we comment on the fall in standards, we should remember that this is probably one of the few Universities which has External examiners, i.e., examiners from outside the University area appointed to deal with the award of Post-Graduate degrees and that there are many Universities in India which do not follow this practice. This is the only University where invigilators have not yet been attacked and where text-books have not been taken in bulk to halls by persons writing the examination. All these instances took place in five or six Universities.

One more thing and I have done, Sir. Having stated that a communication has not gone regarding the graduate teachers' representation for increase in their emoluments, I hope that even if such a communication has been sent, considering the fact that the Hon. Minister has made such a statements, that communication will be treated as withdrawn and the matter subjected to further reconsideration.

My Friend, Thiru M. Rajah Iyer has referred with great force and clarity to the need for further consideration of this very vexed problem. I am sorry to state that this class of very responsible teachers is so bitter and so frustrated about the lack of attention to their demands that various extremist elements may take advantage of the situation and tender advices, which I certainly hope the teachers would not follow in this case, because I am sure that their plea will be reconsidered by the Government and even if a broad category does not benefit, I am sure that some way could be found out whereby some increment could be granted to certain sections which have been particularly hard hit by the Pay Commission proposals. The hon. Member has explained in detail how Diploma holders with a starting salary of Rs. 325 draw higher salaries than the

Graduate teachers. It is a grievance that is very real, and although the Hon. Minister may feel that I am speaking about them, because I happen to represent the Graduates Constituency, I can tell him that my Constituency is sufficiently broad-based so as to permit one to speak dispassionately without bias. It is not because of this, but because I feel, having entrusted our school children at a very tender age to the care of teachers, it is necessary, particularly in view of the fact that teachers occupy a very responsible position, that we should not do anything which is likely to create bitterness and frustration among this class.

Thank you, Sir.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயக சமதர்மத்தைக் காப்பதற்கு இந்தியாவின் முப்படையும் போராடி வெற்றி கண்டதை உலகமே கண்டு வியப்பு அடைந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் போரில் மாணமடைந்த, காயமடைந்துள்ள வீரர்களுக்கு என்னுடைய வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் எனவும் மாநில சுய ஆட்சி கோரியும் போராடி தனி நாடு பெற்ற கிழக்கு வங்க மக்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன். அடுத்து, நாம் முஜிபுர் ரஹிமானைப் போல் தனி நாடு அந்தஸ்து உள்ள மாநில சுய ஆட்சி விரும்பாமல், இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி அதே நேரத்தில் மாநில சுய ஆட்சி வேண்டுமென்று கேட்கிறோம். இந்தப் பிரச்னை அலட்சியப்படுத்தப்பட்டு பிரிவினை வாதம் என்று திசை திருப்பப்படுகிறது. தமிழகத்தில், திராவிட முன்னேற்றக் கழகமும் முஸ்லீம் லீக்கும், தமிழரசுக் கழகமும் நீங்கலாக மற்ற அனைத்துக் கட்சிகளும் பத்திரிகைகளும் கட்டுப்பாடாக அது பிரிவினை வாதம் என்று பிரச்சாரம் செய்கின்றன. கடந்த 30 ஆண்டுக் காலமாகத் தமிழகத்தில் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்த பிரிவினை எண்ணங்களுக்கு உயிர் ஊட்டுகிற அளவுக்கு மற்றக் கட்சிகள் இப்படிப் பிரச்சாரம் செய்துவருவதானது வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக அரசின் பெயரில் பழிசுமத்தும் நோக்கத்தோடு அமைந்துள்ளது என்று இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நாம் கோருகிற சுய ஆட்சி 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதி இந்த மாநிலத்துக்கு எந்த எந்த வகையான அதிகாரங்கள் இருந்தனவோ அந்த வகையான அதிகாரங்கள் வேண்டுமென்பதுதான். ஒன்று இரண்டை அதிகப்படுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் நாம். 1919 முதல் 1935 வரை இருந்த அதிகாரங்களையும் அதற்குப் பின்னால் உள்ள அதிகாரங்களையும் நாம் மாநில சுய ஆட்சி என்ற அடிப்படையில் கேட்கிறோம். அப்போதும் இந்தியா ஒன்றாகத்தான் இருந்தது. இப்போதும் இருக்கிறது. இனியும் இருக்கும். எனவே மாநில சுய ஆட்சிக் கோரிக்கையை மாற்றுக் கட்சிப் பத்திரிகைகள் திசை திருப்பாமலிருக்கும்படி இந்த சந்தர்ப்பத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்து, சேலம் உருக்காலை அமைவது குறித்து ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். சேலம் உருக்காலை அமைவதை மத்திய சர்க்கார் தாமதப்படுத்துவதிலிருந்து தமிழகத்தில் இரும்பாலை அமையக்கூடாதென மத்திய சர்க்கார் திட்டமிட்டுள்ளதோ என அஞ்ச வேண்டியுள்ளது. மத்திய சர்க்கார் இதை அமைக்க முன்வராவிட்டால், மாநில அரசாவது அதை அமைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், கடந்த சில வாரங்களாக தமிழகத்தில் குறிப்பாக சிம்சன் கம்பெனி விவகாரத்தில் தொழில் அமைதியை குலைக்கும் வகையில் சில அரசியல் கட்சிகள் நடந்து வரும் போக்கு உலகில் எந்தநாட்டிலும் எந்தத் தொழிற்சங்க இயக்கமும் நடத்தாத புது மாதிரியான, விசித்திரமான போக்காக இருக்கிறது. காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தொழிற் சங்க இயக்கத்தில் ஊடுருவுகின்றனர் என்ற குற்றம் சாட்டுகின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, தொழிற் சங்கத்தை முன்வைத்து கட்சியை வளர்க்கக்கூடிய அளவில் கொள்கை பலமில்லாத கட்சியல்ல. சில கட்சிகளுக்குத் தொழிற் சங்கம் இல்லையென்றால், தங்கள் கட்சியின் பெயரைச் சொல்லக்கூட தமிழகத்தில் ஆட்கள் இல்லை. தொழிற் சங்கம் இல்லையென்றால், சில தொழிற் சங்கத் தலைவர்களுக்கு தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்குக்கூட இன்றையதினம் வழியில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கத் தலைவர்களைப் பொறுத்த வரையில், நான் தெட்டத் தெளிவாகச் சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தொழிலில் இருந்து கொண்டுதான் இந்த அரசியலுக்கு வந்து தொழிற் சங்க இயக்கமாக இருந்தாலும் சரி, அரசியல் கட்சியில் பொறுப்பேற்கும் பணியாக இருந்தாலும் சரி, அரசியலை விட்டு விலகக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் கூட, ஏதாவது ஒரு தொழில் செய்து எங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியும். ஆனால் மற்ற அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்களை நடத்தக் கூடியவர்கள் தொழிற் சங்கத் தலைவர் என்கிற பதவியை விட்டு விட்டால், மாதம் நூறு ரூபாய் சம்பாதிப்பதற்குக்கூட யோக்யதையற்றவர்களாக இன்றையதினம் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற் சங்க இயக்கங்களில் பொறுப்பேற்ற பிறகு, தொழிலாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கத்தில் ஏராளமாக வந்து சேருகிறார்கள். அதைக் கண்டு பொறாமைப்பட்டு தங்களுடைய கையிலிருந்து தொழிற் சங்க இயக்கம் போய் விடுகிறது, தங்களுடைய வருமானம் கெட்டுப் போகிறது என்று அஞ்சக் கூடியவர்கள், இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரில் தொழிற் சங்க இயக்கத்தில் ஊடுருவல் செய்கிறார்கள் என்று வீண் பழி சுமத்தி அதற்கென வீணாக கலவரங்களை, தமிழகத்தைப் பொறுத்த வரையில், செய்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற் சங்கம் அமைக்க மூல காரணமாக இருந்தது. இந்த அரசியல் கட்சிகள் இந்த தொழிற் சங்கங்களைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக நடத்துகிற போக்குதான். அதனால் தான் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கம் அமைக்க வேண்டி ஏற்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகமாக இருந்த நேரத்திலும், அதன் பிறகும், அதிலுள்ள

[திரு. எல். ஏ. ராஜமாணிக்கம்] [29th January 1972

தோழர்கள் அனைவரும் கம்யூனிஸ்டு கட்சியின் கீழ் உள்ள தொழிற் சங்கத்திலும் ஐ.என்.டி.யு.சி. தொழிற் சங்கத்திலும், எச்.எம்.எஸ். தொழிற் சங்கத்திலும் தான் உறுப்பினர்களாக இருந்தார்கள். அந்த நேரத்தில் திராவிடர் கழகத்தில் இருக்கிறார், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார், ஆகவே உன்னுடைய கோரிக்கையைக் கவனிக்க முடியாது என்று அலட்சியப்படுத்தப்பட்டது. ஏதாவது ஒரு தொழிலாளி திராவிடக் கழகத்தை அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், கம்யூனிஸ்டு சங்கத்திலோ அல்லது எச்.எம்.எஸ். அல்லது ஐ.என்.டி.யு.சி. சங்கத்திலோ உறுப்பினராக இருந்தாலொழிய, அவருக்கு ஏதாவது தொழிற்சாலை நிர்வாகத்தால் பழிவாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால், சாதாரண 'எக்ஸ்பிளனேஷன்' பதில் கொடுக்க அந்தச் சங்கத்தில் உரிமை மறுக்கப்பட்டு வந்தது. இப்படி பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடிதான் தி.மு. கழகத்தின் சார்பில் உள்ள தொழிற் சங்கத்தை அமைத்தார்களே தவிர, தொழிற் சங்கத்தை வைத்துக்கொண்டுதான் இந்தக் கட்சியை வளர்க்க வேண்டுமென்ற நிலையில் அவர்கள் இல்லை. பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற நிலையில்தான் ஆரம்பிக்கப்பட்டதே தவிர, தொழிற் சங்கங்கள் பூராவையும் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கமில்லை என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தி.மு. கழகம் தொழிற் சங்கத்தை அமைப்பதற்கு முன்பு தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் வேறு தொழிற் சங்கங்களில் இருந்தபோது, பல்வித கொடுமைகளுக்கு ஆளானார்கள். அடிப்பது, உதைப்பது போன்ற கொடுமைகளையெல்லாம் மாற்றுக் கட்சியினர் செய்து வந்தார்கள். முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைப் பல்வேறு விதங்களில் துன்புறுத்தி வந்தார்கள். இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற ஒரே காரணத்தினால்தான் தொழிற் சங்கத்தை ஆரம்பித்தோம்.

அரசியல் ரீதியாக தி.மு.க. விடம் தோல்வியடைந்த சில கட்சிகள் தங்களுடைய தோல்விகளை மறைப்பதற்காக இன்றைய தினம் தொழிற் சங்கக் கிளர்ச்சி என்ற பெயரில் தொழிலாளர்களைத் தூண்டி விட்டு தொழில் அமைதியைக் குலைத்து வருகிறார்கள். கடந்த 3, 4 மாதங்களாக தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் தமிழக அரசுக்கு எதிராக எழுதி வருகின்றன. இந்த அரசை எப்படியாவது ஒழித்துவிட வேண்டுமென்று இத்தகைய சதித் திட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். தமிழக மக்கள் இதற்கெல்லாம் இடம் கொடுக்க மாட்டார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரைக்கு நன்றி தெரிவித்துக் கடந்த 3 நாட்களாக இந்த மன்றத்திலே பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். பல ஆண்டுகளாகவே மாநில அவைகளிலும் மத்திய பாராளுமன்றத்திலும் நடைபெற்று வருகிற சம்பிரதாயம் இது. இதைப்பற்றி எனக்கு ஒரு சிறிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கவர்னர் அவர்கள் தம்முடைய அரசியல் சட்டத்தின் ஒரு பிரிவின்படி



29th January 1972] [திரு. ஜி. சுவாமிநாதன்]

ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருக்கிறார். அப்படி இருப்பவர் அரசியல் சட்டப் பிரிவின் பிரகாரமே மாநில அவைகளைக் கூட்டி ஒரு உரையை, அந்த மாநில அரசின் கருத்தைப் பிரதிபலிக்கும் முறையில் உரையாற்றுகிறார்.

உறுப்பினர்கள் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இங்கு எப்படி உரையாற்றத் தகுதி பெறுகிறார்களோ அதுபோன்ற ஒரு அடிப்படையில் அவரும் உரையாற்றுகிறார். அவரது உரைக்கு மன்றத்தில் உள்ள நாம் நன்றி தெரிவிக்க வேண்டும் என்ற முறை எதற்காக என்பது எனக்குப் புரியவில்லை. பல ஆண்டுகளாக நடந்து வருகிறது இந்த சம்பிரதாயம் என்றாலும் எதற்காக இதைத் தொடர்ந்து கடைபிடிக்கவேண்டும். என்று நான் அறிய விரும்புகிறேன். பல சம்பிரதாயங்கள் கால ஓட்டத்தில் மாறி வரும்போது இந்த சம்பிரதாயம் மட்டும் தொடர்ந்து இருக்கவேண்டிய ஒன்றுதானா என்பதை நாம் ஆராய வேண்டும். இந்தக் கேள்விக் குறியோடு என் பேச்சைத் தொடர விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மாநில சுயாட்சியைப் பற்றிச் சொன்னார்கள். மாநில சுயாட்சி பிரச்னை என்பது ஏதோ ஒரு கட்சியின் பிரச்னையோ அல்லது ஒரு கட்சியின் சார்பாக இருக்கின்ற முதலமைச்சரின் பிரச்னையோ அல்ல. இது நாட்டு மக்களின் பிரச்னை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறினார்கள் என்றாலும் பலர் இப் பிரச்னையைக் குழப்பிக் கொண்டு வருகிறார்கள். இது ஏதோ ஒரு கட்சியின் பிரச்னை போல பேசப்படுகிறது. இந்தப் பிரச்னை பற்றி நம்முடைய நாட்டின் பெரியவர்களும், கட்சி சம்பந்தம் இல்லாதவர்களும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் எடுத்துக் கூற நான் விரும்புகிறேன்.

மத்திய-மாநில உறவைப்பற்றி மறு பரிசீலனை தேவையில்லை என்று திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றாலும் இப் பிரச்னை மிக முக்கியமானது என்று பல மாநிலங்களில் நீண்ட காலமாகப் பேசப்பட்டிருப்பதைப் பார்த்து வருகிறோம். அரசியலுக்கு அப்பாற்பட்ட நிபுணர்களும் அரசியல் கட்சியின் பெருந் தலைவர்களும் மத்திய-மாநில உறவில் மறுபரிசீலனை வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களில் கூறியிருப்பதை நான் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். திரு. கே. சந்தானம் 10—5—1971-ல் சென்னையில் பேசும்போது குறிப்பிட்டார்.

"Mr. K. Santhanam, former Chairman of the Finance Commission, yesterday called for a change in the financial relations between the Centre and the States within the four corners of the Constituion. If this was not practicable, the Constitution itself should be changed so that the financial relations could be fostered on a more sound basis."

முன்னாள் பிரதம நீதிபதியாக இருந்த திரு. கே. சுப்பாராவ் அவர்கள் இன்னும் தெளிவாக 30—9—1971 அன்று சென்னையில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

"In his third and final lecture on Wednesday, Mr. Subba Rao suggested the constitution of a High Power Finance Commission to recast the financial relations between the Union and the States

and to re-allocate the financial resources between the two to meet their just requirements. Steps should be taken to amend the Constitution on the basis of the recommendations of the Commission."

முன்னாள் மைசூர் முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல் 27—8—1971 அன்று கோயம்புத்தூரில் பேசும்போது மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

" Mr. Veerendra Patil, former Chief Minister of Mysore, today urged the Central Government to accept the recommendations of the Rajamannar Committee report on Centre-State relations To the extent feasible and necessary without brushing them aside asa scrap of paper."

மத்திய அரசுக்கும், மாநிலங்களின் அரசுகளுக்குமிடையே இருக்கவேண்டிய உறவுகளைக் குறித்து, மத்திய அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தலைவர் காமராஜ் அவர்கள் சென்ற ஆண்டு ஜனவரி மாதம் மதுரையில் கூறியுள்ளார்—

" மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்க, தன்னிடமிருக்கும் எல்லா அதிகாரங்களையும் தானே இருத்திக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசாங்கம் ஆசைப்படுகிறது. இதுதான் இப்போதுள்ள நிலை. 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அதிக அதிகாரங்களைக் கோரும் போக்கு பளிச்சென்று தெரிய ஆரம்பித்தது. சில மாநிலங்களில் காங்கிரசல்லாத மந்திரி சபைகள் ஏற்பட்டதைபடுத்து இது பளிச்சென்று தெரிந்தது.

தேர்தல்கள் முடிந்தவுடன், எல்லா முதல்வர்களும் கொண்ட மகா நாட்டைக் கூட்டி அதில் இப்பிரச்னையைப்பற்றி கலந்தாலோசிக்க வேண்டும் என்று ஸ்ரீமதி இந்திரா காந்தியிடம் யோசனை தெரிவித்தேன் ".

அதுமட்டுமல்லாமல் சுதந்திராக் கட்சியின் முன்னாள் அகில இந்திய பொதுச் செயலாளர் திரு. ஆ. சி. கூப்பர் அவர்கள் 15—11—1971-ல் இந்து பத்திரிகைக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதுபற்றி வலியுறுத்தியுள்ளார்.

" The stagnation in our industrial growth is in no small measure due to the choking effect of rigid centralised planning and control which depirve to States of their own initiative and flexibility. It is, therefore, open for consideration whether the process of amendment of the Constitution ought not o be extended and carried to its logical conclusion by giving a greater degree of economic autonomy to the States".

இதுமட்டுமன்றி முன்னாள் கேரள முதலமைச்சர் திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்கள் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் பேசும்பொழுது மத்திய அரசினிடம் தேவையான அதிகாரங்கள் மட்டுமே இருக்க வேண்டுமென தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

Mr. E. M. S. Nambudripad, Marxist Leader, yesterday called for " a thorough overhauling of the existing Centre State relationship in such a way that the centre will have only the minimum powers ".

அதேபோல் மார்க்ஸிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பி. ராமமூர்த்தி அவர்களும் பேசியுள்ளார்.



Mr. P. Ramamurthi, Marxist leader, said the present Constitution was framed on the model of the Government of India Act of 1935 " though the latter was rejected by the Congress on the ground that it lacked State autonomy, Concentration of powers in the Centre, particularly in regard to financial resources, only facilitated development on capitalistic lines. The struggle for State autonomy was real and would be a prolonged one ".

இதையே சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த ஒரிஸ்ஸா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் ஆர். என். சிங் தேவ் அவர்கள் தீவிரமாகக் குறிப்பிட்டிருக்கிறார். சென்ற ஆண்டு மே மாதம் 3-ஆம் தேதி ரூர்கேலாவில் பேசும் பொழுது சொல்லியிருக்கிறார்.

The Orissa Chief Minister, Mr. R. N. Singh Deo, today referred to the " indifference " of the Centre to Orissa and they would have to be prepared to resort to agitation also if that became necessary due to the " intransigent, indifferent and discriminatory " attitude of the Centre ".

மத்திய-மாநில உறவுகள் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று என்று கூட சாதாரணமாகச் சொல்லவில்லை. அது மாதிரி செய்யப்படாமல் இருக்குமானால், அதை எதிர்த்து ஒரு போராட்டமே தொடங்கத் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதேபோன்று சேலத்தில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் 7—2—1970-ல் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள் :—

" The Constitution had been framed clearly indicating spheres of powers of State and Union Governments with a Concurrent List. The Union Government, especially the Prime Minister, should always act bearing in mind the field of powers of the Centre and the State Governments and follow the Federal spirit of the Constitution. However, if the Union Government or the Prime Minister, motivated by narrow political considerations, favoured a few States and denied some others of their legitimate rights such acts would impern the unity of the country and shatter the federal set-up."

மத்திய அரசு, குறிப்பாக பிரதமர் இந்திரா காந்தி மாநில அரசுகளின் நியாயமான உரிமைகளுக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டால் அது இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கே பங்கம் ஏற்படுத்தும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியிலே ஒரு தீர்மானம் தேர்தலுக்கு முன்னால் போட்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்பொழுது எல்லா நல்லறிஞர்களும், அரசியல் வல்லுநர்களும் மாநிலத்திற்கு அதிக உரிமை வேண்டும் என்று முழுமையான நம்பிக்கையோடு பேசியிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் சிலர் மாறிப் பேசுகிறார்கள் என்றால், அது சந்தர்ப்ப வசத்தினால்தான் என்றே சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, நேற்றைய தினம், நமது உறுப்பினர் மன்னை நாராயண சாமி அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் செய்யப்படும் நெல் கொள்முதல் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு உணவு

அமைச்சர் இங்கே இருப்பதால் அதைப்பற்றி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். இன்றையதினம், நான் கேள்விப்பட்ட வரையில், தஞ்சையில் 57 கிலோ கொண்ட மூட்டை ஒன்று 30 ரூபாய் அளவுக்கே விற்கப்படுவதாக அறிகிறேன். சில இடங்களில் குறிப்பாக உடையாள்புரத்தில் 57 கிலோ மூட்டை நெல் 27 அல்லது 28 ரூபாய்க்கு விற்கப்படுவதாகவும் தெரிகிறது. இதுவரையில் தஞ்சை மாவட்டத்தில் அறுவடை ஆகியிருப்பது 10 சதவிகிதம்தான். சம்பாவிலே இன்னும் 90 சதவிகிதம் நிலம் அறுவடை ஆகவேண்டியுள்ளது. இப்பொழுது 29 ரூபாய் அளவில் ஒரு மூட்டை நெல் விற்கப்படுமானால், கிராமப் புறங்களிலே இருக்கும் சிறு நிலச்சுவான்தார்கள் நல்ல விலைக்கு தங்களுடைய நெல்லை விற்க முடியாத நிலை பிறகு ஏற்படலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட், எப்.சி.ஐ. டி.சி.எம்.எப். ஆகிய எல்லா நிறுவனங்களும் சேர்ந்து நெல்லை வாங்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது எப்.சி.ஐ. தஞ்சை மாவட்டத்தில் நெல்லை 36 இடங்களில் வாங்க தீர்மானம் செய்திருக்கிறார்கள். இன்னும் 14 இடங்களையும் சேர்த்து அவர்கள் சுமார் 50 இடங்களில் நெல் வாங்க ஏற்பாடு செய்யக்கூடும். அதே போல் டி.சி.எம்.எப். 50 அல்லது 10 இடங்களில் வாங்கக்கூடும், எனக்கு நிச்சயமாக அந்த புள்ளி விவரம் தெரியவில்லை. அவர்கள் வாங்குவதோடு மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையில் மில்காரர்கள் 50 பேரை ஏஜெண்டுகளாகவும் இந்த அரசாங்கம் நியமித்திருக்கிறார்கள். நான் அண்மையில் தஞ்சை மாவட்ட அபிவிருத்தி மன்ற கூட்டத்தில் இது பற்றிப் பேசும்பொழுது 5 அல்லது 6 சதுர மைலுக்கு ஒரு சென்டர் வைத்து நெல்லை வாங்குவதானால் தஞ்சை மாவட்டத்தில் 750 சென்டர் வரை வைக்க வேண்டியிருக்கும் என்றும் அப்பொழுதுதான் கிராமப்புறங்களிலே இருக்கும் சிறு நிலச்சுவான்தார்கள் தங்களுடைய நெல்லை சுலபமாகக் கொண்டு வந்து போட்டு நல்ல விலை பெற முடியும் என்று குறிப்பிட்டேன். வாங்கும் இடங்களில் பல சிறு நிலச்சுவான்தார்களிடமிருந்து நெல்லை வாங்குவதைவிட ஏஜண்டுகளிடமிருந்து அதிக நெல்லை பெறுவதிலேயே முனைப்பாக இருக்கிறார்கள். எனவே, ஏஜண்டுகள் கிராமப்புறங்களுக்குச் சென்று அரசாங்க நிர்ணய விலையைவிட மூட்டைக்கு ஓரிரண்டு ரூபாய் குறைவாக வாங்குகிற முறைதான் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமை நீடிக்குமானால், சிறு நிலச்சுவான்தார்கள் தங்களுடைய நெல்லை குறைந்த விலைக்கே போடவேண்டிய ஒரு துர்பாக்கிய நிலைமை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய நிலச்சுவான்தார்களாக இருப்பவர்கள் தங்களுடைய நெல்லை நிறுத்தி வைத்து ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ கழித்து தங்களுடைய நெல்லை விற்கக்கூடிய பொருளாதார நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால், சிறு நிலச்சுவான்தார்கள் அது மாதிரி செய்ய இயலாது. எனவே, சிறு நிலச்சுவான்தார்கள் நல்ல விலை பெற நெல் கொள்முதலை தளர்த்துவதுதான் சிறந்த வழி என்று சொல்லிக் கொள்கிறேன். முன்பு நமது மாநிலத்தில் உணவு தான்ய உற்பத்தி ஆண்டுக்கு 70 இலட்சம் டன்னாக இருந்தது. சென்ற ஆண்டு 73 இலட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. நம் மாநிலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்டது என்று சொல்லும்பொழுது, அப்படிப்பட்ட நிலைமையில் "லெவியை" வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. பற்றாக்குறை இருக்கும்பொழுதுதான் "லெவி"





தேவையானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் வேறு மாவட்டங்களுக்கு எந்த விதமான தடையுமின்றி சென்றால்தான் சிறு நிலச்சுவான்தார்களுக்கு நல்ல விலை கிடைக்க முடியும். எனவே, கண்ட்ரோல் மூலமாகவும் லெவி மூலமாகவும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலச்சுவான்தார்களுக்கு மட்டும் பல காலமாக அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 25 சதவிகித நெல் "லெவிக்காக" வாங்கப்படுகிறது என்றால், 25 சதவிகிதம் நெல் விலையைக் குறைத்து வாங்குகிறோம் என்ற அர்த்தம். தமிழ் நாட்டு விளைச்சலிலேயே தஞ்சை மாவட்டத்தில்தான் 50 சதவிகிதம் நெல் உற்பத்தி செய்கிறார்கள் என்றாலும், அதில் அவர்கள் 25 சதவிகித விலையை இழந்துகொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை உள்ளது. மற்ற மாவட்டத்தைச் சார்ந்த நிலச்சுவான்தார்களுக்கு இப்படிப்பட்ட விலை இழப்பு கிடையாது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கனம் உறுப்பினர் அவர்கள் 5 மைலுக்கு ஒரு சென்டர் நெல் கொள்முதல் செய்ய வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி நாங்கள் தீவிரமாக பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஏஜண்டுகளை நியமித்திருக்கிறோம். இது இல்லாமல் கூட, ஏஜண்டுகள் அரசாங்கத்தின் மூலமாக நெல்லை வாங்கித் தந்தால் அவர்களுக்குக் கமிஷன் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தைக் கூட தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு நாம் கொடுக்கும் உத்தரவாதமெல்லாம், அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலைக்குக் கீழ் எந்த ஏஜண்டுகளுக்கும் நெல்லை விற்கவேண்டாமென்பது. அத்தோடு மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களை விட்டு ஆங்காங்கே இருக்கும் கிராமங்களுக்கு எல்லாம் இந்தச் செய்தியைப் பரப்பவேண்டும் என்று அரசு தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குமேல் நான் கேட்டுக்கொள்வது எல்லாம், நல்லெண்ணம் படைத்த அரசியல் கட்சித் தலைவர்கள் கிராம மக்களுக்கு இதுபற்றி எடுத்துச் சொல்லி, நெல்லைக் குறைந்த விலைக்கு கொடுக்கவேண்டாமென்று அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உறுப்பினர் அவர்கள் லெவியிலே 25 சதவிகிதத்தை எடுத்துவிடச் சொன்னார்கள். இன்று காலையிலே நான் சட்டப்பேரவையிலே பேசும்பொழுதுகூட தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திரு. மாரிமுத்து என்ற உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். லெவி முறையை எடுக்கிறீர்கள், மீண்டும் போடுகிறீர்கள்; இப்படிச் செய்வதைக் காட்டிலும், இந்த லெவியை நிரந்தரமாகப் போட்டுவிடுங்கள் என்று சொன்னார்கள். "லெவியை நிரந்தரமாகப் போடுவதாக இல்லை, நிலைமைக்கேற்ப எடுத்துவிடுவதுதான் வழக்கம்" என்று அவர்களுக்கு விளக்கம் சொன்னேன். இப்பொழுதிருக்கும் நிலைமையில் "லெவி முறையை" எடுத்துவிடுவதாக நாங்கள் இல்லை என்று சொன்னேன். அதையேதான் இந்த அவையிலேயும் கூறிக்கொள்கிறேன். அடுத்து, உறுப்பினர் அவர்கள் தஞ்சை மாவட்டதிலே இருக்கும் எங்களுக்கு மட்டும் ஏன் அதிக நஷ்டம் என்கிறார். நான் ஒன்று சொல்லுகிறேன், தமிழ்நாட்டில் குறைந்த அளவு நிலத்தைப் பெற்று, அதிக அளவிலே தண்ணீரைப் பெற்றுக்கொண்டிருப்பது தஞ்சை மாவட்டம்தான். கிருஷ்ணகிரி அணை, சாத்தனூர் அணைக்கட்டுக்கு அருகாமையிலே பயிரிடும் விவசாயிகள் எல்லாம் ஏக்கராவுக்கு 25, 30, 35 ரூபாய் என்ற அளவிலே வரி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்திலே பயிர் செய்பவர்கள் ஒரு போகம் பயிரிடுபவர்களாக இருந்தால் எக்காராவுக்கு 10 ரூபாயும், இரண்டு போகம் பயிரிடுபவர்களாக இருந்தால் ஏக்காராக

வுக்கு 15 ரூபாயும் என்ற அளவுக்குத்தான் வரி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சலுகைகளை அவர்கள் பாரம்பரியமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தஞ்சை மாவட்டத்திற்கு என்று இப்படி ஒரு விதி இல்லை. தமிழ்நாடு முழுவதற்கும் தான் விதி இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகளுக்குத் தொல்லைக் கொடுக்கவேண்டுமென்பதற்காக அப்படிப்பட்ட விதி இல்லை. தமிழ் நாட்டிலே விலையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காகத் தான் இப்படியிருக்கிறது. தஞ்சையிலே நெல் விலை உயர்ந்துவிட்டாலும் சங்கடமாக இருக்கிறது. விலை குறைந்துவிட்டாலும் அரசாங்கத்திற்குச் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, நிரந்தரமான ஒரு விலையை வைத்து, அரசாங்கம் உத்தரவாதம் கொடுத்திருக்கும் விலைக்கு வாங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைவிட்டு தஞ்சை மாவட்டத்திலே இருக்கும் விவசாயிகளைத் துன்புறுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான் கண்ட்ரோலையே எடுத்தோம். அரசாங்கத்திற்குத்தான் விற்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தி, கண்ட்ரோல் முறையை நீக்கி, ஜனங்களுக்குப் பெருத்த இலாபத்தை அளித்திருக்கிறோம். எனவே, உறுப்பினர் அவர்கள் தஞ்சை மாவட்டம் பெற்றிருக்கும் பெருத்த சலுகைகளையும், பெருத்த இலாபங்களையும் கருத்தில்கொண்டு பின்னாலாவது இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த நிலச்சுவான்தார்களைப் பொருத்தமட்டில், சிறு சிறு நிலச்சுவான்தார்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, நெல்லை விற்கும் பெரும்பாலானவர்கள் தஞ்சை மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவிலேயே இலாபத்தைப் பெறுகிறார்கள். அங்கு ஒரு ஏக்கர் பயிரிட்டால் 200 ரூபாய் நிகர லாபமாகக் கிடைப்பதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தஞ்சையில் குறுவையை நல்ல விலையை விற்று இலாபம் பெற்றார்கள், என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு குறுவை சமயத்தில் மூட்டை 37, 38 ரூபாய் விற்கப்பட்டிருப்பது உண்மையே. ஆனால், அதே சமயத்தில் மற்ற மாவட்டத்தில் இருப்பவர்கள் இன்னும் அதிக விலைக்கு விற்கக்கூடிய நிலைமை இருந்தது என்பதையும் பார்க்கவேண்டும். நெல் விலை அப்பொழுது ஏறியதற்குக் காரணம் லெவி முறையை எடுத்ததால்தான் என்று கொள்ளமுடியாது. அண்டை மாநிலமான கேரளத்திற்கு 'போகஸ் பர்மிட்' மூலமும் கள்ளத்தனமாகவும் குறுவை சமயத்தில் நெல் கடத்தப்பட்டதால் தான் நெல் விலை ஏறியது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** போகஸ் பர்மிட் சம்பந்தமாக இப்போது பேசுகிறார்கள். இந்த குறுவை அறுவடையின்போது போகஸ் பெர்மிட் போய்விட்டதாகக் கூறுகிறார்கள். சரியான தகவல் அவருக்கு இல்லையென்று நினைக்கிறேன். போகஸ் பெர்மிட் சென்ற ஆண்டு ஏற்பட்டது. அதைப்பற்றி தனிக்கேள்வி போட்டால் முழு விவரங்களும் தரலாம் என்று நினைக்கிறேன். இப்போது அரசாங்கத்தின் உத்தரவு ரயில்வே அதிகாரிகளுக்குப் போட்டிருக்கும் உத்தரவு, யாரும் எந்தப் பெர்மிட் கொண்டுவந்து கொடுத்தாலும் வேறு மாநிலத்திற்கு அரிசி அனுப்பக் கூடாது, ஏற்றக்கூடாது. அரசாங்கத்தரப்பில் யாருக்கும் அனுமதி அளிப்பது இல்லையென்று தெளிவாக ரயில்வே அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறது. எல்லைச் சாவடிகளைப் பலப்படுத்தியிருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல் ஆங்காங்கிருக்கிற பெல்ட் ஏரியா ஊர்களில் இருக்கிற மக்கள், நல்லெண்ணம் படைத்த தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள்,





அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களையும் சேர்த்து ஒரு பொதுமக்கள் குழுவை அமைக்கச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக சொல்லி, எல்லைகளைப் பலப்படுத்தியிருக்கிறோம். இப்பொழுது குறுவை அறுவடையில் கேரளாவுக்கு அரிசி கடத்தப்படுகிறது என்பதை ஒத்துக்கொள்வதற்கு இல்லை. இன்னும் சொல்கிறேன். சமீபத்தில் நான் கோவை மாவட்டத்திற்கு சென்ற போது திடீரென்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடன் எல்லைச்சாவடி எவ்வாறு செயல்படுகிறது என்று பார்க்கச் சென்றேன். அப்போது எல்லாம் அதிகாரிகள் ரொம்பவும் எச்சரிக்கையாக சோதனைப் போட்டுக்கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்து மகிழ்ச்சியுடன் திரும்பினேன். ஆகவே இப்போது குறுவை அறுவடை காலத்தில் எல்லையைக் கடந்து போனதாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. வழக்கம்போல் குறுவை அறுவடையில் விலை ஏறியதில்லை. காரணம் மழை பெய்யும். சொத சொதவென்று இருக்கிற காரணத்தால் நெல்லை வாங்க ஆள் இருக்காது. விலை குறையும். இந்த ஆண்டு தஞ்சை மாவட்ட மக்களுக்கு நல்ல காலம். மழையே பெய்யவில்லை. வெயில் காய்ந்தது. இது தெரிந்திருக்குமானால் 25 சதவிகித லெவி போட்டிருக்கலாம். மழையில்லாத காரணத்தால் அங்கு நெல்லை பலர் முடக்கி வைத்திருக்கிறார்கள். பெருநிலச் சொந்தக்காரர்கள் இன்னும் வெளியில் விடவில்லை. தஞ்சையை விட்டு வெளியே போகவில்லை. சிறு சிறு விவசாயிகள் போட்டது வெளியில் வந்திருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்கள் குறிப்பிட்டது போல் மற்ற மாவட்டங்களில் நெல் அறுவடையில்லாத காரணத்தால் அந்த நெல் வந்துதான் மற்ற மாவட்டங்களில் ஓரளவுக்கு விலை தணிவதற்கு உதவியது என்று சொல்லலாம். ஆகவே குறுவை அறுவடைகாலத்தில் கள்ளக் கடத்தல் இருந்தது என்பது நிச்சயமாக உறுதியாகக் கிடையாது என்பதை உத்தரவாதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் போகஸ் பெர்மிட் நிச்சயமாக இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டில் கள்ளக்கடத்தல் இல்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால் சென்ற ஆகஸ்டு மாதத்தில் நம்முடைய உணவு அமைச்சர் அவர்களே வேலூரில் பேசியிருக்கிறார்கள். இதுதான் அவர் சொன்னது.

"He said that the Police had arrested all persons allegedly involved in a case in which bogus permits were used to transport rice to Kerala.,Investigation was also going on in another case in which Police seized wagons of rice while being moved from Tamil Nadu border to Kerala".

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மறுபடியும் தெளிவாகச் சொல்லுகிறேன். இந்த ஆண்டு குறுவை அறுவடையில் இல்லையென்று சொன்னேன். சென்ற ஆண்டு போகஸ் பெர்மிட் இருந்தது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதற்காக ஏற்கனவே ஒரு சிலர் கைது செயப்பட்டு அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. இன்னும் சிலர் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் இருக்கிறது. ஏழு வழக்குகள் மொத்தம் போடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு இப்போது கிடைத்த தகவல்களை வைத்துச் சொல்லுகிறேன். கள்ளக் கடத்தல் போகஸ் பெர்மிட் மூலம் எவ்வளவு அரிசி கடத்தப்பட்டிருக்கிறது என்று ஒவ்வொரு ரயில் நிலையத்திற்கும் சென்று போலீஸ் அதிகாரிகளை அனுப்பி

[திரு. ப. உ. சண்முகம்] [29th January 1972

தகவல் விசாரிக்கச் சொன்னோம். இங்கு மட்டுமல்ல, **கேரளாவுக்கும் சென்று** அங்குள்ள ரெயில் அதிகாரிகளை வைத்து டெலிவரி நோட்டை வைத்து செக் செய்து எவ்வளவு அரிசி போயிருக்க முடியும் என்று கணக்குப் போட்டு பார்த்ததில் மொத்தம் தமிழ்நாட்டிலிருந்து போகஸ் பர்மிட் மூலம் சென்ற அரிசியின் அளவு 13 ஆயிரம் டன்தான் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாம் 58 லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம். 13 ஆயிரம் டன் போயிருப்பதால் விலை ஏறியிருக்கிறது என்பதை நம்புவதற்கில்லை. இந்த ஆண்டு குறுவை அறுவடையில் நிச்சயமாக போகஸ் பெர்மிட் கிடையாது. பெர்மிட்டே இல்லை, அப்புறம் **தானே** போகஸ் பெர்மிட். குறுவைக்கு முன்பு தவறு நடந்தது உண்மை. அதை இன்று மட்டுமல்ல, சென்ற ஆகஸ்ட் மாதத்தில் தெரிவித்திருக்கிறேன். கடுமையாக நடவடிக்கை எடுப்போம் என்று தெளிவாகச் சொல்லி கொள்ளுகிறேன். யாராக இருந்தாலும் இன்னும் விசாரணையில் இருக்கிறது. அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுக்கும். அப்போது கள்ளக்கடத்தல் இருந்தது. போகஸ் பெர்மிட் இருந்தது. சிவில் சப்ளை டிபார்மெண்ட் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ரயில்வே அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அரசாங்கம் பலரை கைது செய்திருக்கிறது. இன்னும் பலரை கைது செய்யவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அமைச்சர் அவர்கள் சொல்வது ஆகஸ்டு மாதம் 31-ம்தேதி மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி. அடுத்து நவம்பர் 4-ல் கோயம்புத்தூரிலும் பிடித்திருக்கிறார்கள்.

" The Coimbatore District Civil Supplies authorities and the C.I.D. Vigilance Cell Police in a surprise raid in the early hours of yesterday intercepted a lorry just at the Anaikatti checkpost on the Tamil Nadu—Kerala border and seized from the lorry 104 bags of rice at Rs. 10,000.

" The Vigilance Cell Police also had seized a lorry at the Gopalapuram checkpost in Pollachi taluk on the night of October 30, and seized 110 bags of boiled rice.

ஆகவே சென்ற ஆண்டு குறுவையில் தான் என்று சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மறுபடியும் விளக்கமாகச் சொல்லுகிறேன். போகஸ் பர்மிட் என்பது வேறு. லாரிகள் கள்ளக் கடத்தல் வேறு. பர்மிட்டை வைத்துக்கொண்டு ரயில்வே நிலையத்தில் காட்டி அரசாங்கம் கொடுத்த பர்மிட், ஆகவே இதற்கு ஏற்றுவதற்கு அனுமதி வேண்டும் என்று போகஸ் பர்மிட்டை வைத்து ஏற்றுமதி செய்தார்கள் என்று துவக்கத்திலிருந்து சொல்லுகிறேன். லாரிகளிலும் கள்ளக்கடத்தல் போகிறது. அப்படிப் போவதைப் பிடித்திருக்கிறோம். கழுதைகளின் மீது மூட்டைகளை வைத்துக் கொண்டு தூக்கிக்கொண்டு சென்றதை அன்றைய தினம் சொன்னேன். இன்னும் சொல்லப்போனால் சில பகுதிகளில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை எல்லையில் மூட்டையை தூக்கிக் கொண்டுபோய் எல்லையைக் கடந்துபோட்டு விட்டு வருகிறவர்களுக்கு ரூ. 5 கூலி கொடுத்து ஆட்களை வைத்துச் செல்லுகிறார்கள். அதையும் அரசாங்கம் பிடிக்கிறது. இதன் மூலம் எவ்வளவு பிடித்தார்கள் என்ற புள்ளி விவரம் அரசாங்கத்திற்கு வந்துகொண்டே இருக்கிறது. இவ்வளவு மூட்டைகள் பிடித்தோம், இத்தனை லாரிகளைப் பிடித்தோம்.



29th January 1972] [திரு. ப. உ. சண்முகம்]

இத்தனை லாரிகளைப் பிடித்து பறிமுதல் செய்து வைத்திருக்கிறோம், இத்தனை கார்களைப் பிடித்து பறிமுதல் செய்து வைத்திருக்கிறோம் என்று. ஆகவே போகஸ் பெர்மிட் என்பது வேறு, லாரிகளில் கள்ளக்கடத்தல் என்பது வேறு. லாரிகள் கள்ளக்கடத்தலை போலீஸ்காரர்கள் தினந்தோறும் விசாரித்து பிடிக்கிறார்கள். போகஸ் பர்மிட் ரயில் மூலம் போவதை நிறுத்திவிட்டோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1971 நவம்பர் 4-ல் போகஸ் பர்மிட் மூலமாக போனது

" Nine persons have been charge sheeted by the Vigilance Cell of the State Police for exporting rice from Tamil Nadu to Kerala under forged permits.

The case relates among other things to seizure of about 600 bags of rice worth Rs. 60,000.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

Let me clear the Hon. Member's point. The Hon. member is presently confusing himself. அந்த சார்ஜ் ஷீட் போட்ட தேதியைச் சொல்லுகிறீர்கள். இது ஏற்கனவே விசாரணையிலிருந்து முடிந்து சார்ஜ் ஷீட் போடப்பட்டது. அதைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஏற்கனவே விசாரணை முடிந்து கைது செய்யப்பட்ட குற்றப் பத்திரிகை அவர்கள் மீது போடப்பட்டிருக்கிறது. பாப்பையா நாயுடு என்ற ஒரு வியாபாரி மீது ஒரு வழக்கு. அந்த வழக்கு இன்னும் விசாரணைக்கு வரவில்லை. அதை விசாரிப்பதற்கு 3, 4 மாத காலம் ஆகும். அதற்கு முன்பு நடந்த வழக்குக்கள் சார்ஜ் ஷீட் போடப்பட்ட தேதி அது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் காரணத்தைச் சொன்னார்கள். கேரளாவுக்கு போயிருப்பதின் காரணமாகவும் விலை ஏறியிருக்கலாம் என்பதற்காகவே எடுத்துக் காட்டுகளைக் குறிப்பிட்டேன்.

நம்முடைய மாநிலத்தைவிட்டு அரிசி போய்க்கொண்டிருக்கிறது. அது கள்ளக்கடத்தல் மூலமாகவோ அல்லது போகஸ் பர்மிட் காரணமாகவோ இருக்கலாம். என்றாலும் இதனால் தஞ்சை மாவட்டத்திற்கு மறுபடியும் கொள்முதல் மூலம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் லெவி கொள்முதல் 25 சதவிகிதம் எடுக்க முடியாவிட்டாலும், 10 சதவிகிதம் லெவி அளவுக்காவது குறைக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆந்திராவில் மில்லர்ஸ் லெவி சிஸ்டம் என்ற முறையை கையாளுகிறார்கள். தமிழ் நாட்டிற்கு ஒன்று அல்லது 1¼ லட்சம் டன் கொள்முதல் மூலம் தேவைப்படலாம். என்னிடம் சரியான விவரம் இல்லை. தேவைப்படுவதை தமிழ் நாட்டிலுள்ள 300 அல்லது 400 அரிசி ஆலை சொந்தக்காரர்களிடம் 5 அல்லது 10 சதவிகித அரிசியை அரசாங்கம் வாங்கினால் எல்லா மாவட்டங்களிலும் ஒரே சீரான முறையில் கொள்முதல் செய்ய முடியும். இதனால் எந்த மாவட்டத்திற்கும் தனிப்பட்ட முறையில் பாதிப்பு ஏற்படாது. இதைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நம் மாநிலத்திலுள்ள சித்த வைத்தியர்கள் எல்லா பத்திரிக்கைகளிலும் விளம்பரங்களைக் கொடுக்கிறார்கள். சில பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரங்களும் இவர்களால் கொடுக்கப்படுகின்றன. என்னென்ன வியாதிகளை ஆங்கில மருத்துவர்கள் குணமாக்க முடியாதோ அவற்றையெல்லாம் தாங்கள் குணப்படுத்தி விடுவதாக விளம்பரம் செய்கிறார்கள்.

ஒருவர் சித்த மருத்துவர் என்பது மட்டுமல்லாமல் ஜோதிடமும் தெரிந்தவர் என்று விளம்பரம் செய்திருக்கிறார். இன்னொரு மருத்துவர் கைரேகை, ஜோதிடம் ஆகிய இரண்டும் தெரியும் என்று செய்தி கொடுக்கிறார். மற்றொருவர் மருந்து, அழகு சாதன சட்டப்படியும், அதிசய மருந்துகள் சட்டப்படியும் என்னென்ன வியாதிகள் குணமாக்கப்படக் கூடும் என்று விளம்பரம் செய்யக் கூடாதோ, அவற்றையெல்லாம் குணமாக்குவதாக விளம்பரம் செய்திருக்கிறார். கண்பார்வை இழந்தவர்கள், காது கேட்காதவர்கள், குஷ்டம் போன்ற தோல் சம்பந்தமாக நோயாளிகள், மலட்டுத் தன்மையுடையவர்கள் ஆகியோரெல்லாம் என்னிடம் வாருங்கள், நான் குணமாக்குகிறேன் என்கிறார் ஒருவர். வெண் குஷ்டத்திற்கு உலகத்திலேயே மருந்து இல்லையென்று சொல்கிறார்கள். ஆனால், அதையும் குணமாக்குவதாக கூறுகிறார் ஒருவர். கோல்ட் நைட் பில்ஸ் என்பதாக விளம்பரம் செய்து இழந்த ஆண்மையை மீட்டுத் தருவதாக ஒருவர் விளம்பரம் செய்கிறார்.

இதைப்பற்றி நான் மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகளிடம் கேட்டேன். அவர்கள் இன்னின்ன வியாதி உடையவர்கள் என்னிடம் வாருங்கள் என்று மருத்துவர்கள் சொன்னால் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாதென்றும் ஆனால் இன்னின்ன வியாதிகளுக்கு இவை மருந்துகள் என்று விளம்பரம் செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றும் குறிப்பிடுகிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் வியாதிகளுக்கான மருந்துகளை அறிவித்தே பலர் விளம்பரம் செய்வதால் அவர்கள் மீது நாம் மருந்துக் கட்டுப்பாடு சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும்.

யார் வேண்டுமானாலும், ஆர்.எம்.ஐ.பி. என்ற முறையில் சித்த மருத்துவர்களாக வந்து விடுகிறார்கள். இந்திய மருத்துவத்திற்கான மத்திய வாரியம் 1933-ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 231, பொது சுகாதாரத்தின்படி நம்முடைய மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த வாரியத்தினர் மூன்று விதமான மருத்துவர்களை பதிவு செய்துகொள்கிறார்கள். முதல் பதிவு அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியில் எல்.ஐ.எம்., எச்.பி.ஐ.எம்., ஜி.சி.ஐ.எம். ஆகிய பட்டயங்கள் பெற்றவர்கள்.

இரண்டாவது பதிவு வெளி மாநிலங்களில் பட்டயங்கள் பெற்றவர்கள்.

மூன்றாவது பதிவு ஆர்.ஐ.எம்.பி. கிராம வைத்திய அத்தாட்சி பெற்றவர்கள். நான்கு ஆண்டுகள் ஒரு வைத்தியரிடம் பயிற்சி பெற்றதாகவும் பத்து ஆண்டுகள் சித்த வைத்தியத்தில் அனுபவம் பெற்றதாகவும் அத்தாட்சி அளிப்பவர்கள், இப்படிப் பதிவு செய்யப்படுகிறார்கள். இவர்களுக்கு நேர்முகத் தேர்வு ஒன்று இருப்பதாகக் கூறப்பட்டாலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சித்தவைத்தியமே என்னவென்று அறியாத பலர் பதிவு செய்யப்படுகிறார்கள். நாட்டுமக்களின் நலத்தைக் கருத்தில் கொண்டுள்ள இந்த அரசு இதைத் தவிர்க்க வேண்டும். அண்மையில் என்னுடைய வீட்டிலேயே நடந்த ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன்.





என்னுடைய குழந்தைகளுக்குச் சட்டை தைக்க வேண்டுமென்று தையற்காரருக்குச் சொல்லி அனுப்பினேன். ஒரு வாரம் கழிந்த பிறகு வந்தார். என்ன என்று கேட்டதற்கு இப்பொழுது தைக்க நேரமில்லை என்று கூறினார். நான் இப்போது மருத்துவராகிவிட்டேன். அந்த வேலையே எனக்குச் சரியாக இருக்கிறது என்று கூறினார். எப்படி மருத்துவர் ஆனீர் என்று நான் கேட்டதற்கு 10 ஆண்டுகள் அனுபவம் இருக்கிறது என்றும் 4 ஆண்டு ஒருவரிடம் பயிற்சி பெற்றேன் என்றும் சர்டிபிகேட் வாங்கிக்கொடுத்தேன், ஆர்.ஐ.எம்.பி. மருத்துவரானேன் என்று சொன்னார். இதுபோல 1,500 பேர் இரண்டு ஆண்டுகளில் மருத்துவர்களாகிறார்கள். அவர்கள், வி.வி.சி., ஏ.எம்.ஐ.எச். என்றெல்லாம் பட்டங்கள் போட்டுக் கொள்கிறார்கள்.

இந்திய முறை மருத்துவத்திற்கான மத்திய வாரியத்தினர் தங்களால் பதிவு செய்து கொள்ளப்படும் மருத்துவர்கள் மேற்கொள்ளவேண்டிய நன்னடத்தைப் பற்றி தெரிவித்துள்ளார்கள். இது அரசு ஆணை எண் 2256, 29 ஜூலை, 1949-ன்படி தமிழக அரசினரால் அறிவிக்கப்பட்டதாகும். இந்த நன்னடத்தைப் பகுதியில் இந்திய முறை மருத்துவர்கள் சிகிச்சைக்கான கட்டண விகிதம் வெளியில் தெரிவிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், பார்வைக்கான எச்சரிக்கை என்ற பகுதியில் 7-வது பிரிவில் ஒரு இந்திய முறை மருத்துவர் தனது தொழிலில் முன்னேற்றம் கருதியோ, அல்லது நோயாளிகளைப் பெறுவதற்காகவோ, வெளிப்படையாக அல்லது மறைமுகமாகவோ விளம்பரம் செய்தல் அல்லது அந்த விளம்பரங்களில் மக்களது கவனத்தைத் தனது தொழில் திறமை, அறிவு, படிப்பு ஆகியவற்றை தெரிவித்தல்—நோயாளிகளைப் பெற பிரச்சாரம் செய்தல் அல்லது அதற்காக யாரையாவது அமர்த்துதல் ஆகிய தொழிலுக்கு விரோதமான நடத்தைகளில் ஈடுபட்டிருந்தால் அவர்களது பெயர் மருத்துவர் பட்டியலிலிருந்து நீக்கப்படும் என்று கண்டிப்பாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த நன்னடத்தைக் கோட்பாடுகளுக்கு விரோதமாக இந்திய முறை மருத்துவர்களில் மிகப் பலர் விளம்பரத்திற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கிறார்கள். நான் ஒரு விளம்பர அலுவலகத்தை கேட்டபோது, இந்த மாதிரி விளம்பரங்களுக்கு கிட்டதட்ட 750 ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். சில விளம்பரங்களுக்கு 1,000, 2,000 ரூபாய்கூட ஆகலாம். இந்த விளம்பரங்களால் ஆயிரக்கணக்கான மக்கள் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குத் தக்க நடவடிக்கை அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. என். எஸ். ராமசாமி படையாச்சி:** தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற முறையில் ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

சமீபத்தில் நடந்த போரிலே நமது முப்படை வீரர்களுடைய வீரச் செயல்களினாலும் பாரதப் பிரதமருடைய விவேகத்தின் காரணமாகவும் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உறுதியாக இருந்ததின் காரணமாகவும் நாம் பெருமைக்குரிய வெற்றியை அடைந்திருக்கிறோம். இதற்கு நம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் போரில் ஈடுபட்ட காரணத்தால், பல பிரச்னைகளை நாடு எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. அதனால் உடனடியாக நாம் அதிகமான நன்மைகளை மக்களுக்குச் செய்வதற்கு முடியாத ஒரு நிர்ப்பந்தத்திலே இருக்கிறோம். ஆனால் இருப்பதைக் கொண்டு எதை எதைச் செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

வறுமை, ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கவர்னரின் உரையில் குறிப்பிட்டிருந்தார்கள். எப்படிப் போரை எதிர்த்து நாம் அனைவரும் ஒன்றுபட்டு போராடினோமோ அப்படியே இந்தப் பிரச்னைகளையெல்லாம் எதிர்த்துப் போராடி நாம் வெற்றி பெற வேண்டும் என்று கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலே ஒன்றுபட்டு ஈடுபட்டால், எதையும் நாம் வெற்றியுடன் செயலாற்ற முடியும். கருத்து வேற்றுமை, கட்சி வேற்றுமை கொண்டு இந்தப் பிரச்னைகளை அணுகாமல் நல்ல முறையில் ஒன்றுபட்டு ஈடுபட்டால், நல்ல நிலைமையை நாட்டில் உருவாக்கலாம். ஆகவே மாற்றுக் கட்சி நண்பர்களும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. குறிப்பாக அரிசி விலை, சர்க்கரை விலை இன்னும் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான உணவு சம்பந்தமான பொருள்களின் விலைகள் எல்லாம் ஏறிக்கொண்டே போகின்றன. நெல் விலை கொஞ்சம் அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். 1968, 1969-ல் உணவு உற்பத்தி 50 லட்சம் டன்னாக இருந்தது. இப்போது 70 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. ஆனால், 1968, 1969-ல் இருந்த விலைகளைப் பார்க்கும்போது 20 லட்சம் டன் அதிகம் உற்பத்தியாகியும் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றன. படி அரிசி ரூபாய் 3-க்கு விற்பதாகக் கேள்விப்பட்டேன்.

விலை ஏறியிருக்கிறது என்று மற்றவர்கள் சொன்னார்கள். நான் அரிசி வாங்குவதில்லை. எனக்குச் சொந்தமாக நெல் வருகிறது. 20 இலட்சம் டன் விளைச்சல் அதிகமாக இருப்பதால், விலை அதிகமாகக் கூடிய காரணம் என்ன? அது மத்தியிலே இருக்கிற நிர்வாகக் கோளாறினாலா, அல்லது இங்கிருக்கும் விநியோகக் கோளாறினாலா அல்லது வாங்கிவிற்கின்ற இடைத்தரகர்களினால் வருகிற கோளாறினாலா என்று சிந்தித்துப் பார்த்து அதையெல்லாம் போக்கும் விதத்திலே தக்க நடவடிக்கையை அரசு எடுத்திருந்தால்; இது மாதிரியான நிலையைத் தவிர்த்திருக்க முடியும். ஆகவே அதைச் செய்ய வேண்டுமென்று தான் கேட்கிறேன். அந்தக் குறைகள் நீடிக்கவிடக் கூடாது. அப்படியே தான் சர்க்கரை விலை திடீரென்று ஏற்றப்பட்டு, விற்கப்பட்டது. சென்ற ஆண்டு போட்ட கரும்பிற்கே பணம் கொடுக்கவில்லை, இன்னமும் பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் மில் சொந்தக்காரர்கள். அப்பொழுது உற்பத்தி ஏதோ அதிகமாக ஆகிவிட்டது, வாங்குவோர் யாருமில்லை என்ற நிலை இருந்தது. அதே போல் இன்றைக்கும் உற்பத்திப் பெருக்கம் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அதைவிட டபுள் பங்காக விலை ஏற்றப்பட்டிருக்கிறது. அதன் காரணம் தெரியவில்லை. சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கும் மத்திய மாநில அரசுக்கும் இடையிலே ஒரு ஐக்கியம் இருப்பதால் தான், அதாவது ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதால் தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அவர்களுக்கும், மத்திய மாநில அரசுகளும் இடையேயுள்ள இந்தத் தொடர்பின் காரணமாக...

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பெரிய குற்றச்சாட்டை இங்கே சொல்லுகிறார்கள். சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கும், மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததால் தான், விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்ற தப்பான ஒரு எண்ணம் வரும் வகையிலே உறுப்பினர் அவர்கள் பேசுவது முறையல்ல. இந்த மாநில அரசுக்கும், சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதை பழைய மந்திரியாக இருந்த அவர் தெரிந்திருக்க வேண்டும். தெரியவில்லையென்றால், அவருக்கு நம்முடைய அனுதாபம். இப்பொழுது இருக்கும் சர்க்கரை ஆலைகள் எல்லாம் மத்திய அரசுக்குத்தான் கட்டுப்பட்டவை. மாநில அரசுக்கும், அவர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. விலை ஏறிவிட்டதாகக் கூறுகிறார்கள், அதற்கு மத்திய அரசின் மீது குற்றம் சாட்ட வேண்டுமே தவிர, மாநில அரசைக் குற்றம் சாட்டக்கூடாது. மத்திய அரசு கரும்பிற்கு 73.70 ரூபாய் டன்னுக்குக் கொடுக்க வேண்டுமென்று 'ரிகவரி பேஸிசை' வைத்துவிட்டு, மாநில அரசைப் பார்த்து, 100 ரூபாய் அல்லது 150 ரூபாய் வாங்கிக் கொடு என்று சொன்னால், எங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? கரும்பிற்கு இந்த விலை தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிற . அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மத்திய அரசுக்குத் தான் உண்டு. இதைச் சாதாரண மக்கள் எல்லாம் புரிந்து கொண்டிருக்கும்பொழுது, அமைச்சராக இருந்தவர் இப்படிப் பேசுவது சரியில்லையென்று சொல்லிக்கொள்கிறேன்.





திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: நான் அமைச்சராக இருந்த பொழுது இப்படிப்பட்ட பிரச்சினையும், குழப்பமும் வந்தது கிடையாது. இப்பொழுது ஒவ்வொன்றுக்கும் அமைச்சர்களைப் போய்ப் பார்த்து, இதிலே விலை நிர்ணயிப்பதற்கு அன்றாடம் அந்த ஆலை முதலாளிகள் வந்து போராடும் நிலைமை இருப்பதால், நாங்கள் இருந்த காலத்திற்கும் இப்பொழுதிருக்கும் காலத்திற்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவர்கள் இருந்த காலத்திற்கும் அவருக்கும் தொடர்பு இல்லை என்று நான் நினைக்கிறேன். இந்தக் காலத்திலே எங்களுக்கும் அந்த முதலாளிகளுக்கும் தொடர்பு இருந்து அவர்களுக்கு விலையை ஏற்றிவைத்தோம் என்ற ரீதியிலே தவறான ஒரு கருத்தை மாத்திரமில்லை, விபரம் புரியாமல் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது சரியில்லை. இரண்டு ரூபாயிக்கு ஒரு கிலோ சர்க்கரை விற்க வேண்டுமென்று, இந்தியா முழுவதிலும் உற்பத்தியாகும் சர்க்கரையிலே 60 சதவிகிதத்தை சர்க்கரை ஆலை முதலாளிகள் அரசுக்குத் தர வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்துக் கொள்வதற்கு முன்பாகவே, அதாவது டிசம்பர் மாதத்திலேயே ஆலை முதலாளிகளையெல்லாம் கூப்பிட்டு உங்களிடம் இருக்கும் 10% சர்க்கரையை 150 ரூபாய் என்ற நிர்ணயித்திலே கொடுக்க வேண்டுமென்று சொல்லி வாங்கினோம். இப்படி இரண்டு ரூபாய்க்கு கிலோ சர்க்கரை தர வேண்டுமென்று இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்ய முடியாத வேலையை தமிழக அரசு செய்ய முன்வந்து, அந்தச் சர்க்கரையை முதலாளிகளிடமிருந்து கட்டாயப்படுத்தி வாங்கினோம். அதுவும், மத்திய அரசாங்கம் இதற்கு உத்தரவு போடுவதற்கு முன்பே இதைச் செய்திருக்கிறோம். அமைச்சராக இருந்த உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது பழக்கமிருந்து, சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கும் இந்த ஆட்சியாளர்களிலே யாருக்காவது தொடர்பு இருந்து அதனால் தான் விலை ஏறியது என்று இந்த அவையிலே தெரிவிப்பார்களானால், அது எங்களுக்கு மாத்திரமில்லை, நாட்டிற்கும் நல்லதாக இருக்கும். அப்படி அவர்கள் சொல்லுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: பிரச்சினை எல்லாம் சர்க்கரை விலையேற்றம், சர்க்கரை கிடைக்காமல் போனதுபற்றித் தான். அதற்கு இன்றைக்கு மாநில ஆட்சியிலே இருப்பவர்கள் தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர, எங்களுக்கு ஒன்றும் தெரியாது. அது மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்டது

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [29th January 1972

என்று சொன்னால், நாங்கள் சொல்லுவதெல்லாம் இங்கிருக்கும் அரசாங்கம் அந்த நிலைமைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பதுதான். அப்படியில்லை என்றால், இன்னின்ன காரணங்களினால் இந்தச் சர்க்கரை கிடைக்காமல் போனது, இன்னின்ன காரணங்களினால் சர்க்கரை விலை ஏறிவிட்டது என்று உத்தியோக பூர்வமாக வலியுறுத்திச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படிக் கேளுங்கள், நான் சொல்லுகிறேன். 2 ரூபாய்க்கு ஒரு கிலோ சர்க்கரை போட வேண்டுமென்று மொத்த உற்பத்தியில் 60 சதவிகித சர்க்கரையை எடுத்திருக்கிறோம். தமிழ் நாட்டிலே மாத்திரமில்லாமல் இந்தியா முழுவதற்கும் உற்பத்தியைக் கணக்கெடுத்துக் கொண்டு, அதிலே 60% சர்க்கரையை ஒதுக்கி, நமக்கு 9,000 டன் சர்க்கரையை மத்திய அரசு கொடுக்கிறார்கள். இந்தச் சர்க்கரையை நாங்கள் ஹோட்டலுக்கு கொடுப்பதில்லை; வியாபாரிகளுக்குக் கொடுப்பதில்லை; மக்களுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லி உத்தரவு போட்டு, அதைக் கூட கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். திடீரென்று சர்க்கரை விலை ஏறியதற்குக் காரணம் என்ன என்று கேட்கிறார். அதற்குக் காரணம் என்னவென்றால், மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு இந்த சர்க்கரைக் கோட்டாவை விநியோகப்படுத்துவதற்கு—அதாவது 'அலாட்மென்ட் போட' சிறிது காலதாமதம் செய்தது. பிறகு நாங்கள் அந்த உத்தரவுக்கு ஏற்ப, மாவட்ட ஆட்சித் தலைவர்களோடும், அவர்களைச் சார்ந்த மற்றைய அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு, அந்த உத்தரவை எடுத்துச்சொல்லி, அந்தச் சர்க்கரையை எடுத்து திடீரென்று விற்க ஒரு இயந்திர அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஒரு வார காலம் எங்களுக்குப் பிடித்தது. அதே போல் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கூட்டுறவுச் சங்கங்கள் என்னென்ன செய்ய வேண்டும், ஹோல் சேலுக்கு எப்படிப் பணம் வர வேண்டும் என்பவைகளையெல்லாம் சிந்தித்துச் செயலாற்றி, கடைசியிலே இந்தச் சர்க்கரையை விநியோகத்திற்கு அனுப்பினார்கள். இதற்குள் சர்க்கரையின் விலை ஏறியது என்னவோ உண்மை தான். ஆனால், இப்பொழுது சர்க்கரை விலை குறைந்துவிட்டது; அரிசியின் விலையும் குறைந்துகொண்டு வருகிறது. இப்பொழுது விற்கும் சர்க்கரை விலையைக் கடைத்தெருவிலே மாத்திரமில்லாமல், பத்திரிகைகளிலேயும் போடுகிறார்கள். எனவே, காரணங்கள் இது தானே தவிர, வேறு காரணங்கள் இல்லை. எங்களுக்கும் சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கும் தொடர்பு இல்லை. எந்த முதலாளியையும் பார்த்து, சர்க்கரைவிலையை ஏற்றி விற்றுக் கொடுங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. அப்படி நடக்கின்ற இடமே வேறு.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக நடத்தப்படுகின்ற சர்க்கரை ஆலைகளுக்கும், மாநில அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கூட்டுறவு ஆலைகளிலே அரசாங்கம் அங்கம் வகித்தாலும், அதிலே உற்பத்தியாகும் சர்க்கரையைத் தொடக்கூடிய உரிமை எங்களுக்கில்லை. அந்தச் சர்க்கரையை எடுத்துப் பார்ப்பதற்கு, எடுத்து ருசி பார்ப்பதற்குக் கூட எங்களுக்கு அதிகாரம் கிடையாது. எக்சைஸ் டிபார்ட்மென்டார், உற்பத்தியாகும் சர்க்கரையை உள்ளே வைத்துப் பூட்டி விட்டதற்குப் பிறகு, மத்திய அரசாங்கம் அங்கேயிருந்து 'அலாட்மென்ட்' போட்டு அனுப்பியதற்குப் பிறகு தான், கூட்டுறவு ஆலைகளிலே உற்பத்தியாகும் சர்க்கரையைத் தொட முடியுமே தவிர, நாங்களாக ஒன்றும் செய்ய முடியாது.



29th January 1972]

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** இதையெல்லாம் நிவர்த்தி செய்ய நமக்கு மாநில சுய ஆட்சி தேவை என்று புலப்படுகிறது. (சிரிப்பு) கூட்டுறவு இயக்கங்களிலே அநேகமாக முன்பு பின்பற்றப்பட்ட முறைகளையெல்லாம் மாற்றியமைத்திருக்கிறார்கள். அதிலேயெல்லாம் நேரடியாக நியமனங்கள் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை நான் வரவேற்கிறேன். முன்பு எல்லாம் அவைகளிலே தலைவர்களாக இருந்தவர்கள் ஒரு குடும்பமாக, ஒரே ஆதிக்கத்தின் கீழே நடந்துவந்தன. அதை மாற்றி இப்படி ஒரு புரட்சிகரமான நிலைமைக்குக் கொண்டு வந்ததற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் முன்பு எல்லாம் இந்த அமைப்புகளில் பொறுப்பிலுள்ளவர்கள் அதிலே ஏதாவது தவறு செய்துவிட்டால் அல்லது பணத்தை கையாடல் செய்துவிட்டால், அதை அவர்களிடமிருந்து பின்னால் வசூலிப்பதற்கேற்ற வகையில் அவர்களெல்லாம் சால்வன்ட்டாக இருந்திருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது சமுதாயத்திலே பின் தங்கியவர்களை, ஏழைகளை நியமிக்கிறோம் அப் பொறுப்புகளில். இப்படி ஏதாவது ஒரு தவறு நடந்துவிட்டால், அவர்களிடமிருந்து இந்தப் பணத்தை எப்படி வசூல் செய்ய முடியும் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதாவது கையாடல் செய்தால், அதை உடனே "அட்ஜஸ்ட்" பண்ணிப் பணம் கட்டுகின்றவர்கள்தான் அப் பொறுப்புகளிலே இருக்க வேண்டுமென்று உறுப்பினர் கருதுகிறாரா?

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** அப்படிப்பட்டவர்கள் 'சால்வன்ட்டாக' இருந்தால் தான் நல்லது என்று நினைக்கிறேன். இப்படிப் பணம் திருப்பிக் கொடுக்க முடியாமலிருக்கும் கேசுகள் எத்தனையோ அரசாங்கத்தினிடம் இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏழை எளியவர்கள் சாதாரண மக்கள் இத்துறையிலே இருக்கும்பொழுது, இதிலே தவறு ஏதும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அரசுக்கு எச்சரிக்கை செய்வது நல்லதே தவிர, அப்படியில்லாமல் அவர்கள் தவறு செய்தால், பணம் கட்ட முடியுமா, எனவே பணம் கட்ட முடிந்தவர்களை நியமியுங்கள் என்று சொல்லுவது நல்ல தல்ல.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி**· எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தவறி பணம் போனாலும் கூட அந்தப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகள் உள்ளவர்களை நியமிக்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையே நியமனம் செய்யுங்கள். ஏழை எளியவர்களை நியமிப்பதால் எந்த ஒரு அமைப்பும் சீர் கேடாகப் போய்விடக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். பல கூட்டுறவு ஸ்தாபனங்களில் பொறுப்பில் இருந்தவர்கள் எல்லாம் லட்சக் கணக்கான பணத்திற்குச் சரியான ஜவாப் சொல்லவில்லை. கணக்குக் கொடுக்கவில்லை. அதற்காகக் கேஸ்கள் இருக்கின்றன. நான் அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. எப்படியாவது பணத்தை வசூலிக்க வேண்டுமென்று தான் சொல்லுகிறேன். நான் கேள்விப்படுகிறேன். ஒரு இடத்தில் ஒருவர் 15 லட்சம் கொடுக்க வேண்டும். ஒருவர் 1½ கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். அது விசாரணையில் இருக்கிறது. மீண்டும் விசாரிக்கிறார்கள் என்று பல ஆண்டுகளாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலைமைகள் எல்லாம் இனியும் இருக்கக் கூடாது. ஏற்கெனவே இருக்கிற நிலைமை மாற

வேண்டும். அதற்கு ஆவன நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உணவு அமைச்சர் சொன்னார்கள், சர்க்கரை விஷயத்தில் அது மத்திய அரசுக்குள்ள பொறுப்பு, அவர்களுக்குள்ள அதிகாரங்கள், ஆகவே எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லையென்று. எங்களுக்கு மாநில அரசு தான் பொறுப்பு, அவர்கள் தான் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**மிஸ்டர் சேர்மன் :** திரும்ப சர்க்கரை விஷயத்திற்குப் போகாதீர்கள். சர்க்கரை இனிக்காமல் கசக்கிறது.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :** இனிப்பாக மாற்றிவிடப் பார்க்கிறேன். ஆனால் மாநில சுய ஆட்சி இருந்தால், இதுமாதிரிப் பல சங்கடங்களை நாம் போக்க முடியும் என்று எண்ணுகிறோம். நமது முதலமைச்சர் அவர்கள் மாநில சுய ஆட்சி என்பதுபற்றி திட்டவட்டமான ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது மத்திய அரசின் பலத்தைப் பாதிப்பதாக இல்லை. அவர்களுக்குள்ள பலத்தை உடைக்க அல்ல. நம் மாநிலத்திலுள்ள மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அதிகாரங்கள் தேவை என்பதை அவர்கள் சொல்லி வருவதைப் பார்க்கிறோம். நம் மாநிலத்தில் தொழில் அபிவிருத்தி செய்வதில் எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன. 2, 3 நாட்களுக்கு முன்பு தொழில் அமைச்சர் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னார். இன்றைக்குப் பேசிய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் எங்களுக்குத் தொழிலே வேண்டாம், காலி பண்ணிவிடுங்கள் என்று சொல்லுகிற நிலைமைக்கு மத்திய அரசின் நிலைமை இருக்கிறதென்றால், இதைப் பார்க்கும்பொழுது தமிழகத்தை முன்னேற்றுவதற்கு நமக்கு இந்த வகையில் இருக்க வேண்டிய அவசியமான அதிகாரங்கள் தேவைதான். பொருளாதாரத் துறையிலும், தொழிற் துறையிலும் விவசாயத் துறையிலும், இன்னும் மற்றத் துறைகளிலும் நம் தமிழகத்திலுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி நாம் முன்னேற்றமடைவதற்கு நமக்கு வேண்டிய அதிகாரங்கள் அவசியம். இதில் எங்களுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. மாநில சுய ஆட்சி என்றால், ஒரு சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள். தனி நாடு கேட்கிறார்கள், இந்தியாவின் ஐக்கியம் உடையும் என்ற எண்ணத்தை உண்டாக்குகிறார்கள். ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக விளக்கம் கூறியதற்குப் பிறகு நமது மாநில மக்கள் நன்மைக்கு, முன்னேற்றத்திற்கு எந்த அளவுக்கு அதிகாரம் தேவை, கடந்த கால நிகழ்ச்சிகள் எவ்வளவு தூரம் பாதகமாக சாதகமாக இருந்தன என்று எண்ணிப் பார்க்கும்பொழுது, நமது மாநிலங்களுக்கு அதிகாரங்கள் தேவை என்று வற்புறுத்துவதில் எந்தத் தவறுமில்லை, அதற்காக அஞ்ச வேண்டியதில்லையென்ற நிலையை உணருகிறேன். அதற்காக எந்த ஒத்துழைப்புச் செய்யவேண்டுமோ அதைச் செய்யத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

விவசாயத் துறையில் மின்வசதி எல்லா கிராமங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பம்ப்புசெட்டுகளுக்கு அதிகமாக வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் எண்ணிக்கை லட்சக் கணக்கில் வளர்ந்துகொண்டிருக்கிறது என்று கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் விவசாயிகள் ஏதோ மின் கட்டணம் கட்டவில்லையென்றால், உடனே டிஸ்கனக்ட் செய்துவிடுகிறார்கள், அபராதம் போடுகிறார்கள், மறு இணைப்புக்குப் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. பெரிய மில் நடத்துகிறவர்கள் தமிழகத்தில் எதையுமே கட்டாமலே எப்படியோ காலதாமதம் செய்து அவர்கள்



தொழிலாளர்கள் இருக்கிற நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, வேண்டுமென்றால் டிஸ்கனக்ட் பண்ணுங்கள். இது தொழிலாளர் அரசு என்ற நிலையைக் காட்டிக்கொண்டு இன்றைக்கு பல கோடி ரூபாய் வசூலாகாமலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஏழை விவசாயிகளிடமிருந்து ரூ. 20, 30 பணத்திற்கு நிர்ப்பந்தம் இருக்கிறது. கோடிக் கணக்காக பாக்கி வைப்பவர்களுக்கு நிர்ப்பந்தமில்லை. அவர்கள் அரசாங்கத்தை மிரட்டுகிறார்களாம். வேண்டுமானால் டிஸ்கனக்ட் பண்ணுங்கள், லேபர் யூனியன் ஆச்சு, தொழிலாளர் அரசு ஆச்சு என்று சொல்லுவதாகச் சொல்லுகிறார்கள். எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று விளக்கம் சொல்வதற்குத்தான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் இரண்டொரு வார்த்தைகளோடு முடித்துக் கொள்ளுகிறேன். முதலமைச்சர் அவர்கள், சென்னையில் தொழில் அமைதியின்மை இருக்கிறது, எல்லோரும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு எங்கள் ஆதரவைத் தருகிறேன். எங்கள் கட்சிக்காரர்கள் தலையிடுகிறார்கள் என்று திட்டவட்டமாக, குறிப்பாகச் சொன்னால் அதைக் கவனித்து, ஆவன செய்ய முடியும், கட்சியை விட்டு நீக்க முடியும் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட சில சங்கடங்கள், தொல்லைகள், வேடிக்கையான நிலைமைகள் நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக கடலூருக்குப் பக்கத்தில் நெல்லிக்குப்பத்தில் போலீஸ் ஸ்டேஷனில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர் உள்ளே போய் அடித்துவிட்டு வந்திருக்கிறார்கள். சப் இன்ஸ்பெக்டர் லீவு போட்டுவிட்டு ஓடிவிட்டார். ஒரு மாதத்திற்குள் இருக்கிற போலீஸ்காரர்கள் எல்லோரும் என்னை விட்டால் போதும், அங்கே இருக்கவே முடியாது என்கிறார்களாம். கட்சியினுடைய நிலைமை அப்படி இருக்கிறது. இவைகளை நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இது ஒரு பெரிய குற்றச்சாட்டு. இந்தப் பத்துப்பேர் யார் என்று பெயர்களை தயவு செய்து வெளியிட வேண்டுகிறேன். இந்தத் தகவல் எனக்கு இதுவரை வரவில்லை. இப்போது தான் மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தகவலை வெளியிடுகிறார். அந்தப் பத்துப் பேர் யார் எந்தப் போலீஸ் அதிகாரியை அடித்தார்கள், அடிபட்ட போலீஸ் அதிகாரி பெயர் என்ன, என்ற விவரங்களை அறிவிக்க முடியுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :** அங்கே உள்ள வட்டச் செயலாளர், நகரச் செயலாளர், வேண்டுமானால் பெயரைக்கூடச் சொல்லுகிறேன். பக்கத்து ஊர். கண்டிப்பாகக் கேட்டு எழுதியனுப்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எந்த வட்டச் செயலாளர், நகரச் செயலாளர்?

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :** நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்தவர்கள். மது வினியோகத்தைப் பற்றி முதலமைச்சர் சொன்னார்கள், சென்னை ஹோட்டல்களில் மது விநியோகிக்கப்படுகிறது என்று. அதற்கு பதில் சொல்லுகிற முறையில் பத்தாயிரம் ரூபாய் ஒரு ஆண்டுக்குக் கட்டணம் கட்டி விநியோகிக்கப்படுகிறது. அப்படிச் சில ஹோட்டல்கள் பெயரைச் சொன்னார்கள்.

---

* Expunged as ordered by the Chair.

[29th January 1972

* THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, the Governor's Address refers to the brilliant victory that we have won in the recent War. Now when the war is over, we shall earn the benefit of a rich peace. Sir, in speaking on the Governor's Address, I would like to highlight three matters, which probably have not been mentioned. But one of them has been mentioned in a passing reference. Sir, the Governor's Address says that the Government of Tamil Nadu have announced measures and taken steps which will give utmost relief to the dependants of the deceased soldiers who are entitled to every consideration as members of our family. The Government have not only rewarded with high amounts the military personnel who have been awarded Vir Chakra and Paramvir Chakra, etc., but have also shown consideration to the dependants of personnel killed in action and they have been richly compensated. But, Sir, I would like to mention that the Government have not announced relief to those soldiers, who may get discharged from the Army and come back to our Tamil Nadu and try to earn some means of livelihood for themselves. Sir, in the year 1946, the Government embarked on several Co-operative Societies to house disabled or discharged ex-servicemen. Sir, with the recent coming in of the nationalisation of the Transport system, these co-operatives have been deprived of their buses and virtually they are now confronted with the problem of meeting and finding a solution to their deprived means of livelihood. I would request the Government of Tamil Nadu who have brought in such ameliorative measures for the dependants of the deceased soldiers also to consider relief for those who are fortunately living in our midst to find out means for their livelihood, after being discharged from the defence forces. I would request the Government even now to consider the forming of Co-operatives for buses plying on routes which have not been taken over by the Nationalised Transport and give them to ex-servicemen and servicemen who may return on a co-operative basis. Naturally, the Government also can have a share in the shape of shares in those co-operative societies. I would earnestly request the Government to take this matter into consideration.

The next matter which I wish to point out in some detail and about which I find that both the Hon. the Minister for Education and the Hon. the Chief Minister have assured consideration to this House in answer to Question No. 9 appearing in to-day's postponed questions is about the representation made by the Tamil Nadu Graduate Teacher's Association during March-April 1971, for refixation of their scales of pay. Sir, I am glad that the Government have assured the House that they would reconsider their representaton and pay adequate regard to the situation in which these teachers have been placed and do something for them in the matter of refixation of their pay. Sir, I would, in this connection, bring to the notice of the Government, as already pointed out to the Government by some members of this House that Resident Tutors, Engineering Instructors, Tutors in Violin, Tutors in Veena as well as



29th January 1972] [Thiru G. Vasantha Pai]

Executive Officers in Grade II attached to the temples were all in the same grade, along with the B.T. Assistants of Rs. 140—5—230—10—250 while in the case of the Resident Tutors, Engineering Instructors, Tutors in Violin, Tutors in Veena and Executive Officers in Grade II attached to temples, a higher grade of Rs. 325—15—550 running up to Rs. 650 have been given. The B.T. Assistants in Schools have not been put in this grade, but put in the grade of Rs. 275—10—450. Sir, I would say that after all, B.T. Assistants who have got double Graduate degrees to their credit have the right to feel hurt by the fact that while persons who are Engineering Instructors, Resident Tutors, who did not have such double graduate qualifications and some of them being only Licentiate in Mechanical Engineering with S.S.L.C. qualification have been upgraded, they have not been. The B.T. Assistants would naturally feel hurt at this sort of discrimination. They may feel that the Government have not taken into consideration their relative merits in the refixation of their salaries. Sir. I would suggest that the Government should consult all the members of the Teachers' and Graduates' Constituencies in this behalf and have a Consultative Committee to go into this matter fully and a proper fixation should be made in their salaries. At the same time, the existing difficulties also can be considered in the process.

Sir, I have also to refer to a communication which the Madras University Teachers' Association has received from the Vice-Chancellor on 1st November 1971 stating that the question of refixation of the salary of the persons employed in the University in the A.C. College of Technology and other University institutions, who drew a salary of Rs. 400, Rs. 700 and Rs. 1,100 before 2nd October 1970 which is very much lesser than what their counterparts are drawing in Government institutions in receiving attention. While a Lecturer drew in the University Rs. 400 before 2nd October 1970, his counterpart in the Engineering College is drawing 584, whereas a Tutor in the University drew a salary of Rs. 700, his counterpart in the Engineering College drew a salary of Rs. 795 while a Professor in the University drew Rs. 1,100, his counterpart in the College of Engineering drew Rs. 1,300. Now all these persons in Government Colleges are drawing more by way of allowances. Their D.A. is merged with their salary. Now the matter of evening out the difference in scales between the teaching staff in the Universities and Government Colleges is engaging the attention of the Government from 1st November 1971, in accordance with the communication received by the University Teachers Association from the University. The University of Madras is corresponding with the Government in regard to matters of the increased allowances and refixation of salary.

I would request the Government to give their urgent attention to this question. As has been pointed out by several members in this House, education is one of the things which

[Thiru G. Vasantha Pai] [29th January 1972

ought to receive conideration at the hands of a benign Government. Therefore, the persons who are entrusted with the task of educating our children should feel satisfied and should not feel hurt that their claims are being overlooked. Their counterparts in other places draw more salaries probably because of their technical qualification, but nonetheless they have lesser educational qualifications. Sir, I am sure that the Hon. the Chief Minister as well as the Hon. the Education Minister who have given an assurance in this House will try to redress the grievances of these people and also give them relief in the best possible manner that they could do.

Sir, in conclusion, I would like to say that I assciate myself with all that has been said in the Governor's Address about the victory which we have achieved and also about the very hard future that lies before us and I agree we have to fight and keep ourselves vigilant right through the years to come. In view of the peace that we have won, being not of a very lasting nature, and in view of the presence of enemies around us, we shall in the future strive our best and act also in a manner worthy of a rich peace, which is our rightful due.

Thank you, Sir.

*திரு. கே. எஸ். அப்துல் வகாப்:* தலைவர் அவர்களே, மேதகு கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி செலுத்தும் தீர்மானத்தின் மீது பேசுவதற்காக நான் மிக மகிழ்கிறேன்.

நமது கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக அவருக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்று பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆரம்பத்திலேயே மாநில சுயாட்சி பற்றி விளக்கமாக, விரிவாகப் பேசினார்கள். மாநில சுயாட்சி என்ற கோரிக்கை இவ்வளவு பெரும் சர்ச்சைக்கு உரிய பிரச்னையாக உருவெடுத்திருக்கிறது ஆச்சரியம் அளிக்கக் கூடியது தான். ஏனென்றால் மாநிலத்துக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதை எல்லோருமே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த விவகாரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் பல தலைவர்களின் பேச்சுகளின் பகுதிகளை இந்த அவையில் படித்துக் காட்டினார்கள். திரு. காமராஜ் உட்பட, அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அப்படி இருக்க இதற்கு ஏன் இவ்வளவு பெரிய எதிர்ப்புக் குரல் எழுப்பப்படுகிறது என்பது தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நம்முடைய அருமை முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள் நாம் கேட்பது பிரிவினை அல்ல என்பது. ஆனால் அதை வியாக்கியானம் செய்கிறவர்கள் மாநில சுயாட்சி என்றால், சுய ஆட்சி என்ற வார்த்தைக்கு சுதந்திர நாடு என்று பொருள், ஆகவே பிரிவினை அர்த்தம் தான் தொனிக்கிறது என்று சொல்கிறார்கள். சுய ஆட்சி என்பதற்கு சுதந்திரம் என்று பொருள் என்பது உண்மை. இந்த இரண்டு வார்த்தையுடன் கூட மாநிலம் என்பதைச் சேர்த்து



29th January 1972] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

வைத்திருக்கிறார்கள். ஆகவே சுதந்திரத் தமிழ் நாடு வேண்டும் என்பது பொருள். மாநிலம் என்றால் ஒரு தேசத்தின் ஒரு பகுதி.

இந்த நாட்டின் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில், எங்கள் தலைவர், கண்ணியத்துக்குரிய தலைவர் காய்தே மில்லத் கான்ஸ்டிடுவென்ட் அசெம்பிளியில் பேசினார், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று. அந்த முறையில் தி.மு. கழகத்தின் மாநில சுயாட்சி கோரிக்கைக்கு முஸ்லிம் லீக் முழு மனதுடன் ஆதரவு தெரிவிக்கிறது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னென்ன அதிகாரங்கள் தேவை என்பதைத் தெளிவாக விளக்கவில்லை. ஆகவே அவைகளைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று இந்தச் சர்ச்சையைக் குழப்புகிறவர்கள் கூறுகிறார்கள். இதற்கு முதல்வர் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப்பற்றி எனக்குத் தோன்றுகிற சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அருமை முதல்வர் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களோ அல்லது திருத்தம் செய்வார்களோ எனக்குத் தெரியாது. மாநில சுயாட்சி என்னும்போது இந்த மாநிலம் மத்திய அரசின் ஒரு பகுதியாக இருக்கும். பிரிவினை இல்லை. மத்திய அரசின் 3 இலாகாக்கள் இருந்தால், போதும். ராணுவம், அயல் நாட்டு விவகாரங்கள், டிரான்ஸ்போர்ட் ஆகிய இந்த மூன்றும் மத்திய அரசின் பொறுப்பில் இருக்கும். ஏனைய அத்தனை இலாகாக்களும் மாநிலத்திலே இருக்க வேண்டும். பொருளாதாரம் பூராவும் நம் கையில் இருக்க வேண்டும். நம்மிடமிருந்து அவர்கள் ஏதாவது வாங்கிக் கொள்ள வேண்டும். கரன்ஸி போடும் உரிமை நம்மிடத்தில்தான் இருக்கவேண்டும். கல்வி, சுகாதாரம் போன்ற காரியங்களில் அவர்களின் தலையீடு இருக்கக்கூடாது. இந்த அடிப்படையில்தான் மாநில சுயாட்சி அமைய வேண்டும். இது என் சொந்தக் கருத்துதான் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பஸ் டிரான்ஸ்போர்ட்டைப்பற்றி நான் பலமுறை பேசியிருக்கிறேன். அப்படிப் பேசும்போதெல்லாம் குறைகளைத்தான் பேசியிருக்கிறேன். இன்றைய தினம் பஸ் டிரான்ஸ்போர்ட் விருத்தியடைந்த விதத்தைப் பார்த்து இந்த அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன். மிகவும் பாராட்டக்கூடிய வகையில் பஸ் டிரான்ஸ்போர்ட் விருத்தியடைந்திருக்கிறது.

மைசூர் மாநிலத்தில் இரவு நேரங்களில் தூங்கும் வசதியுடன் பஸ் விடுகிறார்கள். அந்த வசதியை இங்கேயும் செய்தால் மக்களுக்கு நன்மையாக இருக்கும். இதை இந்த அரச ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்டலிலே இருந்து அசெம்பிளிக்குப் போக வர அசெம்பிளி நடக்கும் பொழுது, ஸ்பெஷல் பஸ் விடப்படுகிறது. அசெம்பிளி இல்லாத நேரங்களிலே இந்தத் தொடர்பு இல்லை. ஆனால் டாக்சி கிடைக்கிறது. டாக்சி கூட சில சமயங்களிலே கிடைப்பதில்லை. நாங்கள் கமிட்டி கூட்டத்திற்கு வருகிறோம். அப்பொழுது டாக்சியும் கிடைப்பதில்லை; பஸ்ஸும் கிடையாது. அதனால் ஒரு மணி நேரம் காலதாமதம் ஆகும் நிலைமை ஏற்படுகிறது. எனவே ஹாஸ்டலுக்கும், அசெம்பிளிக்கும் எப்பொழுதுமே பஸ் போக்கு வரத்து இருக்கிறமாதிரி தொடர்ந்து ஏதாவது வையுங்கள்; ஸ்பெஷல் பஸ் விட்டால் நல்லது; அல்லது ரூட் பஸ்களை 'வயா ஹாஸ்டல்' என்கிற மாதிரி ஏற்பாடு செய்தால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [29th January 1972

இஸ்லாமியர்கள் எல்லோரும் பிற்பட்டவர்கள் என்று பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட காலமாகப் பலமுறை வற்புறுத்திச் சொல்லிக் கொண்டே வருகிறோம். ஆகவே, இந்த அரசு அந்தக் கோரிக்கையைக் கருணை உள்ளத்துடன் பார்த்து மேற்கொண்டு இதைத் தாமதிக்காமல் உடனடியாகத் தமிழ் நாட்டில் இருக்கும் இஸ்லாமியர்கள் அத்தனை பேரும் பிற்பட்டவர்கள் என்று பிரகடனப்படுத்தி, தாங்கள் எல்லாம் ஓரளவுக்குத் திருப்திப்படும் அளவுக்கு வகை செய்யவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்து, உருது பேசக் கூடிய முஸ்லீம் பெண்களுக்கு என்று ஒரு டிரெயினிங் ஸ்கூல் இருக்கிறது இந்த மாநிலத்திலே. அந்த டீச்சர்ஸ் டிரெயினிங் ஸ்கூல்" சில வருஷம் சென்னையிலேயும், மற்றும் சில வருஷம் திருச்சியிலேயும் இயங்குகிறது. இப்படி மாறி, மாறி இயங்குவதால், உருது படிக்கக்கூடியவர்கள் சரிவரப் படிக்க முடியாத நிலைமை இருக்கிறது. இதைத் திருத்தியமைத்து, சென்னையில் ஒரு ட்ரெயினிங் ஸ்கூலும், திருச்சியில் பர்மனண்ட்டாக ஒரு ட்ரெயினிங் ஸ்கூலும் துவக்க அரசு முன்வர வேண்டும், முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து; திருச்சியில் ஒரு மெடிகல் காலேஜ் திறப்பதற்காக ஒரு திட்டம் இருந்தது. ஆனால் அதுபற்றி இப்பொழுது பேச்சு மூச்சு காணோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, அப்படிப்பட்ட கல்லூரி கோயம்புத்தூர், சேலம், திருச்சி போன்ற இடங்களிலே ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், அதைப் பற்றி ஒன்றுமே இல்லாத நிலைமை உருவாக்கப்பட்டது. தயவுசெய்து, தாமதிக்காமல் அதைச் சீக்கிரமாகத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருச்சியில் ஒரு சிறு விவகாரம். ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்குத் தண்ணீர் சரியாக விடப்படவில்லை என்ற பிரச்சினையில் வில்வகுடி என்ற இடத்திலே ஒரு சிறு மோதல் ஏற்பட்டு, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். விஸ்வகுடிக்குப் பக்கத்திலே ஒரு ஏரிகட்டி, அந்தப் பிரச்சினையைச் சாதாரணமாகத் திர்த்துவிடக் கூடும். அது பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட திட்டம்; ஆனால் அது அமுல்படுத்தாமல் விடப்பட்டு, பல சிக்கல்களுக்கு அது காரணமாக அமைகிறது. எனவே, இந்த ஏரியைச் சீக்கிரமாக உருவாக்கி, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்து, பள்ளிவாசல் சமீபத்திலே சில இடங்களிலே கள்ளுக்கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் பல சிக்கல்கள், பல குந்தகங்கள் ஏற்படுகின்றன என்று அரசுக்கு எழுதித் தெரிவித்தும், நடவடிக்கை எடுக்கப்படாமலிருக்கிறது. திருச்சியிலே அப்படி இருக்கிறது. கும்பகோணத்திலே இருந்து கூட அப்படி இருப்பதாக அடிக்கடி தெரிவிக்கிறார்கள். எனவே, இதுபற்றி அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குதிரைப் பந்தயத்தை முடிந்தவரை நிறுத்திவிடுவதாக திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதாவது "எலக்ஷன் மேனிபெஸ்ட்டோவில்" 1967-இலே பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் 1971 ஆவது ஆண்டு தேர்தல் அறிக்கையிலே அது இருக்கிறதோ என்னவோ நான் கவனிக்கவில்லை. அதுபற்றி எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



29th January 1972] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

அது எடுக்கப்பட்டால், மக்களுக்கு நன்மை செய்ததாக இருக்கும். எனவே, அதைப்பற்றி கவனிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து அமைகிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. on Monday, the 31st January 1972.

The House then adjourned.

## APPENDIX I

[Vide answer to Starred Question No. 59 on page 209)

(அ) இந்திய அரசு, சென்னைக்கு அருகில் உள்ள அலமாதியில் மத்திய எருமைப் பண்ணை ஒன்றைத் துவங்கத் திட்டமிட்டுள்ளது.

(ஆ) (1) நான்காவது திட்டக்காலத்தில் இப்பண்ணையை அமைப்பதற்காக இந்திய அரசினால் ரூ. 82.91 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(2) முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் 300 மூர்ரா எருமைகள் இனப்பெருக்க வயதடைந்த கிடேரிகள் கொண்ட தொடக்க இருப்பு படிப்படியாக ஏற்படுத்தப்படும். பஞ்சாபிலுள்ள கால்நடை வளர்ப்புப் பகுதிகளிலிருந்தும் பல்வேறு மாநில எருமைப் பண்ணைகளிலிருந்தும் இவை பெறப்படும்.

(3) தொழில் நுட்ப திட்டங்களுக்கு இணங்க மட்டுமே பண்ணைகளில் கால்நடைகள் இனப்பெருக்கம் செய்யப்படும்.

(4) இனவிருத்தி சோதனை, இனவிருத்தித் திறனின் தன்மையைக் கண்டுபிடிக்க நடத்தப்படும். அது அரசு கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், விந்து சேமிப்பு நிலையங்கள் அனைத்து நாடுகள் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதியில் அதனதன் சிறந்த தன்மையையொட்டி வழங்கப்படும். உள்ளதற்குள் சிறந்தவை பண்ணையின் உபயோகத்திற்காகப் பண்ணையிலே வைத்துக்கொள்ளப்படும்.

(5) இனவிருத்தித் திறனுடைய எருதுகளுக்கும் (தந்தை விலங்கு) அதிகப் பால்தரும் எருமைகளுக்கும் (தாய் விலங்கு) பிறந்த 80 மூர்ராக் காளைகள், மாநிலங்கள், யூனியன் நேரடி ஆட்சிப்பகுதிகள் முதலியவற்றுக்குக் கால்நடை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு நான்காவது ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இன விருத்திக்கென்று விற்பனை செய்யப்படும்.

(6) சென்னைக்கருகில் உள்ள அரசினர் பாற்பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 1,000 முதல் 1,200 லிட்டர் பால் கிடைக்கச் செய்யப்படும்.

(7) பண்ணை முழு அளவில் நிறுவப்படும் பொழுது ஆண்டொன்றுக்கு ரூ. 6 லட்சம் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(8) பண்ணையின் சிறந்த வகை இனங்களின் இனவிருத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 2.5 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதம் ஆக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[29th January 1972

(9) பண்ணை முழு அளவில் நிறுவப்படும்பொழுது அதில் 750 கால்நடைகள் இருக்கும். இதுவே நாட்டில் உள்ள முர்ரா எருமைப் பண்ணைகளில் பெரியதாக இருக்கும். அறிவியல் முறை வளர்ப்புப் பண்ணையாக இது இருக்கும். அறிவியல் முறை வளர்ப்புப் பண்ணையாக இது இருக்குமேயன்றி வணிகத் தன்மை கொண்ட பண்ணையாக இருக்காது.

(10) இந்தப் பண்ணை, பாற்பண்ணை மந்தைகளை நிர்வகித்தல், தீவினப் பயிர்கள், அறிவியல் முறையில் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் ஒரு கட்டிட விளக்கப் பண்ணையாகத் திகழும். இப்பண்ணை, மற்ற நாடுகளில் இன வளர்ப்புக் காரியத்திற்காக இனவிருத்திச் சோதனை செய்யப்பட்ட முர்ரா எருமைக் கடாக்களையும் வழங்கலாம்.

## Appendix II.

[Vide answer to Starred Question No. 60 on page 211)

தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பு தீவிர குடும்ப நல இயக்கமொன்றை செயல்படுத்துவதற்காக 20-10-1971 முதல் 14-11-1971 முடிய பிரச்சார இயக்கமும் 15-11-1971 முதல் 10-1-1972 முடிய சேவை இயக்கமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 15,000 அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரின் செயற்குறிப்பு ஒன்றினை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த இயக்கத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட கூடுதல் சலுகைகள் அளிக்கப்படுகின்றன :—

(1) ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உடல்நல நிலையங்களிலும் (Health Resorts) தங்கி அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் சிறப்பு சாப்பாட்டுச் செலவுக்காக ஒவ்வொரு நாளும் ரூ. 3.50 கொடுக்கப்படுகிறது.

நிலைமை சிக்கலாகி மேலும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டியவர்களுக்கு மேலும் நான்கு நாட்களுக்கு உணவிற்காக மேற்கண்ட விகிதத்தில் செலவு அனுமதிக்கப்படுகிறது. அவ்வாறு தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை 5 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது.

(2) அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3 வீதம் போக்குவரத்து செலவுக்காக ரூ. 45,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

(3) அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் கூடுதலான ஈடுசெய்யும் நிதியை அளிப்பதற்காக ரூ. 1.50 லட்சத்திற்கு மேற்படாமல் நன்கொடை வசூலிப்பதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று தீவிர குடும்ப நலத்திட்ட இயக்கத்தை செயல்படுத்தும் பணியில் ஈடுபடும் மருத்துவ அதிகாரிகளுக்கும் மற்ற ஊழியர்களுக்கும கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன :—

1. மருத்துவ அதிகாரிகள் முழு தினப்படியை பெறுவதற்காக பயண விதிகள் தளர்த்தப்படுகின்றன.



29th January 1972]

2. ஆண் நபர் ஒருவருக்கு வாசெக்டமி சிகிச்சை செய்தால் ரூ. 3-ம் பெண் நபர் ஒருவருக்கு கருத்தடை வளையம் பொருத்துவதற்கு (IUCD Insertion) ரூ. 1-ம் மருத்துவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

3. பயிற்சி மருத்துவர் (House Surgeon) ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் தினப்படியாக ரூ. 5 தீவிர இயக்க காலத்தில் கொடுக்கப்படுகிறது.

தீவிர குடும்பநலத் திட்ட இயக்கங்கள் நடைபெறும் மற்ற மாவட்டங்களுக்கு அனுமதிப்பதுபோல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் மற்ற செயல் குறிப்புகளான விளம்பரம் ,பிரச்சாரம், படுக்கை, தலையணை, ஆடைகள், மருந்துகள் மற்றும் "யூனிசெப்" நிறுவனத்தாரின் வண்டிகளை உபயோகித்தல் ஆகியவற்றிற்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

சாதாரணமாக வாசெக்டமி (ஆண் அறுவை) மற்றும் டியூபெக்டமி (பெண் அறுவை) அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நபர்களுக்கு ரூ. 30 வீதம் ஈடு செய்யும் தொகையாக அளிக்கப்படுகிறது.

குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தின் கீழ் ஈடுசெய்யும் தொகையாக கொடுக்கப்படும் தொகையான ரூ. 30-க்கு மேல் பெரிய அளவில் நடக்கும் வாசெக்டமி இயக்கங்களில் நடக்கும் ஒவ்வொரு வாசெக்டமி அறுவை சிகிச்சைக்கும் ரூ. 20 கொடுப்பதென சமீபத்தில் மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது. அது கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியான பின்பு அளிக்கப்படும் :—

1. முகாம்களில் அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சையின் தரம் மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். மேலும் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்றின் அறுவைப் பேராசிரியரின் கீழ் அது கண்காணிக்கப்பட்டு அந்த மருத்துவம் அளிக்கப்படவேண்டும். அறுவை சிகிச்சை செய்வதற்கான முன்னெச்சரிக்கைகளிலோ முறைகளிலோ எந்த விதத்திலும் தளர்வு இருக்கக்கூடாது.

2. திட்டமிட்ட, வேகமான திறமையான மருத்துவ "தொடர் நடவடிக்கை" இருத்தல் வேண்டும்.

3. குறைந்த பட்சம் 10,000 அறுவை சிகிச்சைகளாவது இவ்வித இயக்கங்களில் நிர்ணயிக்கப்படலாம்.

மத்திய அரசின் மேலே கூறப்பட்ட நிர்மானத்தையொட்டி, மதுரை, தென்னாற்காடு சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நவம்பர் மற்றும் டிசம்பர் 1971-ல் தீவிர குடும்ப நல இயக்கம் நடக்கவிருக்கிறது. இந்த இயக்கங்கள் கீழே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள அறுவை சிகிச்சை இலக்கை அடைவதற்காகவே அமைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. தஞ்சாவூர் மாவட்டம் | 15,000 அறுவை சிகிச்சைகள் |
| 2. தென்னாற்காடு மாவட்டம் | 20,000 அறுவை சிகிச்சைகள் |
| 3. மதுரை மாவட்டம் | 12,000 அறுவை சிகிச்சைகள். |
| 4. சேலம் மாவட்டம் | 15,000 அறுவை சிகிச்சைகள். |

இந்தவிதமான ஊக்க சலுகைகள் மற்ற மாவட்டங்களுக்கு கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி பரிசீலனையில் உள்ளது.

## APPENDIX III

(*Vide* answer to Starred Question No. 54 on page 217)

**மேலவை முன் வைக்கப்படும் விவர அறிக்கை**

1—9—1971-ல் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் முடிவு பெறுமலுள்ள முறையீடுகளின் பட்டியல்.

| தொடர் எண். (1) | முறையீடுகளின் தன்மை. (2) | எவ்வளவு காலம் முடிவு பெறுமல் உள்ளது. (3) | யாரிடம் முடிவு பெறுமல் உள்ளது. (4) | பள்ளிக் கல்வி இயக்குநர் எடுத்த நடவடிக்கை. (5) |
|---|---|---|---|---|
| 1. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல் திரு எம். தேவராஜன்—ஓய்வு பெற்ற பள்ளி துணை இன்ஸ்பெக்டர் (தென் ஆர்க்காடு மாவட்டம்) 31—7—63-க்கு முன்பு சம்பளம் கொடுப்பதில் ஏற்பட்ட தாமதம். | எப்ரல் 1970 | மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம். | காஞ்சிபுரத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 2. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல் திரு. என். கிருஷ்ணசாமி, தொடக்க நிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி, பெரிய கரை, தேவகோட்டை ஒன்றியம்—ஊதிய உயர்வுகள் வழங்குவதில் தாமதம்—சம்பந்தமாக. | ஜனவரி 1971. | தலைமைக் கல்வி அலுவலர், இராமநாதபுரம். | இராமநாதபுரம் தலைமைக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 3. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல் திரு எஸ். தங்கராஜனின் மனைவியாகிய திருமதி கே. ராஜத்திற்கு உரிய விடுப்பை வழங்குவதில் தாமதம்—வருங்கால வைப்பு நிதி வழங்குதல். | மார்ச் 1971. | கிராம வளர்ச்சித் துறை இயக்குநர். | கிராம வளர்ச்சித் துறை இயக்குநரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 4. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல் திரு பி. எம். சுப்பிரமணியம், ஓய்வு பெற்ற ஆசிரியர்—பாண்டவர் மங்கலம் அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம்—20—5—1962 லிருந்து 3—6—1962 வரை கோடை விடுமுறைச் சம்பளம் அளிப்பதில் தாமதம்—விரைவான முடிவு வேண்டுதல்—சம்பந்தமாக. | மார்ச் 1970. | மாவட்டக் கல்வி அலுவலர், கோவில்பட்டி. | கோவில்பட்டி மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 5. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல் திரு எ. பி. நடராஜன், வேலூர்—8—2—1967 லிருந்து 6—4—1967 வரை சம்பளம் கொடுப்பதில் தாமதம்—விரைவான முடிவு வேண்டுதல்—சம்பந்தமாக. | ஜூன் 1970. | தலைமைக் கல்வி அலுவலர், வேலூர். | வேலூர் தலைமைக் கல்வி அலுவலருக்கு நினைவூட்டு அனுப்பப்பட்டது. |
| 6. | கல்வி—சம்பளம் கொடுக்கவில்லை என்பதாக காட்டுப்பாக்கம் எஸ். சி. வி. கே. எஸ். உயர் துவக்கப்பள்ளி நிர்வாகத்தின் மீது முறையீடு—ஆசிரியை திருமதி மோஹனுபாயிடமிருந்து மனு. | நவம்பர் 1970. | மாவட்டக் கல்வி அலுவலர், காஞ்சிபுரம். | காஞ்சிபுரம் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து தகவல்கள் எதிர் பார்க்கப்படுகின்றன. |
| 7. | முறையீடுகள்—இராமநாதபுரம் மாவட்டம், திரு. எம். ஆர். சங்கரப்ப நாயக்கர், நிர்வாகி,—சம்பள பாக்கி கொடுக்கப்படாமலிருப்பது. | எப்ரல் 1971. | மாவட்டக் கல்வி அலுவலர், விருதுநகர். | இதைப் போன்றதொரு நேர்வில் ஆணைவேண்டி அரசுக்கு எழுதப்பட்டது. அரசிடமிருந்து ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. |

| தொடர் எண். (1) | முறையீடுகளின் தன்மை. (2) | எவ்வளவு காலம் முடிவு பெறாமல் இருக்கிறது. (3) | யாரிடம் முடிவு பெறாமல் உள்ளது. (4) | பள்ளிக் கல்வி இயக்குநர் எடுத்த நடவடிக்கை. (5) |
|---|---|---|---|---|
| 8. | துவக்கக் கல்வி—உதவி பெறும் வாசவி இடைநிலைப்பள்ளி, சேலம்—நிறுத்தி வைக்கப்பட்ட மானியத்தை அளித்தல்—வேண்டப்படுகிறது—சம்பந்தமாக. | ஜனவரி 1971. | மாவட்டக் கல்வி அலுவலர் சேலம். | சேலம் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 9. | துவக்கக் கல்வி—அரசுதவி பெறும் நேத்தாஜி துவக்கப்பள்ளி, திருவள்ளூர், பேணுதல் மானியம்—கொடுக்கப்படாதது—சம்பந்தமாக. | பிப்ரவரி 1971. | மாவட்டக் கல்வி அலுவலர், திருவள்ளூர். | திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 10. | சில குறைகளைத் தீர்த்தல்—திரு. எஸ் சோமசுந்தரம், அரக்கோணம்—சம்பளம், வருங்கால வைப்பு நிதி அளிப்பதில் தாமதம்—சம்பந்தமாக. | ஜூன் 1971. | மாவட்டக் கல்வி அலுவலர், செங்கற்பட்டு. | செங்கற்பட்டு மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 11. | முறையீடுகள்—சிதி கும், களைத் தீர்த்தல் திருமதி ராமா பேகளி,பள்ளி ஆசிரியை, அரசினர் ஹேபர்ட் பள்ம் சம்பளப் பாக்கி கொடுப்ப ல் தாமதம்—சபந்தமாக. | ஜூன் 1971. | பள்ளித் தலைமை ஆசிரியை. | தலைமை ஆசிரியையிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 12. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல் திரு. எம். வி. சுப்ரமணியன் நெசவு ஆசிரியர், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, குருமூர்த்தி நகர்—சம்பளத்தை மீண்டும் நிர்ணயித்தல் முதலியவை. | மார்ச் 1970. | தலைமைக் கல்வி அலுவலர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் தலைமை கல்வி அலுவலரிடமிருந்து பதில எதிர்பார்க்கப்படுகிறது. |
| 13. | முறைு கேள்—லசி குறைளைத் தீர்த்தல்—திரு கே. சுப்பய்யா, சிற்றழுத்தர், அரசினர் ஆதார பள்ளி, சிவகங்கை—பணியை முறைப்படுத்துவதில் தாமதம். | செப்டம்பர் 1969. | தலைமைக் கல்வி அலுவலர் இராமநாதபுரம். | இராமநாதபுரம் தலைமை கல்வி அலுவலரிடம் முடிவாகாமல் உள்ளது. |
| 14. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல்—திரு. கே. அமலம் மெர்லி, கன்னியாகுமரி மாவட்டம்—விடுப்புச் சம்பளம் அளிப்பதில் தாமதம்—விரைவான முடிவு வேண்டுதல்—சம்பந்தமாக. | மே 1971. | தலைமைக் கல்வி அலுவலர், திருநெல்வேலி. | திருநெல்வேலி தலைமை கல்வி அலுவலருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அரசு கணக்குத்துறைத் தலைவரிடம் இது முடிவு பெறாமல் உள்ளது. |
| 15. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல்—திரு பி. வி. வேங்கடவரதன், சம்பளம் பணிக்கொடை வழங்குவதில் தாமதம். | மே 1971. | பள்ளிக் கல்வி இயக்குநர். | பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் முடிவு பெறாமலிருக்கிறது. |
| 16. | முறையீடுகள்—திரு எஸ். குருஸ்வாமி, ஆசிரியர், எம். எல். டபிள்யூ. உயர்நிலைப் பள்ளி, மதுரை—சம்பளம் கொடுப்பதில் தாமதம்—சம்பந்தமாக. | பிப்ரவரி 1971. | மாவட்டக் கல்வி அலுவலர், மதுரை. | மதுரை மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து தகவல் கேட்கப்பட்டிருக்கிறது. |
| 17. | முறையீடுகள்—தர்மபுரி மாவட்டத்தில் அரசினர் (மாவட்ட) சிறுவர் பள்ளிகளில் பல ஆண்டுகளாக மருத்துவ செலவு ஈடு செய்யப்படாமல் உள்ளது. | நவம்பர் 1970. | மாவட்டக் கல்வி அலுவலர், சேலம். | சேலம் மாவட்ட கல்வி அலுவலரிடமிருந்து தகவ.ல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 18. | முறையீடுகள்—திரு பி. நாராயணசாமி, இடைநிலைத் தர ஆசிரியர், அரசினர் முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி, கோரிக்கடவு, மதுரை மாவட்டம்—மேல் முறையீடு குறித்து முடிவு எடுக்கப்படுவதில் தாமதம்—சம்பந்தமாக. | ஏப்ரல் 1971. | தலைமைக் கல்வி அலுவலர், மதுரை. | மதுரை தலைமைக் கல்வி அலுவலரிடமிருந்து தகவல் கேட்கப்பட்டுள்ளது. |

| தொடர் எண். (1) | முறையீடுகளின் தன்மை. (2) | எவ்வளவு காலம் முடிவு பெறாமலுள்ளது. (3) | யாரிடம் முடிவு பெறாமல் உள்ளது. (4) | பள்ளிக் கல்வி இயக்குநரெடுத்த நடவடிக்கை. (5) |
|---|---|---|---|---|
| 29. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல்—திரு என். ஆர். சீனிவாசராகவன், ஓய்வு பெற்ற ஆசிரியர்—வைத்தீஸ்வரர் உயர்நிலைப் பள்ளி, மேட்டூர் அணை—ஓய்வூதியம் அளிக்சப்படுவதில் தாமதம்—விரைவான முடிவு வேண்டுதல் சம்பந்தமாக. | எப்ரல் 1971. | மாவட்டக் கல்வி அலுவலர்; சேலம். | சேலம் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 30. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல்—திருமதி எஸ். பாகீரதி அம்மாள், மாயூரம்—ஓய்வூதியம் வழங்குவதிலும், உரிமைக் கோரிக்கை முடிவு செய்வதிலும் தாமதம்—விரைவான முடிவு—வேண்டுதல். | ஜூன். 1971. | மாவட்டக் கல்வி அலுவலர், மாயூரம். | மாயூரம் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 31. | முறையீடுகள்—சில குறைகளைத் தீர்த்தல்—திரு எஸ். ரங்கசாமி—ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம்—விரைவான முடிவு வேண்டுதல் சம்பந்தமாக. | ஜூன் 1971. | மாவட்டக் கல்வி அலுவலர், திண்டுக்கல். | திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |

குறிப்பு :—சார்நிலை அலுவலர்களிடமிருந்து முழுத் தகவல்கள் கேட்டுப் பெறுதற்கு மிகக் கண்டிப்பான நேர்முகக் கடிதங்களும், தொலைபேசித் தந்தி நினைவூட்டுக் குறிப்புகளும் அனுப்பி, முடிந்த அளவுக்குக் குறைகளை விரைவாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை பள்ளிக் கல்வி இயக்குநர் எடுத்து வருகிறார்.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Friday, the 31st January 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Coimbatore Institute of Technology*

* 66 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Coimbatore Institute of Technology was closed until further orders about 12th August 1971; and

(*b*) if so, the reasons therefor

### கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை, கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் அளவில் மூடப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) பட்டயப் பொறியாளர்களுக்காக பகுதிநேர பொறியியல் பட்டப் படிப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதை எதிர்த்து பொறியியல்/கல்லூரி மாணவர்கள் 10-8-1971 லிருந்து 18-8-1971 வரை வகுப்புகளுக்கு செல்லாமல் இருந்தனர். பின்பு இக்கிளர்ச்சி நின்று விட்டது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா அல்லது அவர்களாகவே விட்டுவிட்டார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தப் பகுதிநேர பொறியியல் பட்டப் படிப்பு பயிற்சி வகுப்புக்களைத் துவக்கி தாங்களே பயிற்சி தருவார்களானால், அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தின் அடிப்படையில் அவர்கள் கிளர்ச்சிகள் செய்தார்கள். ஆனால் எந்த வகையிலும் அவர்களுக்குக் கிடைக்கிற எத்தகைய வேலை வாய்ப்பும் பாதிக்கப்படாது என்றும் ஏற்கனவே வேலை பார்க்கிறவர்கள் தங்களது தகுதியை உயர்த்திக் கொள்ள பகுதி நேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டது. என்றாலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஐந்தாண்டுக் காலம் பணியாற்றியிருந்தால், அவர்களைப் பகுதி நேரப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றும் ஆண்டுக்கு இருமுறை

[31st January 1972

தேர்ந்தெடுத்து மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று இருந்ததை ஆண்டுக்கு ஒருமுறை சேர்த்துக்கொண்டால் போதுமென்றும் முடிவு செய்யப் பட்டது. 470 இடங்கள் ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதியோடு பெறப் பட்டன. மேற்கொண்டு 120 இடங்கள் பெறப்பட்டன. அப்படிப் பெறப்பட்ட 120 இடங்கள் நிரப்பப்பட வேண்டாமென்ற முடிவுக்கு வந்ததும் அவர்களுக்கு ஓரளவுக்குத் திருப்தி ஏற்படும் முறையில் வகுத்துக்கொண்டதன் காரணமாக அவர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

### *Revised scales of pay for the Headmasters of Madras Corporation*

* 67 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Corporation of Madras has not paid (i) Revised scales of pay as per the recommendations of the Second Pay Commission to the Headmasters of the Corporation Primary and Middle Schools, (ii) Headmaster's Allowance to Headmasters of Primary Schools and (iii) B.T. scales of pay to qualified graduate Headmasters of Middle Schools; and

(*b*) if so, the action taken or proposed to be taken by the Government in the matter?

### சென்னை மாநகராட்சி தலைமை ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை மாநகராட்சி, (1) இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளையொட்டி திருத்தி அமைக்கப்பட்ட சம்பள விகிதங்களை மாநகராட்சி தொடக்க, இடைநிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குக் கொடுக்கவில்லை என்பதும் (2) தொடக்கப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் படி கொடுக்கவில்லை என்பதும் (3) நடுத்தரப் பள்ளிகளின் தகுதி பெற்ற பட்டதாரித் தலைமை ஆசிரியர்களுக்கு பி. டி. சம்பள விகிதங்களை கொடுக் கவில்லை என்பதும் உண்மையா?

(இ) ஆமெனில், இப்பொருள் குறித்து அரசு எடுத்துக்கொண்ட அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, அவர்களுக்குரிய சிறப்பு ஊதியம் எப்போது கொடுக்கப்பட்டது என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். ஏனென்றால் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் வந்ததன் பேரில்தான், இந்த வினாவை எழுப்பினேன். மாநகராட்சி எப்போது அவர் களுக்குக் கொடுத்தது?



31st January 1972]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 30—7—71 லிருந்து உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் டைரக்டரால் சாங்ஷன் செய்யப்பட்ட செகண்டரி, ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வேலைக்கான இடங்கள் ஒதுக்கப்பட்டும் அவற்றில் இன்னும் "அப்பாயின்ட் மெண்ட்" செய்யப்படாமலிருப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும்.

### *Pension*

* 68 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether orders giving effect to the formula of increased pension by addition of Dearness Allowance of December 1966 to the average pay at the time of retirement on superannuation announced in the budget for 1970–71 to Teachers under Aided Agencies and Local Bodies have been issued; and

(*b*) if not, the reasons therefor?

### ஓய்வூதியத் தொகை

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் கீழ்ப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, அவர்கள் ஓய்வு காலத்தில் பெறும் சராசரி ஊதியத்துடன், 1966-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அகவிலைப் படியை இணைத்து, அதிகரித்த ஓய்வூதியத் தொகை வழங்குவதென்று 1970-71 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப் பட்ட செயற்குறிப்புக்குச் செயலுருக் கொடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டனவா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, புதிய ஓய்வு ஊதிய விகிதம் எந்தத் தேதியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அமுலாகும் என்று அரசு கூற முடியுமா?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: The Government decided that in the case of the Government servants retiring from service on or after 26th February 1970, dearness allowance up to the level obtaining in December 1966 shall be reckoned as pay for the purpose of pension and gratuity. என்று ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Government have decided that the above orders will be applicable to all teacher pensioners in non-Government service also including teacher pensioners of aided Colleies.

[31st January 1972

திரு. எம். ராஜா அய்யர்: 26—2—1970-க்குப் பின்னால் ஓய்வு பெற்ற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கெல்லாம் அவர்களுடைய ஊதியத்திலும் இந்த டி.ஏ. கொடுக்கலாம் என்று அரசு ஆணை இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கப் பள்ளி, கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு எந்த விகிதத்தில் தரப்படுகிறதோ அதே விகிதத்தில் என்று சொல்லப்பட்டிருப்பதால் அது பொருந்தும்.

## Tetanus

* 69 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the operation theatres both at Government Raja Mirasdar Hospital and the Thanjavur Medical College Hospital were closed during the later half of 1970 consequent on attack of Tetanus; and

(b) if so, number of patients who died due to the above infection and the number of days the above theatres were kept closed?

### நரப்பிசிவு நோய்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் உள்ள அறுவை சிகிச்சைக் கூடங்கள் 1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நரப்பிசிவு நோய் (Tetanus) பரவியதன் விளைவாக மூடப்பட்டன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மேற்சொன்ன நோய் தொற்றியதன் காரணமாக இறந்த நோயாளிகளின் எண்ணிக்கை யாது? எத்தனை நாட்கள் மேற்படி அறுவை சிகிச்சைக் கூடங்கள் மூடப்பட்டிருந்தன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இசிவு நோய் கண்டதன் விளைவாக தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனையின் அறுவை சிகிச்சை கூடம் (1970-ஆம் ஆண்டின் பின் பாதியில்) மூடப்படவில்லை. ஆனால், இசிவுநோய் கண்டதனால் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் 1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மூடப்பட்டன.

(இ) 55 வயதுள்ள சுப்பிரமணியம் என்ற ஒரே நபர் மட்டும் இறந்தார். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் அதன்காரணமாக கீழ்க்காணும் நாட்களில் மூடப்பட்டிருந்தன:

அறுவை சிகிச்சைக்கூடம் A 10-9-1970 முதல் 22-9-1970 வரை (13 நாட்கள்)

" " A 23-11-1370 முதல் 7-4-1971 வரை (136 நாட்கள்)

" " B 15-9-1970 முதல் 22-9-1970 வரை (8 நாட்கள்)

" " C 15-9-1970 முதல் 22-9-1790 வரை (8 நாட்கள்)



31st January 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அடிக்கடி இந்த நோய் வருவதற்கான காரணம் என்ன? ஒரு தடவை வந்தது, நெடு நாட்கள் வராமல் இருந்தது என்றால், சரியாக இருக்கும். ஆனால் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கொடுமையான டெடனஸ் என்ற நோய் வருவதற்குக் காரணங்கள் ஆராயப்பட வேண்டும். தற்சமயத்தில் அறுவைக் கூடங்களில் எவ்வளவு இயங்கி வருகின்றன, எவ்வளவு மூடப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைக் குறித்து இந்தக் கேள்வி எழுப்பப்பட்டே நீண்ட காலமாகிறது. இரண்டாவது, இக்கேள்விக்கான விடை எனக்குக் கிடைத்து மூன்று மாதங்களாகின்றன. எப்படியோ காலம் கடந்து வருகிற காரணத்தால், திரும்பத்திரும்ப அங்கத்தினர் இதை எழுப்புகிற காரணத்தால், திரும்பத்திரும்ப இந்த நோய் வருகிறது என்று குறிப்பிடுகிறார்கள் என்று எண்ணுகிறேன். ஏற்பட்ட நிகழ்ச்சி ஒருவருக்கு மட்டும்தான். அவருக்கு அங்கு ஹிரண்யோரஃபி என்ற ஆபரேஷன் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 18—8—1970-ல் ஆபரேஷன் செய்யப்பட்டு அங்கிருந்து டிஸ்சார்ஜ் ஆகிவிட்டார். 21—8—1970-ல் அவருக்குப்பூரண குணமாகிவிட்டது என்று தெரிவித்தார்கள். மறுபடியும் 9—9—1970-ல் ஏறத்தாழ 18 நாள் கழித்து இசிவு நோய்கண்டு பிறகு ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் வந்து தெரிவித்தார்கள். மறுபடியும் 9—9—1970-க்குப் பின்னர் மருத்துவமனையில் சேர்த்து அதில் குணமடைந்து விட்டார் என்று திருப்பியனுப்பப்பட்டார். மறுபடியும் வந்து இறந்திருக்கிறார். ஆனாலும் இந்த நிலைமை ஏற்பட்ட பொழுது அங்குள்ள அறுவை சிகிச்சைக் கூடங்கள் இசிவு நோய்க்குக் காரணமான சூழ்நிலையில் இருந்திருக்கக் கூடும் என்ற அடிப்படையில் அவை மூடப்பட்டதன் மூலம் அவை புதுப்பிக்கப்பட்டு அந்த விதமான நோய்க்கிருமிகள் இல்லாத முறையில் சரி செய்யப்பட்டு அதற்குப் பிறகு திறக்கப்பட்டிருக்கிறது. அதற்கான விவரம் வேண்டுமானால், இன்னும் விளக்கமாகத் தர முடியும்.

திரு. கே. எஸ் அப்துல் வகாப்: நரப்பிசிவு நோய்க்கு விளக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நான் இனித்தான் டாக்டருக்குப் படிக்க வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அறுவைக் கூடங்களில் டெடனஸ் நோய்க்கான கிருமிகள் பரவியிருக்கின்றன என்று 'சுவேப்' எடுத்துக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருமுறை கண்டுபிடித்து மூடிவிட்டார்கள். பிறகு இரண்டு மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் மூடும்படியான நிலைமை வந்தது அந்தக் கிருமிகள் அந்த இடத்திலிருந்து போகவில்லை என்பதற்கு அடையாளமாகும். இறந்தது ஒருவரா பலரா என்பதல்ல பிரச்னை. ஆபரேஷன் தியேட்டரில் கிருமிகள் உள்ள நிலைமை ஏற்பட்டால், அறுவை சிகிச்சை பெறுகிற எல்லோருக்கும் ஆபத்து ஏற்படக்கூடும். நான் அறிந்த வரையில், கடந்த எட்டு ஒன்பது மாதங்களாக ஒரு அறுவைக் கூடம் திறக்கப்படாமல் மூடியிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி மூடப்பட்டிருப்பதற்கு வேறு காரணம் இருக்கலாம். அதுபற்றி விசாரித்து பதில் தெரிவிக்க முடியும். ஆனால் இந்த மருத்துவ மனை அறுவை சிகிச்சைக் கூடங்கள்

[31st January 1972

எல்லாம் அவ்வப்போது சரி செய்யப்பட்டன. அவை பாதுகாப்புடையனவாக ஆக்கப்பட்டன.

Operations were performed as usual by the Surgeons by sharing in the other theatres. The carbolisation and cleaning work were done everyday as a routine in the Operation Theatre of Raja Mirasdar Hospital. There was no Tetanus case due to operations from the Operation Theatre of Raja Mirasdar Hospital, Thanjavur, during the latter half of 1970. The concerned theatres are washed daily in the morning before starting the operations and in the evening, after the operations are over with antiseptic lotions like dettol and then corbolised. Once a week the flooring and walls are washed with washing soda and soap and then washed with antiseptic lotions and corbolised. As there are no operations on Sundays, no washing is done unless there are emergencies. This procedure is being followed in the Thanjavur Medical College Hospital as a routine and I feel that the Department has taken every step to see that there is no such occurrence thereafter.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அறுவைக் கூடத்தில் உள்ள ஒரு ஏர்-கண்டிஷன் யூனிட் வழியாக பக்கத்தில் சாணம், குப்பை முதலியவை கொட்டி வைத்திருந்த வெற்றிடத்திலிருந்து அந்த யூனிட்டுக்குள் கிருமிகள் வந்திருந்து "சுவேப்" எடுக்கும்போது தெரிந்திருக்கிறது. இதன் காரணமாக இரு அறுவைக் கூடங்களை 8, 9 மாதங்கள் மூடிவைத்திருக்கிறார்கள். சரியாகக் கண்காணிக்காத காரணத்தால், இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அங்கு இப்போது இரண்டு தியேட்டர்கள் இயங்கவில்லை. அதனால் பல பிரிவைச் சேர்ந்த அறுவை மருத்துவர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் பல அறுவை சிகிச்சைகளைச் செய்ய முடியாத நிலைமையும் உள்ளது என்பதையும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து இந்த நிலைமையை உடனடியாகக் கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* இந்த விவரம் இலாகாவினருக்குத் தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்படும்.

### *Rupee-a-Measure Scheme*

* 70 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the quantum of rice supplied under Rupee-a-Measure Scheme has been reduced in Madras City from May 1971; and

(*b*) if so, the reason therefor?

### ரூபாய்க்கு படி அரிசித் திட்டம்

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அரிசியின் அளவு 1971-மே திங்களிலிருந்து குறைக்கப்பட்டுள்ளதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?



31st January 1972]

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* (அ) ஆம்.

(இ) ஈடுசெய் விலையில் அரிசி விற்பனை செய்யும் திட்டம் ஏழை எளியவர்களுக்கு உதவி அளிக்கும் ஓர் ஏற்பாடேயாகும். அவர்களது முழுத்தேவைகளையும் ஈடு செய்வது அதன் நோக்கமன்று. வெளிச்சந்தையில் மிகுந்த அளவில் அரிசி கிடைப்பதன் பயனாக, ஈடு செய்விலையில் அரிசி விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் அளவு குறைக்கப்படலாம் எனக் கருதப்பட்டது. கொள்முதல் விலைகள், கட்டுபடியாகும் விலைகள் ஆகியவை பெருகின. அதன் விளைவாக ஈடுசெய் உதவித்தொகையும் அதிகமாகியது. வழங்கப்படும் அரிசியின் அளவு குறைக்கப்பட்டுள்ளபோதிலும் ஈடுசெய் உதவித்தொகை அதற்கேற்பக் குறையவில்லை.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டபோது படி அரிசித் திட்டத்தினுடைய அளவு குறைந்திருக்கிறதா என்று கேட்டேன். படி அரிசித் திட்டத்தையே எடுத்துவிட்டார்கள். இப்போதுள்ள நிலைமை என்ன? இதைக் குறைவு படாமல் முழு அளவு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. குறைந்த அளவு கொடுத்தால் போதுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது முழு அளவும் எடுத்துவிட்டால் என்ன செய்யப்போகிறார்கள்?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். இப்போது படி அரிசித் திட்டத்தின் கீழ் அரிசி கொடுக்கவில்லை என்றாலும், அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாத விலையில் லாப நஷ்டம் இல்லாத நிலையில் அரசே வினியோகிப்பது என்று முடிவெடுத்து அதன்படி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, is the Minister aware that even in the case of charitable institutions and orphanages, their quantum of rice has been cut and they are made to buy it from the open market. This has made it very difficult for the institutions.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, ஏற்கனவே யார் யார் படி அரிசித் திட்டத்தினால் பயன்பெற்று வந்தார்களோ அவர்களுக்கெல்லாம் பொது மக்களுக்குக் கொடுக்கிற அளவுக்கு அரிசி வழங்கப்படுகிறது என்று எண்ணுகிறேன். அப்படி வழங்கப்படவில்லை என்றால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். அங்கத்தினர் அதுகுறித்துத் தெரிவித்தால், ஏற்பாடு செய்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : May I know whether any system exists at present for distribution of rice through fair price shops and if so, what is the price fixed by the Government for the lowest variety of rice?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, இப்போதே சென்னையில் 200-க்கு மேற்பட்ட கடைகளை நாம் நியமித்திருக்கிறோம். அவர்கள் மூலமாக அரிசி வினியோகித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது விலை என்ன என்று கேட்டார்கள். விலை நிச்சயமாக எனக்குத் தெரியவில்லை. ஒரு ரூபாய் எட்டு பைசா அல்லது பத்து பைசா இருக்குமென்று நினைக்கிறேன். அரசாங்கத்திற்கு லாப நஷ்டம் இல்லாமல் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

[31st January 1972

*Industrial Estate*

* 71 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a site purchased by the Government at Ranipet for establishing an industrial estate is lying unutilised;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the price for which and the year in which the land in question was purchased?

தொழிற்பேட்டை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ராணிப்பேட்டையில் தொழிற்பேட்டை ஒன்று நிறுவுவதற்காக அரசால் வாங்கப்பட்ட மனை பயன்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அந்த நிலம் என்ன விலைக்கு வாங்கப்பட்டது? எந்த ஆண்டில் வாங்கப்பட்டது ?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) and (*b*) A total extent of 711.52 acres was acquired for the establishment of a developed plots estate at Ranipet. There has been no adequate demand for the plots in this area. As the selling price of plots will be high if developmental works are taken up, and as it will be difficult to sell developed plots, it has been decided to keep the land, as it is for sale to entrepreneurs as and when they approach for allotment.

(*c*) The lands were purchased at a total cost of Rs. 8,21,642 during the period from May 1965 to December 1968.

THIRU G. SWAMINATHAN : Sir, the land was purchased at a total cost of about Rs. 8 lakhs during December 1965. I understand that the plot has been kept vacant for over a period of 6 years and I am also informed that previous to purchase by the Government there was cultivation of groundnut, maize in that place. May I know why the Government have kept this land, which was purchased for about 8 lakhs of rupees, vacant for a period of 6 years and why the land has been kept in such a nature?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, the land was acquired in 1963 thinking that there would be entrepreneurs coming forward for allotment of sites. But no entrepreneurs came forward. That is why the land is kept vacant.

THIRU G. SWAMINATHAN : Sir, the Hon. Minister stated that it was presumed that enterpreneurs would come forward. But as expected by the Government no entrepreneurs came forward. Why have the Government kept this land vacant for eight years? Government also have lost interest on the investment.



31st January 1972]

THE HON. THIRU S. MADHAVAN : That is why this Government, after taking over charge, have asked the Collector, and the Director of Industries to call for entrepreneurs and to encourage the people to come forward for these developed plots.

THIRU G. SWAMINATHAN : May I know whether the Government would prescribe a time-limit of 6 months or one year so that if no entrepreneurs come forward within this period, they can sell out plots?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, it is not possible to fix any time-limit.

*Tree-top Hotels at Mudumalai*

* 72 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to lease out lands in Mudumalai Sanctuary to private parties to run "tree-top" Hotels; and

(*b*) if so, the details thereof?

"மர உச்சி" ஓட்டல்கள், முதுமலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "மர உச்சி" ஓட்டல்கள் நடத்துவதற்கு, முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் தனியாருக்கு நிலங்கள் குத்தகை விடுவதற்கு செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) "மர உச்சி" ஓட்டல்கள் கட்டுதல் என்னும் பொருள் பற்றி 24-5-1967 அன்று ஊட்டியில் நடைபெற்ற தமிழ் நாடு வன விலங்கு வாரியத்தின் பதினொன்றாவது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தமிழ் நாடு வன ஆலோசனை வாரியத்தின் அலுவலர் அல்லாத உறுப்பினர்களில் ஒருவரான திரு. எம். ஏ. பார்த்தசாரதி என்பவர், முதுமலை வன விலங்கு உய்விடத்தில் இத்தகைய ஓட்டல் ஒன்று கட்டுவதற்கு முன்வந்ததுடன், அரசுக்கு அத்திட்டத்தின் நகலையும் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார். அவருக்கு, முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் இத்தகைய ஓட்டல் ஒன்று கட்டுவதற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 100 வீதம் 100 ஹெக்டேர் நிலத்தை முதலில் 25 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கலாம் என்ற வனத்துறைத் தலைவரின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்ற ஜூன் மாதத்தில் முதுமலை வனவிலங்கு உய்விடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கே மற்றொரு "வ்யூ டவர்", உயரே இருந்து பார்க்கிற கோபுரம் ஒன்று கட்டப்போவதாகச் சொன்னார்கள். அதுமாதிரி இன்னொரு கோபுரம் கட்டும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தலைவர் அவர்களே, இருக்கிறது.

[31st January 1972

THIRU A. R. DAMODARAN: May I know whether it is the intention to build these hotels on the tops of trees or whether there is any other significance for this phrase?

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:* மலை உச்சியில் அல்ல. தரைமட்டத்தில் உயரமான இடத்திலிருந்து எல்லா இடங்களையும் பார்க்குமளவில் அந்த ஓட்டல் கட்டப்படும்.

### *Master Plan for Mudumalai Sanctuary*

* 73 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up any panel to prepare a Master Plan for Mudumalai Sanctuary; and

(*b*) if so, the details thereof?

முதுமலை வனவிலங்கு உய்விடத்தை மேம்படுத்தும் திட்டம்

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:* மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதுமலை வன விலங்கு உய்விடத்தை மேம்படுத்துவதற்குத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக குழு ஏதாவது அமைக்கும் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:* (அ) & (இ) தமிழ் நாடு வன விலங்கு வாரியம், சென்னையில் 25-9-1969-ல் நடந்த கூட்டத்தில், முதுமலை வன விலங்கு உய்விடத்தை மேம்படுத்துவதற்கு விரிவான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் ஆலோசனை நல்கும் பொருட்டு ஒரு குழு அமைக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறது.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* அந்தக் குழு அமைக்கப்பட்டதா? ஏதாவது அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறதா?

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:* அந்தக் குழுவில் 9 உறுப்பினர்கள் உண்டு. அக்குழுவினுடைய அறிக்கையை அடுத்த மாதம் தர இருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, in Mudumalai Game Sanctuary although we are very anxious to see the wild animals, only animals like bison and occasionally rabbits that run across the sanctuary are found. May I know whether the Government will take steps to bring more wild animals while preparing the Master Plan to start the Mudumalai Sanctuary for wild animals? It is for that purpose we come there, Sir.

MR. CHAIRMAN: I think they also migrated from Kerala.



31st January 1972]

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:* தலைவர் அவர்களே, மைசூர் மாநிலத்தில் உள்ள பந்திப்பூருக்கும் முதுமலைக் காட்டிற்கும் இடையிலே பெரிய சீரமைப்புத் திட்டம் ரூ. 90 லட்சம் ரூபாயில் அமைக்கலாம் என்று மத்திய சர்க்கார் கூட வெளிநாட்டிலிருந்து நிதி பெறக்கூடுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது தொடர்பாக மத்திய சர்க்காருடன் கடிதத் தொடர்பு நடக்கிறது.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* வெளிநாட்டிலிருந்து அல்லது வெளி மாநிலங்களிலிருந்து புலி, சிங்கம் போன்ற பிராணிகளை வரவழைத்து முதுமலைக் காட்டில் விடுவதற்காக அபிப்பிராயம் உண்டா? அதைப் பார்க்கப் போகிற பயணிகளிடம் கட்டணம் வசூலிப்பதாகச் சொன்னார்கள். அது மாதிரி திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா?

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:* கட்டணம் இப்போதும் இருக்கிறது. மிருகங்கள் சிறுத்தை, மான்கள், காட்டெருமை எல்லாம் இருக்கின்றன. சிங்கம் தான் இல்லை. இப்போதிருக்கிற மிருகங்களைப் பராமரிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த சீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, out of this expenditure of 90 lakhs of rupees, how much is proposed to be spent on wild animals?

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:* தனியாக இல்லை. மொத்தத்தில் திட்டத்தில் இருக்கிறது. தனித்தனியாகக் கணக்கில்லை.

### *Surplus of Temple Funds and Charitable Endowments*

* 74 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the amount diverted from the surplus of temples and charitable endowments in the State for renovation of temples and to Public Welfare Schemes yearwise from the year 1967?

கோயில்கள், அறக்கட்டளைகளின் உபரிநிதிகள்

*திரு. ஜி. சுவாமிநாதன்:* மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள அறக்கட்டளைகள், கோயில்கள் ஆகியவற்றின் உபரி நிதிகளிலிருந்து பொதுநலத் திட்டங்களுக்காகவும், கோயில் திருப்பணிகளுக்காகவும், 1967 முதல் ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:*

| ஆண்டு. | | திருப்பணி. | கல்வி. | மருத்துவ மனைகள். | அனாதை இல்லங்கள். |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1967 | .. | 1,74,854·00 | 5.61,551·00 | — | 1.04.512·28 |
| 1968 | .. | 2,09,773·00 | 12,13,301·79 | — | 18,000·00 |
| 1969 | .. | 1,62,431·00 | 7,39,200·00 | 6,500·00 | 20,340·00 |
| 1970 | .. | 6,30,624·00 | 28,39,635·35 | 1,02,000·00 | 1,09,868·47 |

[31st January 1972

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த அறக்கட்டளைகள் கோயில்களிலிருந்து வருகிற பணத்தின் ஒரு பகுதியைத் திருப்பணிக்கும் இட்டத்தட்ட அதைப்போன்ற நான்கு பங்கு பொது நலத் திட்டங்களுக்கும் செலவிடுவதாக அறிகிறேன். இதில் திருப்பணிக்காகவும் பொதுநலப் பணிக்காகவும் செலவிடுகிற பணத்திற்கான சதவிகிதம் ஏதாவது வைக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** சதவிகிதம் என்ற முறையில் நாம் செலவழிப்பதில்லை. இந்த நிதியிலிருந்துதான் கல்வியாக இருந்தாலும், மருத்துவமனையாக இருந்தாலும், இது போன்ற பொதுக் காரியங்களுக்குச் செலவு செய்கிறார்கள்.

**திரு. எம். அய்யாசாமி :** சில ஆலயங்களில் முடி இறக்குவதன் மூலமாக வருகிற வருமானத்திலிருந்து முடியிறக்கும் தொழிலாளிகளுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் கல்வி வேறு பல வசதிகளுக்காக உதவி செய்யலாம் என்ற உத்தரவு முன்பு இருந்தது. இப்போது அது அமுலில் இருக்கிறதா ? இருந்தால் அதன் பலனை எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்தத் தொழிலாளிக்கு இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, முடியிறக்குகிற தொழிலாளிகளுக்குத் தேவையான சம்பளம் நாம் கொடுக்கிறோம். ஆண்டுதோறும் அவர்களுக்குப் போனஸ் வழங்கப்படுகிறது. ஆனால் அவர்களுக்குத் தனியாகச் சலுகையில்லாமல் எல்லாப் பிரிவினருக்கும் அந்தச் சலுகையைக் கொடுக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பொதுநலத் திட்டங்களுக்கு அறநிலையங்களிலிருந்து கொடுக்கிற பணத்தைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. பல கோயில்கள் இன்னும் பழுதுபட்ட, புதுப்பிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கும் போது, அவற்றிற்கும் இந்த நிதியை அளிக்கும் வகையில் வருகிற வருமானத்தில் 50 சதவிகிதத்தை திருப்பணிக்காகவும் 50 சதவிகிதத்தை பொதுநலத்திட்டத்திற்காகவும் கொடுக்க அரசாங்கம் யோசனை செய்து ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, கல்வி மருத்துவமனை போன்ற காரியங்களுக்கு நாம் செலவு செய்கிற காரணத்தால், திருப்பணி வேலை எந்த வகையிலும் தடைப்படவில்லை. 1967-க்குப் பின்னால் 1970-ம் ஆண்டு முடிகிற வரையில் சுமார் மூன்று கோடி ரூபாய் ஆலய நிதியிலிருந்தும் அரசாங்க உதவியிலிருந்தும் செலவழித்திருக்கிறோம். வருகிற ஐந்தாண்டு காலத்தில் சுமார் நான்கு கோடி ரூபாய் ஆலய நிதியிலிருந்தும் நாம் செலவு செய்கிறோம். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தால், ஆண்டுதோறும் 50 ஆயிரம் ரூபாய் அளவுக்குத் திருப்பணிக்கு அரசாங்கத்தில் ஒதுக்கினார்கள். கடந்த மூன்று ஆண்டு காலமாக ஆண்டுதோறும் 4 லட்சம் ரூபாய் அரசாங்கத்தில் ஒதுக்கியிருக்கிறோம். இந்தக் காரியங்களுக்குச் செலவு செய்கிற காரணத்தால், திருப்பணிகள் எந்த வகையிலும் தடை படவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அண்மையில் கோயிலைப் பொறுத்தவரையில் சித்த வைத்திய டிஸ்பென்சரிகள் வைத்து ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுள்ள கோயில்களில் மருத்துவர்களை நியமித்தார்கள். 20 மருத்துவர்களை நியமித்துவிட்டு அவர்களில் மூன்று பேரைத் தவிர மற்றவரை சம்பளம் கொடுப்பதற்கில்லை என்று திருப்பியனுப்பிவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையா ?



31st January 1972]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அப்படித் திருப்பியனுப்பப்பட்ட தகவல் வெளிவரவில்லை. சித்த வைத்திய மருத்துவமனைகள் பல கோயில்களில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நாம் எண்ணியிருந்தோம். பல கோயில்களில் ஆரம்பிக்கப்பட்ட சித்த வைத்திய மருத்துவ மனைகள் வெற்றிகரமாக நடைபெறாத காரணத்தால், அதை ஆராய்ந்து வெற்றிகரமாக நடைபெறுகிற இடங்களில் மட்டும் சித்த வைத்திய மருத்துவமனைகளை ஆரம்பிக்கலாம் என்று தற்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether there is any proposal to prepare a State cadre of all employees of the Hindu Religious and Charitable Endowments Board and to give them uniform scales of pay and whether the surplus of this amount would be utilised for this purpose?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

### *Subramanya Temple, Tiruchendur*

* 75 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that there is a threat of sea erosion on the Subramanya Temple, Tiruchendur and its Eastern wall; and

(*b*) if so, the action taken by the Government in this regard?

### சுப்பிரமணியர் கோயில், திருச்செந்தூர்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலுக்கும், அதன் கிழக்குப் பக்கச் சுவருக்கும் கடல் அரிப்பு அபாயம் இருக்கிறதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) கடல் தடுப்புச் சுவர் கட்டவேண்டிய அவசியமில்லை என்றும், ஆனால், கருங்கற்களையும், மணலையும் போட்டுக் கொட்டிவைப்பதன் மூலம் கிழக்குப் பிரகாரத்தை நீட்டித்தாலே போதுமானது என்றும் வல்லுநர்கள் கூறுகிறார்கள். ரூ. 3.5 லட்சத்திற்கான மதிப்பீடு தூத்துக்குடி துறைமுகத் திட்டத் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு இந்து சமய அறக்கட்டளை துறை ஆணையாளரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தேவஸ்தான நிதிகளிலிருந்து இவ்வேலை செய்யப்பட விருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அந்த மதிற்சுவர்களில் கிழக்கு வடக்குப் பகுதிகளில் கடல் அலைகளினால் இடையூறு ஏற்படுகிறது என்று அதைத் தடுப்பதற்குத் திட்டமிட்டு மத்திய அரசினிடமிருந்து ரூ. 11 லட்சம் கேட்டோமே அப்பாது மத்திய அரசிடம் ரூ. 11 லட்சம் கேட்ட பிறகு. இப்போது அதற்கு மூன்று லட்சம் போதுமென்று கருத்து எப்படி வந்தது என்று அறிய விரும்புகிறேன்.

[31st January 1972

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** 1966-ல் சுமார் ரூ. 4.40 லட்சம் செலவில் இந்தத் தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று ஏற்கனவே மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதற்குப்பிறகு கொஞ்சநாள் கழித்து 9-6-1968-ல் அந்தக் கோயிலுக்கு மத்திய அமைச்சர் மாண்புமிகு வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் வருகை தந்தபோது, மத்திய அரசிலிருந்து தேவையான உதவியைச் செய்வதாக வாக்குறுதி தந்தார்கள். மீண்டும் எஸ்டிமேட் மாற்றம் செய்யப்பட்டு 8.10 லட்சம் ரூபாய் அதிகமாகியது. கோயில் நிர்வாகிகள் ஒரு பங்கு தர வேண்டுமென்று கேட்டார்கள். 25% அவர்கள் கொடுப்பதாகச் சொன்னோம். முழுப்பணத்தையும் மத்திய அரசு கொடுக்க மறுத்துவிட்டார்கள். மீண்டும் தூத்துக்குடி துறைமுகத் தலைமைப் பொறியாளர், நேரில் பார்த்துவிட்டு ரூ. 11.80 லட்சம் செலவில் மறுபடியும் மதிப்பீட்டைத் தயாரித்தார்கள். இந்திய அரசு கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தைக் கேட்டபோது அங்கிருந்து உதவிதருவதற்கு மறுத்துவிட்டதால், அந்தக் கோயிலை எப்படியாவது காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டதனால், மீண்டும் தூத்துக்குடித் துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர் அவர்களையும் அதே மாதிரி ஒரு குழு அமைத்து முதல் நிலை பொறியியல் வல்லுனர்கள், தலைமைப் பொறியாளர்கள், பம்பாய் துறைமுக நீரியல் தலைமைப் பொறியாளர், கல்கத்தா துறைமுக கப்பல் போக்குவரத்துத் துறையினர், கடல்கலை போக்குவரத்து அமைச்சகத்தின் துணை வளர்ச்சி ஆலோசகர் போன்றவர்களை அனுப்பி ஆராய்ந்தோம். பிறகுதான் கடல் தடுப்புச்சுவர் தேவையில்லை, கல்லையும் மணலையும் கொட்டி வைத்து நாம் தடுப்புச் சுவர் எழுப்பிவிம்டால் போதுமென்று முடிவு செய்யப்பட்டது. இன்றைக்கு ரூ. 3½ லட்சம் செலவில் வேலை துவங்கியிருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** திருச்செந்தூர் முக்கியமான கோயில். இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பிரசித்தி பெற்ற கோயில் முதலில் ரூ. 11 லட்சம் செலவு செய்வதாகத் திட்டமிடப்பட்டு அதற்கு 25% கோயில் கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. கோயில் கொடுக்கிற பணத்தைக் கொண்டே தடுப்புச் சுவர் கட்டுவதற்குப் பயன்படுத்த இப்போது முடிவாகியிருக்கிறதா? பகுதிப் பணம் மாநில அரசு கொடுத்து நல்லமுறையில் அதைக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, நான் இந்த நிபுணர்களுடைய விவரத்தையெல்லாம் கஷ்டப்பட்டுப் படித்ததற்குக் காரணமே உறுப்பினர் அவர்கள் மீண்டும் கேள்வி கேட்காமல் இருக்க வேண்டுமென்றுதான். ஆனால் அவர் கேட்டுவிட்டார். பொறியாளர்கள் மட்டுமே பார்த்து ரூ. 11.80 லட்சம் மதிப்பீடு செய்தார்கள். பம்பாய், கல்கத்தா துறைமுகத்தைச் சேர்ந்த அதிகிகள், நீரியல் ஆராய்ச்சியாளர்கள் முதலியோர் ஆராய்ந்து ரூ. 3½ லட்சம் போதுமென்று சொன்னதற்குப் பிறகுதான் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் உடையும் தருவாயில் இருக்கிறது. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி கூட ஏற்படுத்தப்பட்டிருக்கிறது அதற்காக. அந்தக் குழு என்ன வேலை செய்கிறது என்பதையும் அந்தக் கோயில் இடியா வண்ணம் பார்த்துக்கொள்வதற்கு அந்தக் குழு தவறிவிட்டால், அரசாங்கம் அதைப் பார்த்துக்கொள்ளுமா?



31st January 1972]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தகவலைச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கோயில் இடியாமல் பார்த்துக்கொள்கிற பொறுப்பு அறநிலையத் துறையைச் சார்ந்தது. அது பார்த்துக்கொள்ளும். குழு இடிகிற பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் இடியும் தருவாயில் இருக்கிறது என்பது சரியல்ல. கோபுரம் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே விரிவு கண்டிருக்கிறது. 4 லட்சம் ரூபாய் செலவில் கோபுரத்தைப் புதுப்பிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டு, ஒரு லட்சம் ரூபாய் திருப்பணிக் குழு வசூலித்துத்தர வேண்டுமென்று சொல்லியதை ஏற்றுக்கொண்டு, இப்போது வேலை தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்ததைப் போல, அந்த வேலை ரூ. 4 லட்சத்தோடு நிற்காது. இன்னும் பல லட்சம் ரூபாய் தேவைப்படும். மறுபடியும் 'ரிவைஸ்டு எஸ்டிமேட்' தயாரிக்க வேண்டியிருக்கும் என்று கருதுகிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** இது பிரசங்க நேரமல்ல. சப்ளிமெண்டரி இருந்தால் கேட்க வேண்டும், பிரசங்கம் செய்தால் நான் அதை அனுமதிக்க முடியாது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** பி.டப்ள்யூ டிபார்ட்மெண்டில் பம்பாய் கம்பெனிகளிலிருந்து தகவல் சேகரித்ததாகச் சொன்னார்கள். அது முடிய இனி எவ்வளவு காலமாகும்? அதில் தீவிர முயற்சி எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இங்கே கேட்கப்பட்ட கேள்வி திருச்செந்தூரைப் பற்றியது. திருச்செந்தூருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் தூரமாக இருப்பதால் அதுபற்றிய தகவல் இல்லை.

## UNSTARRED QUESTIONS.

### *Photographers sponsored by the Slum Clearance Board*

1. *Q.*—THIRU V. ISVARIMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the names of the photographers sponsored by the Slum Clearance Board to take photos of the slum-dwellers in Madras City; and

(*b*) the amount paid for each photographer?

*A.*—

(*a*) Names of the photographers sponsored by the Slum Clearance Board to take photos of the slum, dwellers in Madras City;

1. Thiru Jayachandran.
2. Thiru R. Parthasarathy.
3. Thiru R. S. Vasan.
4. Thiru D. Venkatesan.
5. Thiru C. Seshah.
6. Thiru K. R. Purushothaman.
7. Thiru S. B. Radhakrishnan.

[31st January 1972

8. Thiru A. Bernard.
9. Thiru V. V. Gopal.
10. Thiru Sadagopan.
11. Thiru Sivam.
12. Thiru Annamalai.
13. Thiru Kadiravan.
14. Thiru Chandra Mohan.
15. Thiru N. Thambiah.
16. Thiru S. Nandagopal.
17. Thiru A. M. Mohan.
18. Thiru P. S. Deivasigamany.
19. Thiru T. Daniel.
20. Thiru Jesudoss.
21. Thiru T. Loganathan.

*Dark Room Assistants*—

1. Thiru M. Selvanayagam.
2. Thiru P. G. Prakasam.
3. Thiru A. Sundaram.

(*b*) Except one photographer who has been drafted from the Tamil Nadu Housing Board the other photographers and the Dark Room Assistants are paid a consolidated pay of Rs. 200 per mensem. In addition the photographers get a conveyance allowance of Rs. 25 per mensem. The photographer drafted from the Tamil Nadu Housing Board is being paid a pay calculated in the scale of pay of Rs. 325—15—475—20—575—25—650.

*Hay-stacks in Cumbum Valley*

2 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) whether a number of hay-stacks in Cumbum valley have been set fire to by micheivous elements around March and April 1971.

(*b*) if so, the details, thereof; and

(*c*) the action taken thereon to book the offenders and prevent such fire?

*A.*—

(*a*) Yes. A number of hay-stacks in the Gudalur which lies in the Cumbum Assembly constituency was set fire 16 on 8th April 1971.

(*b*) On 8th April 1971, the hay-rick of one Royar Gounder was set fire to allegedly by some Thevars and 67 hayricks belonging to Gounders were destroyed. The reason for this incident is reported to be due to the strained feelings between Thevars and Gounders during the mid-term election.



31st January 1972]

(*c*). The culprits have been booked and two cases in Gudalur Police Station have been charged on 8th June 1971 and they are pending trial. Police parto is continue in the affected area to arert further untoward incidents of this and possible mischief.

*Permanent Cinema Houses*

3 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the total number of Permanent Cinema Houses in this State —District-wise?

*A.*—

A statement * is placed on the table of the House.

*Science equipments and Libraries*

4 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of high schools which have science equipments below worth Rs. 500 in the State as on date; and

(*b*) the number of high schools which have books worth over Rs. 1,000 in their Libraries in the State on date?

*A.*—

(*a*) 352.

(*b*) 2225.

*State Institute of Education*

5 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of publications, subject-wise brought out by the State Institute of Education during 1970–71?

*A.*—

114 (Hundred and fourteen) Publications.

The Particulars are given below (subject-wise)—

| | |
|---|---|
| 1. Tamil ... ... ... ... ... ... | 3 |
| 2. Mathematics ... ... ... ... ... | 4 |
| 3. History ... ... ... ... ... ... | 17 |
| 4. Geography ... ... ... ... ... ... | 8 |
| 5. Science ... ... ... ... ... ... | 20 |
| 6. Citizenship Training including Work Experience. | 16 |
| 7. Moral Instructions ... ... ... ... ... | 15 |
| 8. National integration ... ... ... ... | 5 |

* Printed as Appendix I on page

[31st January 1972

| | | |
|---|---|---|
| 9. | Physical Education ... ... ... ... | 2 |
| 10. | Primary Education ... ... ... ... | 11 |
| 11. | Secondary Education ... ... ... ... | 1 |
| 12. | Test and Evaluation ... ... ... ... | 6 |
| 13. | Clay Work ... ... ... ... ... | 1 |
| 14. | Weaving ... ... ... ... ... ... | 1 |
| 15. | Paper modelling ... ... ... ... | 1 |
| 16. | Gardening ... ... ... ... ... | 1 |
| 17. | Music ... ... ... ... ... ... | 1 |
| 18. | Art ... ... ... ... ... ... | 1 |
| | | 114 |

*Central Medical Depot*

6 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Veterinary Department is making its purchases from the Central Medical Depot in Madras;

(b) if so, details of the purchases made in 1970-71 and

(c) if not, the reasons therefor?

ப. (அ) ஆம். கால்நடை பராமரிப்புத் துறையும் கால்நடைக் கல்வி ஆராய்ச்சித் துறையும் அவைகளின் தேவைகளை மத்திய மருந்து கிடங்கிலிருந்தே பெறுகின்றன. அங்கு கிடைக்கப்பெறாதனவற்றைத் தனியார் கடைகளில் நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு வாங்குகின்றன.

(இ) 1970-71-ஆம் ஆண்டு இருதுறைகளும் வாங்கிய மருந்து முதலிய பல்வேறு தேவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | ரூ. பை. |
|---|---|---|
| (1) இரசாயனப் பொருட்கள் | — | 66,125.83 |
| (2) கருவிகள் | — | 2,12,998.38 |
| (3) மருத்துவ மனைக்கான உதவிக் கருவிகள் | — | 3,891.26 |
| (4) மருந்துப் பொருட்கள் | — | 7,50,798.37 |
| (5) கால்நடை தீவனக் கலவைப் பொருட்கள் | — | 221.45 |
| (6) சாராவி (ஸ்பிரிட்) | — | 11,198.28 |
| மொத்த மதிப்பு | — | 10,45,233.63 |

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.



31st January 1972]

*Nutrition Programme*

7 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the details of the Centrally Sponsored Nutrition Programme for pre-school children introduced in this State?

A.—

A statement * is placed on the Table of the House.

*School of Arts and Crafts*

8 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of candidates passed out from the School of Arts and Crafts, who have registered their names with the Employment Exchanges in this State as on 1st July 1971; and

(b) if so, the steps taken by the Government to provide placements to them?

A.—

(a) As on 1st July 1971, there were 50 candidates who have passed out from the School of Arts and Crafts, Madras on the Live Registers of the Employment Exchanges in Tamil Nadu.

(b) The Employment Officers secure placement for these candidates along with others, in their regular programme of contacts with employers in the Public and Private sectors. It may be added in this regard that many of these applicants being commercial artists could go in for self-employment or undertake job work.

*State Electricity Board*

9. Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any amount was collected from candidates seeking employment as application fees by the State Electricity Board from 1968 onwards;

(b) if so, the amount collected year-wise;

(c) the number of applications received; and

(d) the number of appointments made?

A.—

(a) Yes.

(b) 1968-69—Rs. 4,641-00.
1969-70—Rs. 4,95,482-50.
1970-71—Rs. 36,222-00.

* Printed as Appendix II on pages 344-345

[31st January 1972

(c) 99,440 applications.

(d) 2924.

Appointment to 461 posts in various categories is being made as per the order in the selected list and depending on the vacancies as and when they arise.

MR. CHAIRMAN : Questions are over.

(*Note*.—An astesisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

## II. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont*.

MR. CHAIRMAN : Hon. Members should not take more than 10 minutes. Otherwise, I will have to sound the gong often.

* **திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க பாண்டியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து நானும் சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் இந்த அரசின் நோக்கங்களையும் இந்த நாட்டு மக்களின்பால் அரசு கொண்டிருக்கிற அக்கறையையும் வெளிப்படுத்துகின்ற வகையில் நிறைவேற்றப்படுகிற பல்வேறு திட்டங்களையும், தமிழக மக்களுக்கு இந்த அரசு செய்து வருகிற செயல்களையும் வரிசைப்படுத்தி விளக்கமாக தன்னுடைய இந்த உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். தன்னுடைய உரையைத் தொடங்கிய ஆளுநர் அவர்கள் பேரவை மேலவை ஆகிய இந்த இரு அவைகளின் கூட்டுத்திட்டத்தில் முதன்முறையாக உரை நிகழ்த்துகிறேன் என்ற அறிவிப்பைத் தந்து, நடந்து முடிந்த போரில் இந்திய நாட்டு வீரர்கள் செய்த தியாகங்களையும் இந்த நாட்டு மக்களுடைய பொறுமை உணர்ச்சியையும், கட்டுப்பாட்டையும் சேவா மனோபாவத்தையும் பாராட்டி, நன்றி தெரிவித்து, தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த கருத்தைப் போல், கட்சி என்பது வேறு, சர்க்கார் என்பது வேறு, நாடு என்பது வேறு என்கிற உயரிய தத்துவத்தை அன்றைக்குச் சுட்டிக்காட்டிய மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள், கட்சிகள் இருக்கும், போகும், ஆனால் ஆட்சியும் நாடும் நிலையானதாகும்; நாட்டுக்கு ஒரு ஆபத்து என்று சொன்னால், அந்த ஆபத்தைக் களைவதில் நாம் ஒன்று திரண்டு நிற்க வேண்டும் என்கிற உயரிய தத்துவத்தை எடுத்துச் சொன்னார்கள். அதற்கேற்ப தமிழகமே ஒன்றுதிரண்டு நின்று இந்தப் போர் அபாயம் இருந்த நேரத்தில் இந்திய அரசுக்குப்பக்க துணையாக இருந்து எல்லாக் காரியங்களையும் செய்வதில் முன்னணியில் இருந்தது என்பதையும், அதுபற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்திருக்கிற, இந்த அரசு எடுத்திருக்கிற எல்லா முயற்சிகளையும் நாம் நன்றாக அறிவோம். அதே நேரத்தில் தியாகங்கள் போற்றப்பட்டு, கடமையுணர்வுகள் வலியுறுத்தப்பட்டு, ஒற்றுமையுணர்ச்சி வலியுறுத்தப்பட்டு, நமக்கு நல்ல அறிவுரைகள் தரப்பட்டிருக்கின்றன என்றாலும், இவ்வளவு கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த மாநில மக்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதை நாம் இந்த நேரத்தில் எண்ணிடவேண்டும் என்கிற என்னுடைய தாழ்மையான



31st January 1972] [திரு. மு. இராமநாதன்] ..

கருத்தை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசின் நோக்கத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, ஏழை, எளிய பாட்டாளி மக்களுடைய சமுதாயத்தின் அடித்தளத்தில் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிற மக்களுக்கு இந்த அரசு நல்வாழ்வு தந்திடுவதற்கு உறுதியெடுத்துக்கொண்டிருக்கிறது. ஏழை மக்களுடைய உள்ளக் கிடக்கையைப் பிரதிபலிக்கிற கண்ணாடியாக இந்த அரசு இருக்கிறது என்கின்ற விளக்கத்தை ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே தந்திருக்கிறார்கள். இந்த அரசு உணவுப் பிரச்சினையில் தன்னிறைவு பெற்றுவிட்டது என்பது பெருமைக்குரிய காரியம் என்பதையும் தன்னுடைய உரையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பசுமைப் புரட்சியைக் கண்டிருக்கிறோம்; உணவுப் பிரச்சினையில் தன்னிறைவினைப் பெற்றிருக்கிறோம். புதிதுபுதிதாக சிறு தொழில்களைத் தொடங்குவதற்கும் அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் முயற்சி எடுத்துக்கொண்டு வருகின்றோம். எல்லோரும் தங்கள் சக்திக்கேற்ற வகையில் பாடுபட்டு தேவைக்கேற்ற வசதிகளைப் பெற்று நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதற்கான புள்ளிவிவரங்களையெல்லாம் தன்னுடைய உரையிலே ஆளுநர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு தந்திருக்கிற அந்த உரையிலே சேர்ந்தாற்போல் ஒவ்வொரு பக்கத்திலும் மத்திய அரசிடத்தில் இன்ன பிரச்சினைக்காக நாம் வேண்டியிருக்கிறோம், நாம் கேட்டிருக்கிறோம், நாம் விண்ணப்பித்திருக்கிறோம், அனுமதி வரும் என்று எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடி பகுதியில் ஒரு இண்டஸ்ட்ரியல் ரிஃபைனரியினைத் தொடங்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். மணலியில் பெட்ரோ-கெமிக்கல் தொழில் தொகுதி ஒன்றைத் தொடங்குவதற்காக நாம் அனுமதி வேண்டியிருக்கிறோம்; அது தொடங்கப்படுமானால், பிளாஸ்டிக் பொருள்கள் கூட உற்பத்தி செய்யலாம்; அதன் மூலம் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்; ஆகையினாலே அதற்கும் நாம் மத்திய அரசிடமிருந்து அனுமதியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போல் சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலைத் திட்டத்தைப் பற்றிச் சொல்லி வெகு விரைவில் அந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படத் தொடங்கும் என்று நம்புகிறோம், எதிர்பார்க்கிறோம் என்ற குறிப்பும் இருக்கிறது. அதே போல் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தைப் பற்றிய விவரத்தையும் இந்த நாட்டுமக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதே போல் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பற்றியும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. கடந்த ஆண்டில் 140 தொழில்களைத் தொடங்குவதற்காக மத்திய அரசிடத்தில் இங்கிருந்து விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு, அவற்றில் வெறும் 36 தொழில்களுக்கு மட்டுமே அனுமதிக் கடிதங்கள்—இப்போது ஆளுநர் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல் 'லெட்டர்ஸ் ஆப் இன்டென்ட்' என்று சொல்லப்படுகிற அந்த அனுமதிக் கடிதங்கள்—வந்திருக்கின்றன; மற்ற தொழில்களுக்கு வரவில்லை என்கின்ற தகவலும் எனக்குக் கிடைத்த குறிப்பிலே இருக்கிறது. அது மட்டுமல்ல, பல தடவைகள் இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியது போல், தஞ்சைப் பெரிய கோயிலுக்குள் ராஜராஜனுடைய திருவுருவச் சிலையை வைப்பதிலிருந்து, எங்கள் கோவை மாவட்டத்தில் 1,008 சிவஸ்தலங்களில் ஒரு பெரிய ஸ்தலம் என்று சொல்கிற அவிநாசி கோவிலும் ஒரு தெப்பக்குளமும் இருக்கிறது. அதைப் பழுதுபார்க்கிற அதிகாரம் இதுவரை நம்முடைய அறநிலையத் துறை அமைச்சருக்கு இல்லை; அதற்கும் மத்திய அரசின்

[திரு. மு. இராமநாதன்] [31st January 1972

அனுமதியை எதிர்பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது. எங்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. எஸ். ராமசாமி அவர்களிடத்தில் இதற்காக இரண்டு தடவைகள் விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டன; அதற்கும் இதுவரை ஒரு பதிலும் இல்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போல் இந்தக் கோட்டை மதில்சுவருக்கு வெளியேயிருக்கிற குப்பை கூளங்களை அப்புறப்படுத்திவிட்டு புல்லைச் செதுக்குவதற்குக் கூட அனுமதி கேட்டு எத்தனை தடவை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி விட்டு, எவ்வளவு காலம் பொறுமையாக இந்த அரசு காத்திருந்தது என்ற விவரத்தைக்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவரங்களை எல்லாம் நான் சொல்லுவதற்குக் காரணம், 1,500 மைலுக்கு அப்பாலே மத்திய அரசும், இப்பாலே நாமும் இருக்கிறோம்; மத்திய அரசிலும் மாநில அரசிலும் ஒரு காலத்தில் ஒரே கட்சி ஆட்சிக் கட்சியாக இருந்த காரணத்தினால், ஒரு வேளை மாநில அரசு தன்னுடைய உரிமைகளைப்பற்றி வலியுறுத்தாமல், அதைப் பற்றிக் கவலைப்படாமல் கூட இருந்திருக்கலாம்; ஆனால் நம்மை ஆட்சிக்கு அனுப்பிய மக்கள் என்ன எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்? தங்களுடைய வாழ்வு வளமாகவும், ஒளிமயமான எதிர்காலமும் இந்த அரசால் உருவாக்கித் தரப்படுமென்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசிடம் பல்வேறான மக்கள் அதையெல்லாம் நம்பி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆளுநர் அவர்களுடைய உரையில் ஒரு ஐந்தாண்டு கால குறிப்பு என்று போட்டு, ஐந்தாண்டு காலத்தில் நமக்கு மத்திய அரசிடமிருந்து வந்திருக்கின்ற வருவாய் 141 கோடி ரூபாய் என்றும் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டியது 154.9 கோடி ரூபாய் என்றும் போடப்பட்டிருக்கிறது. 1971-72-ம் ஆண்டில் 43.03 கோடி ரூபாய் அசல் கணக்கிலும், இதே ஆண்டில் வட்டிக் கணக்கில் திருப்பித் தர வேண்டியது 21.83 கோடி ரூபாய் என்றும் போடப்பட்டிருக்கிறது. இதிலே இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய அரசு தந்திருக்கின்ற கணக்குப்படி, 1952-ல் இந்த நாட்டில் இந்திய நாடு பெற்றிருக்கின்ற கடன் தொகையை விகிதாசாரப்படுத்தினால், அந்த ஆண்டில் ஒவ்வொரு தனி நபரும் ரூ. 12.50 கடன் பளுவுக்குச் சொந்தக்காரர்கள். 1965-66-ம் ஆண்டுக் குறிப்புப்படி ஒவ்வொரு தனி நபரும் ரூபாய் 115 கடன் சுமைக்குச் சொந்தக்காரர்கள். 1967-68-ம் ஆண்டின் குறிப்பின்படி இந்திய நாட்டில் ஒவ்வொரு தனி நபரும் ரூபாய் 136 கடன் சுமைக்குச் சொந்தக்காரர்கள். அதே போல் வட்டிக் கணக்கை எடுத்துக்கொண்டு பார்த்தால், 1951-52-ல் ஒவ்வொரு தனி நபரும் 24 பைசா வட்டி கட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். 1960-61 கணக்குப்படி ரூ. 1.80 ஒவ்வொரு தனி நபரும் வட்டி செலுத்த வேண்டும். 1965-66-ம் ஆண்டு விவரப்படி ஒவ்வொரு தனி நபரும் ரூபாய் 5.60 வட்டி கட்ட வேண்டியவர்கள். 1967-68 கணக்குப்படி ஒவ்வொரு தனி நபரும் ரூபாய் 8 வட்டி கட்ட வேண்டியவர்கள். ஆகையினால் எப்படிப் பார்த்தாலும் வரி, வட்டி அசல் இரண்டும் இந்த அளவுக்கு நாம் கட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்னென்ன தலைப்பின் கீழ் நாம் கடன் பெற்றிருக்கிறோம் என்ற விவரங்களை மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதற்காக ஒரு குழு அமைத்திட வேண்டும். ஏனென்றால் மேலை நாடுகளிலிருந்து வந்த பணமெல்லாம் இந்த மாநில அரசின் மீது கடன் என்று போடப்பட்டிருப்பதால், அதைத் திருப்பித் தரவேண்டிய நிலை இருப்பதால், அவற்றை எல்லாம் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசுகள் எல்லாம் உண்மையான அதிகாரங்கள் படைத்த அரசுகளாக மலருவதற்கு இந்த மாமன்றத்திலிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தது போல், தொழில் வளம் பெருவதற்கும், பல தொழில்களை நாமே நடத்துவதற்கும், மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் நல்ல முறையில் உரிமைகள் பெற்ற, அதிகாரங்கள் பெற்ற மாநில அரசாக அமைய வேண்டுமென்ற கருத்தை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.



தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று. இப்பொழுது எக்சைஸ் டூடி என்று சொல்லப்படுகின்ற வரியை வசூலிக்கும் உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. மத்திய அரசாங்கமே வசூலித்து அதிலே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாநில அரசாங்கங்களுக்கு ஒதுக்குகின்ற நிலைமை மாற்றப்பட்டு அந்த எக்சைஸ் வரியை வசூலிக்கின்ற அதிகாரமும் அதை முழுமையாக எடுத்துக்கொள்ளுகின்ற உரிமையும் மாநில அரசாங்கத்திற்கே வருமேயானால், மாநில அரசாங்கம் பணப் பிரச்சினையில் ஓரளவு தன்னிறைவு பெறும் என்ற ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், புகையிலைக்கு ஒரு வரியிருக்கிறது. அந்த வரியையும் மத்திய அரசே வசூலித்து அதிலே ஒரு குறிப்பிட்ட பங்கை மாநிலங்களுக்குத் தருகின்ற முறையை மாற்றி புகையிலை போன்ற பொருள்களின் மீது விதிக்கின்ற வரிகளை மத்திய அரசு எடுத்துக்கொள்ளாமல் மாநில அரசே பெற்றுக்கொண்டால், நிதிப் பற்றுக்குறை ஓரளவுக்குச் சமப்பட வாய்ப்பாகவிருக்கும். அவ்வாறு இந்த மாநில அரசு அதிக அதிகாரங்களைப் பெற்று மக்களுக்குத் தந்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசு ஸ்மால் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், தமிழ்நாடு இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற இரு அமைப்புகளின் மூலமாகச் செய்திருக்கின்ற பணியைப் பாராட்டுகின்றேன்.

(மிஸ்டர் சேர்மன் மணி அடிக்க உரை முடித்துக்கொள்ளப்பட்டது.)

திரு. எம். அய்யாசாமி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது இரண்டொரு விஷயங்களைச் சுருக்கமாகக் கூறி முடித்துக்கொள்கிறேன். நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசுகிறபோது, சித்த வைத்தியத் துறையைப்பற்றிச் சில விஷயங்களைக் கூறினார். அது சம்பந்தமாக நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சித்த வைத்திய ஆலோசனைக் குழு என்று மாநில அளவில் ஒரு குழு இருந்து வருகிறது. அதற்குத் தலைவர் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள். அந்தக் குழு, தமிழ் நாட்டில் பாளையம்கோட்டையில் மட்டும் சித்த வைத்தியத்திற்கு மாணவர்களைச் சேர்க்கும் கல்லூரி இருக்கிறது, அது போதாது சென்னையில் ஒரு கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று, அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அது சம்பந்தமாக சென்னையில் அந்த சித்த மருத்துவக் கல்லூரியை நிறுவுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற விவரம் நமக்குத் தெரியவில்லை. அப்படியே சென்னையில் அந்தக் கல்லூரியை அமைப்பதற்குப் போதுமான வசதியில்லை என்று கருதினால், தற்போது பாளையம்கோட்டையிலுள்ள அந்த சித்த வைத்திய முறை கல்லூரியில் தற்போது 30 மாணவர்களையே சேர்த்து வருவதை மாற்றி, ஆங்கில மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்து வருகின்ற 1,100 மாணவர்கள் போலல்லாமல் ஒரு 100 மாணவர்களையாவது சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆங்கில மருத்துவ முறைக் கல்லூரிகளில் 1,100 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இருக்கின்ற ஒரே ஒரு கல்லூரியில் 30

மாணவர்கள் மட்டும் இடம் பெறுவார்கள் என்று இருந்தால், உண்மையில் நம்முடைய தமிழ் மருத்துவ முறைக்கு இந்த அரசு போதிய சலுகை கொடுக்கிறது என்று ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே இந்தத் தமிழ் சித்த வைத்திய முறை வளர்ச்சி பெறுவதற்கு நமது மாநில அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்த பட்சம் 100 மாணவர்களையாவது சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலை நாட்டு மருத்துவ முறை, யுனானி மருத்துவ முறை போன்றவை இந்த நாட்டுக்கு வருவதற்கு முன்பே, தொன்று தொட்டு சித்த மருத்துவப் பிரிவு இருந்தது. இந்த மருத்துவத் துறையில் பல வல்லுநர்கள் தோன்றி மக்களுக்கு நல்ல வைத்தியத் தொண்டுகள் செய்திருக்கிறார்கள். நமது தமிழக அரசு பண்டை மன்னர்களுக்கெல்லாம் புகழ் தேடும் வகையில் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. தமிழ் இலக்கணம் வளர்ச்சி பெற பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அப்படிச் செய்து வருகின்ற இந்த அரசு இந்த சித்த வைத்திய மருத்துவத் துறை நல்ல முறையில் மேலும் வளர்ச்சி பெற்று மக்களுக்குப் பயன் தரத்தக்க அளவுக்கு ஆர்வம் காட்டவில்லை என்று தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஆனால் பாராட்டத்தக்கதொரு வகையில் ஒரு காரியம் இந்த அரசு செய்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் சித்த மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது. இன்னும் இங்கே அரசு தலைமைச் செயலகத்தில் ஒரு சித்த மருத்துவப் பிரிவு இருக்கின்றது. சேப்பாக்கத்தில் ஒரு பிரிவு இருக்கிறது. இன்னும் அண்ணா மருத்துவ மனை என்று இருக்கிறது. ஆக இப்படிப்பட்ட ஒரு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும்கூட இந்த சித்த மருத்துவ முறை முழுமையாகச் செயல்பட்டு வளர்ச்சியுறுவதற்கான நல்ல ஏற்பாடுகளை இந்த அரசு போதுமான அளவிற்குச் செய்யவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஏனென்றால் சித்த மருத்துவ மருந்துகளின் தர நிர்ணய ஆராய்ச்சி நிலையம்—ட்ரக்ஸ் ஸ்டாண்டர்டைஸேஷன் இன்ஸ்டிட்யூஷன் என்று சொல்லுவார்கள்—அடையாற்றிலும், அரும்பாக்கத்திலும் கீழ்ப்பாக்கத்திலும் ஒன்றும், தஞ்சையில் ஸரஸ்வதி சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்றும், பாளையம் கோட்டையில் இப்படிப்பட்ட ஒரு மூலிகை ஆராய்ச்சி நிலையம் ஒன்றும்—ஆக இவை அனைத்தும் மத்திய அரசின் கீழ் செயல்பட்டுக்கொண்டு வருகின்றதே தவிர, மாநில அரசின் கீழ் இப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையம் எதுவும் போதுமான அளவிற்குச் செயல்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது. இதற்கென போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. காரணம் நாம் பெருமையுறத் தக்க அளவிற்கு பண்டைக்கால வைத்திய முறைகள் நம்மிடம் இருந்து வருகின்றன. இவற்றைப் பேணி வளர்க்க வேண்டுமென்று இருக்கும்போது, நாம் முழுக்க முழுக்க மேலைநாடுகளின் மருத்துவ முறைகளையே எண்ணிப் பெருமைப்பட்டுக்கொண்டிருப்பது நல்லதுதானா என்று எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனவே சித்த மருத்துவ முறையில் நாம் பெருமையுறத்தக்க விதத்தில் இதற்கு நாம் போாதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதே போல ஆர்.ஐ.எம்.பி. என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சரியாக முறையாகப் பயிற்சி பெறாதவர்கள் எல்லாம் பத்தாண்டுகாலம் வைத்தியம் செய்ததாகத் தாசில்தாரிடம் அத்தாட்சி—சான்று பெற்றுக்கொண்டு அந்தப் பட்டத்தினை வாங்கிக்கொண்டு விடுகின்றார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதில் உண்மையிருக்கின்றது என்று ஒப்புக்கொள்ளும் அதே நேரத்தில், இப்போது இந்த ரெஜிஸ்டர் செய்யும் முறை இருக்கிறதே,





இது இந்த மாதம் 31-ஆம் தேதியோடு முடிவடைகிறது. அரசு மனது வைத்தால், இதை இன்னும் கொஞ்ச காலத்திற்கு நீடிக்கலாம். ஆனால் மிகச் சிறந்த சித்த வைத்தியர்கள் இன்னும் பல கிராமங்களில் காலாகாலமாகப் பணியாற்றிக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த ரெஜிஸ்ட்ரேஷன் முறை தெரியாமலும் இருக்கலாம். எனவே ஒரு சென்ஸஸ் மாதிரி எடுத்து அவர்களை அணுகி விசாரித்து, அவர்களுக்கும் முறையாக ரெகக்னிஷன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், நலமாக இருக்கும். நேரம் இல்லாத காரணத்தினால், அதிகமாகப் பேச முடியவில்லை.

மிஸ்டர் சேர்மன்: 'பட்ஜெட் ஸ்பீச்' சில் வைத்துக்கொள்ளலாமே!

திரு. எம். அய்யாசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது உரையில் இந்த மருத்துவ முறை பற்றி ஏதாவது குறிப்பிட்டிருப்பார்கள் என்று எண்ணினேன். ஆனால் ஏமாற்றம் அடைந்துவிட்டேன் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. வரவு-செலவுத் திட்டத்திலாவது இதுபற்றிய குறிப்புகள் இருக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெகு விரைவில் இவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதையும், ஷெட்யூல்டு வகுப்பினருக்கான சலுகைகள் அனைத்தும் தரப்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு ஆளுநர் அவர்களது உரையின் மீது பேச வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி தெரிவித்து அமருகின்றேன்.

* திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பல்வேறு உறுப்பினர்கள் பேசிவிட்ட பிறகு கடைசியாக மிகக் குறுகிய கால அளவில் பேச நேரிட்டுவிட்டதால் . . .

மிஸ்டர் சேர்மன்: உங்களுக்குப் பின்னாலும் பலர் பேச இருக்கின்றார்கள்.

திரு. எம். ஆறுமுகசாமி: நன்றி. எனவே பத்து நிமிடங்களில் பேசி முடித்துவிட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் தங்கள் உரையில் அண்மையில் நடந்த போர் பற்றியும் அதில் நாம் பெற்ற வெற்றி பற்றியும், போரிட்ட வீரர்களுக்கு வாழ்த்துக்கூறியும், நமது பிரதமர் அவர்களைப் பாராட்டியும் பல கருத்துக்களைக் கூறியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். ஏனென்றால் இந்த தேசத்தின் ஒரு கோடியிலுள்ள நாம் இந்தப் போரில் எந்த அளவிற்குக் கவலை கொண்டிருந்தோம், அதில் எந்த அளவிற்குக் கடமையாற்றி இருக்கிறோம் என்பதைச் சொல்லி, இந்த வெற்றியில் நாம் பெருமைப்படுவதில் குறைபாடு எதும் இல்லையென்றே கருதுகிறேன். மேலும் ஆளுநர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள், கடந்த படையெடுப்பின்போது நாம் அனைவரும் காட்டிய ஒற்றுமையினைக் காட்டிலும் 'அமைதிகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாம் அதிக ஒற்றுமையினைக் காண்பிப்பது மிகவும் முக்கியமானது" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு அமைதிகாலத்தில், இந்தத் தேசத்தில் வறுமையை எதிர்த்து நிற்கும் போரில் நாம் காட்டவேண்டிய ஒற்றுமை மிகவும் முக்கியமானது என்ற வகையில் அவர்கள் அதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1956-ல் அப்போது எங்கள் தலைவராக இருந்த அசோக் மேத்தா அவர்கள் பெடுல் மகாநாட்டில் ஒரு 'தெஸீஸ்' ஒன்றினைக் கொடுத்தார்கள். ஒரு கொள்கை நெறி முறையொன்றினைக் கொடுத்தார்கள். அந்தக் கொள்கையில் பின் தங்கிய

[31st January 1972

நாடுகளின் பொருளாதார நிபந்தனைகள் (Political Compulsions of backward economy) என்ற தலைப்பில் அதனை திரட்டிக்கொடுத்திருந்தார்கள். அது இப்போது எனக்கு நினைவிற்கு வருகின்றது. பின் தங்கிய நாடுகள் என்று சொல்லும்போது, ஆசிய நாடுகள் மட்டுமின்றி ஆப்பிரிக்க நாடுகளையும் சேர்த்துக்கொள்ளலாம். இவற்றையெல்லாம் வளர்ச்சியுற்றுவரும் நாடுகள், 'டெவலப்பிங் நேஷன்ஸ்' என்று அழகாகச் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட வளர்ச்சியுற்றுவரும் நாடுகளில் உள்ள அரசியல் கட்சிகள், அவை அரசில் உள்ள கட்சிகளானாலும் சரி, பொறுப்பில் இல்லாத வேறு கட்சிகளானாலும் சரி அவைகள் மிகப் பெரியதொரு பொறுப்பை ஆற்ற வேண்டியிருக்கின்றது. அது என்னவென்றால், தேசத்தினை மிகத் தீவிர முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லுவதாகும். பல நாடுகளில் சமீப காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் இந்த ஒரு போக்கைப் பார்த்தோம். 'ஸ்டேடஸ்-கோ' அதாவது இருக்கும் நிலையே நீடிக்கட்டும் என்று சொல்லுகின்றவர்களைவிட மிகத் தீவிரமான மாறுதல்கள் ஏற்பட வேண்டும் என்பவர்களுக்குப் பெருமளவில் மக்கள் வாக்களித்ததிலிருந்து இதைப் புரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட கருத்து அதிகமாக வலுப்பெற்று வருகின்றதை அண்மையில் இலங்கையிலே பார்க்கிறோம். மிகவும் எதிரும் புதிருமாக இருந்த ஒரு கட்சி, யுனைடெட் நேஷனல் பார்டி ஆகிய ஐக்கிய தேசியக் கட்சி சமீபத்தில் ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு சேருவதற்கு, அதிகாரத்தில் பொறுப்பேற்றுக்கொள்ளுவதற்கு, அல்லது பொறுப்பில் இல்லாவிட்டாலும் தன் பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறது என்ற செய்தியினைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட சேர்க்கை இந்த நாட்டில் மிகமிகத் தேவை, அவசியமானதும்கூட. இப்படிப்பட்ட பின் தங்கிய நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையில் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். இப்படிச் சொன்னால் ஆளும் கட்சிக்கு ஆதரவு தேடும் முறையில் இதைச் சொல்லுகிறேன் என்று சிலர் சொல்லுகின்றார்கள். நான் இந்த ஆளும்கட்சியைத் தோழமைக் கட்சி என்று சொன்னால், இந்தக் கட்சி செய்கின்ற அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொண்டு அதன்பின் செல்லுகிறேன் என்று படம் பிடித்துக்காட்டுகின்றார்கள். நான் சொல்லுகிறேன், இந்தத் தேசத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும், அது எந்தக் கட்சியாக இருந்தாலும், எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய திரு. இராமனாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தேச நலன்கள், தேசத்தின் பாதுகாப்பு, தேசத்தின் முன்னேற்றம் என்று வரும்போது, ஒன்றுபட்டிருப்பது மிகமிக அவசியமாகும். அது யுத்தமாக இருந்தாலும் சரி, வேறு எந்த நிலைமையாக இருந்தாலும் சரி, ஒன்றுபட்டிருப்பது மிகவும் அவசியமாகும். இன்றைக்குப் பார்க்கிறோம், யுத்தம் முடிந்து விட்டது. ஆனாலும் அவசர நிலைமை இன்னும் தீர்ந்தபாடில்லை. ஏனெனில் மீண்டும் யுத்தம் என்றைக்கும் வரலாம் என்ற ஆபத்து நிலைமை இருந்து வருகிறது. ஆனால் இப்படிப்பட்ட நேரத்தில் நமக்கு மிக அருகிலுள்ள ஒரு யுத்தத் தளவாடத் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் நடைபெறுவதைப் பார்க்கிறோம். அவசர நிலைமை நீடித்துக்கொண்டிருக்கிறது. யுத்தம் மீண்டும் வரலாம். இப்படிப்பட்ட நேரத்தில் மிக முக்கியமான டாங்குகளைச் செய்யும் ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்வது தேசபக்திக்கு உகந்த செயல்தானா என்று யோசிக்க வேண்டும். இப்படி நான் சொன்னால், ஒரு சோஷலிஸ்டு வேலை நிறுத்தத்தினை எதிர்க்கிறான் என்று சொல்லத்தக்க அளவிற்கு கீழ்த்தர அரசியலைப் பேசுகின்றவர்கள் இருக்கக்கூடும். கட்சி என்பது வேறு, தேசத்தின் பாதுகாப்பு என்பது வேறு. ஒரு பஞ்சாலைத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் என்றால், ஏற்படும்



31st January 1972]

இழப்பை மற்றொரு பஞ்சாலையில் ஈடு செய்துகொள்ள முடியும். தகராறுகள் காரணமாக ஒரு போகம் விவசாயம் பாதிக்கப்பட்டால், அதை ஈடுசெய்துகொள்ள முடியும் அடுத்த போகத்தில். ஆனால் இந்தத் தொழிற்சாலை தேசத்தின் பாதுகாப்பின் முக்கியமான ஒரு அங்கம் வகிக்கும் போர்த் தளவாட மத்திய தொழிற்சாலையில், மத்திய அரசுக்குச் சொந்தமான ஒன்றில் வேலை நிறுத்தம். சொல்லப் போனால், ப்ரொட்யூஸரும் மத்திய சர்க்கார்தான், கன்ஸ்யூமரும் மத்திய அரசுதான். ஆயுத தளவாடங்களை வேறு யாரும் வாங்கப்போவதில்லை. அது நீங்களும் நானும் வாங்கும் ஒன்றல்ல. உற்பத்தியாளரும் மத்திய அரசுதான், வாங்குபவரும் மத்திய அரசுதான். இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் என்று சொல்லும்போது வேதனை ஏற்படுகிறது. இந்த வேலை நிறுத்தத்தினை அரசு தடை செய்யலாம், சமரச முயற்சி வெற்றி பெறவில்லையென்றால். ஆனாலும்கூட இன்றைய தினம் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்வது தேசபக்திக்கு உகந்த செயல் தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

நான் அதற்குப் பின்னாலும் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிக் கவலைப்படுகிறேன். இந்த அரசினுடைய போலீசு அங்கே அமைதியாகக் கூட்டம் நடத்தியவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்ததாகவும் பலருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் எனது அருமை நண்பர்கள் காயமுற்று மருத்துவ மனையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நான் கேட்கிறேன். இந்த அரசினிடத்தில் கூட எனக்கு ஒரு வருத்தம். அந்தக் கூட்டத்தைத் தற்காப்பு இலாகாவை நிர்வகிக்கக் கூடிய மத்திய அரசுக் கட்சியை ஆதரிக்கிறவர்கள் சேர்ந்து நடத்தியபோது நீங்களும் அவர்களும் எதிரும் புதிருமாகப் பேசிக்கொண்டிருக்கிறவர்கள் அங்கே போய் இப்படிப்பட்ட அநாகரீகச் செயல்கள் புரிய என்ன அவசியம் வந்தது? ஒரு முறை எங்கள் கட்சி நிர்வாகக் குழுவில் அப்போது விசேஷ அழைப்பாளராக காஷ்மீரத்தின் பிரதம அமைச்சராக இருந்த திரு. பக்ஷி குலாம் அகமத் அவர்கள் வந்தபோது அவர்கள் சொன்னார்கள். அங்கு ஒரு முறை இப்படிப்பட்ட தகராறு உண்டாகி காஷ்மீரத்தின் போலீசும் மத்திய போலீசும் எதிரும் புதிருமாக நின்று சுட்டுக் கொள்கிற நிலைமை ஏற்பட்டது. பக்ஷி குலாம் அகமது போலீசு என்ன சொல்லியது? காஷ்மீரம் பிரிந்து பாகிஸ்தானோடு சேர வேண்டுமென்று சொல்லவில்லை. அவர் தலைமையில் இருக்கக் கூடிய நேஷனல் கான்பரன்ஸ் என்கிற தேசிய மாநாடு அதனை விரும்பவில்லை. அதே போல நம் ராணுவத்தின் விசேஷ போலீசு அங்கே எதற்காகப் போனது? சுதந்திரக் காஷ்மீரை மீட்டுத் தருவதற்காக, காஷ்மீர் மக்கள் இந்தியாவோடு இணைந்ததைப் பாதுகாப்பதற்காக, பாகிஸ்தான் ஒற்றர்கள் ஊடுருவல் செய்து நம் மண்ணைப் பிடித்துக்கொள்வதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு உதவியாகப் போயிருக்கிறது. உதவிக்காகப் போன போலீசும் காஷ்மீர் போலீசும் மோதிக் கொள்ளும் நிலை ஏன் ஏற்பட்டது? இப்படிப்பட்ட நிலைமை மத்திய அரசும் மாநில அரசும் பிரச்னை ஒன்றில் எதிரும் புதிருமாக நடவடிக்கை மேற்கொள்வதால் ஏற்படுகின்றது என்றார். இதை நான் எண்ணிப் பார்க்கிறேன். நம் மாநிலத்தின் முதலமைச்சர் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்று பேசவும், மத்திய அரசில் ஆளும் பொறுப்பில் உள்ள கட்சியிலுள்ள ஒரு சிலர் கவிழ்ப்போம் என்று பேசுவதும் இன்று தேவையான அரசியல்தானா? இதிலே கூறப்பட்டிருக்கிற உரைக்கு உகந்ததுதானா? ஆளுநர் அவர்கள் நம் அரசுக்கு மட்டும் பொறுப்பானவர் என்று கருத மாட்டேன், ஜனாதிபதிக்கும் கூட பொறுப்பானவர் என்று கருதுகிறேன்.

இந்த அரசில் இந்த சட்ட மன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒருவராக இருந்தாலும் —சட்ட மன்றம் என்றால் சட்ட மன்றப் பேரவை, மேலவை, மந்திரிசபை, கவர்னரும் சேர்ந்து சட்டமன்றம் ஆகிறது—அவர் ஜனாதிபதிக்குப் பொறுப்பானவர். அவர் உரையில் கூறியிருக்கும் வாசகங்களை இந்த ஊரில் இருக்கும் ஒரு சிலர் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் தனது உரையில் மென்மையான வார்த்தைகளால் சொல்லியிருக்கிறார். கடந்த சில வாரங்களில் வேண்டாத விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருப்பதைக் குறித்து வருந்துகிறேன் என்று சொல்லியிருக்கிறார். இந்த அரசுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். எந்த ஒரு காரியத்தை எடுத்தாலும் உறுதியாக நின்று நடத்துங்கள். எண்ணித் துணிக கருமம் என்ற சொல்படி துணிச்சலாகக் காரியம் செய்ய வேண்டும். உற்சாகம் மிகுதியில் பணியாற்ற வேண்டுமென்ற உணர்ச்சியில் எல்லோருக்கும் எல்லாவற்றையும் வழங்க வேண்டுமென்று தொழில் அரங்கில் அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பதால், கோளாறுகளுக்கு உள்ளாகி நமக்கு எதிரான காரியங்களை மாற்றார்கள் செய்து, அதனால் குழப்பம் உண்டாகி, தேசத்தின் வலிமை குறைதல் போன்ற காரியங்களுக்குச் சில நேரங்களில் உங்கள் நடவடிக்கைகள் பயன்படுகிறது என்று சொல்லி இதில் உறுதி காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அப்படி உறுதி காட்டுவதன் மூலமாகவே இது போன்ற காரியங்களைச் சமாளிக்க முடியும். மேலும் தொழிற் சங்கத்தைப் பற்றிச் சில வார்த்தைகள். நேரம் அதிகமாக ஆகிறது. ஓரிரண்டு நிமிஷங்களில் தொழிற் சங்கத்தைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன். இந்தியாவில் இருக்கக்கூடிய தொழிற் சங்கங்களுக்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. இந்த தேசத்தின் அனைத்துத் தொழிற் சங்கக் காங்கிரசின் தலைவராக பண்டித நேரு இருந்தார். கவிக்குயில் சரோஜினி நாயுடு இருந்தார்கள். ஆமதாபாத் தொழிற் சங்கத்திற்கு காந்தி அவர்கள் தலைவர் என்று இல்லாமல் தலைவராய் இருந்தார். அவர்தான் அங்கு நடைபெற்ற வேலை நிறுத்தங்களுக்கு போராட்டங்களுக்கு ஆசிரியாக இருந்து தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். இப்படி தொழிற் சங்கங்களில் மிகப் பெரிய அரசியல் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் இந்தத் தேசத்தின் சுதந்திரத்திற்காக அரும்பாடு பட்டவர்கள். இந்த தேசத்தின் தொழிலாளர்கள் அரசியல் காரணங்களுக்காக மிகப் பெரிய வேலை நிறுத்தங்கள் செய்திருக்கிறார்கள். அந்நாளில் லோக மான்ய பால கங்காதர திலகர் கைது செய்யப்பட்ட போது பம்பாய் பஞ்சாலை தொழிலாள வர்க்கம் போராடியது. இப்படித் தொழிலாள வர்க்கம் அரசியலுக்காகப் போராடியதை சர்வதேச தொழிற் சங்க இயக்கம் பாராட்டியது. இந்தியத் தொழிலாளர்கள் தங்களுடைய படி உயர்வுக்காக மட்டும் போராடவில்லை. அவர்கள் சுதந்திரத்திற்காகப் போராடியுள்ளார்கள். அரசியல் கட்சிக்காரர்கள் தொழிற் சங்கங்களில் தலைமை வகிப்பதும் பாபமல்ல, குற்றமல்ல. அரசியல் கட்சிக்காரர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். அரசியல் அமைப்பைக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்பட்டால், அதைத் தடுப்பதற்கு இன்றைக்குக் கொண்டு வருகிற தொழிற் சங்க மசோதா பயன் தராது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று நம் நாட்டுத் தொழிலாளர்கள் தெளிவுற்று இருக்கவில்லை. நுணுக்கமான காரணங்களை அறிந்து தொழிற் சங்கங்களில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. பேச வேண்டியிருக்கின்றன. திறமையான முதலாளிகளோடு தந்திர உபாயங்களைக் கையாள வேண்டியிருக்கிறது. சாதாரண விஷயங்களைப் பேசி முடிப்பதற்குக் கூட சாமர்த்தியம் வேண்டியிருக்கிறது. அந்த அளவிற்குத் தொழிலாளர் வர்க்கத்திற்குத் தேவையிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வசந்தபாய்,





திரு. சந்தோஷம் போன்ற வழக்குரைஞர்களைத் தொழிற் சங்க விஷயங்களுக்காக வைத்து வாதாட வேண்டியிருக்கிறது. ஏராளமான தொழிற் சங்கச் சட்டங்கள் வந்து விட்டதன் காரணமாக—எனக்குத் தெரியும்—மிகப் பெரிய தொகைகளை இப்படிப்பட்ட வழக்குரைஞர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த மாதிரிச் சூழ்நிலையில் தொழிற் சங்கத்தில் அரசியல் வாதிகள் ("அவுட்சைடர்") வெளியார் இருக்கக் கூடாது என்று இப்போது சட்டம் கொண்டுவருவது நல்லதல்ல. இது ஏற்ற நேரமல்ல, தருணமல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிலாள வர்க்கம் அறவே அறிவு, ஆற்றல் பெற்ற பிறகு சட்டம் கொண்டுவந்தால், நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

தலைவரவர்களே, இன்னும் சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். விலைவாசி பற்றிய பிரச்னை. உற்பத்தி பெருகியிருக்கிறது. எல்லா அரங்கங்களிலும் உற்பத்தி பெருகியிருக்கிறது. துணி உற்பத்தி பெருகியிருக்கிறது. நூல் உற்பத்தி பெருகியிருக்கிறது. சிமெண்டு உற்பத்தி பெருகியிருக்கிறது. கரும்பு உற்பத்தி பெருகியிருக்கிறது. இருப்பினும் விலைவாசி இறங்கவில்லை. குழந்தைகள் உற்பத்தியும் பெருகியிருக்கிறது. நான் அதைப் பெரிய குற்றமாகக் கருதவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு எவ்வளவு குழந்தைகள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: திருவாளர் சுவாமிநாதன் அவர்களுக்கு ஒன்றும் எனக்கு எட்டும் இருக்கின்றன. குழந்தை உற்பத்திக்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. நான் இந்தப் புதிய உத்திகள், தடுப்பதற்கான உத்திகள் வருவதற்கு முன்னால் குழந்தைகளை ஈன்றெடுத்து விட்டவன். ஈன்றெடுத்த குழந்தைகளைப் பராமரிக்க வேண்டியதுதான். இனிமேல் வேண்டுமானால் பிறப்பதைக் குறைத்துக்கொள்ளலாம், தடுத்து விடலாம். நான் நிறுத்தி விட்டேன் என்று சொல்லிக்கொள்கிறேன், தலைவரவர்களே.

விலைவாசி எப்படி ஏறுகிறது என்று யாருக்கும் தெரியவில்லை. இந்தோனேஷியாவின் தலைவர் பங் சுகர்னோ இந்த விலைவாசி ஏற்றத்தைப்பற்றிச் சொல்லும்போது, யாராவது ஒரு ஆள் இதைக் கட்டுப்படுத்துவதாக ஒரு திட்டம் கொடுத்தால், அவர் கிட்டே அதிகாரத்தை விட்டு விடுகிறேன், தவறினால் சுட்டு விடுகிறேன் என்று சொன்னார். அது சுகர்னோவா அல்லது அந்த நாட்டுப் புதுத் தலைவரா என்று நினைவில்லை. இந்தோனேஷியா நாட்டுத் தலைவர் ஒருவர்தான் சொன்னார். எனக்குப் புரியவில்லை. ஏன் விலைவாசி தினம் ஏறிக்கொண்டிருக்கிறது என்று, அதையொட்டி எங்கும் கிளர்ச்சி இருந்துகொண்டிருக்கிறது. தினந்தோறும் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. நேற்று தான் போலிருக்கிறது. சம்பள உயர்வுக்கென்று 26 கோடி ரூபாய் அளவிற்கு அரசு ஊழியர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டது. திருவாளர்கள் ராஜா அய்யர், முத்துசாமி—இவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள்—இருப்பினும் அவர்கள் பல குறைகளைப்பற்றிச் சொன்னார்கள். விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. விலைவாசி ஏறுவதற்கான காரணம் ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. வர்த்தகச் சூதாடிகள் ஒரு காரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வணிகச் சூதாடிகள், இடைத் தரகர்கள் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. விநியோக முறை புனரமைக்கப்பட வேண்டும். அது மட்டும் போதுமா என்று புரியவில்லை. மாநில அரசு விலைவாசியைக் கட்டுப்படுத்துவது

[31st January 1972

என்பது முடிகிற காரியமல்ல. இவர்களே செய்து விடக்கூடிய காரியமல்ல. பருப்பை எடுத்துக்கொண்டால், அது மத்தியப் பிரதேசத்திலிருந்து வர வேண்டும். பல இடங்களிலிருந்து பல சாமான்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறோம். இதை இந்திய மட்டத்தில் இந்திய ஒன்றிய அரசும் இந்த மாநில அரசும் சேர்ந்து செய்யவேண்டும். இது அவர்களுடைய கடமையும் பொறுப்புமாகும். ஏதாவது செய்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். அதற்காகப் போராட்டம் நடத்தியாக வேண்டும். போராட்டம் என்று சொன்னால், மாநில அரசு மத்திய அரசோடு சண்டை போட்டுக்கொள்ள வேண்டும். அதற்கு ஒரு போர் வேண்டும் என்ற கருத்தில் சொல்லவில்லை. தலைவரவர்களே, அப்படி யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம். மத்திய அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அது இந்தியா முழுமையும் கட்டிக் காக்கின்ற அரசு. நாம் சொல்கிறோம். பல மாநிலங்களில் உள்ளவர்களும் வற்புறுத்தத் தொடங்குவார்கள். நம் குரல் வலுவாகி மற்ற மாநிலங்களிலும் அதிகமான அதிகாரங்களைக் கேட்கப் போகிறார்கள். வார்த்தைகளை வைத்து சுயாட்சியா, புரோவின்ஷியல் ஆட்டானமியா என்று ஜாலம் பேசவில்லை, அவசியமில்லை. என்ன பெயரோ, எனக்குக் கவலை கிடையாது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பது எல்லா மாநிலங்களிலும் எல்லாக் கட்சியினருமே கேட்டு வருகிற கோரிக்கை. எங்களைப் பொறுத்த வரையில், 1953 தேர்தல் அறிக்கையில் இதைப் போட்டிருக்கிறோம். "Decentralization of powers" அரசு நான்கு தூண்களிலே நிற்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். அதைப்பற்றியெல்லாம் பேச அவகாசம் இல்லாததால், இந்த மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கோருகிறபோது, மத்திய மாநிலச் சண்டை, யுத்தம், குழப்பம் போல் பேசக் கூடாது, அதை அப்படி ஆளும் கட்சியில் இருக்கிறவர்களும் பேசக் கூடாது, எதிர்த் தரப்பிலிருக்கிறவர்களும் இல்லாததைக் கற்பித்துச் சொல்லியதாகச் சொல்லக் கூடாது என்று கூறிக்கொண்டு, தலைவரவர்களே, நேரம் இல்லாத காரணத்தால் எத்தனையோ பிரச்சினைகளைக் குறித்துவைத்துக்கொண்டிருப்பினும், பேச இயலாத நிலையில், வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : மற்றவற்றையெல்லாம் பட்ஜெட் விவாதத்தின்போது பேசிக்கொள்ளலாம்.

* திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 22—1—1972-ம் நாளன்று ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையையும் அதில் அவர்கள் கூறிய கருத்துக்களையும் வரவேற்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள், நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதுவரையில் ஆற்றி வந்த நல்ல தொண்டினை விளக்கி இனிமேலும் ஆற்றவிருக்கிற பணிகளையும் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியவர்களின் குறைகளை நன்கு அறிந்தவர்கள். தானும் ஓர் ஏழைக் குடியில் பிறந்து, ஏழை மக்களின் நாடி நரம்புகளில் ஒலித்துக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளை மிகமிக உணர்ந்தவர். அதனால் பிற்பட்ட சமுதாயங்களின் நலனைக் காக்க வந்திருக்கும் பெட்டகமாக, கருவூலமாக, இந்நாட்டிலுள்ள பிற்பட்ட சமுதாய மக்கள் அனைவரும் கருதுகிறார்கள்.



31st January 1972] [திரு. சி. ஆர். கோலப்பா]

குறிப்பாகக் கூற வேண்டுமானால், சலவைத் தொழிலாளர் சமுதாயம் நமது முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றைக்கும் தொண்டாற்றக் கடமைப்பட்டிருக்கிறது. அதற்கான நன்றியறிதலை அவர்கள் உயிர் உள்ள வரைக்கும், அவர்கள் உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் மறக்கவே மாட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் பதவி ஏற்றபிறகு எங்களைப் போல ஏழைத் தொழிலாள மக்களுக்கு வழங்கியுள்ள சலுகைகள் ஏராளம், ஏராளம்.

மதுவிலக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டதைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசினார்கள், ஏசினார்கள், தூற்றினார்கள். ஆனால் சலவையாளர் போன்ற சமுதாயத்திற்கு இது எந்த வழியில் உதவியது என்பதை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். மது அருந்துவதோ அல்லது குடிப்பழக்கமோ நல்லது என்று கூற நான் முன்வரவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் மது விலக்குச் சட்டம் இருந்தது. நோக்கம் நல்லதாய் இருந்தால் மட்டும் போதாது. அதை அமுல் நடத்துவதில் தொல்லைக்குள்ளாகியவர்கள் சலவைத் தொழிலாளர்கள்தான். போலீஸாருக்குக் கேஸ் கிடைக்கவில்லையென்றால், ஆற்றோரம், கால்வாய் ஓரம், நாள்தோறும் உழைத்துவிட்டு உறங்குகின்ற நேரத்தில் போலீஸ் லாரி வரும். குடித்திருக்கிறானோ இல்லையோ, அகப்பட்டவர்களைப் பிடித்துக் கேஸ் போடுவார்கள். மறுத்தால் உதைப்பார்கள். போலீஸ் லாரியைக் கண்டதும், இரவில் இந்த சமூக மக்கள் ஏதோ ஓர் பயங்கர மிருகத்தைப் பார்த்து ஓடுவதைப் போல, குழந்தை குட்டிகளை மிதித்துக்கொண்டு ஓடுவார்கள்.

நாள்தோறும் இப்படிப் பயங்கரமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்த இந்தச் சமுதாய மக்கள், மதுவிலக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது என்று உத்திரவு வந்தவுடன்தான், உண்மையாக சுதந்திர மக்களாக வாழ முடிந்தது.

ஆகவே சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், உண்மையான சுதந்திரம் நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் ஆட்சியில்தான் கிட்டியதே தவிர, காங்கிரஸ் ஆட்சியில் அல்ல என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களை பயமில்லாத சுதந்திர மக்களாக வாழவைத்த, வாழ வைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாயார வாழ்த்தி அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு காலம் அரசாட்சி நடத்த வேண்டுமென எங்கள் சமூகத்தின் சார்பாகவும், இந்நாட்டின் நலிந்து கிடக்கும் பிற்பட்ட சமூகத்தின் சார்பாகவும் வேண்டுகிறேன்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் தான் சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கும் முதல் தரமான தொழிற் கருவிகளை 1,000 பேர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவர் ஆட்சியில்தான், சலவைத் தொழிலாளர்களுடைய மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் சலவைத் தொழிலை ஒரு பாடமாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆட்சியில்தான் அண்மையில் வைகை ஆற்றங்கரையில் வந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வெள்ளத்தில் சலவைத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட

[31st January 1972

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உயிரிழந்தார்கள். இந்தச் செய்தி கேட்டதும் நான் விரைந்து சென்று அதிகாரிகளையும், கட்சித் தோழர்களையும், தலைவர்களையும் சந்தித்து முதலமைச்சர் அவர்கள் பெயரால் உடனடியாக நிவாரணமளிக்க ஏற்பாடு செய்ய முடிந்தது. அப்படி உடனடியாக ஏற்பாடு செய்யாதிருந்தால், நூற்றுக்கணக்கான மக்கள் இறந்திருப்பார்கள்.

இதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நான் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முழு முயற்சியினால் பிற்பட்டோர் நலக் குழு ஒன்றை அமைத்தார்கள். அக்குழு சரித்திர பிரசித்தமான ஒரு ஒப்பற்ற அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கை சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் ஆகியோரின் இன்றைய நிலையைப் படம் பிடித்துக் காட்டும் ஓர் கண்ணாடியைப் போல் விளங்குகிறது. அந்த அறிக்கை பாகம் 1-ல் பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரைகளின் தொகுப்புரை 5-வது அத்தியாயத்தில், சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர்களைப் பற்றிக் குறிப்பாக 75-லிருந்து 81 வரை சொல்லப்பட்டிருக்கிற சிபார்சுகளை அதாவது, இழிவான பணிகளைச் செய்ய, வற்புறுத்தும் வழக்கத்தை தீண்டாமைச் சட்டவரம்பின் கீழ் கொண்டு வரவும், குடியிருப்பு வசதிகளில் முன்னுரிமை வழங்கவும் பொது மக்களின் துணிகளைச் சுகாதாரமாக வெளுக்க துறைகளை ஒவ்வொரு ஊராட்சியிலும், நகராட்சிகளிலும் கட்டித்தரவும், தொழிலை நல்ல சுகாதாரமாக, நாகரிகமாகச் செய்ய தரமான கருவிகள், சாதனங்கள் இலவசமாக வழங்கவும், சலவை நிலையங்கள் அமைக்க கடன் வழங்கவும், சலவையாளர்களுக்கு உடல் ஆரோக்கிய இன்சூரன்சைக் கட்டாயமாக்கவும், தொழில் நடத்துவதில் நகராட்சி, பேரூராட்சி ஆகியவைகளின் கட்டுப்பாடுகளால் ஏற்படும் அல்லல்களைத் தீர்க்க சம்பந்தப்பட்ட விதிகளை மாற்றவும், உடனே அமுல் நடத்த ஏற்பாடு செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கையில், இந்த நாட்டில் உள்ள சலவைத் தொழிலாள மக்கள் தொகையை 4 லட்சத்து 61 ஆயிரத்து 239 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் தொகையிருந்தும் இந்தத் தொழிலாள மக்களில் ஒரே ஒரு கெஜடட் உத்தியோகம்தான் உள்ளது. ஒரே ஒரு டாக்டர்தான் உள்ளார். ஒரு டிப்டி கலெக்டரோ, ஒரு டி.எஸ்.பி. யோ கிடையாது. ஒரு சிலர் இன்று படித்துக்கொண்டிருந்தாலும், ஏனைய செல்வாக்கு மிகுந்த பிற்பட்ட இனத்தோடு போட்டி போட வேண்டியுள்ளதால், இந்தச் சமூகத்தவர்கள் அரசாங்கத்தில் உயர்ந்த பதவிக்குப் போக முடியவில்லை. இந்த சமூகத்தின் தொழில் முறை, வயதானவர் முதல் குழந்தை வரை வேலை செய்தாக வேண்டும். இந்தச் சூழ்நிலையில் படிப்பதற்கு பல இடைஞ்சல்கள் உள்ளன. படிக்கச் சென்றாலும், உடைப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை வேறு. எனவே படிப்பதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கும் சலுகைகள் இருந்தால், ஓரளவு இந்தத் தொழிலாள மக்களின் குழந்தைகள் கல்வி கற்க இயலும். கல்வி கற்ற ஒருவர் இருந்தாலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத காரணத்தால், அவர்கள் படும் அல்லலைப் பார்த்து படிக்கிறவர்கள் கூட படிப்பை நிறுத்திக் கொள்கிறார்கள். அல்லும் பகலும் எந்நேரமும் இந்த நாட்டு 4½ கோடி மக்களின் துணிகளை வெண்மணிகளாக்கி, நாகரிகமாக, சுத்தமான, சுகாதாரமான மக்களாக ஆக்குவதிலே கடும் வெய்யிலிலும், பனியிலும், மழையிலும் உழைத்துக் கொண்டு வரும் சுமார் 4½ லட்சம் மக்களுடைய வாழ்க்கையில்



31st January 1972] [திரு. சி. ஆர். கோலப்பா]

எப்பொழுது மறுமலர்ச்சியைக் காணப்போகிறோம் என்று நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில், இந்தப் பிற்பட்டோர் நலக் குழுவின் அறிக்கை வெளி வந்தது. அதைப் பார்த்தால், இந்தச் சமுதாயம் கல்வியில் மிகமிக அடைபட்டும், பொருளாதாரத்தில் மிகமிக பின்னடைந்தும், சமுதாயத்தில் சபிக்கப்பட்டும், வேலை வாய்ப்பின்றி வேதனைப்பட்டும் வாழ்ந்தும், தேய்ந்தும் கொண்டே போவது நன்கு தெரிகிறது. எப்படி உடல் உறுப்புக்கள் அத்தனையும் நன்கு வளர்ந்தால் தான், நல்ல வலுவான உடம்பு அமைகிறதோ, அதே போலத்தான் சமுதாயத்திலே உள்ள அத்தனை சமூகங்களும் நன்கு வளர வேண்டும். அப்படியில்லை என்றால், அந்தச் சமுதாயம் என்ற உடம்பு நலம் குன்றி வலுவிழந்துவிடும். அதைக் கருத்தில் கொண்டுதான் நான் இந்த மன்றத்தில் கீழ்க்கண்ட கோரிக்கைகளில் தக்க கவனம் செலுத்துமாறு இந்த அரசை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன் :—

(1) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும், நகராட்சிகளிலும், நல்ல போதுமான சலவைத் துறைகளை மக்களின் சுகாதார நிலைமையை உத்தேசித்தாவது, உலக சுகாதார மன்றத்தின் உதவியைக் கோரியாவது, உடனடியாகக் கட்டித் தர வேண்டும்.

(2) ஆற்றோரங்களிலும், ஏரிக்கரையோரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் பொதுமக்களின் விலையுயர்ந்த துணிகளைப் பாதுகாக்க முடியாத அளவில் மிகவும் பரிதாபகரமான நிலையில் வாழும் சலவையாளர்களுக்கு, ஒவ்வொரு கிராமத்திலும், கிராமப் பஞ்சாயத்து மூலமாகக் குடியிருப்பு வசதியும், அவர்கள் தொழில் செய்ய தண்ணீர் வசதியில்லாத இடங்களில் இனமாகக் கிணறு வெட்டி வசதி செய்து தர வேண்டும்.

(3) சலவைத் தொழில் செய்வதற்கு சலவையாளர்களுக்கு வண்ணான் மான்யம் என்ற பெயரில் பல ஊர்களில் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி ஒதுக்கப்பட்ட நிலங்களில் சலவைத் தொழில் செய்வதற்கு முடியாமல் சமுதாயத்தில் செல்வாக்கு மிக்கவர்கள் சலவையாளர்களை மிரட்டி அவ்விடங்களிலிருந்து விரட்டி விடுகிறார்கள்.

இதனால், சலவைத் தொழில் செய்ய 10 மைல், 15 மைல் தூரம் சென்று சலவையாளர்கள் துணிகளைச் சலவை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சலவைத் தொழில் செய்யும் இடங்களிலிருந்து சலவையாளர்களை அப்புறப்படுத்தக் கூடாது, மற்றவர்கள் துன்புறுத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தமிழக அரசு தலைமை அதிகாரி திரு. நம்பியார் அவர்கள் மூலமாக ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இந்த அரசு அந்த ஆணையைத் தீவிரப்படுத்த வேண்டும்.

(4) தற்போது இனமாக வழங்கப்படும் தொழிற் கருவிகளை இன்னும் 5 மடங்கோ அல்லது 10 மடங்கோ அதிகப்படுத்த வேண்டும்.

(5) கூட்டுறவு சலவைக் கடைகள் அமைக்கவும், தனிப்பட்டவர்கள் சலவைக் கடைகள் அமைக்கவும் வட்டியில்லாக் கடனும், சிறிது மான்யமும் வழங்கப்பட வேண்டும்.

(6) சென்னையில் பல ஆண்டுக்காலமாகத் தொடங்காமல் இருக்கும் கூட்டுறவு பவர் லாண்டரியை உடனடியாக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தொழில் அமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க வேண்டும்.

(7) இப்பொழுது இருக்கும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்துவிட்டு சலவைத் தொழிலாளர் கூட்டுறவு வங்கி அமைக்க வேண்டும்.

(8) சலவைத் தொழிலாளர் மாணவர்களுக்கு இலவசமாக உடைகளும், உணவும், புத்தகங்களும் வழங்கப்பட வேண்டும்.

(9) கலை, தொழில் கல்லூரிகளில் பயில முன்வரும் சலவைத் தொழிலாளர்களுடைய மாணவ-மாணவர்களுக்குத் தனிச் சலுகை காட்டி இடம் கொடுக்க உத்திரவிட வேண்டும்.

(10) சலவைத் தொழிலாள வகுப்பைச் சேர்ந்த கல்வி கற்றவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித்தரும் நிலையங்களில் தனிச் சலுகையோ, முன்னுரிமையோ வழங்க வேண்டுமென உத்திரவிடவேண்டும்.

(11) உயர்ந்த படிப்பு படித்தவர்கள் ஒரு சிலரே இருப்பதால், அவர்களுக்கு உடனடியாக உயர்ந்த உத்தியோகங்கள் அளிக்க, சர்வீஸ் கமிஷன், அரசு போன்ற நிறுவனங்களில் தனிச் சலுகை அளிக்க வேண்டும்.

(12) சலவையாளர் சமூக மக்கள், டெல்லியிலும், உத்திரப்பிரதேசத்திலும், இன்னும் பல வட நாட்டிலுள்ள பெரும்பாலான மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட பட்டியலில் உள்ளதால், அங்குள்ள சலவைத் தொழிலாள மக்கள் ஓரளவு முன்னேறி வருகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலோ இன்னும் இந்தச் சமூகம் தாழ்த்தப்பட்ட பட்டியலிலே சேர்க்கப்படாத காரணத்தால் பின்னுக்கே போய்க்கொண்டிருக்கிறது.

தொடுகிறவர்கள், தொடாதவர்கள் என்ற அடிப்படையைக் காட்டி இங்குள்ள சலவைத் தொழிலாளர்கள் தொடுகிறவர்கள், ஆகவே அவர்கள் அந்தத் தாழ்த்தப்பட்ட பட்டியலிலே சேர்க்கப்பட அருகதையற்றவர்கள் என்று காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்தும் வரையில் கூறிக்கொண்டு, இந்தச் சமுதாயத்தின் ஏறக்குறைய 50 ஆண்டுகளின் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டார்கள்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 17-வது பிரிவின்படி தீண்டாமை அகற்றப்பட்டது என தீர்மானித்த பிறகு தீண்டாமை என்பது சட்டத்தில் இல்லை. இந்த இல்லாத தீண்டாமையை மறுபடியும் அரசாங்கமே அடிப்படையாக வைத்து இந்தச் சமூகம் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அருகதையற்றது என்று சொல்லுவது சட்டத்திற்குத் அதுவும் அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கே விரோதமானதாகும். அரசியல் நிர்ணயச் சட்டத்தில் தீண்டாமையை அகற்றிய பின்னும், ஷெட்யூல் சாதியினர் என்று பிரித்தார்களே; ஏனென்றால் அதே அரசியல் நிர்ணயச் சட்டத்தில் 47-வது பிரிவில் எந்தெந்தச் சமூகங்கள், சமூக வளர்ச்சியில் வளம் குன்றி வலுவில்லாமல், மற்ற சமூகத்தினரால் மிகவும் இழிந்தது எனக் கருதப்படுகிறதோ அந்தந்தச் சமூகங்கள் இந்தப் பிரிவில் வரும் திட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதையொட்டிப் பார்த்தாலும், இந்தத் தமிழ் நாட்டில் நிச்சயமாக, எந்தத் தயக்கமுமின்றி, சலவைத் தொழிலாளர்களையும், முடிதிருத்துவோரையும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலேயே சேர்க்க முடியும்.





காங்கிரஸ் ஆட்சி சுமார் 20 ஆண்டுகள் ஆட்சி செய்தும், நிறைவேற்ற முடியாத பல பெரும் சாதனைகளை நிறைவேற்றி ஏழை எளிய மக்களின் இருண்ட வாழ்விலே ஒளியேற்றி அவர்களும் மக்கள்தான், அவர்கள் வாழ்வு நிச்சயம் மலர வேண்டுமென்ற ஒரே சிந்தனையுடன் இன்று அல்லும் பகலும் பாடுபட்டு வரும் நமது ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதல் அமைச்சர், தமிழ்வேள் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த விஷயத்தில் எங்களுடைய சமுதாயத்தின் தலைவிதியை மாற்றியமைப்பார்கள், அமைத்து அதில் வெற்றி பெறுவார்கள் என்பதில் எங்களுக்கு நிச்சயமான உறுதி உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எத்தனையோ தொல்லைகள், எத்தனையோ பிரச்சினைகள் இருந்தாலும், எங்கள் குறைகளைப் போக்குவதில் உள்ள உணர்ச்சி அவரின் நல்ல இருதயத்திலே இருக்கிறது என்பதை நாங்கள் நன்றாக அறிந்துள்ளோம்.

(சேர்மன் மணி அடித்து அடுத்த உறுப்பினரைப்பேச அழைத்தார்).

* திரு. எஸ். வி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையின் மீது சில வார்த்தைகள் சொல்வதற்கு அனுமதி கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் ஒரு உரையை நிகழ்த்தி அதன் மூலமாக நமக்குப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருப்பதற்காக நாம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். கவர்னர் பெருமானுடைய உரையில் வேளாண்மையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம் என்று கூறப்பட்டிருக்கிறது. வேளாண்மையைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதில் மிகவும் திறமை படைத்தவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. அந்த அளவுக்கு அந்தப் பணியில் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் கூட, இதர தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் பெற்றுள்ள பலன்களைப் போல் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெறவில்லை என்று நான் சொல்வேன்.

விலைவாசியைப்பற்றி இங்கே பேசியவர்கள், குறிப்பாக நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உணவுப் பண்டங்களின் விலைவாசி ஓரளவு உயர்ந்துவிட்டது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கான பணியில் ஈடுபடுவதற்கு அந்த விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் இதர பொருள்கள் அனைத்தும் விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதோடு மட்டுமல்ல, கோவை ஜில்லாவைப் பொறுத்த வரையில், மின்சாரக் கட்டணத்தைப்பற்றிப் பெரியதொரு போராட்டமே நடந்து முடிந்திருக்கிறது. அப்பொழுது இந்த அரசு போராட்டத்தின் கருத்தை ஒத்துக்கொண்டு விவசாயிகளுக்கான மின்சாரக் கட்டணத்தைக் கொஞ்சம் குறைத்தது. இப்பொழுது திரும்ப உயர்த்தியிருக்கிறார்கள். தயவுசெய்து நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த உயர்வு விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும், அது உடனடியாக குறைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வகையிலும் விவசாயிகளின் உற்பத்திச் சாதனங்களின் விலைகளை ஏற்றிக்கொண்டே போனால், அந்த விவசாயிகள் எப்படி உற்சாகத்துடன் உற்பத்திப் பெருக்கத்தில் தொடர்ந்து

[31st January 1972

ஈடுபட முடியும்? இப்பொழுது சர்க்கரை உற்பத்திக்காக கரும்பு பயிரிடுகிறார்கள். சர்க்கரை உற்பத்தியில் 40/60 சதவீதம், 60/40 சதவீதம் என்ற ஒரு முறையை வகுத்து சர்க்கரையைக் கணக்கிட்டு சர்க்கார் எடுத்துக் கொள்கிறது. முதலாளிகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சர்க்கரையை தங்கள் இஷ்டத்திற்கு விற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் விவசாயி உற்பத்தி செய்யும் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் எண்பது என்று விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அது மிகவும் குறைந்த விலை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு டன் கரும்பின் மூலம் கிடைக்கும் சர்க்கரையின் அளவையும், அது விற்கப்படும் விலையையும் கொண்டு விவசாயிக்கு அந்தக் கரும்புக்கு மில் முதலாளிகள் கொடுக்கும் விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அது மிகவும் குறைவாகவே இருக்கும். தயவுசெய்து அரசு இதைப் பரிசிலனை செய்து பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, கல்வியைப்பற்றி, அந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், பல பெரியவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆசிரியர்களுடைய நிலைமை, ஆசிரியர்களுடைய தரம், அவர்களுடைய ஊதிய உயர்வு, இவைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கல்வியினுடைய தரம் எவ்வாறு இருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 300 ஜனத் தொகை கொண்ட எல்லா ஊர்களிலும் ஆரம்பப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் இப்பொழுது பள்ளிகள் இருக்கும் நிலை இருக்கிறது. நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. எங்கள் ஊரைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்கிறேன். ஐந்தாவது வகுப்பு ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு அடுத்த வகுப்பிற்கு உயர் நிலைப் பள்ளிக்குச் சென்றால், நீ எந்தப் பள்ளியில் படித்துவிட்டு வருகிறாய் என்று கேட்டுவிட்டு, அதற்கு அந்த மாணவன் பஞ்சாயத்து யூனியன் பள்ளி என்று பதில் சொன்னால், அதில் தரம் குறைவாகவிருக்குமே என்று சொல்லி, சேர்த்துக் கொள்வதற்கே தயக்கம் காட்டுகிறார்கள். தனியார் துறையில் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வியின் தரம் கெடாமலிருக்கிறது. தனியார் துறைப் பள்ளிகள் தரமாக இருப்பதால் பெற்றோர்கள் அந்தப் பள்ளிகளுக்கே அனுப்பி வைக்கும் எண்ணத்தைக் கொண்டவர்களாகயிருக்கிறார்கள். அந்த அளவுக்கு பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் கல்வியின் தரம் குறைவாகயிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ஆசிரியர்களைக் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். நண்பர் திரு. முத்துசாமி அப்படி நினைப்பார் போல் தோன்றுகிறது. ஆசிரியர்களைப்பற்றி நான் குறை கூறவில்லை. கல்வியின் தரத்தை உயர்த்த முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் நகர்ப்புறங்களிலும் நிலைமை இருக்கிறது. ஒரு சில குறிப்பிட்ட பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்வாக இருப்பதால், அதிலேயே சேர்ந்து படிக்க வேண்டுமென்று தங்களுடைய பிள்ளைகளை அங்கேயே சேர்க்கப்பலர் முயற்சிக்கிறார்கள். கிராமப் புறங்களிலிருக்கும் ஏழை மக்களுக்கு எந்த வசதியுமில்லாத நிலைமை நீடித்து வருகிறது. கிராமப்புறங்களிலிருக்கும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் கையாளப்பட்டு வரும் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், கல்வியின் தரத்தை உயர்த்த முடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



31st January 1972]

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். கோவையிலே மருத்துவக் கல்லூரி ஒன்று இறுக்கிறது. கோவையிலேயே ஒரு தலைமை மருத்துவ அதிகாரியும் இருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் அவர்களுக்கு ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கோவையில் ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கின்றபோது, ஒரு தலைமை மருத்துவ அதிகாரி இருக்க வேண்டுமா? அங்கு டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசர் தேவையில்லை. அதே மாவட்டத்தைச் சேர்ந்த ஈரோடு எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் நகரம். ரெவின்யூ தவிர இதர இலாகா தலைமை அலுவலகங்கள் ஈரோட்டில் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற வகையில் இந்தத் தலைமை மருத்துவ அதிகாரியையும் அவரது அலுவலகத்தையும் ஈரோட்டில் அமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும், அப்படி மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் பேரில் பேசும்படியான வாய்ப்பு கிடைத்ததற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அண்மையில் நடந்து முடிந்த யுத்தத்தில் இந்தியா வெற்றிபெற்றது நமக்கு ஒரு பெரிய பாடத்தினைக் கற்பித்திருக்கிறது. இந்த யுத்தத்தில் புதிதாகச் சுதந்திரம்பெற்று இளம் பருவத்தில் உள்ள இந்தியாவின் துருப்புகள் எந்த நிலையில் இருக்கும் என்று ஒரு பீதி நம் நாட்டில் பொதுவாக இருந்து வந்தது. நமது நாட்டில் மட்டுமில்லை, உலகிலே பல்வேறு நாடுகள் நமது சக்தியைப் பற்றி, நமது 5-30 p.m.
இராணுவத்தின் திறமைபற்றிச் சற்று குறைவாகவே நினைத்து வந்தார்கள். ஆனால் நடந்து முடிந்த போரில் அமெரிக்கா போன்ற பெரிய நாடுகள்கூட எதிர்பாராத விதத்தில் நமக்கு எதிராக நின்ற நிலையில்கூட, நமது நாட்டில் நாமே தயாரித்த ஆயுதங்களை வைத்துக்கொண்டு திறமையாக நமது இராணுவம் செயலாற்றியிருக்கிறது என்பதைக் கண்டு பகைவர் அச்சப்படும்படியான நிலையில் பணியாற்றி வெற்றிகண்டிருக்கிறது. இந்தப் போரின் முடிவில் ஜனநாயக நாடுகளின் குடும்பத்தில் ஒரு அங்கமாக பங்களா தேஷ் என்ற ஒரு புதிய சுதந்திர நாடு தோன்றியதும், அதற்கு நாமும் பொறுப்பாக இருந்து உதவி செய்ததும் நமக்கு மனநிறைவைக் கொடுக்கிறது. எதிர் காலத்தில் நமது நாட்டின் சரித்திரத்தில் இந்தப் பகுதி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்ற அளவிற்கு நமது நாட்டின் நிலை இன்றைக்கு உயர்ந்துவிட்டது. இந்த யுத்தத்தில் ஜனநாயகத்தின் நண்பர்கள் யார், ஜனநாயக நாடாக இருந்தாலும் கூட தன்னுடைய சுயநலத்திற்காக ஒரு பெரிய நாடு எவ்வளவுதூரம் தன் கொள்கையை விட்டு விலகிச்செல்லுகின்றது என்பதைப் பார்த்தோம். உலகிலே பெரிய ஜனநாயக நாடு, பணக்கார நாடு என்று சொல்லப்படும் அமெரிக்கா, ஜனநாயகத்திற்கு மிகவும் விரோதமான நிலையில் பாகிஸ்தான் போன்ற இராணுவ ஆட்சி நடைபெறும் நாடுகளுக்கும் யாதேச்சாதிகார நாடுகளுக்கும் துணைநின்று ஜனநாயகத்திற்கு விரோதமாகச் செயல்படுவதை இந்தப் போரின்போது பார்த்தோம். உலகில் வேறு எந்தப் பகுதியிலும் வேறு எந்த நாடும் பலமுள்ள நாடாக உயர்ந்து விடக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் அமெரிக்கா இப்படிப்பட்ட முறையில் தன் அரசியல் போக்கை வகுத்துக்கொண்டிருக்கிறது என்று நாம் மட்டும் அல்ல, அந்த நாட்டிலுள்ள பல பெரும் தலைவர்கள்கூட வெளிப்படையாகச் சொல்லுகின்றார்கள். பொறுப்புவாய்ந்த பல பெரும் தலைவர்கள் அந்த நாட்டில் இந்தப்

போக்கிற்கு மிகவும் வருந்துகிறார்கள். பொதுவாக பாகிஸ்தான் தன் அண்டை நாட்டுடன் நேசமாக இருந்து, அப்படிப்பட்ட அடிப்படையில் தன் அரசியலை வகுத்துக் கொண்டால், நாமும் அவர்களும் ஒருவரையொருவர் நல்ல முறையில் அணுகி நாம் நண்பர்களாக இருந்து, இருவரும் சுபிட்சமாக வாழ்வதற்கு இடம் இருந்திருக்கும். இதையெல்லாம் அலட்சியப் படுத்திவிட்டு, இன்றைக்கு அந்த நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஒரு தனி நபர், பூட்டோ என்பவர் செய்துவரும் காரியங்கள் தற்கொலைக்கு ஒப்பாக இருக்கின்றன. உண்மையை ஒப்புக்கொண்டு பங்களா தேசை அங்கீகரித்ததற்காக, இன்று ஆஸ்திரேலியா, கம்போடியா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் அங்கீகாரம் செய்ததற்காக, இந்த நாடுகளின் பேரிலே அவர் பாணம் தொடுப்பது போல, காமன்வெல்த்திலிருந்து தான் விலகுவதாக இன்றைக்கு அறிவித்து விட்டது பாகிஸ்தான். அந்த நாட்டிற்கு இது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். யார் யார் உண்மையை ஒப்புக்கொள்கின்றார்களோ, உண்மையை ஒப்புக்கொண்டு பங்களா தேசை அங்கீகாரம் செய்கின்றார்களோ அவர்கள் எல்லாம் தனக்கு விரோதி என்று சொல்லி ஒவ்வொருவரையும் விலக்கிக் கொண்டே வந்தால், கடைசியில் பாகிஸ்தான் தனித்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதனைப் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியும், இன்னும் அது அவருக்குப் புரிந்ததாக தெரியவில்லை. இந்தப் போரில் ஒரு விசித்திரமான நிலைமையைப் பார்த்தோம், பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்ளும் அமெரிக்கா நமக்கு எதிராகப் போயிற்று. ஆனால் மிகப் பெரிய கம்யூனிஸ்டு நாடான ரஷ்ய தேசம், ரஷ்ய அரசு நமக்கு உதவி செய்ததாகும். இவர்கள் நமக்கு அளித்த தார்மீக உதவியினை நாம் என்றைக்கும் மறக்கவே முடியாது. இந்த நேரத்தில் ரஷ்யா நம்மோடு இருந்ததை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். பொதுவாக சைனாவினுடைய, அமெரிக்காவினுடைய ஆசை வார்த்தைகளை நம்பி பாகிஸ்தான் ஏமாந்தது என்றுதான் சொல்ல வேண்டும். எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டிற்கு உதவி செய்கிறது என்று சொல்லும்போது, அப்படிப்பட்ட உதவிகள் பொருள்கள் மூலமாகவும், ஆயுதங்கள் மூலமாகவும்தான் செய்வார்களே தவிர, தங்கள் ஆட்களையே கொண்டு வந்து இன்னொரு நாட்டிற்காக யுத்தம் செய்யமாட்டார்கள். ஆனால் பாகிஸ்தான் இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையை வளர்த்துகொண்டதால்தான் இதில் ஏமாற்றம் பெற நேர்ந்தது. நம்மைப் பொறுத்த வரையில், இந்திய அரசு, தன் கையே தனக்கு உதவி என்ற நிலைமையில் நம்முடைய நாட்டிலே தயாரித்த ஆயுதங்களையும் தளவாடங்களையுமே கொண்டு இந்த யுத்தத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறது. இது நமது நாட்டிற்கு மிகவும் பெருமையைக் கொடுக்கக்கூடிய விஷயமாகும். நான் முன்பு ஒரு முறை கூறியதுபோல, ரஷ்ய நாட்டுடன் நமது பிரதம மந்திரி அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் பொதுவாக இந்தியாவினுடைய இராஜ தந்திரம் ஒரு உச்ச கட்டத்திற்கே போகும்படி செய்திருக்கிறது என்று பெருமைப்படலாம். நமது பிரதமர் இந்திரா அவர்களுடைய இராஜதந்திரம் உலகமே பார்த்து வியந்து பாராட்டும் விதத்தில் அமைந்துவிட்டது என்று சொன்னால், அது மிகையாகாது.

அடுத்து, நாம் சுதந்திரம் பெற்று குடியரசாகி 22 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த அனுபவத்தினைக் கொண்டு பல முக்கிய சீர்திருத்தங்கள், அதையொட்டி அரசியல் சட்டத்தில் பல திருத்தங்கள், இவற்றைச் செய்ய வேண்டியிருக்கிறது.





சுதந்திரம் பெற்றபோது, மாநிலங்கள் மட்டுமின்றி, இந்திய அரசும் இந்திய நாடும் அடிமைத்தளையில் இருந்தது. அதற்கு முன்பு, 'ஓரளவிற்கு மாநிலங்களுக்குச் சுய ஆட்சி கொடுத்தாலே போதும்' என்று காங்கிரஸ் ஸ்தாபனமும் ஒப்புக்கொண்டு, அந்த அடிப்படையில் ஒரு அரசியல் சட்டத்தினைத் தயாரித்தோம். ஒவ்வொரு மாநிலத்தின் அதிகாரம் இவ்வளவு, மத்திய சர்க்காரின் அதிகாரங்கள் இவ்வளவு, இரண்டுக்கும் பொதுவாக இருக்க வேண்டிய அதிகாரங்கள் இவ்வளவு என்ற விதத்தில் இருக்க வேண்டிய அதிகாரங்களை மூன்று ரகங்களாகப் பிரித்து எழுதிவைக்கப்பட்டன. இந்த 25 ஆண்டுக்கால அனுபவத்தில், பல பெரிய மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கே இருந்துவந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு நிர்மானத்தினைப் போட்டோம். மத்திய அரசு, குறிப்பாக பிரதம மந்திரி அவர்கள் எல்லா மாநில முதலமைச்சர்களையும் அழைத்து, மாநில-மத்திய அரசாங்கங்களின் உறவு முறையினை மறு பரிசீலனை செய்து என்னென்ன குறைகளை எவரெவர் சொல்லுகின்றார்களோ, அவற்றை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும், ஒரு சில அதிகார மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பது அவசியமாயின் அவற்றையும் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தும் நிர்மானம் ஒன்றை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும், இதுபோன்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் நிறைவேற்றியிருக்கிறோம். ஆகவே மத்திய அரசாங்கத்திலிருந்து பல அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்படவேண்டுமென்பதை காங்கிரஸ் கட்சி ஏற்கெனவே—இன்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்வதற்கு முன்னாலேயே—சொல்லிக்கொண்டு வருகிறது. ஆனால் இன்று இது குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டது. ஏனென்றால் மாநில சுயாட்சி என்ற பதம் வந்தவுடன் தவறான அர்த்தத்தை வைத்து ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரசங்கம் செய்ய மற்றவர்களும் அதை எதிர்க்க ஆரம்பித்தார்கள். ஆனால் முதலமைச்சரவர்கள் தஞ்சாவூரிலே கொடுத்த விளக்கம் ஓரளவு திருப்தியைக் கொடுத்தது. அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தவேண்டும். இந்தியா ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தவம் கிடந்து ஒரு சுதந்திர நாடாக ஆகியிருக்கிறது. அப்போது நமது சரித்திரத்தில் புராணங்களில் 56 நாடுகள் என்று சொல்வார்கள். பிரிட்டிஷ்காரர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறும்போது 600 நாடுகளாக இருந்தன. அவற்றையெல்லாம் காலஞ்சென்ற வல்லபாய் பட்டேல் அவர்களுடைய முயற்சியினால் இந்த நாடு ஒரு நாடு என்ற நிலைமையில் ஆக்கி வைத்திருக்கிறார். இதை ஜாதியின் பேரால், அல்லது மதத்தின் பேரால், அல்லது மொழியின் பேரால் தனி நாடு கேட்டு இந்த நாட்டைக் கூறு போட்டு, சின்னாபின்னப்படுத்தி பழைய நிலைமைக்குக் கொண்டுபோவது என்பது எந்தத் தற்கால அரசியல் வாதிகள் எண்ணமாகவும் இருக்காது. இதை முதலமைச்சரவர்கள் தெளிவுபடுத்தியது வரவேற்கத்தக்கது. நல்ல ஒரு முடிவை முதலமைச்சரவர்கள் செய்தார்கள். ஆகவே மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள உறவைப் பரிசீலனை செய்து திருத்தியமைத்து, அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டியது பிரதமர் அவர்களுடைய கடமை. ஆகவே அண்மையில் நடக்கவிருக்கும் தேர்தல் முடிந்தவுடன் எல்லா மாநில அரசு முதலமைச்சர்களையும் அழைத்து இந்த விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தி இதில் தாமதம் கூடாது—வெகு சீக்கிரத்தில் கிடைக்க வகை செய்ய வேண்டும். தவறினால்

[திரு. கே. ராஜாராம்] [31st January 1972

பெரிய குழப்பமும், கஷ்டமும் ஏற்படக்கூடும். மாநிலங்களுக்கு அதிகாரங்களை அதிகமாகப் பிரித்துக் கொடுக்கவேண்டியது அவசியம். பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல, மற்ற சில அதிகாரங்களும் வேண்டுமென்று பேசியிருக்கிறோம். நமது மாநிலத்தில் நமது மண்ணில் நிலம் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரங்களும் மாநில அரசுக்கு இருந்தபோதிலும் கூட ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு காரியம் செய்ய மத்திய அரசாங்கத்திடம் கேட்க வேண்டுமென்று சொன்னால் அது அவசியமில்லை. இப்படித் தொந்திரவு கொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய அதிகாரங்கள் மாற்றிக் கொடுக்கப்பட வேண்டும். இதைப்பற்றிப் பொதுக் கூட்டங்களில் அமைச்சர்களும் மற்றவர்களும் பேசி இந்தக் காலத்தை, நேரத்தை வீணாக்குவதை விட அரசாங்க ரீதியில் எழுதுவதோடு மட்டுமின்றி நேஷனல் டெவலப்மெண்டு கவுன்சிலிலும் இதை வற்புறுத்த வேண்டுமென்று முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக நமது உயர் நீதி மன்றத்தின் முன்னாள் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்கள் தலைமையிலான குழுவால் கொடுக்கப்பட்ட அறிக்கையைப்பற்றி நமது மாநில அரசு பரிசிலனை செய்து எதையெதை நாம் ஒப்புக்கொள்வது என்பதைப்பற்றி ஒரு முடிவிற்கு வரவேண்டும். பிறரைக் குறை சொல்வதற்கு முன்னால் நாம் 'ஸ்டேண்டு' எடுத்துக் கொள்வது அவசியம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதை உணர்ந்து ஏற்கெனவே முதலமைச்சரவர்கள் சட்டசபையில் இதைப்பற்றி விவாதிக்க ஒரு நாள் ஒதுக்குவோம் என்று சொன்னார்கள். ஆனால் இது இன்னும் செய்யப்படவில்லை. அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலாவது ஒரு 'ஸ்டேண்டு' எடுத்துக்கொள்வது நல்லது. உதாரணத்திற்கு ஒரு சிபாரிசைச் சொல்கிறேன்: ' உயர் நீதி மன்றம் கொடுக்கும் தீர்ப்புக்கு மேல் அப்பீல் வேண்டியதில்லை என்று சொல்லப் பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டு தேவையில்லை என்று சொல்வது போன்ற சில விஷயங்கள் ஆட்சேபணைக்குரியதாகும். இப்படி ராஜமன்னார் சிபாரிசில் இருந்தபோதிலும் கூட மாநில அரசு இதை வற்புறுத்தவில்லை என்று ஒன்றிரண்டைச் சொல்ல முடியும். குழுவால் சொல்லப்பட்டிருக்கிற சிபாரிசுகளில் எதையெதை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது, எதையெதை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற விஷயத்தை மாநில மக்கள் அறிய விரும்புகிறார்கள். ஆகையினால் கூடிய சிக்கிரம் முடிவெடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசி உயர்வைப்பற்றிச் சொல்லாமல் விடுவதற்கில்லை. என்னைப் பொறுத்த வரையில், இதனால் மாநில வரவு-செலவுத் திட்டம் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறது என்ற பீதியை, பயத்தை நான் மிகவும் உணர்கிறேன். ஏனென்றால் விலைவாசி உயர்வு ஏதோ பேசி விட்டுப் போகக் கூடிய நிலைமையில் இல்லை. அது நமது மாநில வரவு-செலவுத் திட்டத்தைப் பாதிக்கிறது. நேற்று தான் கொடுத்த மாதிரி இருக்கிறது, 26 கோடி ரூபாய் மாநில சிப்பந்திகளுக்குக் கொடுத்து முதலமைச்சர் நல்ல பெயர் எடுத்தார். அதை எல்லோரும் பாராட்டினார்கள். 26 கோடி ரூபாய் மாநில அரசு கொடுத்ததன் மூலம் ஒவ்வொருவருக்கும் 50 ரூபாயிலிருந்து 100, 150 ரூபாய் வரை கிடைத்திருக்கிறது. ஆனால் இந்தக் கூடுதல் தொகை குடும்பத்திற்குக் கிடைப்பதற்கு முன்னால் அந்தக் குடும்பத்துக்குக் கிடைத்த சம்பளத்தை வைத்து எவ்வளவு பொருள்கள் வாங்கி குடும்பம் நடத்தினார்களோ அந்த அளவிற்கு இந்த அதிகப் பணம் வந்தும் குடும்பம் நடத்த முடியவில்லை. ஊதியம்



31st January 1972] [திரு. கே. ராஜாராம்]

அதிகமாக வாங்கியும்கூட கட்டவில்லை. இது நடைமுறையில் ஒவ்வொரு குடும்பமும் அனுபவிக்கும் கஷ்டமாக இருக்கிறது. அமைச்சர்கள் குடும்பங்கள் முதற்கொண்டு அனைவரும் அனுபவிக்கும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு முன்பு 50 ரூபாய்க்குப் பலசரக்கு வாங்கினால், அதே சரக்கை அதே அளவு இப்போது 100 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் வேறு வழி கண்டுபிடிக்க வேண்டுமேயொழிய டியர்னஸ் அலவன்சு, சம்பளம் கூட்ட வேண்டுமென்று அவர்கள் கேட்பதும் நாங்கள் கவனிக்கிறோம் என்று அமைச்சர்கள் சொல்வதும் பட்ஜெட்டில் இன்னொருமுறை வரி கூட்டிப் போடுவதும் இப்படிப் போய்க்கொண்டிருந்தால் பிரயோசனமில்லை. ஆகவே சிப்பந்திகளுக்கு நிர்ணயித்த விலையில் அத்தியாவசியப் பண்டங்களைக் கொடுக்க வழி செய்தால் அவர்கள் அதிகமாகச் சம்பளம் கேட்காமல் செய்யலாம். அவர்கள் அதிகப்படியாகக் கேட்பது நியாயமில்லையென்று சொல்ல முடியாது. கட்டுப்படியாகாததால் கேட்கிறார்கள். நியாய விலைக் கடைகள் மூலமாக எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் குறைந்த விலையில் பண்டங்களைக் கொடுப்பதைப்பற்றிய பரிசீலனை பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு நல்ல வழியாக இருக்கலாம். அவர்களுடைய செலவைச் சரிக்கட்டக் கூடிய அளவிற்கு இது இருப்பதால் சம்பளம் அதிகம் வேண்டுமென்று கேட்கமாட்டார்கள். ஏற்கெனவே 10 வருஷங்களாக நிறையச் சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம். மருந்து, வைத்திய வசதிகள், இன்னும் வீட்டு வாடகை வசதி என்று எத்தனையோ வசதிகளைக் கொடுத்திருந்தும்கூட அவர்கள் கஷ்டத்துடன் கேட்கிறார்கள். அதை நிவர்த்தி பண்ண வேண்டியது நமது பொறுப்பு. நம் சிப்பந்திகள் நன்றாக வாழ வழி வகுக்க வேண்டியது நம் பொறுப்பு, கடமை. அதை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டியது நம் கடமை. அதே சமயத்தில் மக்கள் நலனைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்த மக்கள் நலனையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இன்னும் வரி போட்டால், அவர்கள் எவ்வளவு தாங்குவார்கள் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். இதற்கு வேறு வழி ஏதாவது கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையில் கடந்த 4 ஆண்டுகளில் இருந்த நிலைமை மாறி, இப்போது சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கிறது என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். புதிய தொழில்கள் ஆரம்பிக்க ஏற்பாடு செய்துள்ளது நல்ல சூசனை. இந்தத் தொழில்களை ஆரம்பித்தது, பொதுவாக மாநிலத்திற்கு நன்மை கொடுக்கலாம். பொருளாதாரத் துறையில் நன்மை கொடுக்கலாம்.. ஆனால் இது வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்குப் போதாது. சிறு தொழில்கள் பரவலாகப் பல இடங்களிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும். 1966-ம் வருஷம் அன்று தொழில் அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் மேலவையில் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசும்போது ஒரு வார்த்தை சொன்னார்கள். இந்த ஆண்டு 365 புதிய தொழில்களை ஆரம்பித்திருக்கிறோம். தொழில் அமைச்சராக இருந்த அவர் தான் நிதி நிலை அறிக்கையை இந்தச் சபையில் சமர்ப்பித்தார். முதலமைச்சர் பேரவையில் சமர்ப்பித்தார். இந்த அவையில் திரு. ஆர். வெங்கட்ராமன் அறிக்கையைச்

[திரு. கே. ராஜாராம்] [31st January 1972

சமர்ப்பித்துப் பேசும்போது, நடப்பு ஆண்டில் 365 நாட்களுக்கு 365 தொழில்கள் ஆரம்பித்தோம் என்று சொல்லும்போது, நாம் பெரு மகிழ்வுடன் அதை வரவேற்றோம். அனைத்துக் கட்சியினரும் கை தட்டினார்கள். அவ்வளவு பெருமையாக இருந்தது. ஆனால் இன்று நாம் அதை விட பெரும் தொழில்கள் பலவற்றை ஆரம்பித்தும் கூட, மக்களைப் பொறுத்த வரையில், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கக் கூடிய அளவில் சிறு சிறு தொழில்கள் ஆரம்பிப்பது நல்லது. பல இடங்களிலும், தலை நகரங்களிலும் சிறு தொழில்கள் ஆரம்பிப்ப தன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். படித்தவர்கள் மத்தியிலும் படியாதவர்கள் மத்தியிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதிய தொழிற் சட்டம் ஒன்று கொண்டுவரப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்கவேண்டும், அதே மாதிரி தொழிலாளர்களுக்குள்ளே ஒருவர் தான் தொழிற் சங்கத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்று சொல்வது புதிய விஷயமல்ல. இந்தத் தத்துவார்த்தமான விஷயம் கடந்த 30 ஆண்டுகளாகச் சொல்லப் பட்டு
5-50 p.m வருகிறது. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பிருந்தே இதைச் சொல்லி வருகிறோம். ஆனால் யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. அதுதான் விசித்திரம். அதிகாரத்திலிருந்தாலும் சரி, வெளியிலிருந்தாலும் சரி, இந்தத் தத்துவம் செயல்முறைக்கு வராமல் இருக்கிறது. ஆகவே, நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களைக் கூட்டிவைத்துப் பேசி, இந்த முறைக்கு எதிர்ப்பு அல்லது ஆட்சேபணை இல்லாத முறையில் முடிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதிலே அரசியல் சட்டச் சிக்கல் ஒன்றும் ஏற்படக்கூடும் என்று நான் நினைக்கிறேன். அரசியல் சட்டத்தின்படி தனி நபர்களுக்கு பேச்சுரிமையும் சங்கம் வைத்துக் கொள்ளும் உரிமையும் கொடுத்திருக்கிறோம். ஆகையினால் எந்த ஒருவரும் தொழிற் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி தொழிலாளர்களை அங்கத்தினர்களாகச் சேர்ப்பதை நாம் தடுக்க முடியாது. உரிமையைக் கொடுத்துவிட்டு தனியார் ஒருவர் சங்கம் ஆரம்பிக்கக்கூடாது என்று சொல்லுவது கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதமாக இருக்குமோ என்று எண்ணுகிறேன். அதையும் பரிசீலித்து, அந்தந்த தொழிற் சங்கத் தலைவர்களையும் கூப்பிட்டு வைத்துக்கொண்டு பேசி எதிர்ப்பு இல்லாமல் சட்டம் செய்தால், உண்மையில் நல்ல பலன் இருக்கும். நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்ன மாதிரி, இன்றைய நிலைமையில் தொழிலாளர்கள் தங்கள் நலனைத் தாங்களே பார்த்துக்கொள்ள முடியாமல், மற்றவர்கள் ஆலோசகர்களாக இருக்க வேண்டும் என்றால், அதில் எந்தவித ஆட்சேபணையுமில்லை. பொதுவாக அந்தத் தொழிலில் வேலை செய்பவர்கள் தான் அந்தத் தொழிற் சங்கத்துக்குத் தலைவர், காரியதரிசி முதலிய பதவி களில் இருந்துகொண்டு, அவர்களுக்குப் பக்கத்தில் மற்றவர்கள் இருந்து யோசனை சொல்வதைப்பற்றி யாரும் ஆட்சேபிக்க முடியாது. இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகப் பேசித்தீர்த்து, இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பி. டி. ஆசிரியர்களுடைய குறைகள் மிகவும் நியாயமானவை. முதலமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் நேற்று கேள்வி நேரத்தின்போது, அவைகளைக் கவனிப்பதாகச் சொன்னது வரவேற்ப



31st January 1972] [திரு. கே. ராஜாராம்]

தற்குரியது. அதை அப்படியே விட்டுவிடுகிறேன்; இதற்காக அதிக நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மனதில் கொள்ள வேண்டியது அவசியம். வருகிற பட்ஜெட்டின்போதாவது இதற்கு ஒரு முடிவு ஏற்படுத்திக் கொண்டுவர வேண்டும்; கவனிக்கிறேன் என்று சொல்லிவிட்டு ஒத்திப்போட்டுக்கொண்டே போகாமல், வருகிற வரவு-செலவுத் திட்டத்தில் இது இடம்பெறும் படி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரை, 1972-க்குள் மாநிலம் முழுமைக்கும் மின்சாரம் கொடுத்துவிடுவோம் என்று முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் சொன்னது இன்னமும் நமது காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போதுள்ள மந்திரி சபையும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களும் அதிக முயற்சியுடன் 1972-க்குள் முடித்துவிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். 1972-க்குள் முடிக்கவில்லையென்றாலும், கொஞ்ச காலம் அதிகமானாலும் பரவாயில்லை; விரைவிலே கொடுப்பதுபற்றி மிகுந்த சந்தோஷம் நான்; ஆனால் எனக்குள்ள குறை என்னவென்றால், அகலமாக உழுவதை விட ஆழ உழுவதே மேல் என்று கிராமப்புறங்களில் விவசாயிகள் சொல்லுவது வழக்கம். ஒவ்வொரு கிராமத்திலேயும் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு இல்லாமல் விவசாயிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்காரே ரூ. 2000, ரூ. 3000 என்ற அளவில் கடனைக் கொடுத்து, அதன் மூலம் பம்ப்செட்டுகளை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகள், கனெக்ஷன் கிடைக்காமல், தண்ணீர் இறைத்து லாபம் சம்பாதிக்க முடியாமல், 2, 3, வருஷங்களாகக் காத்துக்கொண் டிருக்கிறார்கள். சர்க்காருக்கோ அல்லது கூட்டுறவு வங்கிக்கோ அவர்கள் கொடுக்க வேண்டிய கடன், வட்டிக்கான தவணை வருகிறது, அது காத்துக் கொண்டிருக்க மாட்டேன் என்கிறது. கனெக்ஷன் கிடைக்காவிட்டாலும், கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்த நிலைமையில் இவர்களுக்கு இணைப்புக் கொடுக்காமல் மேலும் புதிய புதிதாகக் கிராமங்களுக்குக் கனெக்ஷன் கொடுப்பதுபற்றிச் சிந்திக்க வேண்டும். புதிதாகக் கொடுக்க வேண்டியதும் அவசியம் தான். இதையெல்லாம் கவனித்து, அரசாங்கம் ஒரு பொது உத்தரவின் மூலமாகவாவது, கடன் வாங்கி பம்ப்செட்டுகள் வைத்திருக்கிறவர்களுக்கு உடனே கனெக்ஷன் கிடைக்க ஏற்பாடு செய்து விட்டு, அதற்குப் பிறகு புதிய கிராமங்களுக்கு கனெக்ஷன்—மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்குப் பலவிதமான வரிகள் போட்டிருக்கிறார்கள். விவசாயப் பொருட்களுக்கு வரி போட்டிருக்கிறோம். விற்பனை வரி ரூ. 100 கோடிக்கு மேல் அதிகமாகக் கிடைக்கிறது என்றால், விவசாயப் பொருள் அதிகமாக உற்பத்தியாகி அவைகளுக்கும் விற்பனை வரி போடுவதால் தான். ஆகவே விவசாயிகளுக்கு மேலும் புதிதாக இந்த மின்சார வரியைக் கூட்டிப் போட வேண்டியது அவசியமில்லை. ஆகையினால் இந்த மின்சார வரியை அவர்களுக்குக் கூடுதலாகப் போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமான ஒரு விஷயம், என்னுடைய ஸ்தல ஸ்தாபனங்கள் தொகுதியைப் பற்றியது. தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களையும் ஒருங் கிணைத்து, அவைகளுடைய நன்மைகளைக் கவனித்துவர வேண்டுமென்று அன்றிருந்த அரசாங்கம் ஒரு சங்கத்தை மாநில அளவில் வைக்கவேண்டு மென்று ஏற்பாடு செய்தார்கள். அந்தச் சங்கத்தின் மூலகர்த்தா காலஞ்சென்ற

திரு. ரத்தின சபாபதி முதலியார், தன்னால் நிர்வகிக்க முடியவில்லை என்ற காரணத்தால், அதைத் தொடர்ந்து நடத்திவரும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். நானும் சரியென்று ஒப்புக்கொண்டு நடத்திவந்தேன். இந்த நிலைமையில் புதிய சீர்திருத்தப்படி பஞ்சாயத்து யூனியன்கள் அமைந்த பிறகு, அந்தப் பஞ்சாயத்து யூனியன்களையும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொண்டு கொஞ்ச காலம் வேலை நடைபெற்று வந்தது. இப்போது அந்தச் சங்கத்தில் எந்த வேலையும் நடக்கவில்லை. அதற்குத் தலைவர் தேர்தல் 5 வருஷத்துக்கு ஒரு தடவை நடக்க வேண்டும். அண்மையில் தலைவர் தேர்தல் நடப்பதாக நோட்டீஸ் கொடுத்து எல்லாப் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும் மெம்பர்களும் வந்துவிட்டார்கள். அவர்கள் எல்லாம் வந்து சேர்ந்த பிறகு, தலைவர் தேர்தல் இன்று இல்லை, திரும்பிப் போகலாம் என்று சொல்லி விட்டார்கள். இதனால் அரசாங்கத்துக்கு எவ்வளவு நஷ்டம் என்று பாருங்கள். கன்னியாகுமரியிலிருந்து மற்ற மற்ற ஊர்களிலிருந்தும் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் சென்னைக்கு வந்துவிட்டு, வீணாக அலைந்து விட்டு, தேர்தல் நடக்காமல் திரும்பிப்போனார்கள். ஏன் அந்தத் தேர்தலை அன்றைக்கு நடத்தவில்லை என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். இனிமேலாவது கூடிய சீக்கிரம் அந்தத் தேர்தலை நடத்த வேண்டும். எனக்கு ஒரு பெரிய குறை: மாநிலத்தில் பஞ்சாயத்து இல்லாத கிராமமே இல்லையென்று சொல்லும் அளவுக்கு விரிந்த அளவில் நடைபெறுகிற ஸ்தல ஸ்தாபன ஆட்சியைப்பற்றி, இப்போது புதிதாகச் சொல்லப்படுகிற உள்ளாட்சித் துறையைப்பற்றி, ஆளுநர் அவர்கள் உரையிலே ஒரு வார்த்தை கூட எந்த இடத்திலேயும் சொல்லாமல் விட்டதற்கு, உண்மையில் நான் ஸ்தல ஸ்தாபன அமைச்சராக இருக்கும் கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் நான் குறைப்பட்டுக்கொள்கிறேன். எல்லாம் சரியாக நடைபெறுகிறது, குறையே இல்லை என்று சொல்லி விட்டால், அது மிகவும் திருப்திக்குரியதாகும். ஆனால் அப்படியில்லை. ஒன்று மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிறையக் குளங்களை மைனர் இரிகேஷன் குளங்களைப் பராமரிக்கும் பொறுப்பை நாம் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்புவிக்கிறோம். ஆனால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அரசாங்கத்திலிருந்து இதற்காக ரூ. 10,000 தான் கொடுக்கிறோம். அரசுக்கு இருக்கிற பொருளாதாரக் கஷ்டம் நமக்கும் புரிகிறது. ஆனால் அரசு கொடுக்கிற ரூ. 10,000 இன்றைய நிலையில் ஒரு குளத்துக்குக்கூட போதாது. 10 அல்லது 12 குளங்கள் வரை இருக்கின்றன ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு. இந்த நீர்ப்பாசனக் குளங்களை மராமத்துச் செய்வதற்கு அந்தப் பஞ்சாயத்து யூனியன்களிடமும் பணமில்லை. இந்தமாதிரிப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டினால், யூனியன் சேர்மன்களின் குறைகளைத் தலைவர்கள், அமைச்சர்கள் நேரில் கேட்டறிந்து, எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குக் குறைகளைத் தீர்க்க வழி காண முடியும். அதற்கும் வழியில்லாமல் மாநில பஞ்சாயத்து யூனியனும் இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டம்—அமைதி காத்தல் என்பது பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக இன்றைய போலீஸ் நிர்வாகம் பாரபட்சமற்ற முறையில் யார் குற்றம் செய்தாலும், அவர்களைப் பிடிக்க வேண்டும், கைது செய்ய வேண்டும், தண்டிக்க



ஏற்பாடு செய்ய வேண்டும், என்று போலீஸ் மந்திரி என்ற முறையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட வேண்டும்; அதோடு, அந்த பாரபட்சமற்ற முறை செயல்படுத்தப்படவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள மட்டும் என்று சொல்ல மாட்டேன், வேறு சிலரும் கூட தாங்கள் குற்றம செய்தால், போலீசார் பிடிக்க மாட்டார்கள் என்ற தைரியத்தோடு இருக்கும் வகையில் போலீசார் அவர்களைப் பிடிக்காமல் விட்டுவிடுகிறார்கள் என்ற அபிப்பிராயம் பொதுவாக இருக்கிறது. கடைசியில் குற்றம் நடை பெற்று அடிதடிகள் நடந்து காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போன பிறகு, போலீசார் அங்கே போய்ப் பிடிக்கிறார்கள். அந்த நிலைமையில் உண்மையில் குற்றம் செய்தவர்கள் கூட நாங்கள் செய்யவில்லை, நாங்கள் வேறு கட்சிக்காரர்கள், அதற்காகக் கைது செய்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமைக்கு இடம் கொடுக்காமல் குற்றம் செய்யும்போதே, பலாத்காரத்தில் ஈடுபடும்போதே, அந்த இடத்திலேயே பிடிகக வேண்டும், அந்த இடத்திலேயே கைது செய்ய வேண்டும். போலீஸ்காரர்கள் பார்த்துக்கொண்டேயிருந்து விட்டு கைது செய்யாமல் விட்டுவிடுகிறார்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள் உடனே கையும் மெய்யுமாகப் பிடிக்காமல், தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கிற மாதிரி; அவர்களை ஆஸ்பத்திரியில் அல்லது வேறு இடங்களில் போய்க் கைது செய்வதால் தான், இந்த மாதிரிக் குறைகளுக்கு இடம் ஏற்படுகிறது. ஜனவரி 29-ம் தேதியன்று தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியில் நாங்கள் போட்ட தீர்மானத்தில் இதைத் தான் வலியுறுத்தியிருக்கிறோம். யார் குற்றம் செய்தாலும், பலாத்காரத்தில் இறங்கினாலும் பாரபட்சமற்ற முறையில் அவர்களைக் கைது செய்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்துக்கு ஒரு கோரிக்கை விடுகிறோம் என்று தீர்மானம் போட்டிருக்கிறோம். எந்தக் கட்சியானாலும் சரி, ஆளும் கட்சி அல்லது மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களை, பலாத்காரத்தில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும், அரசியல்வாதியானாலும், தொழிலாளியானாலும், அந்த இடத்திலேயே பிடித்துவிட வேண்டும், கைது செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறோம். அந்த முறையை முதலமைச்சர் அவர்கள் அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் நடந்த சிம்சன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றி கவர்னர் அவர்கள் விடுத்துள்ள அந்த அப்பீலையே நானும் சொல்கிறேன். எந்தத் தகராறுமில்லாமல் நல்ல பெயர் வகித்துவந்த இந்த மாநிலம் அது கெட்டுப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்படி முயற்சி செய்து அதற்காக அரசாங்கம் எல்லா தொழிற் சங்கத் தலைவர்களையும் கூட்டி வைத்துப் பேசி நல்லதொரு முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னால் ஆவடி டாங்க் தொழிற்சாலையில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி திரு. ஆறுமுகசாமி அவர்கள் கூறியது மிக, மிக சரியான வார்த்தை. அங்கு கூட்டம் நடந்து முடிந்த பிறகு, அந்தத் தொழிற் சங்கத் தலைவர்கள் வேறு ஏதோ ஒரு இடத்திலிருந்தபோது, அங்கு போய் கதவைத் தட்டி வெளியே அழைத்து வந்து கைது செய்து அடித்ததாகவும் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு மிகவும் முக்கியமானது, கண்டிக்கத்

[திரு. கே. ராஜாராம்] [31st January 1972

தக்கதொரு விஷயம் என்று தெரிகிறது. இவைகள் எல்லாம் எவ்வளவு தூரம் உண்மை என்று முதலமைச்சர் அவர்கள் விசாரித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். கேஸ் போட்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்வதால், அதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை.

இந்த கவர்னர் அவர்களுடைய உரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் விலைவாசிகளை குறைக்கவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படவில்லையென்ற எண்ணத்தில் சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அவைகளுக்கு அரசு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நன்றி தெரிவிக்கும் வகையில் மேலவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உள்பட 29 உறுப்பினர்கள் தங்களுடைய ஆழ்ந்த கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நேற்றையதினம் நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒரு தீர்மானமும் அதனையொட்டி ஒரு விவாதமும் நடைபெற வேண்டுமா என்று கேட்டு அதைப் பிரச்சினையாக்க நான் விரும்பவில்லை, ஒரு கேள்விக்குறியாக எழுப்ப விரும்புகிறேன் என்று பேசியிருக்கிறார். சில நேரங்களில் எந்தக் காலத்திலோ எழுப்பப்படுகிற கேள்விகள் பிறிதொரு காலத்தில் பதிலுக்குரியவைகளாகின்றன என்பதனை நாம் அனைவரும் நன்றாக அறிந்திருக்கிறோம். அவர் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்கின்ற கருத்தின் அடிப்படையில் இந்தக் கேள்விக் கணையைப் போட்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் நான் அதற்கு வைக்கின்ற வாதம் எல்லாம் குடியரசுத் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும், இரண்டும் சேர்ந்த கூட்டத்தில் உரையாற்றிய பிறகு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் என்ற வகையில் குடியரசுத் தலைவர் அவர்களுடைய பேச்சுக்கு நன்றி தெரிவிக்கின்ற அந்த மரபு இப்பொழுதும் டெல்லியில் இருந்து வருகிறது. மத்திய அரசில் இருந்து வருவது போல், நாமும் நம்முடைய கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு மரபை அனாவசியமாக இழந்து விடாமல், அதைக் கொஞ்ச காலத்திற்குக் கட்டிக் காப்பாற்றுவதுதான் முறை என்று கருதுகிறேன். நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையில் அரசினுடைய கொள்கைகளை, திட்டங்களை விமர்சிப்பதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும், எல்லாக் கட்சியினுடைய தலைவர்களுக்கும் ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது என்ற நிலையில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒரு விவாதத் திற்குரியதாக்கி அனைவரும் சேர்ந்தே நன்றி தெரிவிப்பது என்ற அளவில் திருத்தங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுவது என்ற ஒரு நல்ல மரபை நாம் பெற்றிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இந்த ஆண்டு கவர்னர் பெருமானுடைய உரையின் மீது மேலவையில் பல கட்சிகளுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் அவைகளெல்லாம் எவ்வளவு உண்மையின் அடிப்படையில் கூறப்பட்டன என்ற ஆராய்ச்சிக்குப் போக விரும்பாமல் எந்த உணர்ச்சியின் அடிப்படையில் அவை கூறப்பட்டன என்ற அளவில் அந்தக் கருத்துக்களையெல்லாம் நான் எடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



31st January 1972] [டாக்டர் மு. கருணாநிதி]

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமோதரன் அவர்களும் திரு. சுவாமிநாதன் அவர்களும் ஆற்றிய உரைகளில் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டிய புள்ளி விவரங்கள் யாரும் அசைக்க முடியாதனவை. உள்ளபடியே அவை இந்த மாமன்றத்தில் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் அளவுக்கு அமைந் திருக்கின்றன என்று கூறினால் மிகையாகாது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இன்றைய தினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்கின்ற அந்த எண்ணத்தை முன்னேற்றக் கழகம் புதியதாகக் கொண்டுவரவில்லை, அதே எண்ணத்தை நாங்கள் தீர்மானமாக வடித்து எடுத்திருக்கிறோம், 1970-ஆம் ஆண்டிலேயே அப்படி ஒரு தீர்மானத்தை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும் நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னது உள்ளபடியே பாராட்ட, வரவேற்கத் தக்க ஒன்றாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், நண்பர் திரு. சுவாமிநாதன் மிக அழகாகவும், தெளி வாகவும் எடுத்துக் கூறியது போல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்கின்ற பிரச்சினை இந்தக் கட்சிக்கு மட்டும் உரிய பிரச்சினை என்று என்றைக்கும் எடுத்துக்காட்ட விரும்பியதில்லை. எல்லாக் கட்சியினரும் சேர்ந்து இந்த நல்ல காரியத்திலே ஈடுபட்டு இந்த மாநிலத்திற்கு மட்டு மல்லாமல், இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் அதிக அதிகாரங்களை, தேவைப்பட்ட அதிகாரங்களை, நிலைத்த அதிகாரங்களைப் பெற வேண்டுமென்று வாதாட வேண்டுமென்ற கொள்கையை உடையதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலங் களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதைப்பற்றி என் பேச்சின் இறுதியில் மேலும் குறிப்பிடலாம் என்ற எண்ணத்தில் முதலிலே கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டுள்ள போரில் இந்திய நாட்டி னுடைய வெற்றியைக் குறித்தும் அந்த வெற்றிக்குக் காரணகர்த்தர்களாக இருந்தவர்களைக் குறித்தும் பாராட்டி அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். போரின் வெற்றிக்கு நாட்டினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய ஆற்றலும், பரபரப்பற்ற, பதட்ட மற்ற ராஜதந்திர போக்கும் முக்கியமான காரணங்கள் என்பதை கவர்னர் பெருமான் அவரது உரையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அதைப் போலவே இந்திய மக்கள் ஓரணியில் திரண்டு நின்று, ஜனநாயகத்திற்கு விடப்பட்ட சவாலை எந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டு வெற்றி நடை போட்டிருக்கிறார்கள் என்பதனையும் கவர்னர் அவர்கள் அவரது உரையில் வெற்றிக் களிப்பு பொங்கி எழுமளவுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். போரில் வீர மரணமடைந்த போர் வீரர்களுடைய குடும்பங்களுக்கு இந்த அரசு தக்க, உரிய உதவிகளையெல் லாம் செய்ய வேண்டுமென்று எடுத்த முடிவுக்கேற்பவும், அறிவிப்புக்கேற்பவும் செய்து வருகிறது. தமிழ் நாட்டின் போர்வீரர்கள் மட்டும் இந்திய மண்ணைக் காப்பாற்றுவதற்கு, எதிரிகளை வீழ்த்தி விரட்டியடிப்பதற்கு, இது வரையில் நமக்கு வந்திருக்கின்ற கணக்கின்படி, 98 பேர் மரணத்தைத் தழுவியிருக்கி றார்கள். அவர்களிலே 61 குடும்பத்தினருக்கு, அரசின் சார்பிலே ரூ. 5,000 உடனடியாக அளிக்கப்பட்டிருக்கின்றது. மீதமுள்ள போர் வீரர்களின் குடும்பங்களிலே அந்தப் பொருளுதவியினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஏற்ற வாரிசுகள் யார் என்பது பரிசீலனையில் இருக்கின்றது என்ற காரணத்தினால்,

அந்த உதவிகளை அவர்களுக்கு உடனடியாகச் செய்ய முடியாத அளவில் இருந்தாலும், விரைவில் அந்தப் பரிசீலனைகள் முடிந்து அவர்களுக்கு அந்த உதவிகளைத் தந்து விட முடியும், தந்து விடவேண்டும் என்ற வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதையும் நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சா. கணேசன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஆளுநர் அவர்களது உரையில், நடந்து முடிந்த பாகிஸ்தான்-இந்தியா யுத்தத்தினைப்பற்றித்தான் அதிகமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறதேயல்லாமல், ஆளுநர் அவர்களது உரையில் இந்த அரசு என்னென்ன காரியங்களைச் செய்தது, என்னென்ன காரியங்களைச் செய்ய இருக்கின்றது என்பதெல்லாம் குறிப்பிடப்படவில்லை என்று அவர்கள் குறைப் பட்டுக்கொண்டார்கள். இந்த அரசு பொறுப் பேற்றுக்கொண்ட நோக்கிலும் அல்லது மாற்றார் சாதித்த சாதனைகளைச் சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்க்க வேண்டிய கட்டத்தில் நின்ற நோக்கிலும், இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாய சமதர்மத்தினை முன் நிலையில் வைத்து, அந்த வழியில் மக்களை அழைத்துச் செல்லவும், அரசு நடத்திச் செல்லவும் தயாராக இருக்கின்றது என்ற அறைகூவலை நாட்டில் பிரகடனப்படுத்தியது. இதைத்தான் நமது நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் பேசும்போது, எடுத்துக்காண்பித்தார்கள், மிக முக்கியமான கொள்கைகளுக்காக, விரும்பியதை அடைய வேண்டிய பல்வேறு கோரிக்கைகளுக்காக மக்கள் நன்மையெல்லாம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், இந்த ஆட்சியை அரசு பீடத்தில் உட்கார வைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்கேற்ற வகையில் தான், இந்த அரசு நாட்டிலுள்ள சாதாரண மக்கள், சாமானியமான மக்கள், ஏழை எளியவர்கள், கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகள் அவர்கள் மனம் கொள்ளத்தக்க அளவிற்கு, பாட்டாளிகளும் தொழிலாளர்களும் இன்னபிறரும் இரும்பூதெய்தத் தக்க அளவிற்குத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டியும் பலவற்றினை நிறைவேற்றியும் இருக்கிறது என்பதையும் அவையெல்லாம் சாதனைப்பட்டியலிலே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றம் நன்கு அறியும்.

ஏற்கெனவே நில உச்ச வரம்புச் சட்டத்தின்படி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை முன்னேற்றக் கழக அரசு மலர்ந்த பிறகு அதைப் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவிற்கு அந்தச் சட்டத்தினை மாற்றியது, சம தர்ம சமுதாயத்தின் வழியில் இந்த அரசு நடந்து செல்லுகிறது என்பதற்கு ஒரு தக்க எடுத்துக்காட்டாகும். அந்த உச்ச வரம்புச் சட்டத்தில் நீண்ட நெடுங்காலமாகக் கூறப்பட்டுவந்த குறையினைக் களையும் அளவிற்கு சில விதிவிலக்குகளையெல்லாம் அகற்றிடவேண்டும் என்ற நோக்குடன், துணிவுகொண்டு, கரும்பு நிலங்கள், மேய்ச்சல் காடுகள் இவற்றையெல்லாம் விதிவிலக்குகளின்கீழ் உட்படுத்தக்கூடாது, அவற்றை அகற்றிவிட வேண்டும் என்று முடிவெடுத்து, அதன் வழியில் அந்த முடிவுகள் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக தங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பல்வேறு வகையில் பினாமியாக எழுதி வைத்திருப்பவர்கள், சொந்தக்காரர்கள், பேரன் பேத்திகள், உறவினர்கள் சுகிர்தக்காரர்கள், பக்கத்துவீட்டார்—என்ற அளவிற்கெல்லாம் பினாமியாக எழுதி வைத்திருப்பதையெல்லாம், அறவே கண்டு



பிடித்து ஒழித்திட வேண்டும் என்கிற குறிக்கோள்களை இந்த அரசு வெகு தீவிரமாக நிறைவேற்றி இருக்கின்றது என்ற அறிவிப்பை நான் இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன். இவற்றையெல்லாம் ஏற்ற வகையில் அமுல் படுத்தக்கூடிய வகையில், மிக அண்மையில் இந்தத் திங்களில் நடைபெற இருக்கும் நிலச் சீர்திருத்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர்கள் கூறுகின்ற நல்ல கருத்துப் பேழைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு அவற்றுக்கு ஏற்றவாறு இந்த அரசு நிலச் சீர்திருத்தத்தை மேலும் தீவிரமாக ஆக்குவதற்கு முன் வரும் என்ற செய்தியையும் நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நீண்ட நெடுங்காலமாகத் தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் இருக்கின்ற குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்படாத ஒரு கொடிய நிலை இருந்து வந்தது. அந்த வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு அவர்களுக்கு உரிமையில்லை. அந்த வீடுகளை அவர்கள் நல்ல முறையில் கட்டிக்கொள்ளுவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. அந்த வீடுகளை ஈடாகக் காண்பித்து, அவசர காலத்தில் கொஞ்சம் கடன் வாங்கிக் கொள்ளுவதற்கும் அவர்களுக்கு உரிமை கிடையாது. தஞ்சை மாவட்டத்தினையே நெல்விளையும் சொர்ண பூமியாக ஆக்குவதற்காகப் பாடுபடும் விவசாயத் தொழிலாளர்கள் — அவர்களுக்குக் குடியிருக்கும் மனைகளைச் சொந்தமாக்க வேண்டும் என்று இந்த அரசு எடுத்துக்கொண்ட பெருமுயற்சி காரணமாக இந்த வேலையும் வெகு வேகமாக இன்றைக்கு நடைபெறத் தொடங்கியிருக்கின்றதானது, இந்த அரசு சமுதாய சமதர்ம மார்க்கத்தில் வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. மேலும் இதை உறுதிப்படுத்தத்தக்க விதத்தில், நாம் சமுதாய சமதர்ம மார்க்கத்தில் வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்தத்தக்க விதத்தில், பேருந்து வண்டிகள் பத்திற்கு மேலே இருக்கக் கூடாது என்று பேருந்துகளுக்கான ஒரு உச்ச வரம்பினைக் கொண்டு வந்தோம். அந்த முறையில் டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ்., ஏ.பி.டி., இராமன் அண்டு இராமன் போன்ற பேருந்து நிறுவனங்களையெல்லாம் அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் சென்னை மாநகரினைப் பொறுத்த வரையில், ஏழை எளியவர்கள் பல்வேறு பகுதிகளிலும் குடிசைகளில் காலாகாலமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவர்களுக்கு நல்வாழ்வளிக்கத்தக்க விதத்தில், இந்த அரசு ஏழை எளியவர்களுடைய அரசு என்பதற்கு அடையாளமாக ஏழை எளிய மக்கள், மழை பெய்தால் நனைந்தும், தீப்பிடித்தால் பெரிய விபத்திற்குள்ளாகியும் பெரும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் 600 குடிசை வாழ் பகுதிகளில் உள்ளவர்கள். மெல்ல, மெல்ல, ஆனால் அதிகத் தாமதமில்லாமல் ஏழாண்டு காலத்திற்குள் அவர்கள் நல்ல மாடிவீட்டுக் கட்டடங்களிலே, காற்றோட்டமும் வெளிச்சமும் சுகாதாரமும் உள்ள விதத்தில் வாழ்வதற்கு ஏற்ற வகையில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு என ரூ. 40 கோடியைச் செலவிடுவதற்கான திட்டம் தீட்டப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்குச் சென்னை மாநகரில் பல்வேறு இடங்களிலே இப்படிப்பட்ட குடிசைகள் எல்லாம் மாற்றப்பட்டு நல்ல வகையில் மாடிக் கட்டிடங்கள் எழுகின்ற காட்சிகளைக் காண்கிறார்கள் என்றால், இது சாதாரண சாமானிய மக்களுக்கு,

மத்திய தர மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு வாழ்வினை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு பணிகளைப் புரிகின்றது என்பதற்கு இது ஒரு நல்லதொரு அடையாளமாகும். இதைப்போலவே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகத்தில் 60,000-க்கு மேற்பட்ட பிச்சைக்காரர்களுக்கு, அதிலே முதல் கட்டமாக 6,000-க்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு அவர்களைத் தொல்லைகளிலிருந்து விடுவிக்கவும், அதே நேரத்தில் அவர்களால் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளிலிருந்து மக்களை விடுவிப்பதற்கும் தேவையான விடுதிகளை இந்த ஆண்டு மூன்று இடங்களிலே அமைத்து, அடுத்த ஆண்டு மேலும் ஐந்து அல்லது ஆறு விடுதிகளை அமைக்கவும், ஒரு குறிப்பிட்ட காலத்திலே தமிழகத்திலே பிச்சைக்காரர்களே இல்லை என்ற நிலைமையை உருவாக்குவதற்காகவும் இந்த அரசு இந்தப் பணியினை ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

அடுத்து, பின் தங்கிய சமுதாய மக்கள் 1966-67-ஆம் ஆண்டில் கவர்னர் அவர்களது உரையில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல மாநில அரசின் சார்பில் ரூ. 91 லட்சத்திற்கான நன்மைகளைப் பெற்றார்கள். ஆனால் இந்தப் பின் தங்கிய மக்களுக்காக 1971-72-ஆம் ஆண்டில் அவர்களுடைய நன்மைகளுக்கு என ரூ. 3 கோடி செலவழிக்கப்பட்டது என்பதையும் கவர்னர் அவர்கள் உரை சுட்டிக்காட்டியிருக்கிறது. இதைப் போலவே அரிசன மக்களுக்காக 1966-67-ஆம் ஆண்டில் ரூ. 359 லட்சம் செலவழிக்கப்பட்டதற்கு மாறாக 1971-72-ஆம் ஆண்டில் ரூ. 532 லட்சம் செலவழிக்கும் அளவிற்கு அரிசனங்களுக்கு என திட்டங்களை மாநில அரசின் சார்பில் நாம் தீட்டியிருக்கிறோம்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம், கடைசியில் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதற்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சித் உறுப்பினர்களும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 'திடீரென்று மிக அதிகமாக மின் கட்டணத்தினை உயர்த்தி விட்டீர்களே' என்றெல்லாம் கேட்டார்கள். திடீரென்று அதிகமாக மின் கட்டணத்தை உயர்த்திவிட்டோம் என்று சொல்லப்படுவது சரியில்லை. ஏனென்றால் மின் கட்டணம், விவசாயத்திற்கு 10.8 காசு என்று முன்பு இருந்தது. இப்போது 12 காசு என்ற அளவிற்குத் தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலே 1.2 காசு தான் உயர்த்தப் பட்டிருக்கிறது. 1.2 காசு உயர்த்தப்பட்டிருப்பது மிகப் பெரிய உயர்வு என்று சொன்னால், நாம் ஒன்றை யோசிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மாத்திரம் இல்லை, முதலில் அவர்களே சுட்டிக்காட்டியது போல, 1972-ஆம் ஆண்டுக்குள் தமிழ் நாடு முழுவதும் மின் விளக்கே இல்லாத கிராமங்களே இல்லை என்ற ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்க விரும்பி, அதற்காகச் செயல்படும் நேரத்தில். நாம் ஒரு வரையறுக்கப்பட்ட நிலையைக் குறித்துக்கொண்ட பிறகு அதற்குள் அந்தக் காரியத்தைச் செய்ய விரும்பும் நேரத்தில், அதற்கு ஏற்படும் செலவுகளைச் சரிக்கட்டியாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். அது மாத்திரமல்ல. நான் கேரளத்திலிருந்தும் மைசூரிலிருந்தும் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். அதையும் மறந்துவிடக் கூடாது. ஒரு காசு அதிகப்படுத்தியிருக்கிற இந்த நிலையிலேயே தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு 6 அல்லது 7 கோடி ரூபாய் இன்னும் நஷ்டம் ஏற்படும் என்பதையும் நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், மஹாராஷ்டிரத்தில்



விவசாயிகளுக்குத் தரப்படுகிற மின்சாரத்திற்கான கட்டணம் 18 காசாக இருக்கிறது. பீஹாரிலே 18 காசு, குஜராத்திலே 16 காசு, அரியானாவிலே 16 காசு, அஸ்ஸாமிலே 16 காசு, உத்திரப் பிரதேசத்திலே 15 காசு, ஆந்திரத்தில் 12 காசு, மைசூரில் 12 காசு, என்ற அளவிற்குத் தான் அந்த மாநிலங்களில் இருக்கின்றன. கேரளத்தைப் பொறுத்த வரையிலும், கொஞ்சம் குறைவாக இருக்கிறதென்றால், கேரளாவில் கிணறுகளின் மூலமாக நீர்ப்பாசனம் செய்கிற நிலைமை அங்கேயில்லை. அங்கே இறவைப் பாசனம் கிடையாது. அது மாத்திரமல்ல. கேரளாவில் கம்பிகளை எடுத்துச் செல்லும் வகையில் டிஸ்ட்ரிபூஷன் செலவில் பார்த்தாலும், நம்மைவிட மிகக் குறைவாக ஆகிக் கொண்டிருக்கிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது. ஆகவே இந்த ஒரு காசு அதிகமாக ஆக்கியிருப்பது விவசாயிகளை அதிகமாகப் பாதித்து விடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசியவர்கள் கூட இது ஒரு பெரிய ஆபத்தான காரியமில்லை என்று தாங்களே உணர்ந்த காரணத்தினால் தான், இதைக் கண்டிக்கிறோம், இதை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று சொல்லாமல், இப்படி உயர்த்திருக்கிறீர்களே, இப்படி உயர்த்தியிருக்கிறீர்களே என்று சொல்வதோடு நிறுத்திக் கொண்டார்கள். எங்களுக்குத் தெரிந்த செய்தி அவர்களுக்குத் தெரியும்; அது ஊருக்குத் தெரிய வேண்டுமென்று சொன்னார்களேயல்லாமல், வேறு அல்ல. ஒரு காசு அளவிற்குத் தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்படமாட்டார்கள்.

சேலம் இரும்பாலைபற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பேசியிருக்கிறார்கள். சேலம் இரும்பு உருக்காலையைப் பொறுத்த வரையில், இதற்கான முயற்சிகள் நீண்ட காலமாக நடைபெற்று அண்மையிலே தான் தொடக்க விழா நடத்தி வைக்கப் பெற்று இன்னும் இந்தத் திட்டம் தொடங்கப் படாமலிருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்று என்றாலும், அண்மையில் டில்லியிலே அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உரைக்குப் பிறகும் நடைபெற்ற கூட்டத்தில் நம்முடைய அரசின் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. ஜப்பான் நாட்டிலிருந்து வந்து இங்கேயிருக்கிற கஞ்சமலைத் தாதை எடுத்துச் சென்று அங்கே நாங்கள் இரும்பு உருக்காலையை நடத்த முடியும் என்று ஜப்பான் நாட்டுக்காரர்கள் துணியும்போது, நாம் ஏன் துணியக் கூடாது என்ற வாதங்களை வைத்து கஞ்சமலைத் தாதுவை வைத்து இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற தமிழக அரசின் உறுதியான நிலையையும் இன்றைக்கு மத்திய அரசின் சார்பில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கான நடவடிக்கைகள் சில மாதங்களில் ஆரம்பமாகும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன என்பதையும் நான் இந்த மன்றத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்பத்தூரில் மூடப்பட்டிருக்கிற மில்களைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. கோயம்பத்தூரில் ஏற்கெனவே 5 மில்லுக்காக மூடப்பட்ட மில்கள்—தமிழக அரசின் சார்பில் ஏறத்தாழ 94 லட்ச ரூபாய் அளவிற்கு பணம் போடப்பட்டு அவைகள் திறக்கப்பட்டன. இந்த 5

மில்களுக்கு மத்திய அரசின் சார்பில் நமக்குத் தந்திருக்கவேண்டிய கிட்டத்தட்ட 20 லட்ச ரூபாய் பாக்கி இன்னும் கொடுபடாமல் இருக்கிறது. இதற்கிடையில் மேலும் 6 மில்களைத் திறக்க வேண்டுமென்று நானும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் டில்லிக்குச் சென்றபோது பல முறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். இவைகளிலே சோமசுந்தரா மில்ஸ், காளிஸ்வரா மில்ஸ், கோவை மில்ஸ் ஆகிய மில்கள் திறப்பதற்கு மாத்திரம் நடைமுறை மூலதனம் ரூ. 118 லட்சமும், நவீன இயந்திரம் ஆக்குவதற்கு 132 லட்ச ரூபாயும் தேவைப்படுகிறது. இதிலே நாம் அளிக்கின்ற நம்முடைய பங்குத் தொகையை நாம் செலுத்தத் தயாராயிருக்கிறோம் என்று கூறியாகி விட்டது. ஆனால் இதற்கான அனுமதி மத்திய அரசிடமிருந்து வரவில்லை. அவர்கள் இதற்கு அளிக்க வேண்டிய பங்குத் தொகை பற்றிய பதிலும் நமக்குக் கிடைக்கவில்லை. மேலும் பங்கஜா மில்ஸ், பாலமலை ரங்கநாதர் மில்ஸ் இவைகளை அவசரச் சட்டத்தின் மூலம் எடுப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு கேட்டது. ஆனால் இவைகளையும் 'இன்வெஸ்டிகேஷன்' செய்வதற்கு உயர் நீதி மன்ற உத்திரவு பெறப்பட வேண்டுமென்று மத்திய அரசு நமக்குத் தெரிவித்திருக்கிறது. நாம் நம்முடைய அரசின் சார்பிலேயே முழுப் பணத்தைப் போட்டு நடத்துவதற்குச் சக்தியற்றவர்களாக இருக்கிறோம் என்பதை நம்முடைய நிதி நிலையை அறிந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள், கோவையில் இருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாள நண்பர்களும் நன்றாக அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் ஐ.டி. ஆக்டின் படி மத்திய அரசு ஒப்புதல் இல்லாமல் இவைகளை நாம் எடுத்திட இயலாது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே நான் காலையிலே கூட பேரவையில் எடுத்துக் காட்டினேன். கோவையிலே எல்லா கட்சியினுடைய தொழிற் சங்கங்களும் இன்றைக்குப் போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார்கள். ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் வேலை நிறுத்தம், கிளர்ச்சி என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். இதில் முக்கால் பங்கு பொறுப்பினை மத்திய அரசு வைத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நமக்குக் கால் பங்கு பொறுப்புத்தான்—மாநில அரசுக்கு—என்றாலும் கஷ்டப்படுகின்ற தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஆனால் மாநில அரசு மேலும் மத்திய அரசோடு வாதாடி, போராடி, நியாயத்தைப் பெறுவதற்கேற்ற வகையில் இடையிலே கொஞ்சம் அமைதியான முறையில் மாநில அரசை இயங்க விட வேண்டியது தான் தொழிலாளர்களுடைய கடமையாகும். ஏனென்றால் திரு. ஆறுமுகசாமி எடுத்துக்காட்டியது போல், இதிலே அவசரப்பட்டு கிளர்ச்சிகளில் ஈடுபடுவார்களானால், அதன் மூலமாக ஒவ்வொரு தொழிற்சங்கத்திற்கும் இதிலே அந்தத் தொழிற்சங்கம் ஈடுபட்டது என்ற பெயர் கிடைக்கும். ஆனால் இதில் பெயர் கிடைப்பதை விட பலன் கிடைக்கும். அந்தப் பலனை அடையவேண்டியவர்கள் தொழிலாளர்கள். ஆகவே தான் மீண்டும் ஒரு முறை கோவையிலே உள்ள தொழிற் சங்கத் தலைவர்களையும், எல்லாக் கட்சித் தொழிற் சங்கத் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன், இதிலே திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடைய தலைவர்களும் கலந்திருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் கலந்திருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுக் கொள்வேன். நம்முடைய ஆறுமுகசாமி அவர்கள் கட்சித் தொழிற் சங்கத் தலைவர்களும் கம்யூனிஸ்டு கட்சி மற்ற கட்சிகளுடைய





தொழிற்சங்கத் தலைவர்களும் கலந்திருக்கிறார்கள். மீண்டும் ஒரு முறை மத்திய அரசோடு பேசுவதற்கு நல்ல அவகாசம் மாநில அரசுக்குத் தர வேண்டுமென்று நான் தொழிற் சங்கங்களுடைய தலைவர்களையெல்லாம் மிகுந்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசியைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நான் அவர்கள் தந்த புள்ளி விவரங்களெல்லாம் தவறு, விலைவாசி நிரம்ப இறங்கியிருக்கிறது என்றெல்லாம் வாதிட விரும்பவில்லை. ஆனாலும் அவர்கள் எடுத்துக்காட்டிய அளவிற்கு, அந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறதா என்ற கேள்விக்கு நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அரிசியைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கொஞ்சம் விலை அதிகமாக இருந்தாலும், அடுத்து வருகிற சில வாரங்களில் விலை நிச்சயமாகக் குறைந்துவிடக் கூடும். நேற்றும், இன்றும், நேற்று முன் தினமும் சென்னையிலேயே அரிசி விலை நல்ல அளவிற்கு இறங்கி விட்டிருக்கிறது என்று செய்திகள் நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. துவரம் பருப்பு, வேறு மாநிலங்களிலிருந்து வருகிற காரணத்தினால் அதனுடைய விலை கொஞ்சம் ஏற்றமாகத்தானிருக்கிறது. அதே நேரத்தில் கடலைப் பருப்பு போன்றவைகளின் விலை மிகக் குறைந்திருக்கிறது. சென்னையில் சென்ற ஆண்டு ஒரு கிலோ கடலைப் பருப்பு 1-70 காசுக்கு வாங்கினால், இப்போது கூட்டுறவு சொசைட்டியில் 1-30 காசுக்கும் தனியார் கடைகளில் 1-33 காசுக்கும் வாங்கியுள்ளோம். அதே போல செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் சென்ற ஆண்டு 1-30, 1-39, 1-40-க்கு வாங்கியிருந்தால், இந்த ஆண்டு 1-35, 1-40, 1-39 என்ற அளவிற்குத் தான் இந்த விலைகள் இருக்கின்றன. அதைப் போலவே, தேங்காயெண்ணெய் சென்ற ஆண்டு ஒரு லிட்டர் 9 ரூபாய்க்கு விற்றது இந்த ஆண்டு 6-90 காசு என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. வட ஆற்காட்டில் 9 ரூபாய் விற்றது 7-60 காசு என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. தென்னாற்காட்டில் 9-72-க்கு இருந்தது 6-50 காசு என்ற அளவிற்கு விலை இறங்கியிருக்கிறது. தேங்காயெண்ணெய் போலவே, நல்லெண்ணெய் விலை குறைந்திருக்கிறது. கடலையெண்ணெய் விலையும் குறைந்திருக்கிறது. மிளகாய் விலை குறைந்திருக்கிறது. சென்ற ஆண்டு சென்னையில் 6 ரூபாய் விற்றது இன்று இந்த ஆண்டு 3-60 காசு என்ற அளவிற்கு விலை குறைந்திருக்கிறது. புளி சென்ற ஆண்டு சென்னையில் 2-50 புதுப்புளி, பழையபுளி 3.25 என்று இருந்தது, இந்த ஆண்டு 2-10 விலைக்குத் தனியார் கடைகளிலும் கூட்டுறவுக் கடைகளில் 2 ரூபாய் என்ற அளவிற்கும் புளி விலை குறைந்திருப்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் தரப்பட்டிருக்கின்றன. சர்க்கரை விலை கூடுதலாகியிருக்கிறது என்று குறை சொல்லப்பட்டது. ஆனால் சர்க்கரை நமக்கு ஆலையிலிருந்து கிடைக்கிற நேரத்தில் ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் என்று அவர்கள் விலை நிர்ணயித்தாலும், எக்ஸைஸ் டியூட்டி போன்றவைகள் 40 ரூபாய் சேர்ந்து, டிரான்ஸ்போர்ட் 3 ரூபாய் சேர்ந்து, ஹோல் சேல் மார்ஜின் 1.50, ரிடைல் மார்ஜின் 3 ரூபாய் சேர்ந்து அட்மினிஸ்ட்ரேஷன் சர் சார்ஜஸ் 2 ரூபாய் சேர்த்து மொத்தமாக 150 ரூபாய் என்று நமக்கு விநியோகிக்கப்படுகிற விலை 200ரூபாய் அளவிற்கு வருகிறது. இதை இரண்டு ரூபாய் அளவிற்கு விற்க வேண்டுமென்று நாம் அரசின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்றாலும், அது அதிகமாகக் கிடைக்கவில்லையென்ற குறைபாடு மக்களிடத்தில் இருப்பதை அரசு உணர்கிறது. 300 ரூபாய், அதற்குக் கீழே உள்ளவர்களுக்கு 1 கிலோவும் அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 3 கிலோவும் சர்க்கரை வழங்கலாம் என்று இது வரையில்

இருந்தது. பொது மக்களின் சங்கடத்தை உணர்ந்து இனிமேல் 300 ரூபாயும் அதற்கு கீழே வருமானம் உள்ளவர்களுக்கு இரண்டு கிலோ சர்க்கரை வழங்கவும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டங்களில் நிலைமைகளுக்கேற்றவாறு ஆணை பிறப்பிப்பார்கள், நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி சில பொருள்களுடைய விலை ஏறியும், அன்றாடத் தேவைக்கான பல பொருள்களுடைய விலை இறங்கியும் இருக்கிற விவரங்களை நான் இந்த மன்றத்திலே அளித்திருக்கிறேன் என்றாலும், அதே நேரத்தில் பொருளாதாரச் துறையிலே நாம் ஒன்றை மறந்துவிடக் கூடாது. இரண்டு ரூபாய் என்பது மூன்று ரூபாய் ஆயிற்று, அல்லது மூன்று ரூபாய் இருந்த ஒரு பொருள் 4 ரூபாய் ஆயிற்று என்ற நேரத்தில் ஐயோ ஒரு ரூபாய் அதிகமாகிவிட்டதே என்பதைவிட நாம் கவனிக்கவேண்டியது, நான்கு ரூபாயானாலும் அந்த நான்கு ரூபாய் கொடுத்து வாங்குகிற சக்தி இந்தப் பிரஜைக்கு ஏற்பட்டிருக்கிறதா என்பதைத்தான். அந்த சக்தி ஒரு நாட்டினுடைய பிரஜைக்கு ஏற்படுமானால், மூன்று ரூபாய் என்பது ஐந்து ரூபாயானாலும் கவலையில்லை. ஆனால் அந்த சக்தி நம்முடைய நாட்டில் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. ஒரு பகுதியினருக்கு ஏற்பட்டிருக்கலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, சிலர் ஊதிய உயர்வு பெறுவதால், அவர்களுக்கு அந்தச் சக்தி ஏற்படலாம். ஊதிய உயர்வு பெறுகின்றவர்கள் பெறுகின்ற தொகையிருக்கிறதே, அந்த அளவுக்கு மாத வருமானம் பெற முடியாத மக்கள் நம் நாட்டிலே இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஏற்கனவே இந்த மன்றத்தில் பழைய ஆட்சியில் அமைச்சர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள். விலை ஏறுகிறது என்றால், வாங்கும் சக்தி உயருகிறது என்று பொருள் என்று அவர்கள் சொன்னதுண்டு. ஆனால் நான் அந்த வாதத்தின் மாயத் திரையில் மறைந்துகொள்ள விரும்பவில்லை. நான் நன்றாக உணருகிறேன்—இந்த விலைக்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும். பணப்புழக்கம்தான் காரணம். விலையேற்றம் ஏற்படுகிற நேரத்தில், அந்தப் பணப்புழக்கம் ஒருசில மக்களிடத்தில் இல்லாமல் அனைவரிடத்திலும் ஏற்படுகிற அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அப்படிக் கட்டுப்படுத்த முடியாத நிலைமையில் விலையேற்றத்தின் சங்கடத்தை மக்கள் நாளுக்கு நாள் அனுபவித்தாகவேண்டிய தொல்லைகளுக்கு ஆளாகத்தான் வேண்டும். விலையேற்றத்தைத் தடுக்கப் பணப்புழக்கம் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்க வேண்டும். அதே நேரத்தில் பணப்புழக்கம் ஏழை எளிய மக்களிடத்தில் இருந்தாக வேண்டும். ஏழை எளிய மக்களிடத்தில் பணப்புழக்கம் இருக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதற்குப் பல தொழிற்சாலைகள் அவர்களுக்கு அமைய வேண்டும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் அவர்களுக்கு அமைய வேண்டுமானால், அதற்கேற்ற வகையில் அவர்களுடைய தொழிற்சாலைகள் ஆங்காங்கு அமைப்பதற்கு உரிய வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். திரு. தாமோதரன் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஒரு தொழிற்சாலையைப் பெற எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது, அது ரத்தாகிவிட்டதா வந்ததா என்ற தகவலைப் பெறவே எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்ற சங்கடமான வாதத்தை இந்த மன்றத்தில் கேட்டோம். ஆகவேதான் இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் சரிப்படுத்த வேண்டுமானால், நண்பர் திரு. ராமனுதன் குறிப்பிட்டதைப் போல, இந்திய பூ பாகத்தில் மத்திய அரசு





ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டு எல்லா இடங்களையும் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்து நிலைமையைச் சரிப்படுத்த முடியாது. அதற்காகத்தான் மாநில அளவில் பல உரிமைகள் அந்தந்த மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இன்றைக்கு இந்த அரசின் சார்பில் 2,000 பேருக்கு இளைஞர் அணியில் வேலை கொடுத்தோம் 6,000 ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்தோம், 2,000 பேரை பல அலுவல்களில் புதிய அலுவல்களை உருவாக்கிச் சேர்த்தோம். அதையெல்லாம் நான் உணருகிறேன்—கடலில் பெருங்காயத்தைக் கரைத்தது போலத்தான். அதை நான் மறைக்க விரும்பவில்லை. வேலை வாய்ப்பை அளிக்க வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு இருக்கிறது. அதற்கான உதவிதான் தேவை. முழுமையாக அதை நிறைவேற்றும் அதிகாரம் இருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. அதற்கான வாய்ப்புகள் மாநில அரசுக்கு இருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. எனவேதான் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற்றாக வேண்டுமென்ற எண்ணத்தைத் திராவிட முன்னேற்றக் கழக சார்பில் நாங்கள் எடுத்துச் சொல்லி வருகிறோம். அதைத் தான் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மாநிலங்கள் அதிக அதிகாரத்தைப் பெறத்தான் வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டுமென்று நாங்கள் சொல்கிற நேரத்தில், அது ஏதோ பிரிவினை வாதமாக இருக்குமோ, ஏற்கனவே திராவிட நாடு கேட்டவர்களாயிற்றே, அதையே மனதில் வைத்துக்கொண்டு கேட்கிறார்களோ—இது பிரிவினைக்குக் கொண்டுபோய் விடுமோ என்று பேசுவது முறையல்ல. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுப் பெறுவது வாதத்தை உடைப்பது. அதைத் தர மறுப்பது அத்தகைய பிரிவினை வாதத்தை வளர்ப்பது. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொண்டால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுகிற அந்தத் தத்துவம் எவ்வளவு பரிசுத்தமான இதயத்திலிருந்து—எவ்வளவு தூய்மையான உள்ளத்திலிருந்து புறப்படுகிறது என்பதை நாம் நன்றாக அறிந்துகொள்ளலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தர வேண்டுமென்று கூறுவதும் மாநில சுயாட்சி என்பதும் மக்களுடைய மனதிலே, ஏன், நமக்குள்ளேயே ஒரே கருத்தைத் தரக் கூடியதாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கும்போது, ராஜராஜன் சிலையை வைக்க அதிகாரம் கொடு, கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே ரோடு போட அதிகாரம் கொடு, இங்கே கோட்டையைச் சுற்றியுள்ள புல்லைச் செதுக்க அதிகாரம் கொடு, திரு. ராமனுதன் சொல்லியதைப் போல, தெப்பக்குளத்தைச் செப்பனிட அதிகாரம் கொடு, தொழிற்சாலை துவக்க அதிகாரம் கொடு என்று ஒவ்வொரு அதிகாரமாகக் கேட்கிறோம் என்றால் அதுதான் உண்மை. அதையெல்லாம் சேர்ந்து நாம் மொத்தமாகக் கேட்கிறோம். இவ்வளவு அதிகாரங்களைக் கொடு என்று ஒவ்வொன்றாகக் கேட்டு நமக்கு வாய் வலித்து அவர்களுக்கும் காது வலிக்கும் என்பதற்காகத்தான் மாநில சுயாட்சி என்று கேட்கிறோம். திருமண விழாவில் பெண்ணுக்கு என்னென்ன வேண்டுமென்பதை தங்கக் காப்பு, பட்டுச்சேலை, வைரநகை என்று ஒவ்வொன்றாகக் கேட்டாலும் பெற்றாலும் மொத்தமாக அவற்றிற்குப் பெயர் சீர் வரிசை என்பது. பெண்ணுக்கு நகை, சாமான்கள், நிலபுலன்கள் என்பதுதான் நாங்கள் சொல்கிற அதிகாரங்கள். அதைத் தான் நாங்கள் சீர்வரிசை கொடு என்று ஒரே வார்த்தை

[டாக்டர் மு. கருணாநிதி]

யில் சொல்கிறோம். இதுதான் மாநிலங்களுக்கு அதிகாரம் கொடு என்பதற்கும் சுயாட்சிக்கும் உள்ள வேறுபாடாகும். ஏதோ மாநில சுயாட்சி என்பது, சுய-ஆட்சி என்கிற வார்த்தை இருப்பதால் விடுதலை பெற்று சுதந்திர நாடாக வேண்டும், மாநில சுயாட்சி பெற்றுவிட்டோம், கோட்டை கொத்தளங்களில் பறந்துகொண்டிருக்கிற அசோக சக்கரம் பொறித்த கொடியைக் கீழே இறக்கிவிட வேண்டுமென்று சொல்லுமளவில் மூடர்கள் அல்ல, மாநில சுயாட்சி கேட்கிறவர்கள். மாநில சுயாட்சி கேட்கிறவர்களில் தேசிய பரம்பரையைச் சேர்ந்த, பல முறை தேசிய விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிற சிலம்புச் செல்வர் ம. பொ. சி. இருக்கிறார் என்றால், அவரைப் பார்த்தாவது எங்கள் மீது உள்ள சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளக் கூடாதா? ஆட்சி மொழி என்று சொல்கிற காரணத்தால், புரிந்துகொள்ள முடியாது என்று சொல்லியிருக்கலாம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஆட்சி மொழி என்று எங்கே சொன்னார்கள்? ஆட்சி மொழி என்றால், இந்தியா முழுமைக்குமா என்ற சந்தேகம் வருமென்று பிராந்திய மொழிதான் ஆட்சி மொழி என்று இணைத்த காரணத்தால், வேறு மொழியை நாம் பெறுகிறோம் என்று பொருள் அல்ல. நம்முடைய மாநிலத்தில் நம்முடைய மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது என்று சொல்கிறோம். அதைப் போலவே தான் நம்முடைய மாநிலத்தில் நம்முடைய காலில் நின்றுகொண்டிருக்க வேண்டும். அதைத் தான் சொல்கிறோம். மத்திய அரசு மாநில அரசைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் ஒரு அதிகாரத்தை வைத்துக்கொள்ள வேண்டாமென்று யாரும் குறைப்படவில்லை. படிப்படியாக நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம். முஜிபுர் ரகிமானைப் பற்றிச் சொல்கிறார்களே என்று கேட்கிறார்கள். முஜிபுர் கேட்ட ஆறு அம்சத் திட்டத்திற்கும் முன்னேற்றக் கழகம் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. முஜிபுர் ரகிமான் மாநில சுயாட்சி என்ற அடிப்படையில் அவைகளைக் கேட்டார். அப்படிக் கேட்ட நேரத்திலேயே, பாகிஸ்தானம் என்றால், ஆயிரம் மைலுக்கு அப்பால் கிழக்கு பாகிஸ்தானும், இன்னொரு கோடியில் மேற்கு பாகிஸ்தானும் இருக்கிறது; ஆகவே, இராணுவம் கூட எனக்குத் தனியாக வேண்டும். கரன்சி அடிக்கிற ஒரு உரிமை கூட எனக்கு தனியாகவேண்டும் என்றெல்லாம் முஜிபுர் ரகிமான் கேட்டார். நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன் முஜிபுர் ரகிமான் கேட்ட ஆறு அம்சத் திட்டத்துக்கும், நாங்கள் கேட்கிற மாநில சுயாட்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு என்று குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பெருத்த வேறுபாடு உண்டு என்பதற்கு யார் காரணம் என்றால், முஜிபுர் ரகிமான் அல்ல; யாகியாகான்தான் காரணம். அவர் மாநில சுயாட்சி தான் கேட்டார். அவர் கேட்டது கொஞ்சம் காரசாரமானது, நாம் கேட்பதை விடக் கடுமையானது. மாநில சுயாட்சியை ஆதரிப்பது இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல; யார் யார் அதை ஆதரித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எடுத்து வைத்தார்கள், இந்த மன்றத்திலே பேசும்போது. நான் கூட அதைச் சட்டசபையில் படித்துக் காட்டலாம் என்ற எண்ணத்தோடு தான் அவர்களிடமிருந்து வாங்கிச் சென்றேன். அங்கே அதைப் படித்துக் கேட்க வேண்டிய முக்கியமானவர்கள் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமே கூட தன்னுடைய 1971-ம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது :

"இந்திய அரசியல் முறை 'கூட்டாட்சி முறை' (ஃபெடரலிஸம்) என்று வர்ணிக்கப்பட்டாலும் அந்தத் தராசு மத்திய அரசு பக்கம் அதிக பட்சம் சாய்ந்திருப்பதால், அதிகாரத் துறையிலும் நிதித் துறையிலும் மாநிலங்கள் செவ்வனே



31st January 1972] [டாக்டர் மு. கருணாநிதி]

செயல்படமுடியாமல் தடைகள் இருப்பதால், அதே நேரம் இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டும் என்கிற லட்சியத்துக்கும் ஊறு தேடாமல் எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு, இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கருதுகிறேன். . . .

அரசியல் துறை அதிகாரங்களும் நிதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது, மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகரவேண்டும் என்கிற ஆசையால் அல்ல. மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்கு தொண்டாற்ற முடியும் என்பதால் தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதைத் தெளிவாக்க விரும்புகிறோம்."—இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் 1971-ம் ஆண்டு தேர்தல் அறிக்கை.

, அடுத்து, 1971-ம் ஆண்டு கம்யூனிஸ்ட் பார்டி ஆஃப் இண்டியா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் அவர்கள் இதே கருத்தைத் தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதன் தலைவர்களுக்கு, என்ன மாநிலத்துக்கு அதிக அதிகாரம் கேட்கிறார்களே, இது பிரிவினையில் கொண்டுபோய் விடுமோ என்ற பயம் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியெல்லாம் பத்திரிகையில் அவர்களுடைய அறிக்கைகளைப் படித்தேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்றால், சிலருக்குப் புரியாமலிருக்கும்; அது தான் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை :

"The constitutional provision relating to Centre-State relations should be amended to provide for more powers to the States consistent with the basic security of the country."

இது வலது கம்யூனிஸ்ட் கட்சியின்—இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தலை, அறிக்கையாகும்.

அதைப் போல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை "மைய-மாநில அரசுகளின் துறைகளின் பட்டியல் விவரமாகப் பிரிக்கப் பட்டிருந்தாலும் உண்மையான அதிகாரம் மத்திய அரசின் கையில் தான் இருக்கிறது. மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் உத்தரவுகள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றே அமுல்படுத்தப்பட வேண்டியிருப்பதால் அவைகளுக்கு உண்மையான மதிப்பு கிடையாது. பொருளாதார சம்பந்தமான எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருப்பதால் மாநில அரசுகள் மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் நிலை இருக்கிறது". மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக, 4, 5 வாக்கியங்கள் மத்திய மாநில உறவைப்பற்றியே அந்த அறிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தெரிவித்திருக்கிறார்கள்.

நானே கூட கேள்விப்பட்டேன். மைசூர் மாநிலத்தின் சோஷலிஸ்ட் கட்சி தேர்தல் அறிக்கையில் கூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற அந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் 1971-ம் ஆண்டிலே அவர்கள் பதவி விலகிய பிறகு ஒரு கருத்தை வெளியிட்

டார்கள். அதை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். நான் இன்னும் சுவையான ஒன்றைச் சொல்லுவேன். திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் பதவியில் இருந்தபோதே, 1970-ம் ஆண்டு நவம்பர் 29-ம் தேதி டெல்லிப் பட்டணத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அது அப்போது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. நம்மை விடக் கொஞ்சம் வேகமாகவே சொன்னார்கள்; அந்த அளவுக்கு வேகமாகப் போக நாங்கள் தயாராயில்லை; நாங்கள் தயாராயிருக்கவும் மாட்டோம்.

"நிலைமை இப்படியே போய்க்கொண்டிருந்தால், மாநில உரிமைகள் பறிக்கப்படுமானால், டில்லியிலே இருக்கிற மாநிலங்களுக்குச் சொந்தமான அலுவலகங்கள், கட்டடங்கள் மிக விரைவில் தூதுவர் ஆலயங்களாக மாறக்கூடும்"

இப்படிச் சொன்னார். இதற்கு என்ன பொருள் என்று நான் விளக்காமலேயே புரிந்துகொள்ளுவீர்கள்; நான் விளக்குவதும் நல்லதல்ல என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் நிச்சயமாக உருவாகக் கூடாது என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்தியா பலவீனப்படக் கூடாது என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசியதைச் சட்டப்பேரவையில் குறிப்பிட்டபோது கூட—இன்றல்ல—இரண்டு நாட்களுக்கு முன், திரு. சுமாமிநாதன் அவர்கள் இருக்கிற கமிட்டியிலே தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது தவறு என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்ற பொருள்படச் சொன்னார்கள். நான் நண்பர் திரு. சுவாமிநாதனுக்கு மற்றொரு போர்க் கருவியைத் தர விரும்புகின்றேன். அவர்கள் கட்சிக் கூட்டத்திலேயே அந்தப் போர்க் கருவியைப் பயன்படுத்தலாம். 1967-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 19-ம் நாள் கல்கி தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

தி.மு.க. ஏதோ ஒரு பிரதேசத்துக்குரிய கட்சி என்றும், அகில இந்திய அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் இல்லையென்றும் மேலெழுந்தவாரியாக சிலர் நினைத்துவிடலாம். இவர்களுக்கு தி.மு.க. வின் அடிப்படையை ராஜாஜீ தெளிவு செய்திருக்கிறார் : ராஜாஜியின் கருத்துக்கள் பின்னால் வருபவை "அதாவது, எல்லா ராச்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாக சுயாதீனம் பெற்று, அவற்றின் சமஷ்டியாக தில்லி சர்க்கார் அமைய வேண்டும் என்கிற அகில இந்தியப் பிரச்சினையையே தி.மு.க. தனது அடிப்படையாகக் கொண்டது. ஒரே சர்க்கார் நாடு முழுவதும் ஆளுவதை 'யூனிடரி' முறை என்றும், மத்திய சர்க்காரும் ராச்ய சர்க்காருக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சிபுரிவதை பெடரல் (சமஷ்டி) முறை என்று சொல்லுவார்கள். அரசியல் சாஸனப்படி இந்தியா சமஷ்டிமுறையைப் பின்பற்றுவது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகர சபையின் ஸ்தானத்துக்குக் கொண்டுவந்துள்ளது. இந்தியா போன்ற ஒரு பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புகளை மத்தியில் மட்டும் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அத்தோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கி ஆளும் கொடுமையும் சேருகிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்கு தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே தி.மு. கழகம். அது தேசப் பிரிவினை கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியே". இது மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சொன்ன கருத்து. ஆகவே நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு நல்லதோர் போர்க் கருவியாக இதை நான் அவர்களுடைய கரங்களில் அளிக்கிறேன். (கை தட்டல்) அடுத்த கட்சிக் கூட்டத்தில் இதை வைத்துக்கொண்டு கட்சியில் வாதாடி வெற்றிபெறுவார் என்று திடமாக நம்புகிறேன்.





திரு. கே. ராஜாராம் : இது எந்தத் தேதியில் எழுதப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 19—3—1967.

திரு. கே. ராஜாராம்: அது 1967-ம் வருஷம். அதனால் தான் அப்படி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் அப்படிச் சொல்லுவீர்கள் என்பதற்காகத்தான் நான் 1957-ம் ஆண்டில் அவர்கள் எழுதியதையும் கொண்டு வந்திருக்கிறேன். அது வெளியே தெரியும் என்று தான் மறைத்துவைத்திருந்தேன். 1957-ல் இதைவிடத் தீவிரமாக "திராவிடத்தைக் காப்போம்" என்ற தலையங்கத்தை 24—3—1957 கல்கியில் எழுதியிருக்கிறார்கள். திராவிட நாடே வேண்டும் என்று எழுதினார்கள். அப்போது எங்களுக்கும் அவர்களுக்கும் உறவு இல்லை. உறவு இருக்கும்போது ஒரு கொள்கை, உறவு இல்லாதபோது அந்தக் கொள்கையிலிருந்து மாறுவது என்பது நல்லதல்ல. ஏனென்றால் எங்கள் அரசைப்பற்றி ஆயிரம் குறைகள் சொல்லலாம். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது கூட சொன்னார்கள், விலையேற்றத்தைப்பற்றிச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களுக்கு அரிசி போவதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று 1957-ல் எடுத்த முடிவில் அசையாமல் நின்றார்கள். அவர்களுடைய தலைவர்கள் அசைந்துவிட்டார்கள் என்பது தான் கவலை. ஆனால் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் போன்ற வாலிப முறுக்கு உடையவர்கள் அவர்களைத் திருத்த வல்லவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்கள் : முதலமைச்சர் அவர்கள் கவிழ்க்க முடியுமா என்று கேட்கிறார்கள் ; ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கவிழ்ப்போம் என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். இதிலே அவர்கள் ஒன்றை மாற்றிச் சொல்லிவிட்டார்கள். கவிழ்ப்போம் என்று சொல்லிய பிறகு தான், கவிழ்க்க முடியுமா என்ற கேள்வியைக் கேட்க முடியும். கவிழ்ப்போம் என்று சொல்லுவதற்கு முன்னாலேயே, கவிழ்க்க முடியுமா என்று கேட்டுக்கொண்டிருந்தால், இப்போது தான் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியிலிருந்து முதலமைச்சர் வெளியே வந்திருக்கிறார் என்று தான் கருதிக்கொள்வார்கள். நான் எங்கேயும் எங்களைக் கவிழ்க்க முடியுமா என்று பேசவில்லை. நண்பர் திரு. ஆறுமுகசாமியின் சொந்தக்காரர் தான் பேசினார் ; யார் என்று அவருக்கே தெரியும். பல இடங்களில் பேசியிருக்கிறார். அப்படிப் பேசிவிட்டு, மதுரை மக்களை, திருச்சி மக்களைப் பார்த்து, என்ன சொல்லுகிறீர்கள், கருணாநிதி அரசாங்கத்தைக் கவிழ்ப்போமா என்று கேட்டிருக்கிறார். அங்கேயிருந்த 5, 6 பேர்கள் "கவிழ்ப்போம்", "கவிழ்ப்போம்" என்று சொல்லியிருக்கிறார்கள். கருணாநிதி சர்க்காரைக் கலைக்கட்டுமா என்று கேட்டால், இது என்ன சீட்டுக் கட்டா, யார் வேண்டுமானாலும் கலைத்துவிட. நான் கேட்கிறேன் : தமிழ் நாடு அரசாங்கத்தைக் கலைக்கிற அளவுக்கு என்ன அராஜகம் ஏற்பட்டுவிட்டது? ஒரிஸ்ஸா நிகழ்ச்சியா, கேரளா நிகழ்ச்சியா, அரியானா நிகழ்ச்சியா, மத்தியப் பிரதேச நிகழ்ச்சியா? அல்லது இங்கே கட்சிக்குள்ளே பெரிய கலகம் நடந்து விட்டது, முதலமைச்சர் மாறிவிட்டார், யார் முதலமைச்சர் என்று தெரியவில்லை, ஆகவே கவிழ்த்து விட்டோம், கலைத்து விட்டோம் என்று சொல்ல. அதை

யாராவது எதிர்பார்ப்பார்களானால், அவர்கள் இலவு காத்த கிளி ஆவார்கள். அது எங்கள் கட்சிக்குள்ளே என்றைக்கும் நடக்காத காரியம். அதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரை, அப்படிப்பட்ட நிகழ்ச்சி எதுவும் நடைபெற்று விடாது. தமிழ் நாட்டில் தமிழ் நாட்டு அரசாங்கம் தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்கு என்ன அமளி ஏற்பட்டுவிட்டது? முதுகுளத்தூரா? அது நடைபெற்ற காலத்தில் தமிழ் நாட்டு அரசாங்கம் கலைக்கப்பட வில்லையே. 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் புரட்சி நடைபெற்றதே, அந்த நேரத்தில் கூட தமிழ் நாட்டு அரசாங்கம் கலைக்கப்பட வில்லையே. அப்போது உள் துறை அமைச்சராக இருந்த திரு. குல்ஸாரி லால் நந்தா அவர்கள் பாராளுமன்றத்தில் பேசியதாக, நான் பாளையங்கோட்டை சிறைச்சாலையிலிருந்து பத்திரிகையில் படித்துப் பார்த்தேன். 'இவ்வளவு பெரிய புரட்சி நடைபெற்றும், முதலமைச்சர் பக்தவத்சலம் மனம் தளராது பாறை போன்று நின்றார்' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாறை என்று என்ன பொருள்படக் கூறினார்களோ எனக்குத் தெரியாது. அப்படி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக் என்ன காரணம் இந்த அரசைக் கவிழ்ப்பதற்கு? இன்றைக்கு என்ன ஏற்பட்டுவிட்டது? ஏன் கவிழ்க்க வேண்டும்? மாநில சுயாட்சி கேட்ட குற்றத்துக்காக, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்ட குற்றத்துக்காக, கவிழ்க்கிறோம் என்றால் கவிழ்க்கட்டுமே? கவிழ்த்தால் என்ன ஆகும்? ஆறு மாத காலம் திரு. கே. கே. ஷா அவர்கள் நேரடியாக ஆட்சி புரிவார். கவர்னர் பெருமான் அவர்கள் எங்களுக்கு வேண்டாதவரா? கொஞ்ச காலத்துக்கு ஆண்டுவிட்டுப் போகட்டுமே. அதற்குப் பிறகு தேர்தல் கிடையாதா? அந்தத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் "எங்களைக் கவிழ்த்தார்கள், பொது மக்களே, தீர்ப்பு அளியுங்கள்" என்று சொல்லிக்கொண்டே, 234 இடங்களையும் பிடிக்கும். (கை தட்டல்) நாங்கள் என்ன அழிந்தா போவோம்? இது என்ன, சாக்கடையில் கொட்டப் படுகின்ற பாலா, சாக்கடையோடு போய்விடும், எடுக்க முடியாது என்பதற்கு. நான் நேற்று ஒரு கூட்டத்தில் சொன்னேன்: கடலிலே கவிழ்க்க முனைகின்ற கட்டுமரம் போன்றது திராவிட முன்னேற்றக் கழகம். கட்டுமரமாகவே இருப்பது கவிழாது, கப்பல் அல்ல கவிழ்ந்துவிட. திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு கட்டுமரம். சாதாரண மக்களால், சாமான்யமான மக்களால், கிராமப்புற ஏழைகளால், பஞ்சை பராரிகளால், பாட்டாளி, தொழிலாளிகளால், மொழி காத்திட போரிட்ட உத்தமர்களால் உருவாக்கப்பட்ட. அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு. அரசியல் நாகரீகத்தோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கழகத்தை வளர்த்தார்கள் என்றால், நாடு மெச்ச, மாநிலம் போற்ற இந்தக் கழகத்தை வளர்த்து சாமான்ய மக்களின் ஒரே பிரதிநிதியாக திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கொலு வீற்றிருக்க செய்திருக்கிறார் என்றால், அதைக் கவிழ்த்து விடுவோம் என்று சிலர் பேசுகிறார்கள். அப்படி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேச மாட்டார்கள். அவர்களுக்கு ஜன நாயகம் தெரியும், அப்படிப் பேசுவது ஜகஜீவன்ராம் அல்ல, திரு. சவான் அல்ல, அவர்களெல்லாம் பொறுப்பான இடத்திலிருப்பவர்கள். திரு. சி. சுப்பிரமணியம் அல்ல, அவரும் பொறுப்பானவிடத்தில் இருப்பவர். ஆனால் இங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் பேசுவது பெரியவர்கள் தலையில் போய் விழும். ஆகவே அவர்கள் உடனடியாகத் தலையிட்டு இப்படிப் பட்ட பேச்சுகள் தேவையில்லையென்று கூறுவது நல்லது. முன்னேற்றக் கழக அரசின் பேரில் ஆயிரம் குற்றங்கள் கூறட்டும். யார் வேண்டுமானாலும் அரசாங் கத்தைக் கவிழ்த்து விடுவோம், கலைத்துவிடுவோம் என்று கூறுவது முறையற்ற





பேச்சாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சொன்னால் பெரியவர் திரு. பக்தவத்சலத்தைப் போன்றவர்கள் சொல்கிறார்களாம். இந்திரா காந்தி பெயரைச் சொல்லித்தானே 1971-ல் நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றீர்கள் என்று. அதே இந்திரா காந்தி பெயரைச் சொல்லி 1967-ல் நீங்கள் ஏன் வெற்றி பெறவில்லை என்று திருப்பிக் கேட்கமாட்டோமா? இன்னொன்றையும் சேர்த்துக்கொள்ளலாம். 1971-ல் இந்திரா காந்தியின் பெயரைச் சொன்னோம். 1967-ல் பக்தவத்சலத்தின் பெயரைச் சொல்லித்தான் வெற்றிபெற்றோம். இது நாடு அறியும். நாங்கள் தேர்தலுக்கு முன்பு அவர் பெயரைச் சொன்னோம். தேர்தலுக்குப் பிறகு திரு. கருத்திருமன் போன்றவர்கள் சட்ட மன்றத்தில் அவர் பெயரை அடிக்கடி சொன்னார்கள்—நாங்கள் இங்கே வந்து உட்கார காரணமே அந்த மகான்தான் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். இந்திரா காந்தி அவர்கள் பெயரைச் சொல்வது அப்படி ஒன்றும் அவமானகரமானதல்ல. ஏனென்றால் பெரிய ஜனநாயகவாதி பண்டித நேருவின் திருச்செல்வியார் ஆவார்கள். இந்தியா பலவீனப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்த அரசோ கருதியிருந்தால், நாங்கள் பலவீனப்படுத்தியிருக்க முடியும். எப்படி? இந்திரா அரசுக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டபோது, எங்கள் 25 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த அம்மையார் பக்கத்தில் நின்ற காரணத்தால், அன்றைக்கு இந்திரா அரசு நிலைத்தது என்பதை நாடு அறியும். அப்பொழுது பல பேர் எங்களைத் தூண்டிவிட்டுப் பார்த்தார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறீர்கள். ஏன் இப்பொழுது இந்திரா அரசைப் பலவீனப்படுத்தக் கூடாது என்று கேட்டார்கள். அவர்களுக்கு நாங்கள் சொன்ன பதில் மத்திய அரசு இருந்தால்தானே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கலாம். இதைக் கவிழ்த்துவிட்டு, இந்தியாவைப் பலவீனப்படுத்திவிட்டு யாரிடத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது என்று தான் எடுத்துச் சொன்னோம். ஆகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற எண்ணம், கொள்கை இந்தியாவைப் பலவீனப்படுத்தும் கொள்கையாக இருந்திருந்தால், இந்திரா அரசுக்கு ஆபத்து வந்தபோது நாங்கள் எதிராக நின்றிருக்கக் கூடும். அப்படி நிற்காமல் நாங்கள் இந்திரா அரசினைக் காப்பாற்றுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பார்த்தாலே தெரியும். இந்தியா பலவீனப்படக் கூடாது என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆழ்ந்த பற்றும் அழுத்தமான நம்பிக்கையும் உண்டு என்பதை எடுத்துக் காட்டத்தான் இந்த உதாரணத்தினைச் சொன்னேனே தவிர, வேறு அல்ல. ஆகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதுதான் மாநில சுய ஆட்சித் தத்துவமே அல்லாமல், மாநிலம் இந்தியாவிலிருந்து துண்டித்துக்கொண்டு சுதந்திர நாடாக வாழ வேண்டும் என்பதற்காக நாங்கள் இப்படிப்பட்ட கோரிக்கைகளைச் சொல்லவில்லை என்று கூறிக்கொள்ளுகிறேன். இன்றைக்கு இராஜமன்னார் குழு அறிக்கையினைப் பற்றிக் கலந்து பேச வேண்டும் என்று சொன்னார்கள். அடுத்த கூட்டத் தொடரில் நாம் இதற்காகச் சில நாட்களை ஒதுக்கி இராஜமன்னார் குழு அறிக்கையை விவாதித்த பிறகு, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உட்கார வைத்து, இராஜமன்னார் குழுவின் அறிக்கையில் எவ்வெவற்றை வலியுறுத்தலாம், அரசின் சார்பில் என்று அனைத்துக் கட்சி அபிப்பிராயத்தைக் கேட்க தயாராக இருக்கின்றேன். ஏனென்றால் இன்றைய தினம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையினைப் பார்த்தால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டாமென்று சொல்ல யாரும் தயாராகவில்லை. ஆகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று தான் அனைவரும் சொல்லியிருக்கிறீர்கள். இது மிகுந்த மகிழ்ச்சிகரமான செய்தியாகும். அந்த அடிப்படையில் இராஜமன்னார் குழுவின் அறிக்கை

பற்றி நாம் நீண்டதொரு விவாதம் நடத்திவிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தருகின்ற நல்ல நல்ல கருத்துக்களையெல்லாம் சேர்த்து, தொகுத்து அவைகளையெல்லாம் முன்வைத்து அனைத்துக் கட்சித் தலைவர்களிடம் அதைப்பற்றி ஆலோசித்து அவைகளையெல்லாம் நாம் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மற்றும் கூறப்பட்ட பல் வேறு விஷயங்களுக்கு இந்த அரசின் சார்பில் அவைகளுக்கெல்லாம் நல்ல நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற உறுதியினை அனைவருக்கும் அளித்து, இந்த விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர் அனைவருக்கும் நன்றி கூறி, இந்த அளவில் விடைபெறுகிறேன்.

*திரு. கே. ராஜாராம் :* மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நீண்ட நேரம் பேசிவிட்டு பல பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லிவிட்டு களைப்புடன் இருக்கிறார். இருந்தாலும் ஒரு சிறு விளக்கம் தேவை. நான் பேசும்போது, இந்தத் துண்டுப் பிரசுரம் எனக்குக் கிடைக்கவில்லை. இப்பொழுது தான் கிடைத்தது. பொறுப்பான ஒரு தாசில்தார் அவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு, சட்டம் மூலமாகப் போடப்பட்ட உத்திரவு போன்று ஒரு அறிக்கையைப் போட்டிருக்கிறார். அவர் இம்மாதிரி வசதியுள்ளவர்களிடம் வசூல் செய்தால், யாரும் கவலைப்படமாட்டார்கள். போட்டிருப்பது ஏழை, எளிய மக்களை பாதிக்கும் வகையில் இருக்கிறது. சட்ட பூர்வமாக வேறு ஒன்றும் வருமானம் இல்லாத கால் ஏக்கரா, அரை ஏக்கரா புறம்போக்கு நிலத்தை வைத்திருக்கின்ற சிறு உழவர்களிடமெல்லாம் பத்து ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வரி போடுவது போல் வசூல் செய்யக் கூடாது. இம்மாதிரிச் செய்யக் கூடாது, இதை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் துண்டு பிரசுரத்தையும் அவர்களிடம் சேர்க்கின்றேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* மாண்புமிகு தலைவர் அவர்களே, இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : There are amendments moved by Thiruvalargal V. Isvarmurti, T. K. Subbiah and S. Muthuswamy. Is the hon. Member Thiru V. Isvarmurti pressing this amendment?

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :* தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுடைய குறைகளைக் கவனிப்பதாக உறுதி கூறியிருக்கிறார். அடுத்து வரும் பட்ஜெட் தொடர் கூட்டத்திற்குள்ளாகவே ஒரு முடிவு, அதுவும் நல்லதொரு முடிவாக, எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது திருத்தத்தை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

MR. CHAIRMAN : Is the Hon. Member Thiru T. K. Subbiah pressing his amendment?

The amendment was, by leave, withdrawn.

MR. CHAIRMAN : Is the Hon. Member Thiru S. Muthuswamy pressing his amendment?





*திரு. எஸ். முத்துசாமி :* மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளிலும் பணி புரியும் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் உரிய தேதியில் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்வதாயும், ஆசிரியர்களுடைய குறைகளைத் தக்க முறையில் கவனிப்பதாகவும் கூறியிருக்கிறார். அவைகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையோடு எனது திருத்தத்தை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

MR. CHAIRMAN : The question is—

"That an humble Address be presented to the Governor that the Members of the Tamil Nadu Legislative Council thank him for the Address delivered to the Members of the Legislature on the 22nd January 1972".

The motion was put and carried.

## III. GOVERNMENT RESOLUTION.

### AMENDMENT OF MADRAS COTTON TRANSPORT RULES, 1950

*மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :* தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"தமிழ் நாடு 1950 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 3 (i), 10 (ii) விதிகளைத் திருத்தும் வகையில், 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின் கீழ் மாநில அரசால் பிறப்பிக்கப்படவிருக்கிற கீழ்க்கண்ட வரைவு விதிகள் மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் கூறியுள்ளவாறு ஏற்கப்படுவதாக.

**வரைவு அறிவிப்பு.**

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து விதிகளுக்கு, கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் கூறியுள்ளவாறு இத்திருத்தங்கள் சட்ட மன்றத்தின் இரு அவைகளின் தீர்மானத்தின் மூலம் ஏற்கப்பட்டுள்ளன.

**திருத்தம்.**

மேற்கொள்ள விதிகளில் :

1. 3-வது விதியின் (i) துணை விதியில் (c) பகுதிக்குப் பிறகு கீழ்க்காணும் பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது :—

"(d) உற்பத்தி நிறுவனங்களுக்கோ அல்லது கழிவுப் பஞ்சு வியாபாரம் செய்கிற ஆண்டுப் பொது உரிமம் வைத்திருக்கும் பிறருக்கோ விற்பனை செய்ய, ஒதுக்கப்பட்டுள்ள பகுதிக்குள் வியாபாரம் செய்யும் கழிவுப் பஞ்சு வியாபாரிகளுக்கு கழிவுப் பஞ்சை உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட நிலையில் கொடுக்கலாம்."

2. 10-வது விதியில்,

(i), (ii) துணைவிதியின் இனத்தில் இருக்கும் கழிவுப் பஞ்சு என்னும் சொற்களுக்குப் பதிலாக "(உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட நிலையில்) கழிவுப் பஞ்சு" என்னும் சொற்களையும், அடைப்புக்குறிகளையும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

(i), (ii) துணைவிதியின் (e) இனத்தில் "உற்பத்தி நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்காக முழுதும் அழுத்தப்பட்ட பஞ்சுப் பேல்களை இறக்குமதி செய்ய வியாபாரிகளுக்கும்" என்னும் சொற்களுக்குப் பிறகும், "எண்ணெய் பிழிவதற்காக, பஞ்சு விதைகளை இறக்குமதி செய்வதற்கு பஞ்சு விதை எண்ணெய் ஆலைகளுக்கும்" என்னும் சொற்களுக்கு முன்பு "கழிவுப் பஞ்சை உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட பேல்களாக விற்பனை செய்கிற பஞ்சு வியாபாரிகளுக்கும்" என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

MR. CHAIRMAN: The question is—

"That the following draft of rules to be issued by the State Government under Section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), amending Rules 3 (i) and 10 (ii) of the Madras Cotton Transport Rules, 1950 be approved as required by section 8 of the said Act.

*Draft Notification.*

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923) the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Madras Cotton Transport Rule, 1950, the same having been approved by resolution of both the Houses of the Legislature as required by section 8 of the said Act.

*Amendment.*

In the said rules—

1. in sub-rule (i) of rule 3, after clause (*c*) the following clause be added, namely:—

"(*d*) of waste cotton either in loose borahs or pressed, to waste cotton merchants carrying on business within the protected area for sale to manufacturing concerns or to other Annual General Licence holders dealing in waste cotton".

2. In rule 10 (i) for the words "Cotton waste" occurring in item (*d*) of sub-rule (ii) the words and brackets "Cotton waste (loose borahs or pressed)" shall be substituted.

(ii) In item (*e*) of sub-rule (ii) after the words "to merchants for importing full pressed bales for sale to manufacturing concerns" and before the words "and to cotton seed oil Mills for importing cotton seed for crushing," the words "to merchants carrying on business in waste cotton either in loose borahs or pressed bales", shall be inserted.

The Resolution was put and carried.





MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

24. Notification issued with G.O. Ms. No. 2875, Agriculture, dated the 30th October, 1971 in regard to extension of term of office of the nominated members and appointment of new members of the Dharmapuri Market Committee. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

25. Notification issued with G.O. P. No. 2752, Revenue, dated the 21st September, 1971 in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 published in the Tamil Nadu Government Gazette, dated the 1st April 1959 as subsequently amended. (Land on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

### *B. Reports, Notifications and other Papers.*

26. Answers to Unstarred Questions Nos. 1 to 9.

[31st January 1972

## APPENDIX I.

[*Vide* answer to unstarred question No. 3 on page 295]

### STATEMENT SHOWING NUMBER OF PERMANENT CINEMA HOUSES IN EACH DISTRICT OF TAMIL NADU.

| | *Name of District.* | *Number of Permanent Cinemas.* |
|---|---|---|
| 1. | Kanyakumari ... ... ... | 16 |
| 2. | Salem ... ... ... ... ... | 68 |
| 3. | Coimbatore ... ... ... ... | 104 |
| 4. | Madurai ... ... ... ... | 79 |
| 5. | Tiruchirappalli ... ... ... ... | 55 |
| 6. | Tirunelveli ... ... ... ... | 49 |
| 7. | Ramanathapuram ... ... ... | 40 |
| 8. | Chingleput ... ... ... ... | 49 |
| 9. | Dharmapuri ... ... ... ... | 15 |
| 10. | North Arcot ... ... ... ... | 45 |
| 11. | Nilgiris ... ... ... ... | 14 |
| 12. | Thanjavur ... ... ... ... | 54 |
| 13. | Madras City ... ... ... ... | 62 |
| 14. | South Arcot ... ... ... ... | 47 |
| | Total ... | 697 |

## APPENDIX II.

[*Vide* answer to unstarred question No. 7 on page 297]

### DETAILS RELATING TO THREE CENTRALLY-SPONSORED SCHEMES ARE FURNISHED BELOW:

(1) *Special Nutrition Programme.*

This scheme provides for supplementary nutritious food to pre-school children in the age group of 6 months—3 years residing in urban areas and Tribal Blocks, as a measure to fight mal-nutrition and under-nutrition. Each child is given 3 slices of bread weighing 75 gms. per day for 5 days a week. The Government of India reimburse the State Government the expenditure at the following rates per day per child :—

(1) 18 paise for food charges; and

(2) 5.5 paise for transport and administration charge.

2. So far, 1,53,357 urban slum children have been covered in the 20 urban areas including Madras City, Madurai City and the belt area around Madras City and 1,300 tribal children in



31st January 1972]

the two Tribal Development Blocks of Kolli Hills and Yercaud. All the beneficiaries are children in the age group of 6 months—3 years. The Government of India propose to include in the current year's Special Nutrition Programme, all pre-school children in the age group of 0–6 years and also the expectant and nursing mothers residing in these two special areas and the Government of India have also fixed the urban target for the current year as 1,56,000 and the Target for Tribal Development Blocks as 3,000. This expanded programme is yet to be introduced in this State.

(2) *Demonstration Feeding Programme (Central sector).*

This scheme is implemented in 28 selected Development Blocks and 3 centres per Block have been started. Feeding is done for 80 beneficiaries daily, i.e., 30 pregnant and lactating mothers, 30 pre-school children and 20 infants incurring feeding expenses at the rate of 25 paise per adult per day and 15 paise per child per day. Balasevikas are paid an honorarium of Rs. 40 each per month and they are assisted by Associate Women Workers each of whom is paid an Honorarium of Rs. 30 per month. Preparations made out of locally available nutritious and cheap varieties of vegetable, greens, cereals, and pulses are given, supplemented by egg, milk and fish wherever available. The provision allotted for this programme for 1971–72 is Rs. 4.8 lakhs.

(3) *Family and Child Welfare Project.*

Through this programme, a composite approach is attempted to consolidate the activities organised for women, children, school children, etc. During 1969–70, 2 Projects have been started at Kurunjipadi in South Arcot and Villivakkam in Chingleput district and 2 more projects have been started at Athoor in Madurai District and Perianaickenpalayam in Coimbatore dis-district during 1970–71. Each project has one main centre and 5 sub-centres. This programme provides for (1) pre-school children below 6 years and (2) a training programme for women in Home Science, Dietism, Nutrition, Health, Family Planning, Nursing, etc.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Tuesday, the 1st February* 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

### 1. *Obituary Reference re Demise of King Mahendra of Nepal.*

MR. CHAIRMAN : I have to inform the House, with deep regret, of the sudden demise of King Mahendra of Nepal yesterday India valued his friendship and the close ties which he had established with our country. Under his guidance, Nepal has made great progress in all fields. India has close trade, cultural and friendly relations with Nepal.

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved family.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, all the hon. Members stood in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

MR. CHAIRMAN : Questions 76 to 80 are postponed.

### *Lalit Kala Academy*

* 81 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are any proposals under the consideration of the Government to revive the Lalit Kala Academy in the State; and

(*b*) if so, the details thereof?

### *லளித கலா அகாடமி*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :*

*(அ) இம்மாநிலத்தில் "லளித கலா அகாடமி"யை மீண்டும் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் ஏதும் பரிசிலனையில் உள்ளனவா ?*

*(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) &(இ) தற்போது செயல்படாமல் நின்று விட்ட லளித கலா அகாடமியை (கவின் கலைக் கழகம்) மீண்டும் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை. இருப்பினும், புதிய*

[1st February 1972

விதிகளுடன் கலைகள், கைவினைப் பணிகள் மேம்பாட்டிற்கென்றே புதிய அமைப்பு ஒன்றினை தனிப்பட ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனை யில் உள்ளது. விவரங்கள் இன்னும் இறுதியாகத் தயாரிக்கப்படவில்லை. விரைவில் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

## *Medium of Instruction*

*82. *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the location of Government Colleges in Tamil Nadu where facilities exist in the P.U.C. and the Degree courses for study both in Tamil and English medium; and

(b) the location of colleges where such facilities do not exist and the courses for which such facilities do not exist?

பயிற்சி மொழி.

*திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :*

(அ) தமிழ் நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு பயிற்று மொழி களிலும் புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு படிப்பதற்கான வசதிகளைக் கொண்டுள்ள அரசுக் கல்லூரிகள் எந்தெந்த இடங்களிலுள்ளன ?

(இ) அத்தகைய வசதிகள் இல்லாத கல்லூரிகள் அமைந்துள்ள இடங் கள் யாவை ? எந்தெந்த பாடமுறைகளுக்கு அத்தகைய வசதிகள் இல்லை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் பயிற்று மொழி வகுப்புக்கு வசதி செய்யப்பட்டிருந்த அரசு கல்லூரிகள் எல்லாவற்றிலும் ஆங்கிலப்பயிற்று மொழிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. தமிழ் பயிற்று மொழி வகுப்புக்கள் மட்டுமே நடத்தி ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புக்கள் நடத்துவதற்கு வசதி இல்லாத அரசுக் கல்லூரி ஒன்றுகூட கிடையாது. புவியியல், சமூகஇயல் போன்ற சில சிறப்பான பாடங்களைத் தவிர மற்ற பாடங் களில் தமிழில் பயிற்சியளிக்க தமிழ் பயிற்றுமொழி வகுப்புக்கள் எல்லாக் கல்லூரிகளிலும் உள்ளன.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, சில கல்லூரிகளிலே இடவசதி யின்மை காரணமாக இரண்டு வகுப்புகளையும் நடத்த முடியாத நிலைமை இருக்கிறது. உதாரணமாக தஞ்சையில் உள்ள அரசினர் மகளிர் கல்லூரியில் இடம் இல்லாத காரணத்தால், மரத்தடியில் வகுப்புகளை நடத்திவருகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 93 அல்லது 96 கல்லூரி களில் போன வருஷம் திடீரென்று அவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இட நெருக்கடி நீரும் வகையில் ஆங்காங்கு கட்டடம் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு முயற் சிகளை மேற்கொள்ள இருக்கின்றது. தஞ்சை மகளிர் கல்லூரியைப் பொறுத்த வரையில், என்ன நிலை என்று தெரியவில்லை. ஆனாலும் இடவசதி பெறுவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



1st February 1972]

THIRU A. R. DAMODARAN : Sir, this question was asked nine months ago and I do not exactly remember the background, but I was under the impression that in the Government Arts College, Cuddalore, for B.A. in History provision had not been made for English medium. May I know whether it has since been made, Sir ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒரு கல்லூரியிலும் அப்படி ஏற்படாத நிலையில், ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகள் நடத்த வசதியில்லாத அரசினர் கல்லூரி ஒன்றுகூட இல்லை என்ற காரணத்திற்காகத்தான், எல்லாக் கல்லூரிகளிலும் அந்த வசதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

## *Joint Director of Animal Husbandry Department*

*83 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government propose to create a post of Joint Director in the Animal Husbandry Department in Tamil Nadu?

கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர்.

*திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :*

தமிழ் நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு இணை இயக்குநர் பதவி ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஆம். ஆணையும் பிறப்பித்துள்ளது.

## *Petroleum Goods*

*84 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether Railway Tank Wagons used for the Transportation of Petroleum Goods are calibrated by the Weights and Measures Department of the Tamil Nadu Government;

(*b*) if so, the fees prescribed for such calibration; and

(*c*) whether any representation has been received by the Controller of Weights and Measures that these wagons having been improperly calibrated, or not calibrated at all, do not deliver the quantities alleged to be carried?

பெட்ரோலியம் பொருட்கள்

*திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :*

(அ) பெட்ரோலியம் பொருட்களை ஏற்றிச் செல்லும் ரயில் வாகன் தொட்டிகள் (Railway Tank wagons) தமிழ் நாடு அரசு எடை-அளவைத் துறையால் அளவை செய்யப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அவ்வாறு அளவை செய்வதற்காக வரையறுக்கப்பட்ட கட்டணம் யாது ?

(உ) இந்தத் தொட்டிகள் சரியாக அளவை செய்யப்படவில்லை அல்லது இவை அளவையே செய்யப்படவேயில்லை என்றும் அவை ஏற்றிச் செல்லுவதாகக் கூறப்படும் சரக்குகளைச் சேர்ப்பதில்லை என்றும் எடை-அளவை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) ஆம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the administration of 'Weights and Measures' is with the State Government. May I know when fees are prescribed for calibration of petrol pumps and tank lorries, why exemption should be granted by the State Government in the case of calibration of railway tank wagons?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ரயில்வே எண்ணெய் வண்டிகளின் அளவைகளைப் பரிசோதனை செய்வது மாநில அரசு எடை-அளவைத்துறையா மத்திய அரசுத் துறையா என்பது மூன்றாண்டுகளாகப் பரிசீலனையில் இருந்து வந்தது. 1971-ல் தான் மாநில அரசு எடை-அளவைத் துறை ஆய்வாளர்களே ரயில்வே எண்ணெய் வண்டி அளவைகளைப் பரிசோதனை செய்யலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ரயில்வே ஜெனரல் மானேஜரோடு கடிதப் போக்கு வரத்து நடைபெற்றது. பரிசோதனைக்கான அலுவலாளர்கள், மற்ற விவரங்களை எல்லாம் ரயில்வே மானேஜரிடம் கேட்கப்பட்டிருக்கின்றன. விவரம் கிடைத்தவுடன் ரயில்வே எண்ணெய் வண்டிகளின் அளவைகளைப் பரிசீலனை செய்ய மாநில எடை-அளவைத் துறை ஆய்வாளர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

THIRU A. R. DAMODARAN : It has been reported, Sir, that many of these Railway tank wagons have been short delivering to agents and dealers who have received such wagons and that itself is in contravention of the Weights and Measures Act. May I know, therefore, whether the Government of Tamil Nadu will speedily take action, because for each wagon, they should also pay calibration fees of Rs. 500 or Rs. 600 ? Such exemption should not be granted in the case of Railway tank wagons.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அது குறித்து கடலூரிலுள்ள அகில இந்திய பெட்ரோல் வியாபாரிகள் ஃபெடரேஷனிலிருந்து முறையீடு ஒன்று வந்திருக்கிறது. அவர்கள் நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

*Mango Juice*

* 85 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that a large quantity of mango juice is being exported from North Arcot District during 1971 to foreign countries; and

(b) if so, the details thereof?





மாம்பழச்சாறு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971-ஆம் ஆண்டில், வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து, அதிக அளவு மாம்பழச்சாறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : (a) & (b) A quantity of 80 tonnes of mango juice was exported to the Soviet Union during 1971.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எந்த மாம்பழத்தின் சாறு அதிகப்படியாக சோவியத் யூனியனில் விரும்பப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எந்த மாம்பழம் என்று கேட்டார்கள். எந்த வகை என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. மாம்பழத்தின் சாறு என்றுதான் என்னிடம் இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : அது புளித்த சாறு, இனித்த சாறு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இனித்த சாறு; டின்னில் அடைக்கப்பட்டது.

*Committee for Cotton Development*

* 86 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are any proposals under the consideration of the Government to set up a Committee for Cotton Development; and

(b) if so, the details thereof?

பருத்தி வளர்ச்சிக் குழு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பருத்தி வளர்ச்சிக் குழு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) நிறுவப்பட இருக்கின்ற குழுவினைப்பற்றிய முடிவான தீர்மானம் ஏதும் இதுவரை எடுக்கப்படாததால் தற்போது இதுபற்றி எவ்வித தகவலும் அளிக்க இயலவில்லை.

[1st February 1972

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether it is proposed to set up an agency for cotton development or to appoint a Committee to go into the question of cotton development?

THE HON. THIRU A. P. DHARMALINGAM : 'Committee' தான்.

### *Taxi Stand*

* 87 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any proposals have been sent to the Railways by the Commissioner of Police about the taxi stand facilities in the Central Station; and

(b) if so, the details thereof?

### வாடகைக் கார் நிறுத்துமிடம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வாடகைக் கார்கள் நிறுத்துமிடத்திற்கான வசதிகள் கோரி, காவல் துறைக் கமிஷனருக்கு இரயில்வே துறை செயற்குறிப்புகள் எதையேனும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) காவல்துறைக் கமிஷனர் சென்னை மாநகர்சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழுவின் தலைவராவர். இவர் பக்கிங்ஹாம் கால்வாயின் மேற்கு புறத்தில் கூடுதலாகப் புகைவண்டி மேடை ஒன்றைக் கட்டி அங்கு நேரடியாகப் புகை வண்டிகள் வந்து சேரவும், இரயில் பயணிகள் மூர் அங்காடிப் பகுதி வழியாக வெளியேற வழி ஒன்றை அமைக்கவும் வகை செய்யும் செயற் குறிப்புக்கு ஆதரவாக 7-2-1970 நாளன்று தமது கருத்துக்களை எழுதினர். இச் செயற்குறிப்பு தென் பிராந்திய ரயில்வே நிர்வாகத்தினர் அனுப்பியதாகும். மத்திய இரயில் நிலையத்தில் வாடகை மோட்டார் வண்டிகளை நிறுத்துவதற்கான வசதிகளைப் பெருக்க இச் செயற்குறிப்பு வகுக்கப்பட்டது. இச் செயற்குறிப்பினை தென் பிராந்திய இரயில்வே நிர்வாகத்தினரும், தமிழ் நாடு அரசும் பரிசீலனை செய்து வருகின்றன.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்லிய கருத்து ஒரு நீண்டகாலத் திட்டம் பற்றியதாக இருக்கிறது. இப்போது இந்த ரயில் நிலையத்தில் வாடகைக் கார்கள் நிறுத்துவதற்கு என்ன வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்போது மேலும் ஒரு பாதை இரண்டாவது கேட் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு 25 டாக்சிகள் நிறுத்துவதற்குக் கூடுதலான வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 65 டாக்சிகள் நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் உள்ளன



1st February 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, வாடகைக் கார் ஓட்டுகிறவர்கள் பலருக்கு லைசென்சு இல்லை. லைசென்சு இல்லாமலே ஓட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஓட்டுபவர்களுக்கு 'டிஸ்க்' ஒன்று கொடுக்கிறார்கள். அந்த டிஸ்கை லைசென்சு பெற்றிருப்பவர்கள் அவர்கள் லைசென்சு இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்கள் நகரத்தில் கார்களை ஓட்டுவதாகச் சொல்கிறார்கள். இது அமைச்சருக்குத் தெரியுமா? அதையறிந்து நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படி ஏதேனும் தகவல் இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் அறிந்த அளவில் அது பெருமளவில் நடப்பதாகத் தெரிகிறது. லைசென்சு பெற்றவர்கள் ஏழெட்டு மணி நேரம் ஓட்டிவிட்டு மாலை நேரத்தில் அந்த டிஸ்கை சாதாரணமானவர்களிடம் கொடுத்து அவர்கள் காரை ஓட்டுவதாகவும் அதனால் பல இடையூறுகள் ஏற்படுவதாகவும் தெரிகிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பொதுவாக இதுபற்றி அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்கும். ஆனால் 'ஸ்பெசிபிக்காக' குறிப்பிட்ட வகையில் ஏதேனும் புகார் இருந்தால், மேலும் அது அரசிற்கு வசதியளிப்பதாக இருக்கும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III. ANNOUNCEMENT *re* MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

THIRU G. SWAMINATHAN : Sir, there is a Call Attention Notice to-day.........(interruption).

MR. CHAIRMAN : The hon. Member may please wait. Rule 42 (3) has to be suspended. I am taking it up now.

## IV. GOVERNMENT MOTION *re* SUSPENSION OF RULE 42(3) OF THE COUNCIL RULES.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-வது விதி, அதன் (3) துணைவிதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

MR. CHAIRMAN : The question is—

" That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised to-day ".

The motion was put and carried.

## V. CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE.

### (1) NON-PAYMENT OF SALARY TO TEACHERS IN SINGANALLUR MUNICIPAL SCHOOLS AND CONSEQUENT HARDSHIP CAUSED TO THEM.

THIRU V. ISVARMURTI : I like to call the attention of the Hon. the Minister for Education and Local Administration to an urgent matter of public importance, namely, the non-payment of salary to teachers employed in Singanallur Municipal schools from November 1971 and the consequent hardship caused to them.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிங்கநல்லூர் நகராட்சியின் ஆரம்பக் கல்விக் கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றுக் குறையினை ஈடு செய்யும் வகையில் 1966-67 முதல் 1969-70 வரைக்கான ஆண்டுகளுக்குப் பற்றுக்குறை உதவித்தொகை அளிக்கக் கோரி வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு மாநில தலக்கணக்காயரின் உதவியுடன் இப்பிரச்னையை ஆராய்ந்ததில் சிங்கநல்லூர் நகராட்சியானது அரசின் உதவித் தொகையினைப் பெறும் தகுதியை இழந்துள்ளது என முடிவெடுத்துள்ளது. இந்த நகராட்சியின் நிதி நிலையை ஆராய்ந்ததில் இந்நகரவையின் பொதுக் கணக்கு மிகக் கூடுதலான இருப்புடனேயே இவ்வாண்டுகளில் முடிந்திருக்கிறது. இந்நகராட்சி கூடுதலான பொதுக்கணக்கிலிருந்தே இப்பற்றுக்குறையினை நிறைவு செய்திருக்கலாம். மேலும் சமீபத்தில் அரசாணை எண்: 1766 கல்வி 14—10—1971-ல் அரசு இந்நகராட்சிக்கு ரூ. 1,23,852 1971-72-ஆம் ஆண்டுக்கு முன்னுதவித் தொகை அளித்துள்ளது. இந்நகராட்சி முப்பத்தைந்து இலட்ச ரூபாய் வரி பாக்கி வைத்துள்ளது. இதில் கல்வி வரி மட்டுமே ஒன்றேகால் இலட்ச ரூபாய் வரி பாக்கியுள்ளது. இந்த பாக்கி வரி ஒன்றேகால் இலட்சம் ஒழுங்காக வசூலிக்கப்பட்டிருந்தால் இந்த நெருக்கடி இந்த நகரவைக்கு ஏற்பட்டிருக்காது எனக் கருதப்படுகிறது. டிசம்பர் மாதச் சம்பளம் மட்டுந்தான் இன்னும் கொடுக்கப்படவில்லை என்றும், இதில் ரூ. 50 மட்டும் முன்பணமாகக் கொடுக்கப்படுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: On a Point of Clarification. இப்போது கூட அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. ஆகவே ஆசிரியர்களுக்கு எப்படியாவது சம்பளம் கொடுக்கப் பட்டாக வேண்டும்; அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை தனியாக எடுக்க இருக்கிறது என்று சொன்னால், உபயோகமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தப் பற்றுக்குறையை ஈடுகட்டுவதற்கு பொதுக்கணக்கில் சுமார் 11 லட்ச ரூபாய் இருக்கிறது, அதிலிருந்து பற்றுக்குறையை நிறைவுசெய்து கொள்ளலாம் என்று



கோரப்படுகிறது. அந்த வகையில் நிறைவுசெய்துகொள்ளுவதற்கு அனுமதி கேட்பார்களானால், இரண்டு துறைக்கும் நானே அமைச்சராக இருக்கிற காரணத்தால், அனுமதி அளிக்கத் தயாராயிருக்கிறேன். அதற்கான முயற்சியை அந்த நகராட்சிமன்றம் மேற்கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### (2) EXORBITANT PRICE CHARGED FOR SUGAR IN THE OPEN MARKET AND THE CONSEQUENT DISTRESS CAUSED TO DRUG INDUSTRY IN STATE.

THIRU G. SWAMINATHAN : I wish to call the attention of the Hon. the Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the exorbitant price charged for sugar in the open market and the consequent distress caused to the Drug Industry in the State.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சர்க்கரை விலை, போக்குவரத்து வழங்கல் மீதுள்ள கட்டுப்பாட்டை இந்திய அரசு 25—5—1971 முதற் கொண்டு நீக்கியது. சர்க்கரையின் இருப்பு வழங்கல் நிலை அப்பொழுது மனநிறைவளிப்பதாக இருந்ததே இதன் காரணமாகும். 1972-ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறைந்ததனாலும், ஆலைகளிலிருந்து சர்க்கரை குறைந்த அளவில் வெளியிடப்பட்டதனாலும் அங்காடி விலையைப் பாதித்து துணிகர வியாபாரத்திற்கு வழி வகுத்தது எனத் தோன்றுகிறது. எனவே, 1971 அக்டோபர் திங்களில் சர்க்கரை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 180 ஆக இருந்திருக்க, இவ்விலை 1971 டிசம்பர் இறுதிக்குள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 300 ஆக உயர்ந்தது. 1971 டிசம்பர் திங்களில் இந்த அரசு இம்மாநிலத்தில் உள்ள ஆலைகளின் இசைவுடன், ஆலைகள் விற்பனைக்காக வெளியிடும் சர்க்கரையில் 10 சதவீதத்தை 1971 டிசம்பர் திங்களில் எடுத்துக்கொண்டு, அதனை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. 1972 ஜனவரித் திங்கள் முதற்கொண்டு இந்திய அரசு ஆலைகளுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டிற்கிணங்க, ஒவ்வோர் ஆலையிலிருந்தும் வெளியிடப்படும் சர்க்கரையில் 60 சதவீதத்தை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் ஆலை வாயில் விலையில் வழங்குவதற்காக, எடுத்துக்கொண்டுள்ளது. 1972 ஜனவரித் திங்களில் இம்மாநிலத்திற்கு 9,800 டன்னும் 1972 பிப்ரவரித் திங்களுக்காக 9,700 டன்னும் ஒதுக்கப்பட்டன. கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் மாநிலமெங்கணும் ஒரு சீராகப் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்காக அரசு சர்க்கரையை அனுமதி பெற்ற சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் வெளியிடுகின்றது.

நியாயமான அளவில் சர்க்கரை வழங்கப்படுவதற்காக இம்மாநிலத்தில் உள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஏற்பாட்டின் கீழ் மாநிலம் முழுவதிலும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் சர்க்கரை பகிர்ந்தளிக்கப்படுவதற்கு வகை செய்யப்படுகிறது. அதிக வருவாய் உள்ள குடும்பத்தினர் பொதுவாக அதிக அளவு சர்க்கரையைப் பயன் படுத்துகின்றனர். இவர்களுக்கு 2 முதல் 3 கிலோ வரையில் பங்கீட்டு அளவை அதிகரிப்பதற்காக இதில் சிறிதளவு மிச்சப்படுத்தப்படுகிறது. அதிக வருவாய் உள்ள குடும்பங்களின் முழுத் தேவையையும் அரசால் ஈடுசெய்ய

[திரு. செ. மாதவன்] [1st February 1972

இயலாது. அவர்கள் தங்கள் தேவைகளை வெளி அங்காடியிலிருந்து தான் பெற வேண்டும். ஆலைகளால் வெளியிடப்படும் சர்க்கரையில் 40 சதவீதம் அவற்றால் நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றது. மொத்தமாக சர்க்கரையைப் பயன்படுத்துவோர் தங்கள் தேவைகளை வெளி அங்காடியிலிருந்து தான் பெற வேண்டும். வெளி அங்காடி விலை தற்போது குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 250 ஆகக் குறைந்துள்ளது.

* திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு முக்கியமான காரணம், மருந்துகளின் விலைகள் எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குமேல் விலை வைத்து விற்கக் கூடாது என்ற நிலையை மத்திய அரசால் செய்யப்பட்டிருக்கிறது. மருந்து உற்பத்தி செய்பவர்களுக்குத் தேவையான அளவு சர்க்கரை கிடைக்காமல் மூட்டை ஒன்று ரூ. 100 வரை அதிகமாக விலை கொடுத்து அவர்கள் வாங்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்ய இயலாமல், அவர்கள் மருந்து தயாரிப்பதையே நிறுத்த வேண்டிய துர்பாக்கிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இதை அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து, முன்பிருந்ததைப் போல் கோட்டா அளவில் சர்க்கரை ஒதுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு ஒதுக்கப்படுகின்ற சர்க்கரையை குடும்பங்களில் வாங்கி சொந்தத்துக்கு உபயோகப்படுத்துவதற்கு மட்டும் தான் கொடுக்க முடிவு செய்திருக்கிறது. தனிப்பட்ட நிறுவனங்கள் பயன்படுத்துவதற்குக் கொடுப்பதற்கு அரசிடம் சர்க்கரை இல்லை. இருக்கிற சர்க்கரையே பொது மக்களுக்குப் போதவில்லை என்ற கூக்குரல் இருக்கும்போது, தொழில் நிறுவனங்களுக்குக் கொடுப்பதற்கு இல்லை. விலைகூட குறைந்திருக்கிறது, வித்தியாசம் 50 ரூபாய்தான். நிறுவனங்கள் தாராளமாக வாங்கி அவர்கள் வியாபாரம் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நாட்டு மக்களுக்கு மிகவும் தேவைப்படுகிற மருந்துகளின் உற்பத்தியைப் பாதிக்கிற காரணத்தால், அம் மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு சர்க்கரை கொடுப்பதற்கு அரசு முன்வருமா? முன்பு சர்க்கரை ஆலைகளிலிருந்து 60 சதவீதம் சர்க்கரை அரசு எடுத்துக்கொண்டிருந்தபோது, இந்த நிறுவனங்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்ததையும் அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அப்போது அரசாங்கத்துக்கு வந்த சர்க்கரை அளவு கூடுதலாக இருந்தது. ஆனால் இப்போது வந்திருக்கிற சர்க்கரை அளவு மாவட்டங்களுக்குக் கொடுக்கப் போதுமானதாக இல்லை. ஆனால் கொடுக்கப்பட்ட சர்க்கரை எடுத்துக்கொள்ளப்படாமல், சில மாவட்டங்களில் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இவற்றையெல்லாம் அனுசரித்து, ஒரு மாத காலத்துக்குப் பிறகு, கிராமப் புறங்கள், மற்ற இடங்களில் எவ்வளவு சர்க்கரை பொது மக்களுக்குத் தேவைப்படும் என்ற கணக்கு விவரம் கிடைத்த பிறகு, மேலும் இதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1st February 1972]

## VI. GOVERNMENT RESOLUTION.

### RATIFICATION OF THE CONSTITUTION (TWENTY-FIFTH AMENDMENT) BILL, 1971.

MR. CHAIRMAN: The Hon. the Minister for Law will now move the motion.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1971-ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (25-வது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இம்மன்றம் இசைவுடன் உறுதிப் படுத்துகிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப் பட்டுள்ள 1971-ம் ஆண்டு அரசியலமைப்புச் (இருபத்தைந்தாவது திருத்த) சட்ட முன்வடிவு அரசியலமைப்புச் சட்டத்தின் 31-வது பிரிவைத் திருத்தவும் புதிய 31 (சி) பிரிவைச் சேர்க்கவும் விழைகிறது. இந்தச் சட்ட முன்வடிவு, அரசியலமைப்பு சட்டத்தின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ், மாநில சட்ட மன்றங்களின் இசைவினைப் பெறுவதற்காக அனுப்பப் பட்டுள்ளது.

பொது நலனுக்கென ஒருவரது சொத்தினைக் கட்டாயமாக எடுத்துக் கொள்வதென்றால் அதற்கான இழப்பீட்டுத் தொகையை அறுதியிட்டோ அல்லது அத்தொகை எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் அறுதியிடப்பட வேண்டுமென்றோ கூறும் சட்டத்தின்படியான அதிகாரம் வேண்டும்; அறுதியிடப்பட்ட இழப்பீடு போதுமானதாக இல்லை என்று காரணங்காட்டி இத்தகைய சட்டம் எதையும் எதிர்த்து எந்நீதிமன்றத்திலும் வாதாடுவது இயலாது. இவ்வாறு அரசியலமைப்புச் சட்டத்தின் 31 (2) பிரிவு கூறுகின்றது.

வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்கான மத்திய அரசின் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடப்பட்டது. கட்டாயமாக எடுக்கப் படும் சொத்தின் மதிப்பு எவ்வளவோ அதற்குச் சமமாகவே சட்டம் அளிக்கும் இழப்பீடு இருத்தல் வேண்டுமென்று அவ்வழக்கிலே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் இழப்பீடு போதுமானதாக இல்லையென்று காரணங்காட்டி வழக்கிட இயலாது என்று கூறும் 31 (2) பிரிவு செயலற்றதாகி விட்டது. ஆதலால், சட்டத்தால் அறுதியிடப்பட்ட இழப்பீடு போதுமானதாக இல்லை என்ற காரணங்காட்டி நீதிமன்றத்தில் வழக்கிடலாம் என்ற நிலை எழுந்துள்ளது.

எனவே, இப்பொழுது 31 (2) பிரிவில் உள்ள "இழப்பீடு" (Compensation) ) என்ற சொல்லிற்குப் பதிலாக "தொகை" (Amount) என்ற சொல்லைப் பயன்படுத்தி அப்பிரிவிற்கான திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அத்தொகை ரொக்கப் பணமாகவோ, வேறு முறையிலோ அளிக்கப்படலாம் என்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

சொத்தினை ஈட்டி, வைத்து, வழங்கும் அடிப்படை உரிமையைக் கூறும் 19 (f) என்ற பிரிவு இத்தகைய சட்டம் எதையும் பாதிக்காது என்றும் திருத்தம் வகை செய்கின்றது.

[திரு. செ. மாதவன்] [1st February 1972

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றும் பாகம் மக்களின் அடிப்படை உரிமைகள் ( (Fundamental Rights) பற்றியும், நான்காம் பாகம் அரசியல் நெறிமுறைகள் ( (Directive Principles) ) பற்றியும் கூறுகின்றன. நான்காம் பாகத்தில் கூறப்பட்டுள்ள நெறி முறைகள் நாட்டை ஆளுவதற்கு அடிப்படையானவை என்றும், அந்நெறிமுறைக் கொள்கைகளுக்கேற்ப சட்டங்கள் இயற்றுதல் அரசின் கடமை என்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 37-வது பிரிவு தெளிவாகக் கூறுகின்றது. ஆனால், இந் நெறிமுறைக் கொள்கைகளின்படி இயற்றப்படும் சட்டங்கள் பலவும் மூன்றுவது பாகத்தில் காணப்படும் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்டவை என்ற காரணங்காட்டி நீதிமன்றத்தினரால் செல்லாதன என்று தீர்ப்பளிக்கப்படுகின்றன. எனவே, மக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாத தேவைகளுக்கென வழிவகுக்கும் நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு ஏற்ப சட்டங்கள் இயற்றி அமுல் நடத்துவது தடைப்படுகின்றது.

இந்த இக்கட்டான நிலையைத் தவிர்ப்பதற்கென 31 ( c ) என்ற புதிய உட்பிரிவு இத்திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது.

சமுதாயச் செல்வ வளங்களின் உடைமையும் (ownership) கட்டான்மையும் ( (control) ) பொதுநலனுக்கு உகந்த வகையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென்றும்,

பொது நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செல்வமும் உற்பத்திச் சாதனங்களும், ஒரு சிலரிடம் குவிந்து விடாத முறையில் பொருளாதார அமைப்பு இயங்க வேண்டுமென்றும்,

39 ( b), ( c ) பிரிவுகள் கூறுகின்றன. இந்நெறிமுறைகளின்படி இயற்றப்படும் சட்டங்கள், அடிப்படை உரிமைகளைக் கூறும் 14, 19, 31-வது பிரிவுகளுக்கு முரண்பட்டிருக்கின்றன என்ற காரணத்தால் செல்லாதனவாய் ஆகிவிடமாட்டா என்று விதிக்கும் வகையில் 31 ( c ) என்ற புதிய உட்பிரிவு உள்ளது.

குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற்று மாநிலச் சட்ட மன்றங்களும் இந்த சட்டங்களை இயற்றலாம் என்று இத்திருத்தம் வகை செய்துள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காம் பாகத்தில் 39-வது பிரிவில் வரையப்பட்டுள்ள அரசியல் நெறிமுறைகளை அரசியல் அறநெறிகள் என்றே கூறலாம்.

"அறம்" என்பது என்ன என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் வாழ்விற்கு வழி வகுத்த வள்ளுவர் கூறியுள்ளார்.

அறத்தால் இன்பம் விளையவேண்டும், இன்பத்தை விளைவிப்பதே அறம். அந்த இன்பம் தனி மனித இன்பம் அன்று. மக்கள் அனைவருக்கும் விளையும் இன்பம், பொதுவான இன்பம், புகழோடு இயைந்த இன்பம்.

"அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல."

இவ்வாறாக, பொது இன்பத்தை நாடுவதே அறமாகும், தனி இன்பம், அதிலும் அத்தகைய தனி இன்பம் பொது இன்பத்திற்கு முரண்பட்டு இருந்தால், அது ஒரு நாளும் அறம் ஆவதில்லை.



1st February 1972] [திரு. செ. மாதவன்]

"மருத்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்."

என்று கூறி ஒப்புரவின் உயர்வினை உணர்த்துகின்றார் வள்ளுவர் பெருந்தகையான் பெற்ற செல்வம் மருந்தாகி மக்களின் வறுமை நோயைப் போக்குவதற்குப் பயன்பட வேண்டும். எனவேதான் காந்தியடிகளே கூறியுள்ளார், "பொது நலனுக்கென்று தனி மனிதனின் சொத்தை எடுக்கும்பொழுது அதற்கு இழப்பீடு கொடுப்பது தேவையில்லை. அவ்வாறு இழப்பீடு கொடுத்தால் அது இராமனிடமிருந்து பிடுங்கி கோவிந்தனிடம் கொடுப்பதே ஆகும். இது காந்தியடிகளின் வாக்கு.

மக்கள் அனைவருக்கும் உணவு, உடுக்க உடை, உறைவதற்கு வீடு, இவற்றை அரசு அளித்தால்தான் அது அரசின் அறமாகும், சமுதாய நீதியாகும். அடிப்படையான அரசின் அறக் கோட்பாடுகளை ஒட்டியே நம் அரசியலமைப்புச் சட்டத்தின் 39-வது பிரிவு வகுக்கப்பட்டுளளது. ஆனால், இத்தகைய உயர்ந்த அரசின் அறநெறிகளை முழுதுமாக அமுல் நடத்தும் வகையில் சட்டங்கள் இயற்ற இயலவில்லை. காரணம், இவ்வறநெறிகள் அரசியலமைப்புச் சட்டம் கூறும் அடிப்படை உரிமைகளுக்கு முரண்படுகின்றன என்பதுதான். இந்தப் பெருங் குறைபாட்டினை அகற்றுவதற்கு இத்திருத்தங்கள் வகை செய்கின்றன.

எனவே, இத்திருத்தங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. சட்டங்கள் மக்களின் பொதுநலத்திற்கு வரம்பு கட்டுவதில்லை; பொதுநலனைப் பேணுவதற்கு உகந்த வகையில் உதவுவதே சட்டமாகும் என்ற உண்மையை உணர்த்துவதே இத்திருத்தங்களின் குறிக்கோள்.

எனவே, நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் (இருபத்தைந்தாவது திருத்த) முன்வடிவை ஏற்று உதவி செய்யுமாறு இந்த அவையினை நான் வேண்டுகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of the proviso to clause (2) of Article 368 thereof, proposed to be made by the Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 as passed by the two Houses of Parliament."

* திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, நாடாளு மன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தின் 25-வது சட்டத் திருத்தத்தின் அவசியத்தினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் மிக இனிமையான தமிழில் எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்டத் திருத்தம் அவசியம்தானா என்ற சர்ச்சை அநேகமாக நாடு முழுவதிலும் அடங்கிவிட்ட ஒரு நிலையில், அதை நாம் இந்த அவையில் பேச முற்பட்டிருக்கிறோம். இந்தச் சட்டத் திருத்தம் இன்றைக்கு இல்லை, ஒரு இருபது ஆண்டுக் காலத்திற்கு முன்னாலேயே அவசியம் என்று ஓரளவிற்குத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கெனவே 1955-ஆம் ஆண்டு நான்காவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் வந்தபோது அப்படிப்பட்ட திருத்தத்திற்கு என்னென்ன காரண காரியங்கள் எடுத்துச்சொல்லப்பட்டனவோ அதே காரண காரியங்களை இன்றைக்கு இந்த 25-வது சட்டத் திருத்தத்தின்போதும் சொல்ல வேண்டியிருக்கிறது. அன்றைக்கும் இது போன்ற பிரச்சினைகள் இருந்தன. ஜமீந்தாரி ஒழிப்பு, இனாம்தாரி ஒழிப்பு, பெரும் நிலச்சுவான்தாரர்களிடம் உள்ள நிலங்களை மீட்பது என்ற

காரியங்களை அன்றைக்குச் செய்ய முற்பட்ட நேரத்தில், இன்றைக்கு ஏற்பட்டது போலவே இதே சட்டப் பிரச்சனைகள் குறுக்கிட்டன. அதன் காரணமாகத்தான் பேலப் பானர்ஜி வழக்கிலே நீதி மன்றம் அளித்த தீர்ப்பிற்குப் பிறகு, இந்த 4-வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த 4-வது சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகும்கூட மீண்டும் பழைய நிலையில் போய் நிற்கிறோம். நல்ல வேளையாக திருவாளர் சுப்பாராவ் அவர்கள் பிராஸ்பெக்டிவ் ஓவர் ரூலிங் என்று ஒன்றை உண்டாக்கினார்கள். ஒரு வேலை அவர்கள் அப்படிச் சொல்லாமல் இருந்திருப்பார்களானால், தேசத்திலே உள் நாட்டுக் குழப்பம். போர் நடப்பதைத் தவிர வேறு வழி இருந்திருக்காது. அப்படிச் சொன்னதன் மூலமாக இந்த 4-வது திருத்தத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பழைய சட்டங்களும் நடவடிக்கைகளும் தப்பித்துப் பிழைத்தன. இன்றையதினம் என்ன பார்க்கிறோம்? மறுபடியும் இதை நாம் ஏற்கெனவே 24-வது சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியபோதும் கண்டோம். பாங்குகள் தேசவுடைமை யாக்கப்பட்டபோது என்ன சொன்னார்கள்? பல கோடி ரூபாய்களை இழப் பீட்டுத் தொகையாக பாங்குகளை வைத்திருந்த பெரிய முதலாளிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இங்கே இந்தச் சட்டத்திலே நாம் செய்கிற திருத்தம் இரண்டே இரண்டு விஷயத்திற் காகத்தான். இன்று இந்த இழப்பீட்டுத் தொகை சம்பந்தமாக, இழப்பீடு என்பதை எடுத்துவிட்டு, தொகை என்று ஒரு திருத்தம் செய்கிறோம். இன்னொன்று 31 (சி) என்று புதிதாகச் சேர்க்கப்படுவது. இது நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தின் உருபு 19-க்குக் கீழே வருகிறது. சில உருபு களில் கண்டிருக்கும் உரிமைகளிலிருந்து பாதுகாத்து—அந்த உரிமைகளை மெய்யாகவே அளித்திருக்கிறோமா என்பது ஒரு புறமிருக்க—அந்த உரிமை களைக் காட்டித் தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லாது தடுப்பதற்கு ஒரு சேர்ப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. இதுதான் விஷயம். இது தேவைதானா என்று சொன்னால், என்னைப் பொறுத்தவரையில் நான் இந்த ஈட்டுத் தொகை பற்றி இன்னும் வேறுமாதிரியான கருத்தைக் கொண்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** இன்னும் தீவிரமாக நீங்கள் . . .

**திரு. எம். ஆறுமுகசாமி :** இது தீவிரமானதா, தீவிரம் கம்மியானதா என்று இந்த நேரத்தில் பேசுவது பொருத்தமாக இருக்காது என்ற அளவில் திருவாளர் ரெட்டியார் அவர்கள் கருத்துக்கு ஒத்துப்போக இயலாதவனாக இருக்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன் :** யார் அந்த ரெட்டியார்?

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு உறுப்பினர் ராமநாதபுரம் மாவட்டம் ஸ்தல ஸ்தாபனத் தொகுதி உறுப்பினர் திரு. ஜெயராமரெட்டியார் அவர்கள்.

**மிஸ்டர் சேர்மன் :** ரெட்டியார், முதலியார் என்றால் என்ன அர்த்தம்?

**திரு. எம். ஆறுமுகசாமி :** ஆண்டில் பெரியவர்களை இந்தப் பெயர்களால் அழைத்துப் பழக்கப்பட்டு விட்டோம். பெயரைக் குறிப்பிட்டால், சின்னப் பையனைக் குறிப்பிடுவது போல் ஆகும் என்று மரியாதை கருதி துர்ப்பாக்கிய வசமாக அவர்களுடைய ஜாதிப் பெயரைக் குறித்துச் சொல்லிவிட்டேன்.





**மிஸ்டர் சேர்மன் :** பெயரைச் சொல்லாமல் விட்டால், எப்படி? பெயரைச் சொல்லிப் பெயருக்குப் பின்னால் சேர்த்துக்கொள்ளலாம். ரா. கி. என்று சொல் லும்போது ரா. கிருஷ்ணசாமி நாயுடு என்று ஆகிறது. பெயரைச் சொல்ல வேண்டும். நீங்கள் சொன்ன பிறகுதான் அவர் ரெட்டியார் என்று எனக்குத் தெரியும்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** எனவே இன்றையதினம் இது ரொம்பவும் அவசி யமாகிறது. ஏனென்று சொன்னால், இந்தச் சொத்துரிமை பற்றி எனக்குப் பின்னாலே பேச இருக்கக் கூடிய அருமை நண்பர்கள் பாதுகாத்துப் பேசுவதற்கு இருக்கிறார்கள் என்று உணர்ந்தே பேசுகிறேன். நான் சொத்துரிமைப்பற்றி 24-வது திருத்தச் சட்டம் வந்தபோது கூட சொன்னேன். சொத்து என்ப தையே எடுத்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் என்னுடைய சொத்து பிறருடைய சொத்துக்கு இடையூறாக இருக்கக் கூடாது. ஆங்கிலத் தில் சொல்வார்கள். நான் கையை வீசிக்கொண்டு நடப்பதற்கு சுதந்திரம் இருந்தாலும், அடுத்தவன் மூக்கின் மீது பட்டுவிடக் கூடாதென்று. அது போல என்னுடைய சொத்து, சுதந்திரம் பிறருடைய, சொத்து சுதந்திரம் இவைகளைப் பறிப்பதாக இருக்கக் கூடாது. என்னுடைய சொத்து சுதந்திரம், பிறருடைய சொத்து சுதந்திரத்தை முடக்குவதாக, குறைப்பதாக, மறுப்பதாக இருக்கக் கூடாது. அந்த முறையில் தான் ஒரு சேரக் குவிதலைத் தடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். செல்வம் ஒரு சேரக் குவிதல் மூலமாக, ஒரு சிலர் கையில் அதிகமாகப் பொருள் குவிந்து விடுவதன் காரணமாக அதன் எதிர்மறையாக "பாப்பரிசேஷன்" இல்லாமல் ஏற்படுகிறது என்று சொல் கிறோம். இல்லாமை ஏற்படுவதன் காரணம் செல்வம் ஒரு சேரக் குவிவது தான். மஹாத்மா காந்தி ஒரு சமயம் சொன்னார். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் ராஜஸ்தான் சமஸ்தானத்தின் தலைநகருக்கு போனபோது மிகப் பெரிய மாளிகையைப் பார்த்து இது இந்த நாட்டின் வளத்தைக் காட்டவில்லை, வறுமையைக் காட்டுகிறது என்று சொன்னார். ஏனென்று சொன்னால், இப்படி போக போக்கியத்தில் ஒருசிலர் வாழ்வதற்கு, இவ்வளவு பெரிய மாளிகையைக் கட்டுவது என்றால், எண்ணற்றவர்கள் அடிமை வேலை செய்து, குறைவான கூலிக்கு வேலை செய்து பொறுப்புடன் கடமைகளை நிறைவேற்றி யிருக்கிறார்கள் என்றார். கோடிக்கணக்கான ஏழை மக்கள் இந்த அரண்மனை யைக்கட்டி முடித்து யாரோ ஒரு சிலர் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே வளம் இருப்பினும் கூட, தேசத்தின் வறுமையும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். செல்வம் ஒரு சேரக் குவிதல் என்பது 'அக்யுமுலேஷன் ஆஃப் வெல்த்' என்பது ஆபத்தானது. அது தடுக்கப்படவேண்டியதாகும். இன்றைக்கு தேசத்திலே சுதந்திரம் அடைந்த பிறகு செல்வம் ஒரு சேரக் குவித்து வருகிறது. பண்டித நேரு ஒரு முறை இல்லாதவர்கள் மேலும் இல்லாதவர்களாகவும் இருப்பவர்கள் மேலும் இருப்பவர்களாகவும் மாறிக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். இது எல்லோருக்கும் தெரியும். இதைத் திருப்பிச் சொல்ல விரும்பவில்லை. பல நிறுவனங்கள், தனியார்கள் இன்றையதினம் எவ்வளவு பெரிய பணக்காரர்களாக சுப்பட்ட மொத்த வரவு-செலவு பீஹார் மாநிலத்தின் ஒரு ஆண்டு வரவு-செலவு எவ்வளவோ அந்த அளவு அவர்களுக்குமட்டும் டாடா ஜமீந்தாரியிலிருந்து நிலப்பரப்புகளிலிருந்து, தொழில் கூடங்களிலிருந்து இருக்கிறது

என்று சொன்னார்கள் ஒரு தனி நபருக்கு, மிகப் பெரிய மாநிலத்தின் வருவாய் வரும் அளவிற்குச் செல்வம் குவிகிறது என்று சொன்னால், அதைத் தடுத்தாக வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்திலே கொள்கை நெறி கோட்பாடு என்ற பிரிவில் 39 (பி) (சி) இவைகளில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம், தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று. தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு முறை கூறியது போல இன்று இல்லாதவர்களுக்குச் சொத்துக்களை வழங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சொத்துக்கள் பல கோடி மக்களுக்கு என்றுமே கிடையாது. ஒன்றுமே இல்லாத ஒரு நாட்டில் சொத்துக்களைப் பாதுகாப்பது என்று சொன்னால், இருப்பதை அப்படியே பாதுகாப்பது, இருக்கிறவர்களை மட்டும் பாதுகாப்பது என்று பொருளாகும். இந்தச் சட்டத்திருத்தங்களின் மூலமாக இல்லாதவர்களையெல்லாம் இருக்கிறவர்களாக ஆக்குவதற்கு முயற்சிக்கப்பட்டு வருகிறது. ஏனென்று சொன்னால், பலர் பயப்படுகிறார்கள். உங்களுடைய சம்பளப் பணத்தை எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள், உங்கள் பிராவிடண்டு ஃபண்டு எடுத்துக்கொள்ளப்பட்டுவிடும் என்று சொல்லி விடுகிறார்கள். அதற்காகச் சொல்கிறேன். இந்த அளவில்தான் நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன். ஈட்டுத் தொகை கொடுப்பது என்பதைப் பற்றி அதிகம் இல்லாதவர்களுடைய சொத்துக்களைச் சில நேரங்களில் எடுக்கவேண்டியிருக்கும். இல்லாதவர்களுடைய சொத்துக்களும் ஒரு சமயம் தேவைப்படும். ஒருவர் இல்லாதவர் 50 சென்டு நிலம் மட்டுமே வைத்திருக்கிறார் என்று சொன்னால், சில நேரங்களில் அந்த நிலம் தேவைப்படலாம். அப்படி இல்லாதவர் தலையில் கை வைப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. சமுதாய நன்மைக்காக எடுக்கிறோம் என்றாலும் அப்படி இல்லாதவர்களிடத்திலே எடுக்கும்போது, அவர்களுக்கு ஈட்டுத் தொகை வேண்டுமென்று சட்டப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே இந்தச் சட்டத்தில் இந்தக் கண்ணோட்டத்தில் ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அடுத்தபடியாக 31 (சி)-ஐப் புதிதாகச் சேர்க்கிறோமே, இதை நான் ஆதரிக்கிறேன். ஏனென்று சொன்னால், இந்தச் சட்டத்தைச் சேர்க்கவில்லையென்று சொன்னால், நிச்சயமாகப் பெரிய ஆபத்து ஏற்படும். இந்த வழக்குகள் மீண்டும் கோர்ட்டுக்குப் போய் அதற்கும் தீர்ப்பளித்துக்கொண்டிருப்பார்கள். கோர்ட்டுகளைப்பற்றிக் குறைவாகச் சொல்வதாகக் கருதக் கூடாது. கோர்ட்டுகளைக்காட்டிலும் இந்த மக்கள் மன்றம் உயர்ந்தது. இது எங்கும் நிரூபிக்கப்பட்ட உண்மை. 20-ம் நூற்றாண்டில் வாதிட வேண்டிய அவசியமில்லை. கோர்ட்டுகளில் நீதிபதிகளாக நியமிக்கப்படுபவர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறவர்கள். ஆனால் மக்கள் மன்றத்தில் இருப்பவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள். இந்தக் கோர்ட்டுகள் சொல்லுவதைக் காட்டிலும், வழங்கக்கூடிய நியாயத்தைக் காட்டிலும் மக்கள் மன்றம் வழங்கக்கூடிய நியாயம் நல்ல நியாயம் என்று உறுதியாக நம்புகிறேன். தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தை ஆதரித்து இந்த அவை முழு மனதோடு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையோடு சட்ட அமைச்சர் முன் மொழிந்ததற்கு ஆதரவு கூறி, உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU A. R. DAMODARAN : Sir, what we are having to-day is an academic discussion on the Twenty-fifth Amendment Bill and in fact, when the Twenty-fourth Amendment Bill was passed, many of us had doubts whether the Twenty-fifth Amendment Bill





would be referred to the State Legislatures at all for their ratification. The Government of India and Parliament obviously felt that tc avoid any constitutional complications at a later stage, it might be better to refer this Twenty-fifth Amendment Bill also to the State Legislatures for their fatification. I am grateful that an opportunity has been given to us to discuss this very important amendment to the Constitution.

Sir, I am not one of those who holds the view that the Constitution cannot be amended or is inviolate and sacred. No Constitution in the world can afford to remain static but there are certain essential principles in a Constitution which I believe to be inviolate and according to some, these have been embodied in Chapter III of the Indian Constitution and have been termed as ' Fundamental rights of the individuals. Sir, I have gone very carefully through the debates that have taken place in both the Houses of Parliament and the reasons that have been adduced for brining forth this 25th amendment. Members have spoken that Parliament being supreme, when it passes a law and expresses its intention of abridging or curtailing certain fundamental rights, the Judiciary is not empowered to review it. Sir, this is a view which, I am afraid, cannot be upheld, because I think it is only in the Constitution of the Soviet Republic that we do not have the Supreme Court which can question the legality of Acts passed by the Supreme Soviet. There are, obviously, historical reasons for it. But in our democracy where we have accepted the three branches that have been mentioned in the Constitution, namely, the Executive, the Legislature and the Judiciary, the right of judicial review can never be denied. There can be no denying that the Parliament has the right to pass any law. At the same time, I am afraid we cannot deny the right that our courts are empowered under the very Constitution to review these Acts that have been passed and to say whether they have been framed in consonance with the Constitution.

Reference has been made by my hon. Friend Thiru Arumugaswami that it is wrong for the Courts to question the right of the elected legislators and to say that any law that is passed by such bodies is wrong. I am afraid that it is too extreme a view to talk of democratic rights. I am afraid I cannot agree with him that Legislatures are supreme in this field and that their actions cannot be questioned by the judiciary. The very fact that fundamentl rights have been mentioned in the Constitution—and we must bear in mind that Fundamental rights apply not to the States but to individuals—showed that the Constitution envisaged that at some time or other in the political life of a Nation, there is bound to be a conflict between the individual and the State or between the individual and a Corporation and it is exactly with a view to protecting the rights of the individuals that fundamental rights have been enshrined in our Constitution. Sir, it might have been possible as some time in the distant past to argue that the individual as such should have no rights, but I am afraid in the

Twentieth Century, this would not be accepted even by democratically elected, legislators. For example, the right to freedom of speech, the right to assemble peacefully, the right to worship have all been guaranteed in the Constitution and I do not think there is any Member who questions these rights that have been embodied in Article 19. I, therefore, consider it a grave error to think that any citizen who goes to the Court of Law and says 'that the State has passed certain legislations, whereby my fundamental rights are affected', is wrong because he is trying to set himself up against the State or the Legislature which has passed this legislation. I think it is a narrow view to take of the fundamental rights of a citizen. As far as the Twenty-fifth amendment, the first portion of the amendment which is contained in clause 2 is concerned, there is nothing very much new in the amendment, Sir. In 1955, in the Fourth Amendment that was passed, an identical paragraph was introduced and the only word that was used in that amendment was that 'compensation' should be paid and it was not mentioned whether it should be paid wholly in cash or partly in cash and partly in bonds. The amendment, therefore, seeks to substitute the word 'amount' for the word 'compensation', which has other implications, because to us as laymen who are not acquainted with law, when we are compensated for something, it means, 'to make good the loss' that in individual suffers. This has been construed by courts to mean that the market value of anything that is acquired should be paid by the Government when taking over any property or any property right. My hon. Friend referred to the fact that in the Bank Nationalisation case, the Supreme Court held that compensation—adequate compensation—should be paid for the banks that were taken over and it had resulted in payment of crores of rupees to one or two individuals. With due respect to him, I would like to point out—and I am sure he is aware of it—that even in the case of Banks., if he had taken care to analyse the share holdings of such institutions., he would have found that a Bank was not owned by one individual or even by one hundred individuals. Industrial concerns, factories, big commercial institutions and establishments and even banks, Sir, may have as many as ten thousand to fifteen thousand shareholders, some of whom might have invested amounts less than Rs. 10,000, Rs. 5,000 Rs. 2,000 Rs. 1,000 or perhaps even Rs. 500. I think if he had taken care to analyse the assets and liabilities of some of the Members of the Legislature, he would have found that many of us have invested small amounts in shares of various concerns. Therefore, to argue that in taking over a bank, it was wrong in principle to pay the market value of the shares is to stress the fact that we can even deny a thousand rupee shareholder, the market value of his investment. I would request him to pause and consider, in view of the concern that he has expressed for the small property-holder and the small share-holder whether such a view could have been taken by the Supreme Court and whether it would be morally justified. Therefore, Sir, when





we speak of compensation, it is very easy for those who have perhaps not much property, not much wealth, to consider, in an extremely harash light, the accumulation of all wealth to represent evil. I am afraid, Sir, it is very difficult for me to take this view. I dare always belived that instead of expopriatory measures where the amount that would be paid for any think that is taken over could very well be illusory, it would be certainly worth while for the Parliament and the State Legislatures to consider very carefully the disastrous consequences that might ensue if such a step was taken. Sir, let us consider, for example, an industry that is set up by a private individual in co-operation with thousands of other shareholders. At least in so far as the Tamil Nadu Government are concerned, they have not expressed any desire that investment should solely be in the State sector or in the Government sector or in the co-operative sector. They have also stated that industries are welcome in the joint sector and that private individuals can start industrial enterprises in co-operation with thousands of other shareholders . Let us assume that an individual starts an industrial concern like this. As we know it takes 10 years even to develop an industrial concern to enable it to pay dividends and pay off the investment and after 10 years somebody has the brilliant idea that there has been concentration of wealth and power because of the growth of this particular industry and, therefore, the provisions of the Twenty-fifth Amendment Bill should be applied and that this industry should be taken over by the Government without payment of the full compensation to which the gentleman would be entitled for having built up this industry over a period of ten years. I would like every Member of the Legislature to place his hand upon his heart and say whether if he had started such a concern, he would agree that the Government should take it over in the so-called public interest. All of us, in considering this legislation sometimes take the rather narrow view that anything that does not affect us will not be bad and that it should be supported and I feel that this stress which has been laid on the so-called growth of monopoly, the so-called growth of economic power has been responsible for many of the mills in our country. Sir, we have had the licensing system for over 25 years and there has been strict control by the Government in the starting of an industry, to which I referred also the other day, and if at all there has been growth, this growth, if it had been wrong, could have been checked by the Government at any stage. Even to-day after the twentyfifth Amendment Bill has been passed and after it has been mentionel in the election manifesto of a particular political party that monopolies should not be allowed to grow, we found only a few weeks ago, after the recent conflict that 49 industries were allowed to expand or had been allowed to expand and that they had been given permission to convert themselves from single shift production to double shift production and double shift production to treble shift production. I am not criticising this, Sir, I am only saying that we are, to use a popular phrase,

accepting the realities of the situation. If we want employment opportunities to be provided to our young men, professional men, technical men, it is essential that industry should grow in our country. I am fully aware of the evils of monopoly growth. It does not require any statement to convince us of the need for a check of such monopoly growth. This has been a treatise in every book on economics for the past 30 to 60 years. This is not a new controversy. It started in 1920 in the United States of America and the late 1930 in the United Kingdom. Therefore all of us are aware of the evils in the growth of economic power or in the concentration of wealth in a few hands, but I certainly believe that taxation is and should be an effective means of preventing such concentration instead of bringing in drastic proposals which are likely to frighten away people from investment altogether. Sir, the second part of the Constitution twentyfifth Amendment Bill is something more radical. In this, it has been stated that " Notwithstanding anything contained in Article 13, no law giving effect to the policy of the State towards securing the principles specified in clause (b) or clause (c) of Article 30 shall be deemed to be void on the ground that it is inconsistent with, or takes away or abridges any of the rights conferred by Article 14, Article 19 or Article 31 and no law containing a declaration that it is for giving effect to such policy shall be called in question in any court on the ground that it does not give effect to such policy ".

Sir. Article 39, clauses (b) and (c) refer to the growth in economic power and say that the ownership and control of the material resources of the community and the operation of the economic system should not result in the concentration of wealth and means of production to the common detriment. Friday, Sir, we must be convinced of the fact that we have reached a stage in our country where the ownership and control of material resources has reached such an extent that it is not subserving the common good. I am not convinced that a situation exists to-day whereby these Directive principles are of such paramount importance that steps should be taken to negative certain very essential rights that have been enshrined in Part III of the Constitution. Directive Principles of State Policy have at last been accepted by all State Governments as ideals to be achieved. It may take us years and years or decades before we can do so. For example, in Tamil Nadu, we have accepted one of the Directive Principles, namely, the provision of compulsory education up to the age of 14. We have gone many steps further and we have made education free up to the Pre-UUniversity class. There are possibly 6 or 7 other States in India which have not even made it compulsory up to the age of 11; and there is a big lag in the performance between State and State in this regard. To suddenly state that Directive Principles have become of paramount importance only in so far as Article 39. clauses (b) and (c) are concerned is, in my opinion, purely political and not based on any proper appreciation of the facts. Sir, the consequences, of



Articles 39 (b) and (c), if carefully used, of course, could benefit the public but, unfortunately, in the situation that now exists, there is the legitimate fear that it is likely to be used as a weapon which may result in the destruction of all initiative, enterprise, inventiveness in the creation of new industries and new employment potential. It will also result in another important thing, because Article 14 has been brought which the mischest of this amendment. Article 14 ensures equality before the law in all matters. After this amendment, it will be possible for the State to take over cinemas in Pallavaram and leave 'out' cinemas in Chromepet. I may be wrong and the Hon. the Law Minister may correct me. Formerly, when the Government wanted to take over the transport industry, we understood that the Government had a policy stated that they were going to to take over all public transport above a certain mileage, and that has affected all transport operators in the State of Tamil Nadu. But if the Government are going to say that they wanted to take over transport in a particular district—I am only quoting this as an example and I am sure the Government would not do it—but the Government can do it after the 25th amendment according to my conception and I am subject to correction,—it is possible because the clause regarding equality before the law has been suspended by the 25th amendment in so far as its application to Article 39 (b) and (c) is concerned The Government can say that in a particular district the operation of buses even below the statutory limit of 10 has resulted in the concentration of economic power and that the material resources of the community are not subserving the common good and the Government can take over the buses in a particular district and leave out the buses in another district. Formally, Sir, if this was done, the bus owners in this particular affected district could go to the court and say, 'I am denied equality before law by this hostile discrimination.' After the 25th amendment, Sir, it will be possible—I do not say that it will be used—for a Government and for a bureaucracy of the powerful executive, to misuse the powers given under the 25th amendment and to use it as a weapon to stifle an independent public opinion. Already we are at a stage where those connected with big industries and who are in a position vulnerable to attack find it extremely difficult to express their opinions because of the threat of action that could be taken and I am afraid that the curtailment of this liberty is only likely to stifle the application of some of those fundamental rights which are still left to us. No body argues, Sir, that property should not be taken over in the public interest. Ceilings on land have been introduced. The only trouble now is that it is not only agricultural lands that are subjected to these controls but all forms of property, whether it is in the form of residential house or whether it is in the form of shares in industrial concerns and all other property rights are subjected to attack under the particular amendment. I feel that there should always be a distinction between the inherited wealth and created wealth and that this distinction should be evened out not by measures which will take

away all this wealth without payment of adequate compensation but by the application of a vigious taxation policy. My hon. Friend Thiru Arumugaswami referred to the fact that Thiru J. R. D. Tata's income ran into crores. According to the information that was furnished in the Lok Sabha, some of these gentlemen who are big monopolists are not even income-tax assessees, I believe. The operation of the economic system is such that Trusts, etc., are treated and these people do not even come under the normal appellation of income-tax or wealth tax assessees. But that is only by the way, I believe that in any Constitutional amendment, we should bear in mind the repercussions that it will have on the general public and although I accept for a fact that we should all take up the cry and say that all forms of property are bad or intrinsically evil. One df the undersirable effects of the discussions that have taken place on the Constitutional amendments has been the denigration of the judiciary. When we have given the right of judicial review to the judiciary under the Constitution, I think it is wrong for us to get up and say that Judges, because they belong to a particular class, are representing class interests in giving judgments on important Constitutional issues. Fundamental rights, as I said, are for individuals and when we go to Court, judgments are bound to be given either in favour of the citizen or against him. If we interpret each judgment that is given in favour of the citizen as a reflection on State policy, I am afraid we are undermining the very concept of an independent judiciary. I am sure that in this State this has not been the criticism but others have used it. I would like only to end by saying that although this is an enabling provision, the Government of Tamil Nadu should use it sparingly and only where it is really expedient and very necessary in the interest of the public to take over a group of concerns or to take over properties above a certain value only, and where it will not be discriminatory as between individual and individual. I hope, Sir, this power will be used by the State Government sparingly and only in such a manner as not to produce the feeling that it is being used in a discriminatory sense between individual and individual. Thank you, Sir.

THIRU A. P. JANARDHANAM: Mr. Chairman, Sir, it is a very difficult thing to oppose my hon. Friend Thiru A. R. Damodaran, because if all the industrialists were like my hon. Friend Thiru Damodaran, there will not be any necessity for all these amendments.

THIRU A. R. DAMODARAN: Sir, I am not an industrialist.

THIRU A. P. JANARDHANAM: You deal in a commodity at least. My hon. Friend Thiru M. Arumugaswami mentioned about property and property rights. There has been an economic theory thrust on us and for the past 30 or 40 years, we have been talking about the evils of big businesses, about the accumulation of wealth, about the ramifications of certain industrial houses and



about the Fundamental Rights they have arrogated to themselves. My hon. Friend, Thiru Damodaran talked about the Fundamental Rights relating to freedom of speech, freedom of expression, freedom of worship freedom of peaceful Assembly and all that. But the sort of businessmen, whom we held up to the public are those who have developed the fundamental right to export, the fundamental right to rob, the fundamental right to evade taxes, the fundamental right to hoard things. These business houses are held up by the people, and by generating a sentiment against all these things we have got elected. For the past 10 or 15 years, our plank often has been the exposure of such business houses to the public and consequently it attracted the younger section and that section appealed to the voters and voters have returned us in a massive majority. We are bound to carry out what has been mentioned in the manifesto, namely, the reforming of society, uplift of the have-nots and giving and have-nots a square deal. We have to necessarily protect all these things. The famous writer Harold Lakshi says " That these big Business Houses ruin natural resources; they will adulterate commodities; they will float dishonest enterprises and they will corrupt legislatures ". We have had ample samples in India of such big business houses. The Business House of Birla indulged in it. They have their own lobbies in Parliament. In 1948, a book was translated on ' Birla Delhi House mystery ' in Tamil, which brings out all the ramifications of the evil doings and nefarious activities of that concern. So, all such enactments have to be brought in the interest of the common man. It is said that he has pleaded for independence of the judiciary. No doubt, we respect the judiciary and all that. But everything is for the good of the common man. Ultimately, all laws, all enactments, all Constitutions, all Judges, all Legislators, all Prime Ministers, all Chief Ministers whoever they may be, are there to help the common man and for the good of humanity. Public opinion marches ahead and law comes limping behind. We, the writers create public opinion. We, the orators create public opinion; we, the dramatists create public opinion. Afterwards, the laws are enacted in order to give form and effect to the public opinion. In that light, this revolutionary measure is in consonance with the thinking of the time. I welcome this Resolution Thank you, Sir.

DEPUTY CHAIRMAN: The hon. the Leader of the Opposition will now speak.

THIRU G. VASANTHA PAI: Though I have not given my name, I would like to speak before the hon. the Leader of the Opposition.

THIRU G VASANTHA PAI: Mr. Deputy Chairman, Sir, I have been provoked to speak by my hon. Friend Thiru A. P. Janardhanam, who said that the Constitution was only for protecting the fundamental rights of Firms like that of Birla.

[Thiru G. Vasantha Pai] [1st February 1972

Sir, I would like to say to this House that in my small capacity as a professional man, I have appeared for servicemen, for labour and for employees, who in search of fundamental rights have gone to the Courts and Courts have established them for these people. The Hon. Union Minister for Steel himself is one of those who owe a great deal for his release from the Defence of India Rules and the Act and the Preventive Detention Act, to the judiciary. at one time he proudly said that the independence of the judiciary was a *since qua non*. To-day, he sings in a different tune and says that there should be a committed judiciary and blows not and could. That does not mean that the Judiciary has failed in its responsibilities for the maintenance of fundamental rights irrespective of caste, creed, colour or the position a person occupies. Sir, even Panditji said that 'you are put up in the Ivory Tower and that you do not know what is happening around you'. I think a Judge sitting in an Ivory Tower is an asset for any Constitution, for any independent country that proclaims the welfare of the country.

Sir, I would say that we, as legislators, cannot arrogate to ourselves all powers and say that those people who framed our Constitution can only be subordinate to us. We are subordinate to the Constitution and the people who brought it into being. We cannot say by dint of authority that we can brush aside all the authorities over a period of 5 or 6 years, and that we are superior to the Constitution. In this connection, I would like to say that I oppose the Bill giving powers to Parliament to amend the Constitution. We have taken an oath in this House that we will abide by the Constitution of India as by law established. The Hon. Ministers have taken that oath. The Speakers of Assemblies and Chairmen of Councils have taken that oath. If we say we can just dabble about the Constitution, I ask 'What about Article 16 of the Constitution? We have another Chapter on the Directive Principles of State Policy. Article 50 says that it shall be the endeavour of the State to separate the judiciary from the executive in the public services of the State. What for has this Article come into being? It is there to see that these persons who take an oath of allegiance to the Constitution are beholden to the Constitution and keep the judiciary independent of the Executive, which safeguards the interest of the Legislature, Executive and the Citizens and it also keeps the State and the Centre within the respective provinces of the legislation and, at the same time, prevents either of the bodies from interfering with the rights of the individuals. I would like to say that I am not against deprivation of any property. Let anybody—the State—take the property for the benefit of all. I am one of those who believe that the per capita income of the individual should be raised and in this way, we shall be happy. But the Constitution should not ignore the fundamental duties of the individuals. Such fundamental duties are guaranteed in socialist Constitutions like those of the USSR or China. Probably they have got a Chapter on Fundamental



1st February 1972] [Thiru G. Vasantha Pai]

Duties. In our Constitution, we have a Chapter on Fundamental Rights and a Chapter on Directive Principles of State Policy. Now what we are trying to do is this. We are trying to give primary importance to the Chapter on Directive Principles of State Policy over the Chapter on Fundamental Rights. That is what Article 39 (*c*) and 39 (*b*) seek to do. Amendments to these Articles have been brought up with the last clause in this 25th Amendment Bill. You may see, Sir, that it has been stated like this. "31-C. Notwithstanding anything contained in article 13, no law giving effect to the policy of the State towards securing the principles specified in clause (b) or clause (c) of Article 39 shall be deemed to be void on the ground that it is inconsistent with, or takes away or abridges any of the rights conferred by article 14, article 19 or article 31; and no law containing a declaration that it is for giving effect to such policy shall be called in question in any court on the ground that it does not give effect to such policy". Sir, this gives a right to any State Government to invoke these Articles and to give a go-by to the Chapter on Fundamental Rights. So, it affects the citizens. I say we must cry a halt to this. We, as persons responsible to the people—many of us have gone to the polls only on the narrow issue whether the Princes would survive or not—must see that the Fundamental Rights are not obliterated. We are trying to bring the Directive Principles of State Policy within our ambit. In the case of Directive Principles, we should preserve certain Articles which guarantee liberty to the citizen. I think there was a time when we cried hoarse—though we agreed to the amendments to the Constitution in this House—and said that such an amendment to the Constitution was beyond the competence of Parliament. We should at least be careful not to give too much power by way of Constitutional amendments to abrogate or to efface the Chapter on Fundamental Rights completely. I, therefore, join hands with Thiru Damodaran and I agree in substance that it is within the competence of the Parliament to take away property under Article 31, but on reasonable compensation—compensation may or may not be justiciable in the Court—but I cannot agree with the other two amendments which have been brought within the compass of the 25th Amendment. I hope, Sir, that every one in this House—despite the strong supporting speeches by Thiru Arumugaswami and Thiru Janardhanam—will realise what they are trying to do and how they are trying to make this country, which has adopted for itself a faderad Constitution, a Uniary State, and the rights of the State vis-a-vis the Centre are obliterated by bringing the judiciary in the hands of persons who are committed to the policy of Government. Thank you, Mr. Deputy Chairman, for giving me this opportunity.

* திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்ட, இந்த 25-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவின் மீது பேசுவதற்கு நான் பெருமைப்படுகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தை நான் முழு மனத்தோடு வரவேற்கிறேன். நான் ஆதரிப்பதற்கான காரணங்களை எடுத்துக் கூறுவதற்கு முன்னால் பல பேர் இந்தச்

சட்டத்தால் ஏதோதோ பயங்கரமானவைகள் எல்லாம் ஏற்படவிருக்கின்றன என்றும்; நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள், உங்களுடைய சொத்துக்கள் பறிக்கப்படுமானால், நீங்கள் அதை ஒத்துக்கொள்வீர்களா என்றெல்லாம் மிக உருக்கமாகக் கேட்டவைகளின் மீது எனது கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 22 ஆண்டுக்காலமாக, இந்திய நாடு ஜனநாயகம் அடைந்து அரசியல் சட்டம் எழுதப்பட்ட நாளிலிருந்து இந்த ஆதிபத்திய உரிமைகளை அனுபவித்து, அனுபவித்து, பலன் பல பெற்று வந்திருக்கின்ற காரணத்தால், இன்றையதினம் அவைகளுக்கு இழப்பு வந்துவிடுமோ என்ற அச்சத்தால் அவர்கள் அந்த மாதிரிப் பேசுகிறார்கள் இல்லாதாவன் எனக்கு வேண்டுமென்று சொல்லுவான். உழைக்கிறேன், வயிற்றுக்கு உணவு, உடுக்க உடை, இருக்க வீடு கொடு என்கிறான். இருப்பவன் இருப்பதை இழந்துவிடக்கூடாது என்று சொல்வான். இன்னும் மற்றவர்களைச் சுரண்டி சொத்துச் சேர்க்க சுதந்திரம் கேட்பான். அவனுக்கு உடமை இருப்பதற்கு பல்வேறான காரணங்கள் இருக்கின்ற காரணத்தால், அவன் என்னிடம் இருந்தால் தான் நன்றாகவிருக்கும், நாடு முன்னேறும், வேறு யாருக்காவது கொடுத்தால் நாடு கெட்டுவிடும் என்று அனுபவித்து வருகின்ற நிலைமையில் எடுத்துக் கூறத்தான் செய்வான். இல்லாத மக்கள் எனக்கு வேண்டும் என்று கேட்பதைத் தவிர வேறு காரணம் ஏதும் காட்ட முடியாது. அவன் "உழைக்கிறேன்—தேவையைக் கொடு" என்பான். வேறு என்ன பேச முடியும்? அந்த அடிப்படையில் தான் இல்லாத மக்கள் இருக்கின்றார்களே தவிர, வேறு நிலையில் இல்லை. இந்த உண்மையான நிலையினை உணர மறுத்தால் மறுப்பவர்கள் பாடம் பெறும் காலமாகும் இது. ஆகையினால்தான் சில பேரிடம் செல்வம் குவிக்கப்பட்டிருப்பது அரசு எடுத்து மக்களுக்குக் கொடுக்க சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மக்களின் மொத்த நலனுக்கான ஒரு செயலைச் செய்வதானாலும் தனிமனிதனின் உரிமைச் சட்டம் என்ற பெயரால் தடை செய்யும். பல பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால், அந்தத் தடைகள் நீக்கப்பட வேண்டுமென்று இந்த அரசியல் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. இவ்வளவு காலம் வராமல் இருந்த சட்டம் இன்று வரலாமா? நாடு நன்றாக இருந்ததே, இச்சட்டம் வந்திடும் நாடு குட்டிச்சுவர் ஆகி விடுவதாகவெல்லாம் கொக்கரிக்கின்றனர். ஏன் இவ்வளவு காலம் வரவில்லை என்றால், அங்கு மக்களவையில் வீற்றிருந்தவர்களெல்லாம் டாட்டா, பிர்லா, வம்சத்தினரின் கையாட்களும் அவர்களும் தான். அதோடு அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் தங்களின் ஏஜெண்டுகள் மூலம் செல்வாக்கை வைத்திருந்தனர். இன்று இல்லாத மக்களின் உண்மையான பிரதிநிதிகள் அவையில் உள்ளனர். ஆதலால் தான் இன்று சட்டத்திருத்தம் வருகிறது.

அரசியல் சட்டம் என்று சொன்னால் உரிமை, அடிப்படை உரிமை என்று கூறப்பட்டிருக்கிறது. சாதாரண உரிமையைக்கூட ஏழை பெற முடியவில்லை. அதுவும் பணக்காரர்களுக்கே சொந்த சொத்து. அந்த அடிப்படை உரிமையை இல்லாதவன் பெறவே முடியாது என்பது சரித்திரம் மட்டுமல்ல, இந்த நாட்டு வரலாற்று உண்மையாகும். பணக்கார பணத்திமிர் காரணமாக தலைமை நீதி மன்றம் வரை சென்று மக்களரசு விரைவாக எந்த நன்மை செய்ய நடவடிக்கை எடுத்தாலும் தடுக்கிறான், அரசை நடக்க விடாமல் சவால் விடுகிறான். ஆனால் ஏழை உரிமை கேட்டால் அடி, உதை பெறுகிறான். இதுதான் ஜனநாயகமா. வெட்கக்கேடு!



இரண்டாவதாக. "அரசியல் சட்டத்தின் பேரில் நாம் ஏற்கனவே உறுதி எடுத்திருக்கிறோம். சத்தியம் செய்திருக்கிறோம். அதையே மாற்றலாமா? மதிக்க வேண்டாமா?" என்று உறுப்பினர் திரு. வசந்த பாய் எடுத்துக் காட்டினார். அவர் உயர்நீதி மன்ற திறமை வாய்ந்த வழக்குரைஞர். இருப்பினும் நான் அவருக்கு ஒன்றைச் சொல்வேன். இதை அவர் மறுக்க முடியுமானால், மறுக்கட்டும்.

இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் எதன் மீது உறுதிமொழி எடுக்கப்பட்டது? இங்கிலாந்து நாட்டின் சட்டத்தின் மீது அல்லவா? அந்த நாட்டு சக்கரவர்த்திக்கு நன்றியுடன் இருப்பேன் என்று சத்தியம் செய்யவில்லையா? 1947-க்கு முன்னால் அந்தச் சட்டம் அமுலில் இருந்தது. அது நம்முடைய நாட்டு விடுதலை உரிமைக்குத் தடையாக இருந்த காரணத்தால், அதைத் தூக்கி எறிந்தோம். சுதந்திரம் பெற்றோம். நாட்டுச் சுதந்திரம் அன்றையதினம் பெறுவதற்காக வெள்ளையனின் நாட்டு அடிமைச் சட்டங்களை உடைத்தெறிந்தோம். இப்பொழுது பொருளாதாரச் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்குத் தடையாக இருப்பது சில சமுதாயச் சுரண்டல் மூளைகளால் எழுதப்பட்டுள்ள இன்றுள்ள அரசியல் சட்டம். எப்படி நாட்டுச் சுதந்திரம் பெறுவதற்காக வெள்ளைக்காரனை வெளியே போ, உனது சட்டம் தூக்கி எறியப்படுமென்று செய்து காட்டினோமோ அதே போல் இன்றையதினம் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெறுவதற்காக இந்த அரசியல் சட்டத்தைத் தூக்கி எறியாமல் திருத்துங்கள் என்றுதான் சொல்கிறோம். அவ்வளவுதான். சட்டத்தைத் தூக்கி எறிய வேண்டுமென்று கூட சொல்லவில்லை. ஏனெனில் தங்களைப் போன்றவர்கள் அதிகமாகக் கோபிக்க வேண்டாம் என்றுதான் திருத்த வேண்டும் என்றுதான் சொல்கிறோம். இதில் நான் வலியுறுத்திச் சொல்வது என்னவென்றால், இன்னும் முன்னேற்றமாகச் சென்று இந்த அரசியல் சட்டத்தையே தூக்கிஎறிந்து விட்டு இன்றைய மக்களின் சிந்தனையின் அடிப்படையில் எழுதப்படுவதுதான் உண்மையாகவே மக்களுக்கு விரைவாக நன்மை செய்ய உதவும் இந்த நேரத்தில் உங்களுடைய வீடு போய்விடும். உங்களுடைய சம்பளத்தில் குறைவு ஏற்பட்டு விடும். நினைத்தால் எதையும் எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்லப்படுகிறது. எடுத்துக்கொண்டாலும் குடி இருக்க வீடு கிடைக்கும். தேவைக்கு மேல் குவியல் வைத்திருப்பவரின் குவியலில் தேவையிருப்பின் மக்களுக்காக எடுத்துக் கொள்ள வேண்டிவரும். பெரும்பாலான மக்களிடம் ஒன்றுமில்லை.

பஸ் டிரான்ஸ்போர்ட்டைப்பற்றி அன்றையதினம் நமது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சையிலே ஒரு தனியார் நிறுவனத்தின் முதலாளி திடீரென்று ஒரு 30, 40 பஸ்களை ஓட்டாமல் நிறுத்தி வைத்துவிட்டார்கள். அவர் பணத்தைச் சுருட்டிக்கொண்டு குளுகுளு அறையில் சுகமாக உள்ளார். ஆனால் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்படுகிறதே என்று கேட்டால் நான் அப்படி பஸ்களை எடுத்து ஓட்டுவதன் மூலம் மக்களுக்கு நன்மை செய்வதற்கு சட்டத்தில் இடம் இல்லை, என்ன செய்வது என்று சொல்கிறார்கள். தனிப்பட்ட நபர்கள் எப்படி 40 பஸ்களுக்கும், 50 பஸ்களுக்கும் சொந்தக்காரர்களாகும் நிலைமைக்கு எப்படி வளர முடிந்தது. என்பதைக் கணக்கு எடுக்க சட்டம் கொண்டுவரவேண்டிய நேரம் இருக்கிறது. இதற்குச் சட்டம் கொண்டு வரக்காணோம். வருந்துகிறேன். 10, 15, 50 என்று

பஸ்களை வைத்திருப்பவர்கள் திடீரென்று மூடி விட்டால், தொழிலாளர்கள் நிலைமை என்னவாவது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டாமா? மக்கள் பயணம் செய்ய முடியாமல் கஷ்டப்படமாட்டார்களா?

திரு. ஜி. சுவாமிநாதன்: அரசாங்க பஸ்கள் ஓடாத நேரங்கள் இல்லையா. அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லையா?

திரு. செ. முத்துசாமி: அரசாங்கமாக இருந்தால் இன்னொரு இடத்தில் வேலை கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. மீண்டும் அந்தத் தொழிலாளர்களை அரசு எடுத்துக்கொள்ளும் என்ற உத்திரவாதம் இருக்கிறது. வேலைக்கு உத்திரவாதம் கொடுப்பது அல்லது அவர்களுக்கு வேறு வேலை தேடித் தருவது என்ற அடிப்படை முயற்சியில் அரசு ஈடுபடுகிறது. தனிப்பட்ட தொழில் நிறுவனங்களைக் கொண்டவர்கள் தங்களுடைய தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கான உரிமையை மட்டும் கேட்கிறார்கள். தொழிலாளர்கள்—மக்கள் நலனைப்பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. ஆனால் அரசு என்பது அப்படி அல்ல. மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நன்மை செய்வதே அரசின் நோக்கம். சொத்து சேர்த்து சுருட்டிக்கொள்வது அல்ல. ஆதலின் அரசையும் தனிப்பட்ட மனிதனையும் இணைத்துப்பேசுவது அசிங்கமானது ஆகும்.

மக்களுக்கு உரிமை வேண்டும். அந்த உரிமை உண்மையான முறையில் அமைய வேண்டுமானால் இந்தத் திருத்தம் அவசியம். இன்னும் பல திருத்தம் தேவை, விரைவு தேவை; தங்களது சொத்துக்களைப் பாதுகாப்பதிலே மட்டும் அக்கரை கொண்டவர்கள், இதுவரையில் மெஜாரிட்டியாக இருந்தார்கள். அதனால்தான் ஒன்றும் நடைபெறவில்லை. ஜனநாயகமும், அரசியல் சட்டமும் வந்த நாளிலிருந்து அவர்களுக்குச் சிந்தனை வரவில்லை. அப்பொழுது மெஜாரிட்டி இந்தப் பக்கம் இல்லை. இன்றைய தினம் இல்லாதவர்கள் அத்தனை பேரும் வந்திருக்கிறார்கள். அதுவும் மெஜாரிட்டியாக வந்திருக்கிறார்கள். சட்டம் திருத்தப்படுகிறது அவ்வளவுதான். சட்டத்தை மாற்றி எழுதலாமா என்றெல்லாம் கேட்கலாம். அதைப்பற்றி இனி விளக்கத் தேவையில்லை. மக்கள் நலன் பெற வேண்டும் என்பதுதான் ஜனநாயகமே தவிர ஏதோ பத்து, ஐம்பது பேர் உட்கார்ந்து கொண்டு அடிமைச் சிந்தனையில் எழுதிவிட்டால் அது என்றைக்குமே திருத்தக்கூடாத ஒன்றாகிவிட முடியாது. இந்த 1970, 71, 72-ல் கூட மக்கள் புதிய சிந்தனையைப் பெறக்கூடாதா? மதங்களிலே கூட திருத்தங்கள் கொண்டு வந்து விட்ட காலம் இது. கிறிஸ்தவ மத்தில் பல புதிய திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்து மதத்திலும் பல புதிய மதாசாரியார்கள் தோன்றி பல மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். இன்றைய தினம் மக்கள் தொகை என்ன? அதைக் கட்டுப்படுத்த என்னென்ன முயற்சிகள் அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அரசு மத விஷயமாகத் தலையிடுவதில்லை என்று சந்தியாசி வேடம் போடாமல் ஒரு சட்டத்தைச் செய்கின்றபோது, அல்லது இருக்கின்ற ஒரு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருகிறபோது பொது மக்கள் நலனைத்தான் பெரிதும் கருதிச் செய்ய வேண்டும். தொழில்களை அரசு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்வது முற்றிலும் எப்படிப் பொருத்தமானது? ஒரு ஸ்தாபனம் நல்ல முறையில் சீராக, கொள்ளை அடிக்காமல் நடந்தால், அரசு அதை எடுக்குமா? தொழில் தகராறு வருமா? ஆயினும் பொதுமக்களின் நலனுக்குத் தேவையான அப்படிப்பட்ட தொழில்களை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. கோவையிலே மூடப்பட்டுக் கிடக்கும் ஆலைகளை எப்படியாவது



திறந்து வேலை செய்ய வைத்து தொழிலாளர்களுடைய அவதியைப் போக்க வேண்டும் அம்மாதிரியான நிலைமையில் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால், அத்தொழிலை எடுப்பதற்குத் தயக்கமே காட்டக்கூடாது. இந்தச் சட்ட திருத்தத்தை வைத்தே அதையும் செய்ய வழி வகுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 25-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவைப்பற்றி பேசுங்கள்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் மாண்புமிகு திரு. சாமிநாதன் அவர்களுடைய சந்தேகத்திற்குப் பதில் கூறும் வகையில் ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டிவிட்டு, அமைச்சர் அவர்களுடைய கவன ஈர்ப்புக்குக் கருத்தைச் செலுத்துகிறேன்.

நஷ்டம் ஏற்பட்டால் எப்படித் தொழிலை நடத்துவது என்று கேட்கப்படுவதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. நஷ்டம் என்றால் எப்படி ஏற்படக்கூடும்? ஆஞ்சனேயா பஸ் டிரான்ஸ்போர்ட் கம்பெனியை முதலாளி திடீரென இழுத்து மூடிவிட்டான். அதை நம்பி வாழும் ஆயிரம் தொழிலாளர்கள் பட்டினியாக இருக்கிறார்கள். நான் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது, தொழிலாளர்கள் முதலாளி வீட்டின் முன்னால் உண்ணாவிரதம் இருதார்கள். நல்ல முறையில் ஓடிக்கொண்டிருந்த பஸ் டிரான்ஸ்போர்ட், நல்ல வருமானம் பெற்றுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று வருமானம் எங்கே போய் விட்டது? நஷ்டம் என்று சொல்கிறார்கள். அதை யார் நம்புவது? அரசாங்கத்தில் யார் யார் என்னென்ன சம்பாதித்து வைத்திருக்கிறார்கள் என்று முழு விவரமும் சேகரிக்க சட்டமூலம் அதிகாரிகளை நியமனம் செய்து கணக்கெடுத்துவிட்டுப் பேச வேண்டியது ஆகும். பதுக்கி வைத்துவிட்டு நஷ்டம் என்ற பகல் வேடத்தை ஒப்ப முடியாது. நண்பர் திரு. சுவாமிநாதன் சொல்கின்ற நிலைமை இருந்தால், உண்மையில் சோதனை நடத்தி கண்டுபிடிக்க வேண்டியதுதான் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் மக்களுக்கு நன்மை செய்வதற்காக பல்வேறு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற உத்வேகத்தில் மத்திய அரசாங்கம் இதைக் கொண்டு வருகிறது. அதே சமயத்தில் பாங்கு நேஷனலைசேஷன் செய்தபோது கூட பார்த்தோம். ஷேர்ஹோல்டர்கள் ஒவ்வொரு பாங்கிலும் பாக்டரியிலும் இருக்கிறார்கள். அவர்கள் மக்கள் இல்லையா என்று கூட திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தொழில்களை வைத்து கெட்டிக்காரத்தனமாக நடத்தி வருகிறவர்கள் என்பதால், அந்த உதாரணத்தைச் சொன்னார்கள். நான் தொழில் நடத்துகிறவன் அல்ல. சாதாரண ஆசிரியன், தொழிலை ஆரம்பிக்கிறவர்கள் முதலில் முதலைப் போடுகிறார்கள். போட்டு அவர்களே மானேஜிங் டைரக்டராக வருகிறார்கள். பாதுகாப்பு வேண்டியதால் லிமிட்டெட் கம்பெனி என்று போட்டுக்கொண்டு பல ஷேர் ஹோல்டர்களைச் சேர்க்கிறார்கள். ஆனால் முழுக்க முழுக்க அவர்கள் கையிலே ஆதிக்கத்தை வைத்துக்கொள்வார்கள். இது தானே நடக்கிறது. பஞ்சாப் நேஷனல் பாங்கு என்று ஒன்று இருந்தது. அந்த பாங்கில் தொழில் அதிபர்களாக இருக்கிறவர்கள் கடனை எல்லோருக்கும் கொடுக்கவில்லை. டைரக்டர்களுக்கு, மனேஜிங் டைரக்டர்களுக்குப் பல கடன்களைக் கொடுத்தார்கள். தாங்களே எடுத்துக்கொண்டார்கள். ஓவர்டிராப்ட் எடுத்துக் கொண்டார்கள். இதன் மூலம் ரூ. 1 கோடிக்கான ஊழல் பற்றி "பிளிட்ஸ்" இதழில் வந்ததே.

[திரு. செ. முத்துசாமி] [1st February 1972

இது லிமிடெட்டின் குண நலன் ஆகும். சாதாரண ஷேர்ஹோல்டர்களுக்கு அந்த வசதி அங்கே கிடைக்கவில்லை. இதுபோன்ற போக்கைத் தடுக்க வேண்டுமென்று முயன்று அரசு இதுவரையில் செய்ய முடியாமல் ஏழைகளுக்கு நன்மை செய்ய வழியே இல்லாமல் போய் விட்டதால் வேறு வழியின்றி கடைசியாக இதைத் திருத்த முன் வந்திருக்கிறது. இன்னும் கொஞ்சம் வேகமாகச் சொன்னால், இந்தச் சட்டத்தை எடுத்துவிட்டு இன்றைக்குள்ள சிந்தனைகளுக்கேற்ப புதுச் சட்டத்தையே உருவாக்க வேண்டும். திரு. தாமோதரன் போன்றவர்களுடைய உணர்ச்சிகள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக, திடீரென்று அவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கக்கூடாது என்பதற்காக, கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்தங்களைக் கொண்டு வருகிறார்கள். விரைவு போதாது என்பது என் கருத்து. அவர்களைப் போலவே மேலே பெரியவர்கள் இவர்களின் பாம்பரை இதைவிட நல்ல முறையில் வாதம் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அரசு மக்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள். இல்லாவிடின் இந்த அரசு நிலைக்க முடியாது . இதை முழுமனதோடு ஆதரிக்கிறேன்.

இன்னொரு விஷயம் இருக்கிறது. கல்வியைப் பற்றிய விஷயம் அது. இப்போது மற்ற சொத்துக்களை எல்லாம் சட்ட உரிமைகளின் படி எடுக்கும் போது அரசு காம்பன்சேஷன் கொடுப்பது அரசின் முடிவாக இருக்கிறது. பணமே கொடுத்தாக வேண்டும் என கோர்ட்டிற்குச் செல்ல முடியாது. டிரான்ஸ்போர்ட் எடுத்துக் கொள்ளப்படுவதற்கான பில் வந்தபோது அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மார்க்கெட் ரேட்டில் பஸ்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தது. அமெண்ட்மெண்ட் வந்த பிறகு நாமே சட்டம் செய்தால், அரசு பார்த்து நிர்ணயிக்கிற விலையைக் கொடுக்கலாம் என்ற வசதி இருக்கிறது. அப்படிச் செய்ய சட்டம் செய்தால், அரசின் நிர்ணயித்த விலைக்கே அவற்றைப் பெற முடியும் என்பதை என்னுடைய ஆலோசனையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பத்திரங்களாகவும் தரலாம். பள்ளிகளுக்குச் சொத்து இருக்கிறது. மைனாரிடி என்பதன் பெயரால் பல பாதுகாப்புகள் இருக்கின்றன. மைனாரிடி. என்றால் மத மைனாரிடி, மொழி மைனாரிடி.. இங்கே மத மைனாரிடிதான் பள்ளிகளை நடத்துகிறார்கள். மெஜாரிடியான மக்களுக்கு உத்தியோகம் அவர்கள்தான் கொடுக்கிறார்கள். மெஜாரிடியாக உள்ள மக்களை உத்தியோகத்தில் போட்டு மைனாரிடியினர் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். கல்விச் சட்டப்படி இப்படிச் செய்வது நியாயமில்லை என்றால் உடனே மைனாரிடியின் அடிப்படை உரிமை வந்துவிடுகிறது. கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் என்று மைனாரிடியாக இருக்கிறவர்கள் பள்ளி நடத்தினால், அரசாங்கம் நிர்ணயிக்கும் சட்டத்திற்கு அவை "அப்ளையாகாது". நாடாரோ, முதலியாரோ, இன்னொரு ஜாதியைச் சேர்ந்தவரோ, படையாட்சியியோ நடத்தினால் அதை எடுத்துக்கொள்ளலாம். இதில் என்ன நியாயமிருக்கிறது? டிஸ்கிரிமினேஷன் கூடாது என்று திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறார்கள். மைனாரிடி என்றால் அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். இருக்கட்டும். ஆனால் மற்றவர்களுக்கு இல்லாத உரிமைகளை அவர்களுக்குத் தருவதால் என்ன பலன் ஏற்படுகிறது? மெஜாரிடியின் உரிமையைப் பறிக்கிறார்கள். கல்விச் சாலைகளில் உள்ள சொத்துக்களை அவர்கள் காப்பாற்றிக் கொள்ளலாம். ஆனால் திரு. தாமோதரன் அவர்களே ஒரு பள்ளி நடத்தினார்கள் என்றால், அதை அவர்கள் காப்பாற்றிக் கொள்ள முடியாது. மைனாரிடியினரின் பள்ளிச்



[1st February 1972

சொத்துக்குத்தான் பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் நடத்தும் பள்ளிகளின் மீது சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆசிரியர்களை அவர்கள் வெளியேற்றினால் வெளியேற்றியதுதான். அரசாங்கம் கேட்க முடியாது.

THIRU A. R. DAMODARAN : May I interrupt the hon. Member, Sir? Even by the 25th Amendment, the property of educational institutions run by minorities is not protected. The only right that is protected is under Article 31, namely, all minorities shall have the right to establish and administer all educational institutions of their choice. The properties of rich institutions, however, can be taken over without the payment of adequate compensation.

திரு. செ. முத்துசாமி: அதாவது பிராபர்டியை எடுத்துக்கொள்ளும் உரிமையைச் சொல்கிறார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். மற்றவர்கள் நிர்வாகத்தில் தலையிட முடியாது. அரசாங்கம் பில் தயார் செய்ததில் சிக்கல் இருக்கிறது. மைனாரிடிகளுக்கு ரைட் இருக்கிறது என்பதால் சட்டம் செய்ய முடியாமல் இருக்கிறது. அதனால் அவர்களை விட்டுவிட்டுத்தான் ஆசிரியர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர வேண்டியிருக்கிறது என்றால், அந்தச் சட்டமே தேவையில்லை என்பதைச் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர்களையும் சேர்த்துத்தான் சட்டம் செய்ய வேண்டும். அடுத்து பிப்ரவரி மாதத்தில் நடை பெறவிருக்கும் பட்ஜெட் கூட்டத்தில் இது நிச்சயமாக வந்துவிடும் என்று நம்புகிறேன். பல சட்டங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. மீண்டும் நினைவுபடுத்துகிறேன். மைனாரிடி என்பவர்கள் மெஜாரிடி பள்ளிகளைத் தமிழ் நாட்டில் நடத்துகிறார்கள். மைனாரிடியினர் மெஜாரிடி வர்க்கத்தினரை பள்ளிகளில் "அப்பாயிண்ட்" செய்திருக்கிறார்கள். அதன் மூலம் ஆசிரியர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. "மாஸ்டர் சர்வண்ட் ரிலேஷன்ஷிப்" பற்றி சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பாகியிருக்கிறது. ஆசிரியர்கள் நலன் காக்கப்படும் வகையில் பரிசிலனை செய்து நம்முடைய மாநிலத்தின் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புக்கான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இந்த நேரத்தில் நி]னூட்ட விரும்புகிறேன். அடிப்படை உரிமைகள் பறிபோகவில்லை. வசதி பெற்றவர்கள் வசதி அப்படியேதான் இருக்கும் என்று பார்லிமெண்டில் பலமுறை ஏடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திடீரென்று சொத்துக்களையும் தொழில் நிறுவனங்களையும் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு அவசியம் வருமானால், அந்த அளவுக்கு எடுத்த எடுப்பிலேயே செய்ய வேண்டியிருந்தால், திரு. தாமோதரன் போன்றவர்களை அங்கே போட்டு நீங்களே அதைச் செய்யுங்கள் என்று சொன்னால், நடக்குமே தவிர, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதில் காலத்தாழ்வு ஏற்படத்தான் செய்யும். டைரக்டிவ் பிரின்சிபிள்ளை நடைமுறைப்படுத்த பல ஆண்டுகள் ஆகுமென்று சொன்னார்கள். அரசு மனம் வைத்தால் 10 ஆண்டுகளில், அதை அடைய முடியும். திரு. தாமோதரன் அவர்களைப் போன்றவர்கள் தாங்கள் மட்டுமே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்திலிருந்து, சட்ட அமைச்சர் சொன்னதைப் போல, வேறு தன்மையில் நினைக்கிற தன்மை அவர்களுடைய உள்ளத்தில் வருமானால், இந்த நன்மை கிடைப்பது விரைவுபடுத்தப்படும். உங்களுக்குள்ள திறமையை உங்களை மட்டும் பாதுகாத்துக் கொள்வதில் பயன்படுத்

1st February 1972] [திரு. செ. முத்துசாமி]

தாமல் மக்களுக்கு நன்மை செய்யும் விதத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு நாங்கள் இல்லாதவர்கள் எங்களுக்கு வேண்டுமென்று கேட்
கத்தான் தெரியுமே தவிர வேறு தெரியாது. ஆனால் இருக்கிறவர்கள் அவற்
றைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் கெட்டிக்காரத்தனமாக நடப்பார்
கள். கெட்டிக்காரர்களை நம்பி மற்றவர்கள் இருக்கிறார்கள். ஆகையால்
நீங்கள் இருக்கிறவர்கள் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று அரசு கேட்கிறது.
இல்லாவிட்டால் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி இந்த சந்தர்ப்
பத்தை வழங்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்
கிறேன்.

டெபுடி சேர்மன்: தலைவர் அல்ல, நேரடியாகச் சொல்வது தலைவரைச்
சொல்வதைப் போல் இருக்கிறது.

டெபுடி சேர்மன்: துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது
மாண்புமிகு துணைத் தலைவரைக் குறிப்பிடுவதாக இல்லை என்று திருத்திக்கொள்
கிறேன். இந்தக் கருத்துக்கு எதிராகச் சொன்னவர்களைத்தான் நான் குறிப்
பிட்டேன்.

திரு .செ. முத்துச்சாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது
றைக்குச் சபை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள 25-வது திருத்தம்
இங்கே சபையின் விவாதத்திற்கு வராது என்றுகூட நினைத்திருந்தேன். அப்படி
யில்லாமல், மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கும் இது விவாதத்திற்கு அனுப்
பப்பட்டது மகிழ்ச்சிக் குரியதாகும். 24-வது திருத்தம்பற்றி விவாதம் நடந்து
கொண்டிருந்தபோது, அப்படிப்பட்ட அபிப்பிராயம் இங்கே தெரிவிக்கப்
பட்டது. 24-வது திருத்தம் நிறைவேறி, அதை அடிப்படையாகக் கொண்டு அல்
லது அந்தத் திருத்தம் நிறைவேறியதால்தான், இந்த 25-வது திருத்தத்தினைப்
பார்லிமெண்டில் கொண்டுவர முடிந்தது. இப்படிப்பட்ட திருத்தங்கள்கூட
சற்றுக் காலம் தாழ்ந்து வந்தது என்றுகூடச் சொல்லலாம். 1950-ம் ஆண்டில்
ஜமீன் ஒழிப்புச் சட்டங்கள் போன்ற சட்டங்கள் பல மாநிலங்களிலும் நிறை
வேறி வந்த காலத்திலே சுப்ரீம் கோர்ட்டு அப்படிப்பட்ட சட்டங்களையெல்லாம்
ரத்து செய்ய முற்பட்டது. நாம் அரசியல் சட்ட ஷரத்துக்களை ஒப்புக்கொண்டு,
அதன்படி ஜமீன் ஒழிப்புச் சட்டங்களையெல்லாம் ரத்து செய்வதற்கான ஒரு
நிலைமை ஏற்பட்டபோது, 4-வது அரசியல் நிர்ணய சட்டத்தின் திருத்தம்
வந்தது. இங்கே நம் முன் விவாதத்திலுள்ள 25-வது திருத்தத்திலுள்ள
பொருளோடுகூடிய திருத்தம் அப்போதே வந்திருக்க வேண்டுமென்று நண்பர்
திரு. ஆறுமுகசாமி அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். மக்களின்
வளர்ச்சி, மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சி எப்படி வளருகிறதோ, அதற்குத்
தகுந்தபடி அந்தந்தக் காலத்தில் அதற்குரிய சட்டங்கள் உருப்பெற்றுத்தான்
ஆக வேண்டும். இதை யாரும் மறுக்க முடியாது. 1950-ம் ஆண்டிலே இவ்
வளவு வேகமான மனப்பான்மையோடுகூடிய ஒரு திருத்தத்தினைக் கொண்டு
வந்திருந்தால், அப்போது ஆளும் கட்சியாக இருந்தவர்கள்கூட இதை ஒப்புக்
கொண்டிருக்க மாட்டார்கள். நாளுக்குநாள் தேசத்தில் சோஷலிச சமுதாய
வளர்ச்சி எண்ணம் அதிகமாகி, இன்றுள்ள நிலைமையில் அதற்கு எதிர்ப்புச்
சக்திகள் அதிகமாக இல்லாமல், குறைய ஆரம்பித்தன. இந்த நிலைமையில்
தான் இந்தச் சட்டம் நம் முன்னால் வந்திருக்கிறது. சரியான காலத்தில்
இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. ஆனால் இதே நேரத்தில் ஒரு சிலர் வருத்தப்
படக் கூடும். 'சுதந்திரம் பெற்ற 25 ஆண்டுகளில் 24 திருத்தங்கள் வந்து
விட்டன என்று. அப்படிக் கூறிக்கொள்வதில் அர்த்தமில்லை என்றே



1st February 1972]

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். '200 ஆண்டுகள் ஆயிற்று அமெரிக்கா
சுதந்திரம் பெற்று. அந்த நாட்டில்கூட அரசியல் சட்டத்திற்கு 24 திருத்தங்
கள்தான் வந்திருக்கின்றன. ஆனால் நமது நாட்டில் 25 ஆண்டில் 25 சட்டங்கள்
திருத்தங்கள் ரூபமாக வந்திருக்கின்றன' என்று அப்படி ஒப்பிட்டுப் பேசுவது
பொருத்தமாக இராது. நமது மக்கள் சமுதாயத்தின் மனப்பான்மை அதிக
மாக வளர்ச்சியுற்று வருகின்றது. தவிர இது மக்கள் அரசு, குடியரசு. மக்க
ளுடைய மனப்பான்மைக்குத் தக்கவாறு அவ்வப்பொழுது திருத்தங்களைச்
செய்வதற்கு குடியரசு மக்கள் அரசு கடமைப்பட்டிருக்கிறது. இதில் இன்னும்
ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஜனநாயகத்தில் தவறான முறையில்
ஏதாவது ஒரு சட்டத்தை அல்லது சட்டத் திருத்தத்தினை நிறைவேற்றினால்,
இன்றைக்கு இப்படிப்பட்ட திருத்தங்களை நிறைவேற்றுகின்றவர்கள் அடுத்து
வரும் ஐந்தாண்டில் மீண்டும் மக்கள் முன்பு சென்று அவர்களிடம் ஓட்டு
வாங்குவதற்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அப்போது
அவர்கள் மக்கள் ஆதரவினைப் பெற முடியாது. எனவே ஜனநாயக ஆட்சியில்
இப்படிப்பட்ட திருத்தங்களை அடியோடு மறுப்பது, எதிர்ப்பது என்பது
கூடாது. எதிர்க்க வேண்டியது தான். ஆனால் அவர்கள் பொறுப்போடு
நடந்துகொள்ள வேண்டும். நடந்துக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை
யோடுதான் இதை நிறைவேற்றுகிறோம். இதில் கொடுக்கப்பட்டுள்ள அதிகா
ரத்தை, நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னது போல், துஷ்
பிரயோகம் செய்வதற்கு இடமிருக்கும். ஏனென்றால் நஷ்டஈடு 'ஈக்விட்டபிள்
காம்பென்சேஷன்' என்ற வார்த்தைகள் அடியோடு எடுக்கப்பட்டுவிட்டன.
இப்போது ஒரு தொகை என்று சொல்லுகிறோம் ஒரு தொகை என்று சொல்லி
அந்தப் பொறுப்பை யாரிடம் கொடுக்கிறோம்? மக்களால் தெரிந்தெடுக்கப்
பட்ட, மீண்டும் மக்கள்முன் வந்து ஓட்டுக் கேட்கக்கூடியவர்களிடத்தில்
கொடுக்கிறோம். எனவே நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, நஷ்ட ஈடு அடியோடு எடுக்கப்
பட்டிருக்கிறதா அல்லது நஷ்ட ஈட்டை அரசு விரும்பும் அளவிற்குக் கொடுக்க
லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதா என்ற விளக்கத்தினை அறிய விரும்பு
கிறேன்.

திரு. கே. ராஜாராம்: 'நஷ்ட ஈடு' என்ற வார்த்தை அடியோடு எடுக்கப்
பட்டுவிட்டது. ஆனால் எடுத்துக்கொள்ளப்படும் சொத்துக்காகக் கொடுக்கப்
படும் தொகை நஷ்ட ஈடு என்று சொல்லப்படாமல், 'ஒரு தொகை' என்று
அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை நஷ்ட ஈட்டிற்காகத் தான்
எனவே நஷ்ட ஈடு கொடுக்காமல் யாரும் எதையும் எடுத்துக்கொண்டுவிட
முடியா[illegible].

அடுத்து, இன்னொரு தவறான அபிப்பிராயத்தினை மாற்றிக் கொள்ள
வேண்டும். இந்தத் திருத்தத்தின் மூலம் அரசுக்காக, மக்கள் சமுதாயத்திற்
காக சொத்துக்களை ஆர்ஜிதம் செய்து கொள்ள முடியுமே தவிர, தனிப்பட்ட
கம்பெனிகள் அல்லது தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்காக இப்போது அரசு
ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறதே, அப்படிப்பட்ட சொத்துக்களுக்கு இந்தத்
திருத்தம் செல்லாது. அரசாங்கத்திற்க்காகத்தான் சொத்துக்களை இப்படிப்
பட்ட முறையில் ஆர்ஜிதம் செய்ய முடியுமே தவிர, கம்பெனிகளுக்காக
ஆர்ஜிதம் செய்துகொடுக்கும்போது இது செல்லாது. எடுத்த எடுப்பிலேயே
no property shall be . . என்று இருக்கிறது. எனவே தனிப்பட்ட
compulsarily acquired on requisitioned save for a public purpose

[1st February 1972

ஸ்தாபனங்களுக்காகச் சொத்துக்களை அரசு ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறது. அதற்கெல்லாம் இந்தத் திருத்தம் செல்லாது. அவற்றுக்கு 'காம்பென்ஸேஷன்' கொடுக்க வேண்டும் ஆனால் மக்களுக்கா, அரசுக்காக சமுதாயத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்படும்போது தான், 'அமௌண்ட்' என்று போடப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது பேசும் போதுகூட, மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு பெரிய குறையினைச் சொன்னேன். 10 லட்சம் ரூபாயில் கட்டப்பட்ட ஒரு பாலத்தினை மூன்று ஆண்டுக் காலம் உபயோகத்திற்குக் கொண்டுவர முடியாமல் அப்படியே வைக்கவேண்டிய ஒரு நிலை அங்கே ஏற்பட்டது. அந்தப் பாலத்திற்கு வரும் 'அப்ரோச் ரோடில்' 40 சென்டு நிலத்தில் யாரோ ஒரு மனிதன் ஒரு மடத்தின் பெயரால் உட்கார்ந்துகொண்டு, அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யவொட்டாமல் தடுத்துக்கொண்டிருந்தான். அதுபற்றி அப்போது பேசும்போதுகூட முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகவும் வற்புறுத்திக் கூறினேன். இப்போது ஆறு மாதத்திற்கு முன்புதான் அது ஒருவாறு முடிந்து, இப்போது அந்தப் பாலம் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. இதுமாதிரி பல சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அரசாங்கத்தின் ஒரு திட்டமே ஒரு தனி நபருடைய பிடிவாதத்தினால் நின்று விடக்கூடிய நிலை ஏற்படுவது என்பது தவறாகும். இது சரியில்லை. இந்த நிலை இப்போது மாற்றப்படுகிறது. இப்படிப்பட்ட மாற்றங்களுக்காக நாம் யாரும் பயப்படத் தேவையில்லை ஜனநாயக ஆட்சி நடக்கிறது. ஆனால் இந்தத் திருத்தத்தின்படி, பொதுவாக ஏழை எளியவர்களுடைய, சிறு விவசாயிகளுடைய சொத்துக்களை ஆர்ஜிதம் செய்வது என்று வரும்போது, அவர்களுடைய வாழ்விற்குப் போதுமான அளவிற்குத் தொகை கொடுக்க வேண்டும். இதை மாநில அரசுதான் கவனிக்க முடியும் என்ற முறையில், நல்ல வேளையாக இந்தத் திருத்தத்தின்கீழ் மாநில அரசும் சட்டம் செய்யலாம் என்று குறிப்பிட்டிருப்பதோடுகூட, அப்படிச் செய்யும் அந்தச்சட்டம்." The amount which may be fixed by such law or which may be determined in accordance with such principles." என்று அதற்காக ஒரு 'பிரின்ஸிபிள்' வகுக்கப்பட்டு சட்டம் செய்வதற்கும் மாநில அரசுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய நன்மையாகும். காரணம் மிகச் சிறிய விவசாயிகள் ஏழைகளுடைய சொத்தை, அத்தியாவசியமாக, அரசுக்காக எடுத்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டால், அதற்கு நஷ்டஈட்டுப் பணம் போதுமானதாக இருக்கும்படி நாம் 'ப்ரின்ஸிபிள்' வகுக்க வேண்டும், அதைச் சட்டத்தில் கொண்டுவர வேண்டும் என்று இருக்கிறது. இந்த அரசியல் சட்டத் திருத்தத்தால் மட்டும் நமது சொத்துக்களை ஆர்ஜிதம் செய்துவிட முடியாது. மேலும் நாம் ஒரு சட்டத்தினை மாநிலச் சட்ட மன்றத்தில் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அப்போது அதற்கு என்று 'ப்ரின்ஸிபிள்' வகுக்கும்போது, இதற்குப் போதுமான பாதுகாப்பு அளிக்க வேண்டும். இதைத்தான் பார்லிமெண்டில்கூட எங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வற்புறுத்தி அதற்கு ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டது. அந்தத் திருத்தம் கடைசியில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அப்போதும் இப்படி ஏழை எளியவர்களுடைய சொத்துக்களை ஆர்ஜிதம் செய்யும்போது, அவர்களுக்குப் போதுமான "நஷ்ட ஈடு" கொடுக்கும்படி சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். "ப்ரின்ஸிபிளில்" வகை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அது போன்று இப்போதும் கேட்டுக் கொள்ளுகிறேன். மாநிலத்தில் இதற்கான துணைச்சட்டம் நிறைவேற்றும்போது, அதற்கான பிரின்ஸிபிளை வகுக்கும்போது, இதைக் கருத்தில் கொள்ள



[திரு. கே. ராஜாராம்] [1st February 1972

வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை நாங்கள் பொதுவாக ஆதரிக்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தச் சட்டத்தை நம்முடைய மாநில மன்றங்களின் சார்பிலே ஆதரித்து மத்திய அரசுக்கு அனுப்பவேண்டிய இந்தத் தீர்மானத்திற்குப் பெரும்பாலும் ஆதரவான கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருவதாகும். நம்முடைய தமிழ்நாட்டிலே மட்டுமல்லாது இந்திய நாட்டிலேயே இது போன்ற ஒரு புதிய முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்று இந்திய நாட்டிலே பெரும்பான்மையான மக்கள் விருப்பம் தெரிவித்ததையும் அந்த முடிவை அண்மைக்காலத் தேர்தலிலே அவர்கள் அறிவித்ததையும் நாடு அறியும். இந்தத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, நஷ்ட ஈடு கொடுப்பதைப் பற்றி. இதிலே புதிதாக ஏற்கெனவே இல்லாத ஒன்றை நாம் கொண்டுவருவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். பல ஆண்டுகளாக உச்ச நீதிமன்றம் உட்பட எந்தத் தீர்ப்பை அவர்கள் தந்து வந்தார்களோ, அந்தத் தீர்ப்பிற்கு மாறாக அண்மைக் காலத்திலே வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டபோது, ஒரு புதிய தீர்ப்பினைத் தந்தார்கள். அதன் அடிப்படையிலேதான் இந்த நஷ்ட ஈட்டைப் பொறுத்த அளவிற்கு, இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. ஏற்கெனவே இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கிற பொருளை உள்ளடக்கித்தான் இந்தத் திருத்தம் அமைக்கப்பட்டிருக்கிறது, வார்த்தைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன என்று வலியுறுத்த ஆசைப்படுகிறேன். நஷ்ட ஈட்டைப் பொறுத்த அளவிற்கு; நஷ்ட ஈடே கொடுக்க வேண்டாமென்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் கொடுக்கப்படுகின்ற நஷ்ட ஈடு எவ்வளவு என்று தீர்மானிப்பதற்கு மக்கள் மன்றங்களுக்கு உரிமை வேண்டும். அதைத்தான் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அதைத் தெளிவாக்குவதற்காகத்தான் இந்த 31-வது பிரிவில் இரண்டாவது பகுதியிலே திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே, காம்பென்சேஷன், நஷ்ட ஈடு என்று உபயோகப்படுத்தியிருந்தாலும், இதை நீதிமன்றங்களிடத்திலே கொண்டு சென்று இது போதுமா, போதாதா adequate or not என்பதைப்பற்றிக் கேட்கக்கூடியதாக, பிரச்சினைகளை எழுப்பக்கூடியதாக இருந்தது. அதைப்பற்றிக் கொஞ்சம் தெளிவாக்குகிறோம். நஷ்ட ஈடு கொடுக்காமல் சட்டங்கள் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்தத் திருத்தம் வருவதாக யாராவது நினைத்திருந்தால், அது தவறு என்று நினைவு படுத்த ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வரும்போதுதான், நியாயமான சட்டங்களா, சட்டங்களில் சொல்லப்பட்டிருக்கிற இந்த நஷ்ட ஈட்டுத் தொகைக் கொள்கை சரிதானா, சமுதாயம் ஏற்றுக்கொள்ளத்தக்கதுதானா என்பதையெல்லாம் விவாதிக்க முடியும். இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு, இதிலே "நஷ்ட ஈடு" என்ற வார்த்தை எடுக்கப் பட்டிருந்தாலும், அதற்காக நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது என்று பொருள் இருப்பதாக எண்ணவேண்டிய அவசியமில்லை. நஷ்ட ஈடு என்ற வார்த்தை இருக்கிறது என்ற காரணத்தினால், இந்த நீதிமன்றங்கள் அதற்குப் புதிய வியாக்கியானங்களைக் கொடுத்துக் கொண்டு போவது வாடிக்கையாக அமைந்திருப்பதை மாற்றுவதற்காகத்தான்

1st February 1972] [மாண்புமிகு திரு. செ. மாதவன்]

"அன்டிமான்டு" என்ற வார்த்தையைப் போட்டு, சட்டத்தில் இவ்வளவு தொகை என்று சொல்லலாம் என்று இருக்கிறது. அது மட்டும் போடவில்லை. தொகையைச் சொல்லாமல் ஒரு கொள்கை வரைமுறை வகுத்து அந்தக் கொள்கையின் அடிப்படையிலே நஷ்ட ஈடு தீர்மானிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வழியிலே புதிய சட்டங்கள் வரும்போது சட்டமன்றங்கள் பாராளுமன்றங்கள் பின்பற்ற வேண்டுமென்ற முறையில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே யாரும் தவறு கண்டுபிடிக்க முடியாது. எந்த உச்ச நீதிமன்றம் புதிய தீர்ப்பைத் தந்ததோ அதே நீதிமன்றம் பல ஆண்டுக் காலம் அதற்கு முரணான கருத்துக்களைப் பின்பற்றி வந்திருக்கிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது. முதல் அம்சத்தைப் பற்றி ஆட்சேபிக்க முடியாது. நம் நாட்டு சமுதாயம் ஏற்றுக்கொண்ட கொள்கையாகும். இரண்டாவது அம்சம் புதிய அம்சம். அரசியல் அமைப்புச் சட்டத்திலே அரசு நெறிகள், கோட்பாடுகள் என்று சொல்லி, அரசு சமுதாயத்திற்கு என்ன கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்பதைப்பற்றி "டிரக்டிவ் பிரின்சிபல்ஸ்" என்ற பகுதியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றிய காலத்திலேயே இந்த அரசியல் நெறி முறைகளை, கோட்பாடுகளை மக்களுக்கு நிறைவேற்றுவதற்கு முனைந்து செயல்படுகிற போது, அதற்கான திட்டங்களை அரசு செய்கிறபோது, சட்ட மன்றங்கள் உருவாக்குகிறபோது, அப்படிக் கொண்டுவருவதைத் தடுப்பதற்கு நீதி மன்றத்திற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், இந்தக் கோட்பாடு பகுதியிலே "டிரக்டிவ் பிரின்சிபில்ஸ்" பகுதியிலே கூறப்பட்டிருப்பதிலிருந்து சட்டப்படி நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை என்று வாதிடுவதற்கு வழி இருந்தது. ஆகவே தான் இந்தப் பகுதிக்கும், கோட்பாடு, உரிமைகள் என்ற பகுதிக்கும் முரண்பட்ட நிலை இருப்பதைச் சுட்டிக்காட்டி உச்ச நீதிமன்றத்தில் தடுத்து நிறுத்த முடிகிறது. அதைத் தடுத்து நிறுத்தத்தான் 31 (சி) என்ற புதிய பிரிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. புதிய பிரிவின் அடிப்படையிலே அரசு நெறி முறைகளை, கொள்கை, கோட்பாடுகளை, அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டவைகளை நிறைவேற்றுகிற முயற்சிகளைப் பற்றி நீதிமன்றங்களில் வாதிட முடியாது, இது அடிப்படை உரிமைகளுக்கு முரணானது என்று வாதிட முடியாது. இதுதான் வரலாற்றுச் சிறப்பு மிக்க முயற்சியாகும். பல ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த நாட்டு மக்களுக்கு எவை எவை தேவைகள் என்று கருதினார்களோ, எவைகளை அரசியல் அமைப்புச் சட்டத்திலே குறித்துத் தந்திருக்கிறார்களோ அவைகளைத் தான் இன்றைய ஆட்சியாளர்கள் நிறைவேற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு முன் வந்திருக்கிறார்கள். ஏதோ இன்றைய ஆட்சி திடீரென்று யாருடைய சொத்தையோ பறிப்பதற்காக, தொழிற்சாலையை எடுப்பதற்காக ஏற்படுத்தியிருக்கிறது என்று யாரும் ஊகிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஒரு பிரிவிலே அதிகாரத்தை எடுத்த காரணத்தினால், அடிப்படை உரிமைகள் அத்தனையும் பறிக்கப்பட்டுவிடும் என்ற சந்தேகம் சொல்லப்பட்டது. நியாயமான சந்தேகம்தான். இதைப்பற்றி இப்போது எண்ண வேண்டிய அவசியமில்லை. இதற்கான சட்டங்கள் வரும்போது இந்த நாட்டு மக்கள் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று நாங்கள் நம்பத் தயாராயில்லை. இந்த ஆட்சி அதில் நம்பிக்கை வைக்கத் தயாராயில்லை. மக்கள் பேச்சுரிமை



1st February 1972] [மாண்புமிகு திரு. செ. மாதவன்]

யைத் தடுப்போம், சொத்துரிமையைத் தடுப்போம், இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காகச் சொல்லாமல் கூட தடுப்போம் என்று யாராவது மத்தியிலோ அல்லது மாநிலத்திலோ சொல்வார்களானால், அதை ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள், அடிப்படை உரிமைகளில் நம்பிக்கை உள்ளவர்கள், இந்த நாட்டிலே உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மக்கள் சக்தி நிச்சயம் அதற்கு எதிராக எழும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அப்படிப்பட்ட அரசு என்ற ரீதியில் அப்படிப்பட்ட பயம் யாருக்கும் தேவையில்லை என்று இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்த முயற்சிகளை எடுக்கும்போது நம் நோக்கமெல்லாம் இந்திய நாட்டில் இப்படிப்பட்ட பொருளாதார அரசியல் அமைப்பு இருக்க வேண்டுமென்பது தான். சமத்துவ அரசியல் வேண்டுமென்று நாம் எல்லோரும் கருதுகிறோம். ஏழைகளுக்கு வாழ்வு அளிக்கப்பட வேண்டுமென்று ஆசைப்படுகிறோம், பொருளாதார அதிகாரங்கள் சிலரிடத்தில் குவிந்து சமுதாயத்திற்கு விரோதமான சூழ்நிலை உருவாவதைத் தடுக்க வேண்டுமென்று எண்ணுகிறோம். இதற்காகத் தான் இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுகிறோமேயொழிய, வேறு நாடுகளில் நடப்பதைப் போல பலருடைய சொத்தை அரசாங்கத்தின் உரிமையாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் செயல்பட மாட்டார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட ஒரு "டோலிடெரியானிசம்" சர்வாதிகார அமைப்பை இந்த மாநிலத்திலும் சரி, இந்திய நாட்டிலும் சரி, யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட முயற்சிகள் எடுப்பதாக யாரும் கருத வேண்டாமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் இன்னொரு துருவத்திலேயிருந்து தனியார் ஆதிக்கம்தான் நிலைநாட்டப்பட வேண்டும், பொருளாதார ஆதிக்கம் சிலரிடத்தில் குவிந்து, அவர்கள் நினைத்தால் எந்த அரசையும் ஆட்டிப்படைக்கலாம், எந்தக் கட்சியையும் தன்பக்கம் ஈர்க்கலாம் என்று கருதினால், அப்படிப்பட்ட அரசியல் பொருளாதார சமுதாய அமைப்புக்கு இந்தக் கட்சியினரும் இந்த நாட்டு மக்களும் ஒருக்காலும் இடம் தரமாட்டார்கள் என்று இந்த நேரத்தில் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். இந்தக் கொள்கை அடிப்படையில் சிந்தித்துப்பார்த்தால், இப்படிப்பட்ட அதிகாரத்தை எடுத்துக்கொள்வது எந்தவித பயத்தையும் யாருக்கும் விளைவிக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீதிமன்றங்களைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. இந்த அரசைப் பொறுத்தமட்டிலும், தமிழ் நாட்டு மக்களின் பாரம்பரியத்தைப் பொறுத்த மட்டிலும், நீதிமன்றங்கள் சுதந்திரமாக இயங்குவதைக் கிஞ்சிற்றும் தடுக்க முயற்சிப்பதை யாரும் விரும்ப மாட்டார்கள். ஜனநாயக அமைப்பு முறையை விரும்பும்போது, நீதித்துறை தனித்து நின்று செயல்பட்டு மக்கள் உரிமைக்காக வாதாடுகிற கட்சி தான் ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கு உறுதுணையாக அமையும் என்பதில் இந்த அரசுக்கு முழு நம்பிக்கை உண்டு. சுதந்திரம் என்றால் என்ன என்பதிலேதான் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களின் சுதந்திரம் என்ற போர்வையிலே நாட்டு மக்களின் உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்று கருதினால் அது தடுக்கப்பட்டாக வேண்டும். இங்கு ஒரு யோசனை சொல்லப்பட்டது. பொருளாதாரம் ஒரே இடத்தில் குவிவதை நீங்கள் வரி போடுவதன் மூலம், சட்டத்தின் மூலம் தவிர்த்து விடலாமே என்று. அந்த முறையைத் தான் மத்திய அரசு இதனை நாளும் பின்பற்றி வந்தது இப்போதும் பின்பற்றி வருகிறது. அந்த யோசனையைக் கூறிவிட்டு, அவர்களே

*[மாண்புமிகு திரு. செ. மாதவன்]* [1st February 1972

கூட உதாரணம் ஒன்றும் சொன்னார்கள். டாடா, பிர்லா போன்ற பெரிய தொழிலதிபர்கள் எல்லாம் வருமான வரிச் சட்டத்தின்கீழே வராமல் தப்பித்துக் கொள்கிறார்களே என்று குறிப்பிட்டார்கள். ஆனால் வரி போட்டு மட்டும் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற கொள்கையை இந்த நாடு ஏற்றுக்கொள்ளாது, இந்த அரசும் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை, வரிக்கு அப்பாற்பட்டும் சில முயற்சிகள் கள் எடுக்கிற அடிப்படையிலேதான் இந்த நாட்டில் ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற கருத்தை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். நீதிமன்றங்கள் சுதந்திரமாக இயங்கலாம். எப்படி? வெள்ளைக்காரன் ஆட்சி இருந்த காரணத்தால், அப்போதிருந்த நீதிமன்றப் பாரம்பரியத்திலே நமக்குப் பழக்கப்பட்ட காரணத்தால், அப்படிப்பட்ட சுதந்திரம் நீதிமன்றத்துக்கு இருக்க வேண்டுமென்று யாராவது கருதுவார்களானால், அது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நீதிமன்றங்களும் நம்முடைய சட்டமன்றங்களைப்போல் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குட்பட்டுத்தான், நாம் இயற்றுகின்ற சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் செயல்பட முடியும்; அதுவரை தான் சுதந்திரம் இருக்கும் என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். உதாரணத்துக்குச் சொல்லுகிறேன். 1948-ஆம் ஆண்டு, சுதந்திரத்திற்குப் பிறகு, ஜமீன்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்ற அருமையான தத்துவத்தை இந்த நாட்டு அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முன்வந்தாலும், இன்று வரை, சில மாதங்களுக்கு முன்னால் வரை ஒரு தனி நபரால் நீதிமன்றங்களின் மூலமாக தன்னுடைய ஜமீனை இந்த அரசு எடுக்காமல் பார்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இந்த நாட்டில் இருக்குமானால், அதற்கு நீதிமன்றங்கள் துணையாக இருக்கின்றன என்று கூடச் சொல்லமாட்டேன், ஒரு வாய்ப்பாக அமையுமானால், அதை ஒரு அரசு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். அதைப் போல 1963-ம் ஆண்டில் லட்சக்கணக்கான மக்களுக்குப் பயனளிக்கிற இனாம் ஒழிப்புச் சட்டம் வந்தது. அதனாலே பாதிக்கப்படுகிறவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் ஒரு சிலர் தான். ஆனால் சில மாதங்களுக்கு முன்னாலே வரை அந்தச் சட்டத்தைத் தமிழ் நாட்டிலே அமுல் நடத்த முடியாத சூழ்நிலையை உருவாக்க முடிந்தது என்று எண்ணிப் பார்க்கும்போதுதான் நீதிமன்றங்கள் என்ன சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்பதில் நாம் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. நீதிமன்றங்களின் சுதந்திரம் நாம் செய்யும் சட்டங்களுக்கு விளக்கம் கூறுவதற்குத் தான், அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டு சட்டம் இயற்றப் பட்டிருக்கிறதா என்று விளக்கும் தருவதற்குத்தானே ஒழிய, இந்த நாட்டு மக்களுக்கு 'எப்படிப்பட்ட சமுதாய அமைப்பு வேண்டும், எப்படிப்பட்ட பொருளாதாரம் அமைய வேண்டும் என்று சொல்வதற்கு நீதிமன்றத்துக்கும் எந்த நீதிபதிக்கும் உரிமையில்லை என்பதை நாம் உணர்ந்தால், நீதிமன்றங்களுக்கு இருக்கிற உரிமைகளை எடுத்துவிடுவதாகக் கற்பனையில் பேசுவது தவிர்க்கப்பட முடியும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட எந்த முயற்சிக்கும் இந்த அரசாங்கம் இடம் கொடுக்காது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நீதிமன்றங்கள் மக்களுக்குத் தேவையான கொள்கைகளை வகுக்க முடியும். அப்படி வகுக்கப்பட்ட கொள்கைகள் பாரபட்சமற்ற முறையில் அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதில்தான் நீதி



1st February 1972] *[மாண்புமிகு திரு. செ. மாதவன்]*

மன்றங்கள் கவனமாக இருக்க வேண்டும்; மக்கள் மன்றமும் கவனமாக இருக்கிறது. அதைக் காரணம் சொல்லி நீதிமன்றங்களை அவமதிக்கிறோம், அவற்றின் அதிகாரங்களைப் பிடுங்க ஆசைப்படுகிறோம் என்ற வாதம் பொருத்தமுடைய வாதம் என்று ஒப்புக்கொள்ள முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆக இந்த இரண்டு அம்சங்களும் நாட்டு மக்களுக்குத் தேவையானவை. இந்தத் திருத்தத்தின் அடிப்படையில் புதிய புதிய கொள்கைகள் வகுக்கப்படும்போது, இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான கொள்கைகளாக வகுக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்த அளவில், எந்தச் சட்டமும் யாருடைய உரிமையையும் கட்சி நோக்கத்துடனோ அல்லது தனிப்பட்ட நோக்கத்துடனோ பறிக்க முயலாது; அதற்கு மாறாக சமுதாயத்தின் நன்மையைக் கருதி, நாட்டு நன்மையைக் கருதித்தான் இந்தத் திருத்தச் சட்டத்தின் கீழ் நாம் பெறுகிற அதிகாரங்களைப் பயன்படுத்தி புதிய சட்டங்கள் உருவாக்கும், அந்தச் சட்டங்களின் அடிப்படையில் சமத்துவ சமுதாயம் உருவாவதற்கு வழி வகுக்கப்படும். அதற்காகத்தான் நாம் பஸ்களைத் தேசியமயமாக்கினோம். உச்சவரம்புச் சட்டம் கொண்டு வருகிறோம். இப்படிப் பட்ட சட்டங்கள் எல்லாம் நாட்டுக்குத் தேவை என்று கருதுகிற காரணத்தாலேதான், மக்கள் மனோநிலையைப் பிரதிபலித்து அவைகளைக் கொண்டு வருகிறோமே தவிர, மக்களுக்கு எதிராகச் செயல்படமுனைவதாக யாரும் கருத வேண்டாமென்று கூறி இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக ஆதரித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" that this House ratifies the amendments to Constitution of India falling within the purview to the proviso to clause (2) of Article 368 thereof, proposed to be made by the Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 as passed by the two Houses of Parliament. "

**The Resolution was put and carried.**

## VII. GOVERNMENT BILL.

### The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972).

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I beg to move—

" That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 @ (L.A. Bill No. 1 of 1972), as passed by the Assembly, be taken into consideration ".

The Madras City Tenants' Protection Act, 1921, has been enacted to give protection to tenants, who in municipal towns and adjoining areas in the State of Tamil Nadu have constructed buildings on others' lands in the hope that they would not be evicted so long as they pay a fair rent for the land.

It has been represented to the Government that tenants who have invested large amounts in superstructures in lands taken on lease are denied the protection conferred by the Madras City

@ Printed as Appendix on page 39

Tenants' Protection Act, 1921, involving great hardship by reason of the proviso to section 12 of that Act, as interpreted by the Supreme Court in recent cases, on the ground that they had entered into contract with the landlord to surrender both the buildings and the land on the expiry of the tenancy agreement. The Government have examined the representation and after careful consideration they have decided that the protection given by the Act should be enjoyed by all tenants, irrespective of the fact whether they have entered into an agreement with the landlords containing stipulations as to the erection of buildings constructed after the date of the contract and limiting the rights under the Act. In all recent tenancy legislations a provision is made that any stipulation in a contract taking away or limiting the rights conferred by the legislation should be ineffective. To be in conformity with the trend of recent tenancy legislations and also to avoid the hardship caused to such tenants, it has been decided to omit the proviso to section 12 of the Madras City Tenants' Protection Act, 1921, with retrospective effect. The Government have also decided that provision should be made to the effect that any stipulation in any contract as to the erection of buildings erected after the date of the contract will be deemed to have been void to the extent to which such stipulation takes away or limits the rights of the tenant under Tamil Nadu Act III of 1922. Cases where the landlord has already taken possession of the land and buildings will not however be affected by the proposed measure.

In order to give effect to the above decisions, the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) has been introduced and the same is before the House for consideration.

Sir, I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN : Motion moved—

'That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972), as passed by the Assembly, be taken into consideration.'

THIRU A. R. DAMODARAN : Sir, I only wish to get certain clarifications from the Hon. Minister regarding this amendment which has been brought forward, because I wish to speak about the lands belonging to temples where we have certain amount of difficulties. Particularly in Cuddalore, Padhaleeswarar Temple has certain lands which have been taken over by persons. I do not know when exactly this Act was extended to Cuddalore Town but I think it has been extended. There are persons who have taken over lands on lease and have put up permanent structures on such lands and they are still continuing to pay the old rents that existed when they originally took them on lease. Now, Sir, I realise that it is extremely difficult to evict those people and it is not the intention of public trusts to do so. But we consider it next to impossible to maintain these lands as such and it is desired by the landlord in this case, the temple authorities, to sell the lands to the tenants for the market value that exists at present. I find in





section 9, there is a provision that if the tenant wants to buy the land, he could move the Court and get the value fixed. There does not seem to be any provision in this Act whereby the landlord can sell the land and recover the money from the tenant. The difficulty is that when the land in the very same area was sold at Rs. 15 per s.ft. in the public auction, for the temple land measuring 100 feet by 60 feet, i.e., 6,000 sq. ft., the value of which according to the present market value is somewhere near 80 to 90 thousand rupees, the temple is getting a rent of approximately 22 rupees per month from the tenant of this site. I believed, Sir, that in the interest of certain Trusts, it is necessary not to impose conditions to evict the tenants, and that is not the intention, but at least the responsibility for maintaining this land should be handed over to the tenants. I would like to know whether in this Act, this could be done or whether this could not be done. If it could not be done, the Hon. Minister should consider how it could be done so that we can gain something.

The other thing is that it has been made applicable to the City of Madras from 1955. I presume that all lands which have been leased out to tenants prior to 1955, will come under this amendment and such tenants will be given protection. There are various business establishments which have taken over lands on lease for a period of 20 to 30 years prior to 1955. When the landlord gave the lands on lease, he stipulated that after 20 years the land would revert to him so that he could increase the rent or put it to some other advantageous use. According to the amendment that has now been brought forward, am I to take it that it will no longer be possible for the landlord to evict the tenant from such premises and that the tenant will continue in perpetual occupation of this land or of course, under section 9 he can also move for purchase of this land?

I would request the Hon. Minister to clarify these points, because there are a number of landowners who are likely to be affected by this provision, both big and small. By way of clarification, I think we should know whether in the case of leases executed prior to 1955 in Madars City, it will no longer be possible for any landlord to evict any tenant whether he is using it as residential building or as business premises. These are the only clarifications, I would like to ask the Hon. Minister, Sir.

* திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான திருத்தம். இதில் நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் எழுப்பிய சந்தேகங்களை ஒட்டி நானும் இரண்டொரு விளக்கங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக இந்த டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டின்படி 1955-க்கு முன்னால் ஏற்பட்ட டெனன்ட்டுகளுக்கு மட்டும்தான் பாதுகாப்பு கிடைக்கும். 1955-க்கு பின்னால் ஏற்பட்ட டெனன்ட்சுக்குப் பாதுகாப்பு கிடைக்காது என்று இருக்குமானால், அதை Statement of objects and reasons- -ல் விளக்கியிருந்தால் நலமாக இருந்திருக்கும். மூலச் சட்டத்தை ஒட்டி இம்மாதிரிக் கொண்டுவரும் திருத்தங்களில் Statement of objects and reasons- -ல் குறிப்பிட்டால் நல்லது. நான் சட்டசபைக்கு வருவதற்கு முன்னால் இன்றைய

[Thiru A. R. Damodaran] [1st February 1972

தினம் நண்பர் திரு. தாமோதரன் அவர்களோடு உட்கார்ந்து இதுபற்றிப் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டபோது, எடுத்துக் கூறினேன். 1955-க்கு முன்னால் இருக்கும் டெனன்ட்களுக்கு மட்டும் பாதுகாப்பு இருக்கிறது என்று தெளிவாகப் போட்டிருந்தால், நலமாகவிருக்கும் என்று சொன்னேன். 1955-க்குப் பின்னால் ஏற்பட்ட டெனன்ட்ஸுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா இல்லையா என்று அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். அவசியமானால் அதற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்து கடந்த 16, 17 ஆண்டுகளில் ஏற்பட்ட அந்த டெனன்ட்களுடைய கஷ்டத்தையும் போக்க வேண்டும், அதற்கான வழியையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருப்பது திருத்த மசோதா. இதன் புராவிசோ பிரிவு ஏற்கனவே திருத்தப்பட்டிருக்கிறது. 1921-ல் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு அதற்குப் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு அவைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. அந்தச் சட்டத்திலே நாம் ஏதும் மாற்றாமல் ஒரு பகுதியை மட்டும் மறுபரிசிலனை செய்தோம். அந்தப் பகுதியின்படி அந்தச் சட்டம் ஒருவர் ஒரு இடத்தை வாங்கி அதிலே வீடு கட்டி அல்லது ஏதோ கட்டிடம் கட்டிக்கொண்டிருந்தால், அப்படிக் குடியிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது. அந்தப் பாதுகாப்பை மீறி உரிமையாளர் வெளியேறச் சொன்னால் அப்போது அவர் கோர்ட்டுக்குப் போக நேரிடும். அந்தச் சமயத்தில் நிலத்தினுடைய மார்க்கெட் மதிப்பை நான் தந்துவிடுகிறேன், அந்த நிலத்தை எனக்கே கொடுத்து விடு என்று கேட்க உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமை கொடுக்கப்பட்டதற்குப் பிறகு பன்னிரெண்டாவது பிரிவில் அந்த உரிமைக்கு மாறாக எந்த விதமான ஒப்பந்தம் இருந்தாலும் செல்லாது என்ற ஒரு பிரிவையும் போட்டு, அதற்கு ஒரு புரோவிசோவையும் போட்டு, ஆனால் அப்படிப்பட்ட ஒப்பந்தம் எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்பட்டிருக்குமானால், இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமை அந்தக் குடியிருப்போருக்குக் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு விளக்கம் கொடுக்கப்படுகிறது. 1921-ம் ஆண்டு வெள்ளைக்காரன் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டம். அதற்குப் பின்னால் அதே போல் நல்ல எண்ணத்தோடு நம்முடைய தமிழ் நாட்டில் 1955-ல் கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரொடெக்‌ஷன் ஆக்ட், 1956-ல் ஃபேர் ரெண்ட் ஆக்ட், 1960-ல் ரெண்ட் கண்ட்ரோல் ஆக்ட், பிறகு லேண்ட் சீலிங் ஆக்ட் போன்றவை எல்லாம் கொண்டுவரப்பட்டன. இப்படிப்பட்ட சட்டங்களிலே எல்லாம் பலவிதமான உரிமைகள் கொடுக்கப்பட்டன. 60/40 என்று சாகுபடி செய்கின்றவர்களுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் விகிதாசாரம் எல்லாம் நிர்ணயிக்கப்பட்டது. சட்டம் போட்டுவிட்டு சட்டத்திற்கு மாறாக ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்று சொல்வோமானால், ஏன் சட்டம் கொண்டுவந்தீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கேட்பார்கள். உழுகின்ற உழவன் எப்படியாவது கொஞ்சம் நிலத்திற்குச் சொந்தக்காரனாகத்தான் விரும்புவான். அவனை அந்தப் பிடிப்பிலிருந்து எடுப்பதற்கு இந்த வசதியான ஒப்பந்தத்தைச் செய்து கொள்கிறார்கள். சட்டத்தில் கொடுக்கப்படுகின்ற ஒரு உரிமையை மறுக்க ஒப்பந்தம் செய்துகொள்ள ஆட்படுத்தப்படுகிறார்கள். அதே போல் ரெண்ட் கண்ட்ரோல் ஆக்ட் படி குடியிருப்போரைச் சட்டத்திற்குப் புறம்பாக, சொந்தக்காரர் வெளியேற்றக் கூடாது என்று போடப்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் போட்டுக்கொண்டு குடி-



1st February 1972] [திரு. எஸ். மாதவன்]

யிருப்போரை வெளியேற்றக் கூடாது என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட உரிமை உணர்ச்சி சுதந்திரம் இல்லாத காலத்தில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. 1921-ஆம் ஆண்டு அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தால், அந்த ஒப்பந்தத்திற்கு சட்டம் இடம் கொடுத்தது. இன்று ஒப்பந்தத்திற்கு, 1970-ஆம் ஆண்டு வரையில் உயர்நீதி மன்றமும், சுப்ரீம் கோர்ட்டும் கொடுத்து வந்த விளக்கம் எல்லாம் குடியிருப்போருக்குச் சாதகமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அண்மையில் 1970-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு புதிய வியாக்கியானம் கொடுக்கப்பட்டு, அந்தச் சட்டத்திற்கே ஒரு புதிய தத்துவம் காட்டப்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் போட்டால், அந்தச் சட்டத்தின் பாதுகாப்பைப் பெற முடியாது என்று ஒரு தீர்ப்பில் ஒரு பிரிவு வந்திருக்கிறது. அதை மாற்றுவதற்கு புரோவிசோவையே எடுத்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தோம். அது மட்டும்தான் இப்பொழுது திருத்தமாக அமைந்துள்ளது. ஆகவேதான் 1955-ஆம் ஆண்டுக்குப் பின்னால், முன்னால் ஏற்பட்டதற்கு மட்டுமே என்று சொல்லவில்லை. 1955-க்குப் பின்னால் உள்ளவர்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தை எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்த காரணத்தால், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஆலோசிப்பார் என்று நம்புகிறேன்.

திரு. தாமோதரன் அவர்கள் இரண்டு சந்தேகங்களைக் கிளப்பினார். நிலச் சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்பு இல்லையே என்று கேட்டார். அவர்கள் விரும்பினால், அந்த நிலத்தினுடைய மதிப்பைக் குடியிருப்போர்களிடமிருந்து வாங்கிக்கொண்டால், வெளியேற்ற வேண்டிய சிக்கலான பிரச்சினையிலிருந்து தடுத்துக்கொள்ளலாம். இந்தச் சட்டத்தின்படி டெனன்ட்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பது எண்ணம். நிலச் சொந்தக்காரர்களுக்குப் பாதகம் ஏற்படக்கூடாது என்பதற்காக 1960-ம் ஆண்டு ஒரு திருத்தம் போடப்பட்டு அந்தத் திருத்தத்தின் மூலமாக அந்த நிலத்திற்குள்ள சந்தை மதிப்பை (மார்க்கெட் வேல்யூ) சொந்தக்காரர்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்ட அமைச்சர் என்ற முறையில் அல்லாமல் வழக்கறிஞர் என்ற முறையில் என்னை யோசனை கேட்டால், அந்தக் கோவில் நிர்வாகிகள் உடனடியாக சூட் போட்டால் நடைபெறலாம் என்று தெரிவித்துக்கொள்வேன். இந்த சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், என்னென்ன பாதுகாப்புகள் இருக்கின்றன என்பதை முன்பே விளக்கிவிட்டேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில், கொள்கை அளவில், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

**Clauses 2 to 5, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.**

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972), as passed by the Assembly, be passed".

MR. CHAIRMAN : The question is—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill 1972 (L.A. Bill No. 1 of 1972) as passed by the Assembly, be passed".

The motion was put and carried and the Bill was passed.

MR. CHAIRMAN : The House will now adjourn *sine die*.

The House then adjourned *sine die*.

## VIII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. *Statutory Rules and Orders.*

26. Notification issued with G.O. Ms. No. 1617, Home, dated the 16th June 1971, in regard to an amendment to the Tamil Nadu Motor Accidents Claims Tribunal Rules, 1961. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

### B. *Reports, Notifications and Other Papers.*

£ 27. Report of Justice Thiru N. S. Ramaswami, Judge, High Court, Madras, Commission of Inquiry on the untoward incidents at Annamalai Nagar on 23rd July 1971, in English.

£ Laid on the table of the House on 31st January 1972.



## APPENDIX.

(*Vide* item VII on page 385)

### L.A. Bill No. 1 of 1972.

(As passed by the Assembly

A Bill further to amend the Madras City Tenants' Protection Act, 1921.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This act may be called the Madras City Tenants' Protection (Amendment) Act, 1972.

2. *Amendment of preamble, Tamil Nadu Act III of 1922.*—In the preamble to the Madras City Tenants' Protection Act, 1921 (Tamil Nadu Act III of 1922) (hereinafter referred to as the principal Act), for the portion commencing with the words "WHEREAS it is necessary to give protection" and ending with the words "fair rent for the land", the following shall be, and shall be deemed always to have been, substituted, namely :—

"WHEREAS it is necessary to give protection against eviction to tenants, who in municipal towns and adjoining areas in the State of Tamil Nadu have constructed buildings on others' lands, so long as they pay a fair rent for the land;".

3. *Amendment of section 12, Tamil Nadu Act III of 1922.*—In section 12 of the principal Act, the portion commencing with the words "provided that" and ending with the words "date of the contract" shall be, and shall be deemed always to have been, omitted.

4. *Validation.*—Notwithstanding anything contained in any judgment, decree or order of any court or other authority to the contrary, any stipulations made by a tenant in writing registered as to the erection of buildings, in so far as they relate to buildings erected after the date of the contract shall, to the extent such stipulations ake away or limit his rights under the principal Act as amended by this Act, be and shall be deemed always to have been null and void and accordingly the tenan shall be, and shall be deemed always to have been, entitled in the rights under the principal Ait as amended by this Act.

5. *Sections 3 and 4 not to apply, if he landlord has already taken possesion.*—The amendment made to section 12 of the principal Act by section 3 of this Act and the provisions of section 4 of this Act shall not apply to any case where the landlord has, before the date of the commencement of this Act taken, possession of the land and building from the tenant.

# Index to Tamil Nadu Legislative Council Debates

FORTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

24TH, 25TH, 28TH, 29TH AND 31ST JANUARY 1972 AND 1ST FEBRUARY 1972.

*Volume XCIII (Nos. 1 to 6).*

PAGES.

A


BDUL WAHAB, THIRU K. S.—

Governor's Address, discussion on ... ... 266–269

BKARI ORDINANCE, 1971—

Inter-Regional Seminar on Industrial Processing of Rice, maximum limit of liquor to be transported or held in possession by a person not applicable to foreign delegates attending—on 11th and 12th October 1971, notification laid on the table ... 55

DJOURMENT MOTION *re*—

Failure of Police to give protection to meeting conducted by Ruling Congress Party at Tiruchirappalli on Republic Day ... ... ... 168–172

Strike in B. & C. Mills at Madras from 25th January 1972 ... ... ... ... ... 232–234

GRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—

Extension of term of office of nominated members and appointment of new members of Dharmapuri Market Committee, notification laid on the table. 343

IYASWAMY, THIRU M.—

Governor's Address, discussion on ... ... 301–303

LCOHOL—

Question *re* non-availability of—to industries, representation by Tamil Chamber of Commerce ... 162–163

PAGES.

A—*cont.*

ANBAZHAGAN, THE HON. THIRU K.—
Governor's Address, discussion on ... ... 34, 41

ANIMAL HUSBANDRY—
Question re creation of post of Joint Director in—Department ... ... ... ... ... 349

APPRENTICESHIP TRAINING SCHEME—
Question *re* number of apprentices passing out during 1970-71 under ... ... ... ... 11–12

ARUMUGASWAMI, THIRU M.—
Adjournment motion *re*—
Failure of Police to give protection to meeting conducted by Ruling Congress Party at Tiruchirappalli on Republic Day ... ... ... 168–169
Strike in B & C Mills at Madras from 25th January 1972 ... ... ... ... ... 232, 234
Governor's Address, discussion on ... ... 303–308
Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 359–362

ATTESTATION OF CERTIFICATES—
Difficulties in procuring—from Gazetted Officers for admission into Government Educational institutions ... ... ... ... ... 228–229

B

BANKS—
Question *re* Primary Land Development Bank, stoppage of opening of branches of ... ... 99

BILLS—
City Tenant's Protection (Amendment) Bill, 1972—Considered and passed ... ... 385–390
Message from the Assembly re ... ... ... 353
Constitution (Twenty-fifth) Amendment Bill, 1971—
As introduced in the Lok Sabha, laid on the table ... ... ... ... ... ... 146
As passed by both Houses of Parliament, laid on the table ... ... ... ... ... ... 146
Lok Sabha debate on—laid on the table ... 146
Rajya Sabha debate on—laid on the table ... 146



PAGES.

B—*cont.*

BILLS—*cont.*
Constitution (Twenty-fifth) Amendment Bill, 1971—*cont.*
Resolution *re*. ... ... ... ... 357–385

B & C MILLS, MADRAS—
Adjournment motion *re* strike in—from 25th January 1972 ... ... ... ... ... 232–234

BUSINESS ADVISORY COMMITTEE—
*See* Committees.

C

CABARET DANCES—
Question *re* raid by Madras City Police during 1970 on restaurants for performing ... ... 3–7

CASHEW LIQUOR UNIT, PANRUTI—
Question *re* starting of ... ... ... ... 156–157

CATTLE—
Question *re* posing of traffic problem in Madras City by stray ... ... ... ... ... 215–216

CELLULAR CONCRETE PLANT, ENNORE—
Question *re* setting up of—of State Housing Board 164–165

CENTRAL BUFFALO FARM—
Question *re* starting of—at Alamadhi ... 209–211

CENTRAL MEDICAL DEPOT—
Question *re* purchases by Veterinary Department from ... ... ... ... ... ... 296

CHAIRMAN, MR.—
Adjournment motion *re*—
Failure of Police to give protection to meeting conducted by Ruling Congress Party at Tiruchirappalli on Republic Day ... ... 168, 172
Strike in B & C Mills at Madras from 25th January 1972 ... ... ... ... 232, 233 and 234
Announcement *re*—
Business Advisory Committee's decision ... 15
Governor's Address, amendments to motion of thanks for ... ... ... ... 15

PAGES.

C—*cont.*

CHAIRMAN, MR.—*cont.*

Announcement *re*—*cont.*

Message from the Assembly *re* City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... 353

Panel of Vice-Chairmen ... ... ... ... 16

Felicitations to Nedunchezhiyan, the Hon. Thiru V. R. on conferment of Doctorate Degree on him by Madurai University ... ... ... 79

Governor's Address, discussion on ... ... 172, 190

Obituary reference *re*—

Demise of King Mahendra of Nepal ... 347

Demise of Raghava Menon, Thiru R., former Minister of Composite Madras State ... ... 1

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 360–361

CINEMA HOUSES—

Question *re* permanent—, number of—district-wise ... ... ... ... ... 295

CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1972—

*See* Bills.

COLLEGES—

Question *re*—

Government—having facilities for study in both English and Tamil medium in P.U.C. and Degree courses ... ... ... ... 348–349

Private Colleges, insistence on photos of candidates seeking admission into ... ... 229–230

Professor of Radiology at Thanjavur Medical College, reasons for posting of ... ... 213

Veterinary College, Madurai, request from Ramanathapuram District Development Council during 1970 for starting a ... ... 8–10



PAGES

C—*cont.*

COMMISSION OF INQUIRY—

Report of Justice Thiru N. S. Ramaswami—on untoward incidents at Annamalai Nagar on 23rd July 1971, laid on the table ... ... ... 390

COMMISSIONER FOR GOVERNMENT EXAMINATIONS—

Question *re* decentralisation of office of ... ... 222–223

COMMITTEE FOR COTTON DEVELOPMENT—

*See* Committees.

COMMITTEES—

Business Advisory Committee, decision of ... ... 15

Livestock Development Committee Report, 1970, laid on the table ... ... ... ... ... 147

Question *re* Committee for Cotton Development, setting up of ... ... ... ... ... 351–352

CONSTITUTION (TWENTY-FIFTH) AMENDMENT BILL, 1971—

Resolution *re* ... ... ... ... 357–385

CORPORATION OF MADRAS—

Rules governing classification, control and appeal in respect of posts coming under classes I-A, I-B and II in the service of—, notification laid on the table ... ... ... ... ... 56

COTTON TRANSPORT RULES, 1950—

Resolution *re* amendment to ... ... ... 341–342

COUNCIL RULES—

Suspension of rule 42 (3) ... ... ... ... 353–354

CRAFT INSTRUCTORS—

Question *re* number of—in Industrial Training Institutions in Tamil Nadu possessing National Apprenticeship Certificates (1961 Act) ... ... 94–95

D

DAMODARAN, THIRU A. R.—

Bill—City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... ... ... ... 386–387

Governor's Address, discussion on ... ... 238–244

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 362, 368, 377

D—*cont.*

DENATURED SPIRIT, METHYL ALCOHOL AND VARNISH (FRENCH POLISH) RULES, 1959—

Amendments to—, notifications laid on the table ... 54

DEPUTY CHAIRMAN—

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 378

DHARMALINGAM, THE HON. THIRU A. P.—

Governor's Address, discussion on ... ... 121

Resolution *re* Cotton Transport Rules, 1950, amendment to ... ... ... ... ... 341–342

DIRECTOR OF PUBLIC LIBRARIES—

Question *re* appointment of ... ... ... 88

DIRECTOR OF SCHOOL EDUCATION—

Question *re* complaints pending in office of—referred by Complaints Cell of Secretariat ... ... ... 216–218

DISTRICT MUNICIPALITIES ACT, 1920—

Constitution of Goldenrock Municipality, notification laid on the table ... ... ... ... 55

Constitution of Kumarapalayam Municipality, notification laid on the table ... ... ... 55

Constitution of Maduranthakam Municipality, notification laid on the table ... ... ... 54–55

Constitution of Sirkali Municipality, notification laid on the table ... ... ... ... 55

Constitution of Suramangalam Municipality, notification laid on the table ... ... ... 55

DOUBLE DECKER BUSES—

*See* Transport.

E

EDIBLE OILS—

Question *re* rise in prices of ... ... ... 94

EDUCATION—

Question *re*—

Help from UNESCO for educational reform in the State ... ... ... ... ... 87

Secondary Education Board, constitution of ... 219–220





E—*cont.*

ELECTRICITY BOARD, TAMIL NADU—

Question *re* application fees collected by—from candidates seeking employment from 1968 ... 297–298

EMPLOYEES' STATE INSURANCE OFFICE—

Question *re* manhandling of Manager and Cashier of—at Singanallur, Coimbatore district ... 214

ENGINEERING GRADUATES—

Question *re* number of unemployed ... ... 224

ENTERTAINMENTS TAX—

Exemption of cinematograph film show organised by Secretary, Indra Dhanush on 13th November 1971 at Rajakumari Theatre, with the film "Samaskara" from—, notification laid on the table ... ... ... ... ... 56

Exemption of cinematograph film show organised by Secretary, Madhva Association, Madras, on 7th November 1971 at Paragon Theatre with the film "Baktha Kanaka Dasa" from—, notification laid on the table ... ... ... ... 56

EXPORT—

Question *re* mango juice, export from North Arcot district to foreign countries during 1971 ... ... 350–351

F

FAMILY PLANNING—

Question *re* loss of seats in Parliament due to implementation of ... ... ... ... 155–156

FASHION DRESS COMPETITION—

Question *re* grant of permission by Commissioner of Police for conduct of—, for adults in Madras City ... ... ... ... ... ... 7–8

FOOD—

Question *re*—

Rice smuggling, number of donkeys impounded during 1970–71 in connection with ... ... 92–94

Rupee-a-measure scheme, reduction in quantum of rice under— in Madras City from May 1971 ... 284–285

PAGES

F—*cont.*

FORESTS—

Question *re*—

Pangolin animal, capture of—in Banavaram forest near Arni on or about 12th December 1970. 167

Persons trampled to death by elephants in forests near Gobichettipalayam, Coimbatore district on or about 9th August 1971, number of ... ... 160

G

GANESAN, THIRU SAW.—

Governor's Address, discussion on ... ... 33–41, 43, 44, 49

GENERAL SALES TAX RULES, 1959—

Amendment to—, notification laid on the table. 56, 343

GOVERNOR'S ADDRESS—

Announcement *re* amendments to motion of thanks for ... ... ... ... ... ... 15

Discussion on ... ... ... ... ... ... 17–54, 100–145, 172–206, 238–269, 298–341

GROUND WATER EXPLORATION—

Question *re* undertaking of—in Thanjavur district by Union Government ... ... ... 96–97

GUDALUR INDUSTRIAL CO-OPERATIVE TEA FACTORY, LIMITED—

Question *re* purchase of machinery and electrical equipment during 1970–71 and 1971–72 for—in Nilgiris district ... ... ... ... ... 12–13

H

HARIJANS—

Question *re* laying of separate road for— in Sevalpuri village, Gingee taluk, South Arcot district ... 167–168

HAY-STACKS IN CUMBUM VALLEY—

Question *re* number of—set *re* to around March and April 1971 ... ... ... ... 294–295



PAGES

H—*cont.*

HEADMASTERS—

*See* Teachers.

HIPPIES—

Question *re* ban on movement of—in Tamil Nadu 82–84

HOSPITALS AND DISPENSARIES—

Question *re*—

Erskine Hospital, Madurai, facilities for fitting artificial limbs to patients in ... ... 92

Government Raja Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital, closure of Operation Theatres consequent on attack of tetanus ... ... ... ... ... 282–284

Mahatma Gandhi T.B. Sanatorium, Thanjavur, facilities available at and improvements to ... 10–11

HOUSING—

Question *re*—

Rural Housing Scheme, undertaking of entire cost by Union Government ... ... ... 224–225

South Madras Neighbourhood Scheme, non-payment of compensation to owners from whom lands were acquired for ... ... ... ... 225–226

HOUSING BOARD (STATE)—

Question *re* Cellular Concrete Plant of—at Ennore, setting up of ... ... ... ... 164–165

I

INDIAN STAMP ACT, 1899—

Remission of duty on bonds to be executed by Electricity Board for availing of rediscounting facilities offered by Industrial Development Bank of India, notification laid on the table ... 58

Remission of stamp duty on deed executed by Ceylon Pente Costal Mission of Madras, in favour of Young Men's Christians Association, Madurai, notification laid on the table ... ... ... 57

PAGES

I—*cont.*

INDIAN STAMP ACT, 1899—*cont.*

Remission of stamp duty on deed of declaration of trust to be executed by Ambur Muslim Educational Society for purpose of creating endowment in favour of Mazharul Uloom College Management Committee, notification laid on the table ... ... ... ... ... ... 58

Remission of stamp duty on deed of exchange to be executed by Sri Ramakrishna Kudil of Tiruchirappalli district, notification laid on the table. 146

Remission of stamp duty on documents executed relating to purchase of properties specified in favour of Anna Arulagam, Cheyyar, North Arcot, notification laid on the table ... ... ... 57

Remission of stamp duty on endowment deed to be executed by Managing Trustee of Annavinayagar Devasthanam Trust, Ganapathiapuram in Agasteeswaram taluk, Kanyakumari district, notification laid on the table ... ... 57

Remission of stamp duty on gift deed to be executed in favour of Government of Tamil Nadu, notification laid on the table ... ... ... ... 146

Remission of stamp duty on gift deed to be executed in favour of Kanyakumari Educational Society, notification laid on the table ... ... ... 147

Remission of stamp duty on gift settlement deed to be executed in favour of Yadhava College, Madurai, notification laid on the table ... ... 147

Remission of stamp duty on mortgage deeds of immovable properties executed by Burma and Ceylon repatriates in favour of Government for securing business loans, notification laid on the table ... ... ... ... 57

Remission of stamp duty on reconveyance deed to be executed by Principal of Medical College, Palayamkottai, in favour of Muslim Orphanage Committee, Palayamkottai, Tirunelveli district, notification laid on the table ... ... ... 57

Remission of stamp duty on sale deed in favour of Mahatma Gandhi Centenary Memorial Government Hospital Committee, Cumbum, Madurai district, notification laid on the table ... 146



PAGES

I—*cont.*

INDIAN STAMP ACT, 1899—*cont.*

Remission of stamp duty on sale deed to be executed in favour of repatriates from Burma and Ceylon for purchase of business places by means of loans sanctioned to them by Government, notification laid on the table ... ... ... ... 147

Remission of stamp duty on written undertaking executed by Small Industries Development Corporation for obtaining loans and advances sanctioned by Government, notification laid on the table ... ... ... ... ... 57

INDUSTRIAL ESTATE, RANIPET—

Question *re* non-utilisation of site purchased for establishment of ... ... ... ... 286–287

INSTITUTE OF TECHNOLOGY, COIMBATORE—

Question *re* closure of—about 12th August 1971. 279–280

IRON ORE—

Question *re* experiment by Japanese team into—findings in Tiruvannamalai, North Arcot district 158

IRRIGATION SCHEMES—

Question *re* number of—sanctioned by Government in Ramanathapuram district ... ... ... 97–99

ISVARMURTI, THIRU V.—

Governor's Address, discussion on ... ... 100, 176–182, 203, 340

Teachers, calling Minister's attention to hardship caused due to non-payment of salary to teachers in Singanallur Municipal High Schools from November 1971 ... ... ... ... 354

## J

JANARDHANAM, THIRU A. P.—

Governor's Address, discussion on ... ... 172–176

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 368–369

JAYARAMA REDDIAR, THIRU S.—

Governor's Address, discussion on ... ... 29–33

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 360

PAGES

K

KARUNANIDHI, THE HON. DR. M.—
Adjournment motion *re*—
Failure of Police to give protection to meeting conducted by Ruling Congress Party at Tiruchirappalli on Republic Day ... ... ... 169–172
Strike in B. & C. Mills at Madras from 25th January 1972 ... ... ... ... ... 232–234
Governor's Address, discussion on ... ... 176, 179, 180, 261, 263, 324–341

KING MAHENDRA OF NEPAL—
Obituary reference *re* demise of ... ... ... 347

KOLAPPA, THIRU C. R.—
Governor's Address, discussion on ... ... 308–313

KRISHNASWAMY NAIDU, THIRU R.—
Governor's Address, discussion on ... ... ... 101–114

L

LALIT KALA ACADEMY—
Question *re*—
Revival of ... ... ... ... ... 347–348
Settlement of assets and liabilities of ... ... 227–228

LIBRARIES—
Question *re* Director of Public—, appointment of ... ... ... ... ... ... 88

LIQUOR—
Question *re* Cashew Liquor Unit, starting of—at Panruti ... ... ... ... ... ... 156–157

LIQUOR (LICENCE AND PERMIT) RULES, 1960—
Amendments to—, notifications laid on the table. 55, 146

M

MADHAVAN, THE HON. THIRU S.—
Bill—City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... ... ... ... ... 388–389



PAGES

M—*cont.*

MADHAVAN, THE HON. THIRU S.—*cont.*
Governor's Address, discussion on ... ... 261
Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 357, 359, 375, 381–385
Sugar, statement *re* distress caused to Drug Industry due to exorbitant price of sugar in open market. 355–356

MADRAS—
Question *re* submission of Plan for Greater—to Union Planning Commission ... ... 90–92

MADRAS ZOO—
Question *re* neglect of animals in ... ... 85–87

MAHATMA GANDHI T.B. SANATORIUM, THANJAVUR—
*See* Hospitals and Dispensaries.

MANGO JUICE—
Question *re* export of—from North Arcot district to foreign countries during 1971 ... ... 350–351

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—
Sugar, calling attention to distress caused to Drug Industry due to exorbitant price of sugar in open market ... ... ... ... ... ... 355–356
Teachers, calling attention to hardship caused due to non-payment of salary to—in Singanallur Municipal High Schools, from November 1971 ... 354–356
Urban property, calling attention to contemplated move for Central legislation on ceiling on ... 234–238

MEDIUM OF INSTRUCTION—
Question *re* Government Colleges having facilities for study in both English and Tamil medium in P.U.C. and Degree courses ... ... ... 348–349

MEMBERS OF LEGISLATURE—
Return of Assets of Arivudai Nambi, Pulavar O., M.L.C., as on 31st March 1971 ... ... ... 147

PAGES

M—*cont.*

MEMBERS OF LEGISLATURE—*cont.*

Return of Assets of 54 Members of Legislative Assembly (including Chief Minister and four Ministers) as on 31st March 1971, laid on the table ... ... ... ... ... ... ... 56

Return of Assets of Shanmugam, Thiru T. K., M.L.C. (as on 31st March 1971) ... ... ... 147

MESSAGES FROM THE ASSEMBLY—

*See* Bills.

MINISTERS—

Question *re*—

Expenditure on furniture, renovation, repairs and upkeep of residences of—during 1970–71. 163–164

Wall posters at Karunanidhi Nagar threatening to murder Chief Minister, display of ... ... 2–3

MOTOR ACCIDENTS CLAIMS TRIBUNAL RULES, 1961—

Amendment to—, notifications laid on the table ... 390

MOTOR VEHICLES RULES, 1940—

Amendments to—, notification laid on the table ... 206, 207, 390

MUDUMALAI SANCTUARY—

Question *re* setting up of panel to prepare a Master Plan for ... ... ... ... ... ... 288–289

MUTHUSWAMY, THIRU S.—

Governor's Address, discussion on ... ... 172, 201–206, 341

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... ... 371, 378, 379

N

NARAYANASWAMY, THIRU D. V.—

Governor's Address, discussion on ... ... ... 139–145

NARAYANASWAMY, THIRU P.—

Governor's Address, discussion on ... ... ... 114–129

NATARAJAN, THE HON. THIRU N. V.—

Governor's Address, discussion on ... ... ... 179



PAGES

N—*cont.*

NEDUNCHEZHIYAN, THE HON. DR. V. R.—

Council Rules, suspension of rule 42 (3) of ... ... 353

Felicitations to—on conferment of Doctorate Degree on him by Madurai University ... ... ... 79

Teachers, statement *re* hardship caused due to non-payment of salary to teachers in Singanallur Municipal High Schools from November 1971. 354–355

NEWSPAPERS—

Question *re* cases against Editors, Printers, Publishers of—for publishing objectionable news in 1967–70, number of ... ... ... ... ... 1–2

NUTRITION PROGRAMME—

Question *re* Centrally sponsored—, details of ... 297

O

OBITUARY REFERENCE *re*—

Demise of King Mahendra of Nepal ... ... ... 347

Demise of Raghava Menon, Thiru R., former Minister of Composite Madras State ... ... 1

P

PANCHAYATS ACT, 1958—

Notification published in page 420, Part II—Section 2 of Gazette, datd 17th December 1969, Erratum to—, notification laid on the table ... 207

Panchayat Union Council, Wallajah, dissolution and reconstitution of—, notification laid on the table ... ... ... ... ... ... 58

PANEL OF VICE-CHAIRMEN—

Announcement *re* ... ... ... ... 16

PANGOLIN ANIMAL—

Question *re* capture of—in Banavaram forest near Arni about 12th December 1970 ... ... ... 167

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Abkari Ordinance, 1971, maximum limit of liquor to be transported or in possession of a person not applicable to foreign delegates attending Inter-Regional Seminar on Industrial Processing of

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*


Rice between 11th and 12th October 1971 (G.O. Ms. No. 76, Excise and Prohibition, dated 8th October 1971). ... ... ... ... ... 55–56

Agricultural Produce Markets Act, 1959, extension of term of office of nominated members and appointment of new members of Dharmapuri Market Committee (G.O. Ms. No. 2875, Agriculture, dated 30th October 1971) ... ... 343

Bills—

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 as introduce in Lok Sabha ... ... 146

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 as passed by both Houses of Parliament ... 146

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, Lok Sabha debate on ... ... ... 146

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, Rajya Sabha debate on ... ... ... 146

Commission of Inquiry, Report of Justice Thiru N. S. Ramaswami—on untoward incidents at Annamalai Nagar on 23rd July 1971 ... ... 390

Corporation of Madras, Rules governing classification, control and appeal in respect of posts coming under classes I-A, I-B and II in the service of—(G.O. Ms. No. 779, Rural Development and Local Administration, dated 26th March 1971) ... 56

Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959, amendment to—(G.O. Ms. Nos. 1821, Home, dated 27th July, 1970 and 2900, dated 24th October 1970) ... 54

District Municipalities Act, 1920—

Goldenrock Municipality, constitution of—(G.O. Ms. No. 2491, Local Administration, dated 11th November 1971) ... ... ... 55

Kumarapalayam Municipality, constitution of—(G.O. Ms. No. 2490, Local Administration, dated 11th November 1971) ... ... ... 55

Maduranthakam Municipality, constitution of—(G.O. Ms. No. 2488, Local Administration, dated 11th November 1971) ... ... ... 54–55




PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*


District Municipalities Act, 1920—*cont.*

Sirkali Municipality, constitution of—, (G.O. Ms. No. 2492, Local Administration, dated 11th November 1971) ... ... ... ... 55

Surmangalam Municipality, constitution of—(G.O. Ms. No. 2489, Local Administration, dated 11th November 1971) ... ... ... ... 55

Entertainments tax—

Exemption of cinemotograph film show organised by Secretary, Indra Dhanush on 13th November 1971 at Rajakumari Theatre with the film "Samskara" from—(G.O. Rt. No. 1989, Revenue, dated 4th November 1971) ... ... 56

Exemption of cinematograph film show organised by Secretary, Madhva Association, Madras on 7th November 1971 at Paragon Theatre with the film "Baktha Kanaka Dasa" from—(G.O. Rt. No. 1997, Revenue, dated 5th November 1971) ... ... ... ... ... 56

General Sales Tax Rules, 1959, amendments to—(G.O. P. No. 2752, Revenue, dated 21st September 1971 and No. 3398, dated 4th November 1971) 56, 343

Indian Stamp Act, 1899—

Remission of stamp duty on bonds to be executed by Electricity Board for availing of rediscounting facilities offered by Industrial Development Bank of India (G.O. Ms. No. 2837, Revenue, dated 25th September 1971) ... 58

Remission of stamp duty on deed executed by Ceylon Pente Costal Mission of Madras in favour of Young Men's Christians Association, Madurai (G.O. Ms. No. 2374, Revenue, dated 30th August 1971) ... ... ... ... 57

Remission of stamp duty on deed of declaration of trust to be executed by Ambur Muslim Educational Society for purpose of creating endowment in favour of Mazharul Uloom College Management Committee (G.O. Ms. No. 2398, Revenue, dated 31st August 1971) ... 58

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*


Indian Stamp Act, 1899—*cont.*

Remission of stamp duty on deed of exhcange to be executed by Sri Ramakrishna Kudil of Tiruchirappalli district (G.O. Ms. No. 2566, Revenue, dated 9th September 1971) ... 146

Remission of stamp duty on documents relating to purchase of properties specified in favour of Anna Arulagam, Cheyyar, North Arcot district (G.O. Ms. No. 1797, Revenue, dated 22nd June 1971) ... ... ... ... ... 57

Remission of stamp duty on endowment deed to be executed by the Managing Trustee of Annavinayagar Devasthanam Trust, Ganapathipuram in Agastheeswaram Taluk, Kanyakumari district (G.O. Ms. No. 2297, Revenue, dated 19th August 1971) ... ... ... ... 57

Remission of stamp duty on gift deed to be executed in favour of Government of Tamil Nadu (G.O. Ms. No. 2405, Revenue, dated 1st September 1971) ... ... ... ... 146

Remission of stamp duty on gift deed to be executed in favour of Kanyakumari Educational Society (G.O. Ms. No. 2805, Revenue, dated 24th September 1971) ... ... ... 147

Remission of stamp duty on gift settlement deeds to be executed in favour of Yadhava College, Madurai (G.O. Ms. No. 2759, Revenue, dated 22nd September 1971) ... ... ... 147

Remission of stamp duty on mortgage deeds of immovable properties executed by Burma and Ceylon repatriates in favour of Government for securing business loans (G.O. Ms. No. 2317, Revenue, dated 21st August 1971) ... ... 57

Remission of stamp duty on reconveyance deed to be executed by Principal of Medidal College, Palayamkottai in favour of Muslim Orphanage Committee, Palayamkottai, Tirunelveli district (G.O. Ms. 2134, Revenue, dated 8th July 1971) 57




PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*


Indian Stamp Act, 1899—*cont.*

Remission of stamp duty on sale deed in favour of Mahatma Gandhiji Centenary Memorial Government Hospital Committee, Cumbum, Madurai district (G.O. Ms. No. 2636, Revenue, dated 13th September 1971) ... ... ... 146

Remission of stamp duty on sale deed to be executed in favour of repatriates from Burma and Ceylon for purchase of business places by means of loans sanctioned to them by Government (G.O. Ms. No. 2750, Revenue, dated 21st September 1971) ... ... ... ... 147

Remission of stamp duty on written undertaking executed by Small Industries Development Corporation for obtaining loans and advances sanctioned by Government (G.O. Ms. No. 2238, Revenue, dated 11th August 1971) ... ... 57

Liquor (Licence and Permit) Rules, 1960 amendment to—(G.O. Ms. No. 15, Excise and Prohibition, dated 17th August 1971 and No. 2643, dated 22nd October 1969) ... ... ... ... ... 55, 140

Livestock Development Committee Report, 1970. 147

Motor Accidents Claims Tribunal Rules, 1961, amendment to—(G.O. Ms. No. 1617, Home, dated 16th June 1971) ... ... ... ... 390

Motor Vehicles Rules, 1940, amendment to—(G.O.'s Ms. No. 2205, Home, dated 10th August 1971 and No. 2380, dated 30th August 1971) ... ... 206, 207

Panchayat Union Council, Wallajah, dissolution and reconstitution of—(G.O. Ms. No. 2433, Rural Development and Local Administration, dated 4th November 1971) ... ... ... ... 56

Panchayats Act, 1958, notification published in page 420, Part II—Section 2 of Gazette, dated 17th December 1969 Erratum to—(Roc. No. 164237/69, dated 25th February 1970) ... ... ... 207

Plantations Labour Rules, 1955, amendment to—(G.O. Ms. No. 244, Labour, dated 21st February 1970) ... ... ... ... ... ... 207

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Public Service Commission Regulations, 1954, amendment to—(G.O. Ms. No. 1848, Public (Services-A), dated 11th June 1971 and Nos. 3196 and 3197, dated 2nd October 1971) ... ... 56, 145

Return of Assets of 54 Members of Legislative Assembly (including Chief Minister and four Ministers) as on 31st March 1971 ... ... ... 56

Return of Assets of Pulavar O. Arivudai Nambi, as on 31st March 1971 ... ... ... ... 147

Return of Assets of Thiru T. K. Shanmugam, M.L.C., as on 31st March 1971 ... ... 147

Slum Areas (Improvement and Clearance) Act, 1971, making rules under sections 35 and 36 of—(G.O. Ms. No. 1138, Labour (Housing), dated 7th September 1971) ... ... ... ... 145

Spirituous Essences Rules, 1959, amendments to—(G.O. Ms. No. 373, Home, dated 3rd February 1971) ... ... ... ... ... ... 55

Stamp (Prevention of Under valuation of Instruments) Rules, 1968, amendments to—(G.O. Ms. No. 2747, Revenue, dated 21st September 1971) 57

Tamil Nadu Slum Clearance Board, rules for control and management of properties of—(G.O. Ms. No. 1137, Labour (Housing), dated 7th September 1971) ... ... ... ... ... ... 54

PARANGUSAM, THIRU G.—

Governor's Address, discussion on ... ... 182–187

PARLIAMENT—

Question *re* loss of scales in—due to implementation of Family Planning .. ... ... ... 155–156

PENSION—

Question *re* increased—by addition of dearness allowance of December 1966 to average pay to teachers under aided agencies and local bodies, issue of orders *re* ... ... ... ... 281–282

PETROLEUM—

Question *re* calibration of Railway tank wagons transporting—goods by Weights and Measures Department ... ... ... ... ... 349–350



P—*cont.*

PHARMACISTS' ASSOCIATION—

Question *re* representation from—on 28th January 1971 ... ... ... ... ... 88–90

PLANTATIONS LABOUR RULES, 1955—

Amendment to—, notification laid on the table ... 207

POLICE—

Adjournment motion *re* failure to give protection to meeting conducted by Ruling Congress Party at Tiruchi on Republic Day ... ... ... 168–172

Question *re* cabaret dances, raid by Madras City Police during 1970 on restaurants for performing. 3–7

PRIMARY LAND DEVELOPMENT BANK—

Question *re* stoppage of opening of branches of ... 99

PUBLIC SERVICE COMMISSION REGULATIONS, 1954—

Amendments to—, notification laid on the table ... 56, 145, 146

Q

QUESTIONS AND ANSWERS—

Arumugaswami, Thiru M.—

Question *re*—

Cabaret dances, raid by Madras City Police during 1970 on restaurants for performing ... ... 3–7

Director of School Education, complaints pending in office of—referred by Complaints Cell of Secretariat ... ... ... ... 216–218

Electricity Board, application fees collected by—from candidates seeking employment from 1968 ... ... ... ... 297–298

Ground Water Exploration in Thanjavur district by Union Government ... ... ... 96–97

" Star " Hotels in Madras City, permission to—to serve liquor to customers ... ... 81–82

Correction of answer to a supplementary question on Starred Question No. 60 ... ... ... 16, 17

PAGES

Q—*cont.*


[QU]ESTIONS AND ANSWERS—*cont.*

Damodaran, Thiru A. R.—

Question *re*—

Medium of instruction, Government Colleges having facilities for study in both English and Tamil medium in P.U.C. and Degree Courses ... ... ... ... ... 348–349

Petroleum goods, calibration of Railway tank wagons transporting—by Weights and Measures Department ... ... ... 349–350

Isvarmurti, Thiru V.—

Question *re*—

Advocates' panel for Transport Department, constitution of ... ... ... ... 14–15

Apprentices passing out under Apprenticeship Training Scheme during 1970–71, number of. 11–12

Attestation from Gazetted Officers, difficulties in procuring—for admission into Government educational institutions ... ... ... 228–229

Cashew Liquor Unit, starting of—at Panruti. 156–157

Cellular Concrete Plant of State Housing Board, setting up of—at Ennore ... ... 164–165

Central Medical Depot, purchases by Veterinary Department from ... ... ... 296

Commissioner for Government Examinations, decentralisation of office of ... ... 222–223

Committee for Cotton Development, setting up of ... ... ... ... ... ... ... 351–352

Director of Public Libraries, appointment of ... 88

Double decker buses run on long distance routes, withdrawal of ... ... ... 13–14

Edible oils, rise in prices of ... ... ... 94

Elementary schools, protest by teachers of Kanyakumari district to take-over of—by Panchayat Union ... .. ... ... 87–88

Employees' State Insurance Office at Singanallur, Coimbatore district, manhandling of Manager and Cashier of ... ... ... 214




PAGES.

Q—*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

Isvarmurti, Thiru V.—*cont.*

Question *re*—*cont.*

Fashion dress competition for adults in Madras City, grant of permission by Commissioner of Police for conduct of ... ... ... 7–8

Graduate Teachers' Association, representation *re* refixation of scales of pay ... ... ... 230–231

Greater Madras, submission of Plan for—to Union Planning Commission ... ... 90–92

Gudalur Industrial Co-operative Tea Factory Limited in the Nilgiris district, purchase of machinery and electrical equipment during 1970–71 and 1971–72 for ... ... 12–13

Harijans in Sevalpuri village, Gingee taluk, South Arcot district, laying of separate road for ... ... ... ... ... ... 167–168

Hay-stacks in Cumbum Valley set fire to—around March and April 1971, number of. 294–295

High Schools with Science equipment and Libraries, number of ... ... ... 295

Institute of Technology, Coimbatore, closure of —about 12th August 1971 ... ... ... 279–280

Iron ore findings in Tiruvannamalai, North Arcot district, experiment by Japanese team into ... ... ... ... ... ... 158

Lalitha Kala Academy, revival of ... ... 347–348

Lalitha Kala Academy, settlement of assets and liabilities of ... ... ... ... 227–228

Madras Zoo, neglect of animals in ... ... 85–87

Mahatma Gandhi T.B. Sanatorium, Thanjavur, facilities available at—and improvements to ... ... ... ... ... ... 10–11

Mango juice, export from North Arcot district to foreign countries during 1971 ... ... 350–351

Ministers, expenditure on furniture, renovation, repairs and upkeep of residences of—during 1970–71 ... ... ... ... ... ... 163–164

Mudumalai Sanctuary, setting up of panel to prepare a Master Plan for ... ... ... 288–289

New Road along Sea Coast in Santhome, Mylapore, Madras, laying of ... ... 164

Q—*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

Isvarmurti, Thiru V.—*cont.*

Question *re*—*cont.*

Nutrition Programme for pre-school children Centrally sponsored, details of ... ... 297

Pangolin Animal, capture of—in Banavaram forest near Arni on or about 12th December 1970 ... ... ... ... ... 167

Permanent Cinema Houses, number of—district-wise ... ... ... ... 295

Persons trampled to death by elephants in forests near Gobichettipalayam, Coimbatore district on or about 9th August 1971, number of ... ... ... ... ... ... 166

Pharmacists' Association, representation from—on 28th January 1971 ... ... ... 88–90

Private Colleges, insistence on photos of candidates seeking admission into ... ... 229–230

Rice smuggling, number of donkeys impounded during 1970–71 in connection with ... 82–84

Rural Housing Scheme, undertaking of entire cost by Union Government ... ... 224–225

School hours, change in ... ... ... 84–85

School of Arts and Crafts, number of candidates passed out from—, who have registered their names with Employment Exchange as on 1st July 1971 ... ... ... ... 297

Seats in Parliament, loss due to implementation of Family Planning ... ... ... 155–156

Secondary Education Board, constitution of. 219–220

Skin and Hides market, paralysation during August 1971 ... ... ... ... 157–158

Slum Clearance Board, photographers sponsored by—to take photographs of slum-dwellers in Madras City ... ... ... ... 293–294

Slum Clearance Board, purchase of concrete mixtures by ... ... ... ... 213–214

State Institute of Education, number of publications subject-wise brought out during 1970–71 by ... ... ... ... 295–296






Q—*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

Isvarmurti, Thiru V.—*cont.*

Question *re*—*cont.*

Tamil Chamber of Commerce, representation *re* non-availability of alcohol to industries 162–163

Tamil Nadu Industrial Development Corporation, letters of intent to—for manufacture of tyres and tubes ... ... ... ... ... 158–160

Tamil Nadu Industrial Development Corporation, negotiation for assistance to Hydro-sulphite project of—at Karaikudi ... ... 161–162

Tamil Nadu Tourism Development Corporation, motif and slogan for—calling for public suggestions ... ... ... ... 165–166

Taxi stand facilities at Central Station, proposals of Commissioner of Police ... 352–353

Temple tanks in Madras, taking on lease by Corporation of Madras ... ... ... 218–219

Tree-top Hotels at Mudumalai, leasing out of lands in Mudumalai Sanctuary to private parties to run ... ... ... ... 287–288

UNESCO help for educational reform in the State from ... ... ... ... ... 87

Vegetable vendors around Mada Street, Mylapore, nuisance to traffic caused by ... 84

Krishnaswamy Naidu, Thiru R.—

Question *re*—

Primary Land Development Banks, stoppage of opening of branches of ... ... ... 99

Registrar of Co-operative Societies from 1st April 1967 to 30th June 1971, number of persons who held the post of ... ... ... 99–100

Tamil Nadu Cement Factory, Alankulam, provision of employment to those farmers who have lost their lands due to acquisition of lands for ... ... ... ... ... 95–96

PAGES

Q—*cont*

QUESTIONS AND ANSWERS—*cont*.

Rajah Iyer, Thiru M.—

Question *re*—

Commissioner for Government Examinations, decentralisation of office of ... ... 222–223

Craft Instructors in Industrial Training Institutes in Tamil Nadu possessing National Apprenticeship Certificates (1961 Act), number of ... ... ... ... ... 94–95

Engineering graduates, number of unemployed 224

Headmasters of Madras Corporation, non-payment of revised scales of pay as per recommendations of Second Pay Commission to 280–281

Tailoring Instructors in secondary schools, qualifications prescribed for ... ... 220–222

Santosham, Thiru D.—

Question *re*—

Commissioner for Government Examinations, decentralisation of Office of ... ... 222–223

Erskine Hospital, Madurai, facilities for fitting artificial limbs to patients in ... ... 92

Swaminathan, Thiru G.—

Question *re*—

Central Buffalo Farm at Alamadhi, starting of ... ... ... ... ... ... 209–211

Engineering graduates, number of unemployed 224

Family Planning drive in Thanjavur district, implementation of incentive scheme by District Collector for ... ... ... ... 211–212

Industrial Estate, Ranipet, non-utilisation of site purchased for establishment of ... 286–287

Pension to teachers under aided agencies and local bodies, orders *re* increased—by addition of dearness allowance of December 1966 to average pay ... ... ... ... 281–282

Professor of Radiology at Thanjavur Medical College, reason for posting of ... ... 213



PAGES

Q—*cont*.

QUESTIONS AND ANSWERS—*cont*.

Swaminathan, Thiru G.—*cont*.

Question *re*—*cont*.

Rupee-a-Measure Scheme, reduction in quantum of rice supplied under—in Madras City from May 1971 ... ... ... ... 284–285

South Madras Neighbourhood Scheme, non-payment of compensation to owners from whom lands were acquired for ... ... ... 225–226

Stray cattle in Madras City, posing of traffic problem by ... ... ... ... 215–216

Subramanya Temple, Tiruchendur, threat of sea erosion on ... ... ... ... 291–293

Temple Funds and Charitable Endowments, amount diverted from surplus of—for renovation of temples and to Public Welfare Schemes yearwise from 1967 ... ... ... ... 289–291

Tetanus, closure of Operation Theatre at Government Raja Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital consequent on attack of ... ... ... ... 282–284

Thangapandian, Thiru V.—

Question *re*

Hippies, ban on movement in Tamil Nadu ... 82–84

Irrigation Schemes sanctioned by Government in Ramanathapuram district, number of ... ... ... ... ... ... 97–99

Joint Director in Animal Husbandry Department, creation of post of ... ... ... 349

Veterinary College, Madurai, request from Ramanathapuram District Development Council during 1970 for starting a ... 8–10

Thirugnanasambandam, Thiru P.—

Question *re*—

Clash between students and workers of State Transport Department at Anna Nagar, Madras on 17th August 1971 ... ... 79–80

Editors, Printers and Publishers of newspapers proceeded against for publishing objectionable news in 1967–70, number of ... ... 1–2

PAGES

Q —*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

Thirugnanasambandam, Thiru P.—*cont.*

Question *re*—

Government High School, Paganeri, Ramanathapuram district, non-use of electric motor pumpset purchased for ... ... 226

Train service between Mettupalayam and Ootacamond, cancellation of ... ... 223

Wall posters at Karunanidhi Nagar threatening to murder Chief Minister, display of ... 2–3

R

RAGHAVA MENON, Thiru R.—

Obituary reference *re* demise of—, former Minister of Composite Madras State ... ... ... 1

RAILWAYS—

Question *re* train service between Mettupalayam and Ootacamund, cancellation of ... ... 223

RAJAGOPAL, Thiru C. V.—

Governor's Address, discussion on ... ... 197–201

RAJAH IYER, Thiru M.—

Governor's Address, discussion on ... ... 129–139, 172

RAJAMANICKAM, Thiru S. A.—

Governor's Address, discussion on ... ... 244–246

RAJARAM, The Hon. Thiru K.—

Governor's Address, discussion on ... ... 195

RAJARAM, Thiru K.—

Bill—City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... ... ... ... ... 387–388

Governor's Address, discussion on ... ... 42, 180, 185, 315–324

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... 378–381

Statement by Minister for Food and Revenue correcting answer to a supplementary question on Starred Question No. 60 clarification on ... 16–17




PAGES

R—*cont.*


AMAKRISHNA ACHARI, Thiru K.—

Governor's Address, discussion on ... ...... 192–195

AMANATHAN, Thiru M.—

Governor's Address, discussion on ... ... 298–301

AMASAMY PADAYATCHI, Thiru S. S.—

Governor's Address, discussion on ... ... 257–258, 259–260, 261, 262, 263

REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES—

Question *re* number of persons who held the post of—from 1st April 1967 to 30th June 1971 ... 99–100

RESOLUTION *re*—

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... ... ... ... 357–385

Cotton Transport Rules, 1950, amendment to ... 341–342

RICE SMUGGLING—

Question *re* number of donkeys impounded during 1970–71 in connection with ... ... ... 82–84

ROADS—

Question *re*—

New road along sea coast in Santhome, Mylapore, Madras, laying of ... ... ... ... 164

Separate road for Harijans in Sevalpuri village, Gingee taluk, South Arcot district, laying of ... 167–168

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment Motion *re*—

Failure of the Police to offer protection to the meeting conducted by the Ruling Congress at Tiruchirappalli on the Republic Day and to prevent attack on the speakers and audience—Consent to raising of the matter withheld as the matter did not involve anything more than the ordinary administration of law and order ... 168, 172

Strike in B & C Mills at Madras from 25th January 1972—Consent to raising of the matter withheld after hearing both the Member and the Chief Minister ... ... ... 232, 233

PAGES

R—*cont.*

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Debate—

It is not in accordance with convention to make references in the House on the basis of newspaper reports ... ... ... ... 19(

RUPEE-A-MEASURE SCHEME—

Question *re* reduction in quantum of rice supplied under—in Madras City from May 1971 ... 284–285

S

SADIQ PASHA, THE HON. THIRU S. J.—

Governor's Address, discussion on ... ... 38

SAMBASIVAM, THIRU ERA.—

Governor's Address, discussion on ... ... ... 195–197

SANKARALINGAM PILLAI, THIRU M.—

Governor's Address, discussion on ... ... 17, 44-

SANTOSHAM, THIRU D.—

Governor's Address, discussion on ... ... 22–29, 43, 44, 4(

SCHOOL HOURS—

Question *re* change in ... ... ... ... 84–8(

SCHOOL OF ARTS AND CRAFTS—

Question *re* number of candidates passed out from—, who have registered their names with Employment Exchange as on 1st July 1971 ... ... 29(

SCHOOLS—

Question *re*—

Elementary schools, protest by teachers of Kanyakumari district to take-over of—by Panchayat Union ... ... ... ... 87–8

Government High School, Paganeri, Ramanathapuram district, non-user of electric motor pumpset purchased for ... ... ... ... 2(



PAGES.

S—*cont.*

SCHOOLS—*cont.*

Question *re.*—*cont.*

High Schools with Science Equipment and Libraries, number of ... ... ... 295

Tailoring Instructors in Secondary Schools, qualifications prescribed for ... ... 220–222

SCIENCE EQUIPMENT AND LIBRARIES—

Question *re* number of High Schools with ... 295

SECONDARY EDUCATION BOARD—

Question *re* constitution of ... ... ... 219–220

SENGOTTUVELAPPA GOUNDER, THIRU S. V.—

Governor's Address, discussion on ... ... 313–315

SHANMUGAM, THE HON. THIRU P. U.—

Bill—City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... ... ... ... ... 385–386, 390

Governor's Address, discussion on ... ... 42, 43, 51, 52, 119, 120, 121, 122, 123, 190, 251, 252, 253, 254, 255, 258, 259, 260.

Statement by—correcting answer to supplementary question on Starred Question No. 160 ... ... 16–17

Sugar, statement *re* distress caused to Drug Industry due to exorbitant price of sugar in open market ... 356

Urban property, statement *re.* contemplated move for Central legislation on ceiling on ... ... 234–237, 238

SHANMUGAM, THIRU T. K.—

Governor's Address, discussion on ... ... 187–192

SKIN AND HIDES MARKET—

Question *re.* paralysation of—during August 1971 ... 157–158

PAGES.

S—*cont.*

SLUM AREAS (IMPROVEMENT AND CLEARANCE) ACT, 1971—

Making rules under sections 35 and 36 of—, notification laid on the table ... ... ... ... 145

SLUM CLEARANCE BOARD—

Question *re*—

Photographers sponsored by—to take photos of slum-dwellers in Madras City ... ... 293–294

Purchase of concrete mixtures by ... ... 213–214

SOUTH MADRAS NEIGHBOURHOOD SCHEME—

Question *re*. non-payment of compensation to owners from whom lands were acquired for ... ... 225–226

SPIRITUOUS ESSENCES RULES, 1959—

Amendment to—, notification laid on the table ... 55

STAMP (PREVENTION OF UNDER VALUATION OF INSTRUMENTS) RULES, 1968—

Amendments to—, notification laid on the table— 57

" STAR " HOTELS—

Question *re*. permission to—to serve liquor to customers ... ... ... ... ... 81–82

STATE INSTITUTE OF EDUCATION—

Question *re*. number of publications subject-wise brought out during 1970–71 by ... ... 295–296

STRIKE(S)—

Adjournment motion *re*.—in B. & C. Mills at Madras from 25th January 1972 ... ... 232–234

SUBBIAH, THIRU T. K.—

Governor's Address, discussion on ... ... 100

SUGAR—

Distress caused to Drug Industry due to exorbitant price of—, Minister's attention called to ... 355–356



PAGES

S—*cont.*

SWAMINATHAN, THIRU G.—

Governor's Address, discussion on ... ... 41, 186, 246–251, 252, 253, 254, 255–256

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 ... ... ... ... ... 374

Sugar, calling Minister's attention to distress caused to Drug Industry due to exorbitant price of ... 355–356

Urban property, calling Minister's attention to contemplated move for Central legislation on ceiling on ... ... ... ... ... 234, 237, 238.

T

TAMIL CHAMBER OF COMMERCE—

Question *re* representation by— *re* non-availability of alcohol to industries ... ... ... ... 162–163

TAMIL NADU CEMENT FACTORY, ALANKULAM—

Question *re* provision of employment to farmers who have lost their lands due to acquisition of lands for ... ... ... ... ... ... 95–96

TAMIL NADU INDUSTRIAL DEVELOPMENT CORPORATION—

Question *re*—

Hydrosulphite Project of—at Karaikudi, negotiation for assistance ... ... ... ... 161–162

Issue of letters of intent to—for manufacture of tyres and tubes ... ... ... ... 158–160

TAMIL NADU SLUM CLEARANCE BOARD—

Rules for control and management of properties of—, notification laid on the table ... ... 54

TEACHERS—

Hardship caused due to non-payment of salary to—in Singanallur Municipal High Schools from November 1971, Minister's attention called to 354–355

PAGES.

T—*cont.*

TEACHERS—cont.

Question *re*—

Craft Instructors in Industrial Training Institutes in Tamil Nadu possessing National Apprenticeship Certificates (1961 Act), number of ... 94–95

Graduate Teachers Association, representation *re* refixation of scales of pay ... ... ... 230–231

Headmasters of Corporation of Madras, non-payment of revised scales of pay as per recommendations of Second Pay Commission to ... ... 280–281

Increased pension by addition of dearness allowance of December 1966 to average pay to—under aided agencies and local bodies, issue of orders *re*. ... ... ... ... ... ... 281–282

Tailoring Instructors in Secondary Schools, qualifications prescribed for ... ... ... 220–222

TEMPLE FUNDS AND CHARITABLE ENDOWMENTS—

Question *re* amount diverted from surplus of—for renovation of temples and to public welfare schemes yearwise from 1967 ... ... ... 289–291

TEMPLE TANKS—

Question *re* taking of—in Madras on lease by Corporation of Madras ... ... ... ... 218–219

TEMPLES—

Question *re* Subramanya Temple, Tiruchendur, threat of sea erosion on ... ... ... 291–293

TETANUS—

Question *re* Government Raja Mirasdar Hospital and Thanjavur Medical College Hospital, closure of Operation Theatre consequent on attack of tetanus ... ... ... ... ... ... 282–284

THANGAPANDIAN, THIRU V.—

Governor's Address, discussion on ... ... ... 17–22

TOURISM—

Question *re* Tamil Nadu Tourism Development Corporation, public suggestion for motif and slogan for ... ... ... ... ... 165–166



PAGES.

T—*cont.*

6 3041

TRANSPORT—

Question *re*—

Clash between students and workers of State Transport Department at Anna Nagar, Madras, on 17th August 1971 ... ... ... 79–80

Double Decker buses run on long distance routes, reasons for withdrawal of ... 13–14

Taxi stand facilities at Cental Station, proposals of Commissioner of Police ... ... ... 352–353

TRANSPORT DEPARTMENT—

Question *re*. Advocates' panel for—, constitution of 14–15

" TREE TOP " HOTELS—

Question *re* leasing out of lands in Mudumalai Sanctuary to private parties to run ... ... 287–288

U

UNESCO—

Question *re* help from—for educational reform in the State ... ... ... ... ... 87

UNIVERSITIES—

Madurai University, conferment of Doctorate Degree on Nedunchezhiyan, the Hon. Thiru V. R., by ... ... ... ... ... ... 79

URBAN PROPERTY—

Ceiling on—, Minister's attention called to contemplated move for Central legislation on ... ... 234–238

VASANTHA PAI, THIRU G.—

Governor's Address, discussion on ... ... 264–266

Resolution *re* Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification of ... ... ... 369–371

VEGETABLE VENDORS—

Question *re* nuisance to traffic caused by—around Mada Street, Mylapore ... ... ... 84

W.

WEIGHTS AND MEASURES—

Question *re*. calibration of Railway tank wagons transporting Petroleum goods by—Department. 349–350